THE LAW OFFICE OF
Gary Anandasangaree
PROFESSIONAL CORPORATION
• Real Estate (Buying, Selling & Re-Financing)
• Corporate • Commercial
• Wills & Estates • Immigration
416 321 1100
gary@galaw.ca

# தாய் வீடு

THAIVEEDU JULY 2011 ஜூலை HOME & LIVING

FREE REAL ESTATE CLASSES
வீடு வாங்க, விற்க மற்றும் வருமான வரி, அடமானக் கடன் சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
SELVA VETTYVEL
Broker of Record
Cell: 416.568.4301
Bus: 905.201.9977
HomeLife Future Realty Inc. Brokerage
205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®



## கணினி உலகப் புல்லுருவிகள்

## அங்கீகாரங்களை வேண்டி நிற்கும் ஓமனக் குட்டிகள்

## இயல்விருது பெறும் ஈழத்து இலக்கியச் சித்தர்

# எஸ். பொ.

படம்: டிஜி கருணா

RAMAN APPLIANCES
Air Conditioning & Heating
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஜப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
• Security Alarm
Tel: 416.332.1989
Cell: 647.893.4414
Raman Chelliah
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8

உங்களுக்கான வாகனத்தை தேர்வு செய்ய...
FORMULA HONDA
ATHEESAN (SHAN) SARVANANTHAN
CELL: 416-720-1184
2240 MARKHAM ROAD, SCARBOROUGH, ONTARIO M1B 2W4.
TEL: 416-754-4555 EXT.2705, FAX: 416-754-9465

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000
PMCI MORTGAGE CANADA

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440, E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kunasegar Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

PMCI PROPERTY MORTGAGE CANADA INC.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated


இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலதிற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Marham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

• வீடு • வாழ்வியல் • சமூகம் • இலக்கியம்

# The shortest distance between paradise and the place you call home

### Markham / 14th

**$22.50 Per Sq**
Commercial/Retail. Brand New Unit Finished With 1 New Washroom.


### Mclaughlin / Raylawson

**$1,500/M For Lease**
Att/Row/Twnhouse 2-Storey, 3+1 Bedrooms, 4 Washrooms, Close To All Ameneities


### Neilson / Finch


**$297,000**
Semi-Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms, Large Semi Detached Corner Home,9Ft. Ceiling Main,East Of Neilson And South Of Finch Ave,Close To Schools,Ttc, Shopping


### Neilson / Sheppard


**$359,900**
Detached Bungalow, 3+2 Bedrooms, 2 Washroom, Absolutely Well Maintianed Family Home Situated On Corner Lot W/ Huge Backyard. Big Deck And Gazebo For Your Summer Retreat.


### Mclevin / Neilson

**$399,800**
Link 2-Storey, 4+2 Bedrooms, 4 Washrooms, Location!! Location!! Well Maintained Fully Brick 6 Year New Home, Linked By Double Car Garage, Corner House


### Dixie & Clark

**$399,900**
Detached Sidesplit, 4 Bedrooms, 3 Washrooms, Wow!!! Don't Miss To See This Fully Renovated Home. See The Virtual Tour!!! Bsmnt Has A Separate Entrance, Room For The Bsmnt

### 9th Line / Hwy 407

**$408,800**
Semi-Detached 2-Storey, 3 Bedrooms, 2 Washrooms, Fabulous Semi-Detached Brick Home In Grand Cornell Built By Green Park. Three Spacious Bedrooms

### Finch / Morningside

**$419,000**
Detached 2-Storey, 3+1 Bedrooms, 3 Washrooms, A Beautiful 3 Level Backsplit, Totally Renovated Top To Bottom, Spacious 4 Bedrooms, Gleaming Parguet, Laimnate & Hardwood Flooring Thruout.


### Midland / Ellesmere

**$419,900**
Detached Backsplit, 3+1 Bedrooms, 2 Washrooms, Wow,Don't Miss This Mint Condition Home, First See The Virtual Tour, Rare To See The Houses With Attached 2 Car Garages

### Bur Oak / Hwy48

**$468,000**
Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms, Mature & Quiet Neighbourhood, Detached 2-Storey Home With Balcony Plus Many New Upgrades, Over 1800Sqfeet

### Markham / Golden

**$479,900**
Link 2 Storey, 3 Bedrooms, 3 Washrooms, Gorgeous Home In Prime Markham Location.Close To Major Amenities,Parks,Plazas,Transit,High School Etc


### Markham Rd And Bur Oak

**$479,900**
Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms, Welcome To Markham! Must See Modern, Open Concept, & Under 5 Years Spacious 1785Sf

### E. Mccowan / N.16th

**$499,000**
Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms,7-Yr New,Original Owner,Well-Kept Quality Built,Approx 1900 Sq Ft,Plywood Subflooring, Garage Direct Access,2-Car Driveway

### Markham Rd & Dennison

**$529,000**
Detached 2-Storey, 4 Bedrooms, 3 Washrooms, Brand N E W - 1700 Sq Ft, 4 Bedroom Brick House, Close To Markham Road Public Transit, And All The Shopping, Beautifully Upgraded With Dark Oak Hardwood Floors And Staircase

### Denison / Brimley

**$539,000**
Link 2-Storey, 4+1 Bedrooms, 4 Washrooms, Newly Renovated And Upgraded Home.Roof(2008),Newer High Efficient Furnace.Highly Demand Area Of Markham

### Woodbine / Major Mackenzie

**$543,800**
Att/Row/Twnhouse 2-Storey, 4 Bedrooms, 4 Washrooms, 4 Bdm Approx. 2200 Sq Ft,Finished Bsmt With Bath Rm,Link By The Garage Only, Over $70K Upgrades

### Fincham / 16th.Ave.

**$557,800**
Detached 2-Storey, 4+1 Bedrooms, 4 Washrooms, Spotless, Bright & Spacious Executive Home. Entertainer's Delight With Gleaming Hardwood Floors & Ceramic Tiles In Grand Foyer & Kitchen.

### Tenth Line / Thomas

**$599,000**
Detached 2-Storey, 4 Bedrooms, 3 Washrooms, Must See!!! Located In The Heart Of Churchill Meadows. Now Best Price Churchill Meadows Detached House. Approx 2400 Sq Ft, 9 Foot Ceiling

## 24/7 Realtors



**Raj Ariyanayagam**
Broker
Cell: **416-930-4663**
BUS: **416-298-3200**
Fax: 416-298-3440
rajhomes@hotmail.com,
pariyanayagam@trebnet.com

HOMELIFE HIGHER STANDARDS

**Vasanthy Niranjan**
Broker
Cell: **416-845-8272**
BUS: **416-298-3200**
Fax: 416-298-3440
vasanthyne@gmail.com,
vniranjan@trebnet.com



## HOMELIFE TODAY REALTY LTD., BROKERAGE
31 Progress Ave, Unit 210, Toronto, Ontario, M1P 4S6, Canada.

Not intended to solicit properties currently listed for sale or individuals currently under contract with a Brokerage.

-digi Media-

## உளநல ஆலோசனை தேவை

கனடாவில் தமிழர்களிடையே தற்கொலை அதிகரித்துச் செல்கின்றது என்பதை, நாம் மிகுந்த கவலையுடன் கவனத்திலெடுத்துக்கொள்ளவேண்டிய கட்டத்தில் இருக்கின்றோம்.

புலம் பெயர்ந்து ஒரு புதிய புவியியல், சமூக, பொருளாதார, கலாச்சார சூழ்நிலைக்குள் திடீரெனத் தள்ளப்பட்டு வாழும் எமக்கு, இங்குள்ள அனைத்து விடயங்களும் புதியவை. இந்த மாற்றம் குடும்பங்களில், உறவுகளில் புதிய புதிய பிரச்சினைகளை ஏற்படுத்து-கின்றது.

நாம் பெரியவர்களாக, மதிப்புக்குரியவர்களாக, மற்றவர்களால் செய்யமுடியாததைச் செய்த சாதனையாளர்களாக எம்மை மற்றவர் நினைக்கவேண்டும் என்று நினைக்-கின்றோம். அதை நோக்கிப் பயணிக்கின்றோம். எம்மால் முடியாத சுமைகள் பலவற்றைச் சுமக்கின்றோம். இவ்விடயத்தில், எம்மைச் சுற்றியுள்ள சமூகமும் நாம் எதை எதிர்பார்த்து இவற்றையெல்லாம் செய்தோமோ அதை எமக்குத் தருகின்றது. எம்மால் முடியாத இன்னும் பல சுமைகளைத் தூக்க நிர்ப்பந்திக்கின்றது.

நாம் செய்யும் தவறுகளை, சிந்தனைப் பிறழ்வுகளை எம்மைச் சுற்றியுள்ள உறவுக ளுடன் சேர்ந்து நாம் சார்ந்த சமூகமும் பார்த்து மௌனமாக நிற்கின்றது. இது தவறுகளை, சிந்தனைப் பிறழ்வுகளை உற்சாகப்படுத்துவதாகவே அமைகிறது.

எம் குடும்பத்தை, பொருளாதாரத்தை சீராகக் கவனிக்கமுடியாமற் போகின்றது. இதனால் போலி மதிப்பை, மரியாதையை எதிர்பார்த்த எம்மால், இந்தச் சமூகத்தின் முன் முகங்கொடுக்க முடியாதுபோகின்றது. இதைத் தாங்கமுடியாத நிலையில் மனம் பெரும் வேதனைக்குள் மூழ்குகின்றது. பலருக்கு மனநிலைப் பாதிப்புகளும் ஏற்படுகின்றன. விளைவாக தற்கொலை எண்ணமும் தோன்றுகின்றது.

ஆனால் தற்கொலை செய்யும் மனநிலையில் இருப்போரைக் காப்பாற்ற முடியும் என்று உளவியலாளர்கள் சொல்லுகின்றார்கள்.

பெரும்பாலும் தற்கொலை செய்துகொள்ளும் எண்ணம் தற்காலிகமானதே. சில நிமிடங்கள் தள்ளிப் போனாலே ஒருவரின் மனதை மாற்றிக் காப்பாற்றிவிடலாம்.

பலவழிகளிலும் பாதிக்கப்பட்ட, நோய்வாய்ப்பட்ட எங்கள் சமூகத்திற்கு இப்போது உளநல ஆலோசனை தேவை.

III

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரி, பிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

முகப்புப் படத்தில்:
**எழுத்தாளர் எஸ்.பொ. என்றழைக்கப்படும் எஸ். பொன்னுத்துரை.**
படம்: டிஜி கருணா

**Publisher & Editor :** P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், கருணா, சுந்தர் சின்னத்தம்பி, பொன்னையா விவேகானந்தன், கந்தசாமி கங்காதரன்.

ஓவியங்கள் : ரமணி (இலங்கை)
K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து)
ட்ராட்ஸ்கி மருது (இந்தியா)
கருணா (கனடா)
V. ஜீவானந்தன் (இந்தியா)
சிவ. மாமுனி

புகைப்படங்கள்: கணா ஆறுமுகம், கருணா.

தட்டச்சு : கௌரி, ஜீவா, பிரியதர்சினி, மஞ்சுளா ராஜலிங்கம், சாம் டானியல்.

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி. மஞ்சுளா ராஜலிங்கம்.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

அஞ்சல் முகவரி : **Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

றொறன்ரோ விநியோகம் : இராமநாதன் ரூபன்
மொன்றியால் தொடர்புகள் : சுகுமாரன் சின்னையா
**1-514-299-3186**
ஒட்டாவா தொடர்புகள் : அலெக்ஸ் சிவசம்பு
**1-613 -276-7253**

**Tel :** 416-646-3422, 416-857-6406
**Fax :** 416-849-0594
**Web :** www.thaiveedu.com
**E-mail :** info@thaiveedu.com

# எஸ்.பொ: ஈழத்து இலக்கியத்தின் தன்னேரிலாத் தலைவன்



- தேவகாந்தன்

**ஈழத்து எழுத்தாளர் எஸ்.பொ. என்றழைக்கப்படும் எஸ். பொன்னுத்துரைக்கு 2010ஆம் ஆண்டுக்கான மதிப்புமிக்க தன் வாணாள் தமிழ்ச் சேவைக்கான இயல் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.**




## கணினி உலகப் புல்லுருவிகள்

- ஜிப்றி உதுமாலெப்பை

**மூன்றாவது உலகப்போர் ஆரம்பமாகிச் சிலவருடங்களாகிவிட்டது. கணினி மயமாக்கப்பட்ட உலகில், ஒவ்வொரு நாடும் தற்போது கணினி யுத்தம் புரிந்துகொண்டிருகின்றது..**




## மனோவள விகாரம்

- கந்தையா செந்தில்நாதன்

**ஏனைய மக்களின் நம்பிக்கைகள், மன எழுச்சிகள், நோக்கங்கள், சிந்தனைகள், திட்டங்கள் என்பனவற்றைச் சரிவர விளங்கிக்கொள்வதில் சிரமமுடையவர்களாக இருக்கிறார்கள்.**




## இரசாயனப் பொருட்களில் இருந்து வீடுகளைப் பாதுகாத்தல்

- பிரபா சின்னா

**பல இரசாயனக் கலவைக-ளினால் உருவாக்கப்பட்ட வீடுகளில் இருந்து வெளிவரும் இரசாயன மாற்றங்கள், எம்மில் ஏற்படுத்தும் பாதிப்புகள் பல.**




## அங்கீகாரங்களை வேண்டி நிற்கும் ஓமனக் குட்டிகள்

- பிரதீபா கனகா தில்லைநாதன்

**நாம் எம்மை அங்கீகரிக்காததால் தான் மற்றவர்கள் மனங்களில், வீடுகளில், பண்பாட்டில் எம்மை அங்கீகரிக்கக் கேட்டவாறு நிற்கிறோம்.**

**இரத்தக் கறை படிந்த கைகள்**
அ. கணபதிப்பிள்ளை 5

**முள்ளிவாய்க்கால் சின்றோம்**
போல் யோசேப் 9

**ஈ.கோலை**
கந்தையா பரநிருபசிங்கம் 11

**இருபது (நகக்) கண்களையும் கவனியுங்கள்**
மஞ்சுளா ராஜலிங்கம் 34

**தமிழ் முதியோர்களின் நல்வாழ்வும் அவர்களது குடும்ப சமூக விடயங்களும்**
சுல்பிகா இஸ்மாயில் 81

**கோ மற்றும் பயணம் திரைப் படத்தை முன்வைத்துச் சில கருத்துக்கள்**
அருண்மொழிவர்மன் 82

**கடிச்சது சாரை**
சேகர் தம்பிராஜா 84

**ஒன்றுக்கும் உதவாதவன்**
அ.முத்துலிங்கம் 86

**ஒரு வழக்கும் ஒரு விவாகரத்தும்**
என்.கே.மகாலிங்கம் 91

**தவளையும் தன்வாயால் கெடும்**
கே.எஸ். பாலச்சந்திரன் 94

**இருள் பரவும் காலம்**
நிமால் நாகராஜா 99

**மாத்தளை இலக்கிய வட்டம்**
வி. கந்தவனம் 102

**கொல்லைப் புறத்து அகத்தி இலை நல்லது வறைக்கு**
பொ. கனகசபாபதி 105

**இன்றைய நோக்கில் பண்டைய தமிழிலக்கியங்கள்**
நா. சுப்பிரமணியன் 109

**இயல் விருது 2010**
கந்தசாமி கங்காதரன் 110

*மேலும் ஆக்க விபரங்கள் 5ம் பக்கம்*

# இரத்தக் கறை படிந்த கைகள்

இந்தியாவில் அசோகனின் கலிங்கப்போரைக் கண்டு கலங்கிநின்ற கௌதமபுத்தரின் பஞ்ச சீலத்தைப் பின்பற்றும் நாடு என்ற பெருமை யுடைத்தது இலங்கை. புத்தரின் போரல் புனித யுத்தம் நடாத்தி புகழேணியின் உச்சிக்குப் போய்விட்ட ஆட்சியாளர்கள் தொடர்ந்து எழுதப்படும் மகாவம்சத்தில் பௌத்தமதக் காவலர்களாக இருப்பார்கள். ஆனால் மனம் மாறிய அசோகனின் வழிநிற்கும் பஞ்சசீலர்களாக மாறுவார்களா என்ற எதிர்பார்ப்பு வரலாற்று மாணவர்களிடையே இருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இதுவரை நடக்காதது இனி நடக்குமா என்பது தமிழர்களின் எதிர்பார்ப்புக் கலந்த கேள்வியாகத் தொடர்கிறது.

அசோகச்சக்கரத்தைத் தேசியக் கொடியிற் தாங்கிய சுதந்திர இந்தியா சமாதானத்தின் காவலனாக இருந்து 20ம் நூற்றாண்டுகளில் இலங்கையில் முளைத்தெழுந்த ஆட்சிக் கெதிரான கிளர்ச்சிகளை அடக்கி உலகிலேயே ஒரேயொரு சிங்கள பௌத்த அரசினைப் பாதுகாத்து வந்திருக்கிறது. 'இந்தியாவின் பார்வையில் சமாதானம் என்பது நாடுகளிடையிலான சமாதானம் என்றதொரு உயர் மட்டக் கட்டுக்கோப்பை அடிப்படையாகக் கொண்டிருந்தது' மற்றவை எல்லாம் உள்நாடுசார்ந்த தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகள் என்று தனது கைகளைக் கழுவமுயன்று கொண்டிருக்கிறது. இந்திராகாந்தி இந்தியா மீண்டும் உதயமாகுமா? அடக்கப்படும் இலங்கைத் தமிழர்கள் தொடர்பான மத்திய அரசின் கொள்கையில் மாற்றம் ஏற்படுமா? என்ற எதிர்பார்ப்பு ஆடிச் சோகத்தை அனுபவித்த தமிழர்களிடம் இருப்பதில் வியப்பில்லை.

ஆடிமாதம் தமிழர்களின் வாழ்வில் முக்கியமான காலப்பகுதி 'ஆடிப்பிறப்பு என்று குதூகலித்த தமிழர்கள். ஆடிக்கூழுடன், ஆடிவிதை தேடிவிதைத்தும் பெருமைப்பட்டவர்கள். ஆனிவரை கொழுத்தும் வெய்யிலின் கொடுமையைக்குறைத்து வரும் மழையையும் அதன் ஆடிப் பெருக்கையும் அனுபவித்த தமிழர்களின் வாரிசுகள் என்ற பெருமையுடன் வாழுகின்றவர்கள் இலங்கைத் தமிழர்கள். அவர்களது உடல்களும் உடமைகளும் வீதியிற் போட்டு எரிக்கப்பட்ட கொடுமைகள், கண்களைப்பிடுங்கி உயிருடன் செய்த சித்திரவதைகள் இனக்கலவரங்கள் என்ற போர்வைக்குள் மூடப்பட்டிருந்தன. இலங்கை முழுவதிலும் இருந்த தமிழர்கள் உயிரைக்காப்பாற்றுவதற்காக மட்டும் எல்லாவற்றையும் இழந்து ஓடிவந்த பொழுது தான் இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் தமக்கு ஒரு தாயகம் இருக்கிறது என்ற உண்மையினை அவர்களால் உணர்ந்துகொள்ளமுடிந்தது.

21ம் நூற்றாண்டிற் படிப்படியாகப் பலமிழக்கச் செய்யப்பட்ட ஈழப்போர்கள் 2009ஆண்டு மே மாதத்தில் முள்ளிவாய்க்கால் கொலைக் களத்தில் முடித்துவைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டாலும் அதுவே தென்னிலங்கைப் போரால் அடைக்கலம் தேடி ஓடித்தாயகம் இருக்கிறது என்று நம்பியிருந்த தமிழ் மக்களுக்குத் தமிழர்தாயகம் பாக்கு நீரிணையைக் கடந்து வடக்கே தள்ளப்பட்டு விட்டது என்ற உண்மையினைப் புரிய வைத்துவிட்டது.

> “ நாங்கள் சொல்வதை இலங்கை ஆட்சியாளர்கள் கேட்கிறார்களில்லை என்ற பிரதமர் மன்மோகன் சிங்கின் ஆதங்கம், இந்தியா தனது தட்டிக்கேட்கும் அதிகாரத்தை எட்டுக்கோடி தமிழர்களிடமும் விட்டுவிட்டதனைத் துலாம்பரப்படுத்தி நிற்கிறது. ”

அப்படியானால் இப்பொழுது இலங்கையில் நடப்பது என்ன? சூழ்ந்திருக்கின்ற இராணுவத்தின் இரத்தக்கறை படிந்த கைகளுக்கு மத்தியில் இரத்தம் ஒட்டியும் ஒட்டாமலும் தமிழர்கள் வாழ்க்கை என்ற நீரோட்டத்தில் தங்களை இணைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தான் உண்மை. இராணுவகலாசாரத்துக்குள் வலிந்து தள்ளப்பட்டிருக்கும் தமிழர்களின் வாழ்வுநிகழ்ச்சிகளிலும் சாவுநிகழ்ச்சிகளிலும் இராணுவத்தின் பங்கேற்பு விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இருந்து கொண்டிருக்கிறது என்ற உண்மை நிலைமை பலருக்கு விளங்காமலிருக்கிறது.

இலங்கைத் தமிழரின் பேச்சுரிமை, கூட்டம் கூடுகின்ற உரிமை ஆகிய இரண்டு பெரிய சனநாயக விழுமியங்கள் தடுக்கப்பட்டிருக்கின்ற நிலையில் தமிழர்கள் தங்களுக்கெதிராக நடக்கும் கொடுமைகளைத் தட்டிக் கேட்கத் திராணியற்றவர்களாக இருக்கிறார்கள். பல ஆண்டுகளாக இந்த இரு உரிமைகளும் மறுக்கப்பட்டிருந்த அராபிய நாடுகளில் சுதந்திரத் தீயானது பரவிக் கொண்டிருக்கிறது. மனிதஉரிமை மீறுதல்களைக் கண்காணிக்கும் சர்வதேசத்தின் பார்வை படிப்படியாக அந்த நாடுகளை நோக்கி நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் சுதந்திர இலக்கினை ஒருநாள் எட்டிப் பிடித்துவிடமுடியும் என்ற நம்பிக்கை அவர்களிடமிருக்கிறது.

உலகம் வரையறை செய்த சனநாயகக் கட்டுக் கோப்பிலிருந்து இலங்கைத் தமிழர்கள் ஒரு காலத்திலும் விடுபட்டிருக்கவில்லை. இலங்கைப் பாராளுமன்றத்தில் தமிழ்ப்பிரதேசங்களின் பிரதிநிதிகள் சுதந்திரத்தின் பின்பாகத் தொடர்ந்தும் அங்கம்வகித்து வந்திருக்கிறார்கள் அவர்களது உரிமைக் கோரிக்கைகள் காலத்துக்குக்காலம் மாற்றம் பெற்றுவந்திருக்கின்றன. அக்கோரிக்கைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் மக்கள். பாராளு

**- அ. கணபதிப்பிள்ளை -**

மன்றத்தில் இருந்த அங்கத்தவர்களினால் முன்வைக்கைப்பட்ட தமிழீழக் கோரிக்கைக்கு பாராளுமன்ற அங்கத்தவர்களின் பின்னால் நின்று ஆதரவு வழங்கியவர்கள் அத்தமிழர்கள். இதனால் அவர்கள் புலிகளாகவும் புலி ஆதரவாளர்களாகவும் புலி அனுதாபிகளாகவும் பார்க்கப்பட்டிருக்கிறார்கள். இன்னமும் அவ்வாறுதான் பார்க்கப்படுகிறார்கள் என்றால் அரசு சனநாயக ரீதியில் செய்யமுடியாததை இராணுவத்தின் மூலம் செய்ய முயன்றது கொண்டிருக்கிறது என்ற உண்மை வெளிப் படுகிறது.

இராணுவம் புகுத்தப்பட்டால் மனித உரிமை மீறுதல்களைச் செய்யக்கூடிய சட்டம் அங்கு துணை இருக்கும். சட்டம் ஒழுங்கை தன் கையில் போட்டுக் கொண்டிருக்கும் எத்தனையோ குறுநிலமன்னர்களின் சர்வாதிகார ஆட்சி இந்தக் கட்டுக் கோப்பினுள் தவிர்க்க முடியாதது. இராணுவம் நகர்த்தப்படுகின்ற பொழுது உயிர்களும் உடைமைகளும் பெண்களும் குழந்தைகளும் உங்கள் சொத்து என்ற கருத்து அரச பகுதியிலிருந்து வெளிப் படுத்தப்பட்ட பொழுதே இலங்கையில் மனித உரிமை மீறுதல்கள் நடக்கும் என்பதனை ஐ.நா விளங்கிக் கொண்டிருக்கவேண்டும்.

ஐ.நா வில் அங்கத்துவம் வகிக்கும் நாடு அங்கு ஐ.நாவுக்கே பாதுகாப்பில்லை என்று இலங்கை அரசு அதனை வெளியேறச் சொல்லும் பொழுது அந்தநாட்டு மக்களின் அழுகுரலைக் கேட்க ஐ.நா விரும்பவில்லை என்பதாகவே இருந்தது. ஐ.நாவுக்குச் சொந்தமான படைகளை எல்லாநாட்டிலும் இருந்து பெற்று கொலைக்களத்தை அன்று அதனாற் தடுத்திருக்க முடியும். மனித உரிமை பேணும் நாடு இலங்கை. இலங்கையின் அரசியற் திட்டம் சனநாயகத்தின் பாற்பட்டது என்ற நம்பிக்கையின் கீழ்தான் சர்வதேசநாடுகள் இராணுவநகர்வை அனுமதித்திருந்தன.

இராணுவம் நகர்ந்து கொண்டிருந்த பொழுது மறைவில் நடத்தப்பட்டதாக சொல்லப்பட்ட மனித உரிமை மீறுதல்களை அரசாங்கம் தனது பிரச்சாரத்தினாலும் இராசதந்திரத்தினாலும் மறைத்துவிட்டிருந்தது. பங்கு கொண்ட நாடுகளும் ஊடகவியவாளர்களும் நிலைமையினை வெளியிற் கொண்டுவர மறுத்து விட்டார்கள். கொல்லப்பட்ட தமிழர்களுக்கும் கொல்லப்பட்ட இராணுவத்துக்கும் என்ன நடந்தது என்ற கேள்வி தான் மிஞ்சியிருக் கிறது. போரை நடாத்திவர்கள் அப்பாவிச் சிங்களத் தாய்மாரினதும் தமிழ்த்தாய்மாரினதும் சாபத்தினைவாங்கிக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை மனித உரிமை மீறுதல் தொடர்பான ஐ.நா அறிக்கை என்ற வடிவத்தில் வெளிவந்திருக்கிறது. அதற்காக அத் தாய்மார்களுக்கு அரசாங்கம் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

இந்தக் கொலைக்களத்தின் சொந்தக்காரன் யார் என்பதனைக் கண்டுபிடிக்கும் விசாரணை தேவை என்பதனை அமெரிக்க உட்பட மேற்குலக, மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஒரு முகமாக வலியுறுத்தியிருக்கின்றன. தமிழர் பிரச்சினையைத் தீர்க்கப் புலிகள் ஒரு தடை. அதனால் அவர்களைச் சரணடைய வைக்க வேண்டும், அதன்பின் இலகுவாகப் பிரச்சினை தீர்க்கப்படலாம். அதற்காகத்தான் போர் தேவை என்று இலங்கை எடுத்துக்காட்டி நம்பவைத்ததோ, அதிலிருந்து தவறிச் செல்லும் இலங்கை அரசின் போக்கினைக் கண்டிக்கும் ஆயுதமாகவே அந்நாடுகள் விசாரணையின் அவசியத்தை நோக்குகின்றன. சனநாயகமுறையில் தமிழர் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்பதை மீண்டும்

தொடர்தல் 6ம் பக்கம்



# கணினி உலகப் புல்லுருவிகள்

ஜிப்றி
உதுமாலெப்பை
- கணினி வல்லுனர் -



ஜுன் 15, 2011. அமெரிக்க உளவு நிறுவனத்தின் இணையத்தளம் (CIA.Gov) சில மணி நேரங்கள் வேலை செய்யவில்லை. என்ன நடக்கிறது என்று யாருக்கும் புரியவில்லை, lulzsecurity என்ற Hackers கூட்டதினரிடத்தில் இருந்து Twitter குறும் செய்தி மூலமாக 'உங்கள் இணையத்தளத்தை நாங்கள்தான் செயல் இழக்க செய்திருக்கிறோம்' என்ற செய்தி வரும்வரை.

இது என்ன சும்மா லேசுப்பட்ட வேலையா 'சரி ஆயிரத்தில் ஒன்று' என்று தட்டிக்கழிக்க. அப்போதுதான் எனக்கு, சில மாதங்களுக்கு முன் சீனாவில் இருந்து கனடிய பாதுகாப்பு மையத்தை ஊடறுத்து கனடிய படைகளிடம் என்னென்ன ஆயுதங்கள் இருக்கின்றன அவை எங்கே இருக்கின்றன, வாங்கிய இடம், விலை என்று நிறையவே தகவகல்களை ஒரு நாளில் ஐந்து மணிநேரமாக பாதுகாப்பு மையத்தின் கணினிகளுக்குள் சாவகாசமாக இருந்து களவாடிப்போன சம்பவம் ஞாபகம் வந்தது.

கடந்த சில ஆண்டுகளாக இனைய தொடர்புகள் பல நாடுகளின் புரட்சிகளுக்கு முக்கிய தொடர்பு சாதனமாக மட்டுமலாமல் ஒவ்வொரு நாடுகளுக்கும் இடையான உண்மையான போர்க்களமாகவே மாறி இருக்கிறது.

விகிலீக்ஸ் என்ற அமைப்பு உலக நாடுகளில் உள்ள முக்கியமான நாடுகளின் அதி உயர் பாதுகாப்பு கணினிகளில் பத்திரமாக வைத்திருந்த அந்தரங்க ரகசியங்கள் கூட ஊடறுத்து உலக வல்லரசுகளின் வயிற்றில் புளியை கரைத்துக் கொண்டிருப்பதை யாவரும் அறிவோம். இந்த நிறுவனத்தின் கணினிகளை ஒரு வழி பண்ண முடியாமல் சந்திரனுக்கு ரொக்கட் விட்ட நாடுகளும் திக்கு முக்காடி போய் நிற்கிறது.

ஆக சோறு ஆக்கும் Rice Cooker உலையில் இருந்து அணுசக்தி உலைகள் வரை கணினி மயப்படுத்தப் பட்டிருப்பதினால் மனிதன் வாழும் இந்த பூமியின் தகவல்கள் அத்தனையும் கணினிகளுக்குள் அடங்கிக் கிடக்கிறது.

2010ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஈரானிய அணு சக்தி விஞ்ஞானிகளுக்கு அதிர்ச்சியான செய்தி காத்திருந்தது. அவர்களின் ஐந்தாவது அணு உலை முழுமையாக செயல் இழந்தது. ஆனால் கணினிகளில் 'Normal Operation' காட்டினாலும் அணு உலைகளினுள் இருந்த centrifuges முழுமையாக அழிக்கப்ப்பட்டு இருந்தது.

நடந்தது இதுதான். ஈரானிய அரசு அணுக் குண்டு தயாரிக்கும் நோக்கில் அணு உலைகளை அமைக்கிறது என்று சந்தேகம் கொண்ட இஸ்ரேலிய நாடு, தனது நாட்டின் 'தேகேவ்' பாலை வனத்தில் ஈரானிய நாட்டு அணு நிலைய அமைப்பை உருவாக்கி இரண்டு வருட காலமாக Stuxnet worm என்ற ஒரு வகையான கணினி வைரசுவை பரீட்சித்துப் பார்திருகிறார்கள். இந்த கணினி மென்பொருள் கணினித்திரையில் 'எல்லாம் சரியாக வேலை செய்கிறது' என்று காட்டிக்கொண்டு இருந்தாலும் பின்னணியில் தனது 'வேலையை' செய்து கொண்டிருக்கும். (வடிவேலுவின் ஸ்டைலில் 'வரும் ஆனா வராது'). இந்த கணினி வோர்ம் தனது பணியை ஆற்றிய பின் தன்னைத்தானே இருபது விகிதம் அளித்துக் கொளும் வகையில் உருவாக்கப்பட்டிருந்தது. 2011இல் அணுகுண்டை தயாரித்து விடலாம் என்று எண்ணிருந்த ஈரானின் கனவு 2015ஆம் ஆண்டுக்கு தள்ளி போடப்பட்டிருக்கிறது என்று இஸ்ரேலிய நாட்டு உளவுத்துறையின் தலைவர் Meir Dagan கூறியுள்ளார்.



மே 16, 2011. கடைசி விண்வெளி பயணத்தை பயணிக்க shuttle Endeavor விண்கலம் தனது உந்து தளத்தில் தயாராக இருந்தது. NASA வின் விண்வெளி அராய்ச்சி விஞ்ஞானிகளுக்கு விண்கலத்தின் வழக்கமான தொழில் நுட்ப உபகரணங்கள் சரியாக வேலை செய்யுமா என்ற கவலையுடன் சேர்த்து இரண்டு மேலேதிக பயமுறுத்தல்களும் ஒவ்வொரு நிமிடத்தையும் ஒவ்வொரு யுகமாக நகர்த்தியது. முதல் நாள் அதாவது 15ஆம் திகதி NASA நிறுவனத்தின் சில. இணையத்தளங்கள் ஊடறுக்கப்பட்டு சாதாரண Photoshop படங்களினால் நிரப்பப்பட்டதும், 1989ஆம் ஆண்டு விகிலீக்சின் பொறுப்பாளர் ஜுலியனும் அவரது கூட்டாளிகளும் சேர்ந்து Atlantis விண்கலத்தை ஏவ விடாமல் முழு ரொக்கட் ஏவும் மையத்தையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த சம்பவமும் இந்த முறை ஏதாவது தப்பு தண்டா நடந்திருமோ என்று பயத்தை கடைசி நிமிடம் வரை உயர் மூச்சை கவ்விக்கொண்டிருந்தது. கடைசியாக எந்த ஆபத்தும் இல்லாமல் விண்ணில் சீறிப் பாய்ந்தது. விண்கலத்தின் இறுதிக்கட்டத்தின் வெற்றியில் நிம்மதி பெருமூச்சு விட்டார்கள்.

ஏப்பிரல் 21, 2009. அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சு பென்டகனில் இருந்து புதிய தொழில் நுட்பம் கொண்ட (Stealth, f-13 Fighter jets) அதி உயர் போர் விமானிகளின் கணினி தொழில் நுட்பம் பற்றிய வரைபடங்களும் தயாரிப்பு முறைகளும் சீன நாடில் இருந்து கொண்டே Hackers களவாடி இருக்கிறார்கள். இது கடந்த இரண்டு வருடங்களாக நடந்திருபதாக கூட ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இப்போது சீனா தாங்களாகவே மிக நவீனமான விமானகளை தயாரித்திருப்பது வேறு கதை. இதே போன்று பல தடவைகள் அமெரிக்க பாதுகாப்பு மையம் சீன தேசத்தில் இருந்து hackers மூலமாக (May 2007, March/ September 2008) தாக்கப்பட்டு பல தரவுகள் களவாடப்படுள்ளன.

ஒகஸ்ட் 14, 2010. பாகிஸ்தானின் சுதந்திர தினம். பாகிஸ்தானை சேர்ந்த Pak Cyber Army / PakHaxors என்ற Hacker குழு 10-20 இந்திய இணையத்தளங்களைத் தாக்கி 'Feel The Power of Pakistan' என்ற சுலோகத்தை முதல் பக்கமாக்கினார்கள்.

இதனை தொடர்ந்து இந்தியாவின் Indishell / Indian Cyber Army என்ற குழுக்கள் பாகிஸ்தானுக்கு சொந்தமான 1226 இணையத்தளங்களைத் தாக்கி தங்கள் கட்டுப்பாடுக்குள் கொண்டுவந்து 'Indian Cyber Army' என்ற சுலோகத்தை அந்த இணையத்தளங்களின் முதல் பக்கம் ஆக்கினார்கள்.

December 2010. இந்தியாவின் FBI என்று அழைக்கப்படும் CBI இன் இணையத்தளம் 'Pakistani Cyber Army' என்று தங்களை அழைத்துக்கொண்ட Hackers குழு ஒன்றினால் ஒருநாள் முழுவதும் ஆக்கிரமிக்கப்பட்டது. அத்துடன் 'Long Live Pakistan' என்ற வாசகத்துடன் இந்தியாவின் Hackers கவனமாக இருக்கவேண்டும் என்று எச்சரிக்கையையும் CBI இணையத்தளத்தில் எழுதிவிட்டு சென்றார்கள். இதன் பின்னர்தான் இந்திய அரசு BlackBerry பாவனை ஊடாக நடக்கும் மின் அஞ்சல் அத்தனையையும் அரசுக்கு திறந்து படிக்கும் அதிகாரம் வேண்டும் அல்லது இந்தியாவில் BlackBerryஐ பாவிக்க இந்திய அரசு அனுமதிக்காது என்று கடுமையான சட்டத்தை கொண்டுவந்தது. இந்திய அரசுக்கு சீன நாட்டில் இருந்தும், பல கணினி தாக்குதல்களில் இருந்தும் தன்னை பாதுகாக்கும் அவசியம் இருக்கிறது.

ஒகஸ்ட் 23, 2010. பாகிஸ்தான் நாட்டை சேர்ந்த 'Urdu Hackers' என்ற Hackers குழு இந்தியாவின் மிகப்பெரிய இனைய/ தொலைபேசி தொடர்புகளை வழங்கும் (அரச நிறுவனங்களுக்கு உட்பட) BSNL நிறுவனத்தின் இணையத்தளத்தை கட்டுபாட்டுக்குள் கொண்டுவந்ததுடன் ஏராளமான தகவல்களையும் பதிவிறக்கம் செய்துகொண்டதாக கூறப்படுகிறது.

மேலே குறிப்பிட்ட கணினி உலகத்தில் நடக்கும் போராட்டம் உலகுக்கு தெரியவந்த தாக்குதல்களில் மிகச் சிலவே.

ஏப்ரல் 20, 2011. Sony Play Station Networkஐ பாவித்து விளையாடிய 70 Millions Computer Gamers களின் தனிப்பட்ட தரவுகள், கடன் அட்டை தரவுகள் என்று ஒட்டு மொத்த Sony Play Station Network அமைப்பையே ஒரு வாரகாலம் அசைய விடாமல் களவாடிய 19 வயது கல்லூரி மாணவர்களின் அட்டகாசங்கள் பற்றி எழுதப்போனால் தரப்பட்ட பக்கங்கள் போதாது.

மேலே குறிப்பிட்ட கணினி உலகத்தில் நடக்கும் போராட்டம், எண்பதுகளில் அமெரிக்காவும் ஈராக்கும் நல்ல உறவில் இருக்கும் போது அமெரிக்கா விற்பனை செய்த அதி முக்கியமான இலத்திரனியல் இயந்திரங்களின் உள்ளே பொருத்தப்பட்டிருந்த GPS சமிக்ஞை அனுப்பும் கருவிகள் தொண்ணூறுகளில் நடந்த ஈராக் யுத்தத்தின் போது குண்டு மழை பொழிந்த போது அமெரிக்க ராணுவத்துக்கு சரியாக அரச, இராணுவ நிலைகளை குறி வைத்து தாக்க உதவியது. இதன் அடிப்படையில் இப்போது சீனாவில் இருந்து தயாராகி அமெரிக்காவில் விற்பனையாகும் இலத்திரனியல் பொருட்களுக்குள் எந்த 'மாயம்' இருக்கிறதோ என்று அமெரிக்க ராணுவம் மூளையை குழப்பிக்கொண்டு இருக்கிறது.

பகவத்கீதை பிறந்த மகாபாரத யுத்தத்தில் இருந்து இரண்டாம் உலக மகா யுத்தம் வரை மட்டுமல்ல உள்நாட்டு சண்டைகள் முதல் நாடுகளுக்கு இடையான யுத்த தர்ம விதிகள் கூட எப்படி மாறி வந்திருக்கின்றன என்பதனை உற்று நோக்கினால் மூன்றாம் உலக யுத்தம் நீறு பூத்த நெருப்பாக இப்போது நடந்து கொண்டுதான் இருக்கிறது.

யுத்தம் தொடரும்...

jiffry.u@thaiveedu.com

■ ■ ■

88ம் பக்கத்தில் தேவகாந்தனின்
'எஸ்.பொ: ஈழத்து இலக்கியத்தின்
தன்னேரிலாத் தலைவன்'

## வீட்டினுள்ளே இன்னும் வருபவை...

ஆங்கிலம் இரண்டாவது மொழியாக...
ஜீவா திசைராஜா 13

கதைப்பதால் மாறுமா உளநோய்? உளநலமும் சிகிச்சையும்
புஷ்பா கனகரட்ணம் 14

நீர்
சிவாஜினி பாலராஜன் 17

நச்சகற்றல்
குமார் புனிதவேல் 18

சீனியாஸ் (துளுக்குசெவ்வந்தி)
செல்லையா சந்திரசேகரி 23

சர்வலோக நிவாரணி தேனும் இலவங்கமும்
24

உங்களுக்கான வீட்டை வாங்குவது எப்படி?
எஸ்.கே. பாலேஸ் 28

வீட்டை அழகு படுத்துவது எப்படி?
கருணா கோபாலபிள்ளை 31

எரிபொருள் சிக்கனம்
செந்தூரன் புனிதவேல் 32

நீர் விநியோகமும் தொழிற்பாடும்
வேலா சுப்ரமணியம் 36

CPP வலுவளர் ஓய்வூதியத்திட்டமும் நன்மைகளும்
ஆ.க. ஆனந்தநாதன் 41

இன்ப வாழ்விற்கான சில வழிகள்
சிவவதனி பிரபாகரன் 42

அன்னை இல்லம்
கதிர் துரைசிங்கம் 46

வீடு வாங்கப் போகிறீர்களா?...
வள்ளிக்கண்ணன் மருதப்பன் 49

பங்குகளின் விலை தரவுகளை அறிந்து கொள்ளல்
மாறன் செல்லையா 50

அதிகரித்துச் செல்லும் குடும்ப வன்முறைகள்?
த. சிவபாலு 52

கடன் வாங்குவது பற்றி தெரிந்து கொள்ளுங்கள்
சுரேன் சொர்ணலிங்கம் 56

பறவைகள்
பூர்வீகன் 61

எங்கள் மொழி எங்கே?
பார்வதி கந்தசாமி 62

இயற்கையில் உருமறைப்பு
பொன் குலேந்திரன் 63

படவிழாவும் சில குறிப்புகளும்
அருண் சிவகுமாரன் 64

உலக மொழிகளின் எழுத்து வடிவங்கள் தோன்றிய வரலாறு
முருகேசு பாக்கியநாதன் 66

கே. எஸ். பாலச்சந்திரனின் நேற்றுப்போல இருக்கிறது
குரு அரவிந்தன் 68

பயணத்தால் படித்தவை
மனுவல் ஜேசுதாசன் 70

நூலகம் - ஓர் அறிமுகம்
அருண்மொழிவர்மன் 71

கலைஞர் இராமநாதன் சடகோபன்
ப. ஸ்ரீஸ்கந்தன் 111

சங்கீதபூஷணம் எம்.ஏ. குலசீலநாதன்
கே.எஸ். பாலச்சந்திரன் 112

ஒரு வீட்டின் அத்திவாரமும் பராமரிப்பும்
சிறீதரன் துரைராஜா 114

# இரத்தக் கறை படி...

4ம் பக்கத் தொடர்ச்சி...

மீண்டும் வலியுறுத்துகின்றன.

போர் உச்சக் கட்டத்தை அடைந்த வேளையில் இலங்கை தனது வெற்றிக்களிப்பில் மேற்குலக நாடுகள். கோரியிருந்த போரை நிறுத்தும் பணிப்புரைகளை உதாசீனஞ் செய்திருந்தது. இலங்கை தனது உறுதி மொழியிலிருந்து தவறியதும், தொடர்ந்து தவறும் போக்கினையும் கண்டிக்கும் அதிகாரமும் ஏதே ஒருவிதத்தில் அந்தப் போருக்குதவிய எல்லாச் சர்வதேசக் கறைபடிந்த கைகளுக்கும் இல்லாமலில்லை.

இலங்கையாட்சியாளர்களைக் கட்டுப்படுத்தும் முழுஉரிமையும் மகாவம்ச அரசியலிலிருந்து ஆதாரப்படுத்திப்பார்த்தால் தென்னிந்திய சேர சோழ பண்டியநாட்டு அரசுகளுக்கிருந்திருக்கின்றன என்ற வாதம் இன்றைய தென்னிந்தியாவின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை விளக்கியிருக்கின்றன. சிங்கள மன்னர்கள் தென்னிந்தியாவைக் கட்டுப்படுத்தினார்கள் என்ற வாதம் சிங்கள மகாவம்ச ஆய்வாளர்களி-னால் இன்று முன்வைக்கப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

தென்னிந்தியத் தமிழ் நாட்டின் மக்கள் முடி-வுக்குக் கட்டுப்பட்டு ஆட்சிக்கு வந்த செல்வி ஜெயலலிதா அவர்கள் முன்வைத்த கோரிக்கை முழுத் தமிழருக்கும் பெருமையைக் கொடுத்திருக்கிறது. சர்வதேசத்தில் சனநாயக அடிப்படையில் நாடுகளைக் கட்டுப்படுத்தும் ஒரு உத்தியாக இருந்துவருவது பொருளா-தாரத்தடை. இது ஒரு யுத்தவடிவம். இதனை இலங்கை மீது இந்தியா பிரயோகிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, ஆட்சிமன்றத்தில் கட்சிபேதமற்ற ஏகோபித்த ஆதரவைப் பெற்று, அந்தச் செய்தியை பிரதமர் மன்மோகன் சிங்கிக்கு எடுத்துச் சென்ற அவரது விரைவான நடவடிக்கையினைப் பாராட்டவேண்டும்.

இப்பிரகடனத்தை அடுத்து மேற்கொண்ட சென்னை லோயலாக்கல்லூரி நடாத்திய கருத்துக்கணிப்பீட்டில் 82 சதவீதமானவர்கள் தமிழக சட்டமன்றத் திர்மானத்தை வரவேற்-றதுடன் 70 சதவீதமானவர்கள் இலங்கை அதிபரைப் போர்க்குற்றவாளியாக்க வேண்டும் என்பதனையும் சுமார் 2/3 பங்கினர் தமிழீழம் தான் தீர்வு என்று குறிப்பிட்டிருந்தமையினையும் கவனத்துக்கு எடுக்கவேண்டும். சண்டே ரைம் செய்திப்படி நாங்கள் சொல்வதை இலங்கை ஆட்சியாளர்கள் கேட்கிறார்களில்லை என்ற பிரதமர் மன்மோகன் சிங்கின் ஆதங்கம், இந்தியா தனது தட்டிக்கேட்கும் அதிகாரத்தை எட்டுக்கோடி தமிழர்களிடமும் விட்டுவிட்டதனைத் துலாம்பரப்படுத்தி நிற்கிறது.

தமிழக மானில முதலமைச்சர் ஜெயலலிதாவின் பாராளுமன்ற உரையில் தமிழர்கள் சிங்களவர்களுக்குச்சமனான முறையில் வாழும் உரிமையினை இலங்கை அரசு வழங்கவேண்-டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டிருந்தது. இலங்கை அரசியற்தலைவர்களோ ஆய்வாளர்களோ இதிற் கோவப்பட எதுவுமில்லை. இத்தகைய குரல் தமிழகத்திலிருந்து வெளிவரக்கூடாது என்பது அவர்களது அடிப்படை நோக்கம். ஒன்றுபட்ட இலங்கையுள் ஐம்பதுக்கைம்பது என்ற உரிமையுடன் சகல துறைகளிலும் தமிழரும் பங்கெடுக்கவேண்டும் அல்லது தமிழர் சிங்களர் என்ற இரண்டு வாழிடப் பிரதேசத்திலும் ஒரேவிதமான அரசியல் பொருளாதார கலாசாரக்கொள்கைகள் இனஅடிப்படையில் மேற்கொள்ள வேண்டும் அதற்கேற்ற முறையில் தீர்வுத்திட்டம் அமைக்-கப்படவேண்டும் என்ற அடிப்படைத்தேவை அவரது பேச்சின் சாரமாகக் கொள்ளப்படத்-தக்கது. இதுதான் இலங்கை அரசாங்கம் சொல்லிக்கொண்ட 1987ல் வந்த 13வது திருத்தத்தைவிடக் கூடிய அதிகாரப்பகிர்வு தமிழர்களுக்கு வழங்கப்படும் என்ற உறுதிமொழிக்கு ஒப்பானதாகக்கூட அமையலாம்.

இலங்கை 13வது திருத்தத்தை அமூலாக்கக் கூடாது அதனை நடைமுறைப்படுத்தினால் அது கூட்டாட்சியில் அல்லது தமிழீழத்தில் போய்முடியும் என்ற எதிர்ப்பு சிங்களப் புத்தி ஜீவிகள் மத்தியில் எழத் தொடங்கியிருக்கிறது. ஏற்கனவே நீதிமன்றம்வரை சென்ற 13வது திருத்தம் சிங்கள மக்களது ஏற்புவாக்கெ-டுப்பிற் போய்முடியுமா? அல்லது கைவிடப் படுமா? என்ற வினாக்களுக்கு விடைதெரிய வேண்டும்.

பாராளுமன்றத்தில் அரசியற்திட்டத்தை மாற்றத்தக்க மூன்றில் இரண்டு பலங் கொண்ட இந்த அரசாங்கத்துக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பும் தமிழர்களது பிரச்சினைகள் தீர்கப் படவேண்டும் என்ற சர்வதேச விழிப்புணர்வும் தமிழர் தொடர்பான நிலைப்பாட்டில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும். அந்த நாளை எதிர்பார்த்துக் காத்திருப்போம்.

kanapathipillai.a@thaiveedu.com

■ ■ ■


## தமிழ் நிகழ்வுகளின் சங்கமம்




- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்,

**inayam.net** மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே **inayam.net**இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது. இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே **www.inayam.net** முயற்சி செய்யுங்கள்!

**முற்றிலும் இலவசம்**

**www.inayam.net**

info@inayam.net 416.400.6.406



## YOUR HOME DOESN'T COME WITH MORTGAGE ADVICE. I DO.




- Purchase Refinance Preapprovals
- Builder rate hold up to 24 months
- Special program for Self employed and New immigrants
- Unlock your equity in your home with RBC Home Line Plan
- Available 7 days a week

**Call now before rate goes up!**

As your RBC Mortgage Specialist and a trusted member of our community I can advise you on your options and give you the confidence you need to make the right decisions. I can meet with you at a **place** and **time** that is **convenient** for you.

**Ram Krish**
**RBC Royal Bank**
Mobile Mortgage Specialist
Direct: **416-849.5363**
Email: ram.krish@rbc.com

* Some conditions apply.

RBC



- digi Media -

# மனோவள விகாரம் (Autism)

மனோவள விகாரம் என்பது ஒரு சிக்கலான மனோவியல் குறைபாடாகும். இக்குறைபாட்டின் தாக்கம் நபருக்கு நபர் வேறுபடலாம். ஏனெனில் இங்கு ஏற்படும் குறைபாடுகளைப் பரந்துபட்ட அளவில் வகைப்படுத்தலாம். இதனை ஆங்கிலத்தில் "Autism Spectrum Disorders" என்று அழைப்பார்கள்.

சிலர் இக்குறைபாட்டுடன் பிறப்பார்கள். அதே வேளை வேறு சிலர் 2 அல்லது 3 வயது வரை சாதாரணமாக வளர்ந்து வருவார்கள் அதன் பின்பு குணங்குறிகள் தெரியத் தொடங்கும். இக்குறைபாடு அப்பிள்ளையின் வாழ்வியலில் ஒவ்வொரு பகுதியையும் தாக்கக்கூடியது. இதனால் அக்குடும்பத்திற்குப் பாரிய பழுவை ஏற்படுத்தும். இந்நோய் ஒருவரை இனம், மதம், பொருளாதாரம், சமூக அமைப்பு, பின்னணி என்ற பேத காரணங்களை வைத்துத் தாக்குவதில்லை.

பிறக்கும் குழந்தைகள் அநேகமாக உடலியல், மனோவியல் ரீதியில் 2 வயது வரை சாதாரணமாக வளரலாம். அதன் பின்பு படிப்படியாக அதற்குரிய குணங்குறிகளைக் காண்பிக்க ஆரம்பிப்பார்கள்.

Dr. Leo Kanner என்பவர் (சிறுவர் உளவியல் நிபுணர்) 1943ல் இது ஒரு மூளை நரம்பு சம்பந்தமாக வியாதி என்பதை முதன்முதலில் அடையாளம் கண்டு கொண்டார். மூளை தொழிற்படும் விதத்தை அது பாதிக்கின்றது என்பதையும் கூறினார். விசேடமாக மக்களிடையேயுள்ள அந்நியோன்யமாக ஒட்டி உறவாடுதல், செய்திப் பரிமாற்றம் என்பவற்றைக் கூடுதலாகப் பாதிப்பதை அவர் கண்டுணர்ந்தார். இப்பிள்ளைகள் தங்களுக்குரிய உலகில் தான் வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

### நோயின் குணங்கள்:

பிள்ளைகள் இரண்டு அல்லது இரண்டரை வயதை அடையும் தறுவாயில் பெற்றோர்கள் பிள்ளைகளின் நடவடிக்கைகளைக் கவனிக்கும் பொழுது சில அசாதாரணமான பழக்கங்கள் மனதில் பலகேள்விகளை எழுப்பாலம். ஏன் இந்தப் பிள்ளை மற்றப் பிள்ளைகள் போல் சேர்ந்து விளையாடுவதில்லை அல்லது கதைக்காமல் ஒரமாக ஒதுங்கியிருத்தல் போன்ற செயல்கள் பெற்றோர்களை ஆலோசனை கேட்க வைத்துவிடும். இத்தகைய பல பிள்ளைகளிற்கு சிநேகிதர்கள் இருப்பதில்லை.

மனோவளவிகாரம் உடைய பிள்ளைகள் வேறு ஆட்களுடன் பழகவேண்டும் கதைக்க

**இதயம் மலர்கிறது - 34**

வேண்டும் என்று எதிர் பார்க்கமாட்டார்கள். மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் அல்லது அவர்கள் எப்படி ஒன்றை உணர்கிறார்கள் என்பது பற்றி அறிய எத்தனிக்கும் சக்தி சிலர்களிடம் இல்லை. தாமும் தன்பாடும் என்ற மாதிரி இருப்பார்கள். சிலர் தமது கைகளைத் தட்டுவார்கள் சிரிப்பார்கள், அழுவார்கள் வித்தியாசமான முறையில் மீண்டும் மீண்டும் சில அசைவுகளைச் செய்வார்கள். இந்நோயுடைய பிள்ளைகள் ஏனைய சாதாரணமான பிள்ளைகள் போல் தோற்றமளித்



தாலும் அவர்களினுள் தென்படும் குறைபாடுகள் அவ்வப்போது செயற்பாடுகளினூடே புலப்படும்.

மனோவளவிகாரம் என்ற நோய் பரந்துபட்ட அளவில் விதம் விதமான குணங்குறிகளைத் தன்னகத்தே கொண்டிருப்பதால் இதை ஒரு "பரந்துபட்ட குறைபாடு" (Spectrum Disorder) நோய் என்று கூறுவார்கள். இவர்களது பழக்க வழக்கங்கள் பரந்துபட்ட அளவில் அதன் உக்கிரத்தன்மையில் வேறுபடும். இன்னாருக்கு Autism இருக்கு என்று கூற முடியாத அளவில் இருந்து புறநடையில் இலகுவில் கண்டுகொள்ளக்கூடிய அளவுக்கு உக்கிரமான வீச்ச அளவில் இதன் குணங்குறிகள் வேறுபடும்.

முற்ற முழுதாகப் பிறருடன் தொடர்புகள் இல்லாமல் தனித்து இருப்பதுடன் கதைக்க பேசாமல் மனதளவில் மட்டும் பாதிப்பு இருப்பதுடன் விவேகச் சுட்டெண் (IQ) 70லும் குறைவாக இருப்பது "பரந்துபட்ட குறைபாடு" (Spectrum Disorder) நோயின் ஒரு அந்தம்.

மறு அந்தமானது - இவர்களது விவேகச் சுட்டெண் (IQ) 70லும் கூடுதலாக இருக்கும், நல்ல நினைவு ஆற்றல் இருக்கும், சொல் வளம் திறமையாக இருக்கும். இவர்களது குணங்குறிகள் மிகவும் குறைவாக இருக்கும். இதன் காரணத்தால் இத்தகையவர்களுக்கு இந்நோய் இருப்பதாகக் கண்டுகொள்வது கடினமானதாகும்.

மேற்கூறிய இரு அந்தங்களையும் பார்க்கும் பொழுது அவற்றிலிருந்து தெரிவது இந்நோய் உள்ளவர்களது உக்கிரத்தன்மையைப் பொறுத்து அவர்களது கற்கும் திறமை, தொழிற்படும் திறமைகளைப் படிப்படியாக கல்வியூட்டல் மூலமும் சிகிச்சை மூலமும் திருத்தக் கூடியதாக இருக்கும். காலமும், நேரமும் சிரமமும் தேவை. சிலரது முன்னேற்றம் மிகவும் ஆறுதலாக நடைபெறும்.

மனோவளத்தடங்கல் என்று கூட Autism என்ற நோயைக்குறிப்பிடலாம். மூளையில் உள்ள நரம்புக் கலங்கள் தமது தொழிற்பாட்டைச் சீராகச் செய்ய முடியாததால் இது ஏற்படுகின்றது. மனோவளத்தடங்கல் ஏன், எப்படி ஏற்படுகின்றது என்பதை அறிய முடியாமல் விஞ்ஞானிகள் பல குழப்பங்களுக்கு ஆளாகிறார்கள் பல ஆய்வுகளின் பின்பு இதற்குப் பல காரணங்களை முன்வைத்துள்ளார்கள் பரம்பரைத் தொடர்பு இருப்பதாக 2009 ஆண்டு ஆராய்ச்சிகள் முடிவு கூறுகின்றது. பரம்பரை அலகுகளில் காணப்படும் DNA என்ற மூலக்கூறில் அலகுமாற்றங்கள் Autism உள்ளவர்களில் அடிக்கடி நடைபெற்றுள்ளதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுகொண்டனர் மற்றும் மிகவும் அரிதான 13 வகையான பரம்பரையலகு விகாரங்கள் Autism நோயுடன் தொடர்புடையதாக இருப்பதையும் அறிந்து கொண்டார்கள். இதன் பிரகாரம் அவர்கள் கூறுவது என்னவெனில் ஒன்றில் மூளையின் அசாதாரண அமைப்பின் காரணத்தால் அது சரிவரத் தொழிற்படாமல்



**கந்தையா செந்தில்நாதன்**
- Echo - Cardiographer -

இருக்கலாம் அல்லது மதிய நரம்புத் தொகுதியில் சமச்சீரற்ற நிலைகள் இருப்பதால் உடலானது அசாதாரணமான நிலையில் இயக்கப்படுகின்றது.

மனோவளத்தில் ஏற்படும் இத்தடங்கல் நிலைகள் பலதரப்பட்டன என்பதால் ஒரு வைத்தியர் இந்நோயின் தாற்பரியத்தை அளவுகோல் கொண்டு ஒவ்வொரு நபரினதும் நோயின் உக்கிரத்தன்மை அளவுகோலின் எந்தப் பகுதியில் இருக்கின்றது என்பதை கண்டறிதல் வேண்டும். தரமான சிகிச்சை முறைக்கு இந்த அளவுகோல் உதவும்.

ஒட்டி உறவாடுதல் என்பது சிலர்களது வாழ்வில் மிகவும் சிரமமானதொன்றாக இருக்கும். இதன் காரணத்தால் நல்லபடியாக இயங்கக் கூடிய சில மாணவர்கள் சில சமயங்களில் நான் எமது சகமாணவர்களுடன் இசைந்து போகக் கூடியவனாக இல்லையே என்று கூறுவதைக் கேட்டிருப்பீர்கள். இதற்குக் கலாச்சார முரண்பாடுகளும் காரணமாகலாம் என்பதனால் இக்குறைபாடுகளை ஒரு வைத்தியர் மூலமாக உறுதிப்படுத்திக் கொள்வதே புத்திசாலித்தனமாகும்.

மூளைவளத்தில் விகாரமுடையவர்கள் ஏனைய மக்களின் நம்பிக்கைகள், மனஎழுச்சிகள், நோக்கங்கள், சிந்தனைகள், திட்டங்கள் என்பனவற்றை சரிவர விளங்கிக் கொள்வதில் சிரமமுடையவர்களாக விளங்குகிறார்கள். இந்நோயை உடையவர்களிற் சிலர் ஏனையவர்களது சிந்தனைகள், நோக்கங்கள் வித்தியாசமானவை என்பதை உணராத பட்சத்தில் அவர்கள் மற்றவர்களுடன் சிநேகிதமாகப் பழகவோ, கிநேகிதம் பிடிக்கவோ சிரமமுடையவர்களாக இருப்பார்கள். இவர்கள் எந்தநேரத்தில், எதை எப்படிக் கூறவேண்டும் என்பதை அறியாதவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு சமூக நிகழ்வு என்பது பாரிய குழப்பமாகவும் அதில் அர்த்தம் இருப்பதாகவும் உணர்ந்து கொள்வதில்லை.

மனோவியாதி என்பது வேறு, மனோவள விகாரம் என்பது வேறு. இரண்டையும் ஒன்றெனக் குழப்பமடையக்கூடாது. மனோவள விகாரத்தில் நோயாளிகள் பலதுபட்ட பழக்க வழக்கங்களையுடையவர்களாக இருப்பார்கள். சமூக நிகழ்வுகளில் மக்களுடன் பின்னிப் பழகுவது இவர்களுக்கு மிகவும் சிரமமான விடயமாகும். சிலர் நல்ல ஞாபக சக்தியுடையவர்களாகவும் வாய்ச் சாலமுடையவர்களாகவும் இருப்பார்கள் ஆனால் ஏதாவது விளையாட்டுகளில் பங்கு பற்றும் பொழுது தமது கற்பனா சக்தியை நல்லமுறையில் பாவிப்பதில் சிரமமுடையவர்களாக இருப்பார்கள் உதாரணமாக சதுரங்கம், Bridge போன்ற விளையாட்டுக்கள்

**உசாத்துணை:**
www.teenhealthandwellness.com

senthilnathan.kandiah@thaiveedu.com

■ ■ ■

**TO LEARN FIRST AID & CPR IN ENGLISH AND TAMIL**
**தமிழிலும் ஆங்கிலத்திலும் முதலுதவி பயிற்சி**
**Dr. Kandiah Senthilathan**

- Standard First Aid & CPR Level "C" - 2 Days Program
- Emergency First Aid & CPR Level "A" - 1 Day Program
- CPR Level "A" - 4 Hours Program (Adult)
- CPR Level "C" - 8 Hours Program (Adult, Child, Infant)
- CPR Level "C" - 4 Hours Program - Renewal (Adult, Child, Infant)

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

Registered Medical Officer (SLMC), Acupuncturist (MAcF), First Aid & CPR Instructor (Certified in Canada)
647-801-9252
416-502-9252

ஆறு மாணவர்களுக்கு மேல் சேருமிடத்தில், உங்கள் இடத்திற்கு வந்து கற்பிக்கப்படும்.

**Royal Shades inc.**
Interior Windows Design Solutions
ROYAL SHADES
Draperies | Blinds | Shutters | Door & Lock Systems | Crown Molding
Over 17 Years Experience
Visit Our Showroom For Variety of selection
3031 Markham Road, Unit# 23 | Scarborough M1X 1L9
Tel: 416.562.0340 | 647 347 4474
info@royalshades.com | www.royalshades.com
Satisfaction Guaranteed

Thaas Sivathason
416.562.0340

# ஞானேந்திரன் நரசிங்கம்
416.937.8090

# ஜூடி ஞானேந்திரன்
416.629.9797

Sales Representatives



HOMELIFE HIGHER STANDARDS

**Toronto**



$509,000

Detached 3Br Home
2 Full Wr / Fin. Bsmt
Sep Ent.Great Location

**Markham**



$489,900

Detached 4 Br
2 Storey 2 Full Wr
Great Location....

**Toronto**



$419,900

Detached 3Br Home
2 Full Wr / Fin. Bsmt
Sep Ent.Great Location

**Toronto**



$439,800

Detached 3Br Home
2 Full Wr / Fin. Bsmt
Great Location

**Markham**



$369,900

Freehold 3 Br 2 Storey
Townhome 2 Full Wr. .
Close to Great Schools.

**Toronto**



$439,000

Detached 3Br 2 Storey.
2 Full Wr well maintained
Great Location..........

**Markham**



$499,000

Detached 3 Br 2 Storey
2 Full Wr. Great Loc...
Fin W/O Bsmt...

**Markham**



$580,000

Detached 4 Br
2 Storey 2 Full Wr
Great Location....

**Ajax**



$479,000

Detached 4Br 2 Storey.
2 Full Wr Shows 10++++
Great Layout....W/O Bsmt

**Ajax**



$269,900

Detached 3Br 2 Storey.
1 Full Wr Shows 10++++
Great Layout....

**Pickering**



$639,000

Detached 4Br 2 Storey.
2 Full Wr well maintained
Great Location Fin. Bsmt..

**Ajax**



$312,000

Freehold Townhome
3 Br 2 Storey 2 Full Wr
Great Location....

**Toronto**



$249,900

Det.Condo 3Br 2 Storey....
Fin. Bsmt and 3 Full Wr
Great Location

**Markham**



$499,000

Detached 3 Br 2 Storey
2 Full Wr...Great Layout
Close to All amenities

**Markham**



$409,900

Freehold Town Home..
3 Br Fin 2 Storey....
Great Loc...

**Toronto**



$235,000

2Br Condo Apartment..
2 Full Wr & Parking..
Close to All Amenities..


**Markham**



$849,000

Detached 4 Br 2 Storey
4 Full Wr. Great Loc...
Close to Great Schools.

**Toronto**



$269,900

2 Storey Condo Town...
3 Br Finished Bsmt...
Great Location..........

**Brampton**



$434,900

Detached 5 Br 2 Storey
**Power Of Sale...**
No Representation...


**Ajax**



$335,500

Detached 3 Br 2 Storey
**Power Of Sale...**
No Representation...

**Toronto**



$379,000

Detached 3 BrBungalow
**Power Of Sale...**
No Representation...

**Toronto**



$485,000

Detached 4 Br 2 Storey
**Power Of Sale...**
No Representation...


**Toronto**



$139,900

1+1 Condo Apartment..
1 Full Wr & Low Maint.
Close to All Amenities..

**Toronto**



$499,900

Detached 4 Br 2 Storey
3 Full Wr Fin. Bsmt..
Great Location....

HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE #206, TORONTO, ON. M1S 3YS. OFFICE : 416-321-6969

* EACH OFFICE IS INDEPENDENTLY OWNED AND OPERATED

## உடலும் உள்ளமும் நலந்தானா?

# முள்ளிவாய்க்கால் சின்றோம்

### ‘முள்ளிவாய்க்கால் சின்றோம்’ (Mullivaikal Syndrome)

‘முள்ளிவாய்க்கால’ என்னும் சொல் மே 2009க்குப் பின் உலகெங்கும் பிரபலமாகியுள்ளது என்றாலும் முள்ளிவாய்க்கால் சின்றோம் என்ற சொல் எல்லாருக்கும் புதிதாக இருக்கும். இந்த சொல்லை பல அனுபவங்களுக்குப் பிறகு தான் உங்களுக்கு முதலில் வீடு பத்திரிகை மூலமாக அறிமுகம் செய்கிறேன். இதென்ன இன்னொரு வியாதியா அல்லது புதுவிதமான நோயா என்று அறியத்துடிப்பது எனக்குப்புரிகிறது.

உலகத்தமிழரின் வரலாற்றில், ஈழத்தமிழருக்கு இப்படியொரு அவலம் நேரிடும் என்று யாரும் எண்ணிப்பார்க்கமுடியாத அளவுக்கு மே 2009 இல் நடைபெற்ற சம்பவங்கள், படுகொலைகள், உயிரிழப்புகள், அழிவுகள், காட்சிகள், இணையத்தளங்களின் வெளியாகிக் கொண்டிருக்கும் காட்சிகள், ஏமாற்றங்கள், தற்காலிகத் தோல்விகள், இழப்புகள், பின்னடைவுகள், போருக்குபின்பு நடைபெறுகின்ற அரசியல் மாற்றங்கள், நமது சமூகத்தில் ஏற்பட்ட பிளவுகள், பிரிவுகள், தலைமைத் துவத்தில் நிரந்தரமில்லாத நிச்சயமில்லாத தன்மைகள், அரசாங்கத்தின் வெற்றிக் களியாட்டங்கள், மக்களின் இடம்பெயர்வு, முள்வேலிமுகாம் வாழ்க்கை, கையேந்தும் பரிதாபநிலை, அடிமை வாழ்க்கை, பெருமூச்சு விட்டு தற்காலிக சுகங்களை தற்போது அனுபவித்துக் கொண்டிருக்கும் வடகிழக்கு என்ற பாரிய திறந்த வெளிச்சிறைச்சாலை இப்படி தொடரும் பல்வேறு பிரச்சினைகள், இவற்றினாலுண்டான அகத்திலும் புலத்திலும் உள்ள நமது உறவுகளின் இன்றைய உடலியல், உளவியல், சமூகவியல் பாதிப்புகள் தான் இந்த “முள்ளிவாய்க்கால் சின்றோம்”.

ஆம், நடந்துமுடிந்த, மற்றும் இன்னும் தொடர்கின்ற சம்பவங்கள் பாரிய அளவில் குறிப்பாக கடந்த இரண்டு ஆண்டுகளில் தொடர்ச்சியான ஆரோக்கிய குறைபாடுகளை உண்டாக்கியிருக்கிறது. அதிலும் குறிப்பிட்டு சொல்ல வேண்டுமென்றால் மே 2009 யுத்த இறுதிக்கால கட்டங்களில் நடந்த இழப்புகள், படுகொலைகள், அதன் வடுக்கள் என்றும் எம்மைவிட்டு நீங்காதவையாக ஆழ்மனதில் ஆறாத காயங்களாகிவிட்டன. இந்த முள்ளிவாய்க்கால் பிரச்சினையால் இவ்வாறாக உடல் உளரீதியாக பாதிப்புள்ளானவர்களின் பரிமாணங்கள் வெவ்வேறு நிலைகளில் வேறுபட்டதாக இருக்கிறது. நேரடியாக இந்த யுத்த வலயத்துக்குள் இருந்து அனுபவித்தவர்கள், காயங்களோடு கைகால்களை இழந்தவர்கள் ஒருபிரிவினர். அடுத்து தங்கள் குடும்பத்தினரை, உறவினர்களை, நண்பர்களை கண்முன்னே படுகொலை செய்யப்பட்டதையும் இவர்களின் இழப்பையும் இன்றுவரை ஏற்றுக்கொள்ளமுடியாது தவிப்பவர்கள் ஒருவகை. மேலும் தெருவோரம், ஊருக்குள், உறவுகளின் உடலங்கள் கொத்திக்குதறியபடி அநாதைப்பிணங்களாய் அழுகிப் போனதையும் கண்களால் கண்டு துடிதுடித்துப் போனவர்கள் இன்னொருவகை. உடமைகளை, சொத்துக்களை, வாழ்ந்த வீடு நிலங்களை விட்டு உயிருக்குப் பயந்து சாவின் விழிம்பிற்கு சென்று, இடம் பெயர்ந்து வந்து முகாம்

**தொடர் - 06**

களுக்குள் முடங்கிபோய் அடுத்து என்ன நடக்குமோ என்று எண்ணி எண்ணி பீதியோடு இருப்பவர்கள் இன்னொருவகை. உயிரிழப்பினாலும், காணாமறபோனதாலும் தங்களின் உடன்பிறப்புகள், பெற்றோர், பிள்ளைகள், இருக்கிறார்களா? இல்லையா என்ற ஏக்கத்தில் தவித்துக் கொண்டிருப்பவர்களும் அந்த ஏக்கத்தினாலுண்டாகும் பாதிப்புகளால் கலங்கிப்போயுள்ள உறவுகள் ஒருவகை. பெற்றோரையும், உடன்பிறப்புகளையும் கண்முன்னே களத்தில் பலிகொடுத்து யாருமின்றி அநாதைகளாக எதிர்காலம் என்னவாகும் என்ற கேள்விக்குறியோடு வாழ்ந்துகொண்டிருக்கும் சின்னஞ்சிறிசுகளின் உளவியல் பாதிப்புகளை எடுத்துரைக்க முடியாதபடி வாழும் சிறகொ-



டிந்த பறவைகள் ஒருபுறம். நேடியாக யுத்த சூழலில் இல்லாமல் அடுத்த ஊர்களில் இருந்து உறவுகளின், சொந்தங்களின், மரணச்செய்திகளைக் கேட்டு, மற்ற உறவினர்களுக்கு என்ன ஆனதோ என்று கண்ணீரும் கம்பலையுமாக காலத்தைக் கழித்த மக்கள் மறுபுறம். புலம் பெயர்ந்த நாடுகளில் இருந்து கொண்டு ஊடகங்கள் வழியாக செய்திகளைக் கேட்டு ஏதும் செய்ய வழியில்லாது, நாள்தோறும் சாலைகளில் இறங்கி கத்திக்குளறி மேற்குலகின் கண்கள் திறக்காதா என்று ஏங்கியபடி காத்திருந்து கடைசியில் ஏமாற்றத்தினால் மனமுடைந்து போய் நடைபிணங்களாகியுள்ள நம்மின உறவுகள் ஒருபுறம். போராட்டத்தில் நேரடியாக போராளிகளாய் இணைந்து, விடுதலைத்தாகத்தோடு விடுதலைக்காய் மரணத்தையே தங்கள் சுவாசமாக்கிய வீரர்களின் மனநிலை, அவர்களின் எதிர்காலத்தைப்பற்றிய ஏக்கம், இழந்துபோன கல்வி, இளமை, சிறைகளில் உயிருக்குப்பயந்து அடுத்தநாளும் உயிரோடு இருப்போமோ என்று துடிதுடித்துக் கொண்டிருக்கும் மனநிலையின் தாக்கம் ஒருபுறம். கணவர்களை இழத்து விதவைக்கோலம் கொண்டு வாழ்விழந்து, எதனாலும் ஈடுசெய்யமுடியாத இழப்புகளோடும், வடுக்களோடும் வாழ்த்து கொண்டிருக்கும் பெண்கள் இன்னொரு புறம். மானத்தை இழந்து, கற்பை பறிகொடுத்து மனதைக்கல்லாக்கி மாறாத, குணமாக்கமுடியாத வடுக்களோடும் வலிகளோடும் வாழ்கின்ற சகோதரிகள் ஒருபுறம்.

புதியதோர் விடுதலை தேசத்தில் புகுவோம் என்ற புன்னகை பூத்த உணர்வுகளோடு என்றும் தேசியத்திற்காய் பாடுகள் பலபட்டு தம்மால் முடிந்தவற்றை செய்து உலகெங்கும் வாழ்கின்ற எம்மின உறவுகள் இன்று மனமுடைந்து, சோர்ந்து, எல்லாம் முடிந்து விட்டதோ என்ற ஏக்கத்தோடு, தாங்கமுடியாத வலிகளோடு, அவமானத்தின் விளிம்பில் வெந்து போய் வெறுமையாய், சர்வதேசம்தான் இனித் தஞ்சம் என்ற ஒரு மாயை ஆறுதலோடு, உள்ளத்தாலும் உடலாலும் இடிந்துபோயிருக்கும் தமிழக மற்றும் உலகத்தமிழினம் இன்னொருபுறம். இப்படி பல்வேறு நிலைகளில் வெவ்வேறு வடிவங்களின் பலபரிமாணங்களின் ஒவ்வொரு கோணங்களில் மே 2009இல் முள்ளிவாய்க்காலில் முடிந்தேறிய மறக்க முடியாத, மாற்றமுடியாத, மன்னிக்க மனம் மறுக்கின்ற, மறையாதவடுக்கள் நம்மின உறவுகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பது உண்மை.

இயற்கை அழிவுகள் வரும்போது அதனால் பெரும்பாலும் மக்கள் பாதிக்கப்படும் போதெல்லாம் அதன் பக்கவிளைவுகள் உடனடி



**போல் யோசேப்**
ஹோமியோ மருத்துவ நிபுணர்

உளவியல் உடலியல் பாதிப்புகளையும் நீண்ட நாள் உளவியல் பாதிப்புகளையும் உண்டாக்குவது இயற்கை தான். அழிவுகளின் போது மட்டுமல்ல யுத்தங்களின் பின்விளைவுகளின் போதும் இவ்வாறு நிகழ்கிறது. அமெரிக்காவின் இரண்டைக் கோபுரத்தாக்குதலின் போதும் அதன் பின்னரும் ஒரு விதமான இனம்புரியாத பயத்தினால் பலர் பாதிக்கப்பட்டு அதன் விளைவுகளால் வந்த உளவியல் நோய்க்கு பலர் சிகிச்சை பெற்றதாக புள்ளிவிபரங்கள் உள்ளது உண்மைதான்.

இதே போலத்தான் முள்ளிவாய்க்கால் மே 2009க்கு பின்பு ஊரிலும், புலம்பெயர் தேசங்களிலும் பலர் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு எத்தகைய குணங்குறிகள் பொதுவாக இருந்தது அல்லது மருத்துவ ரீதியாக, உளவியல் ரீதியாக எவ்வாறான மனநிலையில் இருந்தார்கள் அல்லது இருக்கிறார்கள் என்று பார்க்கின்றபோது அவரவர்களின், பாதிப்பின் படிநிலையைப் பொறுத்தும் அதாவது நான் முன்பு குறிப்பிட்டுள்ள விடயம், மற்றும் எவ்வாறு இதை அவர்கள் உள்வாங்கிக் கொண்டார்கள் என்பதைப் பொறுத்தும்தான் மன அழுத்தம் அல்லது மனச்சோர்வின் குணங்குறிகள் வெளிப்படும். இத்தகை குணங்குறிகளின் பொதுப்படையான தொகுப்பு அல்லது ஒருதொகை குணங்குறிகளின் பொதுவான தொகுப்புத்தான் ‘முள்ளிவாய்க்கால் சின்றோம்’ Mullivaikal Syndrome) என்று நான் குறிப்பிடுவது. இவை எவ்வாறான குணங்குறிகள் என்று மருத்துவ உளவியல் ரீதியாக இனி ஆராய்ந்து பார்க்கலாம்.

மனிதன் வெறும் உடலையும் சில உறுப்புகளையும் கொண்ட ஒரு சதைப்பிண்டமல்ல. அவனுக்குள் உள்ளம், உயிராற்றல், உணர்வுகள், உணர்ச்சிகள், எண்ணங்கள் அவற்றின் பதிவுகள், உயிர்இரசாயன மாற்றங்கள், கனவுகள் கற்பனைகள், வாழ்க்கை முறை, சுற்றுச்சூழல், அனுபவங்களில் பதிவுகள், பாரம் பரிய இயல்புகள், மரபணுக்களின் தாக்கம், உணவுப்பழக்கமும் அதன் தாக்கமும், பரிணாம வளர்ச்சியின் குணநலன்கள், பஞ்ச பூதங்களின் தொகுப்பு, சுபாவம், ஆளுமை, தனித்தன்மை, சமூகம் என்று பல தொகுப்பு களைத் தன்னகத்தே கொண்ட ஒரு விசித்திரப் படைப்பு. இத்தகைய ஒரு கூட்டுத் தொகுப்பில் உள்ளம் அல்லது மனம் எங்கே இருக்கிறது, அதை எப்படிக் கண்டுபிடிப்பது என்பதல்ல முக்கியம். அதை நோக்கிய ஒரு உள்முகப் பார்வை, மனதுடன் கூடிய உள்நோக்கிய பயணம் மற்றும் அதன் பரிமாணங்களை அறிந்து கொள்வது தான் முக்கியம்.

மனம் என்பது எண்ணங்களால் உருவானது, எண்ணங்களைக் கொண்டது, எண்ணங்களை

*தொடர்தல் 26ம் பக்கம்*

ARGENTUM LENDING DIRECT CORPORATION
Reg # 10466

3621 Hwy 7 East, Suite # 211 Markham, ON, L3R 0G6
1193 A Brimley Rd, Unit 7,Scarborough, ON M1P 3G9



வீட்டு அடமானக் கடன் பெற்றிட உங்களுக்குத் தேவை நம்பிக்கையான ஒரு முகவர்...

OUR SERVICES:
• 1st & 2nd Mortgage
• Refinancing
• Commercial Loan
• Home Equity Mortgage
• Much more...

Are you a Temporary resident? Self Employed? Bankrupt? New Immigrant? Is Your SIN begining with 9? Not to worry
We will help you



Theven Kankesu, AMP
(Mortgage Agent)
FSCO LIC # M08008759
Direct: 416.939.8786
Fax: 647.343.0135
Email: theven.kankesu@migroup.ca



**Full-time Real Estate Agent**

# Nada G. Nadarajah B.V.Sc

**Call Me @ 416 616 8751** Sales Representative

"An award-winning realtor with 14 years experiance".




Brimley & Highglen
2-Storey Detached
4+2 Bedroom - 5 Washroom
Finished Basement & 3500+ Sq Ft.




Midland & Eglinton
Condo. Apartment
2 Bedroom - 1 Washroom
Large & Open Balcony




Morningside & 401
Condo. Townhouse
2+1 Bedroom - 2 Washroom
Close to Major Amenities




Taunton & Townline
2-Storey Detached
4 Bedrooms -3 Washroom
Close to Major Amenities




Westney & Bayly
2-Storey Semi-Detached
3+1 Bedrooms - 3 Washrooms
Approxmiate 1700 Sq. Ft




Markham & Sheppard
Detached Backsplit
3+1 Bedrooms - 2 Washrooms
Quiet Neighbourhood

**HomeLife**
Landmark Realty Inc.,
brokerage
*7240 Woodbine Ave, Suite 103*
*Markham, ON L3R 1A4*
*Bus: 905 305 1600*
*nanadarajah@trebnet.com*

HOMELIFE HIGHER STANDARDS





**Please call for**

**EXPERIENCED & TRUSTED SERVICES**
**to Buy, Sell or Rent Real Estate Properties**
**Homes, Condos or Businesses**

Free Market Evaluation

வீடு வாங்க, விற்க அல்லது வாடகைக்கு,
நம்பிக்கையான சேவைகளுக்கு அழையுங்கள்
**தமயந்தி சுரேந்திரன்**

**Tammy Surendran** (Broker)
tammy.surendran@gmail.com

**Direct Line 416-410-9301**

HOMELIFE HIGHER STANDARDS

Home Life GTA Realty Inc.,
Brokerage
208 - 1711 McCowan Road
Toronto, On. M1S 3Y3
Bus: 416-321-6969
Fax: 416-321-6963

# ஈ.கோலை (E.coli)



கந்தையா பரநிருபசிங்கம்

ஈ.கோலை என்பது எஸ்கெறிக்கியா கோலை (Escherichia coli) என்பதன் சுருக்கமாகும். இது ஒரு கிராம்மறை கோலுரு (Gram negative bacillus) பக்றீரியா வகையைச் சேர்ந்தது. வழமையாக இந்த பக்றீரியா பெருங்குடலில் வாழ்ந்து வரும். ஆனால் இது சில சூழ்நிலைகளில் நோயை உருவாக்கும் (Pathogenic). இதில் பல தனிவகைகள் (Strains) உண்டு. இவற்றில் சில கொடூரமானவை (Virulent). இவற்றின் தாக்கம் இறப்பையே கொண்டு வரலாம். இவை குடற்சுவர்களில் ஒட்டிக் கொண்டு நச்சுப்பொருட்களை அள்ளிவீசும். ஈ.கோலையின் சடுதியான பரம்பல் (Outbreak) கோடைகாலத்தில் அதிகரித்துக் காணப்படும்.

ஈ.கோலையின் சடுதியான பரம்பல் கோடை காலங்களில் வருவதை ஏற்கனவே பல ஆண்டுகளாக கண்டுவருகின்றோம். சில வருடங்களின் முன் ஒன்ராறியோவில் வாக்கற்றன் என்னும் இடத்தில் இவற்றின் சடுதியான பரம்பல் ஏற்பட்டது. சென்ற ஓரிரு ஆண்டின் முன் ஐக்கிய அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட காய்கறிகளில் ஈ. கோலைத் தொற்று இருப்பதாக அறிவிக்கப் பட்டது. இப்பொழுது ஜேர்மனியில் ஓர் உணவகத்திலிருந்து பரவி சில ஜேர்மனியர்களைக் கொன்றும் பல நூற்றுக்கணக்கானோரை தொற்றுக்குள்ளாக்கி உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. மிகவும் அண்மைய செய்திகளின்படி ஐரோப்பாவின் பல நாடுகளிலும் ஐக்கிய அமெரிக்காவிலும் பரவியுள்ளதாக அறிகின்றோம். இக்கட்டுரை எழுதப்படும் பொழுது கனடாவில் ஒரு ஈ.கோலைத் தொற்றைக் கொண்ட நோயாளியும் இனம் காணப்படவில்லை. ஆனால் எல்லா நாடுகளும் விழித்துக்கொண்டு ஈ.கோலையின் சடுதியான பரம்பலைத் தடுக்கும் முறைகளைப் பின் பற்றுமாறு தங்கள் மக்களுக்கு அறிவுறித்தி வருகின்றன. உலக சுகாதாரத் தாபனமும் (WHO) ஈ. கோலைப்பரம்பல் பற்றி பிரஸ்தாபித்துள்ளது.

இவ்வாறான சடுதியான பரம்பலை கனடியர்களும் எதிர்கொள்ளலாம் என்றவகையில் ஈ.கோலையால் ஏற்படக்கூடிய நோய்பற்றியும் அதன் குணங்குறிகள், பரிகாரம் என்பவற்றுடன் வருமுன் காத்தல் பற்றிய விழிப்புணர்வை நாம் பெற்றிருத்தல் நன்மை பயக்கும்.

இப்பொழுது ஈ.கோலைத் தொற்றுடன் தொடர்புடைய வெவ்வேறு அம்சங்களைச் சற்றுக்கவனிப்போம்.

### ஈ.கோலைத்தொற்று:

ஈ.கோலைத் தொற்று ஏற்படுவதற்கான அதி பொதுவான வழி இப்பக்றீரியாவால் மாசுபடுத்தப்பட்ட (Contaminated) உணவை உண்ணுதல். ஆனால் ஒருவரிடமிருந்து மற்றைய வருக்கு சுத்தமாக வைக்கப்படாத கைகளினூடாகவும் செல்லலாம். இந்தவகையில் நன்றாகச் சமைக்கப்படாத அரைத்த இறைச்சி, மாசுபடுத்தப்பட்ட நீர், பச்சைப்பால் (raw milk) பச்சைக்காய்கறிகள், நன்றாகக் கழுவப் படாது சமைத்த காய்கறிகள் ஆகியவற்றை உட்கொள்ளுதலும், விலங்குப் பண்ணைகளில் வேலை பார்த்தல் போன்றவையும் ஈ.கோலைத்தொற்றைச் சாத்தியமாக்கும்.

### ஈ.கோலை நோயின் குணம்குறிகள்:

ஈ.கோலைத் தொற்றின்பின் ஏழு நாட்களில் நோயின் குணம்குறிகள் தோன்ற ஆரம்பிக்கும். முதற் குறியாகச் சடுதியாகத் தொடங்கும் உக்கிர அடிவயிற்றுப்பிடிப்பு. இதன்பின் சில மணித்தியாலங்களில் நீர்த்தன்மையான வயிற்றோட்டம் தொடங்கும். வயிற்றோட்டத்தினால் எமது உடலிலிருந்து திரவம், மின்பகுபொருட்கள் இழக்கப்பட நீரிலிநிலை (Dehydration) ஏற்படும். இதனால் களைப்பும், ஆரோக்கியமற்ற நிலையும் உணரப்படும். நீர்த்தன்மையான வயிற்றோட்டம் ஒரு நாள் வரை நீடிக்கும். பின் வயிற்றோட்டம் செந்நிற குருதி கலந்த மலத்துடன் ஏற்படும். ஈ.கோலைத்தொற்று குடலில் புண்களை ஏற்படுத்துவதாலேயே மலம் குருதியைக் கொண்டிருக்கும். குருதிகொண்ட வயிற்றோட்டம் இரண்டு முதல் ஐந்து நாட்களுக்கு நீடிக்கலாம். சில வேளை ஒருவர் ஒரு நாளைக்கு பத்து தடவைகளுக்குமேல் மலம் கழிக்க நேரிடலாம்.



வயிற்றோட்டத்துடன் சாதுவான காய்ச்சல் இருக்கலாம் அல்லது இல்லாமலிருக்கலாம். மேலும் குமட்டல் அல்லது சத்தியும் ஏற்படலாம். மேற்கூறிய குணம்குறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்திய உதவியை நாட வேண்டும்.

### ஈ. கோலைத் தொற்றால் ஏற்படும் சிக்கல்கள்:

அதிகம் பொதுவான சிக்கல் குருதிப்பிளவு சிறுநீரக நோய்நிலை (Hemolytic uremic syndrome). இந்தச்சிக்கல் செங்குருதிக் கலங்களின் எண்ணிக்கைக்குறைப்பு, குருதிசிறு தட்டுக்களின் எண்ணிக்கைக்குறைப்பு ஆகிய வற்றுடன் சிறுநீரகச் சிதைப்பையும் ஏற்படுத்துகின்றது. இந்தச் சிக்கல் பிள்ளைகளிடத்தில் அதிசாதாரணமாக ஏற்படலாம். இதனால் சிறுநீரகம் செயல்இழக்கலாம். இது வயிற்றோட்டம் தொடங்கி ஐந்து தொடக்கம் பத்து நாட்களில் தொடங்கும்.

### ஈ.கோலையை இனம்காணல்:

மலவளர்ப்பூடகத்தில் (Stool culture) ஈ.கோலை இருப்பதைக் கண்டறிந்து இந்நோய் இனம் காணப்படும். உங்களுக்கு குருதியுடன் கூடிய வயிற்றோட்டம் இருந்தால் உடன் வைத்திய உதவியை நாடவேண்டும். அப்பொழுது மல வளர்ப்பூடாகத்திலிருந்து ஈ.கோலை இருப்பதைக் கண்டறிவர்கள். குருதியுடன் கூடிய வயிற்றோட்டம் தொடங்கி நாற்பத்தெட்டு மணித்தியாலங்களின் பின் மலவளர்ப்பூடகம் எடுக்கப்படவேண்டும்.

### ஈ.கோலைத் தொற்றின் பரிகாரம்:

இத்தொற்றிற்கு விசேடமான பரிகாரம் இல்லை. நீரை (மாசுபடுத்தப்படாத) அதிகளவில் குடித்து மீள்நீரேற்றத்தைச் (Rehydration) செய்வதும், சிக்கலை அவதானித்து வைத்திய உதவியை நாடுதலும் ஆகும். வைத்தியரின் ஆலோசனையின்றி வயிற்றோட்டத்தை நிறுத்த மருந்துகள் எடுக்கக்கூடாது. உங்களுக்கு பாரதூரமான வகையில் நீரிலிநிலை ஏற்படும்போது வைத்தியசாலைக்குச் சென்று நாளங்கள் மூலம் திரவங்கள் உடலில் செலுத்தவேண்டும். பாரதூரமான நிலையில் குருதியேற்றல் மற்றும் வைத்தியக் குருதிச் சுத்திகரிப்பு (Dialysis) போன்றவை செய்யவேண்டி வரும்.

### ஈ.கோலைத்தொற்று வருமுன் காத்தல்:

எந்த நோயிலிருந்தும் எம்மைப் பாதுகாக்க வருமுன் காத்தலே சிறந்தது (Prevention is better than cure). ஈ.கோலைத்தொற்று புறநடையில்லை. பாதுகாப்பான முறையில் உணவு வகைகளைக் கையாண்டு சமைத்து உண்ணுதல் மூலம் ஈ.கோலைத் தொற்று வராமல் தடுக்கலாம். எனவே எங்களின் பாதுகாப்பிற்காக பின்வரும் விதிகளைப் பின்பற்றி நன்மைபெறலாம்.

- உணவு சமைக்கத் தொடங்குமுன் கைகளை சவற்காரம் கொண்டு நன்றாகக் கழுவவேண்டும்.
- அரைக்கப்பட்ட இறைச்சிவகைகளைச் சமைக்கும்போது பச்சை இறைச்சி நிறம் (Pink) மறைந்துபோகும் வரை சமைக்க வேண்டும்.
- அரைக்கப்பட்ட இறைச்சிவகைகளைச் சமைத்துக்கொண்டிருக்கும் போது இடையில் ருசிபார்க்கக்கூடாது.
- Hamburgers குறைந்தபட்சம் 155°F வரை வெப்பப்படுத்தப்படவேண்டும்.
- இறைச்சியை உறைதல் நீக்கும்போது defrost குளிர்சாதனப்பெட்டியில் வைத்து அல்லது நுண்ணலைச் சூட்டடுப்பில் (Microwave oven) செய்யவேண்டும். சமையலறை மேசை மீது உறைதல்நீக்குவதற்கு வைத்துவிட்டுப்போகக் கூடாது.
- சமைக்கப்படாத இறைச்சி வகைகளை மற்றைய உணவுப் பொருட்களிலிருந்து பிரித்துவைக்கவேண்டும்.
- வெட்டும் பலகைகளை சுடுநீராலும், சவற்காரத்தாலும் கழுவவேண்டும்.
- பச்சைப்பால் (Raw milk) குடித்தல் தவிர்க்கப்படவேண்டும்.
- உணவுகளை, குளிரூட்டி அல்லது உறைதல்செய்து வைக்கவேண்டும்.
- சூடான உணவைச் சூடாகவும், குளிரான உணவைக் குளிராவும் வைக்கவேண்டும்.
- எஞ்சிய உணவுகளை உடன் குளிரூட்டியில் வைக்கவேண்டும் அல்லது வீசிவிட வேண்டும்.
- வயிற்றோட்டம் கண்ட மக்கள் தங்கள் கைகளை அடிக்கடி கவனமாக சவற்காரமும், வெந்நீரும் கொண்டு கழுவவேண்டும். கழுவும்போது குறைந்தது முப்பது செக்கன்கள் கழுவவேண்டும்.
- பிள்ளை பராமரிப்பு மற்றும் வயோதிபர் பராமரிப்பு நிலையங்களில் வேலைசெய்வோர் தங்கள் கைகளை அடிக்கடி கழுவ வேண்டும்.
- உணவுச்சாலைகளில் உணவுக்கு ஆடர் கொடுக்கும்போது நன்றாகச் சமைத்துத் தரும்படி (Well done) கேட்கவேண்டும்.
- மரக்கறிகளை நன்றாகக்கழுவி பின் சமைத்துச் சாப்பிடவேண்டும்.
- பச்சையாக மரக்கறிகளை உண்ணல் இயலுமானவரை தவிர்க்கப்படவேண்டும்.
- நோயின் சடுதியான பரம்பலுக்குக் காரணமாக அமையும் உணவுப்பொருட்கள் என்று விஞ்ஞானிகளால் எண்ணப்படுபனவற்றை பாதுகாப்பான காலம் வரை முற்றாகத்தவிர்கவேண்டும்.

paranirubasingam.k@thaiveedu.com

■ ■ ■

வீடு வாங்குவதற்கும் விற்பதற்கும்



Century 21
Service Plus
5855 Taschereau Blvd (Office)
Brossard, Quebec. J4Z 1A5
Email : sugumaran@sympatico.ca

Office : (514) 299-3186
(450) 926-1881



Sugumaran Sinnaiah
Chartered Real Estate Broker

# வீட்டுக்கடன் காப்புறுதி திட்டம்
# Mortgage Life Insurance

### வங்கிக் கடன் காப்புறுதி

01. வங்கியே உடமைக்காரர்.
02. வங்கியின் அதிகாரத்தில் இருக்கிறது.
03. கடன் தவணைகள் தவறினால் காப்புறுதி செயலிழந்து விடும்.
04. வங்கியே பாத்தியக்காரர்.
05. உங்கள் காப்பு தொகை குறைந்துகொண்டே வரும்.
06. காப்புறுதிக்கு திரும்பவும் விண்ணப்பிக்கவேண்டும்.
07. காப்புறுதி தொகை, கடன் தொகையை தாண்டக்கூடாது.
08. கடனை முற்றிலும் தீர்க்கவேண்டும்.
09. நீட்டவோ மாற்றவோ முடியாது.
10. திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை இல்லை.
11. காப்புறுதி எடுத்தவர் இறந்த பிற்பாடே வங்கி அதன் தராதரங்களை முற்றாக ஆராயும்.
12. வங்கி காப்புறுதி மிகவும் கூடிய செலவு.
13. வங்கி காப்புறுதியை எப்பவும் லண்டன் லைஃப் காப்புறுதிக்கு மாற்றலாம்.
14. முடிவு உங்களுடையது, வங்கியுடையது அல்ல.

### லண்டன் லைஃப் காப்புறுதி

01. காப்புறுதி எடுத்தவரே உடமைக்காரர்.
02. காப்புறுதி எடுத்தவரே அதிகாரம் கொண்டவர்.
03. கடன் தவணைகள் தவறினாலும் காப்புறுதி செயலிழக்காது.
04. உங்கள் பாத்தியக்காரராக யாரையும் நீங்கள் நியமிக்கலாம்.
05. உங்கள் காப்பு தொகை நிரந்திரமானது, காப்புறுதி தவணையும் ஒரே அளவானது.
06. கடன் உதவியவரை மாற்றினாலும் காப்புறுதி தொடரும்.
07. காப்புறுதி தொகையை உங்கள் தேவைப்படியும், வசதிப்படியும் தீர்மானிக்கலாம்
08. உங்கள் உரிமைக்காரர் பணத்தை தக்கவைத்துக்கொண்டு அதன் வருமானத்தில் தவணைகளைக் கட்டலாம்.
09. உங்கள் காப்புறுதியை மீண்டும் புதுப்பிக்கலாம் மாற்றலாம்.
10. திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை உண்டு.
11. காப்புறுதிகளின் தராதரம் விண்ணப்ப சமயத்தில், தீர்மானிக்கப்படும்.
12. எங்களுடையது போட்டிகளை எதிர்த்து நிற்கும் வல்லமை கொண்டது.
13. மேற்சொன்ன காரணங்களினால் இதுவே சிறந்தது.

Freedom 55 Financial
A division of London Life Insurance Company



**பாலா பாலசுந்தரம்** B. Eng
சிறந்த விற்பனையாளருக்கான விருது பெற்றவர்
**Office: 416-291-0451 Ext.227**
**Cell: 416-518-9489**
**300-2075 Kennedy Rd, Toronto. ON M1T 3V3**

**E-mail: bala.balasundaram@freedom55financial.com | Now Representing Manulife, Sunlife & Greatwest Life.**

## வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க

**Home Life**
GTA Realty Inc., brokerage
206-1711 McCowan Road, Scarborough, ON. M1S 3YS
Bus: 416-321-6969 Fax: 416-321-6963

HOMELIFE HIGHER STANDARDS

**Baskaran Sinnadurai**
Commercial & Residential Sales Representative
**416-880-8585**





SENIOR HOME WITH 7 ROOMS WITH ZONING 5,50000.00



Plaza in Toronto 1.5 million



BUILD YOU DREAM RESTAURANT WITH THE BUILDING PERMIT $699,900



DONUT SHOP IN MARKHAM $249,000

சிறப்புத்தேவையுள்ள பிள்ளைகளை இனங்காணல் (Identifying Special Needs children)

# ஆங்கிலம் இரண்டாவது மொழியாக...

## (English as a Second Language –ESL)

தொடர் - 15



ஜீவா திசைராஜா

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட எமக்கு இந்நாட்டில் ஆங்கிலம் இரண்டாவது மொழியாகவே உள்ளது. எமது பிள்ளைகள் கனடாவில் பிறந்திருப்பினும்கூட பெற்றோர் ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொண்டிராவிடில் பிள்ளைகளுக்கும் ஆங்கிலம் இரண்டாவது மொழியாகவே அமைகின்றது. பாடசாலை செல்லும்வரை வீட்டில் தமிழ் பேசிய பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லும்போது வகுப்பில் ஆசிரியரும் ஏனைய மாணவர்களும் பேசுவதை புரியாமல் தடுமாறுவது இயல்பே. அதற்காக நீங்கள் பிள்ளையுடன் ஆங்கிலத்தில்தான் கதைக்க வேண்டுமென்பதில்லை. தாய்மொழிக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்றே கனடா உட்படப் பல நாட்டு அரசாங்கங்களும் வலியுறுத்துகின்றன.

உங்கள் பிள்ளை பாடசாலைக்கு செல்லத் தொடங்கியபின் தட்டுத் தடுமாறியாவது ஆங்கிலத்தில் கதைக்க தொடங்குகின்றது. ஆனால் தமிழ் மொழியை நீங்கள் வீட்டில் பேசாவிட்டால் பிள்ளை ஒருபோதும் தமிழைக் கற்கப் போவதில்லை. சில பெற்றோர் “நாம் கனடாவில் இருக்கிறோம். எமக்கு எதற்கு தமிழ்? எமது பிள்ளைகளுக்கு தமிழ் அறவே தேவையில்லை” என எண்ணுவது வழமை. பிள்ளைகளுடன் ஆங்கிலம் கதைக்கும் சாட்டில் தாம் ஆங்கிலம் கற்க நினைப்போரும் இருக்கத் தான் செய்கின்றனர். அதேவேளை தாம் தமிழில் கதைத்தால் பிள்ளை தம்மை மதிக்காது என்று நினைப்போரும் நம்மவர் மத்தியில் உள்ளனர். இது தவறான எண்ணமாகும். பெற்றோருக்கு ஆங்கிலம் தெரிந்திருப்பது அவசியமானதே. இதற்கு வளர்ந்தோருக்கான ESL வகுப்புகள் உள்ளன. அங்கு சென்று தமது ஆங்கில மொழியறிவை வளர்த்துக் கொள்வது பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுப்பதற்கும் உதவியாக இருக்கும்.

ஒரு பிள்ளை தாய்மொழியில் நன்கு புலமை பெற்றிருக்கும்போது இரண்டாவது மொழியை இலகுவாகக் கற்றுக் கொள்கின்றது என்றும் ஏனைய மொழிகளைக் கற்றுக் கொள்வதும் அப்பிள்ளைக்கு இலகுவாக அமைகின்றது என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனவே பிள்ளைக்கு கூடிய வரையில் தாய்மொழியில் புலமையை ஏற்படுத்துங்கள்.

இப்போது இரண்டாவது மொழியாக ஆங்கிலத்தை பிள்ளை இலகுவாக கற்பதற்கு நாம் எவ்வாறு உதவலாம் என நோக்குவோம்:

- சிறுவயது பிள்ளைகட்கு ஆங்கில புத்தகங்களை வாசிக்கக் கற்றுக்கொடுப்பதில் பெற்றோருக்கு அதிக ஆங்கில புலமை தேவையில்லை. எனவே பிள்ளைக்கு வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி பிள்ளையின் ஆங்கில மொழி வளர்ச்சிக்கு பெற்றோர் உதவலாம்.
- பாடசாலை விட்டதும் பிள்ளை கணனிக்கு முன்னால் அல்லது தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்பாக அமருவதை கட்டுப்படுத்தி பாடசாலையில் கொடுக்கப்படும் வீட்டு வேலைகளை செய்யும்படி பழக்குங்கள்.
- பாடசாலையில் என்ன நடந்தது என்பதைக் குறித்து பிள்ளையுடன் பேசுங்கள்.
- பாடசாலையில் கொடுக்கப்பட்ட வேலைகள் எல்லாவற்றையும் உங்களுக்கு காட்டும்படி பிள்ளையை ஊக்கப்படுத்துங்கள்.
- புதிய மொழியை கற்கும்போது பிள்ளைக்கு ஓரளவு அமைதியும் ஓய்வும் அவசியம். பிள்ளை நேரகாலத்துடன் படுக்கைக்குச் சென்று போதியளவு நித்திரை செய்வதை உறுதிப்படுத்துங்கள்.
- ஒரு மொழியை சரியான முறையில் கற்பதற்கு குறைந்தது 5 தொடக்கம் 6 வருடங்கள் எடுக்கும் என்பதை உணர்ந்து பிள்ளையுடன் பொறுமையாக இருங்கள்.

### பாடசாலையில் பிள்ளையின் கல்வி நிலை எவ்வாறு உள்ளது என்பதை பெற்றோர் எவ்வாறு அறிந்து கொள்வது?

- உங்கள் பிள்ளை பாடசாலையில் சேரும் போது பிள்ளையின் ஆங்கில தரத்தை அறிந்து கொள்வதற்காக ஓர் மதிப்பீட்டை மேற்கொள்வர்.
- அதேவேளை இத்தகைய மதிப்பீடு பாடசாலை வருடம் முழுவதும் தொடர்ந்து அடிக்கடி மேற்கொள்ளப்படும்.
- பிள்ளைக்கு ஆங்கிலத்தில் உதவி தேவைப்படும்போது பாடசாலையில் ESL கற்பிப்பதில் நிபுணத்துவம் பெற்றிருக்கும் ஆசிரியர்களிடம் பாடசாலை நேரத்தில் அனுப்பப்படுவர் (Pull out method) அல்லது ஓர் குழு ESL மாணவர்களுக்கு ESL ஆசிரியர் ஒருவர் உதவும்படியாக அமையும். அல்லது குறிப்பிட்ட வகுப்பிலேயே ESL ஆசிரியர் தனிப்பட்ட (One on one) உதவி வழங்குவர்.
- பரீட்சை கொடுக்கப்படும் முறைகள், மதிப்பிடும் முறைகள் என்பன ஏனைய மாணவர்களை விட இவர்களுக்கு வேறானதாக இருக்கும். எனவே உங்கள் பிள்ளைகளின் பரீட்சை மதிப்பெண்களை நீங்கள் ஏனைய பிள்ளைகளுடன் ஒப்பிட முடியாது. பிள்ளைகளின் தனிப்பட்ட இயலுதன்மைக்கு ஏற்றவாறு பரீட்சை முறைகள் வேறுபடும். பிள்ளையின், கல்வி நிலை பற்றி நீங்கள் அறிய வேண்டுமானால் ஆசிரியருடன் கதையுங்கள்.

### ஓர் புதிய மொழியைக் கற்பதற்கு தேவைப்படுவது யாது?

பொதுவாக ஓர் புதிய மொழியைக் கற்பதற்கு 5 தொடக்கம் 6 வருடங்கள் எடுக்கும் என நாம் பார்த்தோம். இலக்கணம் (Grammar), அம் மொழியிலுள்ள சொற்கள் (Vocabulary) என்பவற்றை சரியாக கற்றுக் கொள்வதற்கு அதிக காலம் எடுக்கும். எனினும் இதனை சரியாக புரிந்து கொள்ள முடியாத பெற்றோர் தன் பிள்ளை ஆங்கிலத்தில் கதைத்த போதும் ESL வகுப்புகட்கு ஏன் அனுப்பப்படுகின்றார் என யோசித்து கவலைப் படுவதுண்டு. திடீர் உணவுகளை வாங்க முடிவதுபோல் திடீர் ஆங்கிலத்தை பிள்ளைக்கு பெற்றுக் கொடுக்க முடியாது என்பதை பெற்றோர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பேச்சு ஆங்கிலமானது (Spoken English) வகுப்பில் கல்விசார் நடவடிக்கைகளை ஆங்கிலத்தில் மேற்கொள்வதற்கு போதுமானதல்ல. இது சமூகத்தில் பழகுவதற்கே போதுமானது. கல்விசார் ரீதியில் உங்கள் பிள்ளைகள் வெற்றிகரமாக இயங்க வேண்டுமானால், அவர்கள் மிகவும் உயர்தரமான ஆங்கிலத்தை கற்றுக் கொள்ள வேண்டும். சமூகத்தில் பேசுவதற்காக மொழியை (Social language learning) கற்பதை விட கல்விசார் ஆங்கிலத்தை (Academic English) கற்பது மிகவும் சிக்கலானதும் அதிக காலம் எடுப்பதுமாக அமையும்.

இச்சமயத்தில் உங்கள் பிள்ளைகள் வெற்றிகரமாக கல்விசார் ஆங்கிலத்தை கற்க வேண்டுமெனில்:

- பாடம் சார்ந்த சொற்களை (Subject vocabulary) பொருத்தமாக பயன்படுத்த வேண்டும்.
- பாடப் புத்தகங்களில் உள்ளவற்றை வாசித்து விளங்கிக்கொள்ளக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.
- வாசித்தவற்றை திரும்பவும் விபரித்துக் கூறவும், பகுப்பாய்வு செய்தல், மதிப்பீடு செய்தல் என்பவற்றுடன் ஒழுங்கு வரிசையாக சம்பவங்களை கூறத் தெரிந்திருக்க வேண்டும்.
- வாசித்தவற்றை தனது அனுபவங்களோடு ஒப்பிடவும் (text to self), தான் வாசித்த ஏனைய புத்தகங்கள் (text to text) மற்றும் உலகில் நடைபெறும் சம்பவங்களுடன் (text to world) ஒப்பிட்டு நோக்கவும் தெரிந்திருக்க வேண்டும். இத்தகைய பயிற்சி கனடிய பாடசாலைகளில் முதலாம் இரண்டாம் வகுப்புகளிலிருந்தே ஆரம்பமாகின்றது.
- புத்தகத்தில் வாசித்தவற்றை அப்படியே பிரதிபண்ணி எழுதாமல் சிந்தித்து எழுதக் கூடிய ஆற்றல் பெற்றிருக்க வேண்டும்.

ஓர் மொழியைக் கற்றுக் கொள்வதற்கு நீண்ட காலம் எடுப்பதுடன் அது ஓர் சிக்கலான செயல்முறையாக இருப்பதால் சில மாணவர்கள் பாடசாலை வாழ்க்கையை கடினமாகவும் கருதுவர். இத்தகைய மாணவர்கள்:

- ஆரம்பத்தில் ஆர்வத்துடன் இருந்த போதிலும் காலம் செல்லச் செல்ல கோபமும் மனவிரக்தியும் கொண்டவர்களாக இருப்பர்.
- ஆங்கிலத்தில் பேசுவதற்கு மறுப்புதுடன் அவ்வாறு பேசினாலும் மிகவும் குறைந்தளவாகவே பேசுவர்.
- அடிக்கடி சுகவீனமாக இருக்கின்றது என்ற சாட்டைக் கூறி பாடசாலைக்கு போக மறுப்பர்.
- தமது சொந்த மொழியையும் கலாச்சாரத்தையும் ஒதுக்கி தள்ளுபவர்களாக இருப்பர்.
- வீட்டிலும் பாடசாலைகளிலும் அவர்களது நடத்தை மாறுபடும்.
- குடும்பத்தவர்களுடன் பேசுவது, நேரம் செலவழிப்பதைக் குறைத்து நண்பர்களுடன் அதிக நேரம் செலவழிக்க முயல்வர்.

இந்த நடத்தைகளும் மனப்பாங்குகளும் சாதாரணமாக மொழிப் பிரச்சினையால் பாதிக்கப்படும் எல்லா மாணவர்களுக்கும் பொதுவானதாக இருந்த போதிலும் இது குறித்து பெற்றோராகிய நீங்கள் கவலையடைந்திருந்தால் வகுப்பாசிரியர்கள் மற்றும் ESL ஆசிரியருடன் கலந்து பேசுங்கள்.

உசாத்துணை:
- http://www.yourdictionary.com/esl/How-Parents-Help-Their-ESL-Children-Learn-English.html
- http://bctf.ca/uploadedfiles/Parents/Supporting Learning/ESL_brochure/English.pdf
- Many Roots, Many Voices - Supporting English Language Learners in every classroom., (2005). A practical guide for Ontario educators, Ontario

jeevathisairajah@thaiveedu.com

■ ■ ■

### கடுகு...

### குழந்தையை eBay மூலம் விற்கமுயற்சி:

அமெரிக்காவின் மிச்சிகன் மாநிலத்தில், தனது பராமரிப்பிலிருந்த 2 வயதுப் பெண் குழந்தையொன்றை eBay மூலம் விற்கமுயன்ற 19 வயதுப் பெண்ணொருவர் மாட்டிக் கொண்டார்.

“eBay இணையத்தளம் எவ்வாறு தொழிற்படுகின்றது என்று அறிந்துகொள்ளவே இப்படிச் செய்தேன், உண்மையிலேயே குழந்தையை விற்கும் எண்ணம் எனக்கு இருக்கவில்லை” என்று காவல் துறையினரிடம் கூறியுள்ளார் அந்தப்பெண். உறவினரொருவரின் குழந்தையாம்.

***வடிவேலு ஸ்டைலில்:*** “நான் சொன்னதையெல்லாம் நம்பிட்டிங்களா…..? ஐய்யோ ஐய்யோ” என்று மீண்டும் eBayஇல் ஒரு பதிவை அவர் இடலாம்.

நிதானம், நம்பகத்தன்மை, அனுபவத்துடன் கூடிய சேவை

Das Narayanasamy
Mortgage Broker
416-543-6614
Fax: 1-888-511-8960, E-mail: dasn@rmabroker.ca
Lic# M08007147

RMA
REAL MORTGAGE ASSOCIATES
Real Mortgage Associates
Licence No: 10464



## கதைப்பதால் மாறுமா உளநோய்?

# உளநலமும் சிகிச்சையும்



புஷ்பா கனகரட்ணம்
- உளவியல் நிபுணர் -


உடல் சார்ந்த நோய்கள் வரும்போது வைத்தியரை நாடலாம். ஆனால் உளம் சார்ந்த பாதிப்புகள் வரும்போது, தயக்கம், வெட்கம், குழப்பம் என்று பல தடைகள். இந்த தடைகளை எவ்வாறு கடக்கலாம்?

உங்களுக்கு தெரியுமா, உளநலம் சார்ந்த அழுத்தங்களை உங்கள் வாழ்க்கையில் குறைத்தால்; புற்றுநோய், இருதய நோய் போன்ற கொடிய நோய்களின் சாத்தியத்தை குறைத்தால் ஆயுட்காலம் எவ்வளவிற்கு கூடுமோ, அதைவிட 3 மடங்காக உங்கள் ஆயுட் காலத்தை கூட்டலாம். இதைத்தான் ஆய்வுகளின் மூலம் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

உளப்பாதிப்புகளால் துறைசார் சிகிச்சை தேவைப்படும் சந்தர்ப்பம் வரும்போது யாரிடம் உதவி நாடுவது?

### மருத்துவ சிகிச்சையின் ஆதிக்கம்:

உளப்பாதிப்புக்கு மருத்துவ சிகிச்சையை நாடுவது இலகுவாக இருக்கின்றது. ஒருகாரணம் உளநல சிகிச்சையில் (Psychotherapy) அல்லது உளவளத்துறையில் (Counselling) பலருக்கும் பரிச்சயம் மற்றும் நம்பிக்கை இல்லாமல் இருப்பது. மற்றைய காரணம் உளநல சிகிச்சை அல்லது உளவளத்துறை வழங்குபவர்களின் சேவைகள் சுகாதாரத் திட்டங்களுக்குள் அடங்காமல் இருப்பது. இந்தச் சேவை வழங்குனர்கள், குடும்பவைத்தியர்களின் எண்ணிக்கையை விடக் குறைவு. ஒரு குடும்ப வைத்தியர் தான் அனேகமாக உளநலசேவையுடன் தொடர்புபடுத்த வேண்டியிருக்கிறது. அதைச் சில குடும்ப வைத்தியர்கள் செய்ய எண்ணுவதில்லை. மக்களும் வெட்கத்தாலோ அன்றி தேவையற்ற பயத்தாலோ இதை மறுத்துவிடலாம். அத்தோடு குடும்ப வைத்தியரிடம் சென்று மருந்துகள் எடுக்கும்போது வெளி ஆட்களுக்கு உளக் காரணிகளால் தான் சிகிச்சை பெறுகின்றோம் என்பதை மறைப்பதும் எளிதாக இருக்கின்றது. குடும்ப வைத்தியர் உளநல மருத்துவரிடம் (Psychiatrist), அனுப்பினால்கூட 20 நிமிடங்களுக்கு, அதுவும் 2 அல்லது 3 மாதத்திற்கு ஒருமுறை வைத்தியரைப் பார்ப்பதனால் அந்தச் சிகிச்சை பலருக்கும் முழு நிவாரணத்தைத் தருவதில்லை.

### பிரச்சினையை கதைத்து என்ன செய்யப் போகிறோம்?

எங்கள் மனம், மூளை, உடல், சுற்றுசூழல் எல்லாவற்றிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. இவை எல்லாம் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கிறது. எங்கள் மூளையின் கட்டமைப்பும் கல்லில் எழுதிய எழுத்துப்போல் அல்ல. இசைவாக்கம் அடையக்கூடியது. உளநலச் சிகிச்சை (Psychotherapy) மூளையின் கட்டமைப்பு, தொழிற்பாடு போன்றவற்றை மாற்றக்கூடிய சக்தி உள்ளது என்பது ஆய்வுகளால் நிரூபிக்கப்பட்டுள்ளது. இப்படித்தான் தியானம், உடற்பயிற்சி, இறை நம்பிக்கை என்பனவும். உங்கள் உளநலம் குன்றும் போது உடல் நலமும் குன்றுகிறது. வாழ்க்கையை ஒரு ஆரோக்கியமான கண்ணோட்டத்தோடு பார்க்க உளநல சிகிச்சை உதவுகிறது. மனச்சோர்வு, பதட்டம், மற்றும் பல உளநலபாதிப்புகளையும் சிறந்த முறையில் குணப்படுத்தவும், இருதயநோய் போன்ற பல உடல் நோய்களால் பாதிப்புற்றோரின் ஆயுள் காலத்தை நீடிக்கவும் உளநல சிகிச்சை உதவுகிறது.

### உளநல சிகிச்சை யாரால் வழங்கப்படுகிறது?

உளநல நிபுணர்கள் (Psychologist) மற்றும் உளநல மருத்துவர்களை (Psychiatrist) எடுத்துக் கொண்டால் - இரு சாரார்களும் பல ஆண்டுகள் கல்வி, மற்றும் பயிற்சி பெற்றவர்கள். அவர்கள் கல்வி எதைப்பற்றியது என்பது தான் வேறுபாடு. உளநல மருத்துவர்கள் உங்கள் குடும்ப வைத்தியர் போன்று அடிப்படையில் மருத்துவம் கற்றவர்கள். அதன்பின் உளநோய்களை கண்டறிந்து சிகிச்சையளிப்பதில் மேற்படிப்பு பெறுகிறார்கள். அநேகமான உளநல மருத்துவர்கள் மருத்துவ சிகிச்சை அளிப்பார்கள். சிலர் உளநல சிகிச்சை (psychotherapy) வழங்குவதிலும் மேற்படிப்புப் பெற்றிருப்பார்கள். இவர்களின் சேவைகள் கனடாவின் சுகாதாரத் திட்டத்தில் அடங்கி இருப்பதால், நீங்கள் பணம் செலுத்தி உதவி பெறத்தேவையில்லை. உளநல நிபுணர்கள் உளவியலில் (கணிப்பீடுகள், நோயை கண்டறிதல், மற்றும் உளநல சிகிச்சை) அடிப்படை பயிற்சி பெற்று, பின் ஒவ்வொரு குறிப்பிட்ட உளவியல் துறைகளில் மேற்படிப்புப் பெறுகிறார்கள். Psychologist என்று அழைக்கப்பட அவர்கள் PhD முடித்திருக்க வேண்டும். மருத்துவம் சம்பந்தப்பட்ட பயிற்சிகளை சிலர் பெற்றிருந்தாலும் இவர்கள் மருந்துகள் எழுதிக் கொடுப்பதில்லை. உளவியல் சார்ந்த பரிசோதனைகளை (Psychological Tests) உருவாக்குவதிலும், ஆய்வு செய்வதிலும், பயன்படுத்துவதிலும் இவர்கள் மட்டுமே தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். இப்பரிசோதனைகள் கல்வி சார்ந்த தகைமைகள் (intelligence), மூளைத்தாக்கங்கள் (brain injury), நோய் கண்டுபிடிப்பு (Diagnosis), ஆளுமை (Personality) மற்றும் வேலை சார்ந்த தகைமைகளை ஆராய உதவுகிறது. வைத்தியசாலைகளில் அல்லது அரசாங்கத்தில் பணிபுரியும் உளநல நிபுணர்களைத் தவிர மற்றவர்களை பார்வையிட உங்கள் காப்புறுதித்திட்டமோ, வேலையின் Benefits திட்டமோ தேவைப்படுகிறது.



### உளநலச் சிகிச்சை என்றால் என்ன?

சேவை வழங்குபவரும் பெறுபவரும் இணைந்து குறிப்பிட்ட பிரச்சினையை, தாக்கத்தை ஆராய்ந்து அதற்குரிய தீர்வுகளை முன்னெடுப்பது தான் உளநல சிகிச்சை. எந்தவொரு சிகிச்சை முறையும், மருத்துவ சிகிச்சை உட்பட, சிகிச்சை அளிப்பவருடனான உங்கள் உறவுமுறை, அவரிலும் அவர் அளிக்கும் சிகிச்சையிலும் நம்பிக்கை, இந்த இரண்டும் இன்றி வெற்றி அளிக்கமாட்டாது. உளநலச் சிகிச்சையின் சம்பாஷனை உங்கள் எண்ணங்கள், உணர்வுகள், நடவடிக்கைகள், வாழ்வில் நீங்கள் முக்கியத்துவம் கொடுக்கும் விடயங்கள் என்பன சார்ந்து இருக்கும். உங்கள் கடந்தகால வாழ்க்கையின் தாக்கங்கள் நிகழ்காலத்தில் பிரதிபலித்தால், அவை சார்ந்தும் இருக்கும். மற்றவர்களுடனான உறவுமுறை மற்றும் அது சார்ந்த சிக்கல்கள், ஆரோக்கியமான மாற்று அணுகுமுறைகள் சார்ந்தும் இருக்கும். மொத்தத்தில் உங்களை, உங்கள் வாழ்க்கையின் முக்கியமான விடயங்களை, ஆழமாக விளங்கிக்கொள்ளவும் அதன்மூலம் வாழ்க்கையில் ஆரோக்கியமான மாற்றங்களைக் கொண்டுவரவும் உளநல சிகிச்சை உதவுகிறது. எப்படி மருத்துவ சிகிச்சையில், மருந்துகளை சொன்னபடி எடுப்பதும், அதன் பக்க விளைவுகளை மருத்துவருடன் சேர்ந்து ஆலோசிப்பதும் முக்கியமானதோ, அப்படி உளநல சிகிச்சையில் ஒத்துழைப்பும், ஈடுபாடும், இடைவிடாத முயற்சியும் அவசியமாகிறது. உளநலச் சிகிச்சையில் பல்வேறு வழிமுறைகள் இருக்கின்றன. (cognitive behavioral, interpersonal, psychodynamic etc.) எந்த வழிமுறையாக இருப்பினும் சேவை வழங்குபவருடனான உறவும், நம்பிக்கையுமே நிவாரணத்திற்கு முக்கியமாக கருதப்படுகிறது. உளநல சிகிச்சைகள் தனிநபர், தம்பதிகள், குழந்தைகள், குடும்ப அங்கத்தவர்களை இணைத்தும் வழங்கப்படும். உடல் உள ஆரோக்கியம் சார்ந்த துறைகளில் பங்கு பற்றும் 5 துறை சார்ந்தவர்களை கனடாவில் ‘Doctor’ என்று அழைப்பார்கள். இவர்கள் உடல்/உளநல மருத்துவர்கள், பல்வைத்தியர்கள், கண்வைத்தியர்கள், Chiropractors மற்றும் உளநல நிபுணர்கள். உளநல நிபுணர்களை ‘Doctor’ என்று அழைப்பதால் அவர்களிடம் மருத்துவ சிகிச்சை பெறலாம் என்று பலரும் தவறாக அனுமானிக்கிறார்கள்.

### தப்பான அர்த்தங்களும், குழப்பங்களும் (Counsellors, therapists, Counselling….)

சில தொழில் அல்லது துறைசார் தலைப்புகள் வரையறுக்கப்படாது (unregulated) உபயோகத்தில் உள்ளன. ‘Psychologist’ என்ற அதாவது உளநல நிபுணர் என்ற தலைப்பை Psychologist அல்லாதவர் பாவிப்பது சட்டத்துக்கு புறம்பானது. மருத்துவர்கள், மற்றும் Social workers என்று பலருக்கும் இப்படியான கட்டுப்பாடுகளை அவர்கள் துறைசார் அமைப்புகள் நிர்ணயித்து இருக்கின்றன. ஆனால் ‘Counsellor’, ‘Therapist’ என்ற பதங்கள் அப்படியான நிர்ணயங்களுக்குள் கட்டுப்படுவதில்லை. அத்தோடு Employment counsellor, Credit counsellor என்று பலவிதங்களில் counselling என்ற பதம் பாவிக்கப்படுவதும் குழப்பத்திற்கு ஒரு காரணம். அதனால் தகைமை, அனுபவம் என்பன இருக்கிறதா என்று பார்த்து அப்படியான counsellor அல்லது உளவளத்துறை வழங்குபவரை நாடவேண்டும். மனிதநேயம், தொழில் தர்மம் (Ethics) என்பன எந்த சேவை வழங்குனருக்கும் இன்றியமையாதது.

Counselling என்பது ஆலோசனையில் இருந்து வேறுபட்டது. ஆலோசனை உங்கள் நண்பராலோ, நீங்கள் மதிக்கும் ஒருவராலோ ஒரு பக்கமாக வருவது. counselling அல்லது therapy என்பது சிகிச்சை அளிப்பவரும் சம்பந்தப்பட்டவரும் (தம்பதிகள், குடும்பம் சார்ந்த சிகிச்சை எனில் இருவருக்கு மேல்) இணைந்த பரஸ்பர முயற்சியில் சம்பந்தப்பட்டவர் தன் உள ஆரோக்கியத்தை வளர்க்க உதவி செய்வதாகும். “என் மகள் கூடாத சேர்க்கையால் படிக்கிறார் இல்லை அவரை அழைத்து தண்டியுங்கள்” அல்லது “என் கணவர் தன் சகோதரியின் சொல்லை கேட்டு என்னை துன்புறுத்துகிறார் அவரை அழைத்து மிரட்டிப் பாருங்கள்”. என்று கேட்பதெல்லாம் counselling என்ற வரையறைக்குள் வருவதில்லை.

### உளவளத்துறை – உளநல சிகிச்சை என்ன வேறுபாடு?

உளநல சிகிச்சை பொதுவாக ஆழமான பாதிப்புகளை மையப்படுத்தி, நீண்ட காலம் வழங்கப்படுகிறது. உளவளத்துணை (counselling) என்பது நாளாந்த அழுத்தங்கள் எல்லை மீறிச்செல்லும் போது தேவைப்படலாம். எந்த நேரமும் இப்படித்தான் என்று சொல்லவும் முடியாது. சிலர் நீண்டகால Counselling வழங்குவார்கள் - தேவையை பொறுத்து சில Counsellors சிகிச்சை வழங்கவும் திறமை பெற்றவர்கள். உதாரணமாக பாடசாலையில் கவனம் செலுத்த முடியாமல், படிப்பதற்கு பதட்டம், நண்பர்களோடு உறவு முறை அழுத்தம் போன்ற சிக்கல்கள் இருப்பின் counseling தேவைப்படலாம். அதுவே நித்திரை பாதிப்பு, பாலியல் வன்முறை, குடும்பத்திலும் பாதிப்பு எனும் போது உளநல சிகிச்சை தேவைப்படலாம். வழமையாக உளநல சிகிச்சை 10 - 20 கிழமைகளோ அல்லது அதற்குமேலோ எடுக்கலாம். உளவளத்துணை 2 முறைகளில் கூட நிறைவு பெறலாம். பொதுவாக 1 மணிநேரம், கிழமைக்கு ஒரு முறை இப்படியான சிகிச்சை வழங்கப்படும்.

### மருத்துவ சிகிச்சையா உளநல சிகிச்சையா?

பொதுவாகவே, ஆரம்பத்தில் கூறப்பட்ட காரணங்களால் மருத்துவ சிகிச்சை எடுப்பவர்களின் எண்ணிக்கை தேவைக்கு அதிகமாகவே இருக்கிறது. மருத்துவ சிகிச்சை 20% பேர்களுக்கு நல்ல பலனை தருகிறது. அத்தோடு குறுகிய காலத்திற்கு சில ஆபத்தான விளைவுகளை தடுப்பதற்கு மருந்துகள் அவசியமாகின்றன. ஆனால் உளநோய்கள் Chemical imbalance அல்லது மூளையின் இரசாயன மாற்றங்களால் ஏற்படுகிறது என்பதற்கு இன்றுவரை தகுந்த ஆதாரம் இல்லை. மருத்துவ வியாபாரத்துறை (Pharmaceutical Industry) இத்தகைய விளம்பரங்களை தங்கள் ஆதாயத்திற்காக பயன்படுத்துகின்றன. மருத்துவ சிகிச்சை உங்களுக்கு தேவைப்படுமா என்பதை உங்களை நன்கு அறிந்த நம்பிக்கையான குடும்ப வைத்தியரோ உளநல நிபுணரோ கண்டுபிடிக்கக்கூடியதாக இருக்கும். தேவைப்படின் உளநல நிபுணரும், வைத்தியரும் இணைந்து உங்களுக்கு சிகிச்சை வழங்கலாம். இது கூடுதல் பயனை தரும். உளநல சிகிச்சை உங்களை நீங்கள் புரிந்து கொள்ள, எதிர்காலத்தில் மீண்டும் பாதிப்புறாமல் தடுக்க, ஒரு நல்ல அனுபவமாக இருக்கும். மருந்துகளின் பக்கவிளைவுகளில் இருந்து, தங்கும் தன்மையில் இருந்து உங்களை பாதுகாக்கும். ஆனால் இத்தகைய சிகிச்சைக்கு நேரத்தையும் முயற்சியையும் வழங்கவேண்டும். நம்பிக்கையும் ஆர்வமும் இருக்கவேண்டும். மாறாக மருத்துவ சிகிச்சை இலகுவாக தோன்றினால், அதில் நம்பிக்கை இருந்தால், அதைப்பெறுவது தான் சம்பந்தப்பட்டவருக்கு நல்லது. ஆனால் ஒரு நட்பான, அக்கறையுள்ள உளநல மருத்துவர் அவசியம். மருந்துகள் சம்பந்தப்பட்ட வழிகாட்டலை, ஒழுங்கைப் பின்பற்றுவதும் அவசியம். மருந்துகளை ஆலோசனை இன்றி திடீரென நிறுத்துவது பெரும் பாதிப்புகளை கொடுக்கும்

pushpa.kanagaratnam@thaiveedu.com

■ ■ ■


Famous LIGHTINGS Home Decor
- CHANDELIERS
- CRYSTAL CHANDELIERS
- FLUSHMOUNTS
- TRACK LIGHTS
- ISLAND LIGHTS
- PENDANT LIGHTS
- BATHROOM VANITIES
- WALL SCONES
- TABLE LAMPS
- FLOOR LAMPS
- SHADES
- LED STRIPS
- CEILING FANS
- OUTDOOR LIGHTS
- OUTDOOR POSTS
- SPOT LIGHTS
- NUMBER SIGNS
- MAILBOXES
- MIRRORS
HWY 48
16th Ave
Markham Rd
9th Line
HWY 7
மிகப் பெரிய காட்சி அறையுடன் தமிழர் நிர்வாகத்தில்
SALE! UP TO 50% OFF
9291 HIGHWAY 48, (HWY 48 & 16TH) MARKHAM, ON L6E 1A3
TEL: (905) 471-7070


NEED MORE HOUSES FOR SALE
Birchmount & Ellesmere
$199,900
1 Bedroom Condo in Mondeo
Middilfield & Finch
$249,900
GTA Sq. In Door Mall
534 Sq.Ft Completed
99 Balck Well
$114,900
Fully Renovated
2 Bed Rooms, 2 Wash Rooms
8 Lee Centre
$369,900
Fully Renovated
4 Bedroom, 3 Full Wash Rooms
3 Parking, One Locker
Sheppard & Neilson
$204,900
Condo Town House
3 Bed Rooms, 2 Wash Rooms
Steeles & 9th Line
$799,900
New House
5 Bed Rooms, 4 Wash Rooms
Meadowvale & Sheppard
SOLD
4 Bedroom, Bsmt. Apt.
$399,900
Neilson & Finch
SOLD
3 Bedroom, Finished Bsmt.
$264,900
Nelson & Shappard
House for Rent
$1250.00
3 Bedroom, 2 Parking
Available June 30, 2011
Century 21
Affiliate Realty Inc. Brokerage*
PUNCH SOCKALINGAM
Broker
416-786-2463

INSURANCE SERVICE

Best Insurance for Low Rates

விதியை மதியால் வெல்ல முடியாது!
இன்றே ஒரு ஆயுட் காப்புறுதி செய்யுங்கள்



உங்களுக்கு உகந்த காப்புறுதி
சகல காப்புறுதி நிறுவனங்களுடனும்
ஒப்பீடு செய்து தரப்படும்

Thana Manickavasagar
Broker
Cell: 416-728-5772



Life Insurance
Critical Illness Insurance
Disability Insurance
Mortgage Insurance
Home Equity Line of Credit
RRSP - Start from $25
RESP - Start from $25
(20%-40% Government Grant + 15% Company Bonus)

Business: 416-519-3896
thana7@gmail.com
www.thana.ca

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்...

வீடு வாங்கவும் விற்க்கவும்
குறைந்த வட்டி விகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும்
அழையுங்கள்

Ravi. Paramu
Broker
Direct: 416-262-4176

"The best compliment you can give me is the referral of your family and friends"
Thank you for your trust

$599,900



9th Line & Hoover Park
4 Bedrooms 4 WashRoom



HomeLife Today Realty Ltd., Brokerage*

Bus: 416-298-3200

31 Progress Ave., Suite 210,
Toronto, ON, M1P 4S6

*Independently Owned and Operated, Realtor

# நீர்




சிவாஜினி
பாலராஜன்

நீலத்தங்கம் என வர்ணிக்கப்படும் நீர் பற்றாக் குறை அதிகரித்துச் செல்கையில் இந் நீரினால் தோற்றுவிக்கப்படும் நோய்களும் அதிகரித்துச் செல்கின்றன. வளர்முக நாடுகளில் 80% நோய்கள் மாசடைந்த நீரினால் தோற்றுவிக்கப்படுகின்றன. இந்தியாவில் மாத்திரம் ஒரு ஆண்டுக்கு இந்த நீரினால் தோன்றும் வியாதியின் பாதிப்பு இந்தியாவின் பொருளாதாரத்தில் 73 மில்லியன் வேலை நாட்கள் எனக் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றது. (அதாவது 73 மில்லியன் நாட்கள் ஒருவர் வேலை செய்யாவிடின் எவ்வளவு பொருளாதார வீழ்ச்சி ஏற்படுகின்றதோ அவ்வளவு வீழ்சியினை இந்திய பொருளாதாரம் எதிர் நோக்க வேண்டி உள்ளது.) ஒரு போரினால் ஏற்படும் அழிவினை விட சுத்தமான நீரின்மையால் ஏற்படும் அழிவு மிகவும் பாரதூரமானதாகும். வளர்முக நாடுகளில் ஒரு சாதாரண மனிதன் 2.64 கலன் தண்ணீரையும் அதுவே இங்கிலாந்தில் ஒருவன் 35.66 கலன் தண்ணீரையும் கனடா அமெரிக்காவில் 100 இலிருந்து 175 கலன்களையும் ஒருநாளைக்கு பாவிப்பதாகக் கூறப்படுகின்றது. மேலும் ஆபிரிக்காவில் ஒரு வருடத்தில் 40 மில்லியன் மணித்தியாலங்கள் பெண்களும் சிறுவர்களும் தண்ணீர் சேகரிப்பதற்குப் பயன்படுத்துகின்றார்களாம்.

நீரால் நோய்கள் தோற்றுவிக்கப் படுவதற்கு முக்கியமான காரணமாக அமைவது நீர் மாசடைதல் ஆகும். நீர் மாசடைதலைப் பல வித புறக்காரணிகள் தூண்டுகின்றன. எங்களில் பலர் சுற்றுச் சூழல் பற்றிய சிந்தனை சிறிதும் இல்லாதவர்களாக இருக்கின்றோம். எங்கள் வீட்டை மட்டும் துப்புரவாக வைத்துக் கொண்டு நடைபாதைகளிலும் தெருக்களிலும் தேவையற்ற குப்பைகளை நம்மில் பலர் போடுவதுண்டு. நான் ஒரு ஆள் மட்டும் திருந்தினால் போதுமா? என்ற கேள்வி பலரிடம் உண்டு. ஆனால் நான் திருந்தினால் என்னைப் பார்த்து மற்றவர்களும் திருந்தலாம். ஆகவே நாம் ஒரு எடுத்துக் காட்டாக இதைச் செய்வோம் என்னும் எண்ணம் எம்மிடம் இருப்பதில்லை.

இயற்கை வளங்கள் அந்த இயற்கையில் வாழும் உயிரினங்களுக்காக தோற்றுவிக்கப் பட்டவை ஆகும். கூர்பினடிப்படையில் இவை அனைத்தும் தோன்றினாலும் ஒவ்வொரு உயிரினமும் மற்றைய உயிரினத்தில் தங்கித் தான் வாழ்கின்றன. இதனடிப்படையில் தான் ஒரு உயிரினம் அருகிப் போதல் தவிர்க்கப் படல் வேண்டும் என்னும் கோட்பாடு கடைப் பிடிக்கப் படுகின்றது. உயிரியல் உணவுச் சங்கிலியின் முக்கியத்துவத்தினை சிறுவகுப்புகளிலேயே பாடசாலையில் அறிமுகப் படுத்துவதற்குரிய காரணமும் இதுதான். சூழலும் ஏனைய உயிரினங்களின் பிழைப்பும் எவ்வாறு ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என அறியும் போதுதான் சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்னும் ஒரு கொள்கை ஒரு மனிதனிடத்தில் ஆரம்பிக்கும். என்னும் அடிப்படையில் இன்று இளமழலை வகுப்புகளிலேயே சூழல் பற்றிய விழிப்புணர்வு போதிக்கப்படுகின்றது. இந்த இயற்கை வளங்களான நீர்நிலைகள், வனங்கள், உயிரினங்கள், வளிமண்டலம் போன்ற அனைத்தும் எமக்காக வழங்கப்பட்டிருக்கும் பொக்கிசங்கள். ஆகவே சுற்றுச் சூழலின் உயிரியச் சமநிலையினைப் பேணாது இவ் உயிரியற் சூழலினை நாம் பாதுகாக்கத் தவறுகையில் அது எங்களுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் அச்சுறுத்தலாகவே அமைந்துவிடும். நவீன விஞ்ஞான, தொழில் நுட்ப, கைத்தொழில்துறை வளர்ச்சியின் காரணமாக சுற்றுச் சூழல் மாசடைகிறது. இரசாயனக் கழிவுகள், புகை என்பன நீர் நிலைகள், வளிமண்டலம் என்பவற்றை மாசு படுத்துவதால் உயிரினங்களுக்கு ஆபத்தாக அமைகிறது. சுற்றுச் சூழலை மனிதன் எவ்வளவுக்கு எவ்வளவு அனுபவிக்க உரிமை கொண்டவனோ அவ்வளவுக்கு பாதுகாக்கவும் கடமைப்பட்டவன் என்னும் கொள்கையினைக் கொண்டிருந்தால் இப் பிரச்சினைகளுக்கு ஓரளவு தீர்வினைக் காணலாம். சுற்றுச்சூழலைப் பேணிப்பாதுகாக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து செயற்படத் தவறியதன் விளைவுகளை மனிதகுலம் இப்போது தாராளமாக அனுபவிக்கத் தொடங்கிவிட்டது என்று சொல்லும் அளவிற்கு தற்போது ஒருபுறத்தில் வரட்சி மறுபுறத்தில் வெள்ளக்கொடுமையும் சூறாவளியும் என்று இயற்கையின் அனர்த்தங்கள் சுழற்சியாக வந்து கொண்டேயிருக்கின்றன.

சூழலினைப் பாதுகாக்கு முகமாகத் தான் மரம் வெட்டுதல், காடழித்தல், சில மிருகங்களை வேட்டையாடல் போன்றவை தவிர்க்கப் படுவதற்காக அரசு பல சட்டங்களை அமுல் படுத்தி இருக்கின்றது. அத்துடன் அருகிவரும் விலங்கினங்கள் சிறப்புப் பாதுகாப்பு வழங்கப் பட்டு பராமரிக்கப்படுகின்றன. மரங்களுக்கும் மனிதனுக்கும் இடையில் உள்ள உறவு மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. மனிதன் சுற்றாடலையும் அபிவிருத்தியினையும் திட்டமிட்டுப் பேணிப் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றான்.






அருகிவரும் நீர்ப்பிரச்சினையினை சமாளிப்பதற்கு நாம் சிறிது முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். வீடுகளில் இருப்போர் மழைநீர் சேகரிக்கும் பழக்கத்தினைக் கொண்டு வரலாம். தற்போது பொதுவாக அனைத்துக் கடைகளிலும் இந்த மழைநீர் சேகரிக்க உதவும் தொட்டிகள் மலிவான விலையில் விற்கப்படுகின்றன. இவற்றை நாம் வாங்கி வீட்டில் மழைநீர் வடிவதற்காக கூரையிலிருந்து கீழுக்கு வரும் குழாய்களுக்கு கீழே வைத்து இந்த நீரினைச் சேகரித்து அவற்றினை எடுத்து நாம் வளர்க்கும் பயிர்களுக்கு பாவிக்கலாம். (கோடை காலத்தில் தோட்டம் செய்வது எனக்கு மிகவும் பிடித்தமான பொழுது போக்கு. நாங்கள் மூன்று வருடங்களாக மழைநீர் சேகரித்து அதனை பயிர்ச்செய்கைக்குப் பாவிக்கின்றோம். அந்த நீர் போதாதவிடத்து மட்டுமே குழாயில் வரும் நீர் பாவிக்கின்றோம்.) இதனால் நமது தண்ணீர்ச் செலவினையும் குறைத்துக் கொள்வதுடன் சூழலைப் பாதுகாக்கவும் உதவலாம். இவ்வாறு மழைநீர் சேகரிப்பதால் ஏற்படும் நன்மைகள் பல.

- நிலத்தடி நீர்மட்டம் உயர்கின்றது.
- நீர்பற்றாக் குறை குறைகின்றது
- நீரின் கார அமில தன்மை சமன் செய்யப் படுகின்றது
- விவசாய நிலங்களில் மண்ணரிப்புத் தடை செய்யப்படுகின்றது
- நிலத்தடி நீரை மேலே கொண்டுவரும் செலவு குறைகின்றது
- நகர்ப்புறங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படாமல் காத்து, சாலைப் போக்குவரத்து தடையின்றி நடைபெற உதவும்
- நகர்ப்புறங்களில் நீர்த்தேக்கம் தடைசெய்யப்படுவதால் நோய்கள் பரவுவது குறைக்கப்பட உதவும்.

## நீர் மாசாக்கம் (Water pollution) என்றால் என்ன? இது எவ்வாறு ஏற்படுகின்றது?

வேறு பொருட்கள் அல்லது பதார்த்தங்கள் நீருடன் கலக்கப் படும்போது அவை நீர் மூலக் கூறுகளினால் உடைக்கப்பட அல்லது வேறு ஒரு நிலைக்கு மாற்றப்படமுடியாத போது அந் நீர் மாசடைந்த நீர் எனக் கொள்ளப்படுகின்றது.

நீர் மாசடைவதற்குரிய காரணிகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்:

- Point Source - மாசுக்கள் நேரடியாக நீர் வட்டத்தினை அடைவது.
- Non Point source - மறை முகமாக நீர் வட்டத்தினை அடைவது.

நேரடி மாசாக்கம்: இது அனேகமாக பல நாடுகளில் அரசாங்க அமைப்புக்களாலும் தனியார் அமைப்புக்களினாலும் இயக்கப்படும் தொழிற்சாலைகளால் ஏற்படும் கழிவுகள் கடல் நீரில் கலக்கப்படுவது. மறைமுக மாசாக்கம் எனப் படுவது பயிர்ச்செய்கைக்குப் பாவிக்கும் கிருமி நாசினிகள் இரசாயனப் பசளைகள் போன்றவற்றிலிருந்து வடிந்தோடும் பதார்த்தங்கள் நீருடன் சேர்தல். இந்த நீர் மாசாக்க வகைகளில் மறைமுகமாக மாசடைதலைக் கட்டுப் படுத்துவது சிறிது கடினம். ஏனெனில் எங்கு இந்த மாசாக்கம் ஆரம்பிக்கின்றது என்பதனைக் கண்டறிதல் அல்லது ஆராய்தல் மிகவும் கடினமானதாகும். இதனால் இவ்வாறான மாசடைதல் பற்றிய அறிவினை மக்களுக்கு ஊட்டுவது மிகவும் சிறந்த ஒரு கட்டுப்பாட்டு முறை அல்லது தடுப்பு முறை எனக் கூறலாம்.

## நீரினை மாசுபடுத்தும் காரணிகள்:

நீரினை மாசுபடுத்தும் மிக முக்கிய காரணிகள் வீட்டின் கழிவுநீர், தொழிற்சாலையினால் ஏற்படுத்தப் படும் கழிவுகள், விவசாயக் கழிவுகள் என்பனவாகும். மேலும் வாகனங்களினால் ஏற்படுத்தப்படும் எண்ணெய் போன்றவற்றின் கழிவுகள், ஆகியவை மிகவும் முக்கியமாக நீரினை மாசுபடுத்துகின்றன.

## கிருமி நாசினிகள்:

இவை மண்ணிலிருந்து மழை நீரால் அடித்துச் செல்லப்பட்டுக் குளங்களிலும் கடலிலும் கலக்கின்றன. இதனால் இவை நீரினை மாசாக்குவதுடன் நீர் வாழ் உயிரினங்களின் அழிவுக்கும் இரசாயனப் பொருட்கள் உணவுச் சங்கிலியில் சேர்வதற்கும் வழி வகுக்கின்றன.

## இயற்கை செயற்கை உரம்:

இவை நீர்வாழ் அல்காக்களையும் நீர்த்தாவரங்களையும் துரிதமாக வளரப் பண்ணி நீர் ஓடும் பாதைகளை அடைக்கின்றன. இதனால் சூரிய ஒளி நீரின் ஆழத்தைச் சென்றடையாமல் தடுக்கப்படுகின்றது. இதனால் உயிரினங்கள் இறந்து அவை அழுகும் போது நீரிலுள்ள பிராண வாயுவை உபயோகிப்பதால் சில பகுதிகளில் நீரில் எந்த உயிரினங்களும் வாழ முடியாத பிரதேசங்களை (Dead Zone) உருவாக்குகின்றன.

## எண்ணெய் மற்றும் பெற்றோலியப் பொருட்கள்:

கப்பல்களிலிருந்து கடலுள் எண்ணெய்ப் பொருட்கள் சேர்வதுடன் மாத்திரமன்றி நாளாந்தம் எமது வாகனங்களிலிருந்தும் பெற்றோல் நிலயங்களிலிருந்தும் தொழிற்சாலைகளிலிருந்தும் வெளியேறும் எண்ணெய்ப் பொருட்கள் கடலை அடைந்து மாசுபடுத்துகின்றன.

## உலோகச் சுரங்கங்கள்:

நிலத்தின் அடியில் இருக்கும் சுரங்கங்களிலிருந்து வெளியேறும் உலோகக் கழிவுகள் நீரினால் அடித்துச் செல்லப்பட்டு நீர்நிலைகளை மாசாக்குகின்றன. மிகவும் முக்கியமாக தங்கச் சுரங்கங்களிலிருந்து 'சயனைட்டு' கழுவிச் செல்லப்படுவதால் இது மிகவும் முக்கியமான பிரச்சினைகளாக உருவெடுக்கின்றது.

## நீரின் மாசாக்கத்தைத் தடைசெய்ய அல்லது நீர் சுத்திகரிப்பு வழிமுறைகள்:

மாசுபாட்டைக் குறைக்க பல்வேறு வேதி முறைகள் பயன்படுத்தப்பட்ட போதிலும், சரியான நிவர்த்தி ஏதும் கிட்டவில்லை. ஏனெனில் இந்த இரசாயன முறைகள் சுற்றுச் சூழலை மேலும் மாசுபடுத்துவதாக அதிகச் செலவு கொண்டதாக இருந்ததோடு இரண்டாம் நிலைக் கழிவுகள் அதிகம் வெளிப்படுத்தி வந்தன. எனவே இக்குறைகளை சரிசெய்ய உயிர் நுட்ப முறை பயன்படுத்தப்படுகிறது. இதன் செயல்பாடு மெதுவாக இருந்தாலும் சுற்றுப்புறத்தை மாசுபடுத்துவதில்லை. மேலும் முதலீடும் குறைவு பாதுகாப்பான முறை. உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய இக்கழிவுகளை அழிப்பதில் உயிர்த் தொழில்நுட்ப முறை முக்கிய பங்கு வகிக்கிறது. இதன் செயல்வேகம் குறைவாக இருப்பதால் அதிகமாக பின்பற்றப்படுவதில்லை. எனினும் தற்போது சுற்றுச்சூழல் மாறுபாடு பற்றிய விழிப்புணர்வு காரணமாக இதன் முக்கியத்துவம் வரைபட்டு வருகிறது.

உயிர்த் தொழில் நுட்ப முறையில் மாசுக் கட்டுப்பாட்டை நீக்க பாக்டீரியாக்கள் பயன் படுத்தப்பட்டு வந்தன. தற்போது தாவரங்க-

தொடர்தல் 18ம் பக்கம்

# நச்சகற்றல்

நாங்கள் அறிந்தோ அல்லது அறியாமலே பல திக்குகளிலிருந்து நச்சுகளால் தாக்கப்படுகின்றோம் என்பது தான் உண்மை. எம்மை சுற்றி எங்கும் நஞ்சு காணப்படுகிறது. இந்த நஞ்சுகள் பலதரப்பட்ட வழிவகைகளில் எம் உடலில் உட்புகுகிறது. நாம் உண்ணும் உணவு குடிக்கும் திரவங்கள், சுவாசிக்கும் காற்று மற்றும் எமது தோலில் பூசும் பொருட்கள் என்று பலதரப்பட்ட வழிகளிலும் உடம்புக்குள் நஞ்சு உட்செல்கிறது. அன்மையில் நடந்த ஆராய்ச்சிக் கணிப்புப்படி கடந்த பத்தாண்டுக் காலத்தில் 2500 புது இரசாயனப் பொருட்கள் எமது சுற்றாடலில் கலக்கப்பட்டுள்ளது. இத்தகைய இரசாயன பதார்த்தங்கள் எங்கள் ஆரோக்கியத்தை பாதிப்பதுடன் எமது மரபணுவில் மாற்றங்களை கொண்டு வந்து எமது சந்ததியிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டுள்ளது.

இத்தகைய நச்சுப்பொருட்கள் தோற்றத்தில் பெருமாற்றங்களை கொண்டுவருவது காணக்கூடியதாயுள்ளது. இளமையில் முதுமைத் தோற்றம், தோலில் திரைவிழுந்து, கேசத்தில் நரைவிழுந்து தோற்றமளிப்பது யாவருமறிந்ததே. இந்த நரையை மறைக்க, திரையை மறைக்க பாவிக்கும் இரசாயன பதார்த்தங்கள் பல நோயை உண்டுபண்ணுகிறது. இன்று வடஅமெரிக்காவில் மரணத்துக்கான காரணங்களில் புற்றுநோய் முதலிடம் வகிக்கிறது. ஒருவரின் வாழ்நளில் இருவரில் ஒருவர் என்ற விகித்தத்தில் புற்றுநோய் வரக்கூடிய சந்தர்ப்பமுண்டு. இருதயநோயும் பலரையும் பாதிப்பதுடன் கனடியர்களில் மூன்றில் ஒருவர் ஏதோ ஒருவகையில் இருதய நோயினால் இறக்கிறார்கள் என கணிக்கப்பட்டுள்ளது. இவையனைத்துக்குமே சுற்றாடலில் உள்ள நஞ்சுகள் தான் பெருங் காரணம் என அறியப்பட்டுள்ளது.

இந்நஞ்சுகளை அகற்றுவதில் முதல் முக்கியமாக கவனத்தில் கொள்ளவேண்டிய உறுப்பு ஈரல். இது உட்கொள்ளப்படும் உணவில் உள்ள நஞ்சுகளை பதப்படுத்தி உடம்பால் வெளியேற்றக்கூடிய பதார்த்தமாக்கிக் கொடுக்கிறது. மற்றும் நச்சகற்றல் தொழிலில் சிறுநீரகம், பெருங்குடல், சிறுகுடல், தோல் நுரையீரல் ஆகியனவும் பெரும் பங்குவகிக்கின்றன.

அன்மைக் காலத்தில் பலராலும் நச்சகற்றல் பற்றி பேசப்பட்டும், ஈடுபாடு காட்டப்பட்டாலும், எம்மவர்க்கு இது ஒரு புதிய விடயமல்ல. இலங்கையில் இளமைப்பருவத்தில் வாழ்ந்தவர்களுக்கு ஞாபகம் இருக்கும் தவனை விடுமுறை நாட்களில் அம்மா அல்லது அப்பா அருகில் உள்ள பரியாரி வீட்டில் வைவிற்ரோட்டத்திற்கு குளிசை வாங்கி சாப்பிடச் சொன்னது. இது சிறுகுடல், பெருங்குடல் ஆகியவற்றின் நச்சகற்றல் செய்வதற்கே. அந்நாடுகளில் பெருங்குடல் புற்றுநோய் மிக குறைவு என கணிக்கப்பட்டுள்ளது. இதற்கு காரணம் தரையில் இருந்து மலம் கழிப்பது எனக் கூறினும், இத்தகைய நச்சகற்றலும் அதில் பங்கு வகிக்கும் என்பதனை மறுக்க முடியாது.

நாம் கடைப்பிடித்த விரதங்களும், பாலும் பழமும் மட்டும் உண்டு இருப்பது போன்ற செயற்பாடுகளை இங்கு மறக்கலாகாது. இவை முக்கியமாக ஈரலுக்கு நல்ல ஓய்வை தருவதனால் அது புத்துயிர் பெற உதவும் நஞ்சகற்றல் செயற்பாடாகும்.

அடுத்து நாம் எப்படி இந்த நச்சகற்றலை இந்த நாட்டில் கடைப்பிடிக்கலாம் என்று பார்ப்போம்.

முதலாவதாக மனதில் கொள்ளவேண்டிய விடயம் ஓட்டை விழுந்த ஒடத்தில் உள்ள நீரை வெளியேற்றுமுன் நீர் உள்ளேவரும் ஓட்டையை அடைக்கவேண்டும். நச்சகற்ற முற்படுமுன் நஞ்சு உடலுக்குள் வரும் வழிகளை அடைப்பது தான் முக்கியம்.

எமது உடம்பின் மிகப்பெரிய அவயம் தோல் ஆகும். எமது தோல்படையில் பூசப்படும் எல்லாப் பதார்த்தமும் உடம்பு உட்கிரகிக்கும். அன்மைக்காலத்தில் மருத்துகள் கூட தோலில் Patch என ஒரு துணியை ஒட்டி அதன் மூலம் கொடுக்கிறார்கள். ஏன், கருத்தடைக்கு குளிசை உண்பதிலும் இந்த patch ஒட்டி இருப்பது எழிதானதால் அதன் மூலம் கருத்தடை செய்கிறார்கள். எனவே தோலில் பூசப்படும் அனைத்து பொருட்களும் உடம்பு கிரகிக்கும் என்று தீர்மானிக்கலாம். சில மருந்துகளை தந்து நஞ்சு, வெளிப்பாவனைக்கு மட்டும் (Posion, for external use only) என்று தருவார்கள். ஆனால் அவை உட்செல்லாவிடில் எப்படி உள்ளே சுகப்படும்? கொஞ்சம் கொஞ்சமாக கசிவதனால் ஈரல் முகம் கொடுக்கக்கூடியதாயுள்ளது.

சாதாரண வாழ்க்கையில் பார்த்தீர்கள் எனின் தோல் மினுக்கமாய் இருக்க வேண்டும் என்று Skin Lotion உடம்பு முழுவதும் தடவுவார்கள். மேலும் தலை மயிர் கறுப்பாக, அல்லது பிரவுன் ஆக இருக்க பல இரசாயன பதார்த்தங்களை பூவார்கள். இப்படியாக தோல் ஊடாக செலுத்தப்படும் நச்சுகளை கூறுவதானால் பட்டியல் கூடிக்கொண்டே செல்லும். என்ன செய்யலாம் என்று கேட்கிறீர்களா? இயன்ற அளவுக்கு இவற்றை பாவிப்பதை கட்டுப்படுத்துங்கள். வாயூடாக உண்ண முடியாததை தோலில் பூசுவதை தவிர்ப்பது தான் முதல் கவனிக்கவேண்டும். முன்னைய காலத்தில் முகத்தில் மஞ்சள் பூசினார்கள் இன்று அவை உடலுக்கு நஞ்சகற்ற உதவும் என்று கண்டு பிடித்துள்ளார்கள். மேலும் சனிநீராடும் வேளையில் தேசிக்காயை பூசிக்குளித்தார்கள். இது சருமத்தை மென்மையாக வைத்திருக்க உதவும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே Shapoo பாவிப்பதிலும் தேசிக்காயை பாவிக்கலாம். அடுத்து காலையும் மாலையும் சோப்பு போட்டுகுளிக்க வேண்டியதில்லை. இங்கு பெருமளவு தூசி, வியர்வை இருப்பதில்லை. சாதாரணமாக இளம் சுடு நீரில் குளித்தால் போதுமானது.

அடுத்தபடியாக பெருமளவு நஞ்சு உடம்பில் சாப்பாடு, குடிவகையாகியவற்றால் உட்செல்கிறது. இயன்ற அளவு மாமிசங்களையும், மதுவகைகளையும் தவிர்ப்பது நல்லம். கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் கால்நடை வளர்ப்பில் பெருமளவு மருந்துகள் பாவிக்கப்படுகிறது. ஏறாத மேட்டிற்கு இரண்டு துலா இறைப்பதுபோல் மிருகங்களுக்கு செலுத்தப்படும் மருந்துகள் அவற்றை உண்பதனால் எமது உடலில் வந்து சேர்கிறது. இப்படியான மருந்துகள் எமக்கு வருத்தம் வரும்வேளை செயலிலந்து காணப்படும். மேலும் இவற்றின் நச்சுத்தன்மை காரணமாக ஈரல், சிறுகுடல், பெருங்குடல் ஆகியன பாதிக்கப்படுகிறது. அத்துடன் இவற்றை வெளியேற்றும் சிறுநீரகமும் பாதிக்கப்படும். மதுபாணம் மிகையாக பாவிப்பதும் ஆரோக்கிய தன்மையை குறைப்பதுடன் ஈரல், சிறுநீரகம், சிறுகுடல், பெருங்குடல் ஆகியவற்றையும் பாதிக்கும். இங்கு வேதனைகுரிய விடயம் என்னவெனில் மரக்கறிகளும் நச்சுத் தன்மை உடையனவாய் உள்ளன. இயன்ற அளவு Organic மரக்கறிகளை உண்பதுவும் நச்சுகளை உடம்பில் வராது தவிர்க்க உதவும்.

அடுத்ததாக நச்சகற்றுவதற்கு பெரிதும் பாவிக்கப்படும் பழக்கம் நச்சகற்று குளிப்பு (Detoxing Bath). இதுவும் ஒரு விதத்தில் எமக்கு புதியதல்ல. கால் கைகளில் பெரும் வலி இருந்தால் காலை பேதி உப்பு (Epsom Salt) கலந்த இளம் சூட்டு நீரில் அழுத்திவைக்க

**குமார் புனிதவேல் பக்கம்**

அறிவுறுத்துவர்கள். இதேபோன்று நச்சுகற்று குளிப்பு செய்வதற்கு ஒரு கப் அப்பச்சோடாவும் (Baking Soda) ஒரு கப் பேதி உப்பும் (Epsom Salt) கலந்த இளம் சூட்டு நீரில் இருபது நிமிடம் அமர்ந்திருந்தால் உடலின் நச்சுகள் அகற்றப்படும். இத்தகையகுளிப்பு இரு மாதத்திற்கு ஒரு முறை செய்தாலும் போதுமானதே. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சல்லவா? எனவே எதையும் அளவுடன் செய்வதவசியம்.

இக்கட்டுரையில் தரப்பட்டுள்ள விடயங்களின் தொகுப்பு:

- உண்ணும் உணவை கவனிக்கவும்.
- தேவையில்லாமல் வெய்யிலில் காயவேண்டாம்.
- தோலில் பூசுவது உள்ளே செல்கிறது என்பதை மறக்க வேண்டாம்.
- தேவையில்லாமல் சோப்பு, களிம்பு போன்றவற்றை உடம்பில் பூசவேண்டாம்.
- காலத்துக்குக் காலம் வயிற்றை காயப் போடுவதுடன் பழ ஆகாரங்களை உண்ணுங்கள்.
- உணவுக்கு முன்னும் பழங்களை உண்ணுங்கள்.
- காலத்துக்கு காலம் நச்சகற்ற குளிப்பு செய்யுங்கள்.

kumarpunithavel@thaiveedu.com

■ ■ ■

# நீர்...

17ம் பக்கத் தொடர்ச்சி...

ளைப் பயன்படுத்தி நீர்மாசுபாட்டைக் கட்டுப்படுத்தும் புதிய முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சிலவகை கழிவுகளைக் கட்டுப்படுத்த தாவரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. குறைந்தளவு மாசடைந்துள்ள பகுதிகளையும், அதிக ஊட்டச்சத்துக்கள் மற்றும் உலோகங்கள் மிகுந்துள்ள பகுதிகளிலும் இந்த முறை பயன்படுத்தப்படுகிறது. தாவரங்களினால் மண்ணில் உள்ள (நுண் உலோகங்கள்) உலோகத்துகள்கள் நீக்கப்படுகின்றன. நுண் உலோகத்துகள்களைத் தாவரங்கள் கீழ்க்கண்ட 5 முறைகளில் மண்ணிலிருந்து பிரிக்கின்றன.

- உறிஞ்சுதல் (மண்ணிலிருந்து விவிப் பொருட்களை உறிஞ்சுதல்)
- வடிகட்டுதல் (மாசடைந்த நீரிலிருந்து தாவர வேரின் மூலம் விஷப்பொருட்களை உறிஞ்சுதல்)
- நிலைநிறுத்துதல்
- கடத்துதல்
- ஊக்குவித்தல்

இவ்வாறு தாவரத்தால் உறிஞ்சப்பட்ட மாசுப் பொருட்கள் அதன் வேர் தண்டு அல்லது இலைகளில் சேமிக்கப்பட்டு பின்பு பாதிப்பற்ற, குறைந்த விஷத்தன்மையுடைய பொருளாக மாற்றப்படுகிறது. அல்லது சுவாசித்தலின் போது வளிமண்டலத்தில் வெளியேற்றப்படுகிறது.

இவ்வாறு மாசாக்கம் அடைந்த நீரானது மனித குலத்திற்குப் பெரும் பாரதூரமான கேட்டினை விளைவிக்கின்றது. பல நோய்களுக்குக் காரணியாகின்றது. இதனால் நீரினை மாசுபடுத்தாது நமது நலத்தினைப் பேண எங்களால் என்ன செய்ய முடியும் என்பதனை அறிந்து அதற்கேற்ப நடத்தல் வேண்டும்.

தொடரும்.

sivagini.bala@thaiveedu.com

■ ■ ■

RIGHT AT HOME REALTY INC.
REAL ESTATE BROKERAGE
Monte Carlo Corporate Centre
7045 Edwards Blvd., Suite 201 Mississauga, ON L5S 1X2

**For sellers,**
• 1% rebate on listing commission
• Feature sheet • Staging • Open houses
**For buyers,**
• free home warranty available for 1 year

•Mississauga, Oakville, Burlington, Hamilton & surrounding areas

•Affordability, consistency and growth are just some of the terms that describe the **HAMILTON**

•For your Real Estate needs call **WEST SIDE ALAN**



ALAN SIVASAMBU
BROKER

OFFICE: 905 565 9200, CELL: 416 998 2829
FAX: 905 565 6677
alansivasambu@gmail.com • www.rightathomerealty.com
Facebook S T ALAN HOMES


Sesan Flooring Centre
WWW.SESANFLOORING.COM
INFO@SESANFLOORING.COM
Hardwood. Laminate. Stairs. Tiles. Natural Stone
Friendly & Professional Advice
Quality Workmanship
Quality & Designer Series Product
WE ARE AUTHORIZED DEALER FOR:
HARDWOOD
TILES & MOSAIC
Satin Finish
Muskoka
Sunca
GLOBAL FOREST PRODUCTS
CERATEC
Ceramic Tiles
terra verre
SPECIAL SALE
Sale Price: $4.99
Reg: $6.25
Satin Finish
Maple & Red Oak
Major Mackenzie Dr E
Markham Rd
Castlemore Ave
Call Us For Your Free Estimate
Tel: 905.554.9199
9909 Highway 48, Unit:10, Markham ON. L6E 0B7
(Located South of Markham & Major Mackenzie)


இலகுவாக மோட்கேஜ்
கடினமான இலக்குகளையும் நாம் இலகுவாக்குவோம்
Mortgages
• First Time Buyers
• Refinaning
• Renewal
• Self Employed
• Pre-Aproval
• Bankruptcies
• Bad Credit
• Debt Consultant
• Non-verifiable Income
• New immigrant
We Will
• Simplify the entire process of mortgage financing
• Save you money and time
• Get you the most competitive rates
• Offer you the widest selection of mortgage options including variable rate, fixed rate, capped variable rate, step, secured lines etc. for all situations including self-employed, no down payment ....
• Counsel you on credit and mortgage qualifications
• Provide maximum flexibility in financing choices
• Assist you every step of the way
Best Rates
We can get you a mortgage in most situations regardless of your circumstances. Where traditional financial institutions have given the answer "No", We routinely says "Yes" and gets you a product that suits your needs at an extremely competitive rate.
VERICO TMP
Siva Ratnasingam
Lic: M08002133
Brokerage # 11156
SENIOR MORTGAGE CONSULTANT
2005,2006,2007,2008 Diamond Award Winner
416.520.1214

# Nanthini Singarajah, AMP

**VERICO** THE MORTGAGE PRACTICE INC.

MORTGAGE AGENT
License #: M08005294

Brokerage #: 11156

TMP
THE MORTGAGE PRACTICE

*"Quick and easy answer to your lending needs"*

Tel: (905) 787-2027
Fax: (866) 903-4664
Cell: (416) 704-4006
Email: nsingarajah@vtmp.ca

30 Via Renzo Drive,
Suite 200, Richmond Hill,
ON L4S 0B8
**(Leslie/Elgin Mills)**

**HO:** 2425 Matheson Blvd E.,
8th Floor,
Mississauga,
ON L4W 5K4.

**Other Services**
- Income Tax
  - Personal
  - Business
  - Corporate
- Life Insurance
- RRSP
- RESP

**Specialize In**
- Residential Mortgage
- 1st Mortgage
- 2nd Mortgage
- Refinancing
- HELO (home equity line of credit)

Services available all over Canada

Alphaweb 416-2387222



# RAPID SECURITY

WE PROTECT YOU

"We'll Beat any Quote"

Indoor & Outdoor Guard for
- Commercial
- Residential
- Retail
- Healthcare
- Finance Institution




S101-880 Ellesmere Rd, Toronto ON M1P 2W6 **Office:** (416) 321-6777 **Tel:** (416) 841-1415



# New Midwest auto collision

**"Quality & service First"**

- Specialized in insurance claims
- FULL Service All-in-One Body Shop
- Free Estimate Available
- We repair all makes & models
- Free towing Available
- Customer Satisfaction Guaranteed

TOYOTA LAMBORGHINI BENTLEY CHRYSLER DODGE BUICK Ford mazda CHEVROLET VOLVO HYUNDAI DAEWOO MITSUBISHI MOTORS

**(416) 751-9280**
260 Midwest Rd, Unit 8,
Scarborough, ON, M1P 3B4
newmidwestauto@gmail.com

**Contact Person:**
**Ruban or Shan**






Alphaweb 416-238 7222

# Law Offices of Yaso Sinnadurai

# யசோ சின்னத்துரை சட்ட அலுவலகம்

## Barrister & Solicitor, Notary Public



- **Real Estate Law** (Residential and Commercial)
- **Business Law**
- **Wills & Powers of Attorney**

2100 Ellesmere Road, Unit 202
Scarborough ON M1H 3B7
@ Markham & Ellesmere

3024 Hurontario Street, Unit 216
Mississauga ON L5B 4M4
@ Dundas & Hurontario St.


For Appointment, Please call:

**416 265 3456**

**905-472-4111**

**Dr. Nalini Sutharsan & Associates**

*Family and Cosmetic Dentistry*



# Markham NS Dental

*So much begins with smile*

- Prompt emergency treatment
- Evening & Weekend hours available
- Enhance your Smile
- Eco Friendly
- Payment Plan Option
- Family Appointments are available
- Wheel chair access
- New patients are welcome
- We bill your insurance company directly
- Convenient location with plenty of parking
- State of the Art-Modern Technology
- Play Area for Kids
- Free Implant Consultation
- Female dentist available

share a smile


- *Treats all age groups, including children*
- *All aspects of dentistry practiced*
- *Education & Prevention*

கண்கள் உங்களுக்கு உலக அழகைக் காட்டுவது போல்
பற்கள் உங்கள் அழகை உலகிற்குக் காட்டுகிறது.



**SPECIAL OFFER**
FREE TEETH WHITENING / MOUTH GUARD*
FREE ORAL CANCER SCREENING
FREE CONSULTATION & ADVICE
* Limited time offer
conditions apply

We speak
English, தமிழ், Tagalog
MON - SAT 10:00 AM - 8:00 PM
SUN 10:00 AM - 4:00 PM
9293 Hwy 48,
Suite 4, Markham




Open Seven Days A Week

www.markhamNSdental.com
drnalini@markhamNSdental.com

McDonald's / No-Frills Plaza

*Care, Comfort, Convenience, Confidence.......*


R & S AUTO SALES
TOP QUALITY USED CAR DEALER
வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பது எமது விசேட திறன்
34 வருட அனுபவம்
• We Sell Bank Repossed Cars
• Accident Vehicle Repair
• Computerized Painting
• Motor Vehicle Accident
• Traffic Tickets
தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற
Radha
HONDA
TOYOTA
GM-MINI VANS
R & S Auto Sales Inc.
Radha Motor Inc.
5310 Finch Ave. East, Unit 38
Scarborough, ON M1S 1T6
416-412-3838
416-836-5825



வீடோ, வியாபாரமோ?
விசயம் தெரிந்தவர்களை நாடுங்கள்
HOMELIFE
Homelife/Future
Realty inc. Brokerage
Higher Standard Agents.. Higher Results!
Vivek Subramaniam
Sales Representative
Direct: 416 898 4846
7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8
Bus: 905 201 9977, Fax: 905 201 9229
Independently Owned and Operated

## அழகிய பூஞ்செடிகள்

# சீனியாஸ்(துளுக்கு செவ்வந்தி)

## (Zinnia)

### வீட்டுத் தோட்டம் - 41



செல்லையா சந்திரசேகரி


### அறிமுகம்:

வீட்டுத்தோட்டப்பிரியர் தமது விருப்பத்திற்கும் பொருளாதாரக் கட்டுப்பாட்டுக்கும் மேலாக, பலதரப்பட்ட நிறங்களில் அழகிய பெரிய பூக்களைத் தரும் செடிகளாக இருப்பதாலும் (Zinnia) சீனியாஸைத் தெரிவு செய்வது வழக்கம். இது நாம் வாழும் நாட்டில் மட்டும் அல்ல. நாம் பிறந்த தாய் நாட்டிலும் மிக வும் இலேசாக வித்துகளிலிருந்து விருத்தி செய்யப்படும் செடிகளாக இருக்கின்றன. பூக்கள் அழகாகவும் கவர்ச்சியாகவும் இருப் பதால் சிறுவர்களும் விரும்பித் தோட்டத்தில் ஈடுபடுவதற்கு ஒரு காரணமாக இருப்பது இன்னொரு முக்கிய தொடர்பாயிருக்கின்றது. ஜேர்மனி தேசத்து தாவரவியலாளர் Johann Gottfried Zinn என்பவர் 1700ம் ஆண்டுகளில் அறிமுகம் செய்தமையால் Zinn என்ற பெய ரடிப்படையில் இனப்பெயர் இடம் பெற்றிருக் கின்றது. குடும்பம் Asteraceaeயைச் சேர்ந்தது. தென்மேற்கு, தென் அமெரிக்கா பகுதிக ளைப் பூர்வீகமாகக் கொண்டவை. பின்னர் ஏனைய பகுதிகளில் அறிமுமமானவை. இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், கனடா, அவுஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ போன்ற நாடுகளில், அழகிய பூஞ்செடிகளாக வளர்க்கப்படுகின்றன. சீனியாஸ் நச்சுத்தன்மை வாய்ந்த ஒரு செடியல்ல, தோட்டத்தில் ஆபத்தின்றி வளர்க்கும் செடியாகும்.

### விருத்தி:

வித்துகளிலிருந்து உண்டாக்கப்படும். வித்துக் கள் ஆரம்பத்தில் நிழலான உட்புற இடங்க ளில் வைத்து முளைக்க வைப்பார்கள். சிறிய செடிகள் பின்னர் வெளிப்புறமாக மாற்றீடு செய்யப்படும். குளிரான மண் வித்துகள் முளைப்பதற்கு அனுகூலமாக இருக்காது. இவற்றை விற்பனை நிலையங்களில் வாங்கி நடுவது சுலபமாயிருக்கும். வாங்கும்போது ஆரோக்கியமுள்ள செடிகளைத் தெரிவு செய்யவும். செடிகள் தோட்டத்தில் கரை யோரங்களிலும் கொத்துக்களாக குறிப்பான இடங்களிலும் வசதிக்கேற்ப, ஏனைய பல இடங்களிலும் நடப்படும். செடிகள் விரை வாக வளர்ச்சியடைந்து சிலநாட்களிலேயே பூக்களைத் தருபவை. எந்த தோட்டச் சூழ லிலும் நின்று வாழக்கூடியவை. சாதாரண உக்கல்பசளை இச்செடிகளுக்குப் போதுமானது. சூரியஒளி நன்கு கிடைக்கக்கூடியதும் நீர் ஓடக்கூடியதுமான இடங்கள் வளர்ச்சிக்கு ஆதாரமாக இருக்கும். இவை நீர் குறைவா கக் கிடைக்கும் வேளைகளிலும் தாங்கக் கூடியவை. வருடந்தோறும் திருப்பித்திருப்பி புதிய விதைகளை முளைக்க வைத்து செடி கள் வளர்க்கப்படும். Zinnia elegens பிரபல்ய மான இனமாமும். ஆரம்பத்தில் மெக்சிக்கோ நாட்டில் வளர்க்கப்பட்டு பின்னர் ஏறக்குறைய 100 தேசங்களில் பயிரிடப்படுகின்றன. 15செ.மீ முதல் 1மீ வரை வளரக்கூடியவை. அடர்த்தி யாக வளருகின்ற செடிகள் நீண்ட காலம்





நின்று பூக்களை தருகின்றமையால் வண் ணத்திப் பூச்சிகள் பூக்கள் விரும்பி நாடுவதை அவதானிக்கலாம்.

### உருவவியல்:

சீனியாஸ் ஏறக்குறைய 20 இனங்களைக் கொண்டிருக்கும். வருடந்தோறும் வாழக் கூடியவையாகவும் சில பல்லாண்டுகள் வாழக்கூடியவையாகவும் இருக்கின்றன. வேறு எந்தப் பூச்செடிகளை விடவும் இச்செடிகளை மிகவும் சுலபமாக வளர்க்க முடியுமென்பதை நான் அடிக்கடி தோட்டப்பிரியர்களுக்கு எடுத்து உரைப்பதுண்டு.

செடிகளின் இலைகளின் அமைப்பு உண் மையில் எல்லோரையும் கவரும். எதிரெதிரே காம்பற்ற இலைகள் என்றும் பச்சை நிற மாக இருப்பது, சூழலுக்குக் குளிர்ச்சியை அளிக்கின்றது. நீண்ட காம்புகளுடைய பூக்கள் இருப்பதால் அழகுபடுத்துவதற்கு வெட்டுப் பூக்களாக பயன்படும். சிவப்பு, மஞ்சள், பச்சை, இளஞ்சிவப்பு, ஊதா, செம் மஞ்சள், வெள்ளை போன்ற நிறங்களில் பூக்கள் காணப்படும். இளஞ்சிவப்பு, செம் மஞ்சள், ஆகியவை விரயர் மத்தியில் சூடு கொண்ட இனங்களாகும்.

### பாதுகாப்பு:

செடிகளின் அழகிய தோற்றம் கிடைப்பதற்கு, உடனுக்கு உடன் காய்ந்த பூ தலைகளைப் பார்த்து களைந்து விடவேண்டும். செடி யானது சிறிது வாடுகின்ற தன்மை ஏற்படும் போது அவற்றை அகற்றிவிட்டு புதிய செடி யைத் திருப்பி நடுவது நல்லது. பூச்சிகள், நோய்கள் போன்றவற்றைக் கவனித்து பாது காப்பை அளிக்கவேண்டும். பங்கசு, பற்றீரியா, சிலந்திப்பேன், புழுக்கள் தாக்குகின்றவேளை பூச்சிகொல்லிகள் சேர்ந்த சவர்க்காரம் உப யோகிக்கலாம். இச்செடிகளைத் தாக்குகின்ற பூச்சி புழுக்களை உண்பதற்கு ஏற்றதாக, இவற்றைத் தாக்குகின்ற பூச்சிகள் நாடும் வேறுசில செடிகளை, சூழலில் கலந்து நடுவது, ஆரோக்கியமான நல்லதொரு முறை யாகும். செடிகளுக்கு நல்ல காற்றோட்டமும் நீர் ஓட்டமும் இருப்பதை உறுதிப்படுத்துவது அவசியம்.

**உசாத்துணை:**
*Annuals for Ontario - Alison Beck*
*Gardening Ontario*

sekari.s@thaiveedu.com

■ ■ ■



**Family: Euphorbiaceae**

# ஆமணக்கு

**(Botanical Name: Ricinus communis: English Name: Castor)**

ஆமணக்கு பரவலாக எல்லா வெப்ப வலையப் பிரசேசங்களிலும் ஏறக்குறைய 5-8மீற். உயரம் வளரக்கூடிய மரமாகும். தண்டு முழுமையாக பூண்டுத்தன்மை போன்றதாக பல கிளைகளை விட்டுக் காணப்படும். இது, தென்கிழக்கு ஆசியாவில் ஆதியில் காணப்பட்ட மரமாகும். இலைகள் ஒன்றுவிட்ட ஒன்றாக நீண்ட இலைக் காம்புகளையுடையதாக இருக்கும். இலைகள் பெரிதானவை. பரிசையுரு வானவை, 5-7 சோணைகளைக் கொண்டு அங்கையுருவாக இருக்கும். இத்தாவரம் அதிவேகத்தில் வளர்வதற்கு ஏற்றமுறையில் வேர்கள் அடர்த்தியாகவும் உறுஞ்சுமாற்றல் உடையதாயும் இருக்கின்றன. அடர்த்தியாகக் கிளைகளையுடைய சிறிய மரமாகும். அநேகமாக புற்றரை செடிகளாகவே காணப்படு கின்றன. பச்சைநிறமான இலைகள் அழகிய தோற்றத்தில் இருப்பது மரத்திற்கு ஒரு கவர்ச்சியைக் கொடுக்கும். குஞ்சம் போன்ற பூந்துணராகிய தண்டின் முனையில் பூக்கள் காணப்படும். ஆண் பெண்பூக்கள் வெவ்வேறு நிறங்களில் இருக்கும். பழம் வில்லையமாகும். நீளமான நெற்றுகள் அநேக விதைகளைக் கொண்டு காணப்படும். Ricinus என்ற பெயர் 'tick' என்ற லற்றின் சொல்லிலிருந்து வந்தது. எல்லாவிதமான நோய்களையும் ஆமணக்கு எண்ணெய் குணப்படுத்துவதால் இதற்கு 'Palm of Christ' என்பதும் பொதுவான இன்னொரு பெயராகும்.

சிலர், இத்தாவரத்தினை 'நச்சானவை' எனக்கருதுகின்றனர். இது முற்றும் உண்மையெனவும் கருத முடியாது. செடியின் பகுதிகளை நன்கு அறிந்து, உபயோகப்படுத்தலாம். சில முறைகளை அனுசரித்து விதைகளையோ அல்லது சில இலைகளையோ பயன்படுத்தலாம். நஞ்சுள்ள இலைகளும் இருக்கின்றன. செடியில் ஆமணக்கு வித்துக்கள் தான் முக்கியத்துவம் வாய்ந்தவை. ஆமணக்கு வித்தானது மேல் வளர்சதை போன்ற அமைப்பை ஒரு முனையில் கொண்டு காணப்படும். இதனால் வித்து இடம் விட்டு இடம் பரவலுக்கு அனுசரணையாயிருக்கும். அழகு சாதனங்களாக, உதாரணமாக நகைகள், சங்கிலிகள், வளையல்கள் போன்றவற்றில் பெருமளவில் உபயோகிக்கப்படும். வித்துக்களிலிருந்து எண்ணைய் செய்யப்படும். சகல நோய்களுக்கும் ஆமணக்கு எண்ணைய் பயனுள்ளதாயிருக்கும். வித்துக்கள் அமுத்தப்பட்டு எண்ணைய் எடுத்த பின்னர் எஞ்சிய விதையின் பசை, 'றிசின்' எனப்படும் ஒருவித நச்சுக்கொண்ட புரதத்தை சேர்த்து வைத்திருக்கும். இது பயனுள்ளதாக அமைகின்றது. உடலின் கலங்களின் அனுசேபத்திற்கு தேவையான முக்கிய நொதியத்திற்கு மாற்றீடாக இது பயனாகும்.

■ ■ ■

# சர்வலோக நிவாரணி தேனும் இலவங்கமும்

## தேனும் இலவங்கமும் பற்றி யாரேனும் நினைத்ததுண்டா?

இந்த பூமிக்கோளில் தேன்மட்டுமே கெட்டுப் போகாத மற்றும் அழியாமல் இருக்கும் ஒரு உணவு. உண்மையில் தேன் எப்போதும் தேனாக தான் இருக்கும். ஆயினும் அது ஒரு நீண்ட காலம் ஒரு குளிர்ச்சியான இருளான இடத்தில் இருக்கும் போது படிகங்களாக மாறிவிடும். இங்ஙனம் நேரிடும் போது இதன் வைக்கப்பட்டிருக்கும் பாதிரத்தின் மூடியைத் திறந்துவிட்டு, சூடாக்கிய நீரினுள் அப்பாத்திரத்தினை வைத்துவிடுவதனால் தேன் மீண்டும் உருகித் திரவமாகிவிடும். அது முன்பு இருந்தது போல் மிக நன்றாகவே இருக்கும். தேனை கொதிக்க வைக்கவோ அல்லது ஒரு Micro wave அடுப்பில் வைக்கவோ செய்யாதீர்கள். அப்படி செய்தால் தேனிலுள்ள enzymes அழிந்துவிடும்.

## இலவங்கமும் தேனும்:

தேனும் இலவங்கமும் சேர்ந்த ஒரு கலவை மருந்து அனேகமான நோய்களையும் குணமாக்கி விடும் தன்மை உடையது மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் இதை நிச்சயம் சம்மதிக்கமாட்டார்கள். ஆயினும் தேனும் இலவங்கமும் பற்றிய உண்மை இது.

உலகில் பல நாடுகளில் தேன் உற்பத்தி செய்யப்படுகிறது. தேன் அனைத்து வகை நோய்களையும் தீர்க்கவல்ல அபரிமிதமான பலன்களை தரும் 'ராமபானம்' என்று தேனைப் பற்றி இன்றைய விஞ்ஞானிகள் குறிப்பிடுகிறார்கள். எந்தவகை நோய்களுக்கும் தேனை பயன்படுத்தலாம். ஏனென்றால் அதற்கு பக்கவிளைவுகள் எதுவும் கிடையாது.

தேன் இனிப்பு சுவை உடையதாக இருந்தாலும் அது ஒரு மருந்துபோன்று சரியான அளவில் கொடுக்கப்பட்டால் நீரிழிவு நோயாளிகளுக்கும் அது எந்த தீங்கையும் செய்வதில்லை என்று இன்றைய அறிவியல் ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. மேலை நாட்டு விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி முடிவின் படி தேனும் இலவங்கமும் எத்தகைய நோய்களை குணப்படுத்தும் என்பதற்கான ஒரு பட்டியலை Weekly World News பத்திரிகை இதழின், தன்னுடைய 17 ஜனவரி 1995 திகதியிட்ட பிரசுரிப்பில் வெளியிட்டுள்ளது.

## இதய நோய்கள்:

தேனுடன் இலவங்கப்பொடி கலந்து ஒரு paste தயாரியுங்கள். அதை jelly மற்றும் jamக்கு பதிலாக, பாண் மீது தடவி, காலை உணவின் போது தினமும் சாப்பிடுங்கள். அது இரத்தக் குழாய்களிலுள்ள Cholesterolஐ பெரிதும் குறைக்க உதவுகிறது. மாரடைப்பு நோயிலிருந்து காப்பாற்றுகிறது. மேலும் ஏற்கனவே மாரடைப்பு வந்தவர்கள் இதை தினமும் சாப்பிட்டு வந்தால் அவர்களுக்கு அடுத்த மாரடைப்பு வருவது மிகுந்த நாட்கள் தள்ளிப்போகும். இதை ஒழுங்காக சாப்பிட்டு வரும்போது மூச்சுவிடுவதில் சிரமம் மற்றும் பலவீனமான இதயத் துடிப்பு ஆகியன குணமாகும். பல்வேறு மருத்துவ மனைகளில் நோயாளிகளுக்கு இந்த மாதிரியான சிகிச்சையளித்து, நோய்களை வெற்றிகரமாக குணமாக்கி இருக்கிறார்கள் வயதாகும் காரணத்தால் தமனிகள் மற்றும் சிரைகள் தங்கள் நெகிழும் தன்மையை இழந்துவிடுவதால் அவற்றில் இரத்தம் உறைந்து விட நேரிடுகிறது. தேனும் இலவங்கமும் தமனிகள் மற்றும் சிரைகளுக்கு மீண்டும் பல மூட்டும்.

## மூட்டு வலி:

மூட்டு வலி நோயாளிகள் தினமும் காலை மற்றும் இரவு ஆகிய இருவேளைகளில் ஒரு cup சூடான வென்னீரில் இரண்டு தேக்கரண்டிகள் தேன் மற்றும் ஒரு சிறிய தேக்கரண்டி இலவங்கபொடி கலந்து சாப்பிட வேண்டும். இந்த மருந்தை ஒழுங்காக சாப்பிட்டு வந்தால் நாள்பட்ட மூட்டு வலி நோய் கூட குணமாகிவிடும்.

## சிறுநீர்ப் பையில் தொற்று நோய்கள்:

வெதுவெதுப்பான வென்னீரில் இரண்டு தேக்கரண்டிகள் இலவங்கப் பொடி மற்றும் ஒரு தேக்கரண்டி தேன் கலந்து அருந்த வேண்டும். சிறுநீர்ப் பைகளில் உள்ள கிருமிகள் அனைத்தும் அழிந்து தொற்று நோய்கள் குணமாகிவிடும்.



## Cholesterol (கொலஸ்ட்டரால்):

16 அவுன்சுள் தேனீரில் இரண்டு தேக்கரண்டிகள் தேன் மற்றும் மூன்று தேக்கரண்டிகள் இலவங்கபொடி கலந்து ஒரு கொலஸ்டரால் நோயாளிக்கு கொடுக்கவேண்டும். சில மணி நேரத்திற்குள்ளேயே அவருடைய இரத்தத்தில் இருக்கும் கொலஸ்ட்டரால் அளவு 10 சதவீதம் குறைந்துவிடும். இதே மருந்தை ஒரு நாள் மூன்று வேளைகள் வீதம் கொடுத்தால் நாள்பட்ட கொலஸ்ட்டரால் நோயும் குணமாகிவிடும். தினமும் உணவுடன் சுத்தமான தேன் சாப்பிட்டால் கொலஸ்ட்டரால் பிரச்சினையே வராது என்று முன்பு குறிப்பிட்ட பத்திரிகை இதழ் தெரிவிக்கிறது.

## காய்ச்சல் மற்றும் தடிமன்:

சாதாரண காய்ச்சலிலிருந்து கடும் காய்ச்சல்களால் அவதிப்படும் நோயாளிகளுக்கு ஒரு தேக்கரண்டி தேனை லேசாக சூடாக்கி, அதனுடன் 1/2 தேக்கரண்டி இலவங்க பொடி கலந்து தினமும் மூன்று நாள்களுக்கு கொடுக்கவேண்டும். இந்த மருந்து நாள்பட்ட இருமல், காய்ச்சல் மற்றும் Sinus தொந்தரவுகளைக் குணமாக்கும்.

## வயிற்று கோளாறுகள்:

தேனுடன் இலவங்கபொடி கலந்து சாப்பிட்டால் வயிற்று வலி குணமாகும். மேலும் வயிற்றிலுள்ள புண்களை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடும்.

## வாயுத்தொல்லை:

சில ஆராய்ச்சி முடிவுகளின் படி, தேனுடன் இலவங்கபொடி கலந்து சாப்பிட்டால் வயிற்றிலுள்ள வாயுத்தொல்லைகள் அனைத்தும் நீங்கிவிடும் என்று நிருபணமாகி உள்ளது.

## நோய் எதிர்ப்பு ஆற்றல்:

தேனுடன் இலவங்கபொடி கலந்து தினமும் சாப்பிட்டு வந்தால் உடலின் நோய் எதிர்ப்பு ஆற்றல் அதகிரிக்கும். மேலும் பாக்ட்டீரியா மற்றும் வைரஸ் தாக்குதல்களிலிருந்து உடலை பாதுகாக்கும். தேனில் பல்வேறு வைட்டமின்களும் மற்றும் இரும்பு சத்தும் அதிக அளவில் உள்ளன என்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். தொடர்ந்து தேனை சாப்பிட்டு வந்தால் இரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்கள் பலம் பெறுகின்றன. அதனால் பாக்ட்டீரியா மற்றும் வைரஸ் நோய்கள் விரட்டப்படுகின்றன.

## அஜீரணக் கோளாறு:

இரண்டு தேக்கரண்டிகள் தேனில் கொஞ்சம் இலவங்கபொடி கலந்து உணவு உண்பதற்கு முன் அருந்தவேண்டும். வயிற்றில் மந்தம், அஜீரணக் கோளாறு நீங்கி, செரிமானச் சக்தி அதிகரிக்கும்.

## Influenza (குளிர்ஜுரம்):

தேனில் கலந்துள்ள ஒரு இயற்கை பொருள், Influenza கிருமிகளை அழித்து நோயாளியை குளிர்ஜுரத்திலிருந்து காப்பாற்றும்.

## நீண்ட ஆயுள்:

தேனீரில் தேன் மற்றும் இலவங்கபொடி கலந்து தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், முதுமையான வயதில் நோய்களின் அழிவு வேலைகளிலிருந்து தப்பலாம். நான்கு தேக்கரண்டிகள் தேனில், ஒரு தேக்கரண்டி இலவங்கபொட்டி மற்றும் 3 கோப்பை தண்ணீர் கலந்து கொதிக்க வையுங்கள். இந்த பானத்தை 1/2 கோப்பை வீதம் தினமும் மூன்று அல்லது நான்கு வேளைகள் அருந்துங்கள். உங்கள் தோல் மென்மையாகவும், இளமையுடனும் மற்றும் பொலிவுடனும் காட்சியளிக்கும். உங்கள் ஆயுளை நீடிக்க வைக்கும். இளைஞனின் செயல்திறனுடனும் மற்றும் உற்சாகத்துடனும் வேலைகளை செய்யமுடியும்.

## முகப்பருக்கள்:

மூன்று தேக்கரண்டிகள் தேனுடன் ஒரு தேக்கரண்டி இலவங்கபொடி கலந்து ஒரு Paste தயார் செய்யுங்கள். இரவு உறங்க போவதற்கு முன் பருக்கள் மீது இந்த pasteஐ தடவுங்கள். அடுத்த நாள் காலை வெதுவெதுப்பான நீரினால் முகத்தை கழுவுங்கள். இப்படி இரண்டு வாரங்களுக்குத் தினமும் செய்துவந்தால் பருக்களை முளையிலேயே கிள்ளி ஏறிந்துவிடலாம்.

## தோல் நோய்கள்:

தேனுடன் இலவங்கபொடி சமஅளவுகளில் கலந்து அதை தோலில் உள்ள சொறி, சிரங்கு, படை ஆகியவற்றின் மீது தடவினால், அனைத்துவகை தோல் நோய்களும் குணமாகும்.

## உடல் எடையை குறைத்தல்:

தேன் மற்றும் இலவங்கபொடியை ஒரு கப் தண்ணீரில் கலந்து கொதிக்க வையுங்கள். அதை காலை உணவுக்கு ஒன்றரை மணி நேரத்திற்கு முன்பும், இரவில் உறங்க போவதற்கு முன்பும் அருந்துங்கள். இவ்வாறு தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் மிக பருமனான மனிதரின் எடைகூட குறைய ஆரம்பித்துவிடும். மேலும் அதிக அளவு கலோரி உள்ள உணவை ஒரு நபர் சாப்பிட்டு வந்தாலும், அவருடைய உடலில் கொழுப்பு சேராமல் இங்ஙனம், தேன் மற்றும் இலவங்கம் சாப்பிட்டு வருவது தடுத்துவிடும்.

## புற்று நோய்:

வயிறு மற்றும் எலும்புகளில் புற்று நோய் உள்ள நோயாளிகளுக்கு ஒரு தேக்கரண்டி தேனில் ஒரு தேக்கரண்டி இலவங்கபொடி கலந்து தினமும் மூன்றுவேளை வீதம் ஒரு மாதத்திற்கு கொடுக்க வேண்டும். அதனால் நோய் முழுமையாக குணமடைந்து விடும் என்று குறிக்கப்படுகிறது.

## உடல் சோர்வு:

தேனிலுள்ள சர்க்கரை உடலுக்கு தீங்கு செய்வதற்கு பதில் மிகுந்த நன்மைகளை செய்கிறது என்று சமீபத்திய ஆராய்ச்சி முடிவுகள் சுட்டிகாட்டுகின்றன. தேன் மற்றும் இலவங்கத்தை சமஅளவில் கலந்து சாப்பிடும் மூத்த குடிமகன்கள் மித விழிப்புணர்வுடனும் மற்றும் வளைந்து கொடுக்கும் தன்மையுடனும், செயலப்படுவார்கள். இது சம்பந்தமாக ஆராய்ச்சி செய்த Dr. Milton இது பற்றி குறிப்பிடும் போது, ஒரு கப் தண்ணீரில் அரை தேக்கரண்டி தேனுடன், சிறிது இலவங்கம் பொடி கலந்து, தினமும் காலையிலும் மற்றும் மதியம் 3 மணிக்கும் அருந்தி வந்தால். ஒரு வாரத்திற்குள் உடலின் சக்தி மற்றும் சுறுசுறுப்பு அதிகரிக்க ஆரம்பித்து விடும் என்று கூறுகிறார்.

## வாய் துர் நாற்றம்:


காலையில் எழுந்தவுடன் ஒரு தேக்கரண்டி தேன் மற்றும் இலவங்கபொடி கலந்த சூடான நீர் கொண்டு வாயை கொப்பளித்து விடுகிடுங்கள். நாள் முழுவதும் எந்தவித துர்வாடையுமின்றி சுவாசம் இருக்கும்.

## காது கேட்கும் திறன் குறைவு:

சம அளவுகளில் தேன் மற்றும் இலவங்கம் பொடி கலந்து தினமும் காலை மற்றும் இரவு ஆகிய இருவேளைகளில் சாப்பிட வேண்டும். அதனால் காது கேட்கும் திறன் அதிகரிக்கும். நாம் சிறு குழந்தைகளாக இருந்த போது இலவங்கபொடி தூவப்பட்ட வெண்ணெய் சாப்பிட்டது உங்கள் நினைவிற்கு வருகிறதா?

நன்றி: Weekly World News, Jan 17, 1995

■ ■ ■



# வருமானவரிச்சேவையில் பலவருடம் அனுபவம் வாய்ந்தவர்களினால் நம்பிக்கையான சேவை

- Personal Tax
- Small Business Tax
- E-File Services
- Arrange RRSP
- Maximum Refund
- Tax Saving Advice

Tax Problems?
Penalties?
Haven't Filed?
We can help you...

**Acficana**
ACCOUNTING - FINANCE - TAX - AUDIT

304-5200 Finch Ave.E, (Middlefield & Finch)
Toronto. ON M1S 4Z5
Tel : 416-873-5780 / 416-847-9800
Email : kethes@acficana.com

# MORTGAGE

- *1st & 2nd Mortgages*
- *New Immigrants / Self Employed*
- *Refinance*
- *Equity Line of Credit*
- *Renewal*
- *All other Financial Arrangement*



**Kethes Sivasubramaniyam**
Mortgage Agent - (Lic # M08006105)
**Cell : 416.873.5780**

Via Financial Services Inc. (Lic # 10669)
5200 Finch Ave. E, Suite 304, Scarborough, ON. M1S 4Z5
Fax : 416-548-8006
Head Office : 120 Traders Blvd. Suite 206, Mississauga, ON. L4Z 2H7

Apex Creations - 416-297-0707


# வீடு வாங்கவும், விற்கவும்.......




3+2 Bedrooms, 3 Washrooms
Main Floor Totaly Renovated



3 Bedrooms, 2 Washrooms
Close To Shopping Mall



2+1 Bedrooms, 2 Washrooms
Minutes To Hospital & Hwy 401



3 Bedrooms, 3 Washrooms
$$$ Spent On Upgrades



3 Bedrooms, 2 Washrooms
Newer Laminate Floor



1+1 Bedrooms, 2 Washrooms
Well Maintained Building & Unit



2 Bedrooms, 1 Washroom
Excellent Location With End Unit

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக அனுபவமும், பொறுமையும் உள்ள வாகன பயிற்சியாளராகவும், வீடு விற்பனை பிரதிநிதியாகவும் கடமையாற்றுகின்றேன்.



**PONNIAH (JOE) BALA**
Sales Representative
www.ponniahbala.com
**Dir: 416-617-9370**

RED CARPET. Royal Realty Ltd., Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
**Bus: 416.284.5555**
880 Ellesmere Road, Suite 204, Toronto, ON.

## Computek College

BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

www.computek.edu

# Get Job Ready in 6 - 12 Months

## Interested in FREE training?

*If you are :*

- *Currently receiving E.I. benefits*
- *Received E.I. within 5 yrs*
- *Received maternity benefits within 5 yrs*

*You may be eligible for HRDC funding*

***Are you not qualified for HRDC Funding Assistance ?***
***Is your HRDC funding REJECTED?***

***You may still qualify for other Financial Assistance***
***Please call us for details***



### Early Childcare Assistant(ECA)

Graduates of this program may find employment as

- Child Care Assistant
- Child Care Worker
- Early Childhood Educator Asst.
- Day Care Worker
- Day Care Teacher
- Preschool Worker

### Computerized Accounting

Graduates of this program may find employment as

- Accounting Assistant
- Accounts Administrator
- Accounts Manager
- Accounts Payable Clerk
- Accounts Receivable Clerk
- Payroll Clerk





### Personal Support Worker (PSW)

Graduates of this program may find employment as

- Personal Support Worker
- Home Support Worker
- Personal Care Attendant
- Resident Care Aid
- Nursing Assistant

### Network Engineering

Graduates of this program may find employment as

- Network Administrator
- Network Specialist
- Systems Administrator
- Tech Support
- Help Desk Technician



### Business Administration

Graduates of this program may find employment as

- Administrative Assistant
- Office Assistant
- Office Administrator
- Management Trainee
- Executive Assistant



### Medical Office Admin (MOA)

Graduates of this program may find employment as

- Medical Office Assistant
- Medical Admin. Asst.
- Medical Receptionist
- Medical Secretary
- Medical Records Clerk

### Cerificate Courses

A+ (O/S, Computer Assembly & Troubleshooting),
VB, Java, C++, Visual C#, .Net,
QA , AccPac, Quick books, Simply Accounting, MS Office,
MCP, MCSE, CCNA, Photoshop & Dreamweaver

**Financial assistance may be available to those who qualify**

Markham 905.471.3344
Scarborough 416.321.9911
Toronto 416.285.9941

NOT ALL THE COURSES ARE AVAILABLE AT ALL THE CAMPUSES


# முள்ளிவாய்க்கால்...

9ம் பக்கத் தொடர்ச்சி...

வெளிப்படுத்துவது. எண்ணங்கள் உருவமற்றவை, சக்தியால் ஆனவை, சக்தி வாய்ந்தவை, அவை அலைவடிவானவை, மூளையில் அலைவடிவமான பதிவுகளை உண்டாக்கக்கூடியவை. நமது கணினி பாணியில் விளக்கினால் மூளை என்பது ஹாட்வேர் (Hardware) மனம் என்பது சொ∴ப்ட்வேர் என்கிற மென் பொருள் (Software). இது ஒரு பார்க்கக்கூடிய ஒரு பொருளல்ல ஒருவிதமான புரோகிராம். ஆம் உருவமற்ற, அலைவடிவான, ஆற்றலுள்ளவை என்று குறிப்பிடலாம்.

இவை மூளையிலுள்ள பல நியூரோ கெமிக்கல்ஸ் என்று சொல்லப்படும் இரசாயணங்கள், வழியாக மூளையிலுள்ள குறிப்பிட்ட இடங்களில் பதிவு செய்யப்படுகின்றன. இதற்கு பொறுப்பாக மூளையில் உள்ள பகுதிகள் தான் Limbic system என்ற கட்டமைப்பு. மேலும் Hippo Campus, Amygdala, Cingulate Gyrus, Mamillary Body, Dentate Gyrus, Thalamus, Orbito Frontal Cortex இப்படி இன்னும் பல வாயில் நுழையாத பெயர்களைக் கொண்ட மூளையின் பகுதிகள்தான் நமது மனம் என்ற எண்ணங்களின் செயற்பாட்டுக்கு காரணமாக அமைகின்றன என்று அண்மைக்கால ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. (இதைப்பற்றி இன்னொரு கட்டுரையில் விரிவாகப் பார்ப்போம்)

ஒரு மனிதனைப்பற்றி, அவன் தன்மைகளைப் பற்றி நான் குறிப்பிட்ட விடயங்களில் அவனின் "சுபாவம்" (Personlity), என்பது மிகமுக்கியமான விடயம். தன்னைச்சுற்றி நடக்கிற விடயங்களை எவ்வாறு அவன் பார்க்கிறான். அதை எவ்வாறு புரிந்துகொள்கிறான், மேலும் என்ன விதத்தில் உள்வாங்கிக் கொள்கிறான், அதற்கு ஏற்றபடி எவ்வாறு அதை வெளிப்படுத்துகிறான் (Reaction), இப்படி பல விடயங்கள் மனிதனுக்கு மனிதன் மாறுபடுகிறது. நான் முன்பு குறிப்பிட்டது போல முள்ளிவாய்க்கால் சம்பவம் பலரை பல்வேறு நிலைகளில் தாக்கியது மட்டுமல்லாமல், அவர்களிடமிருந்து வந்த எதிர்த்தாக்கம், வெளிப்பாடு என்பனவும் வெவ்வேறு உள, உடலியல் வடிவங்களில் நிகழ்ந்தேறியிருக்கிறது.

விஞ்ஞான வளர்ச்சி, சமூகப்பொருளாதார மாற்றம், நாகரீக மேம்பாடு, மதங்களின் கோட்பாடுகள், கல்வியறிவும் அதன் விழுமியங்களும், மனிதநேயம், தொழில்நுட்ப தொலைத்தொடர்பு அபரீத முன்னேற்றம் போன்றவை உள்ள இந்தக் காலத்தில், ஒரு இனம் இன்னொரு இனத்தை திட்டமிட்டு அழித்திருக்கிறது என்பது உண்மையிலும் உண்மையாக இருக்கிறபோது, இந்த உலகம் கண்மூடி மௌனித்துப் போயிருந்தது மட்டுமல்ல ஒரு விடுதலைப் போராட்டத்திற்கு பயங்கரவாதம் என்கிற சாயம் பூசியதால் தான் இவ்வளவும் இலகுவாய் நடந்தேறியுள்ளன என்பதும் உண்மை.

இப்படி பல விடயங்கள் இருக்க தாங்கமுடியாத வலிகளோடு, அதிர்ச்சியினால், வெறுப்பினால், இயலாமையினால், ஆழ்ந்த கவலையினால், தாழ்வு மனப்பான்மையினால், விரக்தியினால், எதிர்காலமே இருண்டுவிட்டதோ என்ற எண்ணத்தினால், அவமானத்தினால், உயிருக்கு உயிரான உறவுகளின் பிரிவுகளினால் இப்படி பல காரணங்களினால் நமது உறவுகள் பாதிக்கப்பட்டது யாராலும் மறக்கமுடியாது. இதன் தாக்கம்தான் நம்மில் பலரை இன்று நிரந்தர நோயாளியாக்கியிருக்கிறது என்பது கண்கூடு. இவ்வாறு உண்டான மன அழுத்தம் தான் பாரிய உடல் நோய்களை இப்போது தோற்றுவித்துக் கொண்டிருக்கிறது. இதைத்தான் மருத்தவ விஞ்ஞான "மனம் சார்ந்த உடல் நோய்கள்" என்று குறிப்பிடுகிறது. (Psycho-somatic Disorders).

இவை எவ்வாறான அறிகுறிகளாக வெளிப்படலாம் என்று பார்த்தால், பதட்டம், படபடப்பு, எதிலும் எரிச்சல், எப்பபார்த்தாலும் எரிந்து விழுதல், அடிக்கடி கோபம் வருதல், பெருமூச்சுவிடுதல், ஒருவித இனம்புரியாத பயம், தூக்கமின்மை அல்லது குறைவான தூக்கம், பசியின்மை, சமிபாட்டுக் குறைபாடுகள், நெஞ்செரிச்சல் போன்றவற்றையும் முன்பு எப்போதுமில்லாத வகையில் தலையின் பின்பக்கம் ஒருவிதமான பாரம், அழுத்தம், கழுத்து வலிகள், தலையிடி, முதுகு, நாரிப்பகுதியிலுள்ள தசைகளின் இறுக்கம் அதனால் அந்தப் பகுதிகளில் வலியுணர்வு. இவைமட்டுமல்ல, எதிலும் முழுமையாக கவனம் செலுத்த இயலாமை, வேலையிடங்களில், வேலைகளின் போது என்று மில்லாத Stress, இப்படி பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆம் இந்த பாதிப்புகளில் பல இவர்களுக்கு முன் எப்போதுமே இருந்ததில்லை. அது மட்டுமல்ல, இப்போதும் இனிமேலும் தான் இதன் வெளிப்படையான பாதிப்புகள் பல்வேறு நோய்களாக பரிமாணம் எடுக்கப்போகிறது என்றால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். இத்தகைய மன அழுத்தம், நாட்பட்ட தலையிடி (மைக்ரேன் தலைவலி), அல்சர் என்கிற வயிற்றுப்புண்கள், அஸ்மா, மூட்டுவலிகள், கழுத்து இடுப்பு நாரி வலிகள், தைரொயிட் பிரச்சினைகள், இரத்த அழுத்தம் அதிகமாதல் (பிளட்பிரஷர்), மாரடைப்பு, நடுத்தர வயதிலேயே நீரிழிவு நோயின் பாதிப்பு போன்ற பல பிரச்சினைகளை எமது உறவுகள் சந்திக்க நேரிடலாம்.

இவ்வாறாக முன்பில்லாத வகையில் பெரும்பாலான மக்கள், நான் முன்பு குறிப்பிட்ட சில புதிய குணங்குறிகளாலும், அதன் வழி நோய்களாலும் பாதிக்கப்படுவதைத்தான் "முள்ளிவாய்க்கால் சின்றோம்" என்று புதிய பெயரில் குறிப்பிடுவது பொருத்தமானது என்று எண்ணுகிறேன் உங்களின் கருத்துக்களையும் அன்போடு எதிர்பார்க்கிறேன்.

தொடரும்.

குறிப்பு: இதைப்பற்றிய தொடர்ச்சியான அறிவியல் ஆய்வுகளை யாராவது பல்கலைக் கழக மாணவர் குழு முன்னெடுத்து செய்தால் இது விஞ்ஞான ரீதியாக நிருபனமாகும் என்பது நிச்சயம்.

paul.joseph@thaiveedu.com

■ ■ ■


## எலி பூச்சித் தொல்லையா...?

## RUBAN PEST CONTROL



- வீடுகள்
- தொடர்மாடி வீடுகள்
- தொழிற்சாலைகள்
- வியாபார நிலையங்கள்

ஆகிய அனைத்து இடங்களிலும் எலி, பூச்சித் தொல்லைகளை அறவே நீக்க அழையுங்கள்!

**KANTHAN**
**416•291•3997**


# Mike Srinathan B.Sc

**Sales Representative**

## Direct 416-276-1225


**When you list your home with Mike, you receive these Guarantees**

* Your home advertised 24 hours a day until it is sold
* Your home advertised in full colour prints ads every week until it is sold
* Our Team of Specialists for the same price as hiring a single agent
* Your home sold in 90 days or we buy it *




## வாழ்க்கை சுவர்க்கமானது இனிய இல்லமென்றில்

**Mccowan/Ellesmere**




**$235,000**
Leve 6, Bedrooms 1+1
1 Washroom

**Salem Rd N/Gillette Dr**



**$365,000**
Bedrooms 3
3 Washrooms

**Wanless/Ching**



**419,000**
Bedrooms 3
3 Washrooms

**Markham/Steeles**



**399,999**
Bedrooms 3
2 Washrooms
Ceramic/Hardwood Floors

**Main St & 10th Line**



**$429,000**
Bedrooms 4
3 Washrooms

**Hoover Park/Reeves Way**



**$429,000**
Bedrooms 3
3 Washrooms
Ceramic Floors

**Salem Rd N/Gillette Dr**



**$429,000**
Bedrooms 3
3 Washroom
Parquet Floors

**Mccowan/Dennison**



**439,000**
Bedrooms 4
4 Washroom
Hardwood Ceramic Floors

**16th And Cornell Centre**



**464,000**
Bedrooms 3
3 Washroom
Ceramic/Hardwood Floors

**10th/Mantle**



**$468,900**
Bedrooms 4
3 Washroom
Tile/Hardwood Floors

**Denison/Middlefield**



**473,000**
Bedrooms 3
3 Washrooms
Ceramic/Hardwood Floors

**Salem Rd N/Gillette Dr**



**$498,000**
Bedrooms 3+1
4 Washrooms
Ceramic/Broadloom Floors

**14th Ave/Box Grove Bypass**



**524,700**
Bedrooms 3
3 Washroom
Ceramic/Hardwood Floors

**Kennedy/16 Th Ave**



**538,000**
Bedrooms 3
4 Washroom
Ceramic/Hardwood Floors

**Main St & 10th Line**



**$559,000**
Bedrooms 3
3 Washroom

**9th Line/16th Ave**



**$559,900**
Bedrooms 4
3 Washrooms
Ceramic/Hardwood Floors

**14th Ave/Markham**



**$569,900**
Bedrooms 4+1
4 Washrooms
Centre Island/Hardwood Floor

**14th/Box Grove Bypass**



**$599,000**
Bedrooms 4
3 Washroom
Hardwood Floor/Ceramic

**9th Line And 14th Ave.**



**649,000**
Bedrooms 4
4 Washroom
Ceramic/Hardwood Floors

**Markham/Bur Oak**



**$675,000**
Bedrooms 5+2
5 Washrooms
Hardwood/Ceramic Floors

RE/MAX®

PH1-7800Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800 Fax: 905-470-7770
Email: esrinathan@trebnet.com

**I can also assist you Mortgage Financing, Home Inspection, Real Estate Lawyer**

Realtron Realty Inc, Brokerage
Each office independently owned and operated

# உங்களுக்கான வீட்டை வாங்குவது எப்படி?

**'How to buy your Home' என்னும் 'OREA'வினால் வெளியிடப்பட்ட நூலினை மூலமாகக்கெண்டு வாசகர்களின் நன்மை கருதித் தொகுக்கப்பட்ட தொடர் இது.**

**அலகு - 7**



எஸ்.கே. பாலேஸ்
- வீடு மதிப்பீட்டாளர் -

## வீட்டுமனை விற்பனை முகவருடன் வேலை செய்தல்.

நீங்கள் வீடு வாங்குவது பற்றி விபரங்கள் அறிந்திருப்பீர்கள். நீங்கள் செய்தவற்றை இப்போது பார்ப்போம்.

- வீடு வாங்க உறுதி எடுத்திருப்பீர்கள்.
- உங்களுக்கு கட்டுப்படியான விலையையும் வீட்டின் அளவையும் நீங்கள் தீர்மானித்து இருப்பீர்கள்.
- நீங்கள் வாங்கவேண்டிய வீட்டின் மாதிரியையும் தீர்மானித்திருப்பீர்கள்.
- உங்கள் வீட்டில் இருக்க வேண்டியவற்றையும் தேவையானவற்றையும் பட்டியல் இட்டிருப்பீர்கள்.
- வீட்டு-மனை விற்பனை ஆக்கங்களை வாசித்து, வீட்டுச் சந்தையின் போக்கை ஆராய்ந்து திறந்த வீடுகளையும் (Open Houses) பார்த்திருப்பீர்கள்.

உங்களில் முதல் தடவையாக வீடு வாங்குபவர்களும் 'வீடு வாங்குவது, வேறு பொருட்களை வாங்குவதை விட எவ்வளவு கடினமானது' என்பதை அறிந்து கொண்டிருப்பீர்கள். எனவே இந்த விடயத்தில் யாருடைய அறிவுரை கேட்டால் நல்லது என்று உங்களுக்கு தோன்றியிருக்கும். அப்படியானால் நீங்கள் நினைத்தது சரி. ஒரு வீடு விற்பனை முகவரை நாடுவதுதான் நன்று.

இவ்வாக்கத்தில் நான் முகவர் எனக் குறிப்பிடுவது. கனடா வீட்டுமனை விற்பனை சங்கம், ஒன்றாரியோ வீட்டுமனை விற்பனைச் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினர்களே. இவர்கள் மாகாண சட்ட விதிகளை கடுமையாகப் பின்பற்றுவார்கள். அத்துடன் உங்களிற்கு உயர்தர சேவையும், நேர்மையும், கண்ணியமும் இவர்களிடமிருந்து கிடைக்கும்.

## வீடு விற்பனைக்குரிய அனுமதிப் பத்திரம் (License):

ஒவ்வொருவரும் கனடிய சட்டதிட்டங்களுக்கமைய வீடு விற்றல் வாங்குதல் பற்றிய விரிவான விளக்கங்களைப் படித்து, தத்தமது கடமையைச் சரிவரச் செய்ய 'OREA'வினால் உருவாக்கப்பட்டது இந்த அனுமதிப்பத்திரம். இது ஆரம்பம் மட்டுமே. அனுமதிப்பத்திரம் பெற்ற பிறகு அவர்கள் தொழில் புரியும் அனுபவம் மிக்க ஒரு முகவரின் கீழ் இரண்டு வருடங்கள் வேலை செய்து, மேலதிக படிப்புகளை படிக்க வேண்டும். இதைத் தவிர அவர்களுடைய திறமையை வளர்ப்பதற்கும், இத்துறையில் ஏற்படும் மாற்றங்களை அவதானிக்கவும். சந்தை நிலவரங்களை அறிந்து கொள்ளவும் அவர்களிற்கு பயிற்சி அளிக்கப்படும். இதனால் ஒரு முகவர் உங்களுடன் வேலை செய்யும் போது உங்களிற்குத் தகுந்த அறிவுரையைத் தொழில் ரீதியாக வழங்க முடியும்.

## ஒரு முகவர் யாருக்கு வேலை செய்யவேண்டும்:

சில வேளைகளில் வீடு வாங்குவோர் விற்போர்களிற்கு இடையில் ஒரு குழப்பம் என்னவெனில், முகவர் யாருக்கு வேலை செய்கிறார் என்பதே. வீடு விற்பனை விடயத்தில் நீங்கள் தனிப்பட்ட ஒரு நபரிடம் வேலை செய்கிறீர்கள். எனவே, நாங்கள் ஒரு சில நிமிடங்கள் இவர்களிற்கு இடையே உள்ள உறவை ஆய்வு செய்வோம்.

ஒன்றாறியோவில் சொத்தை விற்பவர்களும் வாங்குபவர்களுக்குமிடையில் என்ன உறவு நடைபெறுகிறது என்பதே உண்மை. இவர்களை ஏஜன்சி (Agency) என அழைப்பார். சட்டப்படி ஒரு புறோக்கர் சொத்தை விற்பவருடைய அல்லது வாங்குபவருடைய பிரதிநிதியாகவே கடமையாற்றுகிறார்கள். எனவே இவர்களை பின்வரும் மூன்று வகையான பெயர்களில் அழைக்கலாம்.



- விற்பனை முகவர்.
- வாங்கும் முகவர்.
- இரண்டும் செய்யும் முகவர்.

முகவரிடமிருந்து நீங்கள் எதை எதிர்பார்க்கிறீர்கள். பொதுவாக முகவர்கள் சந்தையின் பெறுமதி, சந்தையிலிருக்கும் சொத்துக்கள், உங்கள் தேவைக்கு ஏற்ற வீடு, மற்றும் பள்ளிகள், வணக்கத்தலங்கள், உதவி செய்யும் மனப்பான்மை உள்ள மக்கள் ஆகியோரை ஒரு முகவர் உங்களிற்கு ஆயத்தப்படுத்துவர்.

உங்கள் தேவைகளையும் அவற்றின் பெறுமதியையும் நீங்கள் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் வீட்டுச்சந்தையைப் பற்றிய விபரங்களை அறிந்திருப்பதால் அயலிலுள்ள வீடுகளின் பெறுமதியைத் தெரிந்து, தன்னுடைய வாடிக்கையாளருக்கு உதவி செய்யவேண்டும்.

விற்பனைக்குரிய பல வீடுகளை முகவர் உங்களுக்கு அறிமுகப்படுத்துவார். முகவருக்கு பன்முகப்பட்டியல் சேவை பார்க்க கூடிய வசதியுள்ளபடியால் (MLS) இது அவர்களுக்கு சாத்தியமாகும்.

முன்கூட்டியே பட்டியல் தயாரிக்கப்படுவதால் உங்கள் தேவைக்கேற்ப, பணவசதிக் கேற்ப ஒரு வீட்டை அவரால் இலகுவில் உங்களிற்கு தேடித்தரமுடியும்.

உங்களிற்கும் நீங்கள் வாங்க இருக்கும் வீட்டைப் பார்க்கவும், அதைப்பற்றிய விபரங்களை தெரிந்து கொள்ளவும் முடியும்.

நீங்கள் நிதியுதவி பெறக்கூடிய வழிமுறைகளையும், மோட்கேஜ் வட்டி விகிதத்தையும் தெரிவிப்பார்.

## ஒரு முகவரைத் தெரிந்தெடுப்பது:

உங்கள் நண்பர்கள் உறவினர்கள் மூலம், பத்திரிகைகள், வானொலி, விளம்பரங்கள் மூலம் உங்களுக்குப் பொருத்தமான முகவரை நீங்கள் தேர்ந்து எடுக்கலாம். இரண்டு மூன்று முகவரைத் தேர்ந்தெடுத்து, அவர்களையும் அவர்களின் நிறுவனங்களைப் பற்றியும் விசாரித்து அவர்களின் நம்பகத்தன்மை, வீடு விற்பனைத்துறையில் அவர்களுடைய அனுபவம், அவர்கள் வீடு வாங்கிக் கொடுத்த நபர்களின் பெயர்கள் முதலியவற்றை அறிந்து, அவற்றிலிருந்து உங்கள் முகவரை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்.

## உங்களுடைய முகவரும் நீங்களும்:

உங்களுடைய முகவர்க்கு நீங்கள் விசுவாசமாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

உங்களுடைய நிதி நிலமையைப் பற்றியும், வீட்டில் என்னென்ன வசதிகளை எதிர்பார்க்கிறீர்கள் என்றும் வெளிப்படையாக முகவருக்குக் கூறவேண்டும். இதனால் உங்களுடைய நேரம் வீணாகாது தடுக்கலாம்.

இப்போது வீடு விற்பனை நிறுவனங்கள் வீடு வாங்குபவர்களை 'Buyer Agency Agreent' ஒப்பந்தத்தில் கையொப்பம் இடும்படி கூறுகின்றனர். இந்த ஒப்பந்தம் முகவருடையதும் உங்களுடையதும் தேவைகளையும், உரிமைகளையும், கடமைகளையும் வரையறுக்கின்றது. மேலும் முகவருக்கு கொடுக்க வேண்டிய கமிஷன் தொகையையும் அது நிர்ணயிக்கின்றது.

## முகவருடன் உங்களுடைய வீட்டைத் தேடுதல்:

உங்கள் முகவர் உங்கள் விருப்பத்தையும், தேவையையும், நிதி வசதியையும் நன்கு அறிந்திருப்பதாலும் அவருக்கு அந்தப் பிரதேசத்து வீட்டுச் சந்தையின் நிலவரம் நன்கு தெரிந்திருப்பதாலும் உங்களுடைய நேரம் வீணாகாது தடுக்கப்படுகிறது.

வீட்டுச்சந்தை சுறு சுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் போது, நீங்கள் வேகமாக காரியம் ஆற்ற வேண்டும். இல்லாவிடின் இன்னொருவர் அந்த வீட்டை வாங்கிவிடலாம். வீட்டுச் சந்தை சற்று சுறு சுறுப்பு குறைந்திருந்தாலும், கவர்ச்சியான விலை குறிப்பிடப்பட்டுள்ள வீடுகள், வீட்டுச்சந்தையில் அதிக காலம் இருக்கமாட்டாது.

நீங்கள் பார்த்த வீடுகளின் நிழற்படங்களை எடுத்து வைத்திருந்தால், நீங்கள் முடிவு எடுக்கும் போது அப்படங்கள் உங்களிற்குப் பொருத்தமான வீட்டைத் தேர்ந்தெடுக்க உதவும்.

வீடு தேடுதல் ஒரு வீட்டுச் சந்தையை ஆய்வு செய்வது போலவே நீங்கள் பார்க்கும் ஒவ்வொரு வீடும், வீட்டுச் சந்தையைப் பற்றிய ஆய்வு செய்வது போன்றதே. நீங்கள் பார்க்கும் ஒவ்வொரு வீடும் உங்களுடைய வீட்டுச் சந்தையின் அறிவை வளர்ப்பதுடன், வீட்டு அயல், வீட்டின் பெறுமதி முதலியவற்றில் நீங்கள் திருப்திப்படக்கூடியதாக இருக்கும்.

வீட்டைப் பற்றிய உங்களுடைய கேள்விகளிற்கு உங்களிற்கு திருப்தியான பதில் கிடைத்தால், நீங்கள் அந்த வீட்டை வாங்க முடிவு செய்யலாம்.

skbales@thaiveedu.com

■ ■ ■

Canadian Home Appraisals Inc.
Residential & Commercial Appraisals
CHAI CANADIAN HOME APPRAISALS INC.
S.K.Bales
CRA, CAR, MVA, FRI, CRES
Managing Director
Tel: 905-201-0929
Fax: 905-201-8482
www:chainc.ca
email:.chai@chainc.ca

MY PROFESSIONAL DESIGNATIONS:
CRA (Canadian Residential Appraiser)
Designation with Real Estate division of University of British Columbia and The Appraisal Institute of Canada
Car: ( Certified Appraisal Reviewer)
Designation with Canadian National Association of Real Estate Appraisers.
MVA( Market Value Appraiser-Residential
Designation with The Canadian Real Estate Association
FRI (Fellow of the Real Estate Institute)
Designation with Real Estate Institute of Canada
CRES ( Certified Real Estate Specialist)
Designation with Real Estate Institute of Canada
RESIDENTIAL AND COMMERCIAL REAL ESTATE BROKER
Real Estate Broker licence with Real Estate Council of Ontario.

Century 21
Affiliate Realty Inc.



S.K.Bales
CRA, CAR, MVA, FRI, CRES
Real Estate Broker
Residential & Commercial
TEL: 416-290-1200
CELL: 416-801-3219
Commercial Member


People don't plan to fail,
but they do fail to plan
You don't have to take life the way it comes to you...
You can design your life to come to you the way you want!
நாளை நம் கையில்
இன்றே செயற்படுங்கள்
Estate Planning
Disability Income Insurance
Critical illness Insurance
Mortgage Insurance
No medical exam Life Insurance
Permanent Life Insurances
Term Life Insurance
Travel & Visitor Insurance
RRSP Loan / Investment
RESP
As an Independent Insurance Broker,
I will shop around for you and get you the best rate...
Guna Thuraisingham M.A.Sc (Eng.)
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
Tel: 905 230 4986 | guna@elite-associates.ca
www. elite-associates.ca
Auto & Home Insurance
குறைந்த கட்டணத்தில் பெற்றுத் தரப்படும்
Industrial Alliance
RBC Royal Bank
Assumption Life
Desjardins
Manulife
Canada Protection Plan
Foresters


-Making Your Dream Home A Reality-
Visit
www.lokanhomes.com
Interested in Doubling your Monetary Investment in Less Than... 2 Years?
Contact Us Regarding New Condominium Development in Downtown Toronto!!
FREE HOME EVALUATION!
Do You Want to Know the Value of Your Home?
CALL US NOW!
Lic #: M08000182
416-450-3984
lsundaram@trebnet.com
Lic #: M08009958
416-230-6462
kkathir@trebnet.com
HomeLife Future Realty
7 Eastvale Dr #205
Markham, Ontario
L3S 4N8
Office: 905-201-9977
Fax: 905-201-9229
Lokan Sundaram
Real Estate/Mortgage Broker
Kathir Kandiah
Real Estate/Mortgage Broker

உலகம் எங்களைத் திரும்பிப் பார்க்கவில்லை என்ற ஆதங்கம் எங்கள் எல்லோருக்குமே உள்ளதுதான். அதேசமயம் எங்கள் ஆதங்கங்களை உலகிற்குச் சொல்லவேண்டியதும் எங்கள் கடமையாக இருக்கிறது.

மொழி, இனம், கலாச்சாரம் எல்லாவற்றையும் கடந்து உலகை உன்னிப்பாய் கவனிக்கவைக்க பெரிதும் உதவுவது கலை வடிவமே. இன்றிருக்கும் தொழில்நுட்ப வளர்ச்சியின் துணையால் எவரும் கையாளக் கூடியதாகவும், எவரையும் சென்றடையக்கூடியதுமாக இருக்கும் சினிமாக் கலையே எமது ஆதங்கங்களை உலகிற்குச் சொல்ல எமக்கு இலகுவான வழியாக இருக்கிறது. ஆயினும், அதைநோக்கிய எமது முயற்சிகள் மிக மிக அரிதானதாகவே இருக்கின்றன. இலங்கைத் தமிழர்களாகிய எம்மிடம் பல கதைகள் இருக்கின்றன. பல அனுபவங்கள் இருக்கின்றன. பல நியாயப்படுத்தல்கள் இருக்கின்றன. எம்மிடம் இருக்கும் ஊக்கமின்மையும், ஒருங்கிணைப்பின்மையும், நிதியின்மையுமே எமக்கு பெருந் தடைகளாக இருக்கின்றன.

இவற்றை நீக்குவது யார்? பூனைக்கு மணி கட்டுவது யார் என்று காத்திராமல் நாங்களே மணி கட்டினால் என்ன என்ற முயற்சிதான் "ஓவம் அமைப்பு" / Our Visual Art Media. எங்கள் ஆதங்கங்களை, கருத்துகளை, ஆக்கங்களை எங்கள் திரை மொழியில் குறும்படங்களாக ஆக்கி பாராமுகமுள்ள உலகின் மனசாட்சியைத் தொடும் முயற்சியை இதன் வழியே நாங்கள் தொடங்குகிறோம்.

## 'ஓவம்' (Our Visual Art Media) அமைப்பு நடத்தும்

# திரைக்கதைப் போட்டி

(இது குறும்படங்களுக்கான கதை தேடும் போட்டி)

திரைப்படம் என்பது கூரிய அறிவாயுதம்! அதை நோக்கியதொரு முயற்சி இது!!

- ஒன்று முதல் இருபது நிமிடங்களுக்கு உட்பட்ட குறும்படங்களுக்கான கதைகளை அனுப்புங்கள்.
- ஒருவர் எத்தனை கதைகளையும் அனுப்பலாம்.
- நீங்கள் சொந்தமாக எழுதிய கதையாக இருக்கவேண்டும்.
- திரைக்கதை வடிவில் அனுப்பினால் வரவேற்கத்தக்கது.
- முன்பே படமாக்கப்பட்ட கதைகளை அனுப்பவேண்டாம்.
- திரைப்படமாக்கும் வசதியும், உதவியும் ஏற்படுத்தித் தருகிறோம்.
- பரிசுகள் உண்டு.

கதைகள் வந்து சேரவேண்டிய இறுதித் தேதி 30-09-2011

| | |
|---|---|
| முதலாம் பரிசுத் தொகை- | 200 டொலர்கள் |
| இரண்டாம் பரிசு | 150 டொலர்கள் |
| மூன்றாம் பரிசு | 100 டொலர்கள் |

முக்கிய குறிப்பு: அனுப்பும் உங்கள் பிரதியில் திரைக்கதை என எழுதிடுங்கள்.

சொல்லப்படாத எங்கள் கதைகள் எம் ஒவ்வொருவரிடமும் ஆயிரம் இருக்கும். அவற்றை உலகிற்குச் சொல்வோம் இவற்றைத் திரைமொழியில் சொல்ல நாங்கள் வழிசெய்து தருகிறோம்.

அனுப்பவேண்டிய முகவரி

**Thaiveedu**
**Our Visual Art Media**
**P.O. Box 63581, Woodside Square,**
**1571 Sandhurst Circle,**
**Toronto, ON**
**M1V 1V0**

**E-mail: ovam@thaiveedu.com Tel: 905-201-2631, 416 857 6406. Fax: 416 849 0594**

# வீட்டை அழகுபடுத்துவது எப்படி?



கருணா கோபாலபிள்ளை

- வீடு விற்பனை முகவர் -

தாய்வீடு சஞ்சிகையின் தொடர் வாசகர்களாகிய நீங்கள் எங்களுக்கு வழங்கும் ஆதரவானது, இச்சஞ்சிகையினை திறம்பட எடுத்து வருவதற்கு துணைபோகின்றது என்று கூறினால் தகும். இதேபோல் என்றும் உங்கள் ஆதரவானது நிலைத்து நிற்கும் என்று எண்ணிக்கொண்டு இம்மாதம் உங்கள் வீட்டினை எவ்வாறு இலகு வழிகளில் அழகு படுத்தலாம் என்பதனை சற்று அறிவோம்.

ஒரு வீட்டை வாங்குவது எவ்வளவு கடினமோ அதே போன்று அந்த வீட்டை அழகாக வைத்திருப்பதும் சுலபமல்ல. உண்மையில் வீட்டை அழகாக வைத்திருப்பதும் ஒரு கலையே. எதையும் அழகாக வைத்திருக்க பழகியவர்களால் சுலபமாகச் செய்யமுடியும். எப்பொருளையும் அழகாக வைத்திருக்கவும் அழகை இரசிக்கத் தெரிந்தவர்களுமே இதைச் சிறப்பாகச் செய்யலாம். வீட்டை அழகாக வைத்திருப்பதற்கு அவசியம் தேவையாவது சிறிதளவு கற்பனையும், ஓரளவு அழகை இரசிக்கும் தன்மையுமே. இதற்கு அதிக பொருட்செலவு தேவையில்லை. ஆடம்பரமான தளபாடங்களோ, விலைஉயாந்த பொருட்களோ அவசியமில்லை. சாதாரண வீட்டிலுள்ள தளபாடங்களையும், பூச்செடியையும், விலை அதிகமில்லாத திரைச்சீலைகளையும், ஓரிரு அழகிய படங்களையும், சிலைகளையும் வீட்டினுள் பொருத்தமான இடத்தில் தனித்தனியாகவோ அல்லது பல பொருட்கள் ஒன்று சேர்த்தோ வீட்டிற்கு அழகு சேர்க்கலாம்.

நாங்கள் முதலில் ஒரு வீட்டில் தற்போதுள்ள பொருட்களையும், திரைச்சீலைகளையும், எப்படி அழகாகப் பயன்படுத்தலாம் என்பதைப் பார்ப்போம்.

வீட்டின் சுவர்களும் தரையும் எப்போதும் சுத்தமாக இருத்தல் வேண்டும். இரண்டு மூன்று வருடங்களிற்கு ஒரு முறையாவது வீட்டுச் சுவர்களிற்கு வர்ணம் தீட்டப்பட வேண்டும். தரை எப்போதும் சுத்தமாகவும், மினு மினுப்புடன் காணப்படவேண்டும். வரவேற்பறையில் அழகிய பூச்செடிகள், குரோட்டன் செடிகள், மற்றும் மல்லிகை, Money plant போன்ற கொடி வகைகளோ, அவற்றிற்குரிய சாடிகளில் நடப்பட்டுப் பொருத்தமான இடங்களில் வைக்கவேண்டும்.

வீட்டுத் தளபாடங்கள் மூன்று நான்கு மாதத்திற்கு ஒரு தடவை இடம் மாற்றி வைக்கப்பட வேண்டும். விலையுயர்ந்த தளபாடங்கள் அவசியமில்லை. ஆனால் இருக்கும் தளபாடங்கள் ஒன்றிற்கு ஒன்று பொருத்தமானதாக இருக்க வேண்டும். சோபாவிலிருந்து சாப்பிடுவதையோ, படுத்திருந்து கொண்டு TV பார்ப்பதையோ தவிர்க்க வேண்டும். இதனால் தளபாடங்களில் சமையல் மணமும், தலையிலுள்ள எண்ணையும், காலிலுள்ள அழுக்கும் படிய ஏதுவாகின்றது. சமையல் நேரங்களில் முக்கியமாக சோபாக்கள் மீது தடித்த விரிப்புகளை விரித்து மூடிவைத்தால், விரிப்புகளை அடிக்கடி கழுவி உபயோகிக்கலாம்.

சில வீடுகளிற்குச் சென்றால் மீன், முட்டை, அல்லது தாளித்த, பொரித்த வாடை வீசிக் கொண்டிருக்கும். அப்படிப்பட்ட சோபாக்களில் சிறிது நேரம் உட்கார்ந்தால் உங்கள் உடையிலும் அந்த மணம் தொற்றிக் கொள்ளலாம். சமையல் மணம் வெளியே செல்வதற்கு வசதி செய்யப்படாத வீடுகளில் ஜன்னல் கதவுகளை சமைக்கும் போது நன்கு திறந்து வைக்கலாம். மின் விசிறிகள் இருந்தால் வீட்டிலுள்ள சமையல் வாடையை வெளியேற்ற உபயோகிக்கலாம். ஆனால் கனடா போன்ற குளிரும் உறைபனியும் உள்ள நாடுகளில் வீட்டுக் கதவுகளையும், ஜன்னல்களையும் அதிக நேரம் திறந்து வைத்திருக்க முடியாது. ஆனாலும் மூன்று நான்கு தடவை ஜன்னல்களைச் சிறிதாக திறந்து, உட்காற்று வெளியே செல்லவும், வெளிக்காற்று உள்ளே வரவும் வசதி செய்தால், வீட்டினுள் எந்த தேவையற்ற வாடையும் வராது. வரவேற்பறையிலும், படுக்கையறையிலும் மெல்லிய வாசனையுள்ள அகர்பத்திகளையோ, வாசனைத் திரவியங்களையோ உரிய முறையில் உபயோகிப்பதால், எப்போதும் வீட்டினுள் நறுமணம் வீசிக்கொண்டிருக்கும்.

வீடுகளிற்கு கோடைகாலத்திற்கான திரைச் சீலைகளும், மாரிகாலத்திற்கான வேறு ஒரு திரைச்சீலையும் உபயோகித்தால் நன்று. கோடை காலத்தில் அதிக வெளிச்சம் உள்ளே வருவதால் தொலைக்காட்சியைப் பார்ப்பது கடினமாக இருக்கலாம். அத்துடன் பகல் வெய்யில் வீட்டிற்குள் வருவதை தடுப்பதற்கு தடித்த கடும் வர்ணம் உள்ள துணிகளால் ஆன திரைச்சீலைகளை உபயோகிக்கலாம்.

ஒரு சிலர் அதிக செலவு செய்து தடித்த துணிகளில் திரைகள் செய்து கதவு, ஜன்னல் களிற்கு மாட்டியுள்ளார்கள். அதற்குள் மெல்லிய Laco Curtainம் இருக்கும். ஆனால் எம்மவர்களில் பலர் அப்படியான திரைச் சீலைகளை சரியான முறையில் உபயோகிப்பதில்லை. அவர்கள் வீடுகளிற்குப் பகலில் போனாலும் ஒரேயிருட்டாகவே இருக்கும். சூரிய வெளிச்சம் வீட்டிற்குள் வருவதேயில்லை. வீட்டிற்குள் சூரிய வெளிச்சம் வருவதையும், சுத்தமான இயற்கை காற்றுவருவதையும் அனுமதிக்க வேண்டும். வீட்டை அழகு படுத்துகிறோம் என்ற பெயரில் உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்ககூடாது.

அழகான சிலைகள் (மேல்த்தேய அல்லது கீழைத்தேய கலாச்சாரச் சிலைகளாக இருக்கலாம்). எமது கலையம்சங்களை, பாரம்பரியங்களைக் கூறும் சிலைகள் என்றால்... கலை அம்சம் பொருந்திய பரத நாட்டியம் ஆடும் பெண், தாயும்சேயும், புத்தா், திருவள்ளுவர், நடராஜர் சிலைகள் வரவேற்பறையில் யாவரும் பார்க்குமிடத்தில் வைத்து தேவைப்படின் அதற்குப் பக்கத்தில் ஒன்றிரண்டு மரங்களையும் சாடிகளில் வளர்க்கலாம். அல்லது செயற்கை நீர் வீழ்ச்சிகளை வைத்து (கடைகளில் பல அளவிலும் கிடைக்கின்றன) அவற்றைச் சுற்றிவர மரங்கள் அமைத்து ஒரு சிறு பூங்காபோல் செய்து, அந்த நீர்வீழ்ச்சியில் நீர் ஓடும்போது, ஆற்றங்கரையில் அமர்ந்திருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தலாம்.

வரவேற்பறையில் மீன் தொட்டிகளில் பல விதமான வர்ண மீன்களை வளர்ப்பதும், அவற்றிற்கு 'Air pump' பூட்டி நீர்க்குமிழிகளை தொட்டியின் அடிப்பாகத்திலிருந்து வரச்செய்வதும், தொட்டியில் மேற்பகுதியிலிருந்து நீர் வீழ்ச்சி போல் குழாய்கள் மூலம் நீரை ஓடச் செய்வதும், இரவு நேரங்களில் பார்ப்பதற்காக மின் விளக்குகளை இணைத்திருப்பதும் ஒரு நல்ல முயற்சியாகும். இவை எல்லாம் ஒரு வீட்டிற்கு அழகையும், இயற்கையையும் படைப்பிலுள்ள அற்புதங்களையும் மனிதர்களுக்கு அளிக்கின்றன. இவை அழகை, கொடுப்பதுடன் மனதிற்கும் மகிழ்ச்சியையும் கொடுக்கின்றன.

வீட்டிற்கு வெளியே புற்தரை அமைத்து ஆங்காங்கே பூச்செடிகளை நட்டு அவற்றை நன்றாக பராமரித்து வரவேண்டும். மாலை நேரங்களில் உங்கள் வீட்டுப் பூந்தோட்டத்தில் உலாவியபடியோ அல்லது இருக்கைகளில் இருந்தோ புத்தகங்கள் வாசித்தல், பாட்டுக் கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல், சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடுதல் என்று இனிமையாக பொழுதைக் கழிக்கலாம்.

ஒரு சிலர் வீட்டின் முன்புறம் அல்லது பின்புறம் புல்தரையில் ஒரு பகுதியை சிறு மலைகள் போன்று, அல்லது ஒரு சிறுகுளம் போன்று அமைத்து (இரண்டுமாகவும் இருக்கலாம்) அதில் நீர்வீழ்ச்சியை ஒரு சிறு Water Fountains மூலம் ஏற்படுத்தி அவற்றிற்கு மின் விளக்கும் பொருத்தியிருக்கிறார்கள். பொதுவாக அந்த இடத்தில் நிழல் தரும் மரங்களும் காணப்படும். கோடை காலத்தில் மர நிழலில் இந்தச் சிறு குளங்களிற்கும் பக்கத்தில் புற்தரையின் அமர்ந்து உங்கள் பொழுதை கழிக்கலாம். சிறுவர், பெரியோர் இளைஞர்கள் என்று எல்லோருக்கும் இச்சூழ்நிலை மிகவும் விருப்பமாக இருக்கும். மனிதன் இயற்கையில் வாழ்ந்தவன், இயற்கையை விரும்புபவன் ஆகவே செயற்கையாகக் கட்டிய வீட்டில், இயற்கையை நினைவு படுத்தும் அல்லது இயற்கையை உணரவைக்கும் எந்த ஒரு விடயத்தையும் சாதனத்தையும் அமைத்தால், அது வீட்டிற்கு அழகு சேர்ப்பதுடன் அவனிற்கு மன அமைதியையும் மகிழ்ச்சியையும் கொடுக்கின்றது.

வாழ்க்கை வாழ்வதற்கே. இவ்வாழ்வினை இரசித்து வாழ்வதன் மூலம், உங்கள் உள்ளம் மற்றும் உடல் ஆரோக்கியம் பெறுகின்றது. இதனால் மன அமைதி, மற்றும் வீட்டில் மகிழ்ச்சி என்பன உங்களை தேடிவரும்.

karunagopalapillai@thaiveedu.com

■ ■ ■




N.K.S

Drapery & Blinds Fabric LTD

**திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்**

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

**கேதா நடராஜா**

**416.321.6420**

**Ketha Nadarajah**
(President)
**Tel: 416.321.6420, 905.944.0218**
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9





ELECTRICAL - PLUMBING & DRAINAGE SERVICES

SANTHA

416-200-5470

www.santha.ca



416.200.5470

# எரிபொருள் சிக்கனம்



செந்தூரன் புனிதவேல்
- காப்புறுதி முகவர் -

வழமையாக காப்புறுதி, நிதி முதலீடு, ஓய்வூதிய சேமிப்பு பற்றி எல்லாம் எழுதிவந்த நான் இம்முறை காலத்தின் தேவை அறிந்து எரிபொருளில் எப்படி சிக்கனமாய் இருப்பது எனும் விடயம் பற்றி எழுதமுன் வந்துள்ளேன். இன்று எரிபொருட்கள் விலை மலேரியா காய்சல் வந்தவருக்கு மாலையில் சுரம் ஏறுவது போல் ஏறிக்கொண்டே இருக்கிறது. பாரம் பரிய எரிபொருளான பெற்றோலுக்கு மாற்று சக்தியாக டீசல், மின்சக்திவாகனம் எனப்பல வந்தாலும் யதார்த்தமான உண்மை யாதெனில் பெரும்பகுதியான வாகனங்கள் பெற்றோலில் தான் செலுத்தப்படுகிறது. எனவே வேறு எரிபொருள் கண்டுபிடிக்கும்வரை உள்ள எரிபொருள் சிக்கணம் பற்றி பார்ப்போம்.

தற்போது SUV, Pick Up என்று எல்லாம் பெரிய வாகனங்கள் வைத்துள்ளவர்கள் பெற்றோல் பம்பிற்கு முன்னால் நிற்கையில் வீட்டுப்பாடம் செய்யாமல் பள்ளிக்கூடம் வந்த பையன் ஆசிரியர் முன்நின்று முழிப்பது போல் முழிக்கவேண்டியுள்ளது. இவர்கள் கூடிய எரிபொருள் பாவிக்கும் வாகனத்தை பிச்சை வேண்டாம் நாயைப்பிடி என்று கொடுத்துவிட்டு தேவைக்கேற்ற சிறு வாகனம் வாங்குவது தான் முதல் படியாகும்.

அடுத்து எப்படி, இருக்கும் வாகனத்தை சிக்கனமாக செலுத்துவது என்று கவணிப்போம்.

இங்கு சிக்கனமாக எரிபொருள் விரயமாக்குவது என நான் குறிப்பிடுவது வாகனத்தை சீராக செலுத்தி, சிறப்பாக பராமரிப்பதையே குறிப்பிடுகிறேன். இது தோற்றத்திற்கு மிக எழிதான விடயமாக இருப்பினும் எம்மில் எத்தனை பேர் இப்படிச் செய்கிறோம். எல்லோரும் வீதிச்சட்டங்களுக்கு அமைய வாகனத்தை செலுத்துவதுடன் திடீர் என வேகத்தை குறைக்காமலும், திடீர் என வேகத்தை அதிகரிக்காமலும் இருந்தால் விபத்துகள் ஏற்படுவதற்கு சந்தர்ப்பம் ஏது? மேலும், தினசரி செலுத்தும் பாதையை அதிகம் சிகப்பு விளக்கு இல்லாத தெருவாகவும், நெருக்கடி குறைந்த பாதையாகவும் தெரிவு செய்தால் உங்கள் வாகனம் ஒரே அளவு எரிபொருளுக்கு கூடிய தூரம் செல்ல முடியும். இதன் அர்த்தம் நத்தை வேகத்தில் நகர்வதல்ல. ஆனால், சீரான திட்டமிட்டு திறமையாக வாகனத்தை செலுத்துவதே.

இங்கு சில எழிமையான, கடைப்பிடிக்கூடிய வழிவகைகளை நிரைப்படுத்தித் தருகிறேன். அதன்படி செலுத்தி பணத்தை மிச்சம்பிடியுங்கள்.

## வாகனத்தின் எடையைக் குறைப்பது:

வாகனத்தின் எடை, அது நகரும் வேளையில் செய்யும் வேலையை நிர்ணயிக்கும். எடைகூடும் வேளையில் கூடிய வேலை செய்வதால் கூடிய எரிபொருள் பாவிக்க வேண்டி இருக்கும். அதற்காக வாகனத்தின் எடையை குறைப்பதாக மேலதிகமாக உள்ள சில்லை வீட்டில் வைத்துவிட்டு வாகனத்தை செலுத்தவேண்டாம். ஆனால் கடையில் வாங்கிய அரிசி மூட்டை, குளிர்பானம் ஆகியவற்றை வாகனத்தில் கொண்டு திரியவேண்டாம். பொதுவாக குறிப்பிடுவதானால் வேண்டியதல்லாதற்றை வாகனத்திலிருந்து அகற்றி விடுங்கள்.

## சமச்சீராக வாகனத்தை செலுத்துவது:

வாகனங்கள் சமச்சீராக செல்வதிலும் வேகத்தை அதிகரிக்கும் வேளையில் கூடிய எரிபொருள் பாவிக்கும். எனவே அடிக்கடி பிரேக் போடாமல் வாகனத்தைச் செலுத்தப்பழகிக் கொள்வதவசியம். திடீர் என வேகத்தை அதிகரித்து பின் விளக்கு கம்பத்தருகில் பிரேக் போட்டு செலுத்துவதனால் வாகனத்தின் எரிபொருள் விரயம் 37 விகிதத்தினால் அதிகரிக்கப்படுவதாக கணிக்கப்பட்டுள்ளது. அதே வேளை இப்படி வேகத்தைக்கூட்டிக் குறைப்பதனால் மிச்சப்படுத்தும் நேரம் மிகச்சொற்பமானதே என்பதை நினைவில் வைத்துச் வாகத்தை சமச்சீராகச் செலுத்துங்கள்.

## நெடுஞ்சாலைகளில் வேகத்தைக் கட்டுப்படுத்திச் செலுத்துவது:

அமெரிக்க சுற்றாடல் பாதுகாப்புச் சபை (U.S. Enviormental Protection Agency) கணிப்புப்படி 115 கிலோ மீட்டர் மணிக்கு வேகத்திலிருந்து 125 கிலோ மீட்டர் மணிக்கு வேகத்தில் அதிகரித்துச் செல்வதால் 15 விகிதம் அதிகம் எரிபொருள் பாவிக்கப்படுகிறது. அதே போல் 110 கிலோமீட்டர் மணிக்கு வேகத்திலிருந்து 90 கிலோமீட்டர் மணிக்கு வேகத்திற்கு குறைப்பதனால் 15 விகிதம் குறைவாக எரிபொருள் பாவிக்கப்படுகிறது. எனவே நெடுந்தூரப் பயணம் செய்பவர்கள் வாகனத்தில் சராசரி வேகத்தை 90 கிலோமீட்டர் மணிக்கு வைத்திருப்பதனால் பெருமளவு எரிபொருள் மீதம் செய்யலாம். 401 கடுகதிப்பாதையில் ஒட்டாவா மொன்றியோல் என்றெல்லாம் நெடும் பயணம் செய்பவர்கள் கரையிலுள்ள வீதி (First lane) ஆல் தொடர்ந்து பயணித்தால் பெருமளவு எரிபொருளை மீதப்படுத்தி பண விரயத்தை தவிர்ப்பதுடன் விபத்துகள் ஏற்படுவதற்கு சந்தர்ப்பம் இல்லாது செய்யலாம்.

## குளிர் காலத்தில் வாகனத்தை சூடாக வைப்பதற்கு முயலுங்கள்:

எம்மவர்கள் இரண்டு வாகனம் நிறுத்தக் கூடிய கராஜ் உள்ள வீட்டை வாங்கிவிட்டு பனிக்காலத்தில் வெளியே வாகனத்தை நிறுத்தி வைத்துள்ளதை அவதனித்துள்ளேன். உங்கள் வாகனங்களை காராஜில் நிறுத்துவதுடன் கராஜ் கதவை மூடியும் வையுங்கள். இது வாகனத்தை இயக்குவதற்கு குறைந்த எரிபொருள் பாவிப்பதுடன் வாகனத்தின் உள்ப்பக்கத்தை சூடாக்குவதற்கு குறைவான எரிபொருள் பாவிக்கும். இங்கு இன்னுமொரு விடயம் குறிப்பிடவேண்டும். வெளியே நிறுத்தப்பட்டிருக்கும் வாகனத்தில் கொட்டி இருக்கும் பனியை தட்டிவிட மறக்கவேண்டாம். இதுவும் வாகனத்தின் எடையை அதிகரிப்பதானல் கூடிய அளவு எரிபொருள் பாவிக்கப்படும்.

## தரிப்பிடத்தில் வாகனத்தை இயந்திரத்தை ஓடவிடாதீர்கள்:

சில சந்தர்ப்பங்களில் யாருக்காவது காத்து நிற்கும் வேளைகளில் வாகனத்தை தொடர்ந்து இயங்கச்செய்வதனால் எரிபொருளை வீண் விரயம் செய்வீர்கள். கோடைகாலமானால் வாகனத்தை நிறுத்தி விட்டு யன்னல்களை திறந்து வையுங்கள். குளிர்காலமானால் வாகனத்திலிருந்து இறங்கி சற்று சூடுகாட்டப்பட்டுள்ள இடத்தில் தங்கி நில்லுங்கள். சிலர் அரை மணித்தியால் வரை வாகனத்தை ஓட விட்டு காத்திருப்பதை கண்டுள்ளேன். ஒரு வாகனம் ஒரு நிமிடத்துக்குமேல் நிறுத்தி

தொடர்தல் 42ம் பக்கம்





விவாகரத்து வழக்கினால்
குழம்பிப்போனது நான் மட்டுமல்ல
எனது கிறடிட்டும் தான்
எப்படி இதனை மீள
கட்டியெழுப்புவது ?



வீட்டு விலை ஏற்றத்தினை
பயன்படுத்தி அதிகளவு
வட்டி செலுத்தும்
அனைத்து கடன்களையும்
ஒன்றாக்கலாமா?



நீங்கள் சுயதொழில்
புரிபவராக இருந்தாலென்ன
கைக்காசுக்கு உழைப்பவராக
இருந்தாலென்ன, வருமான
முறைக்கேற்ப மோட்கேச் ஒழுங்கு
செய்து தரப்படும்



உறவுகளுக்கிடையில்
வீட்டினை பெயர்மாற்றி
புதிய மோட்கேச்சுக்கு
செல்வதனால்
நன்மையுண்டா ?

rapid realty inc.

THAYA PK KANDIAH BAS, ABR®, AMP
BROKER OF RECORD / PRINCIPAL MORTGAGE BROKER

DIR: (416) 716-8707

Toronto Real Estate Board · REALTOR · MULTIPLE LISTING SERVICE · ABR · OREA



CENTUM
Rapid Mortgages Inc.
LIC# 10156

தயா PK கந்தையா
BROKER OF RECORD / PRINCIPAL MORTGAGE BROKER

www.rapidrealty.ca
www.centumrapid.ca

Real Estate Off:416-259-2002 Mortgage Off:416-644-3555
211-80 Nashdene RD. Toronto ON M1V 5E4 FSCO Broker Lic#M08001083




"உங்கள் எண்ணங்களை அடைகாக்க"



"வீடு வாங்குவதும் விற்பதும் ஒரு வியாபாரமே, என்னிடம்
கிடைப்பது நட்பான சேவை, அதிகமனத்திருப்தி" P.K

# இருபது (நகக்) கண்களையும் கவனியுங்கள்



மஞ்சுளா ராஜலிங்கம்

நம் உடலில், முகத்திற்கு அடுத்தபடியாக மற்றவர்களின் பார்வையில் அதிகம் படுபவை கைகள் தான். கைகளைப் பார்த்தே ஒருவரின் வயதைக்கூட எடைபோட முடியும். சிலருக்கு முகத்தைக் காட்டிலும் கைகளில் அதிகமாக சுருக்கங்களும், முதிர்ச்சியும் தெரியும். முகத்தைப் பராமரிப்பது போல் கைகளைப் பராமரிக்காதது தான் இதற்குக் காரணம். அதிலும் பெண்கள், பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவுவது, சோப்புத் தேய்த்து சில துணிகளை வீட்டிலேயே கையால் துவைப்பது என்று எல்லா வேலைகளுக்குமே கைகளைப் பயன்படுத்துவதால் கைகளின் மிருதுவான தன்மை பாதிக்கப்படுகிறது. இது போதாதென்று மென்மை இழந்து சுருக்கம் விழுந்த கைகளில் சுத்தமில்லாத பிய்ந்துபோன நகங்கள், சிலசமயம் காலை வாரி விட்டுவிடும். விளைவு... சிலருக்கு முகம் முப்பது வயதாகவும், கைகள் நாற்பது வயதாகவும் தோற்றமளிக்கும். இதற்காகக் கவலைப்படத் தேவையில்லை. தினசரி சில நிமிடங்கள் செலவழித்தால் போதும். உங்கள் கைகளும் மினுமினுக்கும்.

## உங்கள் கையும் மினுமினுக்கும்

கடைகளில் கிடைக்கும் ஹாண்ட் க்றீம் அல்லது சன்ஸ்க்றீன் லோஷனைக் கைகளில் தடவி விரல் நுனிவரை சிறுசிறு வட்டவடிவில் மெதுவாக மசாஜ் செய்யுங்கள். இதனால் கைகளில் இரத்த ஓட்டம் சீராவதோடு, சூரியக் கதிர்களால் கைகளில் உண்டாகும் சுருக்கங்களும் மறையும். மசாஜ் செய்த பிறகு சுத்தமான நீரில் கைகளைக் கழுவி விடுங்கள்.

சோப் தண்ணீரில் கைகளைக் கழுவிக் கொண்டு, நெயில் பிரஷ் அல்லது சிறிய சாதாரண பிரஷ் கொண்டு நகங்களிலிருக்கும் அழுக்கையெல்லாம் நீக்கி சுத்தம் செய்யுங்கள்.

அதன்பிறகு நீங்கள் விரும்பும் வடிவத்தில் நகங்களை வடிவமைத்துக் கொள்ளுங்கள்.



பொதுவாக நகத்தின் அடிப்பாகம் எந்த வடிவிலிருக்கிறதோ, அதற்கு ஏற்றது போல மேல்புறத்தை வடிவமைப்பதே நல்லது. பார்ப்பதற்கும் அழகாயிருக்கும்.

## Cuticle

நகங்களைப் பொறுத்தவரை, அடுத்தபடியாக கவனிக்க வேண்டியது 'க்யூட்டிக்கிள்'. நகங்கள் வளர ஆரம்பிக்கும் இடத்திலுள்ள மெல்லிய மேல் தோல்தான் இது. பக்டீரியா தாக்குதலினால் நகங்கள் பாதிக்கப்படாமல், இந்த மேல்தோல் பாதுகாக்கிறது. இந்த மேல்தோலை சரியாகப் பராமரிக்காமல் விட்டால் அவை வறண்டு போய்ப் புண்ணாகி நகத்தையும் பாதிக்கும். இந்தப் பாதிப்பிலிருந்து நகங்களைப் பாதுகாக்க, காதுகுடையும் cotton bud பயன்படுத்தி மேல் தோலை மெதுவாக நகக்கண்ணின் உட்புறம் தள்ளிவிடுங்கள். சுத்தமான துணி



கொண்டு நகங்களைத் துடைத்த பிறகு வெதுவெதுப்பான நீரில் கைகளைக் கழுவுங்கள்.

நகம் அடிக்கடி உடைகிறது என்று கவலைப் படுபவர்கள் கல்சியம் அதிகமுள்ள கீரைகள், பால், மீன், கல்சியம் மாத்திரைகள் போன்றவைகளை தினசரி உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

சிலருக்குத் தங்கள் நகங்களின் நுனி பளிச்சிடும் வெள்ளையாக இல்லையே என்ற வருத்தம் இருக்கும். கவலையே படாதீர்கள். கடைகளில் கிடைக்கும் க்ளியர் பொலிஷை (clear polish) மெல்லிய ஏடாக நகங்களில் தடவிக் கொள்ளுங்கள். அதன் பிறகு வெள்ளைநிற நெயில் பென்சில் கொண்டு நகங்களின் அடிப்பகுதியில் நன்றாகத் தேய்க்கவும். இப்போது உங்கள் நகத்தின் நுனிகள் பளிச்சென்று வெண்மையோடு பளிச்சிடும்.

நெயில் பொலிஷ் உபயோகிக்க விரும்புபவர்கள் எப்போதும் சிறிய பாட்டிலையே வாங்குங்கள். ஃப்ரிட்ஜில் வைத்திருந்து தேவையானபோது மட்டும் எடுத்துப் பயன் படுத்துவது நல்லது. முதலில் க்ளியர் பொலிஷ் போட்டு அது காய்ந்த பிறகு நீங்கள் விரும்பும் நிற பொலிஷை மேலிருந்து கீழாக நகத்தின் நடுப்பாகத்திலிருந்து தடவுங்கள். கொஞ்சநேரம் காயவிட்டு அதன்மீது க்ளியர் டொப் பொலிஷ் போடுங்கள். எக்காரணம் கொண்டும் பொலிஷ் போட்டபிறகு வெயிலில் காயவைக்கக் கூடாது. சீக்கிரம் நகங்களில் பொலிஷ் உலர வேண்டுமானால், நன்கு குளிர்ந்த நீருக்குள் ஒரு நொடி கைகளை மூழ்க வைத்து எடுத்தால் போதும். நன்றாகக் காய்ந்துவிடும்.

manju@thaiveedu.com

■ ■ ■

யாழ் பல்கலைக் கழகத்தில் நாடகமும் அரங்கியலையும் முதன்மைப் பாடமாகக் கொண்டு கலைமானிப்பட்டம் பெற்றவரும், யாழ் நாடக அரங்கக் கல்லூரியின் நாடகங்களான புதியதொரு வீடு, சங்காரம், கூடி விளையாடு பாப்பா, குருஷேத்திரபதேசம், அபசுரம், வெறியாட்டு, சக்தி பிறக்குது, பாரதியின் பாஞ்சாலி சபதம், அவர் ஏன் கலங்குகிறாள், தெய்வப்பாவை, தியாகத்திருமணம் மற்றும் அரியாலை சுதேசிய விழாவின் பல பிரதான நாடகங்களில் பங்கேற்றவருமான

அரியாலையூர் உருத்திரேஸ்வரன்

அவர்களுடன் ஒரு கலந்துரையாடல்



JULY 17

ஞாயிறு மாலை 5:30

இடம் : Agincourt Community RC

31 Glen Watford Dr.

(Sheppard & Midland)


நாடக ஆர்வலர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ப. ஸ்ரீஸ்கந்தன்: 647 588 3179

# வாழ்வின் ஓர் அடையாளம் வீடு...



3 Bedrooms, 3 Washrooms
Must See To Beleive 6 Years Old



2+1 Bedrooms, 2 Washrooms
Walking Distance To Pacific Mall



2+1 Bedrooms, 2 Washrooms
Close To 401,Cent.College

சகல விதமான
படிவங்களும்
நிரப்பிக்
கொடுக்கப்படும்


இரஞ்சன் *or*
செல்வா
416.816.1220



3+2 Bedrooms, 3 Washrooms
Main Floor Totaly Renovated



3 Bedrooms, 2 Washrooms
Close To Shopping Mall



2+1 Bedrooms, 2 Washrooms
Minutes To Hospital & Hwy 401



RED CARPET
Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
Office: 416.284.5555

**RANJAN** FRANCIS XAVIER
Sales Representative
Cell: 416.816.1220

"List your Home with a Professional & Save Money"



Starting From 193,903



Starting From 279,900



Starting From 211,990



Starting From 202,900



Call Krish For More Deatils....

## New Condos with VIP Price

## www.newcondoingta.com

HOMELIFE
HIGHER STANDARDS

Krish Sivapatham
Sales Representative
Direct : 416-895-4457
Indepently Owned and Operated, REALTOR

HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Dr, Markham, ON, L3S 4N7
Bus:905-201-9977 Fax: 905-201-9229

This is not intended to solicit properties Currently under contract/ some conditions may apply

# நீர் விநியோகமும் தொழிற்பாடும்

## நீர் விநியோகமும் தொழிற்பாடும்: (PLUMBING SYSTEM)


**வீடும் விடியலும் - 63**

இம்மாதம், சகலருக்கும் மிக அவசியமான நீர் விநியோகம், அதன் தொழிற்பாடு, சிக்கனமான நீர்ப் பாவனை, செலவைக் கட்டுப் படுத்தக் கூடிய வழி முறைகள், அடிப்படைப் பராமரிப்பு போன்ற விடயங்கள் பற்றிப் பார்க்க இருக்கிறேன்.







தாய் நாட்டில் இலவசமாகப் பெற்ற தண்ணீரை மிகத் தாராளமாகப் பாவித்து பழக்கப்பட்டவர்கள் நாங்கள். ஆனால் வெளி நாடுகளில் தண்ணீர் தொடக்கம் சுத்தமான காற்று வரை ஒன்றும் இலவசம் இல்லை. குறிப்பாக எங்கள் பழக்க வழக்கங்களை இடத்திற்கேற்றவாறு மாற்றாது விட்டால் அதிகளவு சிரமங்களையும் செலவுகளையும் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும். அதிலும் தண்ணீர்ப் பாவனையில் நாம் கவனம் செலுத்தாது விட்டால் அதிகளவு பணத்தை வீணாக விரயம் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

தண்ணீர்ப் பாவனை பற்றி அறிய முதல் எங்கள் வீடுகளில் தண்ணீர் விநியோகமும், அதன் அமைப்பும் எவ்வாறு இருக்கிறது, குழாய்கள் எவ்வாறு பொருத்தப் பட்டிருக்கின்றன என்பனவற்றை தெரிந்து கொள்ளுதல் பல விதத்திலும் நன்மை பயக்கும்.

வீடுகளுக்கு பொதுவாகச் சிறு செப்புக் குழாய்கள் மூலம் தண்ணீர் உட் கொண்டு வரப்படுகின்றது. அதன் ஆரம்பத்தில் ஒரு Shut Off Valve பொருத்தப்பட்டு, அதற்கு அண்மையில் தண்ணீர் அளவுமானி (Water Meter) இணைக்கப்பட்டிருக்கும். வீட்டு உரிமையாளர்கள் அனைவருக்கும் தங்கள் வீட்டில் எங்கு Main Shut Off Valve இருக்கிறது என்பதைத் தெரிந்து வைத்திருத்தல் மிக அவசியமாகும். ஏனெனில் வீட்டில் தண்ணீர் குழாய்களில் திருத்த வேலைகளை காலத்திற்குக் காலம் செய்யும் போதும், அத்துடன் ஏதாவது தண்ணீர் போக்கு ஏற்படும் சந்தர்ப்பங்களிலும் இந்த Main Shut Off Valveஐ தேடி அலைய வேண்டி இருக்கும். படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் அளவில் பெரிதாக இருக்கும் PVC குழாய்கள் மூலம் கழிவு நீரும், மலசலக் கழிவுகளும் வெளியேற்றப்படுகிறது. கறுப்பு நிறத்தில் இருக்கும் இந்தக் குழாய்களை பலரும் அவதானித்திருக்கலாம். இவற்றின் ஒரு பக்கம் வீட்டுக் கூரைக்கு மேல் திறந்த படி விடப் பட்டிருப்பதை அவதானிக்கலாம். கழிவுகள் இலகுவாக வெளியேற காற்றோட்டம் தேவை. இத்தகைய Plumbing Vent (Roof Vents) அடைபடாதவாறு பார்த்துக் கொள்ளல் மிக அவசியமான ஒன்று. Plumbing Vent அடைபட்டால் கழிவு நீர் வெளியேறும் வேகமும் குறைய வாய்ப்பிருக்கிறது. கழிவு நீர் அகற்றும் குழாய் (Sewer Main). வீட்டில் இருந்து தெருவோரமாக வெளி நோக்கிச் செல்வதைப் படத்தில் அவதானிக்கலாம்.

### கழிவு நீர் வெளியேற்றம்:

பொதுவாக கழிவு நீர் கறுப்புநிற PVC குழாய்களின் ஊடாக வெளியேறுகிறது என்று பார்த்தோம். சற்று விளக்கமாகக் கூறுவதானால் வீட்டில் உள்ள கழிவு நீரை அகற்றுவதற்கு எந்த வித இயந்திரங்களோ அல்லது WATER PUMP பாவிக்கப் படுவதில்லை. இயற்கையாக உள்ள புவியீர்ப்பு (GRAVITY) தத்துவத்தை அடிப்படையாக வைத்தே கழிவு நீர் வெளியேற்றம் செயற்படுத்தப் படுகிறது. ஆதலால் இக் குழாய்கள் சிறு சரிவாகப் பொருத்தப்பட்டிருப்பதை அவதானிக்க முடியும். வீட்டில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் வீட்டுத் தெருவோரம் உள்ள பாரிய கழிவுக் குழாய்களில் சேர்க்கப்பட்டு பின்னர் வெளியேற்றப்படுகிறது. புவியீர்ப்பை மையமாக வைத்து இயக்கப் படுவதாலேயே வீட்டுக் கூரைக்கு மேல் இருக்கும் Plumping Vent இன் அவசியம் முக்கியத்துவம் பெறுகின்றது. அதாவது இதன் ஊடாக உள்ளெடுக்கப்படும் காற்றோட்டம், சீரான கழிவு நீர் வெளியேற்றத்திற்கு மிகவும் இன்றியமையாதது. பொதுவாக பறவைகள் கூடுகட்டுவதனாலும், மர இலைகள் இதன் மேல் உதிர்வதனாலும் Pluming Vents அடைபட வாய்ப்பு இருக்கிறது.



**வேலா சுப்ரமணியம்**
- Certified Home Inspector -

அபிவிருத்தியடையாத கிராமப் பகுதிகளில் கழிவு நீர் வீட்டுக்கு வெளியே உள்ள பொதுக்குழாய்கள் மூலம் அகற்றப்படுவதில்லை. அங்குள்ளது Septic System என்று அழைக்கப்படும். அது பற்றி பிறிதொரு அத்தியாயத்தில் ஆராயப்படும்.

கழிவு நீர் வெளியேற்றப் படும் போது U வடிவத்திலுள்ள ஒரு பொறியின் ஊடாகவே வெளியேற்றப்படுகிறது. இதற்கு 'P' Trap என்றும் ஒரு பெயர் உண்டு.

வீட்டில் உள்ள பல பாகங்களை நாம் கண்டு கொள்வதில்லை, அல்லது அவற்றைப் பற்றிச் சிந்திப்பதில்லை அல்லது அவற்றைப் பற்றிக் கவலைப் படுவதில்லை, ஏதாவது பிரச்சினை வருமட்டும். பிரச்சினை என்று வந்தவுடன் தான் எதிலும் கவனம் செலுத்துகிறோம். இது பொதுவான இயல்பு. இருந்தாலும் இக் கட்டுரைகளின் மூலம் நாம் சில அறிவை வளர்த்துக் கொண்டால் பிரச்சினைகளை இலகுவில் இனங்கண்டு, அதற்கான தீர்வுகளையும் இலகுவாகக் காண முடியும் என்பதே எனது நோக்கமாகும்.

'P'Trap பார்ப்பதற்கு வடிவுக்கு போடப்பட்டிருப்பது போல் இருந்தாலும் அதில் மிக முக்கிய தொழிற்பாடு தங்கியிருக்கின்றது. அதாவது கழிவுக் கிடங்கில் இருந்து வரக் கூடிய துர்நாற்றத்தை வீட்டுக்குள் உட்புக விடாது தடுக்கும் ஒரு நல்ல பணியை இது செய்கின்றது. புதிய கழிவு நீரை உள் வாங்கி பழைய கழிவு நீரை வெளியேற்றிக் கொண்டிருக்கும் 'P'Trapஇல் எப்போதும் தண்ணீர் தேங்கி நின்று Sewer Gaz உள் வராதபடி தடுத்துக்கொள்ளும். 'P'Trapஇன் அவசியத்தையோ, அல்லது அதன் தொழிற்பாட்டின் முக்கியத்துவத்தையோ அறியாதவர்கள், தாமாக சில திருத்த வேலைகள் (Handy Man Job) செய்யும் போது இவற்றை அகற்றி விட நேரிட்டால், வீடு நாறிப் போய் விடும் என்பதை மனதில் வைத்துக்கொள்ளவும். சில பகுதியில் உள்ள நீர் தொட்டிகளை தொடர்ச்சியாக சில காலம் பாவிக்காமல் விட்டால் அங்கு துர்நாற்றம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. காரணம் 'P'Trapல் தடுக்கப் பட்டிருக்கும் தண்ணீர் உஸ்ணத்தால் வற்றி விட்டால் அதனூடாக துர்நாற்றம் வீட்டிற்குள் பிரவேசித்து விடும். எனவே பாவனையற்ற பகுதிகளால் கூட புதிதாக பிரச்சினைகள் வீடு தேடி வரும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவும்.

velasubramaniam@thaiveedu.com

■ ■ ■

**தமிழ் நிகழ்வுகளின் சங்கமம்**

inayam



- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்,

**inayam.net** மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே **inayam.net**இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது. இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே **www.inayam.net** முயற்சி செய்யுங்கள்!

**முற்றிலும் இலவசம்**

**www.inayam.net**

info@inayam.net 416.400.6.406

**Home Inspection**

• Purchase & sale Inspection, • Problem solving Inspection, • New home – Warranty inspection

Optimal Home Inspection Services

**Vela Subramaniam**

Certified Home Inspector

**416-786-0760**
**416-299-0700**

**E-Mail: homeinspectorvela@gmail.com**



**www.inayam.net**


THE YARDS
Bathurst & Fort York
28 Storeys high
6 Storey podium
Price are from the Low $190'S
That's right it's BELOW $460/sf
Closing Date: June 2014
3% Discount on all the VIP Clients
FREE ASSIGNMENT
HST INCLUDED
CAPPED LEVIES at $3,500
Extended Deposit with only $25,000 for Parking
Less than 5 Minutes distance from any direction from the Canada's famous
CN Tower
ROGERS Centre
Air Canada Centre
CNE (Exhibition Place)
Toronto City Airport
and Much more....
SUJAN SHAN .com
Real Estate Broker 416.402.1040
www.NewReleaseCondo.com



Buying Or Selling
Residential, Commercial, Land & Investment Properties
Rossland/Westney $329,900
Rooms 7+2, Bedrooms 3+1, Washrooms 3
Markham/Eglinton $369,999
Rooms 7, Bedrooms 3, Washrooms 3
Morningside/Finch $449,900
Rooms 8+3, Bedrooms 4+1, Washrooms 4
Brimley/Denison $479,900
Rooms 6+1, Bedrooms 3+1, Washrooms 3
Ninth Lane/ Hoover Park $499,900
Rooms 9, Bedrooms 3, Washrooms 3
Mccowan/14th Ave $649,000
Rooms 8, Bedrooms 4, Washrooms 4
Mccowan / Steels $234,900
Rooms 6, Bedrooms 2+1, Washrooms 2
Mccowan/Sheppard $237,500
Rooms 6, Bedrooms 3, Washrooms 2
Mccowan/Hwy $279,900
Rooms 6, Bedrooms 3, Washrooms 2
Jarvis/Wellesley $299,000
Rooms 4, Bedrooms 1, Washrooms 1
Mccowan/Ellesmere $344,900
Rooms 5, Bedrooms 2, Washrooms 2
Warden/Finch $355,000
Rooms 7+2, Bedrooms 4+1, Washrooms 2
HOMELIFE HIGHER STANDARDS
Sathy Sivasubramaniam Sales Representative
2004/2005 Silver Award
2006/2009 Platinum Club Award
2010 Chairman Club Award
Top 5% Sales Representative in Canada 2010
For Sellers:
Free Market Evaluation Available
Competitive commission Packages available
Will pay for Staging & Consultation
Will pay for the Professional Photographer
Virtual Tour
Color Brochure
Will do open house until house get sold.
Will market your home with social medias
For Buyers
Will find the home in any area within your budget
Get you the lowest mtg. rate
1 Year Home Warranty Available for Limited Time
Preferred pricing on Furniture, Appliances & Electronics through "The Brick" up to 35% off
HomeLife/Future Realty
205-7 Eastvale Drive, Markham, Ont L3S-4N8
Office: 905-201-9977 / Fax: 905-201-9229 / Direct: 416-624-5044 E-mail-homelifesathy@gmail.com www.homelifesathy.com

# சகல ரோக நிவாரணி
# பிராண ஜீவ




மூவாயிரமாண்டுகளுக்கு மேலான ஆயுர்வேத பாராம்பரியத்தில் நவீன முறையில் தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத மூலிகை ஊட்டச்சத்து ஔடதம்

- 200 ற்கும் மேற்பட்ட மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்டது
- உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது
- உடலின் நச்சுத்தன்மையை நீக்கி புத்துணர்வை ஊட்டுகிறது
- அமெரிக்க FDA (Food and Drug Administration) இனால் அங்கீகரிக்கப்பட்டது

## பேரழிவினைக் கொண்டுவரும் நீரழிவு நோயினை இரண்டே இரண்டு மாதங்களில் முற்றும் முழுதாக கட்டுப்படுத்த முடியும்!




**டயபீனா** தினமும் அருந்தக்கூடிய மூலிகை ஆரோக்கிய பானம். இது உடலில் மிகுதியான குழுக்கோசினை குறைக்கக்கூடியதும், இரத்தத்திலுள்ள அதிகளவு குழுக்கோசினால் ஏற்படக்கூடிய நோய்களை ஒழுங்கு முறையாக தடுக்கவும் உதவுகிறது. விறைப்புத்தன்மை, பாதங்களில் சுளுக்கு, அலட்சியத் தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் வியாதிகளை படிப்படியாக நீக்கிவிடக் கூடியது. டயபீனா கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.

## ஊமைச் சதை பெருகுவதை தடுக்கிறது! வாத வலியை நீக்குகிறது! உடலுக்கு புதுத்தென்பைக் கொடுக்கிறது!




**க்லூாட்டியலா** பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், குறிப்பாக உடலின் இடுப்பு, தொடை, தோற்பட்டை, கைகள் போன்ற பகுதிகளில் ஏற்படக்கூடிய ஊமைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும், உடல் வலியை நீக்கவும், அத்துடன் வாதத்தினால் ஏற்படக்கூடிய வலியினை குறைக்கவும் உதவுகிறது. க்லூாட்டியா உடலுக்கு புதுத்தெம்பைக் கொடுப்பதோடு நீண்ட சுகமான வாழ்விற்கும் வழிவகுக்கிறது.

## The EVERMATIN HAIR LOTION™




உங்கள் முடியுதிர்வை தடுக்கவும் மீண்டும் தலைமுடி வளரவும் எவமார்டின் மூலிகை ஔடதம்! உலகெங்கிலும் பல்லாயிரக்கணக்கானவரின் பாராட்டுதலைப் பெற்ற மூலிகைத் தயாரிப்பு இது. இப்போது எவமாட்டின் சாம்பூவும் கிடைக்கிறது.




## இயற்கை மூலிகையிலான தலைமுடி மை

மருதாணி கொண்டு செய்யப்படும் இவ் முடி மை உங்கள் கேசத்தை நன்கு பராமரிக்கிறது.

Amazon Health Care

SABONA & Gift

இப்போது இங்கிலாந்து மற்றும் ஐரோப்பா நாடுகளிலும் எமது தயாரிப்புகளை பெற்றுக்கொள்ளலாம்.
www.amazonhealthcare.co.uk



Tel: 416-264-8787
www.amazonhealthcare.ca
2602 Eglinton Ave,. East. (@Midland)

JayaCS - 416-275-0070

# கடன்தொல்லை?




- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## SRI
## CREDIT SOLUTION CENTRE

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ்
இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



digi

# CPP வலுவளர் ஓய்வூதியத்திட்டமும் நன்மைகளும்

**கனடிய CPP வலுவளர் ஓய்வூதியத் திட்டமும் அதனோடு தொடர்புடைய அவர்களுக்கான நன்மைகளும்:**

கடந்த மாதத் 'தாய்வீடு' இதழில் கூறியது போல இம்மாதமும் கனடிய CPP வலுவளர் ஓய்வூதியத் கொடுப்பனவுகளையும் அவற்றின் நன்மைகளையும் பற்றி விபரமாகப் பார்ப்போம்.

## வலுவளர்களின் நன்மைகள் பற்றிய பொதுவான சுருக்கமான விளக்கம்:

நான் முன்னைய இதழ்களில் கூறியது போன்று கனடிய வலுவளரினர் கனடிய மாகாண, மாநில, மத்திய அரசுகளால் நல்ல முறையில் திட்டமிட்டு அமுல்படுத்தப்படுகின்ற பல் வேறுபட்ட பொதுநலக் கொடுப்பனவுகளுக்கும் அதனோடு ஒட்டிய நன்மைகளுக்கும் தகுதியுடையவராகின்றார்.

இவ்வாறு வலுவளர் பொது நலத்திட்டங்களை நல்ல முறையில் திட்டமிட்டு அமுல்படுத்து-வதிலும் அவர்களது நலன்களைப் பேணுவதிலும் ஏனைய மேற்குலக நாடுகளோடு ஒப்பிடுகையில் கனடா முதலிடத்தை வகிக்கின்றது. சுருங்கக்கூறின் வலுவளர்களுக்கு கனடா ஒரு சொர்க்க பூமியாக அமைந்துள்ளது. கனடாவின் Social Security System பல வலுவளர்களின் பாராட்டை பெற்றதோடு மட்டுமல்லாமல் பராட்டைபெற்று வருவதையும் நாம் அறிவோம்.

இன்று கனடாவின் சனத்தொகையில் ஏறக்குறைய ஒரு வீதத்திற்கு மேற்பட்டோர் வலுவளர் நிலையைக் கொண்டு வாழ்ந்து வருவதாகக் Service Canada புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. சுருங்கக்கூறின், எட்டில் ஒரு கனடியர் உடல் ரீதியாகவோ, உளவியல் ரீதியாகவோ பாதிப்புக்களுக்களாகியுள்ளனர். இவர்களுக்கான கனடிய மாகாண, மாநில, மத்திய அரசுகளின் சமூக நலக்கொடுப்பனவு-கள், நன்மைகள் பற்றியும் அவை எங்கெங்கே இவ்வரசுகளின் சமூக சேவை நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்றன, அவற்றை எவ்வாறு சிரமமின்றி பெறுவது போன்ற சகல தகவல்களையும் Service Canada வின் Services for People with Disabilities Guide to Government of Canada Services for People with Disabilities and their Families என்னும் தகவல்த்திரட்டில் வாசகர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

Government of Canada Disability Programs and Services என்னும் தகவல் திரட்டிலிருந்து ஒரு சில முக்கியமானவற்றை வாசகர்களின் நன்மை கருதி கீழே தருகின்றேன்.

**Service Canada**
**1-800-622-6232**
**www.servicecanada.gc.ca**
**www.canadabenefits.gc.ca**

**Canada Pension Plan Disability Benefits**
**1-800-277-9914 (English)**
**www.hrsdc.gc.ca**

**Employment Sickness Benefits**
**1-800-206-7218 or 1-800-529-3742**
**www.hrsdc.gc.ca**

**Veterans Affairs Canada**
**1-866-522-2122 (English)**
**www.vac_acc.gc.ca**

**Opportunities Fund for Person with Disabilities**
**1-800-622-6232 or 1-800-926-9105**
**www.hrsdc.gc.ca/ash/gateway.ash**

**Canada Revenue Agency Disability Tax Credits**
**1-800-959-8281 or 1-800-665-0354**
**www.cra_arc.gc.ca**

**Ontario Government Disability Programs and Services Ontario Ministry of Community and Social Services**
**www.cfcs.gov.on.ca**
**www.mcss.gov.on.ca/mcss/english/resources/forms.**

**Ontario Works**
**1-888-789-4199 or 1-800-389-5559**
**www.mcss.gov.on.ca**

**Ontario Disability Support Program (ODSP)**
**1-800-267-8097 or 1-800-387-5559**
**www.mcss.gov.ca**

**Ontario Minstry of Health Drug Benefit Plan**
**1-800-572-5386 or 1-800-387-5559**
**www.health.gov.on.ca**

**Ontario Workplace Safety and Insurance Board**
**1-800-387-0750**
**www.wslbion.ca**

மேலதிக விபரங்களை மேலேகூறிய தகவற் திரட்டில் வாசகர் பெற்றுக்கொள்ளலாம். இனி இக்கட்டுரையின் பிரதான அம்சமான CPP வலுவளர் ஓய்வூதியத்திட்டம் பற்றிய விபரத்திற்குவருவோம்.

## CPP வலுவளர் ஓய்வூதியத் திட்டமென்றாலென்ன?

CPP disability என்பது கனடிய ஓய்வூதியத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். இத்திட்டம் கனடிய தொழிற்சந்தையில் ஈடுபடுமொருவர் கட்டாயமாக CPP ஓய்வூதியத்திட்டத்தில் பங்களிப்புச் செய்ய வற்புறுத்தப்படுகிறார். அவ்வாறு கனடிய தொழிற்சந்தையில் ஈடுபட்ட ஒருவர் அதாவது தொழிலில் இருக்கும் போது CPPக்கு பங்களிப்புச் செய்யும் போது வலுவளரானால் அவருக்கு Human Resource and Skills Development Canada (HRSDC) வின் சார்பாக Service Canadaவினால் அமுல்படுத்தப்படும் திட்டமாகும். இத்தொ-ழிற்சந்தையில் ஈடுபட்ட ஒருவர் தொழிலில் இருக்கும்போது வலுவளரானால் பெறும் மாதாந்த நிதியுதவியே இந்த CPP disability நிதியுதவிக் கொடுப்பனவுத் திட்டமாகும். இத்திட்டத்திற்கு ஒருவர் தகுதியுடையவராவதற்கு அவர் Service Canada மூலம் விண்ணப்பிக்க வேண்டும். இதுவும் நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் தானாக வந்தடையாது.

## CPP வலுவளர் திட்டத்திற்குத் தகுதியுடையவர் யார்?

இத்திட்டத்தில் பங்குபெறுவதற்கு ஒருவர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

- ஒருவர் 65 வயத்திற்குட்பட்டவராகவிருத்தல் வேண்டும்.
- நீங்கள் குறைந்தபட்ச போதிய Earnings ஐ கொண்டிருத்தல் வேண்டும். (கடந்த 6 வருடகாலத்தில் ஆகக்குறைந்தது 4 வருடங்களாவது CPP திட்டத்திற்கு பங்க-ளிப்புச் செய்திருத்தல் வேண்டும்.)
- ஆகக்குறைந்தது 25 வருடகால CPP பங்காளிப்பில் ஆகக்குறைந்தது கடந்த 6 வருடகாலத்தில் குறைந்தது 3 வருடங்க-ளாவது CPPக்குப் பங்களிப்புச் செய்தி-ருத்தல் வேண்டும்.

மேற்கூறிய நிபந்தனைகளோடு நீங்கள் Severe and Prolonged Medical Conditionஐ கொண்டிருத்தல் வேண்டும். CPP disability விண்ணப்பதார்கள் இவ்விரண்டு நிபந்தனை-களுக்கும் உட்படாவிட்டால் அவர்கள் உங்-களுடைய விண்ணப்பங்களை எந்தவித தயவு தாட்சனியமுமின்றி நிராகரித்து விடுவார்கள். உங்களது குடும்ப வைத்தியர் மூலமோ அல்லது யாராவது உங்களது விண்ணப்பங்களை பூர்த்தி செய்யும் தகுதியானவர்கள் மூலமோ மேற்கூறிய இரண்டு physical/ Mental நிபந்தனைகளையும் அதாவது Severe and Prolonged Medical Conditionsக்கு சரிவர நிரூபிக்காது விட்டால் உங்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இவ்வலுவளர் மருத்துவ நிலைமைகள் உங்களது நாளாந்த வேலைகளைத் தொழிற்சந்தையில் செய்ய விடாமல் தடுப்பதாக தகுதியுள்ள மருத்து-வர்களால் / உளவியலாளர்களால் நீங்கள் உங்களை நிரூபிக்காவிட்டால் நிச்சயமாக Service Canada மருத்துவர்களால் உங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். சுருங்கக்கூறின், உங்களது வலுவளர் மருத்துவ நிலைமை மேற்கூறிய இரண்டு நிபந்தனைகளையும் உங்களது மருத்துவர்களாலோ அல்லது உளவியலாளர்களோ நிரூபிக்காவிட்டால் உங்களது CPP disability விண்ணப்பம் அங்கீகரிக்கப்படமாட்டாது. இம்மருத்துவ நிலமை உங்களது வழமையான முழுநேர வேலையையோ அல்லது பகுதிநேர வேலையையோ அல்லது பருவகால வேலையையோ செய்யவிடாமல் தடுப்பதாக physical/mental தடுப்பதாக நிரூபிக்க வேண்டும்.


ஆ.க. ஆனந்தநாதன்

## CPP வலுவளர் விண்ணப்பம் 3 படிநிலைகளைக்கொண்டது:

- விண்ணப்ப படிவம் CPP Disability Application Forms
- உங்களது சொந்த விபரங்கள் அடங்கிய வினாக்கொத்து Questionn atre.
- வைத்தியருக்கான, உளவியலாளருக்கான விண்ணப்படிவம்.

## Medical Report Form:

- உங்களது சொந்தத் தகவல்களைப் பெறுவதற்கான அனுமதிப்பத்திரம் Consent Form.
- உங்களுடன் தங்கியுள்ள பிள்ளைகளுக்கான நன்மைகளைக் கொண்ட விண்ணப்பப்படிவங்கள் (Child Rearing Provision, Survivor, Death Benefits Forms0.

இவை பற்றிய மேலதிக விபரங்களை உங்-களுக்கு அண்மையிலுள்ள Service Canada கிளைகளிலும் அல்லது அவர்களது இணையத்திலும் அல்லது அவர்களைத் தொலைபேசி மூலம்தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வாறு மேற்கூறிய சகலவிண்ணப்பப் படிவங்களையும் நீங்கள் சரியாகவும் தெளிவாகவும் பூர்த்தி செய்து
**Service Canada CPP Benefits,**
**P.O. Box 2020,**
**STN Main Chatham, ON N7M 6B2**

என்னும் முகவரிக்கு அனுப்பினால் அவர்கள் நான்கு மாதங்களின் பின்பே உங்களது CPP disability விண்ணப்பத்திற்கான பதிலை அனுப்புவார்கள். இது அவர்களுடைய சாராசரி பதில்போடும் காலமாகும்.

முக்கிய குறிப்பென்னவெனில் CPP வலுவளர் மருத்துவ விண்ணப்பங்களை ஆராய்பவர்கள் CPP சட்டத்தைப் பற்றி விசேட பயிற்சி பெற்ற மருத்துவர்கள். Service Canadaவினால் நியமிக்கப்பட்ட Medical Adjudictiors உங்களது விண்ணப்பங்களை நிராகரிக்கும் பட்சத்தில் உங்களுக்கு அண்மையிலுள்ள சமூக நலச் (Community Legal Service) சட்டத்தரணிகள் மூலம் / அல்லது அவர்களது சட்ட ஆலோ-சனைகளோடு (இலவசசேவையைப் பெற்று) Service Canadaவின் பாதகமாக முடிவை மாற்றியமைக்க எத்தனிக்கலாம்.

ananthanathan@thaiveedu.com

■ ■ ■

cammtac Business Services Inc.
MORTGAGE | MUTUAL FUND | TAX | ACCOUNTING | CONSULTING
Krish Tharmarajah
Management Consultant
1200 Markham Road, Unit 428
Scarborough, ON.
M1H 3C3
Tel: 416.431.0202
Fax: 416.431.3943
kananthan2003@hotmail.com
A.K. Ananthanathan, M.A., M.S.W., R.S.W.
Registered Social Worker With OCSWSSW
MVA SOCIAL WORKER/ASSESSOR
CPP and OAS Application Process.
• CPP Disability Pension • Provincial ODSP & OW
• RDSP Tax Credit Certificate
வலுவளருக்கான உடல், உளநலப்பாதிப்பு மதிப்பீடு
சமுகநலக் கொடுப்பனவுகள்
சகல விண்ணப்பப் படிவங்களும் பூர்த்தி செய்து கொடுக்கப்படும்.

# இன்ப வாழ்விற்கான சில வழிகள்...



சிவவதனி
பிரபாகரன்

இந்த உலகில் பிறக்கும் அத்தனை மனிதர்களுமே இயற்கையின் படைப்பின் அற்புதங்கள். ஒவ்வொரு மனிதனுள்ளும் அளப்பரிய ஆளுமையும் ஆற்றல்களும் உண்டு. அடுத்தவர்களுக்கு முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டக்கூடிய வல்லமையும் உண்டு. ஆனால் பொதுவாக மனிதர்களின் முயற்சிகள் அவர்களின் முழுமைச் சத்தியைப் பயன்படுத்தி வெளிவருவதில்லை. அங்ஙனம் உள்ளக சக்தியின் முழுமையையும் பயன்படுத்தி சாதனைகள் படைத்தவர்கள் வரலாற்றில் நிரந்தரமானவர்களாக நிலைத்து நிற்பதைக் காணலாம்.

முயற்சிகள் சிறு துளியேயானாலும் மாற்றங்களை உண்டுபண்ண வல்லவை. சற்றேனும் முயலாதிருப்பதை விட சிறுகவேனும் முயன்று முதலடியை எடுத்துவைப்பதே அவசியமானது. உங்கள் பயணத்தை வகுக்கும் உரிமை உங்களுக்கு மட்டுமே உண்டு. உங்கள் வாழ்வை ஒருபோதுமே அடுத்தவர் வகுக்க இடம் கொடாதீர்கள். உங்கள் மனதிற்குப் பிடித்த பாதையில் நீங்கள் நடவுங்கள். சிலர் உங்களை மற்றவர்கள் ஏளனமாக பார்த்து சிரிக்கக்கூடும். அடுத்தவர்களுக்குப் பயந்து உங்கள் மனம் விரும்பி ஆரம்பித்த இலட்சியப் பயணத்தை ஒருபோதுமே கைவிடாதீர்கள். உங்கள் பாதையில் தன்னலமற்ற நல்ல தெளிவான இலட்சியம் இருக்குமாயின் உங்கள் பயணம் உறுதியான உங்கள் காலடிகளைக் கொண்டிருக்குமாயின் நிச்சயமாய் நீங்கள் உங்கள் இலக்கினை என்றோ ஒரு நாள் சென்றடைவீர்கள். அது மட்டுமன்றி உங்கள் வெற்றியைப் பார்த்து உங்கள் பாதையில் உங்கள் பயணத்தை பின் தொடர நாளை உங்கள் பின்னால் பலர் வருவதையும் காண்பீர்கள்.

மலைபோல் துன்பம் வந்தாலும் தளராது எதிர்கொள்ளக் கற்றுக் கொள்ளுங்கள். நெஞ்சில் துணிவிருந்தால் சுட்டுவிரலாலேயே எதிரே உருண்டு வரும் பாரிய மலைப்பாறைகளையும் தொட்டு நிறுத்தலாம். முயற்சிக்கு மூச்சு சோர்வின்மையாகும்.

அச்சம் மடமையின் உச்சநிலை. அடுத்தவர்கள் எம்மை அற்பப்புழுவைப் போல் ஏளனமாகப் பார்க்க வைக்கும் உணர்வு அச்சவுணர்வு. அச்சம் கொண்டோமானால் நாம் மிகச்சிறியவராய் அடுத்தவர் பார்வையில் தெரிவோம். அச்சம் உங்கள் பின்னால் துரத்தினால் பயந்து ஓடாதீர்கள். துணிந்து எதிர்கொண்டு நிமிர்ந்து நில்லுங்கள். அச்சவுணர்வை உங்கள் துணிச்சலால் அஞ்ச வைத்து துரத்தியடியுங்கள். உங்கள் விலை மதிக்கமுடியாத வாழ்வை ஒருபோதுமே அச்சத்திற்கு இரையாக்காதீர்கள்.

வாழ்வில் நாம் ஓயாமல் ஒடிக்கொண்டிருக்க வேண்டும். தடைகள் பல எதிரில் வரலாம். சோர்வின்றி வாழ்க்கைக் களத்தில் குதித்து போராடவேண்டும். வாழ்வை போராட்டமாக பார்ப்பதை விடுத்து விளையாட்டுப் பந்தயமாக எண்ணப் பழகுவோமேயானால் அதன் வெற்றி தோல்விகள் எம்மை பெரிதும் பாதிக்கமாட்டா.

வாழ்வில் சவால்கள் சரமாரியாக வரலாம். தைரியமாக அவற்றை எதிர்கொள்ளுங்கள். நேர்முகச்சிந்தனைகளால் வாழ்வை மகிழ்ச்சிப்படுத்துங்கள். நாம் எதை நினைக்கின்றோமோ அதுவாகவே மாறுகின்றோம். எதை அடைய விரும்புகிறோமோ அதை நோக்கி நினைவொழியாத் தவம் செய்தால் நிச்சயமாய் அதைப் பெறுகின்றோம்.

> “ இருள் என்பது ஒளிக்கான எதிர்ச் சொல் அல்ல
>
> ஒளி இல்லாத இடமே இருள்.
>
> ஒளியைத் தேடாமல் இருளில் உழன்றுகொண்டிருந்து
>
> வாழ்வை இருட்டு எனக் குறை கூறி எண்ணி
>
> வருந்துவதை விட்டுத்தள்ளுங்கள். ”

வாழ்வில் கனவு காணுங்கள். காணும் கனவையும் பெரிதாகவே காணுங்கள். வானத்தை தொட நினைத்தால் தான் முகில்களையாவது எட்டுவீர்கள். உங்கள் கனவுகளை உதாசீனப் படுத்தாதீர்கள். நீங்கள் கண்ட கனவை மனதால் உணருங்கள். அதனை உளமார நம்புங்கள். அதனை அடைய அயராமல் உழையுங்கள். உங்கள் கனவுகள் எதுவானாலும் அதை நாடிச் செல்லுங்கள். உங்கள் பயணம் நிச்சயம் இன்னொருவரை உங்கள் பாதையில் பயணிக்க வைக்கும். நம்பிக்கையின் சக்தியே வெற்றியின் இரகசியம் “என் பின்னால் அளப்பரிய சக்தி ஒன்று இருக்கின்றது. என் முன்னால் முடிவில்லாத சாத்தியக் கூறுகள் உள்ளன. என்னைச் சுற்றி கட்டிலடங்கா வாய்ப்புகள் உள்ளன. நான் ஏன் அஞ்ச வேண்டும்?” என நம்பிக்கையுடன் எதிர் கேள்வி கேட்டு போராடுங்கள். அழகுணர்வோடு வாழுங்கள். அலையலையாய் எழும் அழகுணர்வுகள் நிறுத்தமுடியாத உந்து சக்தியாக உருமாறுகின்றன.

உங்கள் விழிகளை உலகில் உள்ள பலவும் கவரக்கூடும். ஆனால் இதயங்களைக் கவர்பவை மிகச் சிலவே. அவற்றை உள்வாங்கிக் கொள்ளுங்கள். அறிவு தேடல் என்பது மலையில் ஏறுவது போன்றது. எவ்வளவு உயரமாக ஏறிச் செல்கின்றோமோ அவ்வளவுக்கு பரந்த உலகை விழி விரித்துப் பார்க்கலாம். கற்பனைகள் அழகானவை. அவற்றை பயன்படுத்துங்கள். கனவு காண்பதில் தவறில்லை.

கனவு காணாமல் உலகில் சாதனைகள் எதுவுமே நடப்பதில்லை. இலக்குகள் வாழ்தலிற்கான உந்து சக்தி. யதார்த்தத்திற்கு ஒத்துப்போகும் இலக்குகளை உணர்ந்துக் கொள்ளுங்கள்.

வாழ்வில் அங்குலம் அங்குலமாக வலிகள் நீண்டு இருக்கலாம். அடிக்கு அடி கடினமான ஏற்ற இறக்கங்கள் இருக்கலாம். ஆனால் எந்த நிலையிலும் இலக்கு இருப்பது அவசியம். இலக்கில்லாத வாழ்வு முகவரி இல்லாத பயணம் போன்றது.

உங்களிடம் ஒரு சிறப்புதிறன் இருக்குமானால் உங்களை அதற்கு அர்ப்பணிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். ஒருவரின் வாழ்வின் தரம் என்பது அவரது சிறப்புத்திறனிற்கான அர்ப்பணிப்பிற்கு நேர் விகித சமனாக அமைகின்றது. பிடித்த இயல்தகைமையுடைய துறைகளைத் தேர்ந்தெடுத்து அதில் சிறப்புத் தேர்ச்சி பெறுவதே வெற்றிக்கான சிறந்த வழியாகும்.
ஞானம் என்பது சரியான பாதையை தேர்ந்தெடுக்க உதவும் அறிவு. ஞானத்தை பெற பல உலைக்களங்களினூடு பயணிக்க வேண்டி வரலாம். ஆபத்துக்களை கடக்காமல் சாதிக்க முடியாது. ஆபத்தைக் கண்டு அஞ்சி எடுத்த கருமங்களை இடைநடுவில் கைவிடலாகாது. ஆபத்துக்கு அஞ்சி முயற்சிகளைக் கைவிடுபவன் கோழை மட்டுமல்ல... முட்டாளும் கூட. சோம்பேறிகளை மட்டுமே சோர்வு ஒட்டிக் கொள்கின்றது. மனிதனின் அயராத முயற்சிகளால் கண்டங்களும் கடல்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நடுக்கடல் பற்றி அறிய வேண்டுமானால் கரையைச் சில காலமேனும் பிரிந்திருக்க வேண்டும். ஓடும் நீரையே நதி என்கின்றோம்... ஓடாது நிற்கும் நதி சாக்காடையாகின்றது.

வாழ்க்கை என்பது ஒரு வழிப் பாதை. தேடல்கள் நிறைந்த நெடுவழிப்பயணம். தேடல்களின்போது எந்நிலை வரினும் ஒழுங்குமுறை கடைப்பிடிக்கப்படுவது மிக மிக அவசியமாகும்.

நீங்கள் பள்ளத்திலிருந்தால் உங்கள் கால்கள் சிகரம் அடையும் வரை ஓயாது மேல் நோக்கி ஏறிச் செல்ல வேண்டும். நீங்கள் உயரத்தில் இருந்தால் அடுத்தவரையும் உயர்த்திவிட உங்கள் கரங்கள் நீளட்டும். வாழ்வில் அடுத்தவர் மீது அக்கறை கொள்ளுங்கள். அடுத்தவர் மீது அன்பாயிருங்கள். அடுத்தவர்கள் ஏதேனும் நன்மைகள் செய்தால் தட்டிக் கொடுத்து ஊக்குவியுங்கள். மனமாரப் பாராட்டுங்கள். பாராட்டுவதால் உங்கள் இருவரின் இதயங்களையும் குளிர்விக்கின்றீர்கள்.

நீங்கள் நன்மைக்கு முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டுகையில் உங்கள் அடியொற்றி வரும் இதர சோடி பாதங்கள் பல உங்கள் பின்னால் வருவதைக் காண்பீர்கள்.

வாழ்வை இருட்டு என எண்ணி வருந்துபவர்களே இருள் என்பது ஒளிக்கான எதிர்ச் சொல் அல்ல ஒளி இல்லாத இடமே இருள். ஒளியைத் தேடாமல் இருளில் உழன்று கொண்டு இருந்து வாழ்வை இருட்டு என குறை கூறி எண்ணி வருந்துவதை விட்டுத் தள்ளுங்கள். ஒளியைத் தேடி பயணியுங்கள். தேடுபவனுக்கு மட்டுமே வரங்கள் பரிசாகின்றன. தேடல் வாழ்வின் வெற்றிக்கான திறவுகோல்... தேடுங்கள் சொர்க்கம் என்பது வேற்று உலகத்திலில்லை. அன்பும் பணிவும் கொண்டு அழகாக வாழ்பவர்களுக்கு சொர்க்கம் உள்ளங்கையில் இருப்பதனைக் காண்பீர்கள்.

sivavathani.p@thaiveedu.com

■ ■ ■

# எரிபொருள் சிக்...

32ம் பக்கத் தொடர்ச்சி...

யபடி வேலை செய்தால், நிறுத்தி மீண்டும் ஆரம்பிப்பதிலும் பார்க்க அதிகம் எரிபொருள் பாவிக்கும் என்பதை மறக்கவேண்டாம்.

### வாகனச் சில்லுகளில் காற்றின் அழுத்தம்:

போதிய அளவு காற்று அழுத்தம் இல்லாத சில்லுகளுடன் செலுத்தப்படும் வாகனம் கூடிய எரிபொருள் பாவிக்கும் எனக் கணித்துள்ளார்கள். மாதமொருமுறை சில்லுகளின் காற்று அழுத்தத்தை அவதானிப்பது மிக அவசியம். அத்தகைய அவதானிப்பு சில்லு குளிராக இருக்கும் வேளையில் தான் செய்யவேண்டும். குறைந்திருப்பின் தேவைக்கேற்ற அளவு காற்றை உட்செலுத்த வேண்டும். ஒரு வாகனத்திற்கு ஏற்ற காற்று அழுத்தம் கதவில் குறிப்பிடப்பட்டிருக்கும் அல்லது வாகன தகவல் நூலில் (Operating Manuel) தரப்பட்டிருக்கும்.

### இயந்திரத்தின் தகைமையும் காற்று வடியும்:

உங்கள் வாகன இயந்திரம் நல்ல நிலையில் இருக்கவேண்டியதின் அவசியத்தை சொல்லாமலே அறிவீர்கள். ஆனால் பலர் காற்று வடி (Air Filter)யினை கவனிப்பதில்லை. இந்த வடி அடைபட்டிருப்பின் 10 விகிதம் வரை மேலதிகமான எரிபொருளை பாவிக்கும். எனவே காலத்துக்குக் காலம் இதனை கவனிப்பதவசியம். முக்கியமாக கட்டுமானம் நடக்கின்ற தூசி அதிகம் உள்ள பாதையில் செலுத்தப்படும் வாகனங்களை பெரிதும் கவனிக்கவேண்டும்.

### வருமுன் காத்தல்:

நெருக்கடி கூடிய ரொறன்ரோ போன்ற நகரங்களில் பல வீதி விளக்குகள் இருக்கின்றன. இவற்றில் நிறுத்தி, நிறுத்தி செலுத்துவதை தவிர்க்கமுடியாது என்பதுடன் வேகத்தை மெதுவாக அதிகரித்தாலும் மற்ற சாரதிகளின் கோபத்திற்கு ஆளாகவேண்டி வரும். ஆனால் தூரத்தில் விளக்கு தெரிந்தால் வேகத்தை மெதுவாகக் கூட்டி அல்லது குறைத்து அதனருகில் வருகையில் பச்சை வர்ணம் இருக்கும் விதத்தில் கவனித்துக் கொள்வதில் எரிபொருள் சிக்கனத்தைக் கடைபிடிக்கலாம்.

### எரிபொருள் நிரப்புவது:

இங்கு இருவிடயங்களை கவனிக்கவேண்டும்.

முதலாவதாக எரிபொருள் கன அளவுப்படி தான் விற்கப்படுகிறது. எனவே காலையில் குளிர் நிலை காரணமாக கொடுக்கும் பணத்திற்கு கூடிய அளவு எரிபொருள் பெற்றுக் கொள்ளலாம். காலையில் சூரியநமஸ்காரம் செய்யும் முன் வாகனத்திற்கு எரிபொருளை பெற்றுக்கொள்ளுங்கள்.

அடுத்ததாக கவனிக்கவேண்டியது எங்கு எரிபொருள் பெறுவது என்பது. இணையத் தளத்தில் எவ்வெவ் இடத்தில் குறைந்த விலையில் எரிபொருள் கிடைக்கிறது என அறிவித்திருப்பார்கள். உங்கள் வீட்டிற்கு அண்மையில் எங்கு மலிவாக கிடைக்கும் என அறிந்து அங்கு உங்கள் வாகனத்தைக் கொண்டு செல்லுங்கள்.

இந்த ஒன்பது விடயங்களிலும் முக்கியமான ஒரு விடயம் அருகில் உள்ள இடங்களுக்கு நடந்து செல்ல பழகிக்கொள்வதுடன் உங்கள் பிள்ளைகளுக்கும் பழக்குங்கள். இது உங்கள் பணத்தை மிச்சப்படுத்துவதுடன் ஆரோக்கியத்தையும் வளர்க்கும்.

senthuran.punithavel@thaiveedu.com

■ ■ ■

# சக்தி என்றால் காப்புறுதி



காப்புறுதி துறையில்
“28” வருட முழுநேர
உன்னதமான, நெறியான சேவை

“சகல காப்புறுதி நிறுவன பிரதிநிதி”

- இதுவரை 11,000 இற்கு மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்.
- 190 துரித காப்புறுதி இழப்பீடுகள்.
- ஏறத்தாழ 46 நிரந்தர, பகுதி ஊன இழப்பீடுகள்.
- பாரபட்சமின்றி எந்த நிறுவனத் திட்டமாக இருப்பினும் தெளிவான, துல்லியமான, இலகுவில் கிரகிக்கும் வண்ணம், பொறுமையான விளக்கம்.
- பல்வேறு நிறுவனங்கள் மூலம் சிறப்பு விருதுகள் பெற்ற பெருமை.
- எவ்வித வருத்தங்கள் இருப்பினும் அதற்கேற்ப தகுந்த காப்புறுதி திட்டங்கள் அளிக்கும் திறமை.
- உங்கள் காப்புறுதி மனுப்பத்திரம் ஏதாவது நிறுவனம் மூலம் நிராகரிக்கப் பட்டாலும் தகுந்த காப்புறுதி திட்டம், நிறுவனங்களின் நிபந்தனைக்கு அமைய நிச்சயமாக, உறுதியாகக் கொடுக்கப்படும்.
- உடனே அமுலுக்கு கொண்டுவரும் மருத்துவ ரீதியின்றி ஆயுள்காப்புறுதி.

## - சக்திவேல் -

**416.706.3530, 905.763.8912**

Fax: 905 428 9307 Email: george14@sympatico.ca

மன்னிக்கவும்!
வாகனக் காப்புறுதி (Car Insurance), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!

# மருத்துவ ரீதியின்றி ஆயுள் காப்புறுதி

- 85 வயதிற்குட்பட்ட எவரும் **$375,000** வரை மனுச்செய்யலாம்.
- சலரோகம், சலரோக தடுப்பூசி, மாரடைப்பு, இரத்த அழுத்தம் (**BLOOD PRESSURE**), கொழுப்பு சத்து கூடியுள்ளவர்கள் (**HIGH CHOLESTEROL**).
- பகுதி ஊனம், நிரந்தர ஊனம் உள்ளோர்.
- மற்ற காப்புறுதி நிறுவனங்களினால் நிராகரிக்கப்பட்டோர்.
- நிறை கூடியுள்ளோர் (**OVER WEIGHT**)
- அதிகூடியதான கை கால் வலி, மூட்டு வலியுள்ளோர்.

உங்கள் வருத்தங்களை பொறுத்து, நிலவரத்தை பொறுத்து தகுந்த காப்புறுதி திட்டத்தை நிச்சயமாக அளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

**ஒருவரும் நிராகரிக்கப்படமாட்டார்கள்.**

**சக்திவேல்: 416 706 3530**

# I WILL WORK DILIGENTLY UNTIL YOU’RE SATISFIED.

**W.Hwy 48 & S.Bur Oak**



3 Bedroom, 3 Washrooms
**$479,900**

**Hwy 7 & Cornell Center**



4 Bedroom, 3 Washrooms
**$489,980**

**9th Line & Reeves Way**



3 Bedroom, 3 Washrooms
**$339,900**

**Main Street & 10th Line**



2+1 Bedroom, 3 Washrooms
**$344,900**

**Stouffville Rd & Hwy 48**



3 Bedroom, 3 Washrooms
**$345,000**

**Tenth Line & Stouffville Road**



3 Bedroom, 3 Washrooms
**$349,000**

**9th Line & Hoover Park Dr**



3 Bedroom, 3 Washrooms
**$359,900**

**9th Line & Hoover Park**



3 Bedroom, 3 Washrooms
**$369,900**

- **One Commission Two Listing Call for Details**
- முதல் தடவையாக வீடு வாங்குபவர்களுக்கான ஆலோசனைகளும், உதவிகளும் வழங்கப்படும்.
- மாதாந்தம் வெளிவரும் இப்பத்திரிகையில் என் விளம்பரத்தைப் பார்ப்பதன் மூலம் உங்கள் இல்லத்தை உங்கள் பட்ஜட்டில் நீங்கள் தெரிவு செய்யலாம்

News Paper Listing Until Your House Sold

Professional & Friendly Service



**Thila Thiagarajah**
Sales Representative
**416.566.3224**
thila_t@hotmail.com

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/Future Realty Inc., Brokerage***
205-7 Eastvale Dr. Markham, ON L3S 4N8
**Bus.: 905-201-9977 Fax : 905.201.9229**
*Independently Owned and Operated, REALTOR
Not intended to solicit properties that are currently listed or buyers under contract.

# இரசாயனப் பொருட்களில் இருந்து வீடுகளைப் பாதுகாத்தல்



பிரபா சின்னா

எங்கள் வீடு பலவிதமான இரசாயனக் கழிவு களைக் கொண்டிருக்கலாம். பக்ரீறியா, வைரசு, தூசியில் இருக்கும் நுண்ணுயிர்கள் பூஞ்சணம் விலங்குகளில் காணப்படும். நுண்ணுயிர்கள் போன்றவை வீடுகளை மாசுபடுத்தும் உயிரி னங்களாகும். இவை தவிர மாசு படுத்தும் இரசாயனப் பொருட்களுகும் இருக்கின்றன.

வீட்டினுள் மிகக் குறைந்த இரசாயனக் கலப் படத்தைப் பேணுவதன் மூலம் வீட்டினுள் இருக்கும் வளியைத் நாம் தூய்மையானதாக வைத்திருக்க முடியும். இக்கட்டுரையில் எவ் வாறு இதனைக் கட்டுப்படுத்தலாம் என்பதை உற்று நோக்குவோம்.

வடிகட்டல் மூலம் இதை முழுமையாக அகற்றிவிட முடியுமென நாம் எண்ணலாம். ஆனால் சாதாரண வீடுகளில் உள்ள சூடேற்றியின் வடிகட்டியானது, வளியிலுள்ள துணிக்கைகளை மட்டுமே வடிகட்டக் கூடியவை மாத்திரமே ஒழிய, தேவையற்ற தீங்கு விளை விக்கும் வாயுக்களை, கிருமிகளை வடிகட்டக் கூடியது அல்ல. பிரத்தியேகமாகப் பொருத் தப்பட்ட Activated Charcoal, Aluminum வடி கட்டிகள் மூலமாக மாத்திரமே வடிகட்ட முடியும். இவை பிரத்தியேகமாகப் பொருத் தப்படுவதோடு, அடிக்கடி மாற்றப்படுதலும் வேண்டும். வடிகட்டல் மூலம் வளியை வடி கட்டல் என்பது முழுமையாக நடைபெறக் கூடியதல்ல.

### இதைத் தடுப்பதற்கான சிறந்த முறைகள்:

- இவை உற்பத்தியாகும் இடத்தைக் கண் டறிந்து இவை பரவுவதற்கு முன்னரே தடுத்தல்.
- உற்பத்தியாகும் இடத்தை வீட்டின் ஏனைய பகுதிகளோடு தொடர்புபடாது தனிமைப் படுத்துதல்.

வெளியில் இருந்து வீட்டினுள் கொண்டு வரும் பொருட்கள் இலகுவாக அகற்றக்கூடியவை. ஆனால் வீட்டின் கட்டிடப் பொருட்களிலிருந்து வெளியேறும் மாசுக்களை அகற்று வது மிகவும் கடினம்.

### உடல் நலத்திற்கு ஏற்படும் தாக்கம்:

வேலைத்தளங்களில் இரசாயனப் பொருட்களால் உடல் நலத்தாக்கம் ஏற்படுகின்றது என்பது தெரிந்ததே அவை Short term exposure, long term exposure ஆகப் பிரிவு படுத்தலாம். இதற்கான அறிவுறுத்தல்களை சுகாதார அமைச்சு தெளிவாக வேலைத் தளங்களில் நமக்கு அறியத் தருகிறது. வேலைத்தலத்தில் ஏற்படும் தாக்கங்களோடு வீட்டில் ஏற்படும் தாக்கங்களை ஒப்பிட முடி யாது. வீடுகளில், வேலைத்தலங்களில் உள்ள அளவு மாசுகள் இல்லாது விட்டாலும் கூட வீடுகளில் கூடியளவு நேரத்தை (8 மணித்தி யாலத்தை விடக்கூட)ச் செலவிடுவதனால் குறைந்தளவு மாசுக்கள் இருந்த போதிலும் அதிகளவு தாக்கத்திற்கு உள்ளாகிறோம்.

### வீட்டினுள் பரவக்கூடிய தீங்கு விளைவிக்கும் வாயுக்களாவன:

- கர்பன் மொனொக்சைட் (Carbon monoxide)
- கரியமலை வாயு (Carbon di oxide)
- நைதரசன் இருஒக்சைட் (Nithogen dioxide)
- ஓசோன் (Ozene)
- கந்தக வீனாக்சைட் (Sulphur dioxide)
- றோடன் (Radon)

இந்த வாயுக்களைப் போக்குவதன் மூலம் ஏற்படும் தாக்கங்களாகக் குறைக்கலாம்.

வாயுக்களின் செறிவு குறிப்பிட்ட அளவை விட அதிகரிப்பதாக நீங்கள் உணர்ந்தால் உடனடியாக அதைப் பரிசோதித்துக் கண்ட றிந்து அதற்கான தகுந்த வழிமுறைகளைக் கையாண்டு கட்டுப்படுத்துவது உடல்நலத் தைப் பாதுகாக்க ஏதுவானதாகும்.

### Carbon Monoxide:

இந்த வாயு மணமற்றதாகையால் இது வீட்டினுள் பரவுவதை இலகுவில் கண்டறிய முடியாது. அதிகளவு பரவுகின்ற வேளைகளில் குறிப்பாகப் பனிகாலங்களில் யன்னல்கள் முழுமையாக மூடப்பட்டிருக்கும் போது உயிராபத்தைக் கூட விளைவிக்கக்கூடியது. இதனை அறிவதற்குரிய பிரத்தியேக கருவியை (carbon monoxide detector)ஐப் பொருத்து வதன் மூலம் உடனடியாகவே பரவுவதைக் கண்டறிந்து தடுக்க முடியும். இக்கருவியின் மணி அடித்தால் உடனடியாக யன்னல்கள், கதவுகளைத் திறந்து வைத்துவிட்டு வீட்டை விட்டு அனைவரும் வெளியேற வேண்டும். அத்துடன் அதற்குரிய அவசர சேவைக்கு அழைத்துப் பரிசீலித்து, தடுக்கவேண்டும்.

### Radon:

நிலத்திற்கடியில் உள்ள Uranium என்னும் மூலமும் பிரிவடைவதனால் ஏற்படும் வாயுவே radon ஆகும். இந்த வாயுவுடன் நீண்டகாலத் தொடர்பு ஏற்படுமிடத்தில் உடல் நலத்தாக்கம் ஏற்படும். உடனடியாக எந்தவித அறிகுறியும் எற்படாது. இதைப் பரிசீலிப்பதற்கு நீங்களாகவே பரிசீலிக்கும் கருவியை வாங்கிவைத்து காலத்திற்குக் காலம் ஆய்வுகூடப் பரிசோதனைக்கு அனுப்பி பரிசீலிக்கலாம். நீண்டகால இடைவெளிக்கொருமுறை பரிசீலிப்பது சரியான முடிவைத் தரும்.

### செயல்முறை அணுகல் (Practical Approach):

வீடுகளைக் கட்டும் பொழுதோ அல்லது புதுப்பிக்கும் பொழுதோ நீங்கள் வாங்கும் கட்டிடப் பொருட்களை வீட்டினுள் கொண்டு வருவதன் மூலம், வீட்டினுள் இரசாயனக் கலப்படங்கள் ஏற்படும். கட்டிடப் பொருட்களின் பட்டியலில் அதிகளவு மாசை வெளிவிடக் கூடிய பொருட்களைக் கண்டறிந்து தவிர்ப்பது நலம். முதலில் அப்பொருள் எந்தெந்த மூலப் பொருட்களினால் ஆனது? எவ்வகையான இரசாயன மாசுக்களை வெளிவிடும்? என அறிதல் வேண்டும். ஆனால் கண்ணாடி, Ceramic tile, metal, கற்கள் போன்ற ஒரு சில பொருட்கள் மட்டுமே வளியை மாசு படுத்தும் தன்மை அற்றவையாக உள்ளது. எனவே ஒவ்வொரு பொருட்களானதும் அறிக்கைகள், அறிவுறுத்தல்கள், விபரங்கள் போன்றவற்றைக் கொண்ட MSDSஐ (Material safety Data Sheet) விற்பனையாளரிடம் கேட்டுப் பெற்று வாசித்து அறிந்து கொள்ளுதல் அவசியம்.

### அன்றாடவாழ்வில் மாசடைதலைத் தடுக்கும் வழிமுறைகள்.

#### புகைத்தல்:

வீட்டினுள் புகைத்தல், வரும் விருந்தினரை யும் புகைக்க அனுமதிக்கக் கூடாது.

#### மெழுகுதிரி எரித்தல்:

எண்ணெய் விளக்கு, மெழுகுதிரி ஊதுபத்தி எரியும்போது காபன் மொனொக்சைட், கரி, ஐத்ரோகாபன்கள் வெளியேறுவதால் இவற்றைத் தடைசெய்தல் வேண்டும்.

#### பூச்சிகொல்லி பாவித்தல்:

- இரசாயனப் பதார்த்தம் பாவிக்காத முறை யில் பொறி, போன்றவை மூலம் தடை செய்யலாம்.
- உள்நுழையும் இடங்களை அடைத்தல்.
- Vaccum பிடித்தல்.
- நீராவிப்பதனைக் கட்டுப்படுத்தி ஈரப்பதனை விரும்பும் உயிரங்களை அழித்தல்.

#### வீட்டைத் துப்பரவு செய்யும் இரசாயனப் பதார்த்தங்கள்:

- உடனடியாகக் கழிவுப் பொருட்களை அகற்றல்
- தொற்று நீக்கிகளைப் பாவிக்காது சவர்க் காரம் பாவித்தல்
- முடிந்த போத்தல்களையோ, பைகளையோ கழுவியபின் கழிவுத் தொட்டியில் போடல்.
- அழுகும் கழிவுகளை உறைநிலையில் வைத்து கழிவு அகற்றும் நாளில் அகற்றல்.
- மணமகற்றும் திரவியங்கள் பாவிப்பதைக் குறைத்தல்.
- மணமுள்ள fabric softners bleach, பூச்சி உருண்டை போன்றவற்றைப் பாவிக்காது விடல்.

மணமற்ற பதார்த்தங்களைப் பாவித்தல், சமையலறை காற்றாடியை Oven துப்பரவு செய்யும்போதும், சமைக்கும் போதும் முழுமையாக வேலை செய்ய விடல், குளிய லறையை ஈரப்பதனற்றதாக வைத்திருக்கக் காற்றாடியைப் பாவித்தல், மேலதிக paint varnish போன்றவற்றை வீட்டிலிருந்து வெளியே அகற்றுதல், சிந்தப்படும் இரசாயனப் பொருட்களை உடனே துப்பரவு செய்தல் போன்றவற்றில் கவனம் எடுக்க வேண்டும்.

வீட்டின் Chimney heater, போன்றவற்றை அடிக்கடி பரிசீலித்தல், நில விரிப்புகளின் கீழ் பரிசீலித்தல் வெளியே தெரியும் insulation ஐப் polyethelenஆல் மூடிவிடல் போன்றவையும் அத்தியாவசியம் இவற்றையெல்லாம் செய்தபின் வீட்டினுள் சிறந்த காற்றோட்டத்தை HRVஐப் பொருத்தி ஏற்படுத்தி வளியைத் தூய்மையாகக் வேண்டும்.

மேலே குறிப்பிட்டவற்றைக் கவனத்தில் எடுத்துக் கடைப்பிடிப்பதன் மூலம் வீட்டினுள் ஏற்படும் இரசாயன மாசுக்களைக் கூடியளவு கட்டுப்படுத்தி சுக தேவிகளாக வாழமுடியும்.

prabha.sinna@thaiveedu.com

■ ■ ■




SELLING-BUYING-INVESTING
Mccowan & Steeles
Scarborough
$ 226,000
2+1 Bedrooms + 2 Washrooms
Birchmount & Finch
Scarborough
$ 199,900
2+1 Bedrooms + 2 Washrooms
Mccowan & Eglinton
Scarborough
$ 170,000
2+1 Bedrooms +2 Washrooms
Mccowan & Ellesmere
Scarborough
$ 269,900
2+1 Bedrooms + 2 Washrooms
Brimley & 401
Scarborough
$ 299,900
2+1 Bedrooms + 2 Washrooms
Mccowan & 401
Scarborough
$ 259,000
2 Bedrooms + 2 Washrooms
Eglinton & Brimley
Scarborough
$ 339,900
3+1 Bedrooms + 2 Washrooms
Markham & Eglinton
Scarborough
$ 369,999
3 Bedrooms + 3 Washrooms
Brimley & Denison
Markham
$ 439,900
3+1 Bedrooms + 2 Washrooms
Mccowan & Hwy.7
Markham
$ 469,900
4+2 Bedrooms + 4 Washrooms
9th Line & Hwy 7
Markham
$ 395,900
2+1 Bedrooms + 2 Washrooms
9th Line & Hoover Park
Markham
$ 362,900
3 Bedrooms + 3 Washrooms
St.clair & Danforth
Scarborough
$ 389,900
3+2 Bedrooms + 2 Washrooms
Church & Delaney
Ajax
$ 348,900
4 Bedrooms + 3 Washrooms
Mccowan & Denison
Markham
$ 439,000
3+1 Bedrooms +4 Washrooms
Hwy 48. & 16th Ave.
Markham
$ 549,900
4 Bedrooms +3 Washrooms
Middlefield & Denison
Markham
$ 475,500
4 Bedrooms + 3 Washrooms
Middlefield & Denison
Markham
$ 499,000
4+1 Bedrooms + 4 Washrooms
Rossland & Salem
Ajax
$ 429,000
4 Bedrooms + 4 Washrooms
Mccowan & Denison
Markham
$ 499,900
4+2 Bedrooms + 4 Washrooms
Salem & Taunton
Ajax
$ 388,900
4 Bedrooms + 3 Washrooms
9th Line & Reeves way
Markham
$ 379,000
4 Bedrooms + 3 Washrooms
Westney & Taunton
Ajax
$ 436,900
4 Bedrooms + 3 Washrooms
Salem & Taunton
Ajax
$ 549,000
4 Bedrooms + 4 Washrooms
Morningside & Finch
Scarborough
$ 649,900
4+2 Bedrooms + 5 Washrooms
Taunton & Salem
Ajax
$ 329,900
4 Bedrooms + 3 Washrooms
Brimley & Denison
Markham
$ 479,900
3+1 Bedrooms + 3 Washrooms
Hwy.48 & Hoover Park
Markham
$ 509,900
4 Bedrooms + 3 Washrooms
Taunton & Salem
Ajax
$ 489,800
4 Bedrooms + 3 Washrooms
14th Ave & 9th Line
Markham
$809,000
5 Bedrooms +4 Washrooms
Morningside & Sheppard
Scarborough
$ 529,900
4 Bedrooms + 3 Washrooms
Williamson & Salem
Ajax
$ 682,900
4 Bedrooms + 5 Washrooms
Vankirk & Wanless
Brampton
$469,000
4 Bedrooms +3 Washrooms
No Intended to Solicit Currently Listed Properties or Buyers Under Contract.
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Future
Realty Inc. Brokerage*
205-7 Eastvale Dr,Markham ON. L3S 4N8
Bus : 905-201-9977 Fax : 905-201-9229
You Tube
www.realhouse.ca
*Independently Owned and Operated
Mugunthan Nadarajah
Sales Representative
Direct: 416-276-8025
Thamil Suberamaniam
Sales Representative
Direct: 416-358-6200
SELL YOUR HOME FASTER AND MORE MONEY

# அன்னை இல்லம்

## - கதிர் துரைசிங்கம் -

***செல்லர்:*** எப்பிடிப்போச்சு DVD வெளியீடு.

***கனேசர்:*** ஐயோ அதை ஏன் கேட்கிறியாள், சீ எண்டுபோச்சு. ஒரே பேச்சுத்தான். இனி எங்கடை நிகழ்ச்சிகள் வெளியீடுகளுக்குப் போறயில்லை எண்டு முடிவு கட்டிவிட்டன்.

***செல்லர்:*** ஏன் சலிக்கிறாய் உனக்கு பேச்சு, வெளியீடு, விமர்சனம் எண்டால் விருப்பம் தானே.

***கனேசர்:*** ஆரம்ப உரை, வரவேற்புரை, வாழ்த்துரை, ஆசிஉரை அறிமுகஉரை, வெளி யீட்டுஉரை, ஆய்வுரை, ஏற்புரை, நன்றிஉரை எண்டு ஒரே பேச்சு. அதோடை "எம்மவர் விழாக்களுக்கு நீங்கள் வரவேண்டும்" "எம் மவர் படைப்புகளை மட்டும் கேட்கவேண்டும் பார்க்க வேண்டும்" "எம்மவர் படைப்புகளுக்கு நீங்கள் நிறையை நிதி கொடுத்து உதவ வேண்டும் எண்டு ஏற்புரைக்குள்ள அறிவுரை வேற.

வராத ஆட்கள் வீட்டிலை இருக்கினம், நேரத்தைச் செலவுசெய்து நேரத்திற்குப் போய், காசும் குடுத்து, கடைசிவரை நிண்டு பேச்சு வாங்கி அறிவுரையும் கேட்கவேண்டியதாய்ப் போச்சு.

•

***அந்தக் காலம்:*** பிள்ளைகளுக்குப் பெற்றோர் மாப்பிள்ளை பெண்பிள்ளை தேடிப் பொருத்தம் பார்த்து, திருமண ஒழுங்குகள் செய்து, உற்றார் உறவினர் நண்பர்களை அழைத்து, தாங்கள் விரும்பியபடி செலவு செய்து, தாமே கலியாணத்தை நின்று நடந்தி மகிழ்ந்தனர்.

***இந்தக்காலம்:*** பிள்ளைகள் தாங்களே பழகிப் பொருத்தம் பார்த்து, மாப்பிள்ளை பெண்பிள்ளை தேடிப்பிடிச்சு, கலியாண ஒழுங்குகள் தாங்கள் விரும்பியபடி செய்துவிட்டு பெற்றோரிடம் வந்து, "உங்களுக்கு 50 அழைப்பிதழ் தரலாம், 100 பேர் வரலாம், ஆசனம் ஒதுக்கீடு செய்வதற்காக வருகிறவர்களின் பெயர் பத்து நாட்களுக்குள் தரவேண்டும், பெட்டிகளில் அடைக்கப்பட்ட பரிசுப்பொருட்கள் ஏற்கப்படமாட்டா, அன்பளிப்பு மட்டும் ஏற்கப்படும், மண்டபத்தில் D.J அழைக்கும் போது நீங்கள் வந்து கன்னிகா தானத்தில் பங்குபற்றுங்கோ இயலாவிட்டால் மாற்று ஒழுங்குகள் செய்வம்" என்கிறார்கள்

திருமணம் செய்கிறார்கள் என்று திருப்தியடைவோம். கலியாணத்திற்கு சொன்னார்களே என்று சந்தோஷப்படுவோம்.

•

***கலியாண புறோக்கர்:*** தம்பி என்ன மாதிரி பெண் உமக்கு மனைவியாக வரவேண்டும் எண்டு சொல்லும். நான் வெண்டுதாறன்.

***மாப்பிள்ளை:*** எனது மனைவி அழகானவளாக இருக்கவேண்டும், ஆங்கிலம் தெரிந்து சரளமாக பேசக்கூடியவளாக இருக்கவேண்டும், சிக்கனமானவளாக இருக்கவேண்டும், சமையல் தெரிந்தவளாக இருக்க வேண்டும், தோற்றமாக மாம்பழநிறமாகவும் கலகலப்பாக பேசிப் பழகக்கூடியவளாகவும் இருக்கவேண்டும். அத்கோடை நல்லவேலையில் இருப்பவளாகவும் இருக்க வேண்டும்.

***புறோக்கர்:*** இந்த நாட்டுச்சட்டம் உங்களுக்குத் தெரியாதுபோல கிடக்கு. ஒருவனுக்கு ஒரு மனைவியைத்தான் இந்தநாடு அனுமதிக்கும்.

•

***பொன்னர்:*** பேத்திக்கு வேலை கிடைச்சு இருக்கு எண்டு சொன்னீர் எங்கை எண்டு சொல்லயில்ல.

***தம்பர்:*** அவள் சுட்டி, நல்லகெட்டிக்காரி, படிச்ச இடத்திலையே வேலை எடுத்திட்டாள்.

***பொன்னர்:*** படிச்ச பள்ளிக்கூத்திலையோ? அல்லது படிச்சுப் பட்டம் வாங்கின பல்கலைக் கழகத்திலையோ?

***தம்பர்:*** ரிம்கொட்ட (Tim Hortons)னில. அங்கை தானே சினேகிதர்களோடை இருந்து இரவிரவாய் படிச்சவள்.

*???*

•

வந்ததும் வீட்டு வாசலிலை 'அன்னை இல்லம்' எண்ட பெயரைக் கண்டு கண்கலங்கிவிட்டன் குமார்.

***தயாபரன்:*** நீங்கள் யார் எண்டு சொல்ல இல்லை.

***குமார்:*** நான் குமார் கனடாவிலை இருந்து வந்திருக்கிறன். உம்முடைய அண்ணர் அன்பழகன் அம்மாவுக்கு ஒரு பாசல் தந்து விட்டவர்.

***தயாபரன்:*** தாருங்கோ அவவிட்டை கொடுக்கிறன்.

***குமார்:*** அம்மாவைக் ஒருக்கால் கூப்பிடுங்கோ, அவவைக் கண்டு கதைச்சிட்டுப்போவம்.

***தயாபரன்:*** அம்மா இஞ்சை இல்லை முதியோர் இல்லத்திலை வசதியாக இருக்கிறா.

(*குமார் மனதிற்குள்:* இருக்கிற வீட்டுக்கு அன்னை இல்லம் எண்டு பெயர். அன்னை இருக்கிறது முதியோர் இல்லத்தில்)

•

கனடாவில் தனது ஈழத்து தமிழ் ஆசிரியரைச் சந்தித்த மாணவன்:

Sir! "சூரியனைக் கண்ட பனிபோல் இராமனைக் கண்டு சீதை உருகினாள் எண்டு அங்கை படிப்பித்தீர்கள்.

***ஆசிரியர்:*** அதுக்கு இப்ப என்ன?

***மாணவன்:*** இஞ்சை சூரியனுக்கு பனி பயமும் இல்லை கண்டு உருகிறதும் இல்லை. உந்த உருகிறவேலை எல்லாம் இலங்கை இந்தியாவேட சரி.

நீங்களும் உங்கட பனி உவமானமும்.

*???*

•

***பொன்னர்:*** பேச்சுத்திருமணமா அல்லது காதல் திருமணமா சிறந்தது எண்டு சொல்லும்.

***கனகர்:*** நான் ஒரு கேள்வி கேட்கிறன் அதுக்கு பதில் சொல்லு. பிறகு உனது கேள்விக்கு வாறன்.

***பொன்னர்:*** கேள்வி என்ன?

***கனகர்:*** கொலையா தற்கொலையா சிறந்தது?

*???*

kathir.thuraisingam@thaiveedu.com

■ ■ ■

## கடுகு...

### கனடாவில் பாலைவனம்?

கனடாவில் ஒரு பாலைவனம் இருக்கின்றதென்றால் ஆச்சரியப்படுவீர்கள். பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் Osoroos பகுதியிலேயே இந்தக் குட்டிப்பாலைவனம் அமைந்துள்ளது. பாலைவனம் என்று வேறு சில இடங்களும் சொல்லப்பட்டாலும் அதற்கான தகுதி இந்தப் பாலைவனத்திற்கே உண்டு என்று சொல்லப்படுகின்றது. கனடாவில் வேறெங்கும் காணப்படாத 100க்கும் மேற்பட்ட தாவரங்களும் 300க்கும் மேற்பட்ட சிறு விலங்குகளும் இங்கு காணப்படுகின்றன.


Taunton & Audley




$296,900
3 Bedrooms
3 Washrooms
AJAX

Rossland & Garrard




$278,900
3 Bedrooms
3 Washrooms
WHITBY

Century 21
Affiliate Realty Inc. Brokerage
Off: 416.290.1200


பகீரதன் சகாதேவன்
முழுநேர விற்பனை முகவர்



416.908.6003 www.pakeer.com



$10,000 Funeral Expense



| | Medical | | | Non Medical | | |
|---|---|---|---|---|---|---|
| Age | Female | Male | Male Smoker | Female | Male | Male Smoker |
| 60 | $23.69 | $27.85 | $40.89 | $36.00 | $44.13 | $61.00 |
| 65 | $30.58 | $36.67 | $52.04 | $47.00 | $60.04 | $71.00 |
| 70 | $40.64 | $50.25 | $66.53 | $62.00 | $82.92 | $89.00 |
| 75 | $57.85 | $73.64 | $87.55 | $83.00 | $116.25 | $117.00 |

Some conditions may apply

INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC · RBC Insurance · Assumption Life · Canada Life · Unity Life of Canada · Manulife Financial

Life Insurance is Death Insurance, Critical Illness Insurance is Life Insurance


ஓம் சக்தி

# குறும் தகடு (CD) வெளியீட்டு விழா

தமிழ் நாட்டின் முன்னணி அணிசேர் கலைஞர்களின் பின்னணி வாத்திய இசையோடு
கனடா வாழ் தமிழ்க் கலைஞர்
திருவாளர் சோம. சச்சிதானந்தனின்

## பன்னிரு திருமுறை அமுதம்

பாக்கியநாதம் 2



குறும் தகடு (CD) வெளியீட்டு விழா
யூலை 30, 2011
சனிக்கிழமை மாலை 6:00 மணி
Scarborough.

இவ்விழாவில் சமய, சமூக, கலை, வர்த்தக, பத்திரிகை துறை பிரமுகர்கள் பலர் கலந்து சிறப்புரையாற்றி சிறப்பிக்கவுள்ளனர்.

இவ்வெளியீட்டு விழாவிற்கு தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

அன்புடன்
விழா ஏற்பாட்டுக் குழுவினர்

விழா சம்பந்தமான மேலதிக விபரங்கள் அடுத்து வரும் வாரங்களில் வெளியிடப்படும்

647.202.3234



# சுவை–தரம்–புத்துணர்வு





**Hattan Tips Tea**

416-548-8020

*Quality & taste....*

அனைத்து வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்


வீடு வாங்க... விற்க...
உங்கள் முகவராக... இதோ...
Scarborough
$329,900
Scarborough 902-70 Town Centre Court
Priced to sell, Great Location, One Year Old Monarch Luxury 3 Bedroom Condo! Located Beside Scarborough Town Centre! Huge Balcony with Unobstructed View, Low Maintenance Fee, Granite Kitchen Top, Steps To RT, YMCA, Shopping, Etc., Minutes To Hwy 401, 24 Hrs Concierge, Gym, Mini-Theater, Guest Suites, Parking, Etc.
Scarborough $294,900 Detached, 3 Bedrooms, Partly Finished Basement!
Scarborough $314,900 Detatched, 4 Bedrooms, Basement Separate Entrance!
Scarborough $349,900 Detatched, 3+3 Bedrooms, 2 Washrooms, Finished Basement Apartment!
Scarborough $373,000 Detatched, 3+1 Bedrooms, 2 Washrooms, Basement Separate Entrance !
Scarborough $374,999 Detatched, 3 Bedrooms, 2 Washrooms, 7 Years Old Home!
Scarborough $739,900 Detatched, 4 Bedrooms, 4 Washrooms Partly Finished Basement, Separate Entrance!
Pickering $299,900 Detatched, 3+1 Bedrooms, 4 Washrooms, Finished Basement Apartment!
Ajax $339,900 Detatched, 3 Bedrooms, 3 Washrooms, Basement Separate Entrance!
Whitby $329,900 Detatched, 3 Bedrooms, 3 Washrooms, Finished Basement Apartment!
Markham $479,900 Link, 3 Bedrooms, 3 Washrooms, 2 Garages!
Markham $579,000 Detached, 4 Bedrooms, 3 Washrooms Finished Basement Apartment!
Mississauga $468,888 Detached, 3 Bedrooms, 3 Washrooms Great Location!
Gold Member Award Winner
என்னிடம் நீங்கள் வீடு வாங்கினால் உங்களுடைய
"Lawyer Fees" மற்றும் "Moving Charges" இலவசம்!**
VALLIKKANNAN MARUTHAPPAN
Sales Representative
Off: 416-298-3200 Direct: 416-880-6051
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated - Not intend to solicit buyers or sellers currently under contract
www.mvkhome.ca
** Conditions Apply.

# வீடு வாங்கப் போகிறீர்களா? இதோ உங்களுக்கான ஒரு வழிகாட்டி

சென்றமாதத் தொடர்...

**தொடர் - 05**



வள்ளிக்கண்ணன் மருதப்பன்

- வீடு விற்பனைப் பிரதிநிதி -

### உங்கள் தொழில்வாண்மையாளர் குழு:

உங்கள் முயற்சி கைகூடுவதற்கு, தொழில் வாண்மை மிகுந்த, மிகச்சரியானவர்களை உங்களுடன் சேர்த்துக்கொள்ள வேண்டும். சரியான வழிகாட்டுதலும், தொழில் வாண்மையுமே உங்கள் வெற்றியின் திறவுகோல்.

### வீட்டில் காணப்படவேண்டிய அம்சங்கள்:

இந்த இடத்தில் நீங்கள் நடைமுறைச் சாத்தியத்தை எண்ணிப் பார்க்கவேண்டும். எந்த வசதிகள் இல்லாமல் உங்கள் வாழ்க்கையைச் சீராகக் கொண்டு செல்ல முடியாது என்பதையும், எந்த வசதிகள் இருந்தால் நன்றாக இருக்கும் என்பதையும் சரியாகக் கணித்துக்கொள்ளுங்கள். அவை பற்றிய ஒரு விபரத்தை உங்கள் முகவரிடம் கொடுக்க மறந்துவிடாதீர்கள்.

### வீடு தேடும் படலம்:

ஒருவரது ஞாபகசக்திக்கு ஒரு எல்லை உண்டு. அதுவும் வீடு தேடும்போது பல விடயங்களை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டியிருப்பதால், ஒரு வீட்டை உங்களுக்கென்று தீர்மானிப்பது கடுமையான விடயமாக இருக்கும்.

### ஒரு சொத்தைக் கொள்வனவு செய்வதற்கான செலவு:

இந்த மாதிரி அட்டவணை ஒரு வீட்டை வாங்குவதற்கு நீங்கள் செலவிடும் மொத்தச் செலவுகளைத் தெரிந்துகொள்ளவும் குறித்த வைத்துக்கொள்ளவும் அடையாளம் காணவும் உதவும். சில கட்டணங்களும் கொடுப்பனவுகளும் நடைமுறையில் இல்லாததாக இருக்கலாம். இவற்றுள் சிலவற்றுக்கு பொருட்கள் மற்றும் சேவை வரி (எச்.எஸ்.ரி.) விதிக்கப்படலாம்.

### மேலதிக கொள்வனவுச் செலவுகள்:

- வீடு மாற்றல் செலவு
- பரிசோதனைச் செலவு
- உண்மையான சொத்து அறிக்கை
- தரகுக் கட்டணம்
- சட்ட/நொத்தாரி கட்டணம்
- கொள்வனவு/ஈடு
- செலவினங்கள்
- மதிப்பிடப்பட்ட மொத்த சட்ட/நொத்தாரி கட்டணங்கள்
- புதிய வீடுகள்/ஜி.எஸ்.ரி.
- வட்டி நெகிழ்வு
- சொத்து வரி நெகிழ்வு
- வீட்டுக் காப்புறுதி
- அவசர திருத்த வேலைகள்
- வீட்டுபகரணங்கள், ஆடைப் பெட்டகங்கள், கம்பளங்கள் மற்றும் இன்னபிற.

### கொள்வனவு விலையின் மொத்த மதிப்பு:

### ஈடு என்றால் என்ன?

ஈடு; கொள்முதல், வட்டி என்ற இரண்டு பகுதிகளைக் கொண்டது. கொள்முதல் என்பது நீங்கள் நிதி நிறுவனத்திடமிருந்து கடனாகப் பெறும் தொகையை இங்கு குறிக்கின்றது. வட்டி என்பது நீங்கள் அந்தப் பணத்தைச் செலவிடுவதற்காக, நிதி வழங்குனருக்க நீங்கள் செலுத்த வேண்டிய கட்டணம்.

நீங்கள் செலுத்த வேண்டிய வட்டி வீதத்தை உறுதிசெய்யும் ஒவ்வொரு ஒப்பந்தத்திலும் நீங்கள் கடனாகப் பெறும் பணத்தை முழுதாக மீளச் செலுத்தத் தேவைப்படும் காலத்தையும், அதற்காகத் தேவைப்படும் தவணைகளையும் குறிப்பிட வேண்டியிருக்கும்.

பலவிதமான ஈட்டு வசதிகள் காணப்படுகின்றன. அவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து சிறந்ததைத் தெரிவுசெய்யுங்கள். அதில் முக்கியமாக கவனிக்கவேண்டிய விடயம், நீங்கள் தெரிவு செய்யும் ஈடு உங்கள் வாழ்க்கை முறைக்குப் பொருத்தமாக இருக்கவேண்டுமே தவிர அதைச் சிதைப்பதாக இருக்கக்கூடாது. இதில் உங்கள் ஈட்டு முகவர் உங்களுக்கு வழிகாட்டியாக நின்று உதவுவதோடு, ஈடுகளின் அனைத்து வகையிலுமான சகல தகவல்களையும் உங்களுக்கு வழங்குவார். அவை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

- ஆரம்பக் கொடுப்பனவு
- மரபு ரீதியான மற்றும் உயர் வட்டி விகிதாசார ஈடு
- மீள் ஈடுகள்
- முன்னனுமதி பெற்ற ஈட்டைப் பெற்றுக்கொள்ளுதல்
- ஈட்டு வகைகள்
- முற்கொடுப்பனவுகள்
- மாற்றக்கூடிய ஈடு
- விரிவாக்கிக்கொள்ளக் கூடியன
- ஈட்டுத் தவணைகள்
- பாதுகாப்பு மற்றும் தளர்வுத்தன்மை
- தவணைக் காலம்
- கொடுப்பனவு நிரல்கள்
- மூடிய ஈடு
- திறந்த ஈடு
- மாற்றக்கூடிய ஈடு
- மேலதிகச் செலவுகள்
- ஈட்டுக்கடன் காப்புறுதி

### ஈட்டு வகைகள்

### மரபு ரீதியான மற்றும் உயர் வட்டி விகிதாசார ஈடு:

மரபு ரீதியான ஈடொன்றைப் பெற்றுக்கொள்ளவெனில், மதிப்பிடப்பட்ட கொள்விலையின் 25 சதவீதத்தை முதற்கொடுப்பனவாகக் கொடுக்கத் தயாராக இருக்கவேண்டும்.

அப்படியல்லாத பட்சத்தில் நீங்கள் உயர் வட்டி விகிதாசார ஈடு ஒன்றையே பெற்றுக் கொள்ள முடியும். இந்த ஈட்டைப் பெறுவதற்கு, ஈட்டுத் தொகையுடன் மேலதிகச் செலவுடனான கடன் காப்புறுதி ஒன்று அவசியமாவதோடு, நீங்கள் வாங்க விரும்பும் வீட்டின் பெறுமதியும் கட்டுப்படுத்தப்படும்.

### மீள் ஈடு:

ஒரு ஈட்டுடன் உங்கள் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்துகொள்ள முடியாத பட்சத்தில் மீள் ஈடொன்றை நீங்கள் நாடவேண்டிவரும். ஒவ்வொரு ஈட்டு ஒப்பந்தமும் உங்கள் வீட்டைப் பிணையாகக் கொள்வதுடன் நீங்கள் கடனை அடைக்கத் தவறும் சந்தர்ப்பங்களில் வீட்டைச் சொந்தமாக்கிக்கொள்ளும் உரிமையையும் கொண்டிருக்கின்றன. அப்படியான சந்தர்ப்பங்களில் முதல் ஈட்டாளருக்கு முதலில் பணத்தைப் பெற்றுக்கொள்ளும் உரிமை இருப்பதனால், அவர் தன் முழுக் கடனையும் உங்கள் சொத்திலிருந்து மீளப்பெற்றுக்கொள்ளும் வாய்ப்பைப் பெறுகிறார். ஆகையால், மீள் ஈட்டாளர், வழக்கமாக மிக உயர்ந்த வட்டி வீதத்தை எதிர்பார்ப்பார் என்பது வெளிப்படை.

### ஈடு அம்சங்கள்:

இங்கே, நீங்கள் அறிந்து கொள்வதற்காகச் சில ஈட்டுத் தெரிவுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு நிதி வழங்கும் நிறுவனமும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட, ஈடுகளில் தனித்தன்மை கொண்டவையாக இருக்கும். ஒரு வீட்டையும் ஈட்டு நிறுவனத்தையும் நீங்கள் தேடும்போது, பின்வரும் அம்சங்கள் உங்களுக்கு எந்த வகையில் உதவியாக இருக்கும் என்று பாருங்கள்.

### முற்கொடுப்பனவு:

நீங்கள் தொடர்ச்சியாக அதிக லாபப்பங்கை அல்லது உபரி வருமானத்தைப் பெறுபவராக இருந்தாலோ அல்லது ஆண்டுதோறும் மிகையான மாத வருமானம் பெறுபவராக இருந்தாலோ இது உங்களுக்கு மிகச் சிறந்த தெரிவாக அமையும். நீங்கள் கடனாகப் பெற்ற தொகையின் (வட்டி தவிர்ந்த) பெறுமானத்தில், குறிப்பிட்ட தொகையிலும் கூடிய தொகையையோ அல்லது குறைந்த தொகையையோ மாதந்தோறும் நீங்கள் செலுத்தும் முன்னுரிமையை உங்களுக்கு இந்தத் திட்டம் வழங்குகிறது. ஆனால் இந்தத் முற்கொடுப்பனவுத் திட்டத்தின் அடிப்படையிலான ஈடு மூடப்பட்டது. அதாவது, முன்னறிவித்தல் இன்றி, மொத்த முதல் கொடுப்பனவையும் (வட்டியற்ற) ஒரே தடவையில் செலுத்த முடியாது. திறந்த ஈட்டுத் திட்டத்தில் இது சாத்தியமே.

### மாற்றக்கூடிய ஈடு:

ஏலவே நீங்கள் பெற்றிருக்கக்கூடிய கடன் முடிவுறாமையால், சிறந்த ஒரு பெறுமதியான வீடொன்றை வாங்குவதற்கு இன்னும் சில காலம் பொறுத்திருக்க வேண்டியிருந்தால், இந்த வகை ஈடு பற்றி உங்கள் நிதி வழங்குனருடன் கலந்தாலோசியுங்கள். இது எப்படி என்றால் நடைமுறையில் உள்ள உங்கள் கடனை, நடைமுறை வீதாசாரத்துடனும் சட்ட திட்டங்களுடன் புதிய வீட்டுக் கடனுடன் இணைத்துக்கொள்ளலாம்.

### ஒரு ஈட்டுக்கான ஒழுங்குகளைச் செய்தல்:

இதுபற்றி நீங்கள் தெரிந்திருக்க வேண்டும்.

### நடைமுறையில் இருக்கும் ஈட்டை ஏற்றுக்கொள்ளல்:

ஏலவே நடைமுறையில் இருக்கும் ஈட்டை நீங்கள் பெற்றுக்கொள்வதன் மூலம் மதிப்பீட்டுச் செலவு, சட்டச் செலவு என்பவற்றைத் தவிர்க்க முடியும். நேரத்தை மிச்சப் படுத்தும் அதேவேளை, வேறு நிறுவனங்க-

தொடர்தல் 54ம் பக்கம்

## கடுகு...

### சீனர், பிரித்தானியர், ஸ்பானியர், வன்கூவர் தீவு:

சீனர்கள் தண்டவாளம் போடுவதற்காகவே கனடா கொண்டுவரப்பட்டார்கள் என்றுதான் பரவலாகவே நம்பப்படுகின்றது. 1788இலேயே ஒரு பிரித்தானிய வணிகர் குழு 50 சீனத் தொழிலாளர்களைக் கொண்டுவந்தது. வன்கூவர் தீவிலே வணிக முகாமை அமைக்கத் திட்டம். ஆனால் அடுத்த ஆண்டே வன்கூவர் தீவு ஸ்பானியர்களின் கட்டுப்பாட்டில் வந்தது.

கைவிடப்பட்ட சீனர்களுள் பலர் உள்ளூர் பூர்வகுடிப் பெண்களையும் திருமணம் செய்து தீவிலேயே தங்கிவிட்டனர். ஸ்பானியர்கள், பின்னாளில் கனடாவாகப் போகவிருந்த நிலப் பரப்பில் அமைத்த ஒரேயொரு குடியேற்றமும் வன்கூவர் தீவிலேதான் அமைந்திருந்தது.




# பங்குகளின் விலை தரவுகளை அறிந்து கொள்ளல்



மாறன் செல்லையா
- நிதி திட்டமிடல் ஆலோசகர் -

**Jun 24 2011**

| | | |
|---|---|---|
| High | 57.60 | |
| Low | 57.08 | |
| Bid | 57.06 | |
| Ask | 57.15 | |
| Volume | 1398276 | |
| Open | 57.17 | |
| Previous close | 57.29 | |
| 52 week high | 61.28 | |
| 52 week Low | 47.75 | |
| Beta | 0.919 | |
| Market Cap | 61,738.92 | Million |
| EPS | 4.42 | |
| P/E | 12.91 | |
| PEG | 1.3 | |
| Annual dividend | 2.08 | |
| Yield | 3.6 | |

இது Jun 24 ல் Bank of Nova Scotia (T:BNS – Closing Price 57.06 ) தரவு ஆகும்.

**High / Low:** Jun 24ல் ஆகக்கூடிய விலையாக 50.48இற்கும் ஆகக் குறைந்த விலையாக 50.08 இற்கும் கை மாறியது.

**Bid / Ask:** தற்போது வாங்க இருப்பவர் 57.06 கேட்கிறார் விற்க இருப்பவர் 57.15 கேட்கிறார்.

**Volume:** Jun 19ல் கைமாறிய பங்குகளின் எண்ணிக்கை.

**Open:** முதலாவது பரிமாற்றம் கைமாறிய விலை.

**Privious Close:** Jun 23ல் கடைசிப் பரிமாற்றம் கைமாறிய விலை.

**52 week high/low:** கடந்த 52 வாரங்களும் பரிமாற்றம் நடந்த அதிகூடிய விலையும் அதிகுறைந்த விலையும்.

**Beta:** Volatility indicator முழுமையான சந்தையின் ஏற்ற இறக்கத்துடன் ஒப்பிடும் போது BNS பங்கின் ஏற்ற இறக்கம்.

**Market Cap:** விலை *மொத்தப் பங்குகளின் எண்ணிக்கை.

**EPS:** Earning per share – ஒரு பங்கிற்கு சார்பாக அறிவிக்கப்பட்ட வருமானத்தின் அளவு.

**P/E – Price earning ratio:** விலைக்கும் வருமானத்திற்குமான விகிதாசாரம். மேற் தரப்பட்ட உதாரணத்தில் 57.06 / 4.42 = 12.91


**PEG:** Price earning to Growth ratio – P/E / Annual Earning /share growth.

**Annual Dividend:** வருடாந்தம் பங்குதாரர்களுக்கு நிறுவனத்தின் இலாபத்தில் தரப்படும் பணம்/பங்கு

**Yield:** பங்கின் விலைக்கும் வருடாந்த Dividend ஆன தொடர்பு – முதலீட்டாளருக்கு கிடைக்கும் விளைவு வீதத்தில்.




ஒரு வருடத்திற்கான வரைபு




Jun 24 வரைபடம்

maran.chelliah@thaiveedu.com


■ ■ ■





# உங்கள் மனைகள் மாளிகைகளாகிட...

**$139,000**




**Midland/Mcnicoll**
Office, Unit Has A Reception Area. Good Exposure To Midland Ave. Steps To Ttc. Close To Everything.Low Maint.Fee. Everything Includes In

**$212,500**





**Markham/Mcnicoll**
Industrial Condo, Industrial / Warehouse Unit In Demand Area. Face To Markham Rd,

**$2,980,000 Plus Stock**





**Uxbridge, Ontario**
Sale Of Business, High Profitable Pioneer Gasbar With Guaranteed Margin. Newer Dbl. F.G. Tanks

**$159,000**




**Kipling / Steeles**
Condo Apt, 2+1 Bedrooms, 2 Washrooms, Must See Fully Renovated,Clean Unit Steps To Ttc,Newer Kitchen Cupboard And Countertop And Newer Appliances.Unit For Lease Also

**$240,000**




**Mccowan / Sheppard**
Condo Apt, 2 Bedrooms, 2 Washrooms, Corner Unit Lots Of Windows And The Rooms Are Filled With Sunlight. Approx. 1590 Sqft. Huge Balcony

**$249,900**



**Mccowan / Steeles**
Condo Apt, 2+1 Bedrooms, 2 Washrooms, Unobstructed View, Corner Bright & Quit, Well Maintained & Designer Upgraded Executive Unit In A Friendly And Very Quite Neighborhood.

**$269,800**




**Erbsville/ Creekside**
Att/Row/Twnhouse 2-Storey, 3 Bedrooms, 2 Washrooms, 3Br Freehold Townhouse,Entry From Garage,Open Concept,Eat In Kitchen

**$354,900**




**Major Oaks/Brock**
3+1 Bedrooms, 4 Washrooms, Lots Of Upgrades, Newly Fully Upgraded Kitchen,W/O Finished Basmt With Bedroom, Kitchen

**$419,900**




**Weston / Rutehrford**
Att/Row/Twnhouse 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms, Gorgeous Home In Demand Vellore Village. Bright & Spacious Freehold Townhouse Perfect For 1st Time Buyer And Empty Nesters

**$449,000**



**Maddock/Townline**
Detached Bungalow, 3 Bedrooms, 3 Washrooms, The Hills Of Harrowsmith Ravine Estate Collection Famous Edward Model 2232 Sq Ft

**$499,000**



**Weston Rd & Rutherford**
Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms, Stunning And Spotless Detached Home With 9Ft Ceiling On Main Floor. Thousands In Renovations And Upgrade

- digi Media -



முழுநேர வீடுவிற்பனை முகவர், Emerald Award Winner

## சத்தி மருதப்பா

Sales Representative

**416.816.1500**


Not intended to solicit properties currently listed for sale.

மேலும் பல Gas Stationகளும்
வியாபாரநிலையங்களும்
விற்பனைக்குண்டு

Century 21

**Affiliate Realty Inc.,** Brokerage
208-80 Corporate Drive,Toronto, ON M1H 3G5
Bus: **416-290-1200,** Fax: **416-290-1900**

# ATTIC INSULATION



**A well Insulated Attic will:**
**Reduce Heat Loss Through Attic**
**Save on Heating & Cooling Costs**
**Prevent Roof Rot and Mold**



**வீட்டின் நன்கு உள்ளீடு செய்யப்பட்ட பரண் (Attic)**
**பரண் (Attic) ஊடான வெப்ப இழப்பைக் குறைக்கும்**
**வெப்பமாக்கும் அல்லது குளிராக்கும் செலவீனத்தைக் குறைக்கும்**
**கூரை உக்குதலிலிருந்தும் பூஞ்சணம் பிடிப்பதிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளும்**

**Government Rebates ENDING MARCH 2011**

**மேலதிக விபரங்கட்கும் இலவச மதிப்பீட்டிற்கும் அழையுங்கள்:**



**சுப. ரவீந்திரன்**

**416- 847- 7171**

**ENERecon Insulation**

**Cell: 416- 939- 9353 Fax: 416- 847- 7181 info@enerecon.com**

STAY WARM IN WINTER . BE COOL IN SUMMER

# அதிகரித்துச் செல்லும் குடும்ப வன்முறைகள்

- த. சிவபாலு -

## குடும்ப வன்முறைகள் அதிகரித்துச் செல்கின்றனவா?

ஆண், பெண் இருவருமே மனித இனத்தைச் சார்ந்தவர்கள் எனினும் அவர்கள் உடலியலால் வேறுபட்டவர்கள். இயற்கையின் கொடை-யில் ஆண் பலசாலியாகவும், கடினமான தொழில்களைச் செய்யும் வலிமைகொண்ட உடலமைப்பை உடையவனாகவும், பெண் மென்மையான உடலமைப்பினைக் கொண் டதோடுமட்டுமல்லாமல் இனவிருத்திக்கான மூலமாகவும் விளங்குகின்றாள். பிள்ளையைத் தனது வயிற்றில் சுமத்தல், பெற்றெடுத்தல், பால்கொடுத்தல் போன்ற செயல்களோடு உடலமைப்பிலும் மாறுபட்டவளாகக் காணப் படுகின்றாள். ஆண் தனக்கு உள்ள உடல் வலிமையினால் வெளியே சென்று கடின உழைப்பினைமேற்கொள்ள பெண் வீட்டில் இருந்து வீட்டுப்பணிகளோடு பிள்ளைகளை யும் வளர்த்துவரும் பெரும் சேவையினை ஆற்றி வருவது நாமறிந்ததே. பெண்கள் குடும்பவன்முறை, வேலைத்தல துன்புறுத்-துதல், பாலியல் துன்புறுத்தல் அல்லது கற்-பழிப்பு போன்றனவும் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் தீங்கிழைப்புக்களாகும். சுர்லொட் பஞ் (Charlotte Bunch) என்னும் ஆய்வாளர் "பெண்களுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் எதிரான வன்முறைகள், உலகின் மனித உரிமை மீறல்களில் மிகவேகமாகப் பரவி வரும் வன்முறையாகும். இதன் வடிவங்கள் முனைப்பானதும் தெளிவற்றதுமானதும் இதன் விருத்தியின் ஆழ்தடங்களின் விளைவுகளை யும் கொண்டுள்ளது. ஆனால் இது உலகி லுள்ள பண்பாடுகளில் வெளிப்படாத அளவிற்கு ஆழப்பதிந்துள்ளது. இன்னும் இந்த கொடூரச் செயல் அகற்றமுடியாததாகவுள்ளது. இதன் தன்மையை ஒருமுறை அறிந்துகொண்டால் - ஒரு அதிகார அமைப்பும் தொடர்ந்து பேணப்படுகின்ற ஒரு வழியின் தராதரத்தின் அம்சமாகும். - இதனை இல்லாது அழித்-தொழிக்கமுடியும்"

உடலியல் வேறுபாடுகள் காரணமாக ஆண்கள் அதிகாரம் செலுத்தப்பிறந்தவர்கள் பெண்கள் அடங்கிப்போகவேண்டியவர்கள் என்னும் கருத்து மிக நீண்டநெடுங்காலமாக எமது சமுதாயத்தில் நிலைகொண்டுவிட்டது. ஆனாலும் தாயைத் தெய்வமாக மதிக்கும் பண்பினைக் கொண்டது எமது சமுதாயம். மனைவியைப் பெண்பிள்ளைகளை ஏன் சகோதரிகளைக் கூட சமத்துவமானவர்களாக மதியாத நிலை இன்றும் காணப்படுகின்றது. தாயிடம் அளவி லாப் பாசத்தினைக் கொண்டுள்ள ஆண் ஏனைய பெண்களை தாயின் தானத்திலிருத்திப் பார்க்க மறந்துவிடுகின்றார்கள். குடும்பத்தில் பெண்கள் தமக்குப் பாரமானவர்கள் என்ற எண்ணம் தந்தை, சகோதரங்களிடையே நிலவு வதனையும் காணக்கூடியதாகவுள்ளது. 'தாய்க்-குப்பின் தாரம்' என்னும் முதுமொழி எமது பண்பாட்டோடு இரண்டறக்கலந்தவொன்று, ஆனால் நம்மில் பலர் தாய்க்கு அடுத்த நிலையில் வைத்து தாரத்தைப்பார்க்கத் தவறு கின்றோம். அதன்விளைவாக பல குடும்பங் களில் பிணக்குக்கள் ஏற்படுகின்றன. இவை குடும்ப வன்முறைகளாகவும் வெடிக்கின்றன.

'குடும்ப வன்முறை' என்பது பல்வேறு வகைப் பட்ட தன்மைகளைக்கொண்ட பதமாகும் தவறாக நடத்துதல், கவனியாதுவிடுதல், தவறான உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டுத் தீங்கிழைத்தல், தாக்குதல் அல்லது அடித்தல், உடலுக்கு ஊறவிளைக்கக்கூடியவகையில் தாக்குதல், உடன்பாடற்ற பாலியல் வல்லுறவு, உடன்பாடற்ற பாலுறவினால் உடலுக்குத் தீங்குவிளைத்தல், ஒரு பொருளை அல்லது ஆயுதமொன்றைப்பயன்படுத்தி பாலுறவு கொள் ளுதல், குற்றவியல்சார்ந்த பாதகமான துன்-புறுத்துதல், போலிக்குற்றம் சுமத்தித் துன்பு-றுத்தல், ஏசி அல்லது மிரட்டிப் பயமுறுத்துதல், தொல்லை கொடுத்தல், தொந்தரவுசெய்தல், கேலிசெய்தல், வசைமொழிதல், அடக்குதல், பணியவைத்தல், கொலைமுயற்சி, கொலை போன்றனவற்றை உள்ளடக்கியதாகும்.

குடும்ப வன்முறை என்பது பொதுவாக வெளியே தெரிவதில்லை. கணவனுக்கும், மனைவிக்குமிடையே இடம்பெறுவதாக அல்லது ஒன்றாக இருக்கும் குடும்ப உறுப்பினர்களி-டையே ஏற்படுவதாகவும் அமைந்துவிடுகின்றது. இதனால் இவை முறையீடுசெய்யாத நிலை யில் வெளியே வருவதில்லை. குடும்ப நிலை கருதி பெரும்பாலான குடும்ப வன்முறைகள் மூடி மறைக்கப்படுகின்றன. குடும்ப அங்கத்-தவர்களிடையே உள்ள தொடர்புகளின் காரணமாக இவை வெயியே தெரிவதில்லை. குடும்ப வன்முறை என்பது சட்டத்திற்கு முர ணானது என்றாலும் வளர்ச்சியடைந்த நாடு களில் உள்ள சட்ட அமைப்புக்களுக்கும், இறுக்கமான நடைமுறைகளுக்கும் கீழை நாடுகளில் உள்ள சட்ட அமைப்புக்குமிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. சட்டத்திற்கு எதிரானதாகக் குடும்ப வன்முறை காணப் பட்டபோதிலும் அவை நாட்டுக்கு நாடு வேறு பட்டதாகக் காணப்படுகின்றது. 1999ம் ஆண்டு கனடாவில் மேற்கொள்ளப்பட்ட பொதுச் சமூக கணிப்பீட்டின் படி, திருமணமான அல்லது பொது உடன்பாட்டில் சேர்ந்துவாழுகின்ற சோடிகளிடையே (1999க்கு முந்திய ஐந்து ஆண்டு காலப்பகுதியில் - கனடாவில்) 690,000 பெண்களும், 549,000 ஆண்களும் ஏதோ ஒருவகையில் குடும்ப வன்முறைக்கு ஆளா கியுள்ளார்கள் என்பதனை ஆய்வு காட்டு கின்றது.

கனடாவில் இன்று குடும்ப வன்முறைகள் மிகப்பாரதூரமாக அதிகரித்து வருவதாக ஆய்வுகள் காட்டுகின்றன. 2002ம் ஆண்டு 94 பிரிவுகளில் உள்ள பொலீஸ் நிலையங் களில் துன்புறுத்தல் பற்றிய முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இக் கணிப்பீட்டின்படி எல்லா குடும்ப வன்முறைகளிலும் 62%மான வன்முறைகள் கணவன் மனைவி அல்லது கூடிவாழும் துணைவர்களினால் தாக்கல் செய்யப்பட்டதாகும். இதில் கூடியளவு பாதிக் கப்பட்டவர்கள் பெண்களே. இதில் 85%மான பெண்களும், 15%மான ஆண்களும் குடும்ப வன்முறைகளுக்கு ஆளாகியுள்ளனர் என பொலீஸ் அறிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றது.

சாதாரணமாக கணவன் மனைவியரிடையே அடிக்கடி இடம்பெறும் தாக்குதல் அல்லது அடிபிடி நிகழ்வு 73%மாகவும், இவற்றைத் தொடர்ந்து இடம்பெற்ற பாரதூரமான தாக்குதல்கள் 16%மாகவும், முன்னைய கண-வன் மனைவியினரால் இடம்பெற்ற பொது வான தாக்குதல் நிகழ்வுகள் 43% மாகவும் மிரட்டுதல் அல்லது கொலைப் பயமுறுத்தல் 25%மாகவும் பாரதூரமான துன்புறுத்தல் 20% மாகவும் கனடாவில் உள்ள 94 பொலிஸ் பிரிவுகளிலும் முறையிடப்பட்டுள்ளன என பொலிஸ் அறிக்கைகள் காட்டுகின்றன. (கோட்டன் 2001, யோன்சன் 1996) இவற்றை யோடி ஆன் பிறிசோசோவஸ்க்கி (Jodi-Anne Brzozowski) என்பவர் ஆதாரமாகக் காட்டு கின்றார். ஒவ்வொரு ஆண்டும் கனடிய நீதித் துறைப் புள்ளிவிபர நிலையம் பொலீஸ் திணைக்களங்களிலிருந்து தரவுகளைச் சம்ப-வங்களை ஆதாரமாகக் கொண்ட முறைப் படியான குற்ற முறையீட்டு ஆய்வின் (through the Incident-based Uniform Crime Reporting (UCR2) Survey) மூலம் சேகரிக்-கின்றது.

2002இல் இங்குள்ள பொலீஸ் நிலையங்க-ளில் வன்முறை பாதிப்புக்குள்ளான 205,000 பேரின் முறையீடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இதில் 103,001 பெண்களும் 102,447 ஆண்க ளுமாவர். குடும்ப வன்முறைப் பாதிப்புக்-குள்ளானவர்களில் 62%மானவர்கள் கணவன் மனைவி அல்லது துணையாகவுள்ளவர்க-ளின் வன்முறைக்குள்ளானவர்கள் என்பது புலனாகின்றது. எனவே குடும்பவன்முறை என்பது நெருங்கிய குடும்ப உறவினரிடை-யே அடிக்கடி நிகழ்கின்ற நிகழ்வுகளாகவும் அதன் பலனாக பொலீஸ் நிலையங்களில் முறையீடு செய்யும் நிலையும் அதிகரித்து வருவதனையும் எடுத்துக்காட்டுகின்றது. முறையீடு செய்வதிலும் ஆண்களைவிட பெண்களே அதிகளவில் முறையீடு செய்கின்-றனர். 85 % பெண்களும், 15 % ஆண்களும் குடும்ப வன்முறைக்கு ஆளாகின்றனர். பொது-வான தாக்குதலுக்கு 64% பெண்களும் 60% பெண்களும் உட்படுகிறார்கள். கணவன் மனைவியரிடையேயான பிணக்குக்களில் வன்முறைகளில் முன்னைய கணவன் மனை-வியரிடையேயான தாக்குதல்களே அதிகமாகும். கணவன் மனைவியாக உள்ளவர்களிடையே 73% அடிக்கடி இடம்பெறும் குற்றங்களாகும். இதில் 16% பாரதூரமான தாக்குதலாக முறையிடப்பட்டுள்ளன. முன்னைய துணைவரின் தாக்குதல் 43% மிரட்டுதல் 25% குற்றவியல் சார்ந்த துன்புறுத்துதல் 20% என்பன அடிக்கடி முறையிடப்படும் குற்றங்களாகக் காணப்படு கின்றன. இளம் தம்பதியினரிடையேயே கூடி

தொடர்தல் 54ம் பக்கம்


Law Office

T. JEGATHEESAN

(Barrister, Solicitor and Notary Public (on)



உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

தி. ஜெகதீசன்

(Barrister, Solicitor and Notary Public (on)

Off: 416 • 266 • 6154
Fax: 416 • 266 • 4677

2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3

ENERGY AUDIT
Gerard Ratnarajah, P. Eng.
Tel: 647-206-4494
Green Innovations For Living

# LIFETIME INSURANCE PROTECTION - WITHOUT LIFETIME INSURANCE PAYMENTS.

## Why Life's brighter with Sun *Limited Pay* Life

- How much you pay – and for how long – is guaranteed.
- Guaranteed cash values build up over time.
- Take advantage of tax-deferred growth to increase the value of your policy.

Today is a good day to learn more, so let's talk.





**Ahilan Balachandran** B.Comm CFP CLU RHU
Certified Financial Planner
Bus 416-894-2009
ahilan.balachandran@sunlife.com
www.sunlife.ca/ahilan.balachandran
2075 Kennedy Road, Suite 1300
Scarborough ON M1T 3V3

CFP

Sun Life Financial

*Mutual funds offered by Sun Life Financial Investment Services (Canada) Inc.

© Sun Life Assurance Company of Canada, 2011.

# வீடு வாங்கப் போகி...

49ம் பக்கத் தொடர்ச்சி...

ளுடன் ஈட்டுத்தொகை குறித்த பேரம் பேச வேண்டிய தேவை இருக்காது. சில சந்தர்ப்பங்களில் நடைமுறையில் இருக்கும் ஈடு, சந்தை நிலைவரத்திலும் குறைவான வட்டி வீதங்களைக் கொண்டிருக்கலாம். இன்னொரு வகையில் சொல்வதானால், புதிய ஈட்டைப் பெற்றுக்கொள்ள, ஆரம்பத்திலிருந்து முயற்சிக்க வேண்டும்.

## விற்பவரே மீளப் பெற்றுக்கொள்ளுதல்:

வீட்டு உரிமையாளரே உங்களது நிதி வழங்குனராகவும் இருக்கலாம். அப்படியான சந்தர்ப்பங்களின்போது, வீட்டின் சில பகுதிகளையோ அல்லது முழு வீட்டையுமோ வீட்டு உரிமையாளர் கையகப்படுத்தி வைத்திருக்கலாம். சமயங்களில், நிதி நிறுவனங்களை விடக் குறைவான வட்டி வீதத்திலும் உங்கள் உரிமையாளர் கடன் வழங்கலாம்.

## வட்டி வீதங்கள்:

நிதியைப் பெற்றுக்கொள்வதற்காக நீங்கள் செலவிடும் தொகையே வட்டி. நிலையான வட்டி வீதம் மற்றும் மாறக்கூடிய வட்டி வீதம் என வட்டி வீதம் இரு வகைப்படும்.

## நிலையான வட்டி வீதம்:

நிலையான வட்டி வீதம் ஈட்டுத் தவணை முடியும் வரையில் ஒரே வீதத்தைக் கொண்டிருக்கும். இதன் அடிப்படையில் உங்கள் பொடுப்பனவு நிரலை முன்கூட்டியே அமைத்துக்கொள்ளலாம். உங்களது தவணைகளின் அடிப்படையில் திறந்த அல்லது மூடிய ஈட்டு வசதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

உங்களுக்கு உயர்வட்டி விகித அடமானத் தொகை தேவைப்பட்டால் அதை நீண்ட காலத் தவணை முறையில் அதாவது குறைந்த பட்சம் 3 வருட காலத்தில் நீங்கள் செலுத்தலாம். ஆகையால் குறுகிய கால இடைவெளியில் வட்டிவிகிதம் உயர்ந்தாலும் நீங்கள் கவலைப்படவேண்டியதில்லை. பொதுவாக அடமானங்கள் 6 மாதங்கள் மற்றும் ஒரு வருடகாலத்திற்கு வைக்கப்படும். அவை இரண்டிற்கும் உயர் வட்டி விகிதங்கள் தான்.

## மாறக்கூடிய வட்டி விகிதங்கள்:

மாறக்கூடிய வட்டி விகிதங்கள் என்றால் சந்தை நிலவரப்படி அவ்வப்போது கணக்கிடப்படும். நீங்கள் தவணையாகக் கட்டும் அசல் தொகை மாறும். வட்டி விகிதங்கள் குறைந்தால் உங்களுக்கு லாபம் என்றாலும், வட்டி விகிதங்கள் உயர்ந்து கொண்டே போனால் அதே தவணைக் காலத்துக்கு நிரந்தர வட்டிவிகித அடமானத்திற்கு மாறலாம். ஆயினும், உங்களுடைய வரையறுக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில், நிச்சயமற்ற தன்மையை நீங்கள் நாடவேண்டாம் என்பது எமது அறிவுரை. இல்லாதவிடத்து மன அமைதிக்காக நீங்கள் பெரிய விலை கொடுக்க நேரிடலாம்.

*தொடரும்...*

vallikkannan@thaiveedu.com

■ ■ ■

# அதிகரித்துச் செல்...

52ம் பக்கத் தொடர்ச்சி...

யளவு குடும்ப வன்முறை காணப்படுகின்றது. 25க்கும் 34வயதுக்குமிடையேயான துணைவர்களிடையேயான வன்முறைகளில் ஒவ்வொரு 100,000 பெண்களிலும் 678 பேரும். 45க்கும் 54வயதிற்கும் இடைப்பட்டவர்களில் 217பேரும், 55க்கு மேற்பட்டவர்களில் 43பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிள்ளைகளைப் பாலியல் ரீதியாக தொந்தரவு செய்தல், பாலியற்படத்திற்கு, அல்லது இழிநிலைப்படமாக்கலுக்குக் குழந்தைகளைப் பாவித்தல், பிள்ளைகளை விலைமாதர்களாகப் பயன்படுத்துதல், கற்பழிக்கப்படுதல் என்பன ஒப்பீட்டளவில் பெண்பிள்ளைகளே கூடியளவில் பாதிக்கப்படுகின்றார்கள் எனினும் ஆண் பிள்ளைகளும் இன்று இவ்வித பாதிப்புக்களுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள் என்பதனை அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. பாலியல் முறைகேடு அல்லது தாக்குதல் என்பதனை உலக நாடுகள் அனைத்தும் சட்டப்படி குற்றமாக குற்றவியல் சட்டக்கோப்பில் பதிந்து நடைமுறைப்படுத்துகின்றன எனினும் இது நாட்டுக்கு நாடு, கலாச்சாரத்திற்குக் கலாச்சாரம் வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. பொதுவாக பாலியல் குற்றமிழைத்தல் என்பதனைக் கனடிய குற்றவியற் கோவை பின்வருமாறு வரையறுக்கின்றது.

## பாலியல் வன்முறை - 1ம் நிலை:

பாதிக்கப்பட்டவருக்கு உடலில் சாதாரண காயங்களை ஏற்படுத்துவது. இது அதிகூடியளவு 10 வருடங்கள் வரையான சிறைத் தண்டனையைத் தருகின்றது.

## பாலியல் வன்முறை - 2ம் நிலை:

ஒரு ஆயுதத்துடன் தொடர்புடையது, பயமுறுத்தல் அல்லது உடலுக்கு ஊறுவிளைத்தல். இது அதிகூடியளவு 14 வருடங்கள் வரையான சிறைத்தண்டனையைப் பெற்றுத் தருகின்றது.

## பாலியல் வன்முறை - 3ம் நிலை:

காயமாகுதல், ஊனமாகுதல், வாழ்வை ஆபத்தாகுதல் அல்லது உருக்குலைதல் போன்றன பாலியல் வன்முறையின் விளைவால் ஏற்படுதல். இக்குற்றச் செயலுக்கு வாழ்நாள் முழுவதும் சிறைத்தண்டனையினை மிகக் கூடுதலாகப் பெற்றுத்தருகின்றது.

ஆரம்பத்தில் கனடாவில் பெண்கள் கணவனின் சொத்தாகவும் அவள் இன்னொருவரால் கற்பழிக்கப்பட்டால் அது கணவனிடமிருந்து திருடப்பட்ட ஒன்றாகவும் கருதப்பட்டது. பெண்கள் இரண்டாம் நிலைக் குடிமக்களாகவே கருதப்பட்டனர். ஆனால் கனேடிய மனித உரிமைப் பட்டயத்தின்படி பெண்கள் சமமானவர்களாகச் சட்டப்படி கணிக்கப்பட்டார்கள். அதற்கு முன்னர் பெண்களின் உரிமைகள் மறுக்கப்பட்டே வந்துள்ளன. பெண்கள் கற்பளிப்பினால் பாதிக்கப்பட்டவர்களானாலும் அவர்கள் உடலுறவுக்கு ஆளாக வேண்டியவர்களாகவே காணப்பட்டனர். 1983க்கு முன்னர் கற்பழிப்பு அல்லது பாலியல் வன்முறை என்பது ஆண்பெண் உடலுறவை மட்டும் கருதுவதாகும். ஆதாவது பெண்ணின் விருப்பமின்றி ஒரு ஆண் பெண்ணைப் புணர்வதினையே பாலியல் வன்முறை எனக் கருதப்பட்டது. ஆனால் இன்று மேற்கூறிய மூன்று அம்சங்களில் இதனை நோக்குவதனைக் காணலாம்.

கனடிய புள்ளிவிபரவியலின் (1999) படி 1997ல் 30,735 பாலியற் குற்றங்கள் பொலீசில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இதில் 85% 1ம் நிலையைச் சார்ந்தது. இது 1983 இலிருந்து குறைவானதாகும். 1996ல் 5100 பாலியல் வன்முறைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இது 1987இல் பதிவுசெய்யப்பட்டதிலும் பார்க்க 6% குறைவானது.

கனடாவில் முறையீடுசெய்யப்பட்டுள்ள குற்றச் செயல்களில் பாலியற் துன்புறுத்துதல் அல்லது பாலியல் வன்முறை மிகக் குறைந்தளவே என்பதும் கருத்திற்கொள்த்தக்கது. கொலை, களவு, ஏமாற்றுதல், ஆட்கடத்துதல் போன்ற குற்றச்செயல்களோடு ஒப்பீட்டு நோக்கும் போது பாலியல் வன்முறைகள், அல்லது தீங்கிழைத்தல் குறைவானதாகும். பாலியல் வன்முறைகள், பாலியற் தொல்லைகள் என்பன பல மூடிமறைக்கப்படுவதனால் பொலீசில் முறையிடுவது இல்லை என்ற கருத்தும் உண்டு.

sivapalu.t@thaiveedu.com

■ ■ ■




JULY MONTH SPECIAL
$214,900.00
3 Bed Rooms
1 Wash Room
1 Kitchen
BUYING PROPERTY
Whether you are buying your First Home, a new Family HOME or an investment Property, it is important that you find Right Property for you, I can help!
HOMELIFE
HIGHER STANDARDS
Whether Starter Home or Dream Home,
I Will Help You Find Your Happy Home!
Office: 905.201.9977
Fax: 416.332.1024
7 Eastvale Drive, Unit 205,
Markham, ON, L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR ®
MLS
Raj Nadarajah
Sales Representative
Bus: 416.333.6115
Email: nanohomes@gmail.com
Low
Commissioin
Call For Free
Market Evaluation

# கடன் வாங்குவது பற்றி தெரிந்து கொள்ளுங்கள்



சுரேன் சொர்ணலிங்கம்

### கடன் வாங்குவது பற்றி நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டிய சில விடயங்கள்:

கனடியர்கள் கிரெடிட் கார்டுகளை பெரிதும் விரும்பினாலும் அதன் உயர்ந்த வட்டி விகிதங்களை பற்றிதான் பெரிதும் கவலைப்படுகிறார்கள். கடன் என்று வரும்போது நீங்கள் ஓட்டுனர் இருக்கையில் இருப்பது போன்று மிக கவனமாக செயல்படவேண்டும்.

நீங்கள் ஒரு நாணயமான மனிதர் என்ற நற்பெயர் உங்களுக்கு இருந்தால் எந்த நிதி நிறுவனமும் உங்களுக்கு கடன் தர தயாராகவே இருக்கும். Cars, Furniture மற்றும் home renovations போன்றவைகளுக்கு நீங்கள் ஒவ்வொரு கடையாக சென்று நன்கு பார்த்த பின்னரே யோசனை செய்து வாங்குவீர்கள் அதைப்போல கடன் வாங்குவதற்கு முன் நீங்கள் சில முக்கியமான விடயங்களை சிந்தித்துப் பார்ப்பது அவசியம்.

அவையாவன...

### உங்கள் கடன் செலுத்தும் நாணயமான வரலாறு (Credit History):

கனடாவின் இரண்டு மிகப்பெரிய Credit நிறுவனங்களான Equifax மற்றும் Trasunion நிறுவனங்களிடமிருந்து உங்கள் Credit report ஐ நீங்கள் வாங்கி, உங்களுக்கு கடன் தர விரும்பும் நிறுவனங்களிடம் சமர்ப்பிக்க தயாராக இருங்கள். உங்கள் Credit report உங்கள் கடன் திருப்பிச் செலுத்தும் நாணயத்தைப்பற்றி தெளிவாக சொல்லும். நீங்கள் எவ்வளவு விரைவாக உங்கள் billsகளுக்கான கட்டணங்களை செலுத்துகிறீர்கள், ஏதாவது பணம் சம்பந்தமான சர்ச்சைகளில் நீங்கள் சிக்கியுள்ளீர்களா, இன்னொருவர் செய்த மோசடியில் நீங்கள் பலியாகிருக்கிறீர்களா என்ற கேள்விகளுக்கெல்லாம் அதில் பதில் இருக்கும். நீங்கள் உங்கள் Credit cardஐ பார்க்க தான் முடியும். ஆனால் அதில் ஒரு பிரதி உங்களுக்கு வேண்டுமெனில், உங்கள் இரண்டு ID களுடன் கூடிய ஒரு வேண்டுதல் கடிதத்தை அவர்களுக்கு நீங்கள் அனுப்பவேண்டும். Online மூலம் நீங்கள் அதை விரைவாக பெறமுடியும். என்றாலும், உங்கள் வேண்டுகோளை அனுப்ப செலவு அதிகமாகும்.

### உங்களுக்கு கடன் தருபவர்கள் உங்கள் Credit Scoreஐ மிக உன்னிப்பாக கவனிப்பார்கள்:

உங்கள் Credit கணக்கிற்கும் மற்றும் நீங்கள் கடன் செலுத்திய நாணயத்திற்கும் மிக வித்தியாசம் உண்டு. இரண்டும் ஒரே மாதிரியானது அல்ல. நீங்கள் சுமார் 25 டாலர் செலுத்தி Online மூலம் Credit bureaus களிடமிருந்து உங்கள் Credit scoreஐ பெறலாம். நீங்கள் கடன் செலுத்திய வரலாறு நீங்கள் பயன்படுத்திய அதிகப்பட்ச கடன் தொகை போன்ற விவரங்கள் அதில் இருக்கும். குறைந்த சுட்டெண் 300ல் இருந்து கூடுதல் சுட்டெண் 900 வரை உள்ள கணக்கு உங்கள் score ஆகும். கூடுதல் தொகை உங்களுக்கு பயனுள்ள வகையில் இருக்கும்.

### உங்கள் Credit report மிகச்சரியானதாக இருக்கவேண்டும்:

உங்கள் கடன் சம்பந்தமான கணக்கு மிகச் சரியானதாகவும் மற்றும் நடப்பில் உள்ளதாகவும் இருக்கவேண்டும். அப்படி இல்லை என்றால் அது சம்பந்தமாக credit bureau விடம் விசாரியுங்கள். நீங்கள் சொல்வது போன்று உங்களுக்கு தரப்பட்ட தகவல் தவறானதா என்பதை உறுதிசெய்ய Credit bureau உடனே ஒரு bank அல்லது Cellphone Company போன்ற தங்கள் Credit granterஐ தொடர்பு கொள்ளும் இதில் தாமதங்களை தவிர்க்க முதலில் நீங்களே credit granterஐ அணுகலாம். அதற்கு பிறகு credit bureau விடம் நீங்கள் பேசிப்பார்க்கலாம். உங்கள் credit reportல் உள்ளதவறு கண்டுபிடிக்கப் பட்டவுடன் Credit bureau அதை 30 நாட்களுக்குள் (Alberta என்றால் 90 நாட்கள்) சரி செய்தாக வேண்டும். Credigranter தவறை சரியாக கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் அது தொடர்பாக credit bureauக்கு நீங்கள் ஒரு தகவல் தெரிவிக்க வேண்டும். அந்தத் தகவல் உங்கள் credit reportல் குறிப்பிடப்படும்.

### உங்கள் credit scoreஐ நீங்கள் மேம்படுத்தவேண்டும்:

நீங்கள் உங்கள் கடன்களை தவறாமல் செலுத்துபவர் மற்றும் ஒரு நாணயமான மனிதர் என்ற நற்பெயரை, நீங்கள் எடுக்க வேண்டும். அது உங்கள் credit scoreஐ மிக உயரச் செய்யும். இதற்கு உங்களால் முடியவில்லை என்றால் நீங்கள் செலுத்த வேண்டிய தவணைத் தொகையை அதற்குரிய தேதிக்கு, ஒரு சில நாட்கள் முன்னதாக செலுத்தி விடவேண்டும். உங்கள் கிரெடிட் கார்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் தொகையைக் காட்டிலும் குறைவான பணத்தையே கடனாகப் பெறுங்கள். மேலும் ஒரே நேரத்தில் பல கடன் விண்ணப்பங்களை சமர்ப்பிக்காதீர்கள் ஏனெனில் உங்கள் credit scoreஐ விட நீங்கள் எதிர்பார்க்கும் கடன் மிக அதிகமாக இருக்கும்.

### ஒரு நாணயமான மனிதர் என்ற பெயரை நீங்கள் பெறவேண்டும்:

உங்களுக்கென ஒரு சிறந்த credit history ஐ நீங்கள் வைத்திருக்கவேண்டும். நீங்கள் அடிக்கடி கடன் வாங்கி, அதை தவறாமல் செலுத்தி இருக்கிறீர்கள் என்றால் தான் ஒரு அதிக அளவு credit scoreஐ உங்கள் பெயருக்கு பின்னால் நீங்கள் வைத்திருக்க முடியும். இதற்கு ஒரு கிரெடிட் கார்டுக்கு விண்ணப்பம் செய்து, அதை பெற்று, அதைபயன்படுத்தவும் செய்யவேண்டும். நீங்கள் கொடுக்கல், வாங்கலை சரியாக செய்து, நீங்கள் செலுத்த வேண்டிய தவணைகளை சரியான நேரத்தில் செலுத்தி, உங்கள் பெயரில் பெரிய பாக்கி தொகை எதுவும் இல்லாமல் இருக்கும் பட்சத்தில் தான் உங்களுக்கு கிரெடிட் கார்ட் வழங்கிய நிறுவனம் Credit bureausகளுக்கு உங்களுக்கு சாதகமான தகவல்களை அளிக்கும். நீங்கள் முதலிலேயே கொஞ்சம் அதிகத் தொகை செலுத்தி ஒரு secured credit card வாங்கிவிடுங்கள். Secured credit card களுக்கான குறைந்த வட்டி விகிதங்கள் மற்றும் பிற விபரங்களை நன்கு விசாரித்து தெரிந்து கொள்ளுங்கள். உங்களுக்காக ஒருவர் பிணைக் கையெழுத்து போட்டால் நீங்கள் எளிதாக கடன்வாங்க முடியும். ஆனால் அந்த கடனை நீங்கள் திருப்பிச் செலுத்தவில்லை என்றால் அந்த மனிதர் தான் மாட்டவேண்டியது வரும்.

### உங்களுக்கு பிணைக் கையெழுத்து போட யாராவது ஒருவர் தேவை:

உங்களிடம் பணம் இல்லாமல் இருந்தாலோ அல்லது நீங்கள் ஏழையாக இருந்தாலோ நீங்கள் கடன் பெறுவது மிகச் சிரமம். அதிக அளவு credit score உள்ள யாராவது ஒருவர் உங்களுக்காக பிணைக் கையெழுத்து போட்டால்தான், உங்களால் கடன் வாங்க முடியும். நீங்கள் உங்கள் கடன் தவணைத் தொகைகளை செலுத்த தவறினால் உங்களுக்கு பிணைக் கையெழுத்து போட்டவர்களிடமிருந்து, உங்களுக்கு கடன் தந்தவர்கள், பணத்தை வசூல் செய்து கொள்வார்கள். நீங்கள் வாங்கும் ஒரு கடனுக்காக உங்கள் நண்பர்கள் அல்லது குடும்பத்தினர் உங்களுக்கு பிணைக் கையெழுத்து போடுவது என்பது உங்களுக்கு அவர்கள் செய்யும் பெரிய உபகாரமாகும். ஆகையால் பணம் செலுத்துவது சம்பந்தமான ஒரு குறிப்பு அட்டவணையை நீங்கள் ஒப்பந்தத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். உங்கள் உறவு முறையை பாதுகாக்கும் ஒரு தொழில் தர்மமாக அது அமையும்.

### ஒரு தனி நபர் கடன் (personal line of credit) வாங்குங்கள்:

தனி நபர் கடன்கள் மிக குறைந்தவட்டி விகிதங்களில் கிடைக்கும். அது அதிக லாபம் தரக்கூடியது. ஒரு குறிப்பிட்ட கடன் தொகையை உங்கள் பெயரில் ஒதுக்கியபின், நீங்கள் விரும்பிய அளவு அதிலிருந்து நீங்கள் கடனாக பெறமுடியும். பின்னர் ஒவ்வொரு மாதமும் ஒரு குறைந்த தொகையை வட்டியுடன் சேர்த்து நீங்கள் கட்டவேண்டி வரும். ஆனால் இந்த மாதிரியான கடன்களுக்கு வட்டி மட்டும் மாறும் இயல்புடையது மற்றும் ஏற்றத்தாழ்வுடையது. நிரந்தரமான வட்டிவிகிதங்களை நீங்கள் விரும்பினால் ஒரு மரபு முறையான கடனைத் தான் நீங்கள் வாங்க வேண்டும்.

### Secured அல்லது Unsecured வகை கடன்கள்:

உத்தரவாதமுள்ள மற்றும் கடன்பத்திர பாதுகாப்பு உள்ள கடன்களை அளிக்கவே பல நிதிநிறுவனங்களும் விரும்புகின்றன. ஏனெனில் பெரும் பணத்தொகையை கடனாக பெற்ற பின் நிறைய பேர் மனம் மாற்றமடைந்து பணத்தை செலுத்தாமல் இருந்து விடுவார்கள் என்பதை அவர்கள் அறிவார்கள். ஆகையால் நீங்கள் உங்கள் அசையா சொத்துக்கள் மற்றும் மூலதனங்களை உத்தரவாதமாக அளித்து கடனை பெறவேண்டும். மேற்கண்ட இரண்டு வகை கடன்களும் வங்கியின் primerate அடிப்படையில் வழங்கப்படும். வட்டி prime rateஐவிட கூடுதல் 1 சதவீதம் அல்லது கூடுதல் 3 சதவீதம் வரை இருக்கும். நீங்கள் உங்கள் வீட்டை அடமானம் வைத்து கடன் வாங்கினால் நிறையபணத்தை மிச்சப்படுத்த முடியும். நீங்கள் செலுத்த வேண்டிய குறைந்த பட்ச கடன் தொகையைவிட அதிகம் செலுத்தினாலே போதும். நீங்கள் கடன் தொல்லையிலிருந்து நிரந்தரமாக உங்களை தப்ப வைக்க முடியும்.

### கிரெடிட் கார்டுகளுக்கு கடன் வாங்குவது அதிக செலவுள்ள விடயம்:

பெரும்பாலான கிரெடிட் கார்டுகள் 18 முதல் 20 சதவீதம் என மிக உயர்ந்த வருடாந்திர வட்டி விகிதங்களையே கொண்டுள்ளன. ஒரு வருடத்தில் ஒன்று அல்லது இரண்டு தவணைகள் கட்டாமல் இருந்தால் அதற்கு 25 சதவீதம் கூடுதல் வட்டி செலுத்த வேண்டியது வரும். மாதத்திற்கு மாதம் உங்கள் Credit cardல் நீங்கள் செலுத்த வேண்டிய பாக்கி கூடிக்கொண்டே வந்தால், புதிய பொருட்களை வாங்குவதற்கான grace period 20 முதல் 25 நாட்களை நீங்கள் இழந்து விடுவீர்கள். கிரெடிட் கார்டை வைத்து முன்பணம் பெறுவதும் அதிக செலவை இழுத்துவைக்கும். அதற்கு முதலாம் நாளிலிருந்து வட்டி மற்றும் முன் பணத்திற்கான கட்டணம் ஆகியன செலுத்த வேண்டும். ஆகையால் கிரெடிட் கார்டை, பணம் நீங்கள் கையில் எடுத்து வராமல் இருக்கும் நேரத்தில் ஒரு வசதிக்காக மட்டுமே பயன்படுத்துங்கள். மேலும் குறைந்த வட்டி விகிதம் உள்ள கிரெடிட் கார்டையே வாங்குங்கள்.

### pay day கடன்கள் வாங்காதீர்கள்:

பெரிய வங்கிகள் அல்லாமல் சிறிய நிதி நிறுவனங்கள் Pay day கடன்கள் என வழங்குகின்றன. இதற்கு நீங்கள் 18வயது நிரம்பியவராக இருக்கவேண்டும். நிரந்தரமான முகவரி இருக்கவேண்டும். மேலும் உங்களுக்கு நிரந்தர வருமானம் மற்றும் உங்கள் வங்கி கணக்கில் நிறைய இருப்புத்தொகை ஆகியன இருக்கவேண்டும். நீங்கள் பணத்தை திருப்பி செலுத்துவதற்கு ஆதாரமாக பின் தேதியிட்ட ஒரு chque அல்லது ஒரு with drawal form நீங்கள் கொடுக்கவேண்டும். இந்த மாதிரியான pay day loanகளுக்கு அதிக செலவாகும். ஏனெனில் அனைத்து கட்டணங்களையும் உங்களிடமிருந்தே வசூலித்து விடுவார்கள். இரண்டு வாரங்களுக்கான 300 டெலர் கடனுக்கு நீங்கள் கிட்டத்தட்ட 50 டெலர் கட்டணமாகச் செலுத்த வேண்டும். அதாவது வருடாந்திர வட்டி 435 சதவீதம் நீங்கள் கட்டவேண்டி வரும்.

surendran.sornalingam@thaiveedu.com

■ ■ ■



# FOR ALL YOUR REAL ESTATE NEEDS

RK
The Driving Force Behind Your Real Estate Decision

EXPRERIECE THAT WILL MOVE YOU

## RAJEEF KONESWARAN

BROKER



416.568.1078

RE/MAX®

**Re/Max Vision Realty Brokerage**

2210 Markhan Road, Toronto, Ontario M1B 5V6,
Tel:416 321-2228

digi Media


Atticare
CARE AS IF IT'S OUR OWN
atticare.com
கோடைகாலத்தை
எதிர்கொள்ள நீங்கள் தயாரா?
குளிரூட்டியின்(A/C) பாவனையைக் கட்டுப்படுத்துங்கள்
Before
Installing rafter vents
Blowing insulation
After
ஒரு வீட்டில் அதிகளவான வெப்ப இழப்பு அட்டிக் ஊடாகவே இடம்பெறுகின்றது. வெப்பக் காற்று எப்போதும் குளிரான இடத்திற்கு வர முயற்சிக்கும். அதனால் அட்டிக்கில் அடைபட்டுள்ள உள்ள வெப்பக் காற்று வீட்டினுள்ளே வர முயற்சிக்கும். இதனால் உங்கள் வீடு வெப்பமடைவதுடன் குளிரூட்டியையும்(A/C) அதிக நேரம் இயங்க வைக்கின்றது. இந்த நீடித்த பாவனையினால் உங்களின் மின்கட்டணம் அதிகரிக்கின்றது.
எமது சேவைகள்
Attic insulation
Ice damming
Rafter vents
Air leakage
Attic Insulation
416.556.6115
save more than 30%
Call now to take control of your energy costs
Insulating your attic is the number one way to make your home energy efficient
Better Attic · Better Living Hot in Winter. Cool in summer
info@atticare.com
atticare.com
Attic Insulation
உடனே அழையுங்கள்
416.556.6115
1.800.556.6006
PRABHA
SINNA
உங்கள் சக்திவலு செலவை கட்டுப்படுத்துவதற்கு உடனே தொடர்பு கொள்ளுங்கள்
உங்கள் வீடு சக்தி சிக்கனம் மிக்கதாக இருப்பதற்கு அட்டிக் இன்சுலேஷனே சிறந்தது
சிறந்த அட்டிக் - சொகுசான வாழ்க்கை
Hot in winter. Cool in summer
ttsoft.ca


RE/MAX
CALL YATHAVANN TO SELL YOUR HOME FAST AND MAX $$$
BUY/SELL & ENJOY A SIGHT OF TORONTO FROM AIR.*
Finch & Birchmount
1+1 Bedrooms, 1 Washrooms
$ 178,800
Warden & Finch
3 Bedrooms, 2 Washrooms
$ 185,000
1 Km South Of Lawrence
2+1 Bedrooms, 1 Washrooms
$ 209,800
Eglinton & Sloane
1+1 Bedrooms, 1 Washrooms
$ 239,900
Mccowen & Steeles
2+1 Bedrooms, 2 Washrooms
$ 249,500
Kennedy & Ellesmere
3 Bedrooms, 3 Washrooms
$ 278,900
Bellamy & Eglinton
3+1 Bedrooms, 2 Washrooms
$ 389,000
Yonge & Finch
2 Bedrooms, 2 Washrooms
$ 399,900
Audley & Taunton
4 Bedrooms, 3 Washrooms
$ 414,900
Mccowan & Bur Oak
3+1 Bedrooms, 3 Washrooms
$ 469,900
Keele & Lawrence
3 Bedrooms, 1 Washrooms
$ 599,900
9th Line & 16th Ave
3 Bedrooms, 3 Washrooms
$ 409,000
Attention Buyers
* No down payment 100% financing
* Financing available for first buyers, self employed & new immigrants
* Up to 5% cash back & lowest interest rates guaranteed.
* I can help you with bad credit or any credit issues
* Renters: Why pay rent when you can Own!
RE/MAX®
Crossroads Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Not intended to solicit buyers/ sellers under representation agreement
* some conditions apply
Yathavann Selvarajah
Sales Representative
Dir : 416-992-4474
Office : 416-491-4002
www.buzzmetoronto.com



# AROUND THE WORLD WITH SERANDIB!

**Special Guided Tours to**

| | | |
|---|---|---|
| India | Srilanka | Malaysia |
| Thailand | Singapore | Bali |
| China | Korea | Japan |
| Vietnam | Laos | Tibet |
| Egypt | | |

** The tours can be arranged according to individual needs

## Serandib Travel

*Your satisfaction is our success*

Summer Carrabin all-inclusive Special Packages
**Starting from 349.00 + Taxes**


SriLankan Emirates ETIHAD FLY KINGFISHER QATAR JET AIRWAYS KUWAIT AIRWAYS GULF AIR

tico.ca IATA ASTA PATA

**SERANDIB TRAVEL 1**
**2075 Lawrence Ave E Suite 202**
**1-888-207-0902, 416-750-0009 Montreal : 514-448-1389**
**Calgary : 403-770-9647 New York : 716-408-0342**

Email: info@serandibtravel.com Web : www.serandibtravel.com

* conditions apply



# Hata Yoga PROGRAM

*with an Isha Yoga Teacher*

**Hata Yoga,** a 3-day program, is an opportunity to learn Surya Namaskar (Sun Salutation) along with a series of asanas (yoga postures). The program does not require any previous experience in yoga, nor particular physical agility. Participants need not have gone through any previous Isha Programs.

In this program, the postures are imparted in depth, enabling you to continue to practice them at home. Isha Hata Yoga is far beyond being a mere physical exercise, or simply bending the body. This comprehensive set of asanas is scientifically designed in such a way that through regular practice, one can attain to a certain mastery over the body and mind. Isha Hata Yoga not only improves health and well-being, but also brings the necessary balance within oneself to experience higher levels of energy. As a preparatory step for other Isha Yoga practices, it significantly enhances the experience of kriyas (an internal energy process) and meditation.



*"Ha" means sun and "Ta" means moon. When you want to experience energies of a higher dimension then there is a need to keep the dualities of the sun and moon, this 'Ha' and 'Ta' balanced. By practicing Hata Yoga, you can bring a balance that becomes a foundation to climb the ladder to the Divine. – Sadhguru*

## Program Information

| | |
|---|---|
| **Date:** | 15th - 17th July 2011 |
| **Time:** | Friday - 6.30pm to 9.30pm<br>Saturday - 8am to 1:30pm<br>Sunday - 8am to 1pm |
| **Venue:** | (Intersection: Finch & Middlefield)<br>5321 Finch Ave East<br>Toronto, ON M1S 5W2 - Canada<br>toronto@ishafoundation.org |

*Founded by world renowned yogi and mystic, Sadhguru, Isha Foundation is a non-religious, not-for-profit, public service organization, which addresses all aspects of human wellbeing.*

**Other Isha Yoga Programs:** The **Inner Engineering Online** program offers you 7 proven methods and guided meditations from the distilled essence of yoga to transform your life, and live at your peak health, wellness and joy. Upon completion, one is eligible to participate in the on-site program which includes the transmission of Shambhavi Mahamudra, a powerful 21 minute process gleaned from the ancient yogic sciences. Together the program and practices establish health and vitality, enhance mental calm and clarity, and instill a deep sense of joy. www.innerengineering.com
**Inner Engineering Retreat** is another possibility to experience this powerful process as a 4-day residential program at Isha Institute of Inner Sciences, TN. **IERetreat@ishafoundation.org**

isha

For registration **1-866-424-ISHA or www.ishafoundation.org**

# பறவைகள்

## தொடர் - 2



**பூர்வீகன்**

*சென்றமாதத் தொடர்...*

அதிகாலை வேளையில் எங்கள் வீட்டுமுற்றத்திலும் வீட்டுத்தோட்டத்திலும் வளர்ந்திருக்கும் மா, பலா, வேம்பு போன்ற மரங்களில் ஒரு சிறிய பறவை தன் கீச்சுக் குரலால் ஓசை எழுப்பும் இந்த ஓசை நம் குடும்பப் பெண்களுக்கு அதிகாலையில் துயில் எழுப்பும் மணி ஓசையாய்க்கொண்டார்கள். இந்தப்பறவையைக் கருவிக்குருவி என்று அழைப்பார்கள். உடல் முழுக்கக் கருமை நிறமனாது. அதன் வால்பகுதியில் இரண்டொரு வெள்ளைச்சிறகுகளும் உண்டு. இதன் ஓசையைக் கிராமப்புறப் பெண்கள் தங்களுக்கு அதிகாலையில் எழுந்து கருமங்களாற்ற விடுக்கப்படும் அழைப்பாகவும் தங்களுக்கு ஏற்ற மாதிரி இந்தக் 'க்கீகீ' என்ற சத்ததை மொழி பெயர்த்தார்கள் 'ச்சீ' "எழும்படி சீதேவி முத்தத்தைக் கூட்டிட சீதேவி" என்று தங்கள் காலைக்கடனை நினைவூட்டும் அழைப்பாகக் கொண்டார்கள் என்ற செய்தியும் சிறுபராயத்தில் அறிந்தோம்.

இனிமேல் நம் புராணஇதிகாசங்களில் பறவைகள் பற்றிய செய்திகள் நிறைய உண்டு. காக்கைக்கு ஒரு கவளமிட்டுக் கூப்பிடுவீரே என்ற ஒரு பாடல் உண்டு. இந்துக்களுக்குக் குறிப்பாகத் தமிழர்களுக்கு வருடத்தில் புரட்டாசி மாதத்தில் வரும் சனிக்கிழமை என்றதும் நவக்கிரகங்களில் ஒன்றான சனீஸ் வரனும் அவரது வாகனமான காகமும் தான் முக்கியம் பெறுகிறது. புரட்டாசி மாசச்சனிக் கிழமைகளில் எல்லா இந்துக்களின் வீடுகளிலும் விரதம் அனுட்டித்துப் புனிதமான சைவ உணவு தாயாரித்து உண்ணும் முன்பு காகத்தை அழைத்து உணவு படைத்த பின் தான் உணவு அருந்துவார்கள். விநாயகப் பொருமான் காக வடிவில் சென்று அகத்திய முனிவரின் கமண்டலத்தில் இருந்த கங்கை நீரைக் கவிழ்த்துத் தமிழ் நாட்டில் காவிரி ஆறு பெருகவைத்தார் என்றும் படித்தோம். தனக்குக் கிடைத்த உணவைத்தான் தனித்து உண்ணாது தன் இனத்தைக் கூவி அழைத்துப் பகுந்துண்ணும் செயலால் காகம் ஒற்றுமைக்கும் உதாரணமாய்ச் சொல்வார்கள். கந்தபுராணத்தில் வரும் சூரனை முருகப் பெருமான் கொன்றபோது அவனின் தவவலிமையால் சேவலும்மயிலும் ஆனான் என்றும் சேவலை முருகன் தன்கொடியாகவும் மயிலைத் தன் வாகனமாகவும் கொண்டார் என்றும் புராணம் பேசுகிறது. இன்றும் காத்தல் கடவுளான திருமால் கருடனையும், படைப்புக் கடவளான பிரம்மா அன்னத்தையும் வாகனமாகக் கொண்டதும் இந்துசமயக் கதைகள். மதுரை மீனாட்சி அம்மனின் திருக்கரத்தி பச்சைக்கிளியை ஏந்தியவராய்க்காட்சி தருவதும் இப்பறவை இனங்கள் இந்து சமய வாழ்வோடு இணைந்துள்ளதைக் காண்கிறோம்.

இனித்தமிழ் இலக்கியங்களிலும் நம் நாட்டார் பாடல்களிலும், நாட்டுக்கூத்துக்களிலும் பறவை இனங்களின் பங்களிப்பைப் பார்ப்போம். மக்களுடன் பறவை இனங்களின் தொடர்பை அன்றும் இன்றும் இலக்கியங்கள் எப்படிக்காட்டுகின்றன என்றும் அறியலாம். கத்துங் குயிலோசை வந்து காதில் படவேண்டும் என்ற பாரதியாரின் பாடல் குயிலோசையோடு எங்களை இணைக்கிறது. நாராய் நாராய் செய்கோல்நாராய் என்று வேறு நாட்டுக்குச் செல்வம் பெறச்சென்ற புலவன், வானில் பறந்து செல்லும் நாரையிடம் தன் மனையாளுக்குச் செய்தி சொல்லி அனுப்பும் காட்சியும் படித்தோம். முந்நாளில் நடைபெறும் நாட்டுக்கூத்துக்கள் அண்ணாவியார் மேடையில் தோன்றி முற்பிறப்பில் செய்தவினை இப்பிறப்பும் ஆண்டிடவே ஏன்? என்று முருகனிடம் முறைசொல்வாய் கிளியே என்று கிளியை முருக்கடவுளிடம் தூதுவிட்டு அனுப்புகிறார். அன்றைய நாளில் பிரபல புராண நாடகமான வள்ளி திருமணக் கதையில் தினைப்புனத்தைக்காக்கும் வேடுவப் பெண்ணான வள்ளி "வெட்கம் கெட்ட வெள்ளைக் கொக்குகளா வெருட்டி அடித்தாலும் வாறீர்களா" என்றும் கொஞ்சும் கிளி குருவி மைனாவே கூட்டமாய் இங்கு வராதீர் என்று பாடும் பாடல்கள் இன்றும் மனதில் பசுமையாய் இனிக்கிறது. அன்றைய கூத்து அரயகுகளில் சோலைகளை வர்ணிக்கும் புலவர்கள் அங்குவாழும் பட்சி இனங்களை வரிசைப்படுத்தி பாடும் பாணி சுவையானது. "கடற்காகம், கண்ணிக்காகம், கண் சிவந்தநாரையும், கொட்டுக்கிளிகளுடன் கோதாவரிக்கிளிகளும் ஆகா இந்த அருமை சேர்வனத்தின் பெருமையை இன்று நான் என்னென்று சொல்லுவேன்' என்று பறவை இனங்கள் நிறைந்து வாழும் சோலையைப் பாட்டு மூலம் சபையோர்முன் காட்சிப்படுத் துவதைப் படிக்கும்போது நாமும் மனநிறைவு பெறுகிறோம்.

ஒளவைப்பிராட்டி தன் பாடலில் கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி என்ற பாடல்மூலம் உண்மைக்கும் பொலிகளுக்கும் இடையேயான முரண்பாட்டை வெளிப்படுத்துகிறார். மேலும் வள்ளுவர் தன் குறள்பாவில் வாழ்வின் நிலையாமையை குடம்பை தனித் தொழியப் புள்பறந்தற்றே உடம்போடுயிரிடை நட்பு என்று அறிவுறுத்துகிறார். முட்டையினுள் இருந்த குஞ்சு பறந்தபின் முட்டை கோதுமிஞ்சிருப்பதுபோல் உயிர்பிரிந்த பின் உடலின் நிலைமைய விளக்கிக் கொள்கிறோம். அடுத்துப் போலிவேடதாரிகளை இனம் காட்டும் வகையில் தவமறைந்து அல்லவை செய்தல் வேட்டுவன்புதல் மறைந்து புள்சிமிழ்ந்தற்று என்ற வரிகள் மூலம் வேடதாரிகளின் கபடங்களை வெளிச்சம்போட்டுக் காட்டுகிறார். தமிழில் வெண்பாவில் புகழேந்தி என்ற புகழ்பெற்ற புலவர் பாடிய நள வெண்பாவில் வரும் நாட்டின் ஆட்சித்திறத்தையும், ஒற்றுமையையும் விளக்கும் பாடலில் மாதர் அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும் ஒரு கூட்டில் வாழும் உலகு என்று அந்த ஊரின் பெருமையைக்காட்டினார். இதே போன்று பறவைக் குலங்கள் மக்களோடு நெருங்கிய உறவாய் இருந்ததைக் கூறுமிடத்துக் கம்பராமாயணத்தில் காட்சி ஒன்றைக் காண்போம். சக்கரவர்த்தி தசரதனின் உற்ற நண்பனான சடாயு என்ற பெரும் பறவையைக் காண்கிறோம். தன் உற்ற நண்பனான தசரதனின் மகன் இராமனின் மனையாள் சீதையை இலங்கை வேந்தன் இராவணன் கவர்ந்து ஆகாய மார்க்கத்தில் செல்லும்பொது நேரில் ஆகாய வெளியில் கண்ட சடாயு அந்த இராவணனை எதிர்த்து போராடி இறந்த செய்தி அறியும்போது, பறவை இனமானாலும் ஒரு நன்றி மறவாத நட்பின் சிகரமான ஆத்மானவக் காண்கிறோம் தவவலிமையால் கொக்கை எரித்தமுனிவன் குடும்பத்தலைவிமுன் தலைகுனிந்து நிற்கும் காட்சி இதிகாசத்தில் வருகிறது மனைமாட்சிக்கும் தவவலிமைக்கும் இடையில் கொக்குப்பறவையின் வாழ்வும் பின்னிப்பிணைந்த நிலையில் பறவை மனித வாழ்வோடு இணைவதைப் பார்க்கிறோம்.

இன்றைய நவீன உலகையும், பழையசமுதாயத்தையும் ஆட்டிப்படைக்கும் சினிமா என்றும் "பேசும் படம் மூலம் பட்சி ஜாலங்களின் முக்கியத்துவத்தைச் சிறிது அறிவோம். குறிப்பாகத் தமிழ்சினிமாவைப்பார்த்தால் பல வருடங்கள் முந்தையகதையான 'வானரதம்' என்ற படத்தில் 'கூண்டைவிட்டோடும் கிளியே என்னைக் கூட்டிச்செல் உன்பாதையே' என்று பிரிந்து செல்லும் காதலியிடம் வேண்டிப் பாடும் பாடலில் தனது காதலியைப்பறந்து செல்லும் கிளியையும் தனித்து நிற்கும் காதலனையும் காட்சிப்படுத்துகிறார் இப்படத்தின் இயக்குனர். 'சிட்டுக்குருவி சிட்டுக்குருவி சேதிதெரியுமா என்னைவிட்டுப்பிரிந்து போன கணவன் வீடு திரும்பல்ல' என்று ஒரு பெண் தன் கணவனின் வருகைக்காக எந்தெந்த ஆயத்தங்களைச் செய்தும் அவர் வாராமையால் இந்தச் சின்னஞ்சிறிய சிட்டுக்குருவியிடம் தன் உள்ளத்து ஆதங்கங்களை எல்லாம் சொல்வதாய் இப்பாடல் அமைந்தது உயிரினங்களின் அன்புக்காதல் என்ற தேடலில் எதுவிதவித்தியாசங்களும் இல்லாது நேசிப்பதை காணலாம்.

தாயும் பிள்ளையும் உறவு பிரிந்த நிலையில் ஒரு காட்சியைப் பாடல்வரிகள் தருகிறது "பறவைக் குஞ்சு ஒன்று பறந்ததையா கூடுவிட்டு, கூடுவிட்டுப்பறந்தகிளி, குடியிருக்கும் இடந்தேடி ஓடிவந்த தாய்ப்பறவை ஊமையாகி நின்றதையா" என்ற வரிகளில் பாசத்தின் எல்லையைக் காண்கிறோம், பாலைவனத்திடையே என்னிருகை பற்றித் தொடர்கையிலே கைவேலின் மிசை ஆணையிட்டுச் சென்றதை ஏன் மறந்தார் என்று சொல்ல வல்லாயோ கிளியே என்றபாடல் முருகக் கடவுளிடம் உரிமைகோரும் ஒரு காதலியின் ஆதங்கம் வெளிப்பாடாய் தெரிகிறது. 'காக்கை குருவி எல்லாம் எங்கள் சாதி' என்ற பாட்டும், காக்கைச் சிறகினிலே நந்தலாலா உந்தன் கரியநிறம் தோன்றுதையே நந்த லாலா' என்ற வரிகளும் பாரதியார் கண்ணனையும் பறவை இனங்களையும் மக்களோடு இணைந்து வாழச் சொன்னார் என்ற செய்தியும் மனஊஞ்சலில் ஆடுகிறது. இப்படி எத்தனை நூற்றுக்கணக்கான பாடல்களில் பறவை இனங்களின் குணஇயல்புகளை இணைத்துப் பலபாடலாசிரியர்கள் பாடியுள்ளனர் அந்தப் பாடல்களாலும் ஏனைய இலக்கியப் பாடல்களாலும் மனித இனம் பெரும் பேறுகளைப் பெற்றது.

ஈற்றில் ஒரு சிறிய செய்தியாகவும் வேண்டுதலாகவும் இக்கட்டுரையை பூர்த்தி செய்கிறேன். மனிதன் எத்தனை சாதனை படைத்தாலும் பறவைகளும், மரங்களும் தங்கள் வாழ்நாளில் மனித இனத்திற்காக வாழ்ந்து சாதித்துக் கொண்டிருக்கும் தொண்டுகள், கணக்கிலடங்காதவை. உலகம் இயற்கையோடு நிலையாய் நிலைத்து நீண்டுசெல்வதற்குத் தாவரங்கள் உதவுவதற்குப் பறவைகள் தான் காரணம். பெரும் விருட்சங்களின் கனிகளையும் விதைகளையும் உண்ணும் பறவை இனங்கள் அவற்றின் விதைகளைத் தாங்கள். பறந்து செல்லும் இடங்களில் விட்டுச் செல்வதால் அந்த வித்துக்கள் ஆங்காங்கே முளைத்து விருத்தியாகி காலகாலத்தில் பெருங்காடுகளாய் ஆனது என்று இன்றைய இயற்கை ஆராட்சியாளர்கள் கண்டுள்ளனர். இந்த உண்மை அன்றும் இன்றும் என்றும் தினமும் நடைபெறும் இயற்கையன்னையின் சிருஷ்டிதான்.

ஆகவே உலகமக்கள் ஒன்றினைந்து பறவை இனங்களையும் இயற்கைத் தாவரங்களையும், மனிதச் செயற்பாடுகளாலும் மற்றும் எந்த வித அழிவுச் செயற்பாடுகளாலும் ஏற்படும் அழிவுகளைத் தடுக்க முன்வரவேண்டும். இதன் செயற்பாடுகளின் பேரெழிச்சியாக, பறவை இனப்பாதுகாப்பு நாளாகவும் இயற்கைத் தாவரப்பாதுகாப்பு நாளாகவும் உலகம் முழுமையும் ஒரு நாளை ஒதுக்கிக் கொண்டாட வேண்டும். இதற்கான பிரச்சாரச் செயற்பாடுகளினால் மரங்கள் பற்றிய அறிவும் பறவை இனங்கள் பற்றிய உயிர் இரக்கச்சிந்தையும் குறைவாய் உள்ள மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி இந்த அரிய இனங்களைக்காக்க முடியும்.

அன்பானவர்களே அன்புப் பிராணிகளான பறவை இனங்களையும் காய்க்கும் கனியும் நிழலும் மூச்சுக்காற்றும் தரும் விருட்சங்களையும் காப்பதற்கு வாருங்கள், வாருங்கள் அன்போடு, பண்போடு உறவோடு வாழ்வோம்.

நன்றிகள் எண்ணிலா!

poorveekan@thaiveedu.com

> " பறவை இனப் பாதுகாப்பு நாளாகவும்
> இயற்கைத் தாவரப் பாதுகாப்பு நாளாகவும்
> உலகம் முழுமையும் ஒரு நாளை ஒதுக்கிக்
> கொண்டாடவேண்டும். "

■ ■ ■




- மரண அறிவித்தல்கள் வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், புப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Pre-plan funeral arrangements

MARANAM.COM
HEAVEN CARES
ONE STOP PEACEFUL FINAL ARRANGEMENTS
416-431-3600
Fax: 416-292-5139
www.maranam.com, E-Mail: info@maranam.com

# எங்கள் மொழி எங்கே

## புலம் பெயர்ந்த தமிழ் வாழுமா? தமிழர் அடையாளம் தக்கவைக்கப்படுமா?



பார்வதி கந்தசாமி

தமிழ் செம்மொழியாக்கப்பட்டு அதன் பெருமை முன் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு சிலாகிக்கப்பட்டு வருகின்றது. செம்மொழி என்ற அடை உலகப் பொதுமொழியெனக் கணிக்கப்படும். பண்பாட்டு விழுமியங்களைப் பண்படக்காட்டும் கலை இலக்கியங்களால் வளம் பெற்ற மொழியாக தமிழ் நடை பயின்று வருகின்றது. காலத்தால் முற்பட்ட இலக்கியப் புதையல்கள் கொண்ட மொழியாக இருப்பதால் தமிழ்த்தாயின் தோற்றம் பற்றிப் பல கதைகள் உண்டு. “கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து மூத்த தமிழ்” என்ற இலக்குவனாரின் உணர்வுசார் வாதமும் சிவனார் அகத்தியருக்கு பாடம் சொல்லிக்கொடுக்க அகத்தியர் தமிழை எழுதிக் குவித்தார்” என்ற கற்பனைக் கதையும், பாரதியார்

*தொன்று நிகழ்ந்த தனைத்தும்*
*அறிந்துள தொல்புவி வாணர்களும் - இவள்*
*என்று பிறந்தவள் என்றறியாத*
*இயல்பினள் என்தமிழ்த் தாய்.*

எனப் பாட ஏதுவாயிற்று. வளமான இலக்கியங்கள் எழுந்தபின்னர் எழுந்த இலக்கண நூல்களில் எமக்குக் கிடைக்கக் கூடிய பழைய இலக்கண நூல் தொல்காப்பியம். இது நவீன யுகத்தில் மொழி கற்பித்தலில் முக்கியத்துவம் பெறும் விளக்கமுறை இலக்கண முறையில் எழுதப்பட்ட பழம்பெரும் நூல். “இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் வகுக்கும்” பண்பமைய மரபில் இலக்கியச் செழுமை நிரம்பிய படைப்புக்கள் பலநூற்றாண்டுகள் முற்பட்டவையான தொல்காப்பியக் கருக்களாக இருப்பதை உணரலாம். அகத்தியம் என்ற தொல் இலக்கண நூல்பற்றிய செய்தியும் தமிழில் அந்நூலுக்குப் பலநூறு ஆண்டுகள் முற்பட்ட செழுமைமிக்க செவ்வியல் இலக்கியங்கள் இருந்தமைக்கான ஆதாரத்தின் அடிப்படையாகும்.

தமிழ் மொழிகாட்டும் மரபுகளில் சிறப்பம்சம் கொண்டவை திணை மரபுகள். அகம், புறம் என திணைப் பகுப்புக்கள் காட்டும் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் உலகெங்குமே காணப்படாத இலக்கிய மரபுகளைக் காட்டுவன. காப்பியங்கள், திருமுறைகள், திருக்குறள் என பழமையும், இலக்கியச் செழுமையும், பண்பட்ட மரபும் கொண்ட இலக்கிய விழுமியங்கள் மேல்நாட்டாரான எல்லிஸ், கால்ட்வெல், வீரமாமுனிவரில் தொடங்கி அஸ்கோ ஜபார்பெலோ, ஜோர்ஜ் ஹாட் போன்றோரைத் தன்வயத்தே ஈர்த்துள்ள காந்தசக்தி கொண்ட மொழி. ஜோர்ஜ் ஹாட் பிற செவ்வியல் மொழிகளான கிரேக்கம், லத்தீன், சமஸ்கிருத மொழிகளைத் துறைபோகக் கற்று, அம்மொழிகளின் விழுமியங்களைப் பறைசாற்றும் காவியங்களைச் சுவைத்தவர். இவற்றை ஒப்பியல் திறனாய்வு செய்தவர். தமிழ் மொழியின் சகோதரத் திராவிட மொழிகளான மலையாளம், கன்னடம், தெலுங்கு இலக்கியக் களஞ்சியங்களைப் படித்தவர். பிரெஞ், ஜேர்மன் மொழிகளிலும் புலமை நிரம்பியவர். இத்தகைய மொழியாளுமையும், புலமைச் சிறப்பும் கொண்ட ஜோர்ஜ் தமிழ் மொழிபற்றிய செம்மொழிக்கான சான்றிதழ் வழங்குவதற்கு நான்கு காரணங்களைக் கூறுகிறார்.

“பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, வடமொழியில் காளிதாசரின் பேரிலக்கியங்கள் தோன்றுவதற்கு இரு நூற்றாண்டுகளுக்கு முன்பே தோன்றிவிட்டன. மதச்சார்பற்ற இந்தியாவில் முதன் முதன் எழுந்த மதச்சார்பற்ற கவிதை இலக்கியத் தொகுப்பு சங்க இலக்கியங்கள். ...தமிழ், இந்தியாவில் தோன்றிய இந்திய மண்ணுக்கு மட்டுமே தனிச்சிறப்பான இலக்கிய மரபினைக் கொண்டது. ...சிறந்த இலக்கியக் கொள்கை, விழுமிய இலக்கண மரபுகள், சிறந்த முருகியற் செம்மை, ...மிகப் பெரிய இலக்கியச் செல்வம் ஆகியவற்றைக் கெண்டியங்குவது தமிழ். ...இந்திய மக்களிடம் காணப்படும் கலைநயம் தோய்ந்த ஒருவகை நுட்ப உணர்வை (sensibility) தமிழ் இலக்கியங்கள் தம்மகத்தே கொண்டுள்ளன. வளம் மிக்க விரிந்து பரந்த அறிவின் மாட்சியும் மரபும் அவற்றின்கண் பெரிதும் இடம்பெற்றிருக்கின்றன. முந்தைய இந்திய இலக்கியங்களில் காலத்தால் முற்பட்ட பழந்தமிழ் இலக்கியங்களில் மட்டுமே சமூகத்தில் தாழ்வுற்ற, பிற்பட்ட, கடைப்பட்ட மக்களையும் கருப்பொருளாகக் கொண்டுள்ள மனித குலம் அனைத்தையும் வயப்படுத்தும் உலகளாவிய கோட்பாடும் கொண்ட மொழி – தற்காலத் தமிழ் -மலையாள இலக்கியங்களுக்கு தொன்மைத் தமிழே மூலமொழி”

ஐராவதம் மகாதேவன் என்ற தொல்லியல் ஆய்வாளர் “திராவிட மொழிக்குடும்பத்தைச் சார்ந்த தமிழ் இந்தியாவின் மிகத் தொன்மையான முதற் செம்மொழி என்ற பெருமைக்கு உரித்தாகிறது. கல்வெட்டுக்களும், பழைய காசுகளும், இலச்சினைகளும், எழுத்துப் பொறித்த மட்பாண்டச் சில்லுகளும் தமிழின் தொன்மைக்கு நேடியான புறச் சான்றுகளாகும்.” என்று கூறுகிளார்.

தமிழின் தொன்மைக்கும் சிறப்புக்கும் இனிமைக்கும் மெருகூட்ட இருபதாம் நூற்றாண்டின் புதுமைத் தமிழ்மகாகவி பாரதி எழுதிய பாடல்கள் காலத்தால் அழியாத சிறப்புடைய படையல்கள். பாரதியாருக்கே தமிழ் வாழுமா என்ற கேள்வி நெஞ்சைக் குடையத் தொடங்கிவிட்டது “மெல்லத் தமிழ் இனிச் சாகும்” என்ற யாரோ வரிகளைக் கேட்டுப் பொய்யுரை என்று சீற்றம் உற்றார். இவ்வரிகள் பாரதியின் நெஞ்சை வருடுவன. தமிழ் மகாநாடுகள் பல உலகளாவிய ரீதியில் நடத்தப்பட்டாலும் தமிழை எவ்வாறு வாழ வைக்கலாம், தக்கவைக்கலாம் என்ற கேள்விகளுக்கு விடை காண்பவையாக அமையாது தனிமனித இலாபங்களை மையமாகக் கொண்டு அமைபவையாகவும் மொழி வளர்ச்சிக் குறிக்கோளை மையம் கொள்ளாதும் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. புலம்பெயர் நாடுகளில் தமிழ் மொழியை வளர்க்கவேண்டும் என்ற ஆவலுடன் சில நிறுவனங்கள் செயற்பட்ட போதும் மொழியை வளரப்பதற்கான திட்டவட்டமான திட்டங்களைத் தீட்டும் துறைசார் புலமை மிக்க ஆலோசகர் அடங்கிய குழுக்களைக் கொண்டு மொழி பயிற்றல், திட்டமிடப்பட்டவையாக அமையவில்லை.

புலம்பெயர் நாட்டு மக்களிடம் வீட்டு மொழியாகத் தமிழைக் கற்பதற்கான உணர்வு விதைகளை விதைப்பதற்கு ஊடகங்களும் தமிழ் உணர்வு உடையவர்களும் முன்நின்று முயலவேண்டும். வீட்டுச் சூழலில் பேசக்கற்பது போல வேறு எந்தச் சூழலிலும் பேசக் கற்றுக் கொள்ள முடியாது. பேச்சுமொழி கற்பதற்கான திறந்த மொழிக்கூடம் வீடுதான். வீட்டு மொழியாகத் தமிழ் இருக்கும்போதுதான் தமிழ் உயிருள்ள மொழியாக வாழும். தமிழை நன்கு கற்றுத்தேர்ந்த மேல்நாட்டவர் சிலர் தமிழில் செவ்விய இலக்கிய ஆளுமையை வைத்திருக்கிறார்கள். ஆனால் அவர்களில் பலர் தமிழை மேடைகளில் அழகாகவும் தொடர்ச்சியாகவும் பேசமுடியாது இருப்பதை அவதானிக்கிறோம்.

> “ *கலிபோர்ணியாவில் உள்ள பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டப் படிப்பில் தமிழியல் ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. தமிழர் ஏராளமாக வாழும் ரொறன்ரோவில் ஒரு தமிழ்த்துறை அமைக்கப்படாமை கவலை தரும்விடயமாகும்.* ”

சமஸ்கிருதம், இலத்தீன் மொழிகள் பேசப்படாத நடைப்பிணமான மனிதர்போலவே காணப்படுகின்றன. மொழிக்கு உயிர்நாடி பேச்சு. மானிடவியல் ஆய்வுகள் செய்தவர்கள் ஆய்வுப்புலத்தில் மக்கள் வீடுகளில் தங்கி அம்மக்களின் மொழிகளைக் கற்றுத்தான் தங்கள் ஆய்வைத் தொடர்கிறார்கள். பேச்சு மொழி செவ்வியல்புகள் அடங்கிய இலக்கி மொழி போன்றதன்று. பேச்சு இடத்திற்கு இடம், சமூகத்திற்குச் சமூகம் மாறுபடும். புலம்பெயர் நாட்டின் தமிழ்ச் சூழலுக்கு அமைந்த பேச்சு மொழியில் உருவாகிய நாடகங்கள், உரையாடல்கள், கதை சொல்லல் போன்ற நிகழ்ச்சிகளைக் கொண்டிருக்கும்போதுதான் நேரமற்ற பெற்றோர் வீடுகளின் குழந்தைகள், வீட்டு மொழியை வளர்த்துக்கொள்ள ஓரளவாவது வாய்ப்புக்கிட்டும்.

“தூய தமிழ் மொழி” வாதத்தை மறைமலையடிகள் என்ற வேதாசலம்பிள்ளை முன்வைத்துத் தோல்வியையே தழுவிக்கொண்டார் என்பது தமிழ் மொழி வரலாற்றை அறிந்தவர்களுக்கு தெரியும். மொழித்தூய்மை வாதத்தால் ‘அன்ன நடை நடக்கப்போய்த் தன்நடையும் கெட்ட செய்தியாகத்தான் மொழியின் வாழ்நாள் அமையும். இன்று சென்னையிலோ, சிங்கப்பூரிலோ, ஐரோப்பியநாடுகளிலோ, கனடாவிலோ பிள்ளைகள் தமிழைப் பேசினாலே போதும் என்ற அளவிற்குத் தமிழ் பேசும் குழந்தைகளுடைய தொகை குறைந்து கொண்டு போகின்றது. பெற்றாருடன் தமிழ் பேசும் பிள்ளைகள் கூடச் சகோதரருடனோ சக தமிழ் உறவுகள், மாணவர்கள், நண்பர்களுடனோ தமிழில் உரையாடுவதைக் காண முடிகின்றதா? இந்த நிலைமை நீடித்தால் புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழின் நிலை என்னவாகிவிடும் என்ற கேள்விக்குறி தமிழ் உணர்வு கொண்ட நெஞ்சங்களிடையே உண்டு. குழந்தைகளுக்குத் தமிழைப்பேசக் கற்றுக் கொடுப்பதற்குப் பல வழிமுறைகளையும் தேடிக்கொள்ள வேண்டும். இளம் சிறுவர்கள் வகுப்பறைகளில் தமிழ் பேசக் கற்பதற்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும். பெற்றாருடைய எதிர்பார்ப்புக்கள் ஐந்து அடி பாயாமல் ஐம்பது அடி பாய்வதாக இருக்கக்கூடாது. எல்லா எழுத்துக்களும் தெரிந்தால் மட்டும்தான் தமிழ் கற்றல் என்று நினைத்து எழுத்து மொழிக்கு முன்னுரிமை கொடுக்கக் கூடாது. பேச்சைப் பழகிவிட்டால் எழுதப்பழகுவது இலகுவாகிவிடும். பெற்றார் பிள்ளைகளிடம் பயிற்சிப் புத்தகங்களில் தமிழ் வசனங்களைப் பார்ப்பதால் தங்கள் பிள்ளைகள் தமிழை ஒழுங்காகப் படிக்கிறார்கள் என்று எதிர்பார்த்து ஏமாந்து கொள்கிறார்கள்.

பிள்ளைகள் இளம்வயதில் தமிழைக்கற்காது விட்டிருந்தால் அவர்கள் அறிவு நுட்பத்திறமையை ஆளுமையுடன் வளர்த்துக்கொண்ட பல்கலைக்கழக வகுப்பை அடைந்த காலகட்டத்தில்கூடத் தமிழை இலகுவாகவும் விரைவாகவம் கற்று ஆளுமை செய்யக்கூடியவர்களாக இருப்பதை, பல மொழிப் பயிற்சிக் கூடங்களிலும் காணப்படும் உண்மையாகும்.

இதனை அமெரிக்காவில் பல பல்கலைக் கழகங்களில் காணக்கூடியதாக இருக்கின்றது. இத் தமிழ் கற்பித்தல் கனடாவில் யோர்க் பல்கலைக்கழகம், ரொறன்ரோ பல்கலைக் கழக ஸ்காபரோ பிரிவிலும் காணப்படுகிறது. ஆனால் இன்று ரொறன்ரோவில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழைப் படிப்பதற்காகப் பதிவுசெய்யும் மாணவர்களின் எண்ணிக்கையில் விழுக்காடு காணப்படுகிறது. அரபு மொழி, ஹீப்று மொழி, சீனமொழி, ஸ்பானிய மொழிகளில் பிற மாணவர்கள் காட்டும் ஆர்வம் தமிழ் மொழியில் தமிழ் மாணரவர்கள் காட்டுவதாக இல்லை. இப் பல்கலைக் கழகங்களில் மாணவர்கள் தமிழ் பயில்வதற்குப் பின்நிற்கின்றனர். இவர்களுடைய தொகை பற்றாக்குறை காரணத்தால் ஸ்காபரோ வளாகம் கடந்த வருட தமிழ் வகுப்பை இரத்துச்செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. கலிபோர்ணியாவில் உள்ள பேர்க்கிளி பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பீடம் அமைக்கப்பட்டு தமிழ் கற்பிப்பதுடன் முனைவர் பட்டப் படிப்பில் தமிழியல் ஆய்வுகளும் நடத்தப்படுகின்றன. ஆனால் தமிழர் ஏராளமாக வாழும் ரொறன்ரோவில் ஒரு தமிழ்த்துறை அமைக்கப்படாமையும், தமிழ் மாணவர்கள் தங்கள் அடையாளத்தை பேணும் மூலக்கருவியான தமிழைக் கைவிடுவதும் கவலை தரும்விடயங்கள் ஆகும்.

தமிழர் பண்பாடு, பாரம்பரியம், என்று பேசிக் கொள்வதன் பொருளே விளங்காதவர்களாக எமது அடுத்த சந்ததியினர் புலம்பெயர்ந்த நாடுகளிலே அடையாளம் அற்ற மானுடராக வாழப்போகின்றார்களா? அண்மையில் கனடாப் பாராளுமன்றத்தில் தமிழ் முழங்கியது. இந்த முழக்கம் கேட்டு தமிழர்கள் பரவசப் பட்டனர், உள்ளங்கள் நிறையுவகையுற்றன, உடல்கள் சிலிர்த்தன. இது தமிழர்களிடையே தமிழ் உணர்வு என்ற இரத்தம் நரம்புகளினூடாக ஓடிய உணர்வை உணர்ந்ததைக் காட்டுகின்றது. அத்துடன் இது தமிழ் உணர்வை இனி ஆள இருக்கும் தமிழ்ச் சந்ததியினருக்கும் எதிர்காலத்தில் ஆளப்பட இருக்கும் இன்றைய சின்னஞ்சிறிய தமிழ் மழலைகளுக்கும் உணர்வோட்டமாக உயிருடன் கலந்து பிரவாகிக்க உதவட்டும்.

யார் கற்பித்தாலும் கற்பிக்கட்டும் ஆனால் தமிழ் மாணவரைத் தமிழ் வகுப்பிலிருந்து ஓட ஓடக் கலைத்து தமிழ் கற்பித்தலில் பயப் பிராந்தியை ஊட்டாது, மாணவரை அரவணைக்கும்வகையில் கற்பித்தல் அமையட்டும். பெற்றாரும் சமூகமும். பக்கத்துணையாக நின்று உற்சாகம் ஊட்டட்டும். புலம்பெயெர் நாடுகளில் எங்களுடைய சமூகம் தமிழ் பேசும் சமூகமாக மலரும்போது தமிழ் அடையாளமும் உரம்பெறும்.

பாடசாலைகளில், உயர் கல்விக்கூடங்களில், பல்கலைக்கழக மட்டங்களில் தமிழ் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் அப்பொழுதுதான் தமிழியல் ஆய்வு முடுக்கிவிடுப்படும். தமிழர் என்ற ஓர் இனம் உண்டு என்பதும் சமூகத்தில் நிஜம் ஆக்கப்படும்.

தமிழ் வாழ்வதும், தமிழ் அடையாளம் தக்கவைக்கப்படுவதும் புலம்பெயர்ந்த தமிழர் தமிழ் உணர்வைத் தமது சந்ததியினருக்கு எவ்வாறு ஊட்டுகின்றனர் என்பதிலும் தமிழை வீட்டுமொழியாகப் பேச எத்தகைய முயற்சிகள் எடுக்கிறார்கள் என்பதிலும் தங்கியிருக்கின்றது. எமது இனத்தை இனம் காண்பது எமக்குப் பெருமை தருவது. அதற்கு ஒரு அடையாளம் தேவை. அந்த அடையாளயம் மொழியால்மட்டுமே பரந்த அளவில் உறுதிப் படுத்தப்படும்.

parvathy.kanthasamy@thaiveedu.com

■ ■ ■

# இயற்கையில் உருமறைப்பு

- பொன் குலேந்திரன் -

### ஏமாற்று வித்தை:

கெரில்லா போர் முறையில் தம்மை இலை குழைகளால் மூடியவண்ணம் முகத்துக்கு பச்சை கறுப்பு அரிதாரம் பூசி போரிடும் முறை பல யுத்தங்களில் கடைப்பிடிக்கப்படுவது நாம் அறிந்ததே. இந்த யுக்தி காட்டுக்குள் கெரில்லா யுத்தம் புரியும் போது அவர்கள் இலை குழைகளுக் கிடையே மறைந்து நின்று தாக்குவதற்கு உதவுகிறது. இதனை ஆங்கிலத்தில் Camouflaging என்பர். பிரெஞ்சு மொழிச் சொல்லில் இருந்து இந்த ஆங்கிலச் சொல் பிறந்தது. இதன் பொருள் உண்மைத் தோற்றத்தை மூடி மறைப்பது அல்லது பார்ப்பவர்களுக்கு வித்தியாசமான தோற்றத்தைக் கொடுப்பது என்பதாகும். 1800ம் ஆண்டு அமெரிக்க ஓவியரான அபொட் தாயர் என்பவர் இயற்கை மிருகங்களின் உடம்பில் உள்ள வர்ணங்கள் உரு மறைப்புக்கு உதவுகிறது என்பதைச் சுட்டிக்காட்டினார். குறிப்பாக திருக்கை மற்றும் மீன் வகைகளில் இதை அவதானிக்கலாம். நீருள் மேலிருந்து பார்க்கும்போது கீழ்ப்பகுதி கருமையாகவும் மேற் பகுதி ஒளிமயமாக வெள்ளையாகவும் இருப்பதால் இவை தப்பிக்க ஏதுவாகிறது. அவ்வாறே மிருகங்களின் மேற் பகுதியான முதுகுப் பகுதி கருமையாகவும், படிப்படியாக நிறம் மாறி அடிவயிற்றில் வெள்ளை நிறத் தோற்றம் உள்ளமையை நாம் அறிவோம். இந்த முக்கிய நிறமாற்றத்தின் பண்பு மிருகங்களின் உரு மறைப்புக்கு உதவுகிறது. கருமையில் இருந்து வெண்மைக்கு படிப்படியாக நிறம் மாறும்போது மிருகத்தை அவதானிக்க கடினமாகிறது. 1915ல் பிரான்ஸ் தேசத்து இராணுவத்தினால் உரு மாற்றம் கொண்ட வீரர்களை அடங்கிய பகுதி ஒன்று அமைக்கப்பட்டது. இராணுவம் ஓவியர்களை வரவழைத்து முதலாம் உலக யுத்தத்தின் போது உரு மாற்றத்துக்கு தேவையான ஆலோசனைகளைப் பெற்றது.

### வரிக் குதிரை வரிகளின் வித்தை:

வரிக் குதிரையின் உடம்பில் உள்ள கறுப்பும் வெள்ளையும் கலந்த வரிகள் அதனை கூட்டமாக நிற்கும் போதோ அல்லது தனித்து நிற்கும் போதோ சிங்கம், புலி போன்ற எதிரிகளின் தாக்குதலில் இருந்து பாதுகாக்கிறது. வரிக் குதிரைகள் அருகருகே கூட்டமாக நின்று புல் மேயும்பொது உரு மறைவினால் பாதுகாப்பு அதிகரிக்கிறது. அவற்றில் உள்ள வரிகள் ஒரு பொய்த் தோற்றத்தை தாக்கவரும் எதிரிகளுக்கு கொடுக்கிறது. பார்க்கும் போது வரிகள் ஒன்றோடு ஒன்று பிணையும் தோற்றத்தைக் கொடுப்பதால் எதிரியின் மனதில் குழப்பத்தை உருவாக்கி குதிரைகளை தனித்தனியாக பிரித்து அடையாளம் காணமுடியாதவாறு செய்கிறது. குதிரைகள் எல்லாம் அடிக்கடி திசை மாறி ஓடுவதினால் வரிகளின் அசைவு கொடுக்கும் தோற்றம் மேலும் குழப்பத்தை உருவாக்குகிறது. அதனால் சிங்கத்திற்கு ஒரு தனி வரிக்குதிரையை தேர்ந்தெடுத்து தாக்கிக் கொல்வது கடினமாகிறது. மனிதனின் விரல் அடையாளத்தைப் போல் வரிக்குதிரையின் உடம்பில் உள்ள வரிகள் குதிரைக்கு குதிரை வித்தியாசப்படும். இவ்வரிகளை வைத்தே தனித்தனியாக குதிரைகளை அடையாளம் காணமுடிகிறது. தாய் வரிக்குதிரை இந்த வரிகளை வைத்து தன் குட்டிகளை அடையாளம் கண்டு, கூடி வாழ்கிறது.

புலிகளின் மேல் உள்ள வரிகள் கூட ஒரு விதத்தில் அடர்ந்த புற்பற்றைக்குள் மறைந்திருந்து தாக்க உதவுகிறது.

### மீன்களின் உருமாற்றம்:

கடலில் வாழும் மீன்கள் செய்யும் உரு மறைப்பு அதிசயமானது. மீன்கள் மறைந்திருந்து வேட்டையாடவும், எதிரிகளின் தாக்குதலில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளவும் இந்த உரு மாற்றம் பயன்பெறுகிறது. கல்மீன் (கலவாய்) என்ற ஒரு வகை மீன் கடலின் அடித்தளத்தில் கற்பாறையின் தோற்றத்தில் அசையாது தன் இரை தன்னருகே வரும் வரை நிற்கும். இரை அருகே வந்தவுடன் கண்சிமிட்டும் நேரத்தில் லபக் என்று வாயைத் திறந்து பிடித்துண்ணும். சில மீன்கள் கடல் மண்ணுக்குள் புதைத்து இருக்கும். சமயம் வரும் போது இரையைப் பிடிக்கும்.

### மூன்று வால் மீனின் மூளைத்திறன்:

மூன்று வால் (Triple Tail) என்ற ஒரு வகை மீன் உருமாற்றம் செய்யும் தனிச் சிறப்பான பண்புடையது. இந்த மீன், தான் இணைந்துள்ள சூழ்நிலைக்கேற்ப தன் உடம்பின் நிறத்தை உடனடியாக மாற்ற வல்லது. கடும் மஞ்சள் நிறத்திலிருந்து கருமை, வெள்ளி நிறம், பச்சை, அல்லது வெள்ளை நிறம் போன்ற பல வர்ணங்களைப் பெறக்கூடியது. அதுவுமன்றி இலைத்தொகுதி, குப்பை ஆகியவற்றைப்போன்ற தோற்றத்தையும் பெறக்கூடிய திறமை அதற்குண்டு. தனக்கு அருகே நீந்தும் மீனைப் போன்று தானும் உருமாறும் தன்மை பெற்றது.



ஆராய்ச்சியின் போது விஞ்ஞானிகள் மூன்று வால் மீன் ஒன்றையும் பறக்குடா என்ற சாதி மீனையும் தண்ணீர் நிரம்பிய போத்தில் ஒன்றினுள் விட்டனர். பறக்குடா என்ற சாதி மீன் மற்றைய மீன்களை தாக்கி உடனே இரையாக்கும் குணம் படைத்தது. போத்திலுக்குள் மாவிலைகளும் மிதக்கவிடப்பட்டது. மூன்று வால் மீன் தன் நிறத்தை மாவிலையின் நிறத்துக்கு மாற்றி பறக்குடா மீனின் தாக்குதலில் இருந்து தப்பித்துக் கொண்டது. ஒரு கடுகளவு மூளையைக் கொண்ட மூன்று வால் மீன் எவ்வாறு தனது நிறத்தை சூழ்நிலைக்கு ஏற்றவாறு 6 நிறங்களாக மாற்றுகிறது என்பது விஞ்ஞானிகளுக்கு புரியாத புதிராகயிருக்கிறது.

### எண்காலியின் மை நடனம்:

எண்காலி எனப்படும் ஒக்டொபஸ் (Octopus) கடல் வாழ் ஜந்து. மூன்று வால் மீனைப் போன்று மாநிறம், வெள்ளை, பச்சை, நீல நிறங்களாக தான் இருக்கும் சுற்றாடலுக்கு எற்றவாறு தன் நிறத்தை மாற்றும் தன்மை படைத்தது. சில சமயம் பல வர்ணங்களாக ஒரே நேரம் தோற்றமளிக்கும். தன் உருவத்தை விதவிதமாக மாற்றிக் கொள்ளும். தன்னை எதிரிகள் தாக்கவரும்போது பயம் காரணமாக ஒரு வகை கருப்பு நிறமுள்ள மையை வெளியேற்றும். அதைச்சுற்றியுள்ள நீர் உடனே கருமை நிறமாகி, எதிரிக்கு தன் இரையான எண்காலியை பார்க்க முடியாதவாறு செய்துவிடும். மையினால் தோன்றும் மேகத்தைப் போன்ற தோற்றம் எண்காலியின் உருவத்தைபோன்று ஒரு மாயைத் தோற்றத்தைக் கொடுக்கும். அதனால் தாக்க வரும் ஜந்து ஏமாற்றப்படுகிறது. அதுவுமன்றி வேட்டையாட வரும் ஜந்து அந்த மையினால் நுகரும் சக்தியை இழக்கிறது. எண்காலியின் உடம்பின் தோலானது வரிகள், புள்ளிகளுடன் திண்மமாக மாறக்கூடியது. வாய்க்கருகே இரு பெரிய பிதுங்கிய விழிகளுண்டு.

### நண்டுச் சிலந்தி:

நண்டு சிலந்தியானது தான் உட்காரும் மலர்களின் நிறத்திற்கேற்ப தனது மேலாடையை மாற்றிக்கொள்ளும். உதாரணத்துக்கு வெள்ளை நிற மலர் மேல் அது அமரும் போது வெள்ளையாக மாறும் அதே போன்று மஞ்சள் பூவின் மீது அமரும் போது அந்நிறத்தைப் பெறும். நண்டைப்போல் அசைவதினால் அப்பெயரைச் சிலந்தி பெற்றது. தான் இருக்கும் சுற்றாடலுக்கு ஏற்றவாறு தனது நிறத்தை மாற்றுவதினால் பறவைகளின் பார்வையில் பட்டு இரையாகாமல் தப்பித்துக் கொள்ளும். தான் இரை தேடும் போது இலைக்கு கீழ் அல்லது மலரின் இதழ்களுக்கு கீழ் அந்நிறத்துடன் மறைந்திருந்து தாக்கும்.

### முதலைக் கண்ணீர்:

நீலிக் கண்ணீர் வடிப்பதை முதலைக் கண்ணீர் வடிக்காதே என்று சொல்வதுண்டு. முதலை தன் இரையைப் பிடிக்கமுன் கண்ணீர் வடிக்குமாம் என முற்காலத்தில் ஆங்கிலேயர், பிரெஞ்ச் எழுத்தாளர்களிடையே ஒரு நம்பிக் கையிருந்தது. அந்த நம்பிக்கையை வைத்தே “முதலைக் கண்ணீர்” என்ற சொற்பதம் உருவாகியது. ஆனால் உண்மையில் முதலை, கண்ணீர் விடுவதில்லை. தண்ணீருக்குள் பெரும்பாலும் தன் நேரத்தைக் கழிப்பதால் அந்த அவசியம் அதற்கில்லை. தண்ணீருக்கு வெளியே வரும் சமயத்தில் கண்களை நனைக்க ஒரு வித தண்ணீர் பசையொன்றை வெளியேற்றுகிறது. தண்ணீரில் நீந்தும் போது அதன் கண்கள், மூக்கின் துவாரங்கள், காதுகள் நீருக்கு வெளியே இருக்கும். ஒவ்வொரு உணவுக்கு இடையேயும் பல காலம் காத்திருக்கக் கூடியது. சில சமயம் சேற்றில் தன் உடம்பை நனைத்து அந்நிறத்துடன் இரை தன்னைத் தேடி வருமட்டும் அமைதியாக ஆடாது அசையாது படுத்திருக்கும். தண்ணீருக்குள் ஒரு மணித்தியாலத்துக்கு மேல் இருக்கக் கூடியது முதலை. அதன் ஆயுள் ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்டது. தண்ணீரில் சிறு சல சலப்பு ஏற்பட்டால் கூட அதை உணர்ந்து அசைந்து இரையை தாவிப் பிடிக்க வல்லது.

### முள்ளுப் பூச்சி:

முள்ளுப் பூச்சிக்கும் இலைகள் காய்ந்த மரத்தடிகளுக்கும் வித்தியாசம் கண்டுபிடிப்பது கடினம். பலர் முள்ளுப் பூச்சியைப் பார்த்து தடி என் நினைத்ததுண்டு. நிறம், அமைப்பு எல்லாம் தடியைப் போன்றது. அதை அறியாது அதன் மேல் அமர்ந்த சில சிறு புச்சிகள் அதற்கு இரையாவதுண்டு. தன்னையும் பறவைகளின் பார்வையிலிருந்து ஏமாற்றி அது காப்பாற்றிக் கொள்ளும். முள்ளுப் போன்ற அதன் உருவ அமைப்பினால் பறவைகள் அதை உணவாக உண்ணத் தயங்கும்

### பச்சோந்தி (chamelion):

பச்சோந்தி போல் நேரத்துக்கு நேரம் உன்னை மாற்றி வாழாதே என்று பேசும் போது பாவிக்கப்படும் உவமைச் சொல் “பச்சோந்தி”. பச்சோந்தி ஓணான் வர்க்கத்தைச் சேர்ந்தது. மோல்டீஸ் தீவில் இவற்றை அதிகமாக காணலாம். உணவைத் தேடும் போது தன் உடலை சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாற்றக் கூடியது. மரத்தில் அதன் பச்சை நிறத்தோடு ஒட்டிக்கொண்டு தன் இரைக்காக காத்திருக்கும். பச்சோந்தி கீழே இறங்கி வருவது மிக அரிது. அதன் அசைவுகள் மிக மெதுவானது, ஆனால் சில சமயம் விரைவாக ஓடினாலும் தப்பித்துக் கொள்ளும் அளவுக்கு அதன் வேகம் இருக்காது. பச்சோந்தியின் தோலானது கறுப்பு, சிகப்பு, மஞ்சள் நிறக் கலங்களைக் கொண்டது. பார்க்க பயங்கரத் தோற்றத்தைக் கொண்டபடியால் அதன் அருகே செல்ல மக்கள் சற்று அஞ்சுவார்கள். இலைகளில் மறைவாக இருக்கும்போது பச்சை நிறமும். நிலத்தில் இருக்கும்போது மண்ணின் நிறத்தையும் கொண்டிருக்கும். பச்சை நிறத்தில் அது சாந்தமாக தோற்றமளிக்கும். கோபம் வரும் சமயம் அதன் உடல் நிறம் மாறி வாயை பிளந்தபடி ஓசையைக் கிளப்பும். சிலர் நினைப்பார்கள் பச்சோந்தி நிறம் மாறுவது இரையைப் பிடிக்கவோ அல்லது எதிரிகளிடம் இருந்து தப்புவதற்காகவோ என்று. ஆனால் உண்மையில் சூரிய ஒளி அதன் தோலில் உள்ள கலங்களில் பட்டுத் தெறித்து நரம்புகளைப் பாதிப்பதினால் நிறத்தை கொடுக்கிறது. இந்த நிறக் கலங்கள் விரிவடைந்து சுருங்கக் கூடியவை. அதனால் நிற மாற்றம் அடைகிறது.

### தொட்டாச் சிணுங்கி:

தாவரங்கள் கூட சில உரு மாற்றத்தினால் இரையைத் தேடிக் கொள்கின்றன. தொட்டாச் சிணுங்கியைத் தொட்டவுடன் அது சிறு பூச்சிகளை இரையாக்கிக் கொள்ள தன்னை மூடிக்கொள்கிறது. றே நெபந்தஸ் என்ற செடியானது ஒரு தொப்பியைக் கொண்ட விழு விழுப்பான குழாயைக் கொண்டது. பூச்சிகள் அந்த குழாயில் உள்ள பசையின் மணத்தால் கவரப்பட்டு அதன் விளிம்பில் போய் அமர்ந்தவுடன் குழாயின் மூடி மூடிவிடும். பூச்சியானது அத்தாவரத்துக்கு இரையாகிறது. இது போன்று தம் கவர்ச்சியையும் மணத்தையும் காட்டி ஏமாற்றி இரையைத் தேடும் தாவரங்கள் பலவுண்டு.

### ஊனுண்ணித் தாவரங்கள்:

Utricularia என்ற தாவரம் தண்ணீருக்குக்கீழ் கண்ணியை உருவாக்கி நுளம்பு, ஈ, மீன் குஞ்சுகள், மற்றும் தண்ணீருக்குக்கீழ் வாழும் பூச்சிகளை இரையாக்கிக் கொள்கிறது. ஊனுண்ணித் தாவரங்கள் சத்தில்லாத மண்ணிலும் வளரக் கூடியவை. அவை பெரும்பாலும் உயிரினங்களை இரையாக்கி வாழ்வதே இதற்குக் காரணமாகும். நான்கு விதமான கண்ணி முறைகளைத் தாவரங்கள் பாவிக்கின்றன. மூடும் கண்ணி, கதவைப் போன்று இயக்கும் கண்ணி, வீழ்த்தும் பொறி, ஈ ஒட்டும் பசைக் கண்ணி ஆகியன. வீழ்த்தும் பொறியை யானை, புலி போன்ற மிருகங்களைப் பிடிக்க மனிதர்கள் பாவிப்பார்கள். எலிப் பொறியின் இயக்கத்தையும் தாவரங்களின் கண்ணி முறையில் இருந்து கண்டுபிடித்தான். மனிதர்களையும் பிடித்துண்ணும் செடிகள் இல்லையென்று கூற முடியாது. பெரிய வால்போன்ற தண்டினால் பெரிய மிருகங்களையும் மனிதர்களையும் கூட சுற்றிப் பிடித்து இவை இரையாக்குகின்றன.

### முடிவுரை:

மனிதன் பூச்சிகளையும், நீரில் வாழும் உயிரினங்களையும், பறவைகளையும், மிருகங்களையும் தாவரங்களையும் பார்த்து செயற்கையான உரு மாற்றம் செய்து தனது எதிரியைத் தாக்கவும் அவனிடம் இருந்து தன்னைப் பாதுகாத்து கொள்ளவும் வழிவகைகள் வகுக்கிறான். ஆனால் அதே சமயம் அந்த முறைகளைப் பயன் படுத்தி, இயற்கையின் சிருஷ்டிப்புகளையும் அழிக்கிறான். தவிர உலகம் என்ற நாடக மேடையில் வேஷமெனும் உருமாற்றத்தையும் போடுகிறான். பொதுவாக மேடை நடிகர்கள் தம் வாழ்வில் நடிப்பதில்லை. ஆனால் மேடையில் திறமையாக நடிக்க முடியாதவர்கள் வாழ்வில் உருமாறி நடித்து விடுகிறார்கள். ஆக மொத்தத்தில் உருமாற்றம் என்பது தாவர விலங்கு வகைக்குள் அடங்கும் அனைத்து ஜீவராசிகளிற்கும் வேண்டிய ஒரு அம்சமாகிவிட்டது. அது இயற்கையானதா செயற்கையானதா என்பதைவிட அதன் நோக்கம் சமூக நலன் நிறைந்ததாக இருப்பது வரவேற்கத்தக்கது.

pon.kulendiran@thaiveedu.com

■ ■ ■

# படவிழாவும் சில குறிப்புகளும்



அருண் சிவகுமாரன்

ரொரன்ரோ சுயாதீன கலை, திரைப்பட அமைப்பு நடாத்திய ஒன்பதாவது தமிழர் திரைப்பட விழா அண்மையில் நடந்து முடிந்ததை அறிந்திருப்பீர்கள். சிலர் அதில் கலந்து கொண்டிருக்கவுங்கூடும். அதுபற்றி பலவித மான அபிப்பிராயங்கள் காதில் வந்து பாய்ந் திருக்கலாம், இலத்திரனியல் ஊடகம் வழியே கண்ணில் மொய்த்துமிருக்கலாம். எனது அனுபவத்தையும் பகிர்ந்துகொள்கிறேன்.

இக்குறும்பட விழாவின் தேர்வுக்குழுவிலும் நடுவர் குழுவிலும் ஒருவனாக இருந்ததால் விழாவில் காட்சிப்படுத்தப்பட்ட படங்களைவிட சமர்ப்பிக்கப்பட்ட படங்கள் 63-ஐயும் பார்க்கும் சந்தர்ப்பம் அமைந்த காரணத்தால் இவ்விழா எனக்கு ஆழமான அனுபவமாக அமைந்தது.

ஒவ்வொரு வருடமும் சமர்ப்பிக்கப்படும் படங்களின் எண்ணிக்கையும் அவற்றைச் சமர்ப் பிக்கும் நாடுகளின் எண்ணிக்கையும் உயர்ந்து கொண்டே வந்திருப்பது மகிழ்ச்சியானதே. ஆனால் கனடாவிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட படங்களின் எண்ணிக்கை கடந்த இரு அண்டுகளாக அருகியே வருவது கவலையைத் தருகின்றது. அதேசமயம் பிரான்ஸ் நாட்டி லிருந்து அதிகமான குறும்படங்கள் உருவாக் கப்படுவதும், அதன் சினிமா ஆக்கம் சிறப் புற்று வருவதும் சந்தோசமளிக்கிறது. குறிப் பாக பிரான்சில் இயங்கிவரும் "அவதாரம்" எனும் அமைப்பு பலதரப்பட்ட குறும்படங்களை பலதரப்பட்ட திறமைசாளிகளைக் கொண்டு உருவாக்கிவருவதும் தமிழர் திரைப்பட முயற்சிகளின் ஆரோக்கியமான பக்கமாகக் கருதிடலாம். அதுமட்டுமல்லாது பிரான்சில் இயங்கிவரும் பல சினிமா அமைப் புகளையும் ஒருங்கிணைக்கும் நன்நோக்கில் அங்கு உருவாக்கப்பட்ட "லிவ்ட்" அமைப்பு பலதரப்பட்ட குறும்படங்களையும் சேகரித்துப் போட்டிக்கென அனுப்பியதும் ஆரோக்கிய மான விடயமே. இம்முனைப்பு ஏன் கனடாவில் இதுவரை இடம்பெறவில்லை?

இந்தியாவிலிருந்து இம்முறையும் அதிகமான படங்கள் கிடைக்கப்பெற்றன. எண்ணிக்கை இருந்த அளவில் திரையாக்கம் உயர்வாக இருக்கவில்லை. இவ்வருட விழாவில் பிரதம பேச்சாளராக இந்தியாவிலிருந்து கலந்து கொண்ட ஜெயமோகன் கூறியதுபோல் இந் தியத் தமிழ்க் குறும்படங்கள் முழுநீளப் படங் களுக்கான நுழைவுச் சீட்டாகவே அமைந்தி ருப்பதாயே தெரிந்தது. இன்னும் சொல்லப் போனால் தொலைக்காட்சித் தொடர்களுக் கான நுழைவுச் சீட்டு முயற்சிகளாகவே பலவும் இருந்தன. முதல்த் தலைமுறை, ஒரு ஊரிலே, வெறுப்புக்கு மாறாக அன்பு போன்றன பொறு மையைச் சோதிக்கும்படியான இழுவையா கவே அமைந்தன. தலித் மகள் என்ற இன் னொரு குறும்படம் அறுவையாக மட்டுமல் லாது (முன்னாள்)முதல்வர் கருணாநிதியின் துதிபாடும் பிரச்சாரப் படமாகவும் அமைந்திருந்தது. விழாப் பார்வையாளர்களுக்கு இவ் அவ பாக்கியம் கிட்டாது விழாக் குழு தடுத்தாட்கொண்டது நல்லதிற்கே எனலாம். தமிழ்நாடு ட. பிரசாத் திரைப்படக் கல்லூரி யிலிருந்தும் படங்கள் அனுப்பப்பட்டிருந்தன. அவற்றில் தொழில்நுட்ப நேர்த்தி ஓரளவுக்கு இருந்திட்டாலும் திரைக்கதையில் செறிவு இருக்கவில்லை. தமிழர்களிடம் காதல் இல்லாததாலேயே அதிக காதல்ப்படங்கள் வருகின்றன என ஜெயமோகன் அங்கு கூறியது எவ்வளவுக்கு நம்பகமானதோ தெரியாது ஆனால் இம்முறை சமர்ப்பிக்கப்பட்ட எதுக் கடா இந்த மாங்கெட்ட பிழைப்பு, முடிவு, காணல்நீர், சீ போடா வாடா, மன்னிப்பாயா, சட்டென்று மாறுது வானிலை என பிரசாத் திரைக்கல்லூரியிலிருந்து பல காதல்ப் படங்கள் வழமையான முழுநீளத் திரைப் படப் பாணியில் உருவாக்கப்பட்டிருந்தன. அதில் காணல்நீர் திரையாக்கத்திலும், நடிப்பிலும் கவனத்தை ஈர்ப்பதாய் இருந்ததுடன் நீண்ட நேரப் படச்சட்ட உத்தியை திறம்படச் செய் திருந்ததால் அது விழாவில் காட்சிப்படுத்தப் பட்டிருந்தது. இத்திரையீடும் நடுவர்களின் நீண்டநேரக் கலந்துரையாடலின் பின்பே சாத்தியமாகியிருந்தது. தமிழ்நாட்டிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்பாக ஒருவழிப்பாதை என்ற படம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 'டியிற்றல்' தொழில்நுட்ப வளர்ச்சி யால் படமெடுப்பது இலகுவாகிப்போனபோதும் இத்தகைய பாதகமான விடயமும் நடக்க லாம் என்பதற்கு இப்படம் ஒரு எடுத்துக் காட்டெனலாம். திரைப்படம் எடுப்பது எப்படி எனத் தெரியாது விளையாட்டாக அதில் இறங்கக்கூடாது என்பதைக்கு இது பாடமாக இருந்தது. நடுவர்களாக இருப்பது அவர்கள் சகிப்புத் தன்மைக்கும் சோதனைதான் என்ப தையும் இது உணர்த்தியது.

கனடாவிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட இருவர், அன்புக்கும் உண்டோ அடைக்குந் தாள் ஆகிய இரு படங்கள் விழாவின் காட்சிப்படுத்தலுக் கான தேர்வில் நடுவர்களால் நிராகரிக்கப் பட்டிருந்தும் கனடாவாழ்த் தமிழரின் முயற்சிகளைக் காட்சிப்படுத்தவேண்டும் என்பதோடு பார்வையாளர்களும், அதனைத் தயாரித் தோரும் ஏனைய படங்களுடன் அவற்றின் தரத்தை ஒப்பிட்டு தம்மை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற நல் நோக்குடன் அப்படங் களைக் காட்சிப்படுத்தியிருந்தனர்.





மலேசியாவில் இருந்து வந்திருந்த படங்கள் படப்பிடிப்பிலும் படத்தொகுப்பிலும் சிறப்புற்றி ருந்தன. குறிப்பாக யெகத் என்ற திரைப்படம் படப்பிடிப்பிலும் படத்தொகுப்பிலும் கச்சிதமான படைப்பாக இருந்தது. கடல், தரை, வீடு, கோயில் என பலதரப்பட்ட அமைவிடங்களில் வெவ்வேறான ஒளியில் கனகச்சிதமாகப் படமாக்கப்பட்டிருந்தது. இதன் படப்பிடிப்பாளர் மனோ நாராயணனுக்கே இவ்வருடத்துக்கான சிறந்த ஒளிப்பதிவாளருக்கான பரிசு கொடுக் கப்பட்டது. இன்றைய பல வன்முறைகளுக்கு எமது சமயச் சடங்குகளில், வழக்கங்களில் இருக்கும் சிறிய வன்முறைகளே காரண மென்ற எடுத்துக்கொண்ட கருத்தை வெகு நேர்த்தியான படத்தொப்பில் படமாக உரு வாக்கியிருந்தார்கள். பிரான்சிலிருந்து வந்தி ருந்த செம்மலையான் என்ற படம். வீரன் தான் செத்தபின்பும் எதிரியைச் சாகடிப்பான் என்ற கருத்தை படமாக்கியிருந்தது. இறுதி முடிவு பார்வையாளனுக்கு எந்தச் சுவாரிசத் தையும் கொடுக்காது என்றபோதும், எமது திரைப்படங்கள் காட்டுப்போர்களக் காட்சியை இத்தகைய எதார்த்தமான வெளிப்பாடாக இதுவரை காட்டியிருக்கவில்லை என்பதுடன் தமிழ்க் குறும்படங்களில் மட்டுமல்ல குறிப் பாக இலங்கைத் தமிழ்த் திரைப்படங்களில் இன்னும் பெருங் குறையாகவே இருக்கின்ற கலை அமைப்பு இதில் சிறப்புற இருந்ததைக் காட்டவேண்டும் என்பதால் பரிந்துரைக்கப் பட்டிருந்தது. செம்மலையானில் படத்தொகுப்பும் நடிப்பும், பின்னணி இசையும் சிறப்புற இருந்தது. இப்படம் பிரான்சில் எடுக்கப்பட்டி ருந்தாலும் பார்வையாளர்களுக்கு இலங்கைக் காட்டினையே உணர்த்திட்ட அளவுக்கு கச்சிதமான களத்தொரிவும், திறமையான படப்பிடிப்பும், உடைகள், சீர்மையான கலை அமைப்பு என்பன எம்மவர்களால் நல்ல படங் களை எடுக்க முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. திரைக் கதையில் இருந்த ஓரிரு ஓட்டைகளே இப்படத்தின் பலவீனம். கண்ணாடியில் குண்டு துளைப்பது போன்ற தேவையற்ற படத்தொகுப்புத் தோற்ற உத்தி களையும் தவிர்த்திருக்கலாம்.

மிஞ்சிய உயிருடன் என்ற ஒரு நிமிடக் குறும் படம் ஐ-போனினால் எடுக்கப்பட்டதுடன் வெகு சிறப்பாகவும் இருந்தது. தொழில்நுட்ப வசதி சினிமா எடுப்பதை எவ்வளவுக்கு இலகுவாக்கி விட்டது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. யுத்த தேசத்தில் இருந்து வந்த ஒவ்வொரு அகதியின் தேனீரில் அவர்களது கண்ணீரும் கலந்தே இருக்கிறது என்ற கருத்தை இது சிறப்புற திரைக் கவிதையாக்கியிருந்தது. உள்ள வசதியைக் கொண்டே உனது வெளிப் பாட்டை குறும்படமாக்கலாம் என்றும் சொன் னது இக்குறும்படம். தாய் மண்ணில் மனைவி குழந்தைகள் மரணித்த போது ஐயோ என்று குழறி அழக்கூட முடியாத நிர்ப்பந்தமான கட்டிடச் சூழலுக்குள் புலம்பெயர்ந்து வாழ் கிறோம் என்பதை ஐயோ என்ற பிரான்ஸ் படைப்பு திறம்படச் சொல்லியிருந்தது.

திரைப்படம் ஒன்று தயாரிப்பதற்காக வட்டிக் குப் பெற்றுவரும் பணம் வழிப்பறிக் குழு விடம் பறிபோவதை மையமாகவைத்து எமது மக்களிடமுள்ள சுயநலம், குழு அரசியல், சினிமா மோகம், கடன் கொடுத்துவிட்டு ஆள்வைத்துப் பறிப்பது, விடுதலை எனப் பேசிக்கொண்டு தமிழருக்கு உதவிடாத தன்மை என்பவற்றைக் கிண்டல் செய்து தினப்பயணம் என்ற குறும்படத்தை பரீஸ் வாழ் சதாப்பிரணவன் நடித்து இயக்கியிருந்தார். இப்படமே இவ்வாண்டுக்கான சிறந்த படமாகத் தெரிவாகியிருந்தது. அதில் திறம்பட நடித்திருந்த சதாப் பிரணவனுக்கு சிறந்த நடிகருக்கான பரிசும் கிடைத்தது. அதுமட்டுமல்லாது சிறந்த இயக்குனருக்கான பரிசை இப்படத்தின் இயக்குனர் சதாப்பிரணவன் நேர்மாறு என்ற படத்தை இயக்கிய சுதன் மகாலிங்கத்துடன் பகிர்ந்துகொண்டார்.

இவ்வளவு படங்கள் வந்திருக்கின்றனவே இவை கடந்தமுறை வந்திருந்தவற்றிலும் உயர்ந்ததா? இக்கேள்வி பார்வையாளர்கள், நடுவர்கள், விழா அமைப்பாளர்கள் என சகலருக்கும் எழும் கேள்வியே. இக்கேள்வி இவ்வருட விழாவில் மட்டுமல்ல ஒவ்வொரு வருடமும் எழுங் கேள்வியுங்கூட. இதே கேள்வி அடுத்த வருடமும் எழத்தான் போகிறது. ஆனால் துரதிஸ்டம் என்னவென்றால் இல்லை எனும் தோற்றப்பாடே பலமட்டங்களிலும் எப்போது மேயான விடையாக உணரப்படப்போகிறது. அதுவே சரியானதுங்கூட. ஏனெனில் ஒவ்வொரு வருடமும் எமது எதிர்பார்ப்பு முன்னைய வருடத்திலும் உயர்வானதாகவே இருக்கும். நாமும் நமது ரசனையும் வளர்ந்ததே இதன் அர்த்தமாகும். எதிர்பார்ப்பிலும் மீறிய படைப் புகள் வருமாயின் அவற்றைத் தரப்படுத்தும் தகுதி எமக்கு இல்லாது போய்விடும். அத னால் எப்போதுமே படைப்புகள் எமது எதிர் பார்ப்பிலும் தாழ்ந்ததாகவே தோற்றமளிக்குமேயலல்லாது அது உண்மையல்ல. முதலாம் ஆண்டிலிருந்து இன்றுவரையில் அவதானித் தால் நாமும் நமது படங்களின் தரமும் பல வழிகளிலும் வளர்ந்திருப்பதை உணரமுடியும். ஆரம்ப காலங்களில் சமர்ப்பிக்கப்பட்ட படங் களை இப்போது பார்த்தால் அந்த உண்மை புலப்படும். முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட படங் களின் துல்லியம், கமராக் கோணங்கள், ஒளியமைப்பு, படத்தொகுப்பு என்பன தற்போது சமர்ப்பிக்கப்படும் படங்களைவிடக் குறைந்த தரத்திலேயே இருப்பதைக் கண்டுகொள்ள முடியும். முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட படங்கள் மேடை நாடகத்தை கமராவில் படம் பிடித்தது போன்ற அமைப்பிலேயே உருவாக்கப்பட்டிருந்தன. இப்போது வரும் பெரும்பாலானவைகள் அத்தவறுகளைக் கைவிட்டு நாடகக் கலையிலிருந்து சினிமாக் கலைக்குள் வந்திருப்பதை வளர்ச்சியாகவே கொள்ள வேண்டும். இருந்தாலும் ஓரிரு படங்கள் மேடை நாடகத்தைப் படம்பிடிப்பதான முயற்சி களில் இப்போதும் இறங்குவதையே சறுக்கல் என்கிறோம். முன்னைய படங்களில் வசன ஒலிச்சேர்க்கை தெளிவில்லாததாக இருக்கும். பின்னணி இசை பழைய படங்களில் இருந்து பிரதிபண்ணியதாக இருக்கும். ஆனால் தற் போதைய பெரும்பான்மையான படங்களில் உரையாடல்கள் தெளிவாகவும், இசையமைப் பாளர்களின் உதவியுடனான பின்னணி இசைச் சேர்க்கை தரமானதாகவும் இருப்பதை வளர்ச்சியென்றே கொள்ளலாம். கதை சொல் லும் முறையில் ஒவ்வொரு முறையும் வெவ் வேறான பலவற்றையும் பார்த்துவருகிறோம். இம்முறையும் அவ்வாறே பல புதிய அணுகு முறைகளில் படங்கள் வந்திருந்தன. இவ் வருட விழாவின் படங்கள் எப்படித் தோற்றங் காட்டியதோ தெரியவில்லை அடுத்த வருட விழாவின் முடிவில் இவ்வருட விழாவின் படங்கள் உயர்வானதாகத் தோற்றங்காட்டு வது நிச்சயமானதே. அதுவரை... வளர்வோம்.

arun.sivakumaran@thaiveedu.com

■ ■ ■

RB

# எங்கள் அனுபவம்

# உங்கள் லாபம்

## GUARANTEED
## LOW PRICES FOR:

**Non-Medical**
**Whole Life**
**Term Insurance**

Now Hiring!
FREE CLASSES FOR NEW INSURANCE & RESP AGENTS

RB ROYAL BROKERS
CORPORATION

**Siva Kandiah**
CEO & Managing General Agent
**416.315.8100**



RBC Insurance
Industrial Alliance
Assumption Life
Desjardins
Equitable Life of Canada
Manulife Financial
Canada Life

sivakandiah@royalbrokers.com
TEL: 416.298.4722 FAX: 416.298.4664

80 Nashdene Rd., Unit B 25-26
Toronto ON M1V 5E4

# உலக மொழிகளின் எழுத்து வடிவங்கள் தோன்றிய வரலாறு

## தமிழ் மொழி வரலாறும் அதன் வரிவடிவத் தோற்றமும்:

கடந்த மாதங்களில் வெளிவந்த கட்டுரைகளில் உலகமொழிகள் பற்றிய தொடர்களிலே முதலிலே தோன்றிய மொழிகள் எந்தெந்த நாகரிகங்களூடாகத் தோன்றினவென்றும் அவற்றின் எழுத்து வடிவங்களின் தோற்றம் பற்றியும் ஒப்பீட்டுரீதியாக ஆய்ந்தோம். சென்ற மாதக் கட்டுரையில் தமிழின் தொன்மை, அதன் நாகரிகங்கள், தமிழ் மொழி தோன்றிய வரலாறு போன்ற பலவற்றை நோக்கினோம். இம்முறை தமிழின் எழுத்து வரிவடிவம் எங்கிருந்து தோற்றம் பெற்றது, அது எவ்வாறு பரிணாம வளர்ச்சி பெற்றது என்பதனை நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழனின் முதல் நாகரிகம் லெமூரியாவில் தொடங்கியதாயினும் கடல்கொண்ட அழிவினால் அப்போது பாவனையில் இருந்த வரி வடிவங்கள் யாவும் அழிந்ததோடு முதற்

**பகுதி - 6**

சங்கத்தில் இயற்றப்பெற்ற சங்ககாலப் பாட்டுக்கள் எவையும் எமக்குக் கிடைக்கவில்லை. இடைச்சங்கப் பாடல்களும் ஒருசிலவே கிடைத்துள்ளன. எனினும் இடைச்சங்க இறுதியில் இயற்றப்பட்ட அகத்தியம், இதில் சில செய்யுள்களே கிடைத்துள்ளன. அடுத்து இறையனார் களவியல், ஒரு பகுதியே கிடைத்தது. முழுமையாகக் கிடைக்கவில்லை. இடைச் சங்கத்தே அரங்கேற்றியதாக அறியப்படும் தமிழின் முதல் இலக்கணநூலாகவும் முதன் முதலாகக் கிடைக்கப்பெற்ற பண்டைய நூலான ஒல்காப்புகழ் 'தொல்காப்பியம்' என்பதாகும். தொல்காப்பியம்கூட தொடர்ச்சியாகக் கிடைக்கவில்லை என்பது அறிஞர்கள் கருத்தாகும். அத்தோடு சில பகுதிகள் வேறு புலவர்கள் பாடிச்சேர்த்த பிற்சேர்க்கை என்று குறிப்பிடுவோரும் உள்ளனர். தொல்காப்பியம் கிடைத்தது தமிழர்களாகிய நாம் எல்லோரும் செய்த பாக்கியமாகும்.

## தமிழ் எழுத்து வரிவடிவம்:

திராவிடர்களின் வரிவடிவத் தொன்மையினை நிறுவ இன்று கிடைக்கப் பெறும் சான்றுகள் மூன்றாகும்:

- சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட சித்திர வடிவங்கள்
- தமிழி எனப்படும் தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள்
- தொல்காப்பிய நூல்

ஆகியனவாகும். சென்ற கட்டுரையிலே தொல் காப்பியத்தின் தொன்மையினையும் அது எக்காலத்தே தோன்றியது என்பதனையும் பார்த்தோம்.

## மொழிக்கு வரிவடிவம் இன்றி வழக்கிருந்த சில மொழிகள்:

தொன்மையான சிலமொழிகள் இன்று வழக்கற்றுப் போய்விட்டது. இதற்குக் காரணம் அம்மொழிகளுக்குரிய லிபிகள் (வரிவடிவங்கள்) ஏற்படாமையும், மொழி பேசுவோர் பல்வேறு இடங்களுக்கும் பிரிந்து செல்லும் இடங்களுக்குத் தக்கபடி புது லிபிகளைத் தோற்றுவித்துக் கொள்ளாததுமாகும். ஏட்டு வழக்கில் உள்ள மொழி பேச்சுவழக்கு மொழிக்கு இணங்கி வராவிடின் அம்மொழிகள் பேச்சு வழக்கில் அழிவது தவிர்க்க முடியாது. அத்தோடு அவர்கள் பிரிந்து செல்லும் இடங்களில் திரிமொழிகள் ஏற்பட்டு அவைகள் வழிமொழிகள் என்றே கருதப்படும். இவ்வாறான நிலையே வடமொழிக்கும் லத்தின் மொழிக்கும் ஏற்பட்ட நிலையாகும். சமஸ்கிருதத்தின் உண்மையான இன்றைய வரிவடிவமாகிய தேவநகரி கி.பி 10ஆம் நூற்றாண்டிலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. அதுவரை தேவ-

நேயப்பாவாணரால் வடதிராவிடம் என்று நிறுவப்பட்ட பிராகிருதமே வடமொழியின் பேச்சு மொழியாகவும் அதனை எழுதுவதற்கு கி.பி 3ஆம் நூற்றாண்டில் தோற்றம்பெற்ற அசோகன் பிராமியே எழுத்து வரிவத்தினைக் கொடுத்தது. ஆனால் தமிழுக்கு இன்னிலை ஏற்படவில்லையெனில் அதற்கு ஒரு பேசுதளம், தொடர்ச்சியான இலக்கியத் தளம் தொடர்ச்சியாக இருந்து கொண்டேயிருந்தது. அது லெமூரியாவில் வாழ்ந்த திராவிட இனமாகினும் சரி அவர்கள் இடம் பெயர்ந்தபோது பாரியளவிதானவர்கள் வடக்கே இடம்பெயர்ந்து தென்னாட்டிலும் அதே குழுமம் அதே மொழிகளுக்கும் உள்ள ஒரு யதார்த்தமாகும். இது 19ஆம் நூற்றாண்டில் அச்சியந்திரம் அறிமுகப்படுத்தியதன் பின்னே எழுத்து வரி வடிவங்கள் நிலையாயின. தற்போதைய தமிழ் எழுத்துக்களும் இவ்வாறே பலமாற்றங்களூடாக வந்து இன்று நிலைபெற்றுள்ளன. சிந்து வெளி சித்திர எழுத்துக்களின் தொடர்ச்சியான பரிணாம வளர்ச்சியும் இடைச் சங்கத் தமிழ் இலக்கியங்கள் புனையப்பட்டபோது பாவிக்கப்பட்ட தமிழி வடிவங்களின் பரிணாம வளர்ச்சியுமே தமிழ்மொழிக்கு வரிவடிவங்களைக் கொடுத்தது என ஐயம்திரிபறக் கூறமுடியும். தொடர்ந்து 13, 14ஆம் நூற்-




முருகேசு பாக்கியநாதன்


வோம். முதலில் படம் 1, 2, 3, 4 இல் ஒன்று தொடக்கம் 417 வகையான சித்திர வரிவடிவங்களை நோக்குவோம். சித்திர வரி வடிவங்கள் நேரடியாகக் கருத்து விளக்கப் படங்களாகவே அமைகின்றன. உதாரணமாக நீர், மலை, மிருகம், உணவு போன்ற குறி

**மொகஞ்சதரோ - ஹறப்பா நாகரிகங்களில் கண்டெடுக்கப்பட்ட சிந்துவெளி சித்திர எழுத்துக்களைக் கீழே காணலாம்.**









யைப் பயன்படுத்தி வந்தனர். முதல் இடைச் சங்கங்களில் பயின்ற அதே இலக்கிய இலக்கணத் தொடர்ச்சி தொடர்ந்து கடைச்சங்கத்தேயும் அதன் பின்பும் தொடர்ந்து வளரலாயிற்று. இதே போன்று சிந்துவெளி நாகரிகத் திராவிடர்கள் ஆரியர்களால் விரட்டப்பட்ட போது அவர்கள் தமது இனம் வாழும் இடத்திற்கே தெற்கே வந்து சேர்ந்து வாழ்ந்ததனாலும் அம்மொழி பாதுகாக்கப்பட்டது எனலாம்.

## சிந்துவின் சித்திர எழுத்துக்களே தமிழ் வரிவடிவின் மூல வடிவம்:

எழுத்துக்கள் காலத்திற்குக் காலம் வெவ்வேறு வடிவம் எடுத்து வந்ததே சகலமொழி-

றாண்டில் பாவனையில் இருந்த தமிழ் வட்டெழுத்தானது இன்றை தமிழ் வரிவடிவத்தின் முன்பு இருந்த வடிவமாகும்.

சிந்துவெளி அகழ்வாய்வில் கிடைக்கப்பெற்ற சித்திர வடிவங்களிலிருந்தும், தொல்காப்பியத்திலிருந்தும் தென் இந்திய, இலங்கைக் தமிழி (பிராமி) கல்வெட்டுக்கள், மட்பாண்டத் தாளிகள் போன்றவற்றின் மூலமும் இடைக் காலத்தைய வடடெழுத்தின் மூலமும் அறிய முடியும். முதலில் இங்கு காணப்படும் சிந்து வெளி சித்திர எழுத்துக்களின் மூலம் முதலில் நோக்குவோம். சிந்துவின் மெஹஞ்சதாரோ - ஹறப்பா நகரங்களில் கண்டெடுக்கப்பட்ட சித்திர வரிவடிவங்கள் எவ்வாறாக தமிழ் வரி வடிவம் தோன்ற வழிசமைத்தனவென நோக்கு

யீடுகள்தான் உலகில் தோன்றிய சகலவிதமான சித்திர எழுத்துக்களும் உணர்த்தி நின்றன. ஆனாலும் அதிலிருந்து பொறப்பட்ட கருத்துக்களுக்கான இசைவான சித்திர வரி வடிவங்கள் எதிர்காலத்தில் எழுத்து வடிவங்களைத் தோற்றுவித்தது எனலாம். இது பற்றிய ஒரு விளக்க வரைபடத்தினை "தமிழே பலமொழிகளுக்கு மூல வரிவடிவம்" என்ற எனது கட்டுரையில் பார்வையிட்டிருப்பீர்கள். எனினும் கீழே அது தொடபான சில எழுத்து வரிவடிவங்களை நோக்குவோம். சிந்து சித்திர எழுத்துகளில் இருந்து தமிழ் வடிவம் தோன்றில்லை என்போரும் உண்டு. அதே விதமாக தமிழ்ப் பிராமிக்குத் தோற்றுவாய்

*தொடர்தல் 67ம் பக்கம்*




அசோகன் பிராமி என்று வாதிடுவோரும் உண்டு. இவை இரண்டையும் ஆய்ந்து நோக்கி முடிவுக்கு வருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிந்துவின் சித்திர எழுத்து எவ்வாறாக தமிழியின் தோற்றத்திற்கு வழிகோலின என்பதனை அதற்கு ஈடான இன்றை தமிழ் வடிவினையும் காண்க.

சிந்துவின் சித்திர எழுத்து எவ்வாறாக பிராமி எழுத்துக்கள் தோன்ற வழிசமைத்தன என்பதனை இங்கு தரப்பட்டுள்ள சித்திர எழுத்துக்களின் இலக்கங்களுடன் அந்தந்த சித்திர வரிவடிவங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தமிழ் நெடுங்கணக்கு வரிசைகளையும் ஒப்பு நோக்கி அதனை படம் 5இல் தொடர்பு படுத்தி அதில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்க வரிவடிவதினைப் பார்க்கவும்.
*(பி.கு:* 'ஐ' என்னும் எழுத்து கை உருவத்தினை அடிப்படையாகவே வைத்து வளர்ந்தது என்பதனை துருவசங்கரி அவர்கள் என்மொழியின் கதை நூலின் விளக்கத்தினை அடிப்படையாகக் கொண்டது.)

## தொல்காப்பியர் காலம்:

உலகின் பிறந்த எந்த மொழியாயினும் சரி அது பிறந்தகாலத்தில் எந்த மொழிக்கும் எழுத்து வரிவடிவம் இருந்ததில்லை. ஆனாலும் அந்தந்த மொழிகளில் இலக்கிய வடிவங்கள் தோன்றினும் அவை செவி வழியாகவும், வாய்வழியாகவும் அதன் தொடர்பு பேணப்பட்டு வந்தது. இது பலநூறு ஆண்டுகளாக இருந்துள்ளதே வரலாற்று நியதியாகவிருந்துள்ளது. இவ்வழியேதான் தமிழ் மொழியும் தனது வரிவடிவத்தினைப் பெற்றதெனலாம். இவ்வழியாகவே தமிழில் முதலில் தோன்றிய அகத்தியம், தொல்காப்பியம், இறையனார் களவியல் போன்ற நூல்கள் இடைச்சங்கத்தே தோற்றம் பெற்றதென்று அறிஞர்களின் முடிவாகும். கடைச்சங்கத்தினை கி.மு 1000 தொடக்கம் கி.பி 200 வரையென்று வரையறுக்க முடியும். எனினும் சென்றமாதக் கட்டுரையில் தொல்காப்பியம் இயற்றி அரங்கேற்றிய காலம் பற்றிப் பல அறிஞர்களின் கருத்துக்களைக் குறிப்பிட்டிருந்தேன். அதன் பிரகாரம் பலரது கருத்துக்கள் சில அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மிகவும் மிகைப் படுத்திக் கூறப்பட்டுள்ளதாகக் கூறுவர். அதற்குரிய அகச்சான்றுகள் ஓரளவு இசைந்து வரினும் புறச்சான்றுகள் எதுவும் இசைந்து வரவில்லையென்றே கூறவேண்டும். அதே போல சில அறிஞர்கள் கூற்று குறிப்பாக சமஸ்கிருதவாதிகளான சில அறிஞர்கள் அதனை மிகவும் பிற்பட்ட காலத்திற்கு எடுத்துச் செல்வது அகச்சான்றுகளாலோ அல்லது புறச்சான்றுகளாலோ ஏற்றுக்கொள்ள முடியாததாகவிருக்கின்றது. குறிப்பாக பேரசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை, கே.என் சிவராச பிள்ளை அவர்களும் தொல்காப்பியத்தின் காலம் கி.பி 5ஆம் நூற்றாண்டென்பர். இதனையே பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களும் வையாபுரிப்பிள்ளை அவர்களின் காலத்தோடேயே ஒத்துப்பேசின்றார். "தொல்காப்பியத்தின் காலம் பற்றிக் கருத்து மாறுபாடுகள் ஆய்வாளர்களிடையே இருப்பினும், கி.பி.5 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியினைச் சார்ந்தது என்ற வையாபுரிப்பிள்ளையின் கருத்தோடு நாம் உடன்படலாம்" 'தமிழ் இலக்கியக் கொள்கைகளிலும், மொழியியல் நடைமுறை பற்றிய விதிகளிலும் ஆதாரபூர்வமான நிபுணராகவும் இலக்கிய வடிவங்களைப் போதிக்கும் மூலகர்த்தாவாகவும் தொல்காப்பியர் கருதப்படுகின்றார்'. (ஆதாரம்: பண்டைய தமிழ்ச் சமூகம் - பேராசிரியர் கா.சிவத்தம்பி பக் 1.) இவரது மேற்குறித்த இரண்டு கருத்துக்களும் சங்ககாலத்தென்றும் சங்கமருவிய காலத்தென்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல நூல்களுக்களின் காலங்களுக்கு முரணாக அமைகின்றதென்று கருதவேண்டியுள்ளது. குறிப்பாக திருக்குறளின் காலம் கி.மு.3ஆம் நூற்றாண்டென அறிஞர் குழாம் முடிவு செய்துள்ள நிலையிலும் திருக்குறளின் காலம் கி.மு 231 என முடிவுசெய்துள்ளனர். கி.மு. 245 – 220 வரை ஆண்ட களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலைப் பாடிய மாமூலனார் திருவள்ளுவமாலையில் வள்ளுவரைப் பாடியுள்ளார். ஆகவே வள்ளுவரும் மாமூலனாரும் சமகாலத்தவர் என்றே கொள்ள முடியும். அத்தோடு எல்லாள மன்னன் கிமு 205 – 161 காலத்தே ஆட்சிசெய்தவனாவான். இவரும் திருவள்ளுவரின் நண்பர் ஏலேலசிங்கன் என்றும் கூறப்படுகின்றதுவும் மாமூலனார் காலமும் ஒரே காலமாகும். ஆகவே திருவள்ளுவர்காலம் கி.மு 3ஆம் நூற்றாண்டென்றே கொள்ளப்பட வேண்டும். சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இலங்கை மன்னன் கயவாகு காலமான கி.பி 114 – 136 ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தினதாகும். கயவாகு-



மன்னன், சேரன்செங்குட்டுவன் வடநாட்டு அரசர்களாகிய கனக வியஜனை பேரில் வென்று அவர்கள் தலையில் இயமத்திலிருந்து கல்லினைக் கொண்டுவந்து கண்ணகிக்கு சில சமைத்து கோவில் அமைத்த போது அதன் குடமுழுக்கிற்கு கயவாகு சென்று வந்தான் என்பது சரித்திரமாகும் இதனை மகாவம்சமும் சிலப்பதிகாரமும் குறிப்பிடுகின்றது. ஆகவே தமிழில் தோன்றிய இலக்கியங்கள் யாவற்கும் மூத்த இலக்கண நூலாகிய தொல்காப்பியம் எவ்வாறு கி.பி 5ஆம் நூற்றாண்டு என வரையறுக்க முடியும். இது இவ்வாறிருக்க வையாபுரிப் பிள்ளையின் 'சிலப்பதிகாரத்தின் காலம் கி.பி 8ஆம் நூற்றாண்டென்பது' சான்றுகளோடு ஒத்துவராததாகவுள்ளது.



மற்றும் வடமொழியினை தென்னாட்டிற்கு அறிமுகப்படுத்தவும் திணிக்கவும் தமிழ் மொழியின் சாயலோடும் தமிழின் வட்டெழுத்து வடிவத்திலிருந்து கிரந்தம் கி.பி 5ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்டது. இது தொல்காபியர் காலத்திற்கு முன்பு 1000 வருடங்களுக்கு முந்திய நிகழ்வாகும். அப்படியிருக்க தொல்காப்பித்தில் கூறப்பட்ட தமிழ் வரிவடிவம் எவ்வாறாக கி.பி 5ஆம் நூற்றாண்டில் கூறப்பட்டிருக்கும். இது முழுப் பூசனிக்காயைச் சோற்றுக்குள் மறைக்கும் விந்தையாகும்.

தொல்காபியம் கி.மு 10ஆம் நூற்றாண்டுக்கு முந்தியதாகவே கொள்ள முடியும். செவிவழி வழங்கிவந்த அதனை அக்காலத்தே புழக்கத்தில் இருந்த தமிழி வடிவில் எழுதி வைத்தார்கள். அதன் வடிவத்திற்கும் தொல்காப்பியர் தெரிவிக்கும் எழுத்து வடிவங்களுக்கும் தொடர்பு இருப்பதனையும் படம் 5 இல் பார்வையிடவும். தொல்காப்பியர் எழுத்திற்கு வடிவத்தில் மட்டும் கூறவில்லை. ஒவ்வொரு எழுத்தின் ஒலிப்பிறப்பினையும் கூறியுள்ளார் என்பது இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கது.

***உசாத்துணை:***
• என்மொழியின் கதை – வீ.துருவசங்கரி
• தமிழெழுத்தின் வரிவடிவம் - பேராசிரியர் சி.கோவிந்தராசனார்
• தொல்காப்பிய மீளாய்வு – கட்டுரை – முனைவர் கொடுமுடி சண்முகம்
• மொழி வரலாறு – முனைவர் மு.வரதராசனார்
• தமிழ்மொழி வரலாறு – அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
• பண்டைத் தமிழ் சமூகம் - பேராசிரியர் கா.சிவத்தம்பி
• தமிழ் இலக்கிய வரலாறு – முனைவர் பா.இறையரசன்

packiyanathan.m@thaiveedu.com

■ ■ ■

## கே. எஸ். பாலச்சந்திரனின்

# நேற்றுப்போல இருக்கிறது




குரு அரவிந்தன்

பழைய நினைவுகளை மீட்டிப் பார்ப்பது என்பது மிகவும் சுவாரஸ்யமானது. பிறந்த மண்ணிலே நினைவுகளை மீட்பதற்கும் புகுந்த மண்ணிலே நினைவுகளை மீட்பதற்கும் நிறையவே வித்தியாசம் இருக்கின்றது. அந்த மண்ணிலே இருந்தால் சிறுவயதிலே நடந்த சம்பவங்களின் இடங்களையோ அல்லது காட்சிப் பொருட்களையோ காண்பதற்கு எங்களுக்கு அடிக்கடி சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். ஆனால் புகுந்த மண்ணில் அந்த நினைவுகளை மீண்டும் கற்பனையில் கொண்டு வந்து தான் நாங்கள் பார்த்து அனுபவிக் வேண்டும். அப்படியான ஒரு சூழலில்தான் கே.எஸ். பாலச்சந்திரனும் 'நேற்றுப்போல இருக்கிறது' என்ற தனது நூலில் தான் வாழ்ந்த கிராமப்பின்னணியில் இளமைக்கால நினைவுகளை தனக்கே உரிய நகைச்சுவை ததும்பும் பாணியில் இரை மீட்டிருக்கிறார். சமீபத்தில் ஒரு பேப்பரில் வெளிவந்த 'கடந்தது நடந்தது' என்ற இவரது இந்தக் கட்டுரைகள் பலரின் விருப்பத்திற்கிணங்க இன்று நூல் வடிவில் உருப் பெற்றிருக்கின்றன.

பொதுவாக எல்லா எழுத்தாளர்களும் தங்கள் இளமைக்கால அனுபவங்களைத் தமது கட்டுரைகள் மூலமோ அல்லது கதைகள் மூலமோ வெளிக்காட்டுவார்கள். ஆங்கிலத்தில் இளமைக்கால அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் இப்படியான நூல்கள் நிறையவே இருக்கின்றன. தமிழகத்தில் எழுத்தாளர் சுஜாதாவின் இத்தகைய உரைச்சித்திரத்தை வாசித்து ரசித்திருக்கிறேன். தமிழிலே செங்கை ஆழியான், கே. டானியல், அ. முத்துலிங்கம் போன்ற எழுத்தாளர்கள் தங்கள் ஆக்கங்கள் மூலம் பழைய நினைவுகளை அவ்வப்போது நிறையவே மீட்டிருப்பதை வாசித்து மகிழ்ந்திருக்கிறேன். இதைப்போலவே கனடா உதயனில் வெளிவந்த என்னுடைய நெய்தலும் மருதமும் என்ற தொடரில் இத்தகைய இளமைக்கால நினைவுகளை மீட்டுப் பார்த்திருக்கின்றேன். குறிப்பாக பாரதியார் 'காக்கை குருவி எங்கள் ஜாதி' என்று குறிப்பிட்டதைப் போல, யாழ்ப்பாணப்பகுதியில் ஏழு பறவைகளாய் கூட்டமாக வரும் சாம்பல் நிற புலுனி, மழைகாலத்தில் வரும் சிகப்பு நிற தம்பள பூச்சி, மனிதர்போல பேசத் தெரிந்த மைனா, கூடுகட்டத் தெரியாத குயில், முதுகிலே மூன்று குறி போட்ட அணில், செம்மஞ்சள் இறகைக் கொண்ட செம்பகம் போன்ற உயிரினங்கள் இன்று அந்த மண்ணிலே அருகி வருகின்றன என்ற உண்மையையும் அந்த உரைச்சித்திரத்தின் மூலம் தெளிவாகக்காட்டியிருந்தேன். எனவே இத்தகைய பழைய நினைவுகள் எழுத்தாளர்களால் மீட்கப்படும்போது எதிர் காலச் சந்ததியினரால் முன்னோரைப் பற்றிய பல விடையங்களை இதன் மூலம் அறிந்து கொண்டு அவற்றை ஆவணப்படுத்த அவர்களால் முடிகின்றது. கே.எஸ் பாலச்சந்திரனும் அந்த முயற்சியில் வெற்றி பெற்றிருக்கின்றார்.

நாடக உலகே கே. எஸ். பாலச்சந்திரனின் கனவாக இருந்ததால் 'நாடகம் போட்டோம்' என்று தனது விடலைப்பருவத்து அனுபவத்தை இந்த நூலில் முதல் கட்டுரையாகக் குறிப்பிடுகின்றார். 1970களில் சிரித்திரன் சஞ்சிகையில் இக்கட்டுரை வெளிவந்ததாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார். இராமாயண நாடகத்தில் இராவணன் வேடமேற்று நடித்த அவர்களது வகுப்பு மெனிற்ரரை மற்ற மாணவர்கள் எப்படி பழி தீர்த்துக் கொண்டார்கள் என்ற கதையை நகைச்சுவையாய்ச் சொல்கிறார். நாடக நடிப்பு என்பது எல்லோருக்கும் இலகுவில் கிடைக்கும் அனுபவமல்ல, ஆனால் சயிக்கிள் பழகுவது என்பது அனே




கமாக எல்லோருக்கும் கிடைக்கும் அனுபவமாகும். அந்த அனுபவத்தைப் பற்றியே அடுத்ததாகக் குறிப்பிடுகின்றார். 1950 தொடக்கம்வரை ஆண்கள் மட்டுமே பெற்றுக் கொண்ட அந்த அனுபவத்தை பெண்களும் பின்நாளில் பெற்றுக் கொண்டது, பெரியதொரு சமுதாய மாற்றத்திற்குக் காரணமாயிருந்தது. எதற்கெடுத்தாலும் ஆண்களையே நம்பியிருந்த தமிழ் பெண்களுக்கு அவர்கள் சுயமாக இயங்குவதற்கு இந்தச் சயிக்கிள் முக்கிய காரணமாய் இருந்திருக்கிறது. ஒருவர் மட்டுமே அமர்ந்து செல்லக்கூடிய இந்த வண்டி தேவை கருதி இருவர், மூவர் அமர்ந்து செல்லும் வண்டியாக ஒவ்வொரு கிராமத்திலும் மாறியிருந்தது.

பள்ளிக்கூட நாட்கள் பற்றி ஆசிரியர் குறிப்பிடும் போது, பிந்திப் போனால் வாத்தியார் பிரம்பினால் அடிப்பார் என்ற பயத்தோடு அரைகுறை அழுகையுடன் ஓடியோடிப்போன அருமையான பள்ளிக் காலம் பற்றியும், பள்ளிப் பரீட்சை பற்றிக் குறிப்பிடும்போது பரீட்சை நடந்தால் பரவாயில்லை பரீட்சை முடிவுகள் வராமல் விட்டால் போதும் என்ற நிலையில் இருந்ததாகவும் குறிப்பிடுகின்றார். பள்ளிக்கூட விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றியது, பேச்சுப்போட்டி, பள்ளிகூட கண்காட்சி என்று ஒவ்வொரு கட்டுரையும் ஒவ்வொரு கதை சொல்கிறது. பேச்சுப் போட்டியின் போது பாரதி என்ன சொன்னார் என்று திரும்பத்திரும்பச் சென்னபோது சபையில் இருந்தவர் தன்னைப் பார்த்து என்ன சொன்னார் என்பதை நகைச்சுவையோடு குறிப்பிடுகின்றார்.

இடங்கள்தான் மாறுபட்டிருக்கிறதே தவிர சம்பவங்கள் எல்லாம் எல்லோருக்கும் அடிக்கடி ஏற்பட்ட அனுபவங்களாகவே இருக்கின்றன. காலத்திற்கேற்ப சில சம்பவங்களிலும் மாற்றங்கள் தெரிகின்றன. குறிப்பாக வாத்தியார் பிரம்பால் அடிப்பார் என்ற பயம் அந்தக் காலத்து மாணவர்களுக்கு இருந்தது போல, இப்போது உள்ள மாணவர்களுக்கு இருப்பதில்லை. பாடசாலை விளையாட்டுப் போட்டி பற்றி இவர் குறிப்பிடும் போது பச்சை, சிகப்பு, நீலம், மஞ்சள் நிறங்களில் இல்லக் கொடிகள் இருக்கும் என்று குறிப்பிட்டிருக்கின்றார். நான் ஆரம்பக் கல்வி கற்ற நடேஸ்வராக் கல்லூரியிலும் வள்ளுவர், கம்பர், இளங்கோ, பாரதி என்று பெயர் வைத்தது மட்டுமல்ல இந்த நான்கு நிறங்களிலும்தான் இல்லக் கொடிகள் இருந்தன. வள்ளுவர் இல்லத்திற்குப் பச்சை நிறம் கிடைத்ததால் மாட்டுவண்டில் பிடித்து இடைக்காடு சென்று பச்சை நிறத்தில் இளநீர், தென்னங்குருத்து, தாளங்காய் எல்லாம் பச்சையாகவே பறித்துவந்து இல்லக் கொட்டகையை இயற்கைச் சூழலில் அலங்கரித்து பரிசு பெற்ற ஞாபகம் இன்றும் என்மனதில் பசுமையாக இருக்கின்றது.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று சொல்வார்கள். கோயிலே இல்லாத ஊரே யாழ்ப்பாணத்தில் இல்லை. கோயில் இருந்தால் திருவிழா கட்டாயம் நடக்கும். திருவிழா வந்தால் எல்லா வயதினருக்கும் கொண்டாட்டம்தான். நேர்த்திக்கடன் வைத்துக் காவடி எடுப்பது மட்டுமல்ல, ஆட்டக்காவடி தாளத்தோடு ஆடுவதும் ஒரு கலைதான். அதைவிடப் பெரிய கலை அரும்பு மீசையோடு இளைஞர்கள் சுவாமி தூக்குவது. வீட்டிலே எதையாவது தூக்கச் சொன்னால் பஞ்சிப்படும் இளைஞர்கள் எல்லாம் சுவாமி தூக்குவதற்கு மட்டும் முண்டி அடித்துக் கொண்டு முன்வருவார்கள். காரணம் மேற் சட்டை இல்லாத தங்கள் பரந்த மார்பைப் பார்ப்பதற்கென்றே இரட்டைப் பின்னல்கள் தாய்மாருக்குப் பின்னால் பதுங்கியிருக்கும் என்பதையும் அவர்கள் அறிந்து வைத்திருப்பார்கள். இதைத்தான் கே.எஸ். பாலச்சந்திரனும் 'அவர்களுக்குப் பின்னால் நின்று கொண்டு அவர்களின் சின்ன மகள்மாரும்..' என்று சொல்லாமல் சொல்கின்றார்.

சிகை அலங்காரம் செய்ய வீட்டிற்கு ஒருவர் வருவார். பயத்துடன் அவர் வருகையை எதிர்கொள்வோம், காரணம் அவர்கையிலே கத்திரிக்கோல், ரேசர்கத்தி, மண்டையை விறாண்டும் கூர்ப்பல்லுச் சீப்பு என்பன போன்ற ஆயுதங்கள் இருக்கும் என்று சிகையலங்காரம் செய்வது பற்றி ஆசிரியர் குறிப்பிடுகின்றார். அந்த நாட்களில் சிகை அலங்கார நிலையங்கள் கிராமங்களில் இருக்கவில்லை. அதனால்தான் வீடுதேடி வந்து சிகையலங்காரம் செய்வார்கள். அப்பன் மகன் என்ற வித்தியாசம் இல்லாமல் எல்லோருக்கும் 'பொலீஸ் கட்'தான். அனேகமாக அப்படியான சிகையலங்கார அனுபவம் அந்தக் காலத்தில் எல்லோருக்கும் இருந்திருக்கும்.

தைப்பொங்கல், தீபாவளி, வருடப்பிறப்பு போன்ற பண்டிகை நாட்களைப்பற்றியும் குறிப்பிடுகின்றார். புத்தாடை உடுத்து ஊஞ்சால் கட்டி ஆடுவது. ஒற்றை ஊஞ்சால், அன்ன ஊஞ்சால் என்று பலவகையான ஊஞ்சால்கள் வீட்டில் உள்ள மாமரத்திலோ அல்லது வேப்ப மரத்திலோ கட்டி ஆடுவார்கள். இப்போதெல்லாம் அந்த வழக்கம் குறைந்து கொண்டே போகிறது. காரணம் ஊஞ்சால் கட்ட அங்கே மரங்களும் இல்லை, ஆடிமகிழப் பிள்ளைகளும் இல்லை.

யாழ்ப்பாணத்தில் நடக்கும் பணச்சடங்கு முறை, அந்தக் காலத்து எலெக்ஷன் எப்படி நடந்தது, கூப்பன் கடை என்றால் என்ன, அந்தக் கடைக்கு நடந்தது என்ன, அந்தக் காலத்து வாசிகசாலை எப்படி இருந்தது, குடும்பமாக சினிமா பார்க்கப்போன கதை என்று நகைச்சுவையோடு பல விடையங்களையும் இந்த நூலில் தந்திருக்கின்றார்.

இந்த நூலைத் தனது அம்மம்மா திருமதி. லட்சுமி உமாபதிக்குச் சமர்ப்பணம் செய்திருக்கின்றார் ஆசிரியர். இலங்கையில் உள்ள கனகா பதிப்பகத்தினர் இந்த நூலை வெளியிட்டிருக்கிறார்கள். அட்டைப்படத்தை பிரபல ஓவியர் ரமணி அவர்கள் வரைந்திருக்கிறார்கள். உள்ளே வரும் அத்தனை கட்டுரைகளுக்கும் தனித்தனியே ஓவியம் வரைந்தது மட்டுமல்ல, தனது ஓவியத்தின் மூலம் மண் வாசனையை அப்படியே வெளிக் கொண்டு வந்திருக்கின்றார். அச்சுப் பதிப்பை யுனி ஆர்ட்ஸ் செய்திருக்கிறார்கள். இதற்கான முன்னுரையை சாகித்யரத்னா செங்கை ஆழியன் க. குணராசா வழங்கியிருக்கின்றார். யாழ்ப்பாணத்து அனுபவங்களை கண்முன்னே கொண்டு வரும் இது போன்ற நூல்கள் நிறையவே வெளிவரவேண்டும். தமிழர் வாழ்ந்த நிலங்கள் பற்றிய குறிப்புக்கள் கட்டாயம் புலம் பெயர்ந்த மண்ணிலாவது ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டு, கே.எஸ்.பாலச்சந்திரனின் பணி மேன்மேலும் தொடரவேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

kuruaravindan@thaiveedu.com

■ ■ ■

**கடுகு... பிரித்தானியப் பிரதமரான கனடியர்:**

New Brunswick மாகாண Rexton நகரில் பிறந்த Bonar Law தனது 12வது வயதில் ஸ்கொட்லாந்துக்குப் புலம்பெயர்ந்தார். கன்சர்வேட்டில் கட்சியின் தலைவரானார்.

ஒக்ரோபர் 22, 1922 – மே 22, 1923 வரையிலான 211 நாட்கள் பிரித்தானியப் பிரதமராகப் பதவி வகித்தார். பிரித்தானியத் தீவுகளுக்கு வெளியே பிறந்து பிரித்தானியப் பிரதமரானவர் இவர் ஒருவரே.

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

**Uthayan Alex Sivasambu** B.Sc. (Hons), M.B.A

Broker

**Ottawa: 613.276.SALE (7253)**
**Toronto: 416.659.SELL (7355)**

alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER



# All Your Insurance Needs.....

**UNIVERSAL LIFE INSURANCE**
ஆயுட்காலம் வரை நீடிக்கும் நிரந்தர ஆயுட்காப்புறுதி.
10, 15 அல்லது 20 வருடங்களில் செலுத்தி முடிக்கலாம்

**MORTGAGE INSURANCE**
அடமானக் கடனுக்கான காப்புறுதி வங்கியில் பெற்றுக்கொள்வதை விட ஆயுட்காப்புறுதி நிறுவனத்தில் பெற்றுக் கொள்வது சிறந்தது.

**CRITICAL ILLNESS INSURANCE**
25 விதமான கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2 மில்லியன் வரை பெறக்கூடிய காப்புறுதித் திட்டம் நோய் ஏற்படாவிடில் கட்டியபணம் முழுவதும் மீளப்பெறமுடிறும்

**RESP**
குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத் திட்டம் 20 - 40 வீதமான அரச மானியத்துடன் 15 வீத போனஸ்

**வயோதிபர்களுக்கான காப்புறுதி**
- மருத்துவ பரிசோதனை வேண்டியதில்லை.
- உடனடியாக காப்புறுதித்திட்டம் அமுலாகும்.
- வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும், நீரிழிவு நோயால் இன்சுலின் பாவிப்பவர்களும் பெற்றுக்கொள்ளலாம்.
- ஆயுட்காலம்வரை மாதாந்த கட்டணத்தில் மாற்றமில்லை.



**Protect your family with an affordable life insurance policy....**

**Vasanth Vinayagamoorthy**
Insurance Adviser
**Cell: 647-885-3012**
Office: 416-494-4777
Fax: 416-613-2739
www.vvinsurance.ca

Desjardins Financial Security · Assumption Life · IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.


*"Excellent Rates with Quality Services"*

# Build The Life You've Always Dreamed Of... You Can Start By Choosing the Right BROKER

## LOW Interest Rates Starting at 2.20%

- Bad/Good Credit
- Self Employed
- Unemployed

Win Up To $100,000* When you minimize your mortgage



MORTGAGE ALLIANCE

Refinances | Debt Consolidation | Home Renovations
Purchases | Renewals | Self-Employed | New Immigrants

* win the value of your mortgage up to $100,000 See complete contest rules for details at www.rightmortgage.ca/minimizeyourmortgage
Corporate Office: Suite 200, 2005 Sheppard Ave. E., Toronto ON M2J 5B4
Toll Free: 1-877-366-3487 License #10530



Lokan Sundaram
Mortgage Broker
Lic #: M08000182
416-450-3984
lsundaram@trebnet.com

Kathir Kandiah
Mortgage Broker
Lic #: M08009958
416-230-6462
kkathir@trebnet.com

# பயணத்தால் படித்தவை




## பயணத்தால் படித்தவை - 07

### றோயல் Tandoor:

நேரமாற்றம், பயணக் கழைப்பு காரணமாக மாலை 1 மணி வரை நன்றாகத் தூங்கி விட்டோம். 2 மணியளவில் எம்மை சந்திப்பதற்காக வில்லியம் ஹொட்டலுக்கு வருவதாகக் கூறியிருந்தார். அவரைச் சந்திப்பதற்காக 'வரவேற்பு' பகுதியில் காத்திருந்தோம். புத்தம் புதிய BMW SUV ஹொட்டல் முன் வந்து தரித்தது. வில்லியம் வாகனத்தை விட்டு இறங்கினார். நல்ல உயரம். 5 அடி 11 அங்குலம் இருக்கலாம். அராபியர் போல் மஞ்சள் நிறம். கத்தார் ஆட்சியாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர் போல் தோன்றினார். அந்த வெய்யிலிலும் கொட்டன் துணியில் தயாரிக்கப்பட்ட 'கோட்' அணிந்திருந்தார். கறுப்பு நிற பாதணிகள் பளபளத்தன. பொருளாதார வெற்றியின் முழு அவதாரமாக காட்சியளித்தார். வில்லியம் எங்களை அன்பாக வரவேற்றார்.

அன்றைய தினம் "ஈட்" திருநாள் என்ற காரணத்தால் டோகா நகரம் தூக்கத்திலிருந்தது. ஐந்து நாட்கள் தொடர்ந்து விடுமுறை. வில்லியம் முதலில் எங்களை தனது புதிய அலுவலக கட்டிடத்திற்கு அழைத்துச் சென்றார். விடுமுறை நாளாக இருந்த பொழுதும் அவரது உதவியாளர் – பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த இளம் பெண் வேலை செய்துகொண்டிருந்தார். இன்னும் ஒரு இளவயதுடைய ஆண் எடுபிடி வேலைக்காக காத்திருந்தார். தனது அலுவலகத்தை சுற்றிக் காட்டினார். தனது தொழில் ரீதியான முயற்சி பற்றி விளக்கமாக கூறினார்.

டொகாவில் வில்லியம் பெரும் தொழில் அதிபர்களில் ஒருவர் என்பது அன்றைய சந்திப்பில்தான் தெரியவந்தது. அவரது வளர்ச்சி அயரா முயற்சிக்கு கிடைக்கின்ற பலன் என்பதற்கு உதாரணமாகத் தெரிந்தது. 'I have built an empire' என பெருமையுடன் கூறினார். அவரது பங்காளர் (Partner) அந்நாட்டைச் சேர்ந்த ஆட்சியாளர் குடும்பத்தினரில் ஒருவர். செல்வந்தர்கள் வசிக்கின்ற பிரத்தியே பகுதியில் தனி வில்லா (Villa) ஒன்றில் வசிக்கின்றார். 1000க்கும் மேற்பட்ட ஊழியர்கள் இவரது நிறுவனத்தில் வேலை செய்கின்றனர்.

டொகா நகரில் பிரபல்யமானது அங்குள்ள பழமை வாய்ந்த சந்தை, சுக் வகிவ் (Souq Waqif). இது 100 ஆண்டுகளுக் முற்பட்ட சந்தை. இருப்பினும் பழமையை கலைக்காமல் அண்மையில் சிறப்பாக புதுப்பிக்கப்பட்டுள்ளது. கத்தாருக்கு செல்லும் வெளிநாட்டவர்கள் 'சுக் வகிவ்'க்கு விஜயம் செய்யாவிட்டால் அவர்கள் அந்நாட்டிற்கு விஜயம் செய்தார்கள் என்று கூறமுடியாதவகையில் இச்சந்தை உலகப் பிரசித்தி வாய்ந்தது. Souq Waqifஐ ஆங்கிலத்தில் நேரடி மொழியாக்கம் செய்தால் 'Standing Market' என்று கூறுகிறார்கள். தமிழில் "நிமிர்ந்து நிற்கும் சந்தை" எனக் கூறலாம். இங்கு கலாச்சார உடைகள், விலை உயர்ந்த வாசனைத் திரவியங்கள், கறுவா, ஏலம், கிராம்பு, கைவேலைப்பாட்டுப் பொருட்கள், ஞாபகச் சின்னங்கள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். பல நாடுகளைச் சார்ந்த உணவு சாலைகளும் இங்கு உள்ளன. றோயல் ரண்டூர் (Royal Tandoor) என்ற செல்வந்தர்கள் மட்டும் உணவருந்தக் கூடிய உணவகம் ஒன்றை வில்லியத்தின் நிறுவனம் நடாத்தி வருகிறது. இது சுக் வாகில் மிகவும் பிரதானமான பகுதியில் அமைந்துள்ளது. இந்த உணவகத்தின் முன்பதாக கலை கலாச்சார நிகழ்வுகள் நடைபெறுகின்ற திறந்த வெளி அரங்கு அமைந்திருக்கின்றது.

நாங்கள் சுக் வாககிற்க்கு சென்ற நேரம் சனக் கூட்டம் அதிகமாகவிருந்தது. இரவு உணவை வில்லியத்தின் றோயல் ரண்டூரில் உண்பதற்காக மாலை 6 மணியளவில் அங்கு சென்றோம். வாகனத்தரிப்பிடத்திற்காக சுமார் அரை மணி நேரம் அலைய வேண்டியிருந்தது. பின் நீண்ட தூரம் நடந்து றோயல் ரண்டூரை அடைந்தோம். அவ்வேளை திறந்த வெளி அரங்கில் அராபிய கலை கலாச்சார நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. முதல் தடவையாக அராபிய நாட்டு மக்களை அவ்வளவு எண்ணிக்கையில் பார்க்கக் கூடியதாகவிருந்தது. அராபிய நாடுகளில் நிகழும் சம்பவங்களை சித்தரிக்கின்ற அழகிய காட்சிகளை ஆங்கில திரைப்படங்களில் பார்பது போலிருந்தது.

'Shisha Lounge' என அழைகிகப்படுகின்ற பகுதி அராபிய நாடுகளை சார்ந்த உணவகத்தின் முன்னால் இருந்தன. 'Shisha' எனப்படுவது ஒருவகை புகைத்தல். மிகவும் அழகிய வேலைப்பாடுடைய பேழையில் குறிப்பிட்ட அளவிற்கு நீர் நிரப்பப்படும். பேழையின் இடையே துவாரங்களுடைய தடை வைக்கப்படும். அந்த தடையின் மேல் புகையிலையை வைப்பார்கள். பல விதமான மணம்



குணமுடைய புகையிலைகள் உள்ளன. நீர் கொதிக்கும் பொழுது எழும் ஆவி புகையிலையில் பட்டு அது எழுப்புகின்ற புகையை பேழையில் பொருத்தப்பட்டுள்ள குழாய்கள் மூலம் வாய் ஊடாக உள்ளெடுத்து மீண்டு வெளிவிடுவார்கள்.

Shisha (சிஷா) வெவ்வேறு பெயர்களால் ஒவ்வொரு நாடுகளிலும் அழைக்கப்படுகிறது. உதாரணமாக துருக்கி, கிரேக்கம், சைப்பிறஸ், ஆர்மெனியா, ஈராக், ஜோற்டான், லெபனான், சிறியா, ஸ்ரேல் ஆகிய நாடுகளில் 'நார்கில்' (Nargile) எனவும் சிலவேளைகளில் ஆர்கிலே (Argilen) எனவும் அழைகப்படுகிறது.

இந்த புகை பிடித்தலின் தோற்றம் ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்டது எனக் கருதப்படுகிறது. முதலில் வட இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்டது. இது இந்தியாவில் Hookah என அழைக்கப்படும். அரசகுடும்பத்தினரும், பணம்படைத்த செல்வந்தர்களும் மட்டும் 'குகா' புகைபிடித்தலில் ஈடுபட்டிருந்தார்கள். இது ஒரு சமூக அந்தஸ்தைக் கணிக்கும் புகைப்பிடித்தல். 1775ம் ஆண்டில் முதல் முதலில் கல்கத்தாவிற்கு வந்த William Hickey என்ற ஆங்கிலேயர் பின்வருமாறு தனது குறிப்பில் எழுதியுள்ளதாக கூறப்படுகிறது.

மிக மகி அழகாக அலங்கரிக்கப்பட்ட சிறந்த 'ஹுகர் எனக்காக தயாரிக்கப்பட்டிருந்தது. அதைப் புகைக்க முயற்சி செய்தேன். ஆனால் எனக்குப் பிடிக்கவில்லை. பல முயற்சிகளின் பின்பும் எனக்கு ஒத்துவரவில்லை என்ற காரணத்தால், "நான் புகைப்பவனாக (smoker) மாறவேண்டுமென்று மீறமுடியாத தேவை ஒன்று உண்டா?" என அழுத்தமாய் கேட்டபொழுது அதைவிட கூடிய அழுத்தத்துடன் கூறப்பட்டது, "சந்தேகமின்றி, ஆம், நவநாகரீகத்தை விட்டு விலகியிருப்பதை விடை உலகை விட்டு வெளியேறலாம்" (undoubtedly it is, for you might as well be out of the world as out of the fashion). இங்கு எல்லோரும் புகை பிடிப்பார்கள். இரவில் எல்லோரும் புகை பிடிப்பார்கள். "இரவு உணவை இழந்தாலும் இழப்போமே ஒழிய ஹுகாவையல்ல" என பலர் கூறக் கேள்விப்பட்டுள்ளேன்.

இவ்வகையான ஹுகா புகைத்தல் இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்டதன் காரணம் அப்பொழுது அங்கு மக்கள் பெருமளவில் சாதாரண புகையிலையை புகைத்துக் கொண்டிருந்தார்கள். இதனால் அவர்களில் உடல் நிலையில் பாதிப்பு ஏற்பட்டது. கூடிய பாதிப்பை தவிர்பதற்காக ஹுகா புகைத்தல் அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால் இன்றைய ஆராட்சியின் படி குகா (சிசா) புகைத்தலால் நேரடியான புகையிலை, சிகரற் புகைப்பதை விட அதிக பாதிப்பு ஏற்படுகிறது எனக் கருதப்படுகிறது.

'சுக் வகிவ்'ன் சரித்திரப் புகழையும், அழகிய தோற்றத்தையும் ரசித்த வண்ணமாக வில்லியத்தின் றோயல் ரண்டூர் உணவக மாளிகையினுள் புகுந்தோம். வில்லியத்தின் புண்ணியத்தில் ஒரு நாட்டின் அரச குடும்பத்தினர் உணவருந்தும் உணவகத்தில் உணவருந்தும் வாய்ப்புக் கிட்டியது. அந்த உணவக மாளிகையின் உள்வடிவம் 45 நாட்களுள் நிர்மாணிக்கப்பட்டது என வில்லியம் கூறினார். இந்த குறுகிய காலத்துள் கட்டிமுடிக்க வேண்டும் என்ற நிபந்தனையில்தான் தனக்கு இந்த சரித்திரம் வாய்ந்ததும், மிகவும் பழமையான, ஆனால் பழமை குன்றாமல் திருத்தப்பட்ட கட்டிடத்தின் பிரதானமான ஒரு பகுதி ஆட்சியாளரால் வாடகைக்கு தனக்கு ஒதுக்கப்பட்டது எனவும் பெருமையாக கூறினார். அந்த உணவக மாளிகையின் அலங்கரிப்பும் தளபாடங்களும் அரசகுடும்பத்தின் தரத்திற்கு ஒத்தவையாக விசேடமாக அமைக்கப்பட்டன எனவும் விபரம் கூறினார். வில்லியம் உட்புகுந்ததும் அவருக்கு அரச மரியாதை வளங்கப்பட்டது. நிர்வாக முகாமையாளர் எங்கிருந்தோ பறந்துவந்தார். வாசலில் இந்திய கலாச்சார உடை அணிந்து பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த சிலை வடிவான இளம் பெண்கள் வரவேற்றார்கள். முகாமையாளர் எங்களை ஒரு பிரத்தியேக அறையினுள் அழைத்துச் சென்றார். "நேற்று ஆட்சியாளரின் மகள் தனது தோழிகளுடன் உணவருந்த வந்திருந்தார். இந்த அறையில்தான் அவரை உபசரித்தோம் என பூரித்த முகத்துடன் வில்லியத்துக்கு ஒப்புவித்தார். "நாளை மறுநாள் ஆட்சியாளர் உணவருந்த வருவதாக இளவரசி கூறினார்" எனத் தொடர்ந்து சொன்னார். "மிகவும் கவனமாக இருக்கவேண்டும்... இவர்கள் எப்போ வருவார்கள் என்ற விபரம் ஒருவருக்கும் தெரியக்கூடாது. ஏன் இங்குள்ள ஊழியர்களுக்கும் தெரியக் கூடாது" என மிகவும் கண்டிப்பான தோரணையில் வில்லியம் பிரதம முகாமையாளரிடம் கூறினார். "ஆம்.." என முகாமையாளரும் தலை அசைத்து பணிவுடன் பதிலுரைத்தார். "இவர் கனடாவில் எனது சட்டவாளர். இது அவரது மனைவி" என கிடைத்த முதல் சந்தப்பத்தில் வில்லியம் எங்களை அறிமுகம் செய்து வைத்தார். அப்பொழுது தான் முகாமையாளர் தனது முதலாளியுடன் வேறும் இருவர் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்தது போல்... "கனடாவில் சட்டவாளரா?" என்று வியப்புடன் கேட்டார். அவரது கேள்வியில் என்னுடன் தனிமையில் பேசி கனடாவுக்கு எப்படி புலம் பெயரலாம் என்று அறிய வேண்டும் என்ற ஆவல் தோன்றியதை மனநிலை நிபுணர் போல் நான் உணர்ந்து கொண்டேன்.

அருஞ்சுவை உணவு பரிமாறப்பட்டது. தொழில் ரீதியான தனது வெற்றியைப் பற்றி வில்லயம் பெருமையுடன் கூறியவண்ணமிருந்தார். கத்தார் நாட்டின் பொருளாதார வளர்ச்சிபற்றியும் மத்திய கிழக்கு நாடுகளில் பலம் வாய்ந்த பொருளாதார நாடுகளில் கத்தாரும் ஒன்று எனவும், இங்கு கிடைக்கின்ற இயற்கை வளம் (Natural Gas) இதற்கு துணை நிற்கிறது எனவும், ஐந்து வருடங்களின் முன் டோகா நகரத்திற்கு விஜம் செய்த ஒருவர் மீண்டும் இன்று விஜம் செய்தால் இங்கு ஏற்பட்டுள்ள அபிவிருந்தியான மாற்றங்களை அவரால் நம்ப முடியாது எனவும், கத்தார் நாடு தனக்கு வழங்கிய அதிஷ்டத்தை நினைத்து தனது மகிழ்ச்சியை எங்களுடன் பகிர்ந்து கொண்டார். இடையிடையே உணவின் சுவை எப்படி இருக்கின்றது எனக் கேட்டுக் கொண்டிருந்தார். நாங்களும் சுவையாகவிருக்கிறது என உண்மையைத் தான் கூறிக்கொண்டிருந்தோம். நான்கு விதமான இந்திய உணவு வகைகளை பரிமாறப் பணித்தார்.

ஒவ்வொரு வகையிலும் ஒவ்வொரு பங்கு வேண்டப்பட்டது. அதை நாங்கள் மூவரும் பகிர்ந்து கொண்டோம். அந்த அளவு மூவருக்கும் திருப்தியாக பேதுமானதாகவிருந்தது. இதுபற்றியும் விளக்கம் கொடுத்தார், நம் இந்தியர்கள் தான் ஒரு பங்கை எடுத்து மூவர் பகிர்ந்து கொள்வோம். ஆனால் இந்நாட்டைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பங்கை 'ஓடர்' பண்ணுவார்கள். இங்கு நாங்கள் மூவருக்கும் ஓடர் பண்ணியது போல் மூன்று மடங்கு ஓடர் பண்ணுவார்கள். முடியுமான அளவு சாப்பிட்டு மிகுதியை விட்டு விட்டுப் போவார்கள். அதனால் எங்கள் வியாபாரத்துக்கு நல்ல லாபம். அப்பொழுது அராபிய உடை அணிந்து ஆண்களும் பெண்களும் பிள்ளைகளும் என இன்னுமொரு கூட்டம் ஏற்கனவே ஒதிக்கி வைக்கப்பட்ட பிரத்தியேக அறைக்கு இந்திய கலாச்சார உடை அணிந்து பிலிப்பைன்ஸ் நாட்டுப் பெண்களால் அழைத்துச் செல்லப் பட்டார்கள். அந்த கேள்வியை அவரிடம் கேட்கவேண்டுமென பார்த்த நேரம் தொட்டு உள் மனதில் வாதாடிய என்னால் தொடர்ந்தும் அடக்கமுடியாமல், "பிலிப்பைன்ஸ் நாட்டு பெண்களுக்கு இந்திய கலாச்சார உடை அணிந்திருப்பது நோக்கத்துக்கு முரண்பாடானதாக அமையவில்லையா?" எனக்கேட்டேன். அதற்கு அவர், "இந்தியப் பெண்கள் இந்த வேலை செய்வதற்கு அவர்களுக்கு ஒன்றில் விருப்பமில்லை அல்லது அப்படி விரும்பி வந்தாலும் நின்று பிடிக்கிறார்கள் இல்லை. அதனால்தான் பிலிப்பைன்ஸ் நாட்டு பெண்களை அமர்த்தியிருக்கிறேன். இவர்கள் மிகவும் பொறுமையாக சிரித்த முகத்துடன் தங்கள் வேலையைச் செய்கிறார்கள்" எனப் பதில் கூறினார்.

வயிறாற சுவையான உணவு அருந்தியாகி விட்டது. பணியாளரை வில்லியம் அழைத்தார். 'பில்' கொண்டுவரும்படி பணித்தார். அவர் தயக்கமுற்றார். வில்லியம் ஒரு சித்தாந்தத்தை அவருக்குக் கூறினார். "ஒரு

தொடர்தல் 71ம் பக்கம்

# நூலகம் - ஓர் அறிமுகம்

- அருண்மொழிவர்மன் -

-இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் எழுத்தாவணங்களை எண்ணிமப்படுத்தி ஆவணப்படுத்தும் செயற்பாடுகளை ஊக்குவிப்பதேடு, தகவல் வளங்களையும் அறிவுச் சேகரங்களையும் ஒழுங்குபடுத்தி அனைவருக்கும் கிடைக்கச் செய்துவரும் இலாப நோக்கற்ற தன்னார்வ முயற்சியே நூலகம் செயற்திட்டமாகும். www.noolaham.org என்கிற இணைய முகவரியில் இயங்கும் "நூலகம்" வலைத்தளம் ஓர் எண்ணிம நூலகம் (Digital Library) ஆகும். அதாவது www.noolaham.org என்ற ஆட்களப்பெயரில் இயங்கும் இணையநூலகத்தை, கணினியும் இணைய இணைப்பும் உள்ள எவரும் பயன்படுத்த முடியும். இப்போது 8,500க்கும் அதிகமான எழுத்தாவணங்களின் விபரங்களும் இணைப்புக்களும் இந்த இணைய நூலகத்தில் உள்ளன. பருமட்டாகச் சொல்வதானால் இன்றைய தேதியில் 3,000 நூல்கள். 3,000 சஞ்சிகைகள், 1,500 பத்திரிக்கைகள், 1,000 சிறுவெளியீடுகள் என 8,500 ஆவணங்கள் சகலராலும் பார்க்கக்கூடியவாறு ஆவணப் படுத்தப்பட்டுள்ளன. இவையனைத்தும் ஈழத்து ஆவணங்கள். ஈழத்து ஆவணங்கள் என்னும் போது ஏதோவொருவகையில் ஈழத்துடன் தொடர்புள்ளவை. அவ்வகையில் ஈழத்து எழுத்தாளர்களால் எழுதப்பட்டதோ அல்லது ஈழத்துப் பதிப்பகங்களால் பதிப்பிக்கப்பட்டதோ அல்லது ஈழம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கியதோ என்றவாறு அமையும். இவை தவிர சங்க இலக்கியங்கள் முதல் சோவியத் நூல்கள் வரை என பல்வேறுவகையான, ஏறத்தாழ 300 வெளியீடுகளுக்கான இணைப்புக்களும் உள்ளன. இந்த நூலகம் இலவசமானது. திறந்த அணுக்கம் (Open Access) உள்ளது. அதாவது எவரும் எங்கிருந்தும் இதனைப் பயன்படுத்தலாம்.

ஆரம்ப காலகட்டத்தில் பெரும்பாலும் இலக்கியம் சார்ந்த நூல்களே ஆவணப்படுத்தப்பட்டன. புனைவுகள், அபுனைவுகள் என்று பார்த்தால் கூட பெரும்பாலும் இலக்கியம் சார்ந்தவையாகவே காணப்படுகின்றன. திட்டத்துடன் தொடர்புள்ளவர்களது தெரிவுகள் முதன்மை பெற்றிருந்ததனால் அவ்வாறு காணப்பட்டது. அதன்பின்பு, சஞ்சிகைகள் மற்றும் இதர எழுத்தாவணங்கள் என எவ்வகையான எழுத்தாவணங்களாக இருப்பினும் அவை அச்சில் வெளிவந்திருப்பின், ஆவணப் படுத்தத் தகுதியானவை என்றவாறாக மாற்றம் பெற்றது. அச்சில் வெளிவந்திருக்க வேண்டும் என்பது மாத்திரமே நூலகம் செயற்திட்டத்தில் நிபந்தனையாகத் தொடர்கின்றது. தரமானது/தரமற்றது, பயனுள்ளது/ பயனற்றது போன்ற தணிக்கைகள் எதனையும் நூலகம் செயதிட்டம் பின்பற்றுவதில்லை. அவை விமர்சகர்களும் சமூகமும் தீர்மானிக்க வேண்டியவை. எதிர்காலச் சந்ததிக்கு இன்றைய காலப்பகுதியிலும் கடந்த காலப் பகுதியிலும் அச்சில் வெளிவந்த ஆவணங் களை விட்டுச் செல்வது மாத்திரமே நூலகத்தின் பணியாகும். உதாரணத்துக்குச் 'கல்வெட்டு' என்று அழைக்கப்படும் நினைவு மலர்களைக் கூட ஆவணப்படுகின்றது.

நூலகம்

ஏனெனில் கல்வெட்டுக்களில் கூட முக்கியமான விடயங்கள் காணப்படக்கூடும். இவ்வாறு ஆவணப்படுத்தும் நினைவு மலரொன்று சில வேளை ஒரேயொரு ஆய்வுக்காவது மாத்திரமே எதிர்காலத்தில் பயன்படக்கூடும். உதாரணமாக ஒரு கல்வெட்டிலிருந்து வம்சாவளி, பரம்பரை சம்பந்தமான தகவல் எதிர்காலத்தில் ஆய்வுகளுக்குத் தேவைப்படக்கூடும். ஈழத் தமிழர்களை பொறுத்தவரை அப்படியான ஆய்வுகள் எதிர்காலத்தில் நிச்சயமாக முக்கியத்துவம் பெறக்கூடியவை. சிதைவுக்குள்ளாகிப் பல்வேறு பிரதேசங்களில் பல்வேறு மொழிகளைப் பேசி வாழும் சமூகம் தனது உறவுகளை தேட முற்படும்போது இவ்வாறான நினைவுமலர்கள் பயன்படக்கூடும்.

மற்றொரு முக்கியமான விடயம் வரலாறு தொடர்பானது. இன்றைய வரலாறு இன்று அதிகாரத்தில் உள்ளவர்களால் எழுதப்படும் வரலாறு. பல்வேறு வகையில் பிளவுற்று அதிகாரப்படிநிலைகளைக் கொண்டுள்ள சமூகம் என்றளவில் இன்றுள்ள ஒடுக்கப்பட்ட சமூகங்கள் எதிர்காலத்தில் இன்றைய அதிகார வர்க்கத்தால் எழுதப்பட்ட பிரதிகளில் இருந்தே தமது வரலாற்றை மீள்வாசிப்புச் செய்ய வேண்டியிருக்கும். ரணஜித் குகா அவர்களால் எழுதப்பட்ட 'சந்திராவின் மரணம்' என்ற கட்டுரை மிக நல்ல உதாரணம். எந்தவொரு ஆவணத்தையும் அழிய விடப் போவதில்லை என்ற குறிக்கோளுடன் நூலகம் செயற்பட்டுக்கொண்டிருகின்றது. மருத்துவப் பதிவேடு (Medical Records), நில உரிமைப் பதிவுகள் (Land rights documents) போன்ற ஆவணங்களைக் கூட ஆவணப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. எதிர்காலத்தில் பொதுத்துறை நிறுவனங்கள் (Public Institution) போன்றவற்றின் ஆவணங்களையும் நூலகம் மூலமாக ஆவணப்படுத்த வேண்டும் என்ற எண்ணக்கரு உள்ளது. இது எவ்வளவு தூரம் சாத்தியப்படும் என்று தெரியவில்லை. ஆயினும் நூலகம் சாத்தியங்கள் தொடர்பிலும் அலட்டிக் கொள்வதில்லை. அசாத்தியங்களைச் சாத்தியமாக்குவது தானே செயற்பாட்டாளர்களின் பணி என்பதற்கேற்ப நூலகம் செயற்படுகின்றது.

நூலகத்திற்கு கிடைக்கும் நிதியுதவிகள் அனைத்தும் நூலக செயற்பாடுகளைப் பார்த்தவர்களும் பயனடைந்தோரும் வழங்கியவை தான். ஓரிருவரே மிகப்பெரிய நிதியுதவியை அளிக்கும் சந்தர்ப்பங்களைத் தவிர்த்து மாறாக, ஆயிரக்கணக்கான பயனாளர்களது சிறிய அன்பளிப்புக்களைக் கொண்டு இயங்குவதே ஆரோக்கியமானது. இவ்வகையான அணுகுமுறை பெருமளவான உழைப்பைக் கோரும் செயற்பாடென்ற போதிலும் இயன்றவரை பங்களிப்பாளர்களது எண்ணிக்கையை அதிகரிப்பதே சிறந்தது. இயன்றவரை நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் மூலமான செயற் பாடுகளை குறைத்து, இதர பங்களிப்பு முறைகள் ஊக்குவிக்கப்படுகின்றன. சமூக இயக்கமாக மாற்றிக் கொண்டுள்ள நிலையில் எதிர்காலத்தில் தொடர்ச்சியாகப் பெருமளவு நிதி கையாளுகை இருக்காது என்ற போதிலும், பத்திரிகைகளை ஆவணப்படுத்துவது போன்ற செயற்பாடுகளுக்கு இன்னும் அதிகமான நிதி தேவைப்படும். அதுமட்டுமல்லாது அசைபடங்கள் மூலமான ஆவணப் படுத்தல்கள் இன்னும் அதிகமான நிதியைக் கோரும் செயற்பாடுகளாகும். பல்வேறுபட்ட சமூக அக்கறையுள்ளவர்களிடமிருந்தும் நண்பர்களிடமிருந்தும் ஒரு சில நிறுவனங்களிடமிருந்துமே நிதி பெறப்படுகின்றது. இன்றைய தேதி வரையில் பெரியளவான நிறுவனங்களது எவ்வித நிதியுதவியையும் பெற்றுக் கொள்ளவில்லை. ஒருவகையில் இச்செயற்றிட்டத்தினூடான பங்களிப்பாளர்களின் ஆத்மார்த்தமான பிணைப்பிற்கு இதுவே காரணம். பெரும் நிதிக்கையாள்கை நிச்சயமாக இச் செயற்றிட்டத்தின் உயிர்ப்பைச் சிதைத்துவிடும் தன்மை கொண்டது. நூலகத்தின் வரவு செலவு விபரங்கள் வெளிப்படையாக வலைத் தளத்தில் வெளியிடப்படுகின்றன.

நூலகத் தளத்தின் பயன்பாடு தொடர்பில் நேரடியாக அளவீடு சாத்தியமில்லை. ஆனால் பல வலைப் பதிவுக் கட்டுரைகளிலும், ஆய்வுக் கட்டுரைகளிலும், தமிழ் விக்கிப்பீடியா போன்றவற்றிலும் நூலகம் பெருமளவில் உசாத்துணையாகப் பயன்படுகிறது. எண்ணிம ஆவணப்படுத்தல் தொடர்பில் தமிழ்ச்சூழலில் முன்மாதிரிச் செயற்திட்டமாக நூலகம் உள்ளது என்பதைக் குறிப்பிடலாம். நிறுவனமாக நூலகம் சாதிக்க வேண்டியவை பலவற்றை இனம் கண்டுள்ளது. வெறும் ஆவணப்படுத்தல் நிகழ்வுகளைத் தாண்டி அவற்றின் தேவை தொடர்பாகத் தொடர்ச்சியாக சமூகத்தின் மத்தியில் இயங்குவதோடு, ஆவணப்படுத்தல் என்னும் புள்ளிகளைத் தாண்டிய செயற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மரபறிவுப் பாதுகாப்பு, தகவல் அறிதிறன், அறிவுப்பரம்பல், கல்வி மேம்பாடு என நூலகம் இயங்கவேண்டிய தளங்கள் எம் கண்முன்னே எண்ணற்றுப் பெருகிக்கொண்டிருக்கின்றன. இவற்றை சாதிக்கமுடியும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் நூலகம் செயற்பட்டு வருகின்றது.

■ ■ ■

# பயணத்தால் படித்...

70ம் பக்கத் தொடர்ச்சி...

வியாபாரம் வெற்றிகரமாக இயங்கவேண்டுமென்றால் ஒருவருக்கும் இலவச சேவை வளங்கக்கூடாது. அது அந்த நிறுவனத்தின் உரிமையாளரோ அல்லது அவரது குடும்பத்தினரோ என்றாலும் கூட வியாபாரக் கணக்கு வேறு தனிப்பட்ட கணக்கு வேறு". எனக்கூறி தனது கடன் அட்டை மூலம் பணம் செலுத்தினார். இந்த சித்தாந்தம் பழமை வாய்ந்தது. எனினும் தொழில் ரீதியாக வெற்றி பெறுபவர்களுக்கும் தோற்றுப்போபவர்களுக்கும் இந்தக் கொள்கையின் செயற்பாடும் முக்கிய காரணமாக இன்றும் அமைகின்றது என்ற உண்மை நிலை என்தலையில் தட்டியது. இந்த உலகில் ஒன்றும் இலவசமாக கிடைப்பதில்லை. "Knowledge and Time are our stock in Trade" அறிவும் நேரமும் எங்களின் வியாபார முதலீடு என ஒரு சட்ட அலுவலகத்தில் எழுதப்பட்டிருந்ததைப் படித்த ஞாபகம் வந்தது. வில்லியத்தின் வளர்ச்சியிலும் அவரது அனுபத்திலும் சில வற்றைப் பகிர்ந்து கொண்டதில் ஏற்பட்ட மகிழ்ச்சியுடன் உணவகத்தை விட்டு வெளியே வந்தோம். திறந்தவெளி அரங்கில் கலை நிகழ்வுகள் நிறைவு பெற்று மக்கள் தம்தம் வழியே சென்று கொண்டிருந்தார்கள். ஒரு கூட்டம் றோயல் ரண்டூர் முன்னிலையில் கூடத்தொடங்கியது.

அங்கு கூடிய கூட்டமும் வில்லியத்தின் விளையாட்டுத்தான் என் தெரியவந்தது. தனது உணவகத்தின் முன் ஒரு இந்தியர் சீரான சிறியபட்டறை அமைத்து வித்தை காட்டுபவரைப்போல் அமர்ந்திருந்தார். வண்ணத் 'தலைப்பாய்' அணிந்து குஜிராத் மானில கலாச்சார உடை அணிந்து வீற்றிருந்தார். ஒரு சிறிய மண் சட்டியில் நெருப்பை எரித்துக் கொண்டு யாரையோ எதிர்பார்பது போல் இருந்தார். நாங்கள் அவரை அண்மித்து கூட்டத்தோடு சேர்ந்து கொண்டோம். அவருக்கு மிகவும் பக்கத்தில் செல்லும் வாய்ப்பு வில்லியத்தால் எங்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டது. நாங்களும் அவரை அண்மித்தவேளை ஒரு வெள்ளை நிற மேற்புலத்து சிறுமி பட்டறைக்கு முன் இருந்த சிறிய குந்து பலகையில் அமர்ந்தார். அவர் பல அளவு களிலுள்ள வளயத்தில் ஒன்றை தெரிவு செய்து அவளது கையில் அணிவித்தார். அது சரியான அளவாக இருந்தது. பின் பிளாஸ்ரிக் போன்ற ஒரு சிறிய கட்டியை எடுத்து நெருப்பில் உருக்கினார். அதற்கு வண்ண நிறம் சேர்த்தார். அந்த சிறுமியின் கைக்கு அளவான வளயத்தின் மேல் அந்த உருக்கப்பட்டு வண்ணந்தீட்டப்பட்ட திரவத்தை வட்டமாக பொருந்தினார். பின் சூட்டை ஆறவைத்தார். அது ஒரு அழகான கைவளயலாக உருவானது. அதை அந்த சிறுமியின் கையில் மாட்டிவிட்டார். அதற்கான பணத்தை சிறுமியின் பெற்றோர்கள் கொடுத்தார்கள்.

வில்லியம் என் மனைவியைப் பார்த்தார். 'ஞபகத்துக்காக நீரும் ஒரு வளயலைச் செய்யலாமே?' எனக் கேட்டார். உடனே எனது மனைவி அந்த வெள்ளை சிறுமி எழுந்தபின் குத்துபலகையில் அமர்ந்தார். வினாடிகளில் வளயல் தயாரிக்கப்பட்டு என் மனைவியின் கைகளை அலங்கரித்தது. இந்த யுத்தியும் தனது வியாபாரத்தைப் பெருக்குவதற்கா தான் கையாண்டது எனவும், வேடிக் கையைப் பார்க்க வருபவர்கள் உணவகத்தை தெரிந்து கொள்வார்கள் எனவும் இதனால் ஒரு விளம்பரம் கிடைக்கிறது எனவும் வில்லியம் பூரிப்புடன் கூறினார்.

manuel.jesudasan@thaiveedu.com

■ ■ ■

www.noolaham.org

நூலகம்

noolahamfoundation@gmail.com

கடந்த மாதத்தில்...

# நினைவில் நிற்கும் நிகழ்வுகள் சில...





ஜூன் **18, 2011** - **Radisson Hotel**இல் நடைபெற்ற தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2010ம் ஆண்டுக்கான இயல் விருது விழா.





ஜூன் 05, 2011 - கனடியத் தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் 11ஆவது நடை பவனி, - ஸ்கார்பரோ வைத்தியசாலைகளுக்கு நிதி சேர்க்கும் நிகழ்வு
படம்: கணா ஆறுமுகம்




ஜூன் 25, 2011 -**Sunnybrook Park** இல் நடைபெற்ற **CIMA Mayor 's Trophy 2011** கிரிக்கெற் போட்டி
படம்: கணா ஆறுமுகம்





ஜூன் 23, 2011 - ஸ்கார்பரோ **Rouge River** மாகாண சட்ட மன்றத் தொகுதிக்கான **NDP** கட்சியின் வேட்பாளர் நியமனக் கூட்டம்.
படம்: கணா ஆறுமுகம்

உங்கள் விழாக்களின் படங்களும் இங்கு இடம்பெறவேண்டுமாயின், விழா பற்றிய விபரங்கள், புகைப்படம் எடுத்தவரின் பெயர் மற்றும் உங்கள் தொடர்பிலக்கங்களுடன் **events@thaiveedu.com** என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.



ஜுன் 19, 2011 - **65 Greencrest Circuit**இல் இடம்பெற்ற உதயணனின் இரண்டு நூல்கள் வெளியீட்டு விழா



ஜுன் 26, 2011 - **La Gondola Banquet Hall**இல் **Super Singers Appreciation Dinner Night.**
- படம்: கணா ஆறுமுகம்



ஜுன் 12, 2011 - **Neilson Park**இல் நடைபெற்ற கிளிநொச்சி - இராமநாதபுரம் மக்கள் ஒன்றியத்தின் கோடை கால ஒன்றுகூடல்



ஜுன் **12, 2011 - 705 Progress Avenue # 101 Scarborough**வில் கனடா அறிவக நூலகத் திறப்பு விழா

# CTR தகவல் பலகை

**NEILSON & MCLEVIN**
2 bdrm basement
Srikantharaya: 416 298 0843/416 319 2250

**NEILSON & MCLEVIN**
1 bdrm for rent
Kala: 416 754 8947

**LAWRENCE & BRIMLEY**
1 bdrm basement
Raj: 416 430 0035/647 456 3144

**MARKHAM & EGLINTON**
1bdrm condo for rent
Sukanthi Thayananthan: 416 269 0938

**NEILSON & FINCH**
Need/House for one year rent
Rajalingam: 416 412 7468

**NEILSON & FINCH**
1 bdrm basement for rent
Keetha: 416 292 9169 /416 358 2467

**MIDLAND & LAWRENCE**
2 bdrm basement
Mrs.Nathan: 416 417 9027/416 751 5584

**BRIMLEY & EGLINTON**
1bdrm Basement
Nathan: 416 264 6113

**DONMILLS & EGLINTON**
2 bdrm what sale
416 731 2829

**MIDDLEFIELD & FINCH**
1 bdrm basement for rent
Kumar: 416 908 1250

**MCCOWAN & ELLESMERE**
Close to Scarborough Centre
1 bdrm walkout basement/
Parking
Raj: 416 430 0035/647 456 3144

**OSHAWA**
house for sale
4 Bdrms/3 washrooms/299,000
Rajev: 905 464 3827/416 662 0302

**WARDEN & FINCH**
3 Bdrm condo for sale
Sikki: 647 237 2052
416 457 7162

**RICHMOND HILL**
Close to Richmond temple
3 bdrm town house for sale
Bala: 905 770 3737

**BRIMLEY & EGLINTON**
2 bdrm for rent
Sothy: 416 269 6970

**MCCOWAN & ELSON**
July 1st need basement
2 bdrm
Raja/punitha: 905 209 8003/416-770 2490

**MARKHAM & EGLINTON**
3 bdrm condo 1 room for rent
Students/ladies would like it
Thevi: 416 266 5054

**NEILSON & MORNINGSIDE**
Walkout basement/2 bdrm
Sriskantharajah: 416 298 0843
416-319 2250

**MCCOWAN & FINCH**
Apt y; 1 room for rent
Mrs. Rajaratnam: 647 701 6403

**OSHAWA**
house for sale 4 bdrm
Close to all amenities/7 years old
Painter wanted
Rasaiya: 647 922 7585

**RESTAURANT FOR SALE**
Pickering
Ananthan : 905 239 9326/905 239 6161

**NEILSON & FINCH**

**MARKHAM $ STEELES**
New 3 bedroom,
2000 sq ft, family room,
living & dining and library,
TTC at the door step, 5 minutes walk to
Brookside Public School
available from the 1st of July
Contact 416-274-3050

**2003 HONDA CRV**
175km/$8000
Viji: 647 836 9743

**2000 TOYOTA CAMRY**
257Km
Emission and certify
Lingam: 416-716-2975

**1998 TOYOTA SIENNA**
LE - 260km/Green
Arunakiri: 416 829 9929

**1999 HONDA ODYSSEY**
$4500
Thayanantham: 647 637 9232

**2000 HONDA ACCORD**
200km
Pathmanathan: 416 985 1567

CTR
கனடியத் தமிழ் வானொலி
416 264 8798

**2000 HONDA CIVIC**
Selvan: 647 998 2870

**1998 TOYOTA COROLLA**
New A/C
Theva: 416 526 3434

**1998 TOYOTA COROLLA**
for sale/ $1200
Vasanthi: 416 559 2878, 905 294 7706

**2000 NISSAN PATHFINDER**
102 km
Pathmanathan: 416 985 1567

**2009 HONDA CIVIC**
Ravi: 647 206 6842

**2007 TOYOTA YARIS**
Single owner & driver Spacious 4 doors sedan,
well maintained & dealer served. 120 Km
Ananthan 416 431 0202 #226,
905 572 6854 Price negotiable.

**HELP WANTED**
A receptionist and
an office manager are
needed for our company
located in Etobicoke.
SatMetal
416 798 2248

# துயர் பகிர்வோம்



## திருமதி நாகேந்திரம் சத்தியபாமா (கிளி)

பண்டத்தரிப்பு வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், நெடுந்தீவு கிழக்கு 13ம் வட்டாரத்தை வாழ்விடமாகவும் கொண்ட நாகேந்திரம் சத்தியபாமா அவர்கள் 25.06.2011 அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி ஞானம்மா (பண்டத்தரிப்பு) இணையரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான கந்தப்பு மரகதமொழி இணையரின் மூத்த மருமகளும், காலஞ்சென்ற நாகேந்திரம் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, குமாரசாமி(நல்லூர்), ரத்தினசாமி(பூனகரி), சாரதாதேவி(பண்டத்தரிப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கமலம், கந்தையா, ராசம்மா, காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, செல்லமி, சிவகாமிப்பிள்ளை(இலண்டன்), புஸ்பம், குமாரசாமி(இலண்டன்), வெற்றிவேல்(இலண்டன்), மருது(இலண்டன்) ஆகியோரின் மைத்துனியும், ஜெயா(இந்தியா), வவா(இலண்டன்), அண்ணா(இலண்டன்), காலஞ்சென்ற சாந்தி, சிவா(இலண்டன்), வதனி (சுவிஸ்), செல்வன்(கனடா), செல்வி(இலங்கை), தயானி(இலங்கை), சாமினி(இலங்கை), ஜெகன்(இலண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசநாயகம்(இந்தியா), வைத்திலிங்கம் (இலண்டன்), கலா(இலண்டன்), திருச்செல்வம்(இலங்கை), ஜெயக்குமார்(சுவிஸ்), மாலா (கனடா), கண்ணன்(இலங்கை), ரமேஸ்(இலங்கை), ரோகினி(நெதர்லாந்து), சிவகுமார்(ஜோமனி), காலஞ்சென்ற தாரணி, ராகினி, சீலன்(இலங்கை) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிவணக்க நிகழ்வு 29.06.2011 அன்று நெடுந்தீவில் நடைபெற்றது,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வதனி | சுவிட்சர்லாந்து | 4131 721 3219 | சாமினி | இலங்கை | 9421 791 4846 |
| வவா | பிரித்தானியா | 44172 484 5265 | ஜெயலட்சுமி | இந்தியா | 91994 201 7480 |
| அண்ணன் | பிரித்தானியா | 44160 445 6300 | றோகினி | நெதர்லாந்து | 3125 122 5400 |
| சிவா | பிரித்தானியா | 44742 321 5176 | கரன் | நெதர்லாந்து | 165 106 8018 |
| ஜெயக்குமார் | சுவிட்சர்லாந்து | 4131 721 3219 | கிரி | நெதர்லாந்து | 3125 121 1511 |
| செல்வன் | கனடா | 1647 832 7181 | | | |



## திரு அருணாசலம் மங்களேஸ்வரன்

(மங்கா - HomeLife Landmark Realtor)

யாழ்.எழுவைதீவைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட அருணாசலம் மங்களேஸ்வரன் அவர்கள் 21-06-2011 அன்று இயற்கை எய்தினார்.

அன்னார், கந்தையா அருணாசலம்(எழுவைதீவு), பேரின்பநாயகி இணையரின் சிரேஷ்ட புதல்வனும், பொன்னுத்துரை கந்தையா(கொக்குவில் - பொற்பதி வீதி), சிவக்கொழுந்து இணையரின் மூத்த மருமகனும், ரஞ்சனிதேவி அவர்களின் அன்புக் கணவரும், ரமணன், ரஜீவன், மயூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவமணி, ஜெகசோதி (தவம் - இலங்கை), மகேந்திரன் (பாலன் - ஜேர்மனி), புஸ்பமணி (ஜேர்மனி), உமாதேவி, சத்தியகலா, ரேணுகா, சுதாகரன், சுதர்சன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கணேசலிங்கம், சரவணபவன் (பவன் - ஜேர்மனி), லொறீனா (இலங்கை), கல்யாணி (ஜேர்மனி), வரதராஜன், காசிலிங்கம், ஜீவானந்தம், கார்த்திகா, நர்மதா (ஜேர்மனி), பத்மலோஜனி (சுவிஸ்), சாந்தினி (சுவிஸ்), ஜெயக்குமார் (கனடா), உதயகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அருணகிரிநாதன், தவராஜா, கௌரி, வாசுகி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

| | | |
|---|---|---|
| ரஞ்சனிதேவி(மனைவி) | கனடா | 1416 816 8775, 905 604 6494 |
| சுதாகரன்(சகோதரன்) | கனடா | 1416 624 9605 |
| வரதன் | கனடா | 1416 917 0943 |
| ஜெயா | கனடா | 1416 302 9637 |
| உதயன் | சுவிட்சர்லாந்து | 4141 910 5531 |
| லோசினி | சுவிட்சர்லாந்து | 4144 273 4207 |
| சாந்தி | சுவிட்சர்லாந்து | 4181 284 8854 |
| பாலன் | ஜேர்மனி | 4971 315 70446 |

# அங்கீகாரங்களை வேண்டி நிற்கும் ஓமனக் குட்டிகள்

- பிரதீபா கனகா தில்லைநாதன் -

ஹொலிவூட் ஊடாக ஆதிக்கஞ் செலுத்தும் 'அமெரிக்க வெகுசன பண்பாடு' சிறிய பண்பாடுகளை மாற்றி இன்று உலகெங்கும் ஒரே வித / பாசன் உடைகளை, பழக்க வழக்கங்களை, அங்க அசைவுகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இதனால், அத்தகைய பெரிய குடையின் கீழ் உள்ள பண்பாடுகள், நாடுகள் என்பன எப்போதும் பெரிய தேசங்களது, அதன் பெரிய மனிதர்களது அபிப்பிராயங்களை உயர்வாய் நினைத்தபடி, அதற்காய் ஏங்கியபடி இருப்பதும் நிகழ்கிறது. கடந்த கட்டுரையொன்றில் ஏலவே குறிப்பிட்டிருந்தது போல, ஒரு பெரும்பான்மைச் சமூகத்துக்குக் கீழிருந்து வருகின்ற 'சிறிய' நாட்டவர்களது இந்த ஏக்கம், அவர்களது படைப்பாக்கங்களில் ஓங்கியிருக்கக் காணலாம்.

அந்த வகையில், சினிமாவாகட்டும் இலக்கியம் ஆகட்டும் அரசியல் ஆகட்டும் எம்மில் ஆதிக்கஞ் செலுத்தும் சக்தியாக தமிழகம் (இந்தியா) இருக்கிறது. அங்கிருந்து தான் எமக்கான அங்கீகாரங்களை நாம் பாத்திருக்கிறோம்.

இந்த எதிர்ப்பார்ப்பின் அடிப்படையிலான, தமிழக எழுத்தாளர்களுக்கும் 'இலங்கை', புலம்பெயர் எழுத்தாளர்ளுக்குமான இவர்களை அவர்கள் (இந்தியர்கள்) அங்கீகரிக்காத பிலாக்கணங் (ஒப்பாரி)களைப் படிக்கையில் ஓமனக் குட்டி தான் ஞாபகத்தில் வந்தாள், அதிலிருந்தே தொடங்கும் இக் கட்டுரையின் பேசுபொருள்.

அமரர் சுந்திர ராமசாமியின் 'ஜே ஜே சில குறிப்புகள்' நாவலில் வருகிற பாத்திரம் தான் ஓமனக் குட்டி எனுமோர் கேரளத்துப் பெண் பாத்திரம். சின்னப் பெண்ணான ஓமனக்குட்டி பத்திரிகைகளில் வருகின்ற அழகழகான வண்ணப் படங்களை கத்திரித்து எடுத்து, பூக்கள் வண்ணத்துப் பூச்சிகள் என்பனவைக் கொண்ட அவற்றை அப்பியாசக் கொப்பியில் ஒட்டி, ஒவ்வொன்றின் அருகேயும் கவிதை என்றும் ஒன்று எழுதி வைத்திருப்பாள்! அனேகமாக அவள் சமீபத்தில் கேட்ட சினிமாப் பாடலொன்றின் சாயலில் இருந்திருக்கக் கூடிய அவை, கவிதைகளல்ல, அவற்றில் தனித்தன்மையுமில்லை. ஒரு ரயில்ப் பயணத்தில் தனதந்தக் கொப்பியை அவள் மிகவும் மதிக்கின்ற ஜே.ஜேயின் அபிப்பிராயம் வேண்டிக் காட்டுவாள். ஜே.ஜே என்கிற பெரும் அறிவாளியால் அந்தப் பிள்ளையின் தனித்தன்மையற்றதான அசட்டுத்தனத்தை இரசிக்க முடியவில்லை. தலையில் அடிக்காத குறையாய், கொப்பியை அவளிடமிருந்து வேண்டியவன் அதனை யன்னலுக்கு வெளியே எறிவான்.

அப்போதின் ஓமனக்குட்டியின் முகம் வாசகர்களுக்குத் தெரிவதில்லை. மாறாக, வாசகர்களை அவனது ஆணவம் தான் வசீகரிக்கிறது. தயவுதாட்சண்யமற்ற ஜே.ஜே மீதான ஈர்ப்பாய் "இப்படி ஒருத்தனோ... அறிவின் அகங்காரமோ... அவன் உண்மையில் இருந்தானோ வாழ்ந்தானோ..." என்பதான கிளர்ச்சி ஏற்படுகிறது. அது போலவே, சினிமா உலகத்தில் 'திமிர் பிடித்தவனாயும் நடிகர்களை "அறைகிற" இயக்குநர்களாயும் கலைஞர்களாயும் சிலரைக் கூறுவார்கள். கூடவே, திமிர் அவர்தம் மேதமையிலிருந்து வருவது என்பதாகவும் காரணம் சொல்லப்படும். அந் நாவலாசிரியர் வியப்பது போல அறிவுக்கும் அற்ப ஆயுசுக்கும் அல்ல, மாறாக 'அறிவுக்கும் அகங்காரத்துக்கும் என்ன பந்தமோ?'

"ஜே.ஜே சில குறிப்புகளைப் பொறுத்தவரை" - சுந்தர ராமசாமி இங்கு வந்திருந்த போது, அவருக்கு, தான் தனது துணையை அறிமுகம் செய்து வைத்தபோது "இது தான் என் ஓமனக் குட்டி" என அறிமுகம் செய்ததாக குருஷேவோ யாரோ பத்தாண்டுகள் பழைய காலம் சஞ்சிகையில் எழுதியிருந்தது ஞாபகம்.

பின்னர் தூர்ந்து போயிருந்தாலும் கடந்த 10 - 12 வருடங்களில் குறிப்பிட்டளவு தேடலும் பார்வையும் இலக்கியம், நாடகம், திரைப்படத் துறைகளில் உள்ள ஒரு பார்வையாளர் மற்றும் வாசகராய் - இத் துறைசார் விமர்சனங்களாய்ச் சில அவதானங்களை மீண்டும் மீண்டும் காணக்கூடியதாய் இருக்கிறது. அது என்னவெனிற் காலத்துக் காலம் - எங்களது அழைப்பின் பேரிலேயே - இங்கு ஒருவர் வருவார். "இவர்களுக்கு நாவல் எழுதத் தெரியாது. 'சரியாய்' ஆங்கிலம் பேசத் தெரியாது. திரைப் படங்கள் எடுக்கத் தெரியாது". இவ்வாறு ஏதோ போகிற போக்கில் கூறி விட்டுப் போவார்.

அவர்கள் விட்டுச் செல்கிற அந்த அபிப்பிராயமானது எமது தாழ்வுப்பசிக்கு இரையாகும். எங்களுக்கு அப்படிக் கூறிச் செல்கிறவர்களின் படைப்புகள் கருத்துகள் தொடர்பில் விமர்ச



னங்கள் கூட இருக்கும். எனினும், நாங்கள் யாரை வெறுக்கின்றோமோ அவரது வாயாலேயே மகரிஷிப் பட்டம் வாங்க - புகழப்பட - ஞானஸ்நானம் செய்யப்பட காத்திருக்கிறது எங்கள் மனம். பிரபல எழுத்தாளர், புத்திசீவி, இயக்குநர் - அவர்கள் யாராகவும் இருக்கலாம் - தாங்கள் 'உயர்ந்தவர்கள்' என்கிற விம்பம் சுப்பீரியர் கொம்பிளெக்ஸ்-ஐ உடைய அவர்களாலும், அவர்களது அங்கீகாரத்தை வேண்டி நிற்கும் இன்ஃபீரியாட்டிக் கொம்பிளெக்ஸ் உடைய எங்களாலுமே உருவாக்கப் படுகின்றது.

இப்படிப் பல விம்பங்கள் இலக்கியச் சூழலில், தலைமைப் பீடங்களில், மக்களால் வாசகர்களால் கட்டியெழுப்பப் படுவதுண்டு. இந்த விம்பங்கள் இல்லாமல் அவர்களால் வாழவே முடியாதோ என்று தோன்றும் அளவுக்கு அவர்களை அவர்களே உருவாக்கிய விம்பங்கள் பாதிக்கும், விழுங்கும். இருந்த போதும், புதிய புதிய விம்பங்களை உருவாக்குதல் நின்றபாடில்லை.

## மற்றவரது அபிப்பிராயங்களுக்காக வாழ்தல்:

பார்க்கையில், சதா தம்மை கண்காணிப்பதும், மதிப்பிடுவதுமாய் இருப்பவர்களுக்கு தம்மை நிரூபிக்கும் இந்தக் கஸ்டம் (அல்லது பிரயத்தனங்கள்) எல்லாம், மத்தியதர வர்க்க மன நிலையை ஒத்ததாகவே தோன்றுகின்றது. அவர்கள் வாழ்வதே பிறருக்காகத் தான். தம்மை வருத்தி, பிறர் சொல்கிற ஒவ்வொரு சொல்லுக்கும் (இனிமேலும் பிறர் சொல்லப் போகின்ற ஒவ்வொரு சொல்லுக்கும் முற் கூட்டியே) குடும்பத்தில் அனைவரையும் வருத்தி "அவை என்ன நினைப்பினம், இவை என்ன நினைப்பினம்" என 'சமூக நியதிகளுக்கு' அமைய ஒத்து ஓடி ஓடி, செத்த வீடானாலும் சரி திருமண வீடானாலும் சரி அந்த சமூகத்தைத் திருப்திப் படுத்தவே முடியாது நிற்கும் - ஓடும் அந்த மத்தியதர வர்க்கம்.

அது போல கருத்து ஜாம்பவான்களும் பெரிய தேசத்துப் பண்பாடுகளும் எப்படித்தான் நாங்கள் அவர்களுக்கு நடந்து காட்டினாலும், "உன் நடையில் ஏதோரு தவறு இருக்கிறது நீ (என்னைப் போல) சரியாய் நடக்கிறாய் இல்லை" என்றே எம் காதுகளில் தொடர்ந்தும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன(ர்). என்றென்றைக்கும் தம் அழகு குறித்த திருப்தியின்மை எனும் தாழ்வுணர்ச்சியில் (போதாமையில்) பெண்களை விடுவதூடாக தமது கொம்பனிகளது 'அழகு படுத்தும்' பொருட்களை விற்கக் கூடியதாய் உருவாக்கி வைத்திருக்கும் முதலாளித்துவ அழகு சாதனச் சந்தைகள் போல, பின்தொடர்ந்து வரும் அந்தக் குரல்கள், எம்மைத் தீராத பசியில் விட்டு விடுகின்றன.

எப்போதும் தமக்கு கீழுள்ளவர்கள் எனச் சிலரை வைத்திருப்பதிலும், ஏதாவது ஒரு சர்ச்சையைக் கிழப்பி விட்டு அதில் (தாழ்வுணர்வின் கரைச்சலில்) அவர்களை அல்லாட விடுவதிலும் தான் அனேகமான அங்கீரிப்பு மனிதர்களது காலம் ஓடும். பள்ளிக் கூடங்களில் பலசாலியான பிள்ளைகள் (உடலிலும் மனதிலும் இன ரீதியாகவும்) நோஞ்சான்களைப் பார்த்து 'தனது 'பாரக்கிரமத்தை' காட்டுவது போல. அஞ்சுவதற்கு யாரோ இருக்கும் போதே, தமது பலத்தை பறைசாற்றுவதற்கான 'இடமும்' இருக்கும். அது பல்வேறு சமூகங்கள் ஆனாலும் சரி இலக்கிய உலகம் ஆனாலும் சரி இப்படித்தான் இருக்கிறது.

இங்கே அவர்கள் கூறுவது போல அவர்களைச் சுற்றியே விட்டில்கள் போல பறந்தவாறு எந்த புதிய வாசிப்பும் புதிய சிந்தனையும் இல்லாமல், நாம் எந்தத் துறையில் பிரகாசிக்க விரும்புகிறோமா (பத்திரிகைத்துறை, அரங்காடல் அல்லது திரைப்படத் துறை அல்லது கவிதை கதை கட்டுரை அது எதுவாகவும் இருக்கட்டும்) அது தொடர்பான தேடல்களிலும், இவ்வளவு காலமும் எமக்கு முன் இதே துறையில் இருக்கின்றவர்கள் போல(வே) செய்யாமல் அல்லாமல் எப்படி வேறு புதிய முறைகளில் செய்யலாம் என்கின்ற பயிற்சிகளிலும் ஈடுபடாமல் இருப்பதால், நாம் அந்த ஜாம்பவான்களுக்கே உதவி செய்கிறோம் - அவர்கள் பலத்தை உறுதி செய்ய.

எப் பொருளிலும் (அதை எவர் வாய் சொல்லக் கேட்பிடினும்) அதன் மெய்ப் பொருள் காணத் தெரிந்த புத்தி வளர்ந்த ஒருவருக்கு எதற்கு தேவை மற்றவர்களுடைய அங்கீகாரம்?! பள்ளிக்கூடங்களிலே கூட மரபான கற்பித்தல் முறைகள் கேள்விக்குள்ளாக்கப்பட்டு சீர்திருத்தத்துக்கு உள்ளாகியிருக்கின்றன. ஆசிரியர் பிரம்புடன் (அதிகாரம் மிக்கவராக) முன் நிற்க, அவருக்கு கீழே மாணவர்கள் பணிவுடன் நிற்பதுக்கு மாற்றான கற்பித்தல் முறைகள் - தனியே பணம் சம்பாதிப்பதற்கு தயார் செய்யும் கல்வியை அன்றி தோழமையுணர்வை சகோதரத்துவத்தை கேள்விகேட்கும் பண்புகளை - மனிதநேயத்தை வளர்க்கும் கற்பித்தல் மாற்றுமுறைகள் பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றன. அவையே சமூகநலன்' சார் கல்விக்கான அடிப்படை என முன்வைக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க இந்த இலக்கிய, சினிமா, அரசியல் ஜாம்பவான்கள் கையில் பிரம்புடன் 'தண்டனை' தரவல்ல தலைவர்களென எம்மை மதிப்பிடும், தூற்றும், அங்கீகரிக்கும் அதிகாரத்தை நாமாயே எடுத்து ஏன் அவர் கையில் கொடுக்க வேண்டும்?

## 'மாதிரி'களும் தனித்தன்மையும்:

விளையாட்டுகளில் குறிப்பிட்ட புள்ளிகள் 'வெற்றி'யை நிர்ணயிப்பது போல, ஒரு நிர்ணயிப்பானை வைத்துக் கொண்டு, எம்மில் நம்பிக்கையற்று, எமக்கு சம்பந்தமில்லாத வாழ்க்கையை மாதிரியாய்க் கொண்டு, நாம் 'மாதிரிகளை' உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். சினிமா எடுத்தால் அது தமிழ்சினிமாவை பிரதி செய்து, கதை எழுதினால் அதன் கதாபாத்திரம் தமிழக பேச்சு வழக்கைப் போயப் பேசிக் கொண்டு, ஆனந்தவிகடனில் வந்தால் நல்ல கதை காலச்சுவட்டில் வந்தால் என அந்த அந்த - நாம் மதிக்கப்பட விரும்புகிற வட்டத்தைப் பொறுத்து - வரம்பு போடு

தொடர்தல் 76ம் பக்கம்

கிறோம். எமக்கென எம்மை நிர்ணயிப்பான், தொட வேண்டிய சிகரம் இருக்கிறது. அந்த சிகரங்களுள் ‘ஒத்துப் போகக் கூடிய’ ‘மாதிரி’ ஒன்றை செய்துவிட்டால், போதும், அதற்கு மேல் வளர்ச்சி (தேவை) இல்லை.

இங்கே தான் தனித்துவம் என்கிற ஒன்று வருகிறது. கலைகளின் அழகே பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக மனிதர்கள் பார்த்து வந்த அதே வானத்தையும் பூவையும் ‘ராவில் தேயும் பூரண நிலவையும் பாடுவதற்கும், காதலென காமமென தாம் உணர்ந்துவந்த இன்னோரன்ன உணர்வுகளை இசைப்பதற்கும் அவர்களிடம் (மனிதர்களிடம்) இருக்கிற மொழியில் இன்னமும் புதிய வெளிப்பாடுகள் மிஞ்சியிருக்கின்றன என்பதே. இனியும் எமக்குப் பிறகும் அது தொடரப் போகின்றது என்பதும், பழைய எழுத்துக்களைக் கொண்டு பழைய மொழியைக் கொண்டு மனிதர் தமது கற்பனை வளத்தினால் படைப்பாக்க ஆற்றலினால் புதிய கருவிகளை சொற்களை இலக்கியங்களை உருவாக்க முடிவதும் என்பதுமேயாகும்.

யாரையோ போலச் செய்த ‘மாதிரிப் படைப்புகளில் அது கிடையாது. அதில் எமது கற்பனை, எம் ஒவ்வொருவருடையதுமான தனித் தனி படைப்பாற்றலின் ரசங்களோ சவாலோ கிடையாது. அத்துடன், கலைகளைப் பொறுத்தவரையில், மற்றவர்களது மதிப்புரை வேண்டி எழுதப்படுபவை நீண்ட காலம் நிலைக்க முடியாது அவை வெகுசன உலகுள்/பாஷன் உலகில் /பாட் - கள் (Fads) போல அவ்வப் போது வந்து போக முடியுமே தவிர - தங்காது. நதியா கிளிப் போல!

ஆகவே, குறுகிய அங்கீகாரங்களை நோக்கிய ஏக்கத்தினை விட்டுவிட்டு, ஜாம்பவான்களது குரலை மறந்து விட்டு, மூன்றாம் நபராய் எமது வெளிப்பாடுகளில் மூக்கையும் இன்ன பிறவையும் நீட்டியபடி இருக்கும் சமூகத்தின் நுழைதலை மறுத்து விட்டு, - சமூகர் எமக்கு அனுமதிக்காத - திறந்த சிந்தனைகளுக்கும் அனுபவங்களுக்கும் எம்மை நாம் அனுமதிக்கின்ற போதே தனித்துவமான படைப்புகள் உருவாக முடியும். உருவாக வேண்டும்!

## இரண்டு உலகங்கள்:

### 01

மிகவும் அறியப்பட்டவராக பின் நாட்களில் வளரும் ஒரு கவிஞர் அப்படி ஆவதற்கு முன் எழுதிய முதல் கவிதை (முதல் காலடி) அவர் எழுதிய காலத்தில் எவ்வித தனித்தன்மையுமற்ற ஒரு வெளிப்பாட்டு முயற்சியாகவே இருந்திருக்கக் கூடும். அவரது ஆர்வமும், வாசிப்பும், தொடர் தேடலும், அவற்றூடாக தன்னை தான் சார்ந்த சூழலில் தொடர்ந்தும் புதுப்பித்துக் கொண்டு இருக்கும் தன்மையுமே அவரை ஒரு சிறந்த எழுத்தாளராக காலப் போக்கில் உருவாக்கியிருக்க முடியும்.

ஜாம்பாவன்களாய் உருவாகும் ‘அங்கீகார வழங்கிகளாக’ பார்க்கப் படுபவர்கள் ‘தம்’ ஆரம்பங்களை மறந்து விடுகிறார்கள். எல்லோரும் திருஞானசம்பந்தர் ஆகிவிடுகிறார்கள்... இதனால் பல சந்தர்ப்பங்களில் இந்த ‘அங்கீகார வழங்கி’களுக்கும் ஆரம்ப கட்டத்தில் நிற்பவர்களுக்கும் இடையேயான பொருதுதலை காணக் கூடியதாய் இருந்திருக்கிறது. ஒரு சிகரத்தின் மேலே நின்று கீழே பார்த்தால் பார்வை எப்படி இருக்கும்? தாழ்வாய்த் தானே?

### 02

இத்தகைய இயல்புடைய அவர்களது மதிப்பீடுகளில் குறிப்பிட்ட படைப்பு உருவான பிரதேசம், அதன் சூழல், பின்னணி என்பன கவனத்தில் இருந்து தவறுகின்றன. மரபுரீதியான பள்ளிக்கூட றிப்போர்ட் கார்ட்-இல் கூட ஒரு பிள்ளையின் கல்வி பெறுபேறு மாநில மட்டத்துக்குச் சமாந்தரமாகவா, அதைவிட அதிகமாகவா, அல்லது குறைவாகவா என்பன மதிப்பிடப்படும். அந்த ஒவ்வொரு பெறுபேறுக்குப் பின்னாலும் அதை அந்த மாணவர்கள் எடுப்பதற்கான சமூக காரணிகளும் இருக்கின்றன. அந்த வகையில், சொன்னது சொல்லல் பல்கலைக்கழக மற்றும் ஆய்வு மாணவர்கள், ஆய்வாளர்கள், வரலாற்றாசிரியர்கள் செய்கிற போது தான் குற்றமே தவிர படைப்பாக்கத்துக்கு புதியவர்களாய், சிறுவர்களாய், ஆரம்பநிலைகளில் இருக்கின்றவர்கள் செய்கின்ற போது அல்ல. உலகமயமாதல் இங்கே ஒரே சமயத்தில் *கோம்பிளான் (*Complan - பால் மா) குழந்தைகளையும் உயிர்ச் சத்தற்ற போதிய வளர்ச்சியற்ற (வளர்ச்சியேயற்ற) குழந்தைகளையும் தந்துள்ளது.

அரசியல் சூழலிலேயே கூட இதன் பாவனை “பாலியல் வன்முறை” என்று முழுமையாய் வந்திராத போது, இலங்கையில் இந்த விவாதங்களை வாசித்திராத, இந்த விவாதங்களே நிகழ்ந்திராத (நிகழ வாய்ப்பற்ற) பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் அப்படி உபயோகிப்பதையிட்டு புத்தியீவித்தனத்தை காட்ட முடியுமா?

‘ஒரு மட்டத்தில்’ எத்தனை தான் அறிவுசார் விவாதங்கள் நடந்தாலும், இன்னொரு மட்டத்தை அவ் விவாதங்கள் போய்ச் சேராத சமூக புற நிலைக் காரணிகளும் அமைந்து விடுகின்றன. அப்படியாய், சேராமைக்கான காரணங்கள் இருக்க மட்டும் சமூக மாற்றத்தை விரும்புகின்ற அறிவுப் பகிர்வே சமூக விரிவிற்கான முன்னேற்றத்துக்கான மூலதனம் என நம்புகிறவர்கள் இத்தகைய சமமின்மையைச் சரி செய்யவே முயலலாம்.

> ***“ நான் எனக்குரிய மதிப்பைத் தர வேண்டும். அப்படியான மதிப்பு வழங்குகிறபோது யாரின் அங்கீகாரமும் எமக்கு வேண்டியிராது. நாம் எம்மை அங்கீகரிக்காததால் தான் மற்றவர்கள் மனங்களில், வீடுகளில், பண்பாட்டில் எம்மை அங்கீகரிக்கக் கேட்டவாறு நிற்கிறோம். எம்மை எம்மாலேயே அங்கீகரிக்க முடியாதபோது மற்றவர்கள் எப்படி அங்கீகரிப்பார்கள்? ”***

அத்துடன், ஏதேனும் ஒரு சமூக நலன் சார் கல்வி அறிவு பெற்று மூளை வீங்கிய ஒரு பின்னணியிலிருந்து வந்தவர், அப்படியல்லாத இலங்கையின் பிற குறிப்பிட்ட பிரதேசங்களிலிருந்து வருகிற ‘புதிய’ ஆனால் (பழைய கருத்துக்களைக் காவும் குரல்களை)க் கண்டு களைப்புறலாம். “இன்னும் எத்தனை காலத்துக்கு இதைப் பற்றியே கதைக்க போறிங்க. தத்துவங்கள் எங்கையோ போயிற்று. நாங்க எங்கையோ போயிற்றம்” இவ்வாறு சொல்லலாம். உதாரணமாக ‘கற்பழிப்பு’ என்றொருவர் இன்னமும் பாவிப்பதையிட்டு தலையில் அடித்துக் கொள்ளலாம். அந்த சலிப்பும் கூட தன்னளவில் நியாயமானதே.

யுத்தம் எமது மொழியில் குறிப்பிடத் தகுந்த மாற்றங்களை இலக்கிய - மொழி - ஊடகத் துறைகளில் கொண்டு வந்தது.

*பார் பார் போராட்டத்தில்*<br>
*ஆண் வதை பட்டால்*<br>
*தியாகம் என்பதும்*<br>
*பெண் வதை பட்டால்*<br>
*கற்பிழப் பென்பதும்...*

எனச் சொற்களிலிருக்கிற ‘நியாயமின்மைகளை’ ‘ஆதிக்க சிந்தனையை’ சாடிய வ.ஐ.ச. ஜெயபாலனின் கவிதை வரிகளில் தொடங்கி, இந்த சொல்லாடல்கள் தொடர்பாய் கணிசமான விவாதங்கள் அறிவுத் தளத்தில் நிகழ்ந்திருக்கின்றன. எனினும், இவை நடந்த காலத்தில், அதற்குள் வாழ்ந்து, அந்த அனுபவங்களுடன் வெளிப்பட்ட இலக்கிய-செயற்பாட்டை கொண்டு செல்ல விரும்புகிறவர்கள், தனியே ‘மிகச் சிறந்த’-வற்றை மட்டும் குறிவைத்து செயற்பட முடியாது (மிகச் சிறந்த திரைப்படங்கள், நாவல்கள்). கல்விக்கூடங்கள், தனது பள்ளிக்கூடத்திலிருந்து ‘சிறப்பாய்’ சித்தியடைந்தவர்களை வரிசைப்படுத்துவது ஒரு சிந்தனை. வெற்றியடையாதவர்களது காரணங்களை அறிதலும், அதை நிவர்த்தி செய்யும் வழிகளை அடைவதும் பிறிதொரு சிந்தனை. இரண்டாவது சிந்தனையின் அடிப்படையில், தர அடிப்படையிலான ‘சட்டகத்துள்’ அடங்குபவரை, அடங்குபவையை எழுதி மட்டும் மாற்றத்தைக் கொண்டு வர முடியாது.

இன்னும் கூறப் போனால், அப்படியான சட்டகத்தினுள், மாற்றத்தை வேண்டி செயற்படும் அடிமட்ட (விளிம்புநிலை) அமைப்புகள் எதுவும் செயற்பட முடியாது. அவற்றினது சமூக மேம்பாடுசார் கல்வியூட்டல் என்பது இறுக்கமான தரப் பிரிப்புகள் அற்றது. சகலருக்குமானது. கல்வியூட்டலில் ‘ஆரம்ப கட்டத்தில் இருப்பவர்கள்’ ‘மாறிக் கொண்டிருப்பவர்கள்’ ‘மற்றவர்களுக்கு கல்வியூட்டத் தயாராகியவர்கள்’ என்கிற அடிப்படையில் நிகழ்கிற ஒரு சுழற்சி, கூட்டு செயற்படு முறை.

அவ் வேலைக்கான பொறுமையோ சமூக அறிவாளிகளான (ஞானப்பாலை கரை கரையென கரைத்து அளவுகணக்கற்று மற்றவர்களுக்கும் வைக்காமல் குடித்த) பிறப்பிலேயே புலமையுடன் பிறந்த ஞானிகளிடம் கிடையாது. அவர்களிடம் இருப்பதெல்லாம் தம் அறிவைப் பகிரும் ஞானமற்ற தன்னுள் சுருங்கியதொரு செருக்கு மட்டுமே.

செருக்குப் பிடித்தவர்களை சிடுசிடுத்துக் கொண்டிருப்பவர்களை சுயமோகத்தில் மிதக்கும் பிறர்க்கு உதவா கஞ்சர்களை எமது கிராமங்கள் கொண்டாடியதேயில்லை (கண்டு கொள்ளமாட்டார்கள், ஆனால் அவர்கள் அவர்கள் பாடடில் இருக்கச் சகித்துக் கொள்வார்கள்). அவர்கள் வீட்டுப் பக்கம் ஈ, காக்கா கூடப் பறக்கப் பயப்படும். ஆனால் எழுத்துலகம் உள்ளிட்ட சில இடங்களில் தான் அவர்களது சிடுசிடுப்பை கணக்கெடுத்து, எழுதி எழுதி நிரூபிக்க வெளிக்கிட்டு என்றைக்காவது ஒருநாள் அவர்கள் அங்கீகரிக்க மாட்டார்களா எனக் காத்திருக்கிறார்கள். அவர்களைப் இவர்கள் பொருட்படுத்துவதால் தான் அவர்களது பொருட்படுத்தலின்மையைக் காய்கிறார்கள்.

எமக்கு இருக்க வேண்டிய சுய மரியாதை என்பது ஜாம்பவான்களிடம் இருப்பது அல்ல. ஏனெனில் சுயமரியாதை என்பது தன்முனைப்பு (சுய மோகம்) மட்டுமே அல்ல. முதலில் நான் எனக்குரிய மதிப்பைத் தர வேண்டும். நான் என்பது என்ன என்பதை, அதற்குரிய கௌரவத்தை வழங்க வேண்டும். அப்படியான கௌரவத்தை வழங்குகிற போது யாரின் அங்கீகாரமும் எமக்கு வேண்டியிராது. நாம் எம்மை (எமது மனத்தை, இருப்பை, தனித்தன்மையை) அங்கீகரிக்காததால் தான் மற்றவர்கள் மனங்களில் வீடுகளில் பண்பாட்டில் எம்மை அங்கீகரிக்கக் கேட்டவாறு நிற்கிறோம். எம்மை எம்மாலேயே அங்கீகரிக்க முடியாத போது மற்றவர்கள் எப்படி அங்கீகரிப்பார்கள்?

## வலியவர்களது தந்திரம்:

அப்படி ஒன்று நிகழாதிருப்பதில், ஜாம்பவான்களானால் தெளிவாய் இருக்கிறார்கள். நேர்காணல்களில் நடிகை, நடிகர்களை எந்த நடிகைகள் நடிகர்கள் பிடிக்கும் என்றால்), சமகாலத்தில் இருந்து சொல்லியே ஆக வேண்டிய சில பெயர்களையும் கடந்த காலங்களில் இருந்து தங்களுக்கு பிரச்சினையற்ற சில பெயர்களையும் (சீறீதேவி) அண்டை அயலக நடிகர்களையும் சொல்வார்கள். இதுபோல, ஜாம்பவான்களும் அண்டை அயலக இலக்கியங்களையும் திரைப் படங்களையும் புகழுவார்கள். சமகாலத்தில் இருந்து தமக்கு போட்டியாய் வர இயலாத (ஏற்கனவே பொதுவெளியில் அறியப்படுகிற) ஈரொரு பெயர்களைப் ‘பட்டியல்’ இடுவார்கள். அந்தப் பட்டியலில் இல்லாத அந்த அவர்களது ‘பட்டியல் உள்’ நாமும் வர மாட்டோமா என்கிற பெயர்களது ஏக்கத்துக்கமைய அவர்களது அங்கீகாரம் வழங்கும் அதிகாரமும் பலமானதாய் இருக்கும். காலங்கள் மாறி மாறி வந்தாலும் புதிய புதிய ஜாம்பவான்களை உருவாக்கியே தீர்வதான கங்கணத்துடன் - கடவுள் உட்பட - தம்மை ஒரு பொருட்டாய் மதிக்காத அதியுயர் பீடங்களை நோக்கியே - கவனம் வேண்டி சதா மனித மனம் சென்று கொண்டிருப்பதன் உளவியல் தான் என்ன? வலியன வாழ்கின்றனவா அல்லது அவை மீதான கவர்ச்சியில், தன் தாழ்வுணர்ச்சியில் சமூகமும் அதனுடன் ஒத்திசைந்து கொடுத்து அதை வாழ வைக்கின்றதா?

இவையே, ஜாம்பவான்கள் குறித்த பிரமிப்பையும் அவர்கள் குறித்து பிம்பம் ஏற்படுத்தி வழிபடுதலையும் பார்க்கையில் எல்லாம் தோன்றுகிறது.

pratheeba.thillainathan@thaiveedu.com

■ ■ ■




EXCITING OFFERS FROM ROGERS
TAMIL PACKAGE $57.47
BASIC DIGITAL TV + 4 TAMIL CHANNELS
DIGITAL BASIC $24.47
SAVE $348 OVER 2 YEARS
STUDENT OFFER
INTERNET EXPRESS + BASIC TV $62.48
SAVE $24 /month for 8 months
INTERNET EXPRESS $42.48
BUNDLES
CABLE/INTERNET/HOME PHONE
Basic $68.89
Basic Plus $81.37
Customer Choice $125.89
6 MONTHS FREE
DIGITAL VIP CABLE + HIGH SPEED INTERNET + HOME PHONE
CABLE TV
Basic Cable $19.99
SAVE $300 over 2 years
Digital VIP $55.59
SAVE $393 over 2 years
INTERNET
Ultra-Lite $27.99
Up to 500 Kbps download speed
High Speed Lite $35.99
Up to 3 Mbps download speed
HOME PHONE
Essential $16.91
Basic phone line
Favorites $26.91
Choice of 2 calling features
Order now, call
DANIEL RAVINDRAN
Advisor, Rogers Cable Communications Inc.
(416)-817-7977 / 1-866-360-7977
*Some conditions may apply, limited time offers, taxes extra.
ROGERS™


Get behind a Honda today!
HONDA DAILY NEWS
HOT OFF THE PRESS! GREAT DEALS!
It's springtime and the deals are heating up on 2011 Civic and CR-V! That's right! Hurry to your local Ontario Honda Dealership to get the hottest deals of the season. It's the BIG SAVE EVENT!
A M A Z I N G !
Honda BIG SAVE EVENT
2011 CR-V DEALS
2011 CIVIC CLEAROUT
0.9 % /APR
LEASE FOR 48 MONTHS* OR FINANCING UP TO 60 MONTHS* ON SELECT CR-V MODELS
REFINED SPORT UTILITY, THE PERFECT COMBINATION OF FORM AND FUNCTION
VERSATILITY:
OVER 2000 LITRES OF CONFIGURABLE CARGO SPACE
Isn't it great to have some PEACE OF MIND
0.9 % /APR
LEASE FOR 48 MONTHS* OR FINANCING UP TO 60 MONTHS* ON SELECT 2011 CIVICS
PLUS GET A $750 GAS CARD WITH EVERY 2011 CIVIC‡
SPRING 2011
*1 SELLING CAR IN CANADA, 13 YEARS IN A ROW*
MADE IN CANADA
அதீசன்
ATHEESAN
(SHAN)
SARVANANTHAN
416 720 1184
HONDA
உங்களுக்கான வாகனத்தை தேர்வு செய்ய...
FORMULA HONDA
2240 MARKHAM ROAD, SCARBOROUGH,
ONTARIO M1B 2W4.
TEL: 416-754-4555 EXT.2705, FAX: 416-754-9465


MARCH GREEN MARKETING
Heating, Cooling & Solar Power
It's RIGHT TIME to install a High Efficiency Air Conditioner
Experienced Installation Teams! Good Services!! Lowest Prize!!!
OVER 130 YEARS OF HIGH QUALITY BRANDS!ALL YOUR BEST CHOICE!!
YORK
It's time to get comfortable.
KeepRite
Rheem
relax It's Rheem
ARMSTRONG AIR
Honeywell
FROM ONLY $1599
Stop Renting Old Water Tank
You own your Tankless & You pay nothing extra
Rinnai
Now Only $29.95/Mon
1. You will save 40% of Gas consumption
2. Enjoy endless stream of clean hot water
3. Benefit of longevity & space saving design
Solar Power Energy: Use your Roof to Generate Power & Money
Grid Connected Solar System
Solar Panels
Inverter
Utility Service
Meter
Home Power/ Appliances
Consumer - ON
Ontario Power Authority (OPA) will pay you 80.2 cents per KWH for power delivered back to the grid
You spent 0 at the front and Make money every month, Just join the Government renewable Energy Microfit Program
Call for Detail:
தமிழில் தொடர்புகளுக்கு:
416 792-0704
English: Benson Hu:
647 888 9596
Address: 8- 3520 Mcnicoll Ave.Toronto On
HRAC Member Company


S.P. IMPORTERS FURNITURE INC.
Importers & Distributers of High Quality Furniture & Mattresses
மலிவு விற்பனை
CASH & CARRY
$149 Reg. $249
Futon Frame and Mattress
3 pc Leather Sofa Set
$1079 Reg. $1499
5 pc Glass Top Dining Set
CASH & CARRY
$199
3 pc Leather Sofa Set
$1599 Reg. $1999
8 pc Queen Bedroom Set
$1899 Reg. $2499
9 pc Dining Room Set
$1799 Reg. $2299
Single / Double Bedroom Set
$1599 Reg. $2499
3 pc Sofa Set with 5 Recliners
$1299 Reg. $1699
Black or Chocolate Leather
Over 15,000 sq. ft Showroom MORE than 2,000 items to choose...
Wooden Bunkbed with Mattress
$449 Reg. $599
CASH & CARRY
Sectional Sofa with ottaman
$899 Reg. $1199
Micro fabric / PU
9 pc High Pub Set
$599 Reg. $999
CASH & CARRY
Hwy. 401
Ellesmere Rd.
Lawrence Ave.
Midland
Brimely
We Are Here!
Authorized Sealy & Ashley Dealer
We sell ALL kinds & sizes of mattresses, including Orthopedic, Sealy Posturepedic and Memory Foam!
Sealy
ASHLEY
2861 Lawrence Ave. East
@ Brimely, Scarborough
416-266-3077

# Connect with Quality and Integrity for Your Real Estate Needs

HOMELIFE
HIGHER STANDARDS






**SUTHA**
**BALASUBRAMANIAM B. Eng.**
sales representative

www.suthahomes.ca

**HomeLife Future Realty Inc. Brokerage**
**7 Eastvale Drive, Suite 205**
**Markham, Ontario L3S 4N8**

**Direct: 416-271-5420**
**Office: 905-201-9977**
**Fax: 905-201-9229**

# தமிழ் முதியோர்களின் நல்வாழ்வும் அவர்களது குடும்ப சமூக விடயங்களும்



சுல்பிகா இஸ்மாயில்

இக்கட்டுரை இரு பகுதிகளாக இடம்பெறவுள்ளது. முதலாவது பகுதியில் நலமாக வாழ்தல் தொடர்பான வரைவிலக்கணங்கள், வரையறைகள், அதில் உள்ளடக்கப்படுகின்ற விடயங்கள் பற்றிய பல்வேறு ஆய்வாளர்களின் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இரண்டாவது பகுதியில் தமிழ் முதியோர்கள் நல்வாழ்வு பற்றிய நோக்குகள் அவர்கள் வாழ்வியலைக் கட்டமைக்கும் உள்ளக வெளிப்புறக்காரணிகள், அவர்களின் இன்றைய வாழ்வுநிலையின் கருத்துக்கள் பற்றிய ஆய்வொன்றின் சுருக்கமும் இடம் பெறவிருக்கின்றது. முதியோர் மாதம் கொண்டாடப்படும் இவ்வேளையில் நாம் எமது முதியோர்கள் நல்வாழ்வு விடயங்கள் பற்றியும் யதார்த்தத்தில் அவர்களது வாழ்வுநிலை பற்றியும் அறிந்து கொள்ளுதலும், விளங்கிக் கொள்ளுதலும் அவசியமாகின்றது.

## அறிமுகமும் பின்னணியும்:

1980களின் பிற்பகுதியிலிருந்து இலங்கைத் தமிழர்கள் போரின் அவல நிலைகளுக்குள்ளிருந்து தப்பிச் செல்லும் நோக்குடனும், பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய கனவுகளுடனும் தாய் நாட்டை விட்டு வெளியேறி வளர்ச்சியடைந்த நாடுகளான கனடா, ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்றவற்றிற்கும், அண்டை நாடுகளான இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளுக்கும் புலம்பெயர்ந்து வந்திருக்கின்றனர். இப்புலம்பெயர்வானது 1950களின் பிற்பாடு சுயவிருப்புடன் வேலை வாய்ப்பு, கல்வி வாய்ப்புப்பெற்று குடியேற்ற மடைந்த நிலைமைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. பிந்திய புலப்பெயர்வு ஒரு வகையில் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவும், சந்ததிகளதும் தங்களதும் நல்வாழ்வை ஸ்திரப்படுத்திக்கொள்ளவும் உறுதிப்படுத்திக்கொள்ளவும், நிர்ப்பந்தத்தின் பேரில் இடம்பெற்று வருகின்ற ஒன்றாகும்.

மற்றொரு வகையில், இத்தொகுதி சனத்தொகையானது பல்வேறுபட்ட வளங்களையும் முற்றிலும் இழந்து, மனித உடலையும், போரின் கசப்பான அனுபவங்களையும் மாத்திரம் சுமந்து கொண்டு வெளியேறப்பட்ட குழுவாகும். நலமாக வாழ்தல் என்பது இக் குழுவைப் பொறுத்தவரை அடிப்படை விடயங்களிலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டிய தொன்றாகும் என்பதில் எவருக்கும் ஆட்சேபனை இருக்க முடியாது. அவ்வகையில், நலமாக வாழ்தலுக்கான பல்வேறு விடயங்கள் பற்றிய விளக்கமும் அறிவும் எமக்குத் தேவையாகவுள்ளது. ஏனெனில் இவற்றின் அடிப்படையில் தான் நலமாக வாழ்தலுக்கான செயற்பாடுகள் கட்டமைக்கப்படமுடியும்.

1980 இற்குபின் புலம்பெயர்ந்து கனடாவில் ஸ்காபரோவில் வாழும் இலங்கைத் தமிழ் முதியோர்களின் நல்வாழ்வு குறித்த விடயங்களை விளங்கிக் கொள்ளும் நோக்கில் இவ்வாய்வு செய்யப்பட்டது. கடந்த (2010) ஒருவருட காலமாக வசந்தம் தமிழ் முதியோர் உளவள நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட, "ஒதுக்குதலுக்கு எதிராக முதியோர்கள்" எனும் நியூறொரைசோன் நிதியுதவியுடனான நிகழ்ச்சித்திட்டத்தினூடாக பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களும், 15 தமிழ் முதியோர்களுடன் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆழமான நேர்முகக்கலந்துரையாடலில் பெறப்பட்ட கருத்துக்களும் கண்ணோட்டங்களும் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதில் கண்டறியப்பட்ட விடயங்கள் இக்கட்டுரையில் இரண்டாவது பகுதியில் இடம்பெறும்.

## நலமாக வாழ்தல் அல்லது நல்வாழ்வு (Wellbeing) என்பதை வரைவிலக்கனம் செய்தல்:

நலமாக வாழ்தல் என்பது பல்வேறு சமூக கலாச்சாரப்பின்னணியில் பல்வேறு விதமாக வரைவிலக்கணப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது. மேலும், ஒவ்வொரு பின்னணியிலும் வித்தியாசமான விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டும் வந்திருக்கின்றது. தமிழர் கலாச்சாரப் பண்பாட்டில் நல்வாழ்வுக்கு பதினாறு செல்வங்கள் / வளங்களின் தேவைப்பாடு உண்டெனப்தும், அவை பெற்று வாழ்தல் வாழ்வின் முழுமைக்கு அடையாளமாகவும் கொள்ளப்பட்டும் வருகின்றது. உதாரணமாக பொருட்செல்வம், மகட்செல்வம், கல்விச் செல்வம் போன்றன. எனினும், நல்வாழ்வு என்பதை எவ்வாறு வரைவிலக்கணம் செய்து கொள்வது என்பது இன்றுவரை விவாதிக்கப்பட்டு வருகின்ற ஒருவிடயமாகவுள்ளது. குறிப்பாக பொருண்முதன்மை வாத சமூகங்கள் உருவாக்கப்பட்டதன் பின் அல்லது முதலாளித்துவ பொருளாதார அமைப்புக்களின் செல்வாக்குகள் முதன்மை பெற்ற சமூகங்களில் நல்வாழ்வு என்பது பொருளாதார ரீதியான நல்வாழ்வு என்பதாகவே கொள்



ளப்பட்டு வந்திருக்கின்றது. வறுமை என்பது பொருளாதார வறுமையாகவும், வறுமையிலிருந்து விடுபடுதல் மாத்திரமே நல்வாழ்வுக்கு இட்டுச் செல்லும் என்பதாகவும் நீண்ட காலமாக எடுத்துக்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றது.

குறிப்பாக சிறுவர், முதியோர், தங்கி வாழ்வோர், அடக்குமுறைக்கு உட்படுவோர், பெண்கள் சிறுமியர்கள் தொடர்பாக நல்வாழ்வு பற்றி வரைவிலக்கணம் செய்யும்போது பொருளாதார நல்வாழ்வுக்கு அப்பால் நலமாக வாழ்வதற்கான பல்வேறு விடயங்களை உறுதி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. துஷ்பிரயோகங்கள், நீதியின்மைகள், வன்முறைகள், குற்றமிழைத்தல் போன்ற விடயங்களிலிருந்து விடுதலை பெற்று வாழ்வதற்கான சமூக முன் நிபந்தைகள், வளங்கள் போன்றனவும் இவர்களது நல்வாழ்வுக்கான தேவைகளுடன் இணைக்கப்படவேண்டியதன் அவசியத்தை உருவாகின்றது. இந்தவகையில் நோக்கும் போது விரிவான நல்வாழ்வுத் தேவைகள் பற்றிய விளக்கம், நடைமுறையிலும் யதார்த்தத்திலும் நல்வாழ்வை உறுதிப் படுத்துவதற்கான சுட்டிகள்/ குறிகாட்டிகள், அளவீடுகள், செயற்பாடுகள் போன்றவற்றை வரையறை செய்வதற்கு எமக்கு உதவும்.

1948ஆம் ஆண்டில் உலக சுகாதார நிறுவனம் உருவாக்கப்பட்டபோது அதன் யாப்பில் நல் வாழ்வு பற்றிய எண்ணக்கரு பின்வருமாறு வரைவிலக்கப்படுத்தப்படுகின்றது.

"அது ஆழுமையான உடல், உள, சமூக நலங்கள் தொடர்பானது: அது நோயற்றிருக்கும் நிலமையை அல்லது இயலாமை நிலமையிலிருந்து விடுபட்டு இருக்கும் நிலமையை மட்டும் குறிக்காது"

(உலக சுகாதார நிறுவனயாப்பு 1948:1 - மொழிபெயர்ப்பு).

2000ஆம் ஆண்டின் முற்பகுதியில் மிலேனியம் குறிக்கோள்கள் வடிவமைக்கப்படுதலுடன், நலமாக வாழ்தல் பற்றிய விரிவான வரைவிலக்கப்படுத்துதல் நிகழ ஆரம்பிக்கின்றது. பல்வேறு சமூக கலாச்சாரப் பின்னணியில் இவை உருவாக்கம் பெறுகின்றன. பொதுவாக நலமாக வாழ்தல் என்பது வளங்களைக் கொண்டிருத்தலையும் அவற்றினை அனுபவித்து திருப்தியும் (மண்டர்சன் 2005:161) மகிழ்ச்சியும் (கிளார்க், கோஹ் 2005:57) அடைதலையும் குறிக்கின்றது. இந்த வகையில், உடல், உள, சமூக ஆரோக்கியத்துடன் நிறைவு பெறுதல், திருப்தி, மகிழ்ச்சி போன்ற உளசமூக ஆரோக்கிய அம்சங்கள் நல்வாழ்வு என்ற விடயத்திற்குள் உள்ளடக்கப்படல் வேண்டும் என்று மகிரேகர், மக்கேய், மற்றும் பலர் (2007:10) வாதிடுகின்றனர்.

நல்வாழ்வுத் தேவைகளைப் பூரணப்படுத்துதல் நல்வாழ்வின் பண்புத்தரத்தைத் தீர்மானிக்கின்றது. அது மனிதரில் ஏற்படுத்தும் ஆரோக்கியம், திருப்தி, மனமகிழ்ச்சி போன்றவற்றின் மூலம் நல்வாழ்வு உறுதி செயப்படுகின்றது. இவ்வுணர்வுகள் இயல்பாக எழும் போது மாத்திரமே இவை நல்வாழ்வுச்சுட்டிகளாக மாற்றமடைவதாக இவ்வாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். மேலும் தனிமனிதன், அல்லது குழு, குடும்ப, சமூக வாழ்வியல் அம்சங்களில் பங்கேற்கும் மட்டத்தினையும் இவை தீர்மானிப்பதால் நல்வாழ்வின் அல்லது நலமாக வாழ்தலின் பண்புத்தரத்தினைத் தீர்மானிப்பதற்கு 'பங்கேற்புச் சுட்டியையும் பயன்படுத்துதல் வேண்டும் எனவும் இவ்வாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

மேற்குறித்த விபரங்களை நோக்கும் போது முதியோர் நலமாக வாழ்தல் என்ற விடயம் பின்வரும் கரிசனைக்குரிய அம்சங்களை உள்ளடக்குதல் வேண்டும். அவர்களது நல் வாழ்வுத் தேவைகள் இவற்றின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படல் வேண்டும்.

- ஆரோக்கியம்.
- நிறைவு காணல்.
- திருப்தி.
- மகிழ்ச்சி.
- குடும்ப சமூக விடயங்களின் பங்கேற்பு.
- குடும்ப, சமூக விடயங்களின் வினைத் திறனுடன் ஈடுபடல்.

மகிழ்ச்சி, திருப்தி போன்ற உணர்வு ரீதியான நல்வாழ்வு (Emotional Wellbeing) விடயங்கள் குறைந்தளவு கரிசனைக்குரிய விடயங்களாக மேற்கத்தைய குறிப்பாக பொருண்முதன்மை நோக்கு சமுதாயங்களில் எடுத்துக்கொள்ளப் பட்டு வந்திருக்கின்றது. (இங்கு நான் குறிப் பிடும் உணர்வு ரீதியான நல்வாழ்வு என்பது உளரீதியான நல்வாழ்வு என்ற பொது வரைவிலக்கணத்திற்கு உட்பட்டது எனினும் வெளிப்பாட்டுத்தன்மை மூலம் வேறுபட்டது என்பதைக்கவனித்தில் கொள்க). எனிலும் இவை மற்றைய நல்வாழ்வு விடயங்கள் அளவுக்குச் சமமான அளவில் கருத்தில்கொள்ளப்படல் வேண்டும் என்பதைப் பல்வேறு ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. குறிப்பாக ஆசிய நாடுகளைச் சோர்ந்த ஆய்வாளர்கள் இக் கருத்துக்கு முக்கித்துவம் அளிக்க வேண்டும் என்று வாதிடுகின்றனர் (மண்டர்சன் 2005). லவீன் (2004), வேட்ஸ்வோர்த் மக்பீக் பெனி போன்றோர் (2005) உணர்வு ரீதியான நல்வாழ்வு ஆபத்தான நிலைமைகளுக்குள் வாழ்ந்த, வாழ்பவர்களைப் பெறுத்தவரை மிக முக்கியமானது எனக்குறிப்பிடுகின்றனர்.

உணர்வு ரீதியான நல்வாழ்வுத் தேவைகள் அவர்கள் ஆபத்திற்குட்படும் தன்மை (Vulnerability) யுடன் மிகவும் நெருக்கமான தொடர்புடையது. ஆபத்தான சூழ்நிலைமையில் வாழ்வோர், குறைந்த சுயகணிப்புடையோர், நலினமான அடையாளமுடையோர் (Fragile Idendify), சுய கௌரவத்திற்கு இடையூறு நிகழலாம் எனப்பயப்படுவோர் போன்றோரைப் பொறுத்தவரை உணர்வு ரீதியான நல்வாழ்வு விடயங்கள் மிக முக்கியமானவை. அது தொடர்பான தேவைகள் தனிப்பட்ட வகையிலும் குழுசார்ந்தும் ஆழமாக நோக்கப்பட்டு வரையறுக்கப்பட வேண்டிய அவசியமுண்டு எனவும் அவர்கள் வாதிடுகின்றனர். உணர்வு ரீதியான நுண்ணறிவுக்கான வளங்கள் (Emotional Inlelligence Resources), வளைந்து கொடுக்கும் ஆற்றலை வளர்க்கும் வளங்கள் (Resilience Resources) போன்றன இவ்வகையில் தேவைப்படுவன எனவும் அவர்கள் பரிந்துரைக்கின்றனர்.

சர்வதேச மீட்டெடுப்பு ஆணைக்குழு (The International Rescue Committee 2006) பிள்ளைகளின் உணர்வு ரீதியான நல்வாழ்

தொடர்தல் 82ம் பக்கம்

# கோ மற்றும் பயணம் திரைப்படத்தை முன்வைத்துச் சில கருத்துக்கள்




-1-

கோ திரைப்படத்தைச் சற்றுத் தாமதமாக நேற்றுத்தான் பார்த்தேன். சினிமா போன்ற வணிக ஊடகங்கள் எப்படி மக்கள் மத்தியில் விஷம் தோய்ந்த கருத்துக்களை விதைக்கின்றார்கள் என்பதற்கு நல்லதோர் உதாரணம் இந்தத் திரைப்படம். நக்சல்கள் பற்றி இவ்வளவு மோசமாக அண்மைக்காலத்தில் விபரித்த திரைப்படம் இதுவாகத்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். படத்தில் தின அஞ்சல் என்கிற பத்திரிகையில் புகைப்படக் கலைஞராக, செய்தியாளனாக வரும் ஜீவா (படத்தில் இவர் கமராக்காரன் என்றே பிறரால் சுட்டிக் காட்டப்பட்டபோதும், சமயங்களில் செய்தி சேகரிக்கும் பணிகளையும் செய்கிறார்) பல இடங்களில் சமூகப் பிரக்ஞை யுடனே செயற்படுகிறார். ஆளுங்கட்சி, பிரதான எதிர்க்கட்சி என்று எல்லாக் கட்சிகளின் வண்டவாளங்களையும் தண்டவாளம் ஏற்றுகிறார். சமூகம் மீதான அக்கறை கொண்ட இளைஞர்களின் சிறகுகள் என்ற அமைப்பு ஆட்சியைப் பிடிக்க உதவுகிறார். ஆனால் அவரே கூட நக்சல்கள் என்றால் காலில் அமிலமே கொட்டியது போல அலறுகிறார். நக்சல்கள் என்றாலே தீவிரவாதம், குண்டு, கொலை, கொள்ளை என்றே படமெங்கும் தொடர்புபடுத்தப்படுகின்றது. ஒரு பத்திரிகையாளரின் அறிவே நக்சல்களை இந்தக் கண்னோட்டத்துடன் தான் பார்க்கும் என்ற இயக்குனரின் அறிவு எத்தனை மொக்கைத் தனமானது. இத்தனைக்கும் இந்தத் திரைப்படம் பற்றிய எல்லா தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் இத்திரைப்பட இயக்குனர் கே.வி ஆனந்த் - முன்னர் புகைப்படக் கலைஞராக பணி புரிந்தவர், அந்த அனுபவங்களை மையமாக வைத்தே இத்திரைப்படம் உருவானது என்று தொடர்ந்து விளம்பரப்படுத்தப்பட்டது. அவரது மேலான புரிதல்களை வைத்துப் பார்க்கின்றபோது அவர் வேலை செய்த ஊடகங்கள் எப்படி இருந்திருக்கும் என்று நினைக்கக் கவலையாக இருக்கின்றது. இதே பாதையில் போனால் தமிழ் சினிமாவில் அடுத்த ஷங்கராக உருவெடுக்க சர்வ வல்லமையும் பெற்றவராக கே.வி. ஆனந்த் ஒருவரே தகுதி பெற்றவராவார். வாழ்த்துக்கள்.

**திரைப்படத்தை என்னுடன் பார்த்த என் தம்பி சுட்டிக்காட்டிய சுவாரசியமான ஒரு விடயம்: கருணாநிதி தேர்தலில் வெற்றி பெற்ற அதே 50,000 வாக்குகளாலேயே திரைப்படத்தில் முதல்வராகக் காட்டப்படும் பிரகாஷ் ராஜும் வெற்றி பெறுகிறார்.

-2-

கோ திரைப்படம் போலவே அண்மைக்காலத்தில் வெளிவந்த மிக மோசமான இன்னுமொரு திரைப்படம் பயணம். எனக்குப் பிடித்த நடிகர்களுள் ஒருவரான பிரகாஷ் ராஜுக்காக இந்தத் திரைப்படத்தை ஆவலுடன் பார்க்க விரும்பினேன். பிரகாஷ்ராஜ் தயாரிக்கும் திரைப்படங்கள் அனேகம் எனக்கும் ரசனை பூர்வமாக விருப்புடையனவே. சில சில விமர்சனங்கள் இருந்தாலும் மொழி, அபியும் நானும், கண்ட நாள் முதல், அழகிய தீயே போன்றவை நல்ல உதாரணங்கள். ஆனால் பயணம் திரைப்படம் மிக மிக ஆபத்தான, இஸ்லாமிய வெறுப்புணர்வை தூபம் இட்டு வளர்க்கக் கூடிய இந்துத்துவப் பிரதியாகவே அமைந்தது. இந்துத்துவம் இஸ்லாமியர்களை தொடர்ச்சியாக இந்தியாவிற்கு எதிரானவர்களாக, தீவிரவாதத்தை முன்னெடுப்பவர்களாக அடையாளப்படுத்தி வருகின்றது. இன்று மேற்குலகும் இதையேதான் செய்கின்றது என்றபோதும், இந்தியாவில் இருக்கின்ற பெரும்பான்மையான வெகுஜன ஊடகங்கள் இஸ்லாமியர்களை




எப்படி எதிர் விம்பங்களுடன் கட்டமைக்கின்றது என்பதில் இருந்து தொடங்குகின்றது இந்தப் பிரச்சினை. ஆரம்ப காலத்தில் இந்துக்கள் இஸ்லாமியர்களை மிலேச்சர்கள் என்று என்று அழைத்தது முதல் இன்றுவரை இதே அரசியல்தான் தொடர்கின்றது. இந்தத் திரைப்படமும் அதையேதான் செய்கின்றது. அதே நேரத்தில் திரைப்படத்தில் கிறீஸ்தவப் பாதிரியார் புனிதத்துவத்தின், அன்பின் உச்சமாகக் காண்பிக்கப்படுகிறார். திரைப்படம் பற்றி தம்பியுடன் பேசிக் கொண்டிருந்த போது, வெளிநாட்டுத் திரைப்படக் கண்காட்சிகளில் திரையிடப்படும்போது /போட்டிக்கு அனுப்பப்படும்போது பாதிரியாரை தியாகத்தின் உச்சமாகக் காண்பிப்பது வணிக ரீதியாக உதவும் என்றான் (கவனிக்க மேற்குலகில் கட்டமைக்கப்படும் கிறீஸ்தவ X இஸ்லாமிய விம்பம்). மறுப்பதற்குக் கடினமாகத்தான் இருந்தது.

-3-

இந்தியாவில் சம காலத்தில் இருக்கின்ற பிரச்சினைகள் பற்றியே இத்தனை மேம்போக்கானதாயும், எந்தப் புரிதலும் இல்லாமலேயும் திரைப்படங்கள் எடுப்பவர்கள் எப்படி ஈழப் பிரச்சினை பற்றி சரியாக பிரதிபலிப்பார்கள் என்பதே எனது கேள்வி. தமிழ்த் திரைப்பட உலகம் எந்தப் பிரக்ஞையும் இல்லாத மந்தைக் கூட்டமாகவே தொடர்ந்து இயங்கி வருகின்றது. அவ்வப்போது சில விதிவிலக்குகள் நிகழ்ந்தாலும் தமிழ்த் திரைப்படங்களைத் தொடர்ந்து கவனித்து வருபவர்களால் இது போன்ற முடிவுக்கே வரமுடியும். இட ஒதுக்குமுறையால் மாவட்டத்திலேயே முதல் மாணவனாக வந்தவன் உயர்கல்விக்கான அனுமதி மறுக்கப்பட்டான் என்ற கோமாளித்தனங்கள் எல்லாம் தமிழ் சினிமாவில் மாத்திரமே நிகழும். இது பற்றி எந்தக் கேள்வியும் இல்லாமல் இப்படியான கருத்துக்களைச் சொல்கின்ற திரைப்படங்கள் பெறுகின்ற வெற்றிதான் தமிழ்ச் சமுதாயம் பற்றிய நம்பிக்கையீனத்தை வலுப்பெற வைக்கின்றது. இது போன்ற பிரச்சினைகளில் இந்தத் திரைப்படங்கள் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் இட ஒதுக்கீடை மோசமாகப் பிரதிபலித்தன என்பது மாத்திரமன்றி, ஆதிக்க சாதிகளுக்கு வக்காலத்து வாங்கின என்பதே உண்மை. திரைப்படங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் இது போன்ற அரசியல்கள் பற்றித் தொடந்து பேசப்பட வேண்டும்.

ஏதிலிகள் சார்பில் நாங்கள் ஒழுங்கு செய்திருந்த அமர்வொன்றில், “the boy with striped pyjamas” என்கிற திரைப்படத்தினை திரையிட்டிருந்தோம். அத்திரைப்படத்தின் இறுதிக் காட்சியில் யூதர்களுடன் சேர்ந்து, யூதச் சிறுவன் ஒருவனுடன் விளையாடச் சென்ற நாசிச் சிறுவனும் கொல்லப்படுவதாகக் காட்சி வரும். அந்தக் காட்சி படமாக்கப்பட்ட விதத்தைச் சுட்டுக்காட்டிய இளங்கோ, அந்த நாசிச் சிறுவனின் இறப்பே அதிகம் பாதிப்பை ஏற்படுத்துமாறு படமாக்கப்பட்டிருந்தது என்று சுட்டிக் காட்டி இருந்தார். இரண்டாம் உலகப் போர் பற்றி இது வரை ஹொலிவூட்டில் இருந்து வெளியான திரைப்படங்களில், நாசிகளின் கொடுமைகள், ஜப்பான் செய்த கொடுமைகள் என்று நிறையத் திரைப்படங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. அதே நேரம் எத்தனை திரைப்படங்கள் அமெரிக்கா ஹிரோஷிமா, நாகசாகியில் மேற்கொண்ட அணுகுண்டுத் தாக்குதல் பற்றிக் காட்டியிருக்கின்றன என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது. உடனடியாக நினைவுக்கு வருவது பேர்ல் ஹாபர் திரைப்படம் என்றாலும் பேர்ல் ஹாபரில் “இப்படியாக இவர்கள் செய்த அட்டூழியங்களையும் அதனால் ஏற்பட்ட உலக அழிவுகளையும் நிறுத்தற் பொருட்ட அமெரிக்கா செய்த வேறு எந்தத் தேர்வும் இல்லாத நடவடிக்கையாகவே” அந்த அணுகுண்டுப் பிரயோகம் காண்பிக்கப்படுகின்றது என்பது கவனிக்கத்தக்கது. ஊடகங்களில் எவர் அதிகாரம் மிக்கவராக இருக்கின்றாரோ அவரே அதிகாரப் படிநிலைகளில் உச்சமாக இருக்கின்றார் என்பதற்கு இது நல்லதோர் உதாரணம். இன்னுமோர் சிறந்த உதாரணம் கருணாநிதி தனது காலை உணவிற்கும், மதிய உணவிற்கும் இடையில் கடற்கரையில் எடுத்த சன் பாத்தினை உண்ணாவிரதம் என்று அவரது குடு(சு)ம்ப ஊடகங்கள் கட்டமைத்தமை. தமிழர்கள் மத்தியில் அதிகம் பார்க்கப்படுகின்ற தொலைக்காட்சி சானல்களாக சன், கலைஞர் தொலைக்காட்சிகள் இருப்பதும், அதிகம் விற்கப்படுகின்ற வார சஞ்சிகைகளில் ஒன்றாக குங்குமம் இருப்பதும், அதிகம் விற்கப்படுகின்ற மஞ்சள் பத்திரிகையாக நக்கீரன் இருப்பதும், மற்றும் கருணாநிதி ஆதரவு ஊடகங்கள் தொடர்ந்து அதிகம் மக்களை சென்றடைவதும் இதற்குக் காரணங்களாக இருக்கின்றன. வெகுசன ஊடகங்கள் பிரதிபலிப்பவை பற்றி தொடர்ச்சியாகக் கேள்விக்குள்ளாக்கவேண்டும் என்பதற்கும், அவை தொடர்ந்து கட்டுடைப்பு செய்யப்பட வேண்டும் என்பதற்கும் இதைத்தவிர வேறேதும் சான்றுளதோ?

arunmozhivarman@thaiveedu.com

■ ■ ■

# தமிழ் முதியோர்...

81ம் பக்கத் தொடர்ச்சி...

வுத் தேவைகளை போர் மற்றும் இயற்கைப் பேரழிவுகளுக்குட்பட்ட நாடுகளில் செய்த ஆய்வுகள் மூலம் கண்டறிந்துள்ளது: உடமை உணர்வு (Sense of Belonging), உறவு, பயத்திலிருந்து மீள்தல், தனிப்பட்ட பற்றுதல்கள், நுண்ணறித்தூண்டல்கள், கட்டுப்பாட்டுணர்வு, உடல் தூண்டல்கள், சுயபெறுமானம், சுயகௌரவம், போன்ற விடயங்கள் நிறைவு செய்யப்படுதல் அவர்களது நலமாக வாழ்தலில் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. இவை அடையப்படும் போது மாத்திரமே அவர்கள் நலமாக வாழ்கின்றனர் எனக் கொள்ளப்படல் வேண்டும் என இந்த ஆய்வறிக்கை வாதிடுகின்றது. இவ்விடயம் போர் மற்றும் இயற்கை பேரழிவுச் சூழல்களிலிருந்து வெளியேறிய, வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்ட புலம்பெயர் சமூகத்தின் முதியோர்களுக்கும் பொருத்தக்கூடியதாகும்.

எக்ளெஸ்டன் (2007:457) என்பவர் இங்கிலாந்தில் வாழும் புலம்பெயர் சமூகத்துடன் செய்த ஆய்வொன்றில் சமூக ரீதியாக ஒதுக்குதல், சுய கௌரவத்தையும் உணர்வு ரீதியாக நலமாக வாழ்தலையும் மிகவும் பாதிக்கின்றது எனக்குறிப்பிடுகின்றார். இது குறித்து பொதுவான உடன்பாடு உலகளாவிய ரீதியில் உளவியலாளர்களிடே காணப்படுவதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

அதேவேளை தனிப்பட்டவர்களினதும் குழுக்களினதும் அனுபவங்களும், அவர்களது நல்வாழ்வுக் தேவை பற்றிய கண்ணோட்டங்களும் அவர்கள் வாழ்கின்ற பௌதிக, காலச்சார பொருளாதார சமூகக் காரணிகளின் செல்வாக்கினால் தீர்மானிக்கப்படுகின்றது. உருவமைக்கப்படுகின்றது. மாற்றியமைக்கவும்படுகின்றது (மன்டர்சன் 2005 5, 15). அந்த வகையில் தனிப்பட்ட முதியோர்கள் தமது குடும்ப, சமூக அமைப்புக்கு அமைவாகவே நல்வாழ்வு பற்றிய/நல்வாழ்வுத் தேவை பற்றிய கருத்தோட்டங்களை உருவாக்குகின்றனர். மேலும் வயது, பால், இனத்துவம் சமயம், குடும்பம், சமூக அமைப்புக்கள் போன்றவற்றுடன் தொடர்பாகவும் நல்வாழ்வுக் தேவைகள் வடிவமைக்கப்படுகின்றன. குடும்பஉறவுக்கும், குடும்பத்திலுள்ள வளங்களுக்கும், அங்கத்தவர்களின் நல்வாழ்வுக்கும் இடையிலுள்ள தொடர்பு பற்றி பல்வேறு நாடுகளில் மக்ரீகர், மக்கேய், மற்றும் பலர் (2007) ஆய்வுகளைச் செய்துள்ளனர். முழுமையான ஆரோக்கியம், திருப்தி, மகிழ்வு, குடும்ப நல்லுறவு போன்றவற்றிற்கு மனிதர்களுடன், அங்குள்ள பொருள் வளங்களும் பங்களிப்புச் செய்கின்றன என அவர் கண்டறிந்துள்ளனர்.

அண்மைக் காலங்களில் மனித நல்வாழ்வுத் தேவைகள் பற்றிய கோட்பாடுகள் மிகமிக விரிவாக கட்டமைக்கப்படுகின்றன. உலகளாவிய நல்வாழ்வுத் தேவைகளையும் (Universal Wellbeing Needs) அதற்குரிய அடிப்படை சமூக சூழல் முன் நிபந்தனைகளையும் (Basic Social Environmental Preconditions) இக் கோட்பாடுகள் விரிவாக முன்வைக்கின்றன (மக்ரீகர், மக்கேய் 2007: கிளாக், கோஹ் 2005:54). அதாவது பல்வேறு குடும்ப-சமூக-கலாச்சாரப் பின்னணி நல்வாழ்வுத் தேவைகளைத் தீர்மானிக்கின்ற போதும், அடிப்படையான நல்வாழ்வுத் தேவைகள் பற்றிய உடன்பாடும் உருவாக்கப்பட்டுள்ளது.

zulfika.ismail@thaiveedu.com

■ ■ ■


REAL TEAM
Thinking of selling? Think SOLD!
HOMELIFE
" Put our experience to work for you, and see the difference! "
Neilson/McLevin
$ 249,900
Detached,3 Bedrooms
close to all Amenities
Good Starter home
Newly Fin Basement
Call for more Details
McCowan/MajorMac
$ 620,000
5 Bedrooms Detached
4 Washroom,Hardwd floor
3 Years New,Appr 2800sf
Large Hfamily Home
Close To All Amenities
Markham/Ellesmere
$ 749,900
Custom Built 4 Bedrooms
Fully Upgraded
Detached Few Years Old
Prime Scarborough Lcation
Call More Details
Sasi Chelvaratnam
Sales Representative
416.725.1125
Scarborough Town Ctr
Sale Or Lease
One Bedroom+ Dent
Scarborough Town Center
Brand New Condo
Available For Sale or Lease
Close To All Amenities
Hwy 10/Cresthaven
$371,900
Detached,4 Bedrooms
Finished Basement
Large Family home
Lovely Upgraded
Call for more Details
Markham/14th Ave
$ 499,900
3 Bedrooms Detached
Finishe Basement
close to all Amenities
Newly Renovated House
Callfor More Details
Old Finch/ Morningside
$409,900
Semi Detached House
3 Washrooms
Walk- out Bsmt
Well Kept Home.
close to all Amenities.
Investment Property
$389,900
Great Investment Property
Restaurant With Three
Apartments. Good Return.
Anchored With Good
Tenants
Kennedy/Hwy7
$ 1.98 Million
Custom Built Home
5 Bedrooms Detached
& Huge House.
Upgraded Home
close to all Amenities
Bramalea/Bovaird
$ 329,900
3 Bedroom Semi
3 Washroom
Close to all Amenities
Finished Basement
Call for More Details
Ravi Raveendran
Real Estate Broker
416.817.8479
Markham/Passmore
$ 549,900
3 Bedrooms Detached
Over 2000sq feet
Hardwood Floor
Upgraded Home
close to all Amenities
Finch/Middlefield
$ 189,900
2 Bedroom Condo
well kept Unit
Laminate Floor
close to all Amenities.
Markham/Buroak
$619,900
4 Bedroom Detached
5 Washroom
Finished Bsmt
Over 2500 Sf
close to all Amenities.
Kethees Seevaratnam
Sales Representative
416.275.5788
Bovaird/Sandlewood
$379,900
Detached,4 Bedrooms
Few years Old
Close to all Amenities
Call for more Details
Yonge/Sheppard
$ 429,900
New Luxury Condo
Walk To Subway
close to all Amenities
call for More Det...
Weston/Majormac
$ 629,900
4 Bedrooms Detached
Finished Basement
Hardwood Floor
Upgraded Home
close to all Amenities
Birchmount/Sheppard
$279,900
4 Bedrooms Town House
Prime Agincourt Area
Short Walk To All
Amenities.
Call For More Info....
Finch/Valley Farm
$329,900
Freehold Town House
4 Bedrooms.
Large Corner Lot.
Close To All Amenities.
McLevin/Tapscott
$ 299,900
3 Bedrooms Feehold
3 WashroomTown House
Close to all Amenities
Call for More Details
HWY 7 / McVean
Brand New
$949,000
New Detached,5Bed Rms
Walk-Out Basement
Ravine Lot.
Hardwood Floor
Approx 4500 Sq Ft
Justin William
Real Estate Broker
416.803.7344
Midland/Lawrence
$129,900
1 Bedroom Condo
1 Washroom
Renovated Unit
Close to all Amenities
Great For First Timers.
Weston/ Hwy 7
$389,900
3 Bedroom Condo T/H
3 Washrooms
Finished Walk-Out Bsmt
Prime Vaughan Area
Close to all Amenities.
Lawrence/McCowan
$439,900
4 Self Contained Aptment
7 Bedrooms
Walk To Hospital
4 Parking Spaces
Very Good Investment.
Wilton Gnanapragasam
Sales Representative
416.554.4747
Markham/Denison
$509,000
4 Bedroom House
3 Washroom
High Demand Area
Over 2000 Sf
Less Than 5 Years Old..
Hwy 401/McCowan
$218,800
2 Bedroom Condo
Luxury Building
Unobstructed View
Corner Unit
24 Hrs Security..
9th Line/Hoover Park
$549,000
4 Bedroom Detached
3 Washrooms
Mattamy Home
Over 2500 Sf
Tastefully Decorated..
Blackwalnut/Terrager
$549,900
4 Bedroom Detached
3 Washrooms
Well Maintained.
Stainless Steel Appliances
Close To Go Station,
McCowan/Sheppard
$156,000
2 Bedroom Condo
Bright & Spacious
Corner Unit
New Hardwood Flooring
Convenient Location.
Brimley/Finch
$154,900
Daisy Mart With Lotto
Good Family Business
Good Sales
Good Lotto Commission
Reasonable Rent.
Kennedy/Ellesmere
$269,900
3 Bedroom Town House
Affordable Price
End Unit
Low Maintenance Fee
Great Location..
Balan Kanesapillai
Sales Representative
416.844.5401
HOMELIFE/GTA Realty Inc., Brokerage*
*Each office Independently owned and operated
5215 Finch Ave, East, Toronto, ON. Tel: 416-321-6969 & 145 Traders Blvd. E, Mississauga,ON Tel: 905-712-2666

# கடிச்சது சாரை

- சேகர் தம்பிராஜா -

முதல்ல ஏதோ கடிச்ச மாதிரிக்கிடந்தது. பிறகு கொஞ்சம் சுர் எண்டுது. ஏதோ ஒண்டு, சும்மா வந்து என்ர கால் பெருவிரல்லை கடிச்சுப்போட்டு போட்டுது. கடிச்சது எறும்பு எண்டு நினைச்சுப் போடாதேங்கோ. பாம்பு. ஒரு நீளப் பாம்பு.

யோசிச்சு பாருங்கோ, இண்டைக்கு நான் உயிரோடை இருக்கிறதெண்டால் அந்த நல்ல பாம்பு தான் காரணம். அண்டைக்கு எனக்கு நாகம், முத்திரைப் புடையன், கண்டங்கரு வளையன், சுருட்டை எண்டு ஏதும் கடிச்சிருந்தால்... கதையே வேற. அண்டைக்கே எனக்கு சங்குதான். நான் செய்த புண்ணியம் கடிச்சது சாரையாய்ப் போச்சு.

பாம்பு என்றால் படையும் நடுங்கும் என்று சொல்லுவார்கள். பாம்புடன் பழகும் எவருமே மிகவும் கவனமாகத் தான் பழகுவார்கள். எங்கு சுருண்டிருக்கும், எங்கு நித்திரை கொள்ளும், எங்கு படமெடுக்கும், எங்கு சீறிக் கொத்தும் என எந்தத் தீர்க்கதரிசியாலும் சொல்லமுடியாது. சிறிய பாம்பானாலும் சரி பெரிய பாம்பானாலும் சரி பயம் என்பது எல்லோருக்கும் பொதுவானதாகவே இருந்தது.

பாம்பு வந்து போனால் செல்வம் வந்து சேரும் என 'சின்னாச்சன்' கிழவி அடிக்கடி சொல்லும். நாங்கள் அதை அடிக்கப் போனாலும் அடிக்க விடாது. அது வாயில்லா பிராணி அதையேன் அடிக்கிறாய் எண்டு முட்டுக் கட்டைக்கு நிக்கும்.

பாம்பு அடிக்கடி எங்கள் வீட்டுக்கு அழையா விருந்தாளியாக வந்தது. எங்கள் வீடும் அதற்கேற்றால்போல் வயல், வளவு, பற்றை, பனங்காணி, புற்று என்று புடைசூழ இருந்தது. வீட்டு முகட்டுக்குள் 'சாரை' அடிக்கடி பயணம் செய்யும். அதற்கு ஒரு தொந்தரவும் செய்யாமல் அதன்பாட்டிலேயே விட்டு விடுவோம்.

ஒருநாள் இரவு நடுச்சாமம் ஒரு மணிக்கு எனது அக்கா எழுந்து நின்று அல்லோல கல்லோலப் பட்டா. என்னெண்டு கேட்டால் தனக்கு பக்கத்துலை என்னமோ கிடக்குது என்னெண்டு தெரியேல்லை ஒருக்காய் விளக்கை கொளுத்து எண்டு கத்தினாள். பார்த்தால், ஒரு பெரிய பாம்பு அவளது தலையணை உறைக்குள்ளே புகுந்து கொண்டிருந்தது. விஷ்ணுபகவான் ஆதிஷேசனில் தான் துயில் கொண்டதாக சின்ன வகுப்பில் 'மகேஷ் டீச்சர்' படிப்பிச்சவ. விஷ்ணு பகவான் போல ஐந்து தலை பாம்பில் துயில் கொள்ளா விட்டாலும் ஒரு தலை சாரையிலாவது படுத்துறங்கினோம் என்ற மனமகிழ்ச்சி எங்களுக்கு.

அன்றைய காலங்களில் 'சில்க் சுமிதா' பிரபலமான நடிகையாக இருந்தார். அவர் பாடல்களில் ஆடைகளைக் கழற்றுவது விடுவது போல எங்களது சாரைகளும் ஆங்காங்கே தங்களது செட்டைகளை கழற்றி விட்டு 'நாங்களும் இருக்கிறம்' என்று எங்களுக்கு நினைவுபடுத்திக் கொண்டிருந்தன. அநேகமான வீடுகளில், வீட்டோடு ஒரு 'பத்தி' சேர்த்து இறக்கப் பட்டிருக்கும். எங்கள் வீட்டிலும் அந்தப் 'பத்தி' இருந்தது. அதனினுள் மாரி காலத்துக்கென விறகுகள் சேகரித்து அடுக்கி வைப்பது வழக்கம். ஒவ்வொரு வருடமும் அந்த விறகு அடுக்குக்குள் அவர்களது குடித்தனமும் ஆடைகளும் இருக்கும்.

அது 'மின்சாரத்தடை' காலம். ஒருநாள் இரவு கிணற்றடிக்கு போன எனது காலில் ஏதோ 'உளக்குப் பட்டது. நான் நினைத்தது எனது இரண்டு வயது மருமகன் உருட்டி விளையாடிய சைக்கிள் டயர் என்று. ஆனால் 'உளக்குப் பட்டது' டயர் போல இல்லாமல் சற்று ஈரலிப்பு கொண்டதாக இருந்ததனால் லாம்பை எடுத்துக் கொண்டு வந்து என்வென்று பார்த்தேன். அங்கு ஒரு பாம்பு மெல்ல ஊர்ந்து சென்று கொண்டிருந்ததது. அதன் பின்னர் தான் 'பிலத்து' சத்தம் போட்டு கத்தினேன். தும்புக்கட்டை தடி ஒன்றை எடுத்து கொண்டு வந்து அடிக்கப் போன என்னை எல்லோரும் தடுத்தனர். இது சிலவேளை கோயில் பாம்பாய் இருக்கும். நீ உதை அடிச்சு சாக்கொண்டு பாவத்தை தேடாதை. அது எங்களுக்கு ஒரு கெடுதலும் செய்யேல்லைத்தானே. மெல்ல கலைச்சு விடு. உந்தப் பாம்பு தான் என்னை முந்திக் கடிச்சது எண்டு மறந்து பொய் உவையல் என்னை தடுத்துப் போட்டினம்.

எனக்கு கடித்தது விஷப் பாம்பாக இல்லாமல் 'சாரைப்' பாம்பாக இருந்ததனால் நான் பிழைத்துக் கொண்டேன். எந்தனையோ ஆயிரம் பேர் பாம்புக் கடியினாலும் ஏனைய விஷ ஜந்துக்களின் கடியினாலும் மரணமடைந்துள்ளனர். இங்கு கனடாவில் உள்ளதைப் போன்று 911 அழைப்பை ஏற்படுத்திய ஏழாவது நிமிடம் ஓடிவந்து அவசர சிகிச்சை அளிப்பதற்கான வழிவகைகள் ஒன்றும் எங்களுக்கு அப்போ இருந்ததில்லை. இப்போதும் இருப்பதாகத் தெரியவில்லை.

நான் கனடா வந்த புதிது. திடீரென போலீசார் ஒரு இடத்தை சுற்றி வளைத்து பாதுகாப்பு வளையம் போட்டனர். நான் என்னமோ எதோ என்று பயந்து நடுங்கிக் கொண்டிருந்தேன். சிறுது நேர களோபரத்தின் பின்னர்தான் தெரிந்தது அவர்கள் காணமல் போன பாம்பினை தேடுகின்றார்கள் என்று. சிறிது நேரத்தின் பின்னர் அதனை பத்திரமாக பிடித்து கொண்டு செல்வதர்க்கென்றே தனிப் பிரிவொன்று வந்து அதனை பத்திரமாக பிடித்து சென்றது. அதே போன்று யாரும் வளர்த்த பாம்பொன்றைக் காணவில்லை என்றால் அதுவும் ஊடகங்களில் பிரதான செய்தியாகி விடும். அப்படிப் பாக்கப் போனால் எங்கள் ஊர்களில் இருபத்திநான்கு மணிநேரமும் 'பாம்பு பிடி' பிரதான செய்தியாகவிருக்கும்.

எங்கள் ஊர்களில் அப்படியான விஷக் கடிக்கு வைத்தியம் பார்ப்பதற்குரிய வைத்தியர்களும் குறைவாகவே காணப்பட்டனர்.

எனக்கு பாம்பு கடித்த பொழுதும் ஏறத்தாள பதினைந்து கிலோமீற்றருக்கு அப்பால் இருந்த ஒரு பிரபல விஷகடி வைத்தியரிடம் என்னை கொண்டு சென்றனர்.

சென்றதும், அங்கிருந்த வாங்கு ஒன்றில் என்னை இருத்தினார்கள். கொஞ்ச நேரம் பொறுத்து இருங்கள் வைத்தியர் வந்து விடுவார் என்று அங்கிருந்த ஒரு அம்மா சொன்னார். எனக்கோ பயம் முட்டி அழுகையாக வந்து கொண்டு இருந்தது.

சிறு நேரம் கழித்து அந்த வைத்தியர் தனது மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கி எனக்கு வைத்தியம் பார்க்க ஆயத்தமானார். அங்கு கட்டி வைத்திருந்த ஒரு வேப்பிலை கட்டு எடுத்து தனது வாயில் எதோ சொல்லி எனக்கு 'பார்வை' பார்த்து 'பாம்பு கடி' வாய்க்கு எதோ மருந்து வைத்து கட்டிவிட்டு மூன்று நாளைக்கு "இங்கேயே நின்று வைத்தியம் பார்க்க வேண்டும்" என்று கூறி விட்டு மீண்டும் தனது மோட்டார் சைக்கிளில் பறந்தார். அதன் பின்னர் தான் பார்த்தேன் அங்கு இன்னுமொரு அம்மா வைத்தியத்துக்காக பல காலமாக தங்கி இருக்கிறார் என்பதனை.

அன்பாக அவர் பேசியதிலேயே அரைவாசி வருத்தம் நீங்கி விட்டது. பாம்பு கடிச்ச பயமும் இல்லாமல் போய்விட்டது. விஷம் தீண்டிப் போவோர் வேதனையை விட பயத்தையே அதிகம் கொண்டிருப்பார்கள். அவர்களின் பயத்தை இவர் தனது பேச்சால் குணமாக்கும் திறமை பெற்றவராக இருந்தார். விஷம் தீண்டி வருபவர்களின் உயிரின் முக்கியத்துவம் அறிந்து சேவை செய்தவர் என பின்னாளில் நான் அறிந்து கொண்டேன். நடு நிசி வேளைகளிலும் தனது உயிர்காக்கும் பணியினை சலிப்பின்றி செய்து வந்தவர் பிரபல விஷகடி வைத்தியர் அமரர்.சி.க.சிற்றம்பலம் அவர்கள்.

விஷ கடியினால் உயிருக்கு ஊசலாடிச் சென்ற பலநூறு உர்யிர்களை காப்பாற்றிய அந்த மனிதரை இயற்கையில் இருந்து காப்பாற்ற முடியாமல்
போய்விட்டது.



sekar.thambyrajah@thaiveedu.com



ஒரே நேரத்தில் இரண்டு கலைவிழாக்கள் ஒழுங்கு செய்யப்படுவதைத் தவிர்க்க உங்கள் கலை விழாக்களை முன்கூட்டியே 'இணையம்' இணையத் தளத்தில் பதிவு செய்து விடுங்கள். உங்கள் விழாவின் திகதியைத் தீர்மானிப்பதற்கு முன்பு இணையத்தைப் பார்த்து அந்தத் திகதியில் வேறு நிகழ்ச்சிகள் ஏதும் உள்ளதா என்பதை அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் செல்லவிருக்கும் விழா, நிகழ்வுகள் சம்பந்தமான தகவல்களை இணையத்தைப் பார்த்து அறிவதுடன், நிகழ்வு நடைபெறும் இடத்தின் வரைபடத்தையும் இணையத்தில் பார்க்கமுடியும். இது முற்றிலும் இலவசமான சேவை.

www.inayam.net

T. 416 400 6 406 • F. 416 849 0594
www.inayam.net, info@inayam.net
PO Box: 63581, Woodside Square, 1571 Sandhurst Circle, Toronto, ON, M1V 1V0

# வாழ்த்துக்கள்

# வளருகிறார் சுரேன்! வாழ்த்துகிறார் சாமி!!

- நிதி நெருக்கடியில் தவிப்பவர்கள்
- கடன் பளுவால் வாழ்க்கையை தொலைத்தவர்கள்
- கடன் அட்டையின் நெருக்கடியில் நிம்மதி இழந்தவர்கள்

மட்டுமா?

- புது வாழ்வைத் தொடங்க இருப்பவர்கள்
- புது முதலீடுகளை தொழிலில் ஈடுபடுத்துபவர்கள்
- தேயும் தொழிலை காக்க முயல்பவர்கள்



அனைவருக்கும்

தக்க ஆலோசனை, வழிகாட்டல் செய்துவரும்

# சுரேன் சொர்ணலிங்கம்

கனடிய அரசு நெறியாளராக

Registered (BIA) Insolvency Counsellor

நியமிக்கப்பட்டுள்ளார்

சுரேன் பணிகள் சிறக்க தமிழினம் வளர

என் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.



கனேடிய அன்னையின் 144 வது பிறந்ததின வாழ்த்துக்கள்

அனைவருக்கும் உரித்தாகுக

சாமி அப்பாத்துரை

# ஒன்றுக்கும் உதவாதவன்

- அ.முத்துலிங்கம் -



எனக்குத் தெரியும், என்னைச் சுற்றியுள்ளவர்களுக்கு தெரியும், என் நண்பர்களுக்கும் தெரியும். நான் அடிக்கடி தொலைந்து போகிறவன். வாழ்க்கையில் ஒன்றிரண்டு முறை தொலைந்து போகிறவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அதையே ஒரு தொழிலாகச் செய்வது நான்தான் என நினைக்கிறேன். ஒன்பது வயதாயிருந்தபோது கிராமத்தில் பக்கத்துக் கடைக்கு ஏதோ வாங்கப் போன நான் திரும்பவும் வீட்டுக்கு வரவில்லை. என்னைத் தேடி ஆட்கள் புறப்பட்டு ஒன்றரை நிமிடத்தில் பிடித்துவிட்டார்கள். அன்று தொடங்கி வைத்தது இன்றும் தொடர்கிறது.

சரியாக மாலை ஐந்து மணிக்கு புறப்பட்டேன். ரொறொன்ரோவின் காலநிலை அன்று நல்லாயிருக்கும் என்று வானொலி சொல்லியிருந்தது. காற்றில் பனிக்காலத்துக் குளிரின் மீதி இருந்தது. நடைபோகும்போது அணியும் மெல்லிய கோட்டை அணிந்துகொண்டேன். மறுபடியும் நண்பர் தொலைபேசி மூலம் சொல்லிய வழிக்குறிப்புகளை நினைவுபடுத்தினேன். என் வீட்டிலிருந்து வேகமாக நடந்தால் 15 நிமிடத்தில் நண்பர் வீட்டுக்கு போய்விடலாம். மெதுவாக நடந்தால் 20 நிமிடம் எடுக்கலாம். என் வீட்டிலிருந்து நேராகப் போய் இரண்டு இடது பக்க திருப்பம், ஒரு வலது பக்கம், மறுபடியும் ஒரு இடது பக்க திருப்பம். அவ்வளவுதான். வீட்டு எண் 22. தொலைந்து போவதற்கு வாய்ப்பே கிடையாது. இடது, வலது திருப்பங்களை மாத்தி-ரமல்லாமல் ரோட்டுப் பெயர்களையும் மனப்பாடம் செய்தாகிவிட்டது.

ஒவ்வொரு வீதியாகத் தாண்டி திரும்ப வேண்டிய திருப்பங்களில் இடது வலது பக்கங்கள் சரியாகத் திரும்பி, கடைசியில் இருக்கும் வீதிக்கு வந்துவிட்டேன். ஆனால் நான் தேடும் வீதியின் பெயரில் ஒரு வீதியும் இல்லை. ஒன்றிரண்டு வீதிகளின் பெயர்ப் பலகைகளை காணவில்லை. வேறு வழி இல்லாத நிலையில் ஒவ்வொரு வீதியாக ஊகித்து எல்லை வரை சென்று நண்பரின் வீட்டை தேடினேன். அந்த வீதிகள் எல்லாம் மேலே ஏறிப்போவதும், சடாரென்று கீழே இறங்குவதாகவும் இருந்தன. ஏறி இறங்கி, ஏறி இறங்கி தேடியதால் மூச்சு வாங்கியது. மூச்சை வெளியே விடுவது சுலபம், மறுபடியும் காற்றை உள்ளே இழுப்பதுதான் சிரமமாக இருந்தது. எல்லா வீதிகளும் இருந்தன. நான் தேடியது மட்டும் இல்லை.

நல்ல காலமாக செல்பேசி கையில் இருந்தது. நண்பரை அழைத்தேன். அவர் வீட்டுக்கு போகாவிட்டால் பரவாயில்லை. முக்கியமான ஒரு விசயமும் இல்லை சும்மாதான் போகிறேன். ஆனால் எப்படியும் நான் என் வீட்டுக்கு திரும்பவேண்டுமே! நண்பர் செல்பேசியில் அழைப்பை ஏற்கவில்லை. தவறிய அழைப்புகளின் பட்டியலில் ஓர் இலக்கம் அதிகரித்தது. அவர் மாலை ஐந்து மணிக்கு பின்னர் செல்பேசி அழைப்பை ஏற்பதில்லை என்ற கொள்கை வைத்திருந்தார் என்பது எனக்கு பின்னால் தெரியவரும். மணி அடித்துக் கொண்டே போனது. எடுப்பார் இல்லை. சரி வீட்டுக்கு போகலாம் என்று எண்ணி திரும்பினால் நான் வந்த ரோட்டு மறைந்து விட்டது. அவ்வளவு நேரமும் அங்கேதான் இருந்தது. மேலும் கீழுமாக அலைந்ததுதான் மிச்சம்.

அப்பொழுது பார்த்து ஒரு பெண் மிக வேகமாக நடந்து வந்தார். வயது முப்பது மதிக்கலாம். குளிருக்கு அணியும் பச்சை நிறத் தொப்பி, கம்பளிக்கோட்டு, நடைச் சப்பாத்து. முழங்காலின் கீழ் நீண்டிருக்கும் குளிருக்கு பொருத்தமில்லாத மெல்லிய ஸ்கேர்ட். இரண்டு கைகளையும் வளைக்காமல் நேராக வீசி வீசி நடந்தார். ஓர் இசைக்கு ஆடுவதுபோல நீண்ட பாவாடை எழும்பி எழும்பி விழுந்தது. நான் ஒன்றுமே பேசவில்லை. அவர் போக உத்தேசித்திருந்த பாதையின் நடுவில் நின்றேன். அவர் ஒரு விமானம் நிற்பதுபோல உஸ் என்று மூச்சு விட்டுக்கொண்டு நின்றார். 'மன்னிக்கவேண்டும். பொஸ்வெல் வீதி எங்கே இருக்கிறது தெரியுமா?' என்று கேட்டேன்.

இப்பொழுது அந்தப் பெண்மணி முற்றிலும் மாறிவிட்டார். முகம் வேறு ஒரு பெண்ணின் முகம்போல கருணை உள்ளதாக மாறியது. புகைப்படக்காரருடைய பல்ப் வெடித்ததுபோல முகத்தில் வெளிச்சம் கூடியது. தன்னுடைய வேலையை மறந்துவிட்டு அன்று முழுக்க நான் அவர் முன்னே நிற்கப் போகிறேன் என்பதுபோல பச்சைத் தொப்பியை எடுத்து கையிலே தட்டிக்கொண்டு யோசிக்க ஆரம்பித்தார். அந்த வீதி அங்கேதான் எங்கேயோ இருக்கிறது ஆனால் அது அவருக்கு சட்டென்று ஞாபகத்தில் வரவில்லை. நான் 'நன்றி, சிரமத்திற்கு மன்னிக்கவும்' என்று சொல்லி விட்டு கிளம்பியபோது இரண்டு கைகளாலும் நின்றுபோன காரைத் தள்ளுவதுபோல முன்னுக்கு நீட்டிப் பிடித்து தடுத்தார். என்னை அவர் விடுவதாயில்லை.

அடுத்து அவர் செய்தது நான் எதிர்பார்க்காதது. பையில் இருந்து செல்பேசியை எடுத்து தன் மகனை அழைத்தார். அவர்கள் மொழியில் ஏதோ பேசினார். தமிழை பின்பக்கமாகப் பேசுவதுபோல அது ஒலித்தது. ஒரு நிமிடம் கூட ஆகியிராது. அவர் செல்பேசியை காதிலே பிடித்துக் கொண்டிருந்தார். நான் அவர் முகத்திலே மாறும் உணர்ச்சிகளை அவதானித்துக் கொண்டு முன்னால் நின்றேன். அவர் செல்போனை மடித்து வைத்துவிட்டு சொன்னார். 'உங்களுக்கு பின்னால் இருக்கும் வீதிதான் பொஸ்வெல் வீதி. பெயர்ப் பலகை உடைந்திருக்கிறது. நேராய்ப் போனால் வீட்டு எண் 22 இடது பக்கம் வரும். வீட்டுக்கு முன்னால் அழகான ஒரு பேர்ச் மரம், அதைச் சுற்றி வட்டமாக வெண்கற்கள் பதித்திருக்கும்.'

நான் திகைத்துவிட்டேன். 'நன்றி, எப்படி? என்றேன்.

'என் மகன். அவனுக்கு வயது 9. அவனுடைய டெல் கம்புயூட்டருக்கு முன்னால் எந்நேரமும் வசிக்கிறான். இத்தனை விவரங்களையும் கூகிள் வரைபடத்தை பார்த்துச் சொன்னான்' என்றார். நான் மறுபடியும் நன்றி கூறிவிட்டு புறப்பட்டேன். 'நீங்கள் எங்கே இருக்கிறீர்கள், பக்கத்திலா?' என்றார். சொன்னேன், அவரும் சொன்னார். அவர் செல்பேசியை வெளியே எடுத்தார். நானும் எடுத்தேன். உலகக் கோப்பை உதை பந்தாட்ட வீரர்கள் தங்கள் சீருடைகளை எதிரணியினருடன் மாற்றிக்கொள்வது போல நாங்களும் எங்கள் முகவரிகளை மாற்றிக்கொண்டோம். 'சந்தித்ததில் மகிழ்ச்சி' என்றேன். அவர் பச்சைத் தொப்பியை தலையிலே தரித்துக்கொண்டு விட்ட இடத்திலிருந்து நடையை தொடங்கினார். அவருடைய மெல்லிய பாவாடையும் தன்னை விடுவித்துக்கொண்டு அவருடன் புறப்பட்டது.

அந்தப் பெண் சொன்ன மாதிரி வீடு அதே ரோட்டில் இடது பக்கத்தில் இருந்தது. கதவு மணி அடித்ததும் நண்பரின் முகம் கண்ணாடி வழியாக மூன்றில் ஒரு பங்கு தெரிந்தது. பொறுங்கள் என்று கையை காட்டிவிட்டு திறப்பை எடுத்து நடனமாடியபடியே வந்து கதவைத் திறந்தார். அவருடைய ஒரே மகள் மங்கிய வெளிச்சத்தில் எதையோ வாசிக்க முயன்று கொண்டிருந்தாள். என்னை அறிமுகப்படுத்தியதும் கிக்கி என்று விக்குவதுபோல சிரித்தாள். மகள் பெயர் முத்துநகை என்றார். முத்துப் போன்ற பற்களால் சிரிப்பதால் அந்தப் பெயரா அல்லது முத்து ஆபரணம் போன்றவள் என்பதால் அந்தப் பெயரை வைத்தாரா என்பது தெரியவில்லை. வழி தவறியதையும் என்னை ஒரு பெண்மணி மீட்டார் என்பதையும் நான் கூறவில்லை. மகள் போட்டு தந்த இஞ்சிக்கோப்பியை குடித்துவிட்டு திரும்பினேன்.

இருட்டுப்பட முன்னர் வீட்டுக்கு போய்ச் சேர்ந்து விட வேண்டும் என்று வேகமாக நடந்தேன். இனி வரும் எல்லா வருடங்களிலும், லீப் வருடம் உள்பட, ஒருவர் வாயினால் சொல்லும் வழிக்குறிப்புகளை வைத்துக்கொண்டு அவர் வீட்டுக்கு போகக்கூடாது என்று தீர்மானித்தேன். வழியில் எதற்காக எனக்கு இப்படி நடக்கிறது என்று யோசித்தேன். எப்பொழுதும் தொலைந்து விடுகிறேன். பிரபல இத்தாலிய எழுத்தாளர் இட்டாலோ கல்வினோ எழுதிய கதை ஒன்று ஞாபகத்துக்கு வந்தது. அதன் தலைப்பு 'ஒன்றுக்கும் உதவாதவன்'. அந்தக் கதையில் ஒரு மனிதன் வருவான். அவனுக்கு சப்பாத்துக் கயிறு கட்டத் தெரியாது. ஒரு வழிப்போக்கன் அவனிடம் சொல்வான் 'உங்கள் சப்பாத்து கயிறு அவிழ்ந்துபோய்விட்டது.' அந்த மனிதன் அதே இடத்தில் குனிந்து கயிற்றைக் கட்டுவான். ஒரு சில நிமிடங்கள் கழிந்து மறுபடியும் அதே வழிப்போக்கன் வழியில் தென்படுவான். 'பாருங்கள், உங்கள் சப்பாத்துக் கயிறு கட்டப்படவில்லை' எனக் கத்துவான். மறுபடியும் மனிதன் சப்பாத்தைக் கட்டுவான். இந்த தடவை மிகத்திறமாக முடிச்சை போடுவான். அப்படியும் சிறிது நேரத்தில் முடிச்சு அவிழ்ந்துபோகும். மறுபடியும் வழிப்போக்கன் எச்சரிப்பான். இப்படி

இணையத்தளத்திலும் 'தாய்வீடு'

www.thaiveedu.com

யே அந்த மனிதன் போகும் இடமெல்லாம் வழிப்போக்கனும் வந்து கொண்டேயிருப்பான். 'கயிறு அவிழ்ந்துவிட்டது' என்று சொல்லுவான். இவன் மறுப்பு சொல்லாமல் தொடர்ந்து கட்டுவான்.

இறுதியில் அலுத்துப் போய் மனிதன் சொல்வான், 'என்ன செய்வது. எப்படி முயன்றாலும் என்னால் சப்பாத்து லேஸை கட்டமுடியவில்லை. சிறுவயதில் நான் நல்ல பயிற்சி பெறவில்லை. அது அவிழ்ந்து கொண்டேயிருக்கிறது.'

'அப்படியா? உங்கள் பிள்ளைக்கு லேஸ் கட்டுவதை யார் சொல்லித் தருவார்கள்?

'அவன் வேறு யாரிடமிருந்தாவது கற்றுக் கொள்ளவேண்டும்.'

'அது எப்படி? ஒரு நாள் உலகம் முழுவதும் அழிந்துபோய் நீங்கள் மட்டுமே எஞ்சியிருந்தால் அப்போது என்ன செய்வீர்கள்? பிள்ளைக்கு யார் சொல்லிக்கொடுப்பார்கள்?'

'உலக முடிவில் தப்புவிப்பதற்கு கடவுள் என்னையா தெரிவு செய்வார்? எனக்கு சப்பாத்து கயிறுகூட கட்டத் தெரியாதே.'

அதற்கு அந்த வழிப்போக்கன் சொன்னான். 'இந்த உலகம் இயங்குவது அப்படித்தான். ஒருவருக்கு லேஸ் கட்ட வராது. ஒருவருக்கு மரம் சீவத் தெரியாது. இன்னொருவர் ரோல்ஸ்ரோயை படித்திருக்கமாட்டார். வேறு ஒருவர் விதைப்பது எப்படி என்று பழகவே இல்லை. உலகத்தில் எல்லாம் தெரிந்தவர் ஒருவருமே இல்லை. மக்கள் ஒருவர் கையை ஒருவர் பிடித்து வாழ்ந்தால்தான் வாழமுடியும். ஒருவருக்கு ஒருவர் அனுசரணையாக இருப்பதுதான் சமுதாயம். அதுதான் வாழ்க்கை.' இப்படிச் சொன்ன வழிப்போக்கன் மறைந்து விடுவான்.

அந்தக் கதை வெகு பொருத்தமாக இருந்தது. குற்றம் குறை இல்லாதவர்கள் யார்தான் இருக்கிறார்கள். அந்தப் பச்சை தொப்பி பெண்மணியிடம் உதவி கேட்டதும் அவர் எவ்வளவு மகிழ்ந்துபோய் காணப்பட்டார். செல்பேசியை எடுத்து மகனை அழைத்து வழி காட்டினார். அதை அவர் தவிர்த்திருக்க முடியும். நல்லவர்களால்தான் உலகம் நடக்கிறது. புறநானூறு 182ம் பாடலும் அதைத்தான் சொல்கிறது. 50 வருடத்துக்கு முன்னர் இட்டாலோ கல்வினோ சொன்னதை 2000 ஆண்டுகளுக்கு முன்னர் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி என்ற புலவர் 'உண்டால் அம்ம இவ்வுலகம்' என்ற பாடலில் சொல்லிப் போயிருக்கிறார்.

ரோட்டு பெயர்கள் எல்லாம் பாடமாகியிருந்ததால் திரும்பும்போது பிரச்சினை இல்லை. நான் வசிக்கும் வீதி சீக்கிரமே வந்தது. ஒரே மாதிரி உடையணிந்து ஒப்பனை செய்த 12 மணப்பெண் தோழிகள் போல இரண்டு பக்கமும் தேவதாரு மரங்கள் ஒரே உயரத்தில் ஒரே பருமனில் வளர்ந்து அழகாகக் காட்சியளித்தன. வாத்துக்கள் நீந்தும் குளம் வந்தது. பூங்கா வந்தது. வீடு வந்தது. கதவு எண் மாறவில்லை, அதேதான். வீட்டின் முன்னே ட்யூலிப் பூ ஓர் இதழ் கூடியிருந்தது. மனைவி இரவுச் சாப்பாட்டு ஆயத்தங்களைச் செய்து முடித்துவிட்டு எனக்காகக் காத்துக் கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் 'என்ன தொலைந்துவிட்டீர்களா?' என்று கேட்டார். 'தேநீர் ஆறிவிட்டதா?' என்று கேட்கும் சாதாரணக் குரல். நான் முகத்தை மாற்றாமல் 'வீடு கண்டுபிடிப்பது ஈசி, இரண்டு இடது பக்கம், ஒரு வலது பக்கம், மீண்டும் இடது பக்கம். வீட்டுக்கு முன்னே அழகான பேர்ச் மரம் துளிர் விட்டுக்கொண்டிருக்கிறது. அதைச் சுற்றி வட்டமாக வெள்ளைக் கற்கள் அலங்காரம்' என்றேன்.

எனக்கு வழிகாட்டியது ஒரு பச்சைத் தொப்பி மனுசியும், அவருடைய செல்பேசியும், ஒன்பது வயது மகனும், டெல் கம்புயூட்டரும், கூகிளும், பூமியை ஓயாமல் சுற்றிக்கொண்டிருக்கும் மூன்று செய்மதிகளும் என்பதை நான் ஏன் சொல்லப்போகிறேன்.



muththulingam.a@thaiveedu.com


TORONTO BUSINESS COLLEGE
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



DIPLOMA PROGRAMS
Computerized Accounting
26 weeks
Personal Support Worker
26 weeks
Medical Office Administrator
32 weeks

★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 4 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் MATERNITY BENEFITS பெற்றவர்கள்
அரசாங்க நிதி உதவியில் கற்கலாம்
Tuition Fees,Books,Living Expenses,
Day care & Transportation அனைத்தும் இலவசம்

Buy One Get One Free
Windows,Word,Excel,Power Point
Quick Books,Simply Accounting,Accpac
Week Ends
416-291-5155
4465 SHEPPARD AVE. EAST #208
( SHEPPARD & BRIMLEY ) SCARBOROUGH
www.t-businesscollege.com t.businesscollege@gmail.com
(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER THE PRIVATE CAREER COLLEGES ACT 2005)



இன்சூரன்ஸ்
$1 Million
Life Insurance
10 year Term Insurance புகை பிடிக்காத 30 வயது பெண்ணுக்கு
Elite Non-Smoker Rate
புகை பிடிக்காத 30 வயது ஆணுக்கு $41.40
Only $27 Monthly
INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life
Unity Life of Canada
CANADA PROTECTION PLAN



KEN KIRUPA
Life Insurance Broker
759 Warden Ave.,
www.familyprotection.ca
CELL 416-830-8191
OFFICE 416759-5453

# எஸ்.பொ: ஈழத்து இலக்கியத்தின் தன்னேரிலாத் தலைவன்

- தேவகாந்தன் -

ஈழத்து எழுத்தாளர் எஸ்.பொ. என்றழைக்கப் படும் எஸ். பொன்னுத்துரைக்கு 2010ஆம் ஆண்டுக்கான மதிப்புமிக்க தன் வாணாள் தமிழ்ச் சேவைக்கான இயல் விருதை வழங்கிக் கௌரவித்திருக்கிறது கனடா இலக்கியத் தோட்டம். எந்த அமைப்பினது பரிசுகள் குறித்தும், வழக்கமாக எழும் சர்ச்சைகள்போல் இம்முறை வழங்கப்பட்ட இயல்விருது குறித்து வாதப்பிரதிவாதங்கள் தோன்றவில்லையென் பது இவ்விருது சரியான ஆளுமைக்குச் சென்று சேர்ந்திருக்கிறது என்பதன் ஓர் அடையாளமாக எடுக்கப்பட முடியும்.

1932இல் பிறந்த எஸ்.பொ.வுக்கு ஆறு தசாப்த கால எழுத்தின் வரலாறுண்டு. இதுவேதான் எஸ்.பொ.வுக்கு இயல்விருது கிடைத்ததை அனுக்கமின்றி தமிழ்ப் பரப்பு ஒப்புக்கொண்டதன் காரணமாக இருக்கமுடியுமா? இது ஒன்றேதான் வெகுஜன எழுத்தின் உபாசகர்களதும் தீவிர இலக்கிய வாசகர்களதும் சம்மதிப்புகளை சேர்ந்த நேரத்தில் பெற்றிருப்பது சாத்தியமா?

எஸ்.பொ.வின் அறுபதாண்டு எழுத்துலக வாழ்வு இரண்டு கட்டங்களைக்கொண்டது. வேலை நிமித்தமான அவரது ஆபிரிக்கப் பயணத்தின் முன்னான ஒரு கட்டம். இதை இலங்கையில் அவர் முழுவதும் வதிந்த காலமாகக் கொள்ளலாம். இரண்டாவது, அவுஸ்திரேலியாவிலிருந்து அவர் தமிழகத்தில் தங்கவந்த காலத்திலிருந்து இன்றுவரையானது. இந்த இரண்டில் முதலாவது காலகட்டமே இலக்கியத் தகைமை அதிகமும் சார்ந்தது.

அறுபதுகள் ஈழத்து இலக்கிய வரலாற்றினைப் பொறுத்து, அவரது சகாப்தமாகவே இருந்திருக்கிறது. 'தீ'யும், 'சடங்கு'ம், 'வீ' சிறுகதைத் தொகுப்பிலுள்ள பல சிறுகதைகளும் ஈழத்து இலக்கியச் செல்நெறியையே தீர்மானகரம் செய்கிற மூர்த்தண்யத்தோடு படைப்பாக்கமாகி வெளிவந்தது இந்த அறுபதுகளில்தான்.

எஸ்.பொ.வின் இலக்கிய ஆளுமை எவ்வாறு விவாதத்துக்கு இடமில்லாது இருக்கின்றதோ, அதேபோல் அவரது அ-இலக்கிய எழுத்துக்கள் மிகமிக விவாதத்துக்குரியவை என்பதும் முக்கியமான விஷயம். அவரது இன்றைய அரசியல் குறித்து ஒரு புலத்தில் வாழும் வாசகனுக்கு மிகத் தீவிரமான கேள்விகள் எழ மிகுந்த நியாயங்கள் இருக்கின்றன. அவரது பின்னாளைய படைப்புக்கள் முதலாம் காலகட்ட எழுத்துக்களினை நிகர்த்தில்லையென ஒரு நடுநிலைசார் வாசகனே முடிவு கட்டிவிடுவான். அவரது சில விவாதங்கள், சில கருதுகோள்கள் கூர்மையற்றவை. இருந்தும்தான் எஸ்.பொ.வுக்கான இயல் விருது மிகப்பொருத்தமானதென சகல தரப்பாராலும் ஒப்புமை தரப்படுகிறது. இதன் காரணமென்ன? இந்த உரைக்கட்டு இந்த விஷயத்தை மையப்படுத்துகிறது.

பல்வேறு தருணங்களில் ('தாய்வீ'ட்டின் சில கட்டுரைகள் உட்பட தற்பொழுது எழுதிக் கொண்டிருக்கும் 'தேவகாந்தன் பக்க'த்திலும்) நான் குறிப்பிட்டிருந்ததுபோல, என் சிறுவயதுக் காலத்தில் அவரது எழுத்தின் வசீகரத்தில் வசியப்பட்டிருந்தவன் நான். இலங்கையில் வெளிவந்த சஞ்சிகையொன்றில் (பெயர் மறந்து போனது) எஸ்.பொ. எழுதிய 'குளிர்' என்ற கதையை இப்போதும் என்னால் ஞாபகப் படுத்த முடியும். அன்றிலிருந்து எஸ்.பொ.வின் சகல எழுத்துக்களையும் தேடி வாசிக்கும் வெறிபிடித்து அலைந்த பதின்ம வயதுக் காலம் என்னது. இன்றுவரைகூட ஒரு தேவை கருதியேனும் விருப்பத்துடனேயே அவரது சகல எழுத்துக்களையும் நான் வாசித்து வருகிறேன்.

என் வாசிப்பு என்றும் என்னைக் கைவிட்டதில்லை. படைப்புபற்றிய எனது முடிவுகள் பெரும்பாலும் ஆய்வு முடிவுகளுக்கு இணையாகவே முற்றிலுமாய்ச் சென்றிருக்கின்றன.

நாவுக்கும் பேனைக்கும் அஞ்சப்பட்ட இரண்டு ஆளுமைகளை ஈழத்து இலக்கிய வரலாறு இதுவரை சந்தித்திருக்கிறது. ஒன்று, நல்லை ஆறுமுக நாவலர். இன்னொன்று, எஸ்.பொ. அதனால்தான் காலாண்டிதழாக 'இலக்கு' சிற்றிதழை 1994இல் நான் தொடங்கியபோது அதன் முதல் இதழிலேயே எஸ்.பொ.வைச் சந்தித்து அவரது நேர்காணலை வெளியிட்டேன். அதன் அறிமுகவுரையில் இவ்வாறு எழுதியிருப்பேன்: 'ஆறுமுக நாவலருக்குப் பிறகு மிகப்பெரும் கண்டனகாரர் என்று பெயரெடுத்தவர்தான் இன்று எஸ்.பொ. என்ற இரண்டு எழுத்துக்களால் குறிக்கப்படும் எஸ்.பொன்னுத்துரை.' ஆதலால் இலக்கிய ஆளுமையாக இருந்ததோடு 'மிகப் பெரும் கண்டனகார'ராயும் இருந்ததிலிருந்து இந்த விசாரணையைத் தொடங்குகிற எண்ணம்.

ஜனநாயகத்தில் மாற்றுக் கருத்தென்பது மிகவும் முக்கியமான ஓரம்சம். எதிர்க்கட்சியானது இம் மாற்றுக் கருத்தின் மறுவடிவமே. இலக்கிய உலகிலும் இது அரசியலுலகு போலவே தவிர்க்கவியலா அலகு ஆகும். ஆறுமுக நாவலருடைய கண்டனங்கள் மாற்றின் வடிவங்களுக்கான கண்டனங்களாய் இருந்ததாய் பொத்தம்பொதுவாய்ச் சொல்ல முடியும். இதையே வேறு மொழியில் சொன்னால், புதுமையை அதன் பிறப்பு வாயிலிலேயே தடுத்துவைத்துவிட்டு பழைமையை மேலும் தவிசிலிருத்துகிறதான விருப்புணர்வின் செயற்பாடாக ஆறுமுக நாவலருடைய செயற்பாங்குகளும் கருத்துக்கோவைகளும் இருந்திருக்கின்றன.

'வசனநடை கைவந்த வல்லாளர்' எனப்பட்டவர் நாவலர். சைவ சமயத்தினது நெடும் பயணத்திலே வேற்றுநாட்டாரின் ஆட்சியினால் பழைமைச் சமுதாய இயக்கத்துக்குத் தோன்றிய தடைக்கற்களை அகற்ற நாவலருக்குத் தேவையாக இருந்தது வசனநடைதான். சிறு படிப்போடு இருக்கும் மத்தியதரத்தாரும் வாசித்து இலகுவில் விளங்கிக்கொள்ள வேண்டிய தேவை அவருக்கு இருந்திருக்கிறது. உரைநடை வரலாற்றிலேயே முக்கியமான ஒரு மைல் கல்லாக இருந்தது இத் தவிர்க்கமுடியாமையை உணர்ந்து செயற்பட்டதனாலேயே நிகழ்ந்தது. எஸ்.பொ. எழுதியதும், நான் எழுதியதும், நீங்கள் எழுதுவதும் கூட நாவலரது வசனநடையின் மேற்கட்டுமானத்திலேதான் என்பதை எவராலும் மறுத்துவிட முடியாது. இந்தவகையில் தமிழிலக்கிய வரலாற்றில் நாவலரது இடம் சாசுவதமானது. அதுபற்றி எனக்கு எந்தவிதமான மாற்றபிப்பிராயமும் இல்லை.

ஆனால் எஸ்.பொ. ஒரு கண்டனகாரராய் இருந்தாரென்பதில் அவரது கண்டனங்கள் புதுமையை ஆதரித்தனவாய் இருந்தன என்பதுதான் இந்த இருவர் கண்டனங்களிலும் இருந்த வேறுபாடு. ஒருவகையில் இலங்கையில் 'மறுமலர்ச்சி' பத்திரிகையின் காலத்துக்கு முன்னால் இலக்கியத்தில் இருந்தது ஒரு வகையான 'பண்டித' ஆதிபத்தியமே எனச் சொல்லமுடியும். சமூகரீதியாக இந்த ஆதிபத்தியத்தை மேனிலைச் சமூகத்தினது எனக் கூறுவதில் தவறில்லை. அதை நொருக்கித் தள்ளியது இலங்கை முற்போக்கு வாதத்தின் சாதனையெனில், அந்தத் தகர்வுகளின் மேல் சாதாரணர்களின் ஆதிபத்தியத்தை நிறுவியது எஸ்.பொ.தான்.

> **"எஸ்.பொ.வின் இலக்கிய ஆளுமை எவ்வாறு விவாதத்துக்கு இடமில்லாது இருக்கின்றதோ, அதேபோல் அவரது அ-இலக்கிய எழுத்துக்கள் மிகமிக விவாதத்துக்குரியவை என்பதும் முக்கியமான விஷயம்."**

பழைமைக்கும் வந்த புதுமைக்கும் ஓர் இணைப்புப் பாலமாய் இருந்தவராக இரசிக மணி கனக. செந்திநாதனைச் சொல்ல முடியுமெனில், பழைமையை உரமாகக்கொண்டு புதுமையை வளர்த்தெடுக்க முனைந்தவர் எஸ்.பொ. இதை நற்போக்கு என்ற கருதுகோளாக்கி அலகுகள் வகுத்தார் அவர். நற்போக்கு அதன் பிறப்புக் காலத்திலிருந்தே பல எதிர்ப்புக்களைச் சந்தித்தது. பின்னால் சுவடு இன்றி மறைந்தது.

பின்னாளில், அவரது இரண்டாவது இலக்கியப் பிரவேசத்தில் 'தமிழிலக்கியத்தை வரும் புத்தாயிரத்திலிருந்து முன்னெடுக்கப்போவது புலம்பெயர்ந்தோர் இலக்கியமே' என்ற கருத்தோடு எஸ்.பொ. சொன்ன 'தமிழ்த்துவ' கருதுகோள் அதையே திரும்பச் சொன்னது. இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் வெகுஜன இலக்கியம் என்ற சுலோகம், உள்ளோட்டத்தில் அதனது படைப்பாளிகளின் மலினமான எழுத்துக்களால் வீச்சுப்பெறாமல் விட்டிருந்தபோது, 'இமுஎச'வுக்கும் எதிரான எஸ்.பொ.வின் எழுத்துக்களினால்தான் பண்டித சாம்ராஜ்யம் கவிழ்ந்து வெகுஜன எழுத்துக்கான வெளி பிறந்தது. இதை தன் படைப்பிலக்கியத்தின் ஊடாகவும், கண்டன எழுத்துக்களின் மூலமாகவும் சாதித்து முடித்தார் எஸ்.பொ.

'நாரதர் கலகம் நன்மையில் முடியு'மென்பது வெகுஜன வாக்கு. நாரதன் ஒரு கலகக்காரன். பிற்காலத்திய சித்தனின் முற்கால வடிவம் அவன். அவனே சமயச் சாயம் பூசப்பட்ட பாணனும் ஆவான். இந்தத் தொடுப்போடு பார்த்தால், நாரதன் ஒரு கலகக்காரனே. சித்தர்களும் கலகமே செய்தார்கள். இதன் மூலம் பெறப்படும் பெறுபேறு கலகங்களால் நன்மை பிறந்தது என்பதுதான். இதை வேறு வார்த்தைகளில் சொன்னால், கலகத்திலிருந்து நன்மை பிறக்கிறது என்பதே அது. எஸ்.பொ.வின் கலகங்களிலிருந்தும் நன்மை பிறந்தது.

எழுத்து மாச்சரியங்களுக்கும், தன்மேலான அவதூறுகளுக்கும், எழுத்தின் புனிதங்களுக்கும் எதிரான அவரது யுத்தம், மிக முக்கியமான சங்கதி. ஈழ இலக்கியத்தின் வாசகனொருவன், எஸ்.பொ.வின் கண்டனங்களை முற்போக்கு வாதத்திற்கெதிரானதாய், குறிப்பாக கலாநிதிகள் கைலாசபதிக்கும் சிவத்தம்பிக்கும் எதிரானதாய் இருந்ததை, சுலபமாகவே கண்டுகொள்வான். மார்க்ஸீய வாசகனொருவன் இந்த எழுத்துக்களில் முகச் சுளிப்புக்கொள்வது தவிர்க்கவியலாதபடி நிகழ்ந்திருக்கிறது. நான் முகச்சுளிப்பு அடைந்திருக்கிறேன்.

ஆனால் மிகப் பின்னாளில், மற்றவரும் அவருமே கூறியது போலில்லாமல், அவரது யுத்தமனைத்தும் படைப்பவனுக்கும் படிப்பவனுக்குமில்லாமல் இலக்கியத்தைப் படிப்பிப்பவனுக்கு அதன் தராதரத்தை நிர்ணயிக்கிற அதிகாரம் குவிந்தபோது, தனிநபர்கள்மீதானதாயன்றி அத் தனிநபர்களின் கொள்கலங்களான பல்கலைக்கழகங்கள் என்ற நிறுவனங்களுக்கெதிராயே அவரது யுத்தம் இருந்ததாய் நான் புரிந்திருக்கிறேன். இலக்கியப் படைப்புகள்பற்றிய கருத்துக்கள் சரியாக இருந்து, தேர்வுகள் தவறாக இருந்த கதையே கலாநிதிகள் கைலாசபதியினதும், சிவத்தம்பியினதுமாகும். இதற்கெதிரானதாயே எஸ்.பொ.வின் கலகங்கள் இருந்திருக்கின்றன. இது ஆரோக்கியமான விஷயமே.

கலகக் குரல்களுக்கு மிகப் பெயர் பெற்றவராய் படைப்பாளிகளில் இரண்டு முக்கிய ஆளுமைகளைத் தமிழுலகம் அறியும். ஒருவர், ஜெயகாந்தன். மற்றவர் எஸ்.பொ. தனது கலகத்தின் வடிவங்களாக தனது மேடைப் பேச்சுக்களையும், தனது நூல்களுக்கான தன் முன்னுரைகளையும் அமைத்துக்கொண்டார் ஜெயகாந்தன். எஸ்.பொ.வின் கலகங்களது வடிவங்களாக அதே மேடைப் பேச்சும் அவரது முன்னீடுகளும் இருந்தன.

இமுஎச எழுத்தாளர்கள் 'இழிசனர் மொழி'-யென அதுகாலவரை ஒதுக்கப்பட்டிருந்த கீழ்த் தட்டு மக்கள் மொழியை அரியாசனம் ஏற்ற முயன்ற வேளையில், நவீன எழுத்துக்களிலும் புனிதங்கள் என்று கருதப்பட்டனவற்றைத் தகர்க்கும் மேலான முயற்சியில் ஈடுபட்டிருந்தார் எஸ்.பொ.

1961இல் வெளிவந்த 'தீ' நாவல் ஈழத்திலக்கியப் பரப்பில் இடிமின்னலோடு வந்த மாமழை. தமிழகத்தைப் பொறுத்தவரை சிதம்பர ரகுநாதன் போன்றோரது சில சிறுகதைகளையும் இவ்வாறு எழுத்துப் புனிதங்களை அழித்தெழுந்த எழுத்துக்களாய்ச் சொல்ல முடியும். மராத்திய எழுத்தாளர் வி.ஸ.காண்டேகரது சில தமிழ் மொழிபெயர்ப்புக்களில் எழுத்துப் புனித அழிப்புக்களின் செயற்பாட்டை நாவல் தளத்தில் காணமுடிந்தது. ஆனால் ஈழத்தில் எழுத்துப் புனிதங்களை ஆழமும் அகலமுமாய் அழிக்க எழுந்ததுதான் எஸ்.பொ.வின் 'தீ' நாவல். எடுத்துக்கொண்ட பொருளால் மட்டுமில்லை, அதன் பாத்திரங்களது சமுதாய அந்தஸ்தினது இருப்பு காரணமாயும் ஒரு பாய்ச்சலை ஈழத்திலக்கியத்துக்கு மட்டுமில்லை, தமிழிலக்கியத்துக்கே அது வழங்கியது. மட்டுமில்லை. இந்நாவல் குறித்து பிரமிளுக்கும் எஸ்.பொ.வுக்குமிடையே 'எழுத்து' சஞ்சிகையில் நடைபெற்ற வாத-பிரதிவாதங்கள் ஓர் இலக்கியவாதியைப் பொறுத்தவரை முக்கியமானவை. இவ் விவாதங்கள் குறித்த மு.தளையசிங்கத்தின் முடிவுகள் அதே 'எழுத்து' இதழில் வெளிவந்தன. இவையெல்லாம் தமிழ் விமர்சனத்தின் வீச்சுக்கு உரமூட்டுபவை.

இதேவகையான எழுத்தின் புனித அழிப்பு

தொடர்தல் 89ம் பக்கம்

# JRS College

Business - Health Care

"Committed to provide Quality Training"

சிறந்த வேலைவாய்ப்புக்களுக்கான பயிற்சிநெறிகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றீர்களா?

## Health Care Courses



- PSW (Personal Support Worker) Diploma
(Morning, Evening and Weekend classes are starting soon)

- Health Office Administrator Diploma
Starts on July.20th, 2011 @ 9.00Am (Wednesday)



- Food Service Worker Certificate





- Basic Food Handling Certificate
On Sep.10th, 2011 @ 10.00am-4.00pm (Saturday)

- Advanced Food Handling Certificate



(Registered and Approved as a Private Career College under the Private Career Colleges Act 2005.)
Some Courses are not available in Etobicoke Campus

| SCARBOROUGH CAMPUS | ETOBICOKE CAMPUS |
|---|---|
| (Midland & Finch)<br>330-4168 Finch Ave East<br>Scarborough,ON M1S 5H6<br>416-292-2455 | (Kipling & Dundas)<br>300-5359 Dundas St West<br>Etobicoke, ON M9B 1B1<br>416-207-9975 |


அவரது 'சடங்கு' நாவலிலும் இருக்கும். 'சடங்கு' நாவலின் மொழி அலாதியானது. அந்தளவு இறுக்கமற்றதெனினும் தமிழகத்தில் லா.ச. ராமாமிர்தத்தின் நடைக்கு மொழிவழியாக நிகர்த்தது. ஆனால் நாவலாகாமல் வெறுமனே ஒரு நெடுங்கதையாய் தேக்கமடைந்தது அது. 'தீ'யோ ஈழத்து நாவல் வரலாற்றில் தனியான ஓரிடத்தைப் பெற்றுக் கொண்ட நாவலாகும்.

'தீ' நாவலாக, 'வீ' சிறுகதைத் தெகுப்பாக, 'முறுவல்' நாடகமாக தனிக் கவனங்கள் பெறுவன. இவற்றின் மொழி தனித்துவமானது. இதுவே இந்தப் பாத்திரத்தின் பேச்சுமொழி என எஸ்.பொ. கருதிவிட்டால், அதை எந்த வாசக பிரக்ஞையுமின்றி கையாளும் ஓர்மம் அவருக்கேயானது.

'மத்தாப்பூ', மற்றும் 'சதுரங்கம்' போன்ற நாவல்களை பல எழுத்தாளர்களின் மூலம் உருவாக்கி இலக்கியப் பரப்பில் பரிசோதனை முயற்சிகளை முன்னெடுத்தவரும் ஈழத்தில் எஸ்.பொ.தான். மேலும் ஒன்றை இங்கே ஞாபகப்படுத்த வேண்டும். இவரின் இலக்கியப் போக்கினுக்கு மாறான இலக்கியக் கொள்கையினை உடையவர் கனக.செந்திநாதன். ஆனாலும் இருவருமே இலக்கிய நாகரிகமுடையவர்கள். அதனால்தான் எஸ்.பொ.வின் 'வீ' சிறுகதைத் தொகுப்புக்கு கனக.செந்திநாதனும், கனக.செந்திநாதனின் 'வெண்சங்கு' சிறுகதைத் தொகுப்புக்கு எஸ்.பொ.வும் முன்னுரை எழுத முடிந்திருந்தது.

முன்னர் சுட்டிக்காட்டிய படைப்புக்களின் பின்னால் வரும் எஸ்.பொ. அவரது இரண்டாம் கட்டத்துக்குரியவர். தன்வரலாற்று நூலொன்று இலக்கிய வரலாறாகவும் வளர்ந்திருக்கும் விந்தையை அதிகமாகவும் ஆங்கிலத்திலே தான் காணமுடியும். தமிழில் அவ்வாறாக வெளிவந்திருப்பது எஸ்.பொ.வின் 'வரலாற்றில் வாழ்தல்'. இரண்டு பாகங்களாக சுமார் ஆயிரத்து நானூறு பக்கங்களில் அது. Anne Frank: The Diary of a Young Girl என்ற ஆன் பிராங்கின் தன்வரலாறு வெளியிட்ட அவரின் இரண்டாண்டு வரலாறு செய்த வாசக பாதிப்பை எஸ்.பொ.வின் 'வரலாற்றில் வாழ்தல்' செய்தது.

அதனால்தான் கோவை ஞானி அதை 'நோபல் பரிசுக்குத் தகுதியான தமிழ்நூல்' எனக் குறிப்பிட்டார் ஒரு நேர்காணலில்.

அடுத்ததாய்க் குறிப்பிடப்படக்கூடிய இன்னொரு படைப்பு 'மாயினி' என்ற அரசியல் நாவல். அது இலங்கையின் புதுவரலாலொன்றை வரைய முனைந்த முயற்சியின் பெறுபேறு. நாவலாய் அது பெரிதும் பேசப்படாவிட்டாலும் அதன் கட்டுமானத்தால் தமிழ் அரசியல் நாவலுக்கு ஈழமாயினும் தமிழகமாயினும் வழிகாட்டும் சாங்கியம் கொண்டது.

இப்படியாக சற்றொப்ப முப்பது நூல்களின் ஆசிரியராக இருக்கும் எஸ்.பொ., விட்டுக் கொடுப்பின்றி தன் தனிப்போக்கில் தொடர்ந்து கொண்டிருக்கும் ஓர் ஈழத்து இலக்கியவாதி. இன்று புலம்பெயர்ந்தோர் இலக்கியம் என்ற பதத்தை எஸ்.பொ. பாவிப்பதில்லை. மாறாக, இதை நவ ஈழத்து இலக்கியம் என்கிறார்.

எஸ்.பொ.வுக்கு இணையான இலக்கிய ஆளுமையோடிருந்தவர் மு.த. ஆனாலும் அவர் நீண்டகாலம் வாழ ஈழத்து இலக்கியத்துக்கு கொடுப்பனவு இல்லாமல் போய்விட்டது. பிரமிள் இன்னோர் ஆளுமை. அவரை நிலங்கடந்த படைப்பாளியாகவே தமிழ் இலக்கிய உலகம் கருதிக்கொண்டிருக்கிறது. அதனால் ஈழத்து இலக்கியத்தின் தன்னேரில்லாத் தலைவனாக எஸ்.பொ. இருக்கிறார் என்பது ஒரு சரியான கணிப்பீடாகவே எனக்குத் தென்படுகிறது.

இந்த நவ ஈழத்து இலக்கியரை, சிலர் 'பாணன்' என்கிறார்கள். அவரே தன்னை 'காட்டான்' என்கிறார். பொருத்தமான அடைகள்தான். ஆனாலும் எனக்கு அவரது குணவியல்புகளினூடான சித்திரம் காட்டுவது ஒரு சித்தனாக - இலக்கியச் சித்தனாக மட்டுமே.



devakanthan@thaiveedu.com

## கடுகு...

## நேர வலயங்கள்:

### கனடாவில் 6 நேரவலயங்கள் நடைமுறையிலுள்ளன

**NEW FOUNDLAND STANDARD TIME (NST)**
நியூபவுண்ட்லாந்து, லப்ரடோரின் தென்கிழக்கில் ஒரு பகுதியிலும் நடைமுறையிலுள்ளது.

**ATLANTIC STANDARD TIME (AST)**
தென்கிழக்கின் சிறு பகுதி தவிர்ந்த லப்ரடோர், நியூபிரன்ஸ்விக், நொவாஸ்கொஷியா, பிரின்ஸ் எட்வேட் ஐலன்ட் ஆகிய இடங்களில் நடைமுறையிலுள்ளது.
NST இலும் 30 நிமிடம் குறைவு

**EASTERN STANDAND TIME (EST)**
கியூபெக், ஒன்ராறியோவின் பெரும் பாலான பகுதிகள் நூனவற்றின் ஒரு பகுதி லப்ரடோரின் கியூபெக் எல்லையை ஒட்டிய சில சிறுபிரதேசம் ஆகிய இடங்களில் நடைமுறையிலுள்ளது.

NST இலும் ஒன்றரை மணித்தியாலம் குறைவு.

**CENTRAL STANDARD TIME (CST)**
மனிற்ரோபா, சஸ்கச்சுவான், நூனவற்றின் ஒருபகுதி ஒன்ராறியோவின் வடமேற்கில் சில பகுதிகளில் நடைமுறையிலுள்ளது.
NST இலும் இரண்டரை மணித்தியாலம் குறைவு.

**MOUNTAIN STANDARD TIME (MST)**
அல்பேட்டா, பிரிட்டிஷ் கொலம்பியாவின் தென்கிழக்கில் சில பகுதிகளிலும் Northwest Territories, நூனவற்றின் ஒரு பகுதி, சஸ்கச்சுவானின் LordsminsterஇIலும் சுற்றுப்புறங்களிலும் நடைமுறையிலுள்ளது.

NST இலும் மூன்றரை மணித்தியாலம் குறைவு.
MST கோடைகாலத்தில் மாறுவதில்லை.

**PACIFIC STANDARD TIME (PST)**
பிரிட்டிஷ் கொலம்பியாவிலும் யூகொன் பிரதேசத்திலும் நடைமுறையிலுள்ளது.

NST இலும் நாலரை மணித்தியாலம் குறைவு.


Buy...sell...Invest...
$159,800
Toronto
Spacious Corner Suite
2 Bedrooms, 1 Washroom
$709,900
Markham
Bright & Spacious
Over 3200 Sq Ft Living Space
5 Bedrooms, 4 Washrooms
East Gwillimbury
5 Acre Treed Lot With Pond& Deck.
Approx 2250 Sq FtBungalow
3+1 Bedrooms, 2 Washrooms
$269,900
Toronto
End Unit Townhouse
At Affordable Price
3 Bedrooms,2 Washroom
Toronto
Brand New Condo.
Approx 1058 Sq Ft
2+1 Bedrooms, 2 Washrooms
$259,000
Toronto
Brand New Commercial Retail
Unit 700 Sq Ft
High Traffic Intersection
$289,000
Toronto
Great Opportunity
spacious and clean
2+1 Bedrooms, 2 Washrooms
$439,900
Available For Rent
Toronto
Luxury 3-Level Townhome
With Patio
3+1 Bedrooms, 3 Washrooms
1+Den - $1200
2+Den - $1450
Rent
Toronto
Brand New Luxury Condo
With All Amenities At
401/Kennedy
For Immediate Occupancy
$199,000
Markham
Totally Finished -
900Sf Of Office Space
2 Offices; 1 Washroom
$359,000
Newmarket
This Semi-Bungalow Condo
A Corner Lot
3 Bedrooms, 3 Washrooms
$353,900
Ajax
9 Ft Ceilings. Family Size
Eat-In Kitchen
3 Bedrooms, 3 Washrooms
$365,000
Stouffville
Mattamy Built Beautiful
Spacious Semi-Deatached
3 Bedrooms, 3 Washrooms
$329,900
Sold
Pickering
Heart Of PickeringLarge
Corner Lot
4 Bedrooms, 3 Washrooms
$329,900
Brampton
Semi In A Great Location
Finished Basement
3 Bedrooms, 3 Washrooms
Great Investment
Opportunity
Or
Owner
Occupancy
VIP Pricing
Early Bird Specials
Contact us
For More
Details
Uthayn Aiyadurai-Broker
Cell:416-999-3555
aiya14@gmail.com
www.sivahomes.com
HOMELIFE
HIGHER STANDARDS
Jayanthi Sritharan-Broker
Cell:416-918-5872
jayanthi.sritharan@gmail.com
www.jrealhomes.com
www.sellgtahomes.ca
HOMELIFE
HIGHER STANDARDS
Seelan Siva Aiyadurai-Broker
Cell:416-451-0271
seelansiva@gmail.com
www.sivahomes.com
HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Road, Scarborough,ON. 416-321-6969
This is not intended to solicit buyers or sellers currently under contract with a broker.
*Each office independently owned and operated
We Work As A Team To Serve You Better



சிங்கர் 1902-1991 ஒரு யூதர். நொபெல் பரிசு பெற்றவர். முதலில் யிட்டிஷ் மொழியில் எழுதியவர். பின் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்தவர். போலந்து நாட்டில் பிறந்தவர். பின்னர் அமெரிக்காவில் குடியேறியவர். சிறுகதை, நாவல் ஆசிரியர். தந்தையார் ஒரு றாபை-சமய குரு. தான் சிறுவனாக இருந்த காலத்தில் தந்தையின் இருப்பிடத்தில் நடந்த கதைகள் என்று பல கதைகள் எழுதியிருக்கிறார். அதில் ஒன்று இது)



# ஒரு வழக்கும் ஒரு விவாகரத்தும்

**ஐசாக் ப்பாஷெவிஸ் சிங்கர்**

**ஆங்கிலம் வழி தமிழில் என்.கே.மகாலிங்கம்**

என் வாசகர்களே, நாய்களைப் பற்றி நான் அதிகம் அக்கறை கொள்வ-தில்லை என்பதை ஏற்றுக் கொள்கிறேன். உண்மை என்னவென்றால் அவைகளை எனக்குப் பிடிப்பதே இல்லை. நுட்பமான நேர்மையுடன் சொல்வதென்றால், நான் அவற்றை வெறுக்கிறேன். என்னைப் பொறுத்தவரை, - என்னுடைய இரு பாட்டன்மார்கள்வரை அவர்களும் அந்தப் பார்வையையே கொண்டிருந்தார்கள்-நாய் என்றால் கீழினத்தைச் சேர்ந்தது, அண்டிப் பிழைப்பது, ஊளையிடுவது, கசப்பானது, இழிகுணமுடையது. அப்படி. ஒரு நாயில் என்ன இருக்கிறது, விரும்புவதற்கு?

நாயைப் பற்றி என்னிடம் சாதகமான கருத்துக்கள் இருந்திருந்தாலும், அந்த வழக்குக்குப் பிறகு அவையும் காணாமல் போயிருக்கும்.

என்னுடைய அப்பாவின் வழக்காடு மன்றக் கதவு திறந்தபோது, உயர்ந்த, பெரும் தோற்றமுடைய ஒரு மனிதன் உள்ளே நுழைந்தான். அவன் நரைநிற மேலங்கியும் நரைநிற காற்சட்டையும், நரைநிற தொப்பியும் அணிந்தி-ருந்தான். அவனுடைய உடுப்புக்கள் முழுவதும் மாத் தூசி படிந்திருந்தது. அவன் பெயர் ஷான்வெல். அவன் எங்கள் வீதியிலுள்ள பாண் தயாரிப்பாளன். வழக்காடு மன்றம் இருந்த அவ்வீதியில் இருந்தது, பாண் தயாரிப்பு நிலையம். அங்கே நீண்ட அங்கி மட்டும் அணிந்து, காலில் நைந்துபோன சிலிப்பருடனும், தொப்பிக்குப் பதிலாக தாளில் செய்த முக்கோண வடிவ குல்லாயுடனும் அவன் அங்குமிங்கும் நடந்து கொண்டிருப்பதை அங்கே பார்க்கலாம்.

கூலிக்கு வேலை செய்யும் பாண் தயாரிப்பாளர்கள் அதிக பணம் உழைத்தார்கள். ஆனால் சென்வெல் அவனுடைய தந்தையின் பாண் தயாரிப்பு நிலையத்தில் வேலை செய்தான். அதனால் அவனுக்கு மற்றவர்களிலும் பார்க்கக் கொஞ்சம் கூடுதலாகவே பணம் வழங்கப்பட்டது. அவனின் தோல் வெளிறிய நிறம். கண்கள் நீலம். குத்துச் சண்டை வீரர்களின் தடித்த கழுத்தும் தோள்களும். பெரிய பெரிய பாளமாக மாப் பிசைவான். அந்த வேலை பலம் குறைந்த மனிதனை இலகுவாக ஒடியச் செய்து விடும்.

அவன் என் அப்பாவின் மேசைக்கு அருகே போய் அதைத் தன் கையால் குத்திச் சொன்னான். ‘றாபை, நான் ஒரு வழக்குப் போட வேண்டும்.’

‘யாருக்கு எதிராக?’

‘என் மனைவிக்கு எதிராக.’

‘இரு. என்ன விசயம்?’

‘நாய் அல்லது நான். இரண்டில் ஒன்று. எங்கள் வீட்டில் இரண்டும் ஒன்றாக இருக்க முடியாது,’ என்று கத்தினான்.

‘யார் இந்த நாய்?’

‘அது ஒரு ஆளில்லை. உண்மையான ஒரு நாய்.’ சான்வெல் உரத்துக் கத்தினான்.

‘அவள் எங்கள் வீட்டிற்கு ஒரு நாய் வேணுமென்றாள்-அவள் பெரும் தீயையே மூட்டி விட்டாள். அந்த நாயை அவள் கொண்டு வந்த பிறகு அவளுக்கொரு கணவன் இருக்கிறான் என்பதை மறந்து விட்டாள். நான் செய்யும் வேலையே மிகவும் கஷ்டமானது. முதுகு முறியும் வேலை. றாபை நான் பாண் செய்பவன். மக்கள் உண்பார்கள் என்பதற்காக நான் பாண் செய்வேன். இரவு முழுவதும் பாண் செய்யுமிடத்தில் தொடர்ந்து வேலை செய்வேன். ஆனால் காலையில் நான் வீட்டுக்கு வரும்போது என் மனைவிக்குப் பதிலாக நாய் என்னிடம் பாய்ந்து வருகிறது. அது குரைத்துக் கொண்டு என்னில் பாய்கிறது. அது என்னிடம் கொண்ட நேசத்தினால் அதைச் செய்கிறது என்கிறார்கள். ஆனால் எனக்கு அதன் நேசம் தேவையில்லை. அது சின்னஞ் சிறிய குட்டி நாயாக இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் இந்த நாய் ஒரு கரடியைப் போன்றது. காட்டு விலங்கு. எங்கள் வீட்டிற்கு ஒரு காட்டு விலங்கு தேவையில்லை. அது ஒரு சிங்கத்தைப் போல தன் வாயைத் திறக்கிறது. அது கடினமானதொரு எலும்பைச் சப்பித் துப்பி விடக் கூடியது. அது குரைக்கும்போது என் காதுகளை நான் பொத்தி விட வேண்டும்.

அதிர்ஷ்டவசமாக, அது என் மூக்கைக் கடித்துத் துப்பி விடவில்லை. அதன் தொல்லை அப்படிப்பட்டது. அது எனக்கெதற்கு? என் அப்பாவிடம் நாய் இருக்கவில்லை.

‘கிராமத்தில் அல்லது நாட்டுப் புறத்தில் இருந்தால் நாய் பயனுள்ளதாக இருக்கும் என்று சொல்வார்கள். ஆனால் வோர்ஷோவில் எனக்கு எதற்கு நாய்? யாரும் என்னிடம் வந்து களவெடுக்கப் போவதில்லை. என் கதவில் மிகத் திறமான பூட்டு இருக்கிறது. ஏழைகள் என் வீட்டிற்கு வருவார்கள். என்னால் இயன்றதைக் கொடுப்பேன். ஒன்றிரண்டு வெள்ளி நாணயங்களையும், ஒரு துண்டுப் பாணையும், ஒரு சர்க்கரைக் கட்டியையும் கொடுப்பேன். ஆனால் இந்த நாய் எல்லாப் பிச்சைக்காரர்களையும் கலைத்து விடுகின்றது. என்னுடைய வீட்டுச் சுவரில் ஒரு தர்மப் பெட்டி தூங்கிக் கொண்டிருக்கிறது. அதிலுள்ள காசை ஹசிடி யூத அங்கத்தவர் ஒருவர் வந்து எடுத்துச் செல்வார். அவரும் இப்போ வருவதை நிறுத்திக் கொண்டார். அந்த நாயைக் கலைக்காவிட்டால் அது யாருடைய அங்கியின் விளிம்பு ஓரத்தையாவது கடித்துத் தொலைக்கப் போகிறது. இந்த ஹசிடி யூத அங்கத்தவர்கள் நாய்களைக் கண்டால் பயப்படுகிறவர்கள்.

‘அவளுக்கேன் நாய்?’ என் தந்தை கேட்டார்.

‘றாபை, ஏன் என்று எனக்குத் தெரிந்ததைப் போல உங்களுக்கும் தெரியும். என்னுடைய குடும்பத்தில் ஒருவரிடமுமே நாய் இல்லை. தான் தன்னந்தனியனாக இருப்பதாக அவள் முறைப்பாடு செய்தாள். எங்களுக்குப் பிள்ளைகள் இல்லை. அதனால் வீட்டில் அவ-ளுக்கு உயிருள்ள ஒன்று தேவைப்பட்டது, ஒரு பூனையையோ கிளியையோ எடுத்து வளர் என்று நான் சொன்னேன். குறைந்தது, ஒரு பறவை பாடும். கிளி பேசும். நாய் என்ன செய்யும்? றைபை, எனக்குச் சொல்-லுவதற்கு வெட்கமாக இருக்கிறது. அவள் அதைக் கொஞ்சுகிறாள். அவள் அதை எந்த நேரமும் கொஞ்சுகிறாள். மற்றவர்கள் சொல்லுவது மாதிரி எனக்கு அதில் பொறாமையில்லை. ஆனால் அவள் அதைக் கொஞ்சுகிறதை பார்க்கும்போது அது என்னை ஆழமாகப் புண்படுத்துகிறது. றைபை, அவளுக்காக நான் நீண்ட நேரம் கஷ்டப்பட்டு வேலை செய்கிறேன். ஆனால் அவள் அந்த நாயைத் தான் கொஞ்சுகிறாள். அவள் அதைக் கொஞ்சுவதையோ தட்டிக் கொடுப்பதையோ அதன் நலத்தைப் பற்றிக் கவலைப்படுவதையோ நிறுத்துவதே இல்லை. அது நல்லாகச் சாப்பிடுவதில்லை. அது நல்லாக நித்திரை கொள்வதில்லை என்கிறாள்.

‘றைபை, ஒரு இரும்பை எடுத்து அதன் கபாலத்தைப் பிளந்து விடுவேன் என்று அவளுக்குச் சொன்னேன். அவள் வீட்டை விட்டுப் போய் விடுவாள் என்று கத்துகிறாள். றைபை, எனக்கு றாபானிய நீதி வேண்டும்! நாயா மனிதனா முக்கியமானது என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும்.’

‘கடவுள் மன்னிக்கட்டும். இந்த ஒப்பீடு எந்த வகையானது. ஒரு நாயையும் மனிதனையும் ஒப்பிடுவது!’

அவனுடைய மனைவி அங்கே அழைக்கப்பட்டாள். கட்டுறுதியான அவள் உள்ளே வந்தாள். உயர்ந்த தனங்கள், பலமான கைகள், மொத்தமான தொடைகள். கிழிந்த சப்பாத்துக்கள். நடக்காமல், சப்பாத்துக்களின் அடிப்பாகம் நிலத்தில் இழுபட வந்தாள். கடினமான இனிப்பொன்றைச் சூப்பிக் கொண்டு இருந்தாள். சிவந்த நிற ஒரு பக்க சொக்கு இயங்கிக் கொண்டிருந்தது. அவளுடைய முகத்திலிருந்த சலிப்பு அலை பாய்ந்து கொண்டிருந்தது.

‘உனக்கு நாய் ஏன் தேவை?’ என்று என் தந்தை கேட்டார். ‘யூதர்கள் கொடிய நாயை வைத்திருக்கக் கூடாது என்று தல்முட் சொல்கின்றது.’

அது கொடிய நாய் அல்ல, றைபை. இதிலும் பார்க்க நல்லது’ என்று அவள் தன் குட்டையான தடித்த விரலால் கணவனைக் காட்டிச் சொன்னாள்.

விவாதம் நீண்ட நேரம் நீடித்தது. அந்த பிய்ச்சுப் புடுங்கலில், அவள் தன் நாயை நேசிக்கும் அதேவேளை தன் கணவனை வெறுக்கிறாள் என்பதை சின்னப் பையனான எனக்கும் தெளிவாகவே புரிந்தது.

என் தந்தையார் கணவனையும் மனைவியையும் சமரசப்படுத்துவதில் இறுதியில் வெற்றி பெற்றார். நாயை விற்க வேண்டும் அல்லது யாருக்காவது கொடுத்து விட வேண்டும் என்று அந்தப் பெண்ணை அவர் ஏற்றுக் கொள்ளச் செய்துவிட்டார் போலத் தெரிந்தது. ஆனால் ஒரு மாதங் கூட ஆவதற்கு முன் அந்த மனிதன் திரும்பவும் வந்தான்.

‘றாபை, எனக்கு விவாகரத்து வேண்டும்’

‘நீ யார்?’

‘நான் பாண் செய்பவன். ஒருமுறை இங்கு வந்திருக்கிறேன். என் மனைவி இன்னும் அந்த நாயை வைத்திருக்கிறாள். போனமுறை றாபை தீர்மானித்தீர்கள்...’

‘ஓம், எனக்கு நினைவிருக்கிறது.’

‘றாபை, முன்பு போலத்தான் இப்பவும் இருக்கிறது. அதைவிட மோசம். அந்த நாயுடன் அவள் கட்டிலிலும் படுக்கிறாள். நான் உங்களுக்குப் பொய் சொல்கிறேன் என்றால், இந்த இடத்திலேயே விழுந்து இறந்து விடுவேன்.’

என் தந்தை திரும்பவும் அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு வர ஒருவரை அனுப்பினார். அதிசயத்திலும் அதிசயம் என்னவென்-றால் அவள் அந்த நாயுடன்தான் வந்தாள். அதுவொரு மிகப் பெரும் நாய். தடித்த, குள்ளமான சப்பை முகமுடைய நாய். மொத்தமான கால்கள். காட்டுமிராண்டித்தனமான கண்களிலிருந்தும் மேல்நோக்கிப் புடைத்த நாசியிலிருந்தும் வெளிவந்தது வெஞ்சினம், வெறுப்பு, வாழும் ஒவ்வொரு உயிரியின் மேலும் உள்ள அவமதிப்பு. என் தாயைப் பார்த்துக் குரைத்தது. அந்தப் பெண் அந்த நாயை முற்றத்திலுள்ள அறைக்குள் கொண்டு செல்ல எத்தனித்தாள். என் அம்மா உறுதியாகச் சொன்னாள், ‘அங்கே ரோறா இருக்கிறது.’

நான் அடுக்களைக்குள் சென்று அந்த நாயைப் பார்த்ததும், அச்சமும் களிப்பும் கலந்த கலவை உணர்வு எனக்கு ஏற்பட்டது. ஒரு பொலிஸ்காரன் எங்கள் மாடியறைக்கு வந்தபோது போன்ற உணர்வு. ஒரு துண்டுப் பாணை எடுத்து அதற்குப் போட்டேன். அது அதை முகர்ந்து பார்த்தது. அதன் சுருங்கிய நெற்றியிலிருந்த மண்ணிறக் கண்கள், காய்ந்த பாணை நான் ஒரு விருந்துணவாக

தொடர்தல் 92ம் பக்கம்

எண்ணுவதில்லை என்று சொல்வது போல் இருந்தன!

அந்த நாயை நான் தட்டிக் கொடுக்க விரும்பினேன். ஆனால் அதன் உறுமுதல் எனக்குப் பயத்தைக் கொடுத்தது. அது நாயில்லை. நாலு காலுள்ள யூத வெறுப்பாளன். செமித்திக் இன எதிராளி. ஒவ்வொரு கை காலும் மூர்க்கத்தனத்துடன் வலுச் சண்டைக்குப் போவதற்கு தயாராக இருந்தது. முற்றத்தில் நாய் குரைப்பதைக் கேட்ட என் தந்தையும் பயந்து விட்டார். படித்துக் கொண்டிருந்த புனித நூலை மூடி விட்டு, தன் யார்மெல்கே தொப்பியை எடுத்து காற்றுக்காக ஆட்ட ஆரம்பித்தார்.

'என்ன அது?' என்றார்.

'அது அவளுடைய புருஷன்' என்றான் சான்வெல் என்ற பாண் செய்பவன்.

வழக்கமாக, என் தந்தை வழக்காளிகளிடை



யே சமாதானம் செய்ய முயல்வார். ஆனால், இந்த முறை வெளித் தோற்றத்திற்காகவே அப்படிச் செய்தார். நம்புவதற்குக் கஷ்ரமாக இருந்தாலும் விவாகரத்துக்கு அவள் சம்மதப்பட்டாள். ஒரு நாய்க்காக தன் கணவனை இழக்கச் சம்மதித்தாள்.

எங்கள் வீட்டில்தான் அந்த விவாகரத்து நடைபெற்றதா என்பது எனக்கு நினைவில்லை. ஆனால் விவாகம் இல்லாமலாக்கப்பட்டது. அவள் தன் மாடியறையில் தளபாடங்களுடன் இருந்தாள். ஒரு நாய் ஒரு கணவனை வீட்டை விட்டு கலைத்து விட்டது என்ற செய்தி அந்த வீதி முழுவதையும் குமுறச் செய்தது. பெண்கள் அவளைப் பற்றி பல மோசமான கதைகளைச் சொன்னார்கள். ஒவ்வொருவரும் பல இரகசியங்களை குசு குசுத்துக் கொண்டார்கள்.

செய்தியைக் கேட்ட ஒரு பெண் முகஞ் சிவந்துபோய் 'இல்லவே இல்லை' என்று சத்தமிட்டாள்.

மற்றவள் 'ஓம்' அப்படித்தான்' என்று பதிலுக்குச் சொல்லி விட்டு இன்னொரு இரகசியத்தைச் சொன்னாள்.

'பூ, அது எப்படிச் சாத்தியம்?'

'எல்லாம் சாத்தியம் தான். என் அன்புக் குரியவளே. அவள் நரகத்தில் உழலட்டும்!'

'நான் முன்பொரு ஒரு கதை கேள்விப் பட்டேன். உயர்குடிப் பெண்ணொருத்தி ஒரு ஆண் குதிரையுடன் வசித்து வந்தாளாம். அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்ததாம். அது அரைவாசி மனிதக் குழந்தையாகவும் அரைவாசி குதிரைக் குட்டியாகவும் இருந்ததாம்.'

'அதை அவர்கள் என்ன செய்தார்கள்?'

'அது உடனே செத்து விட்டதாம்.'

'இதெல்லாம் நடப்பது அவர்களுக்கு அதிக செல்வம் இருப்பதால்தான். அப்படி இருப்பதால்தான் அவர்கள் பைத்தியக்காரத்தனமாக நடக்கிறார்கள்.'

விவாரத்துச் செய்தபின் சான்வெல்லின் வாழ்க்கை கீழ் நோக்கிச் சென்றது. குடிக்க வெளிக்கிட்டான். இரவில், பெரிய பெரிய உருண்டையாக மாக்குழைக்கும் போது சோக கீதங்களைப் பாடினான். அவனுடைய குரல் அந்தக் குடிசன முற்றம் முழுவதும் கேட்டது. அயலவர்கள் தங்களை அது எழுப்பி விடுகிறது என்று முறையிட்டார்கள். சிலர் அவனுக்கு இன்னொரு பெண்ணைப் பார்த்துக் கட்டி வைக்க வேண்டும் என்று விரும்பினார்கள். எல்லா வகையான பெண்களும் அவனை மிகையாகப் புகழ்ந்தார்கள். ஆனால் அவன் அவர்கள் எவரையுமே விரும்பவில்லை.

'ஒரு நாய் வீட்டை விட்டு என்னைக் கலைக்க முடியுமானால், எனக்கு எல்லாவற்றிலுமே உண்மையில் பயம் தான்.'

எங்கள் வீதியிலிருந்த சாராயக் கடைக்கு அவன் அடிக்கடி வருவதை பார்த்திருக்கிறார்கள்.


நாயுடன் இருந்த அந்தப் பெண் இன்னொரு ஆணைப் பிடித்துக் கொண்டாள். அவன் பழங்கள் விற்பவன். அவன் அவளை விரைவில் மணந்து கொள்ளப் போகிறான் என்று பேசிக் கொண்டார்கள். அவன் நாய்களை விரும்புவன் என்றும் சொல்லப்பட்டது. அவன் விவாகரத்துச் செய்த அவளைச் சந்திக்க வரும்போது அவளுக்கு சொக்லேற்றும் ஜெல்லி பீன்ஸ் இனிப்பும் கொண்டு வந்தான். அத்துடன் நாய்க்கும் ஒரு துண்டு இறைச்சியோ எலும்போ கொண்டு வந்தான். அந்தப் பெண் வேலையாக இருந்தால் நாயை வாரில் கட்டி அது அவனுக்கு முன் நடக்க, அவன் பின் தொடர்ந்து நடைப்பயிற்சிக்குப் போவான். சிலவேளை நாயை வாரிலிருந்து அவிழ்த்து விடுவான். நாய், நடைபாதையில் வாரை இழுத்துக் கொண்டு, விழிப்புடன் அவனைப் பின் தொடரும்.

அப்படி நடந்து போய்க் கொண்டிருக்கையில் ஒருமுறை பயங்கரமான ஒரு நிகழ்ச்சி நடந்தது. பாண் தயாரிக்கும் சான்வெல் அந்த நாயின் பக்கம் வந்து கொண்டிருந்தான். வெறுங்காலில் சிலிப்பரும் வெள்ளை மேலங்கியும் அணிந்திருந்தான். தலையில் ச்சீஸ் கேக் ஒன்றையும் சமநிலையில் விழாமல் பிடித்திருந்தான். அவன் குடலிறக்க நோயால் அவதிப்பட்டதால் இப்பொழுது தன் தந்தையின் கடையில் பெரும் துண்டு துண்டாக மாக் குழைப்பதைக் கைவிட்டிருந்தான். அதனால் அவன் இப்பொழுது கேக் செய்யும் கடையில் வேலை செய்தான். அக்கடைக்காரன் அவனை ஒரு கஃபேக்கு ச்சீஸ் கேக் ஒன்றைக் கொண்டு போய்க் கொடுத்து வர அனுப்பியிருந்தான்.

அந்த நாய் அதன் எதிரியான முன்னைய எசமானைக் கண்டதும் மிகப் பயங்கரமான வெறியுடன் அவனைத் தாக்கியது. சான்வெல் தலையிலிருந்து ச்சீஸ் கேக் விழுந்தது. நாய் சான்வெல்லின் பாதத்தைக் கடித்து விட, அவனும் நாயின் தொண்டையைப் பிடித்து திருகினான். பழ வியாபாரி ஒரு கத்தியை உருவி சான்வெல்லைக் குத்தினான்...

இவை எல்லாம் ஒரு சில நிமிடங்களில் நடந்து முடிந்து விட்டன. பொலிஸ்காரன் தன் ஊதியை ஊதினான். யாரோ ஒருவன் முதலுதவிப் படைக்குத் தொலைபேசினான். நிலத்தில் இரத்த நிறக் கண்களுடன் நாய் இறந்து கிடந்தது. ச்சீஸ் கேக் சிதறிக் கிடந்தது. ஒரு மனிதன் இரத்தத்தில் கிடந்தான். நாயின் நாக்கு, கறுப்பாக வாய்க்கு வெளியே ஒரு சேலைத் துண்டு கிடப்பது போலக் கிடந்தது.


முதலுதவி வாகனத்தில் ஒரு படுக்கையில் சான்வெல் கிடத்தப்பட்டான். ஒரு வைத்தியன் அவன் பாதத்திலும், பழ வியாபாரி குத்திய தோளிலும் கட்டுப் போட்டான். பொலிஸ்காரன் பழ வியாபாரியின் கைகளில் விலங்கு மாட்டி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றான். கோட்டி செத்த நாயை எடுத்துக் கொண்டு போனான். செருப்புப் போடாத சிறுவர்களும் சிறுமிகளும் ஒரு சில வயது முதிர்ந்தவர்களும் ச்சீஸ் கேக் துண்டுகளை எடுத்துச் சாப்பிட்டார்கள். நாய்ச் சொந்தக்காரி என்ன நடந்தது என்று கேள்விப்பட்டு வீதிக்கு ஓடி வந்து நாய்க்காகப் புலம்பி அழுதாள். அழுதது, சிலவேளை அவளின் காதலனுக்காகவும் இருக்கலாம். அப்பொழுது வீதியிலிருந்த பெண்கள் அவளில் பாய்ந்து அவளைப் பிடித்து அடித்தார்கள். அவள் தலையிலிருந்து ஒரு கைப்பிடி மயிரையும் பிய்த்து எடுத்து விட்டார்கள். வீதி முழுதும் இருந்தவர்கள் போனவர்கள் யாவரும் தங்கள் கோபத்தில் அவளை மொத்தினர்.




அந்தக் கதை எப்படி முடிந்தது என்று அறிய நீங்கள் விரும்பலாம். அதை இங்கே சொல்கிறேன். கேளுங்கள். பழ விற்பனையாளன் இரண்டு கிழமைகள் மறியிலில் இருந்து விட்டு, எங்கோ மறைந்து விட்டான். சான்வெல் இரண்டு நாட்கள் ஆஸ்பத்திரியில் இருந்து வீடு திரும்பினான். பிறகு பழைய மனைவியின் வீட்டுக்கு அவளைத் தேற்றச் சென்றான். திரும்பவும் அவர்களுக்கிடையே சமாதானமும் ஏற்பட்டது. திருமணத்திற்கு பின் இனிமேல் வீட்டில் நாய் வைத்திருப்பதில்லை என்று மனைவி சபதம் செய்தாள்.

நாய்க்குப் பதிலாக இரண்டு மஞ்சள் நிறக் குருவிகளும், பச்சை நிறக் கிளிகள் இரண்டும் வாங்கினாள். சான்வெல் தன் தந்தையின் கடையில் திரும்பவும் வேலை செய்ய ஆரம்பித்தான். அவன் இப்பொழுது பெரும் பெரும் மாக் குழைவுப் பிண்டங்களைச் செய்வதில்லை. பாண் துண்டுகளை சுட்டடுப்புக்குள் தள்ளுவதும் அவற்றை வெளியே எடுப்பதும் தான் அவனின் வேலை. சான்வெல்லின் மஞ்சள் குருவிகள் நாள் முழுவதும் கலகலத்துக் கொண்டும் பாடிக் கொண்டும் இருந்தன. கிளி யிற்றிஷ் மொழி பேசியது. திரும்பவும் எல்லாமே நல்லாகவே நடந்தது. என் பார்வையில், சொர்க்கமும் பூமியும் நாய் வெல்லக் கூடாது என்பதாகச் சபதம் பூண்டது. அதை நிருபிப்பதற்கு சாட் கட்யா என்ற கதை எங்களிடம் இருக்கிறது. அதையே நாம் பசோவர் செடார் யூதத் திருவிழாவின் போது கடைசியாகப் பாடுவோம். அங்கே நீதியின் பக்கம் நாய் அமர்ந்திருக்கும். ஆனால் பிரபஞ்ச முதல்வர் நாயை அடிக்கும் தடி பக்கத்தில் இருக்க அமர்ந்திருப்பார். நீதியோ நீதியில்லையோ நாய் எமது அலுவல்களில் குறுக்கிடக் கூடாது.

அதுதான் றேப் ஹெச்செல் என்ற றைபை முதன் முதல் சொன்னதாக உள்ளது. அவர் சொல்லியிருக்கா விட்டாலும் அதை அவர் சொல்லிருக்கலாம்.



mahalingam.k@thaiveedu.com



# ஆயுட் காப்புறுதி

• Life Insurance • Critical Illness Insurance • Mortgage Inurance • RESP



*Rate based on 30 year female Elite non smoker
(10 years term insurance)

ஒரு மில்லியன் டொலருக்கு
**$ 27.00** மாதாந்தம்*

*எதிர் காலத்தின் நிம்மதியான வாழ்விற்க்கு*
*நிகழ்காலத்திலேயே முடிவு எடுங்கள்...*

Critical Illness Insurance

**25 விதமான கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதி பணம் பெறமுடியும். நோய் ஏற்படாவிடின் கட்டியபணம் முழுவதும் மீளப்பெறமுடியும்.**



A PARTNER YOU CAN TRUST

**DILIP KUMAR GOVINDASAMY**
Insurance Adviser

**Cell: 647-227-2683**
Office: 416-759-5453
Fax: 416-759-6220
E-mail: dilipg26@gmail.com
759 Warden Ave, Toronto, ON M1L 4B5


INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

**REFER YOUR FRIENDS** & GET REWARDS!!!


"Excellent Rates with Quality Services"




## WELCOME TO 33 ORLEANS CIRCLE, WOODBRIDGE, WESTON & MAJOR MACKENZIE



Family Room



Foyer




Upgraded Kitchen




**Price: $979,000**

- 1 Year New, 4 Bedrooms, 50 ft Lot
- Stucco/Stone Front Executive Home
- 4 Full Washrooms plus Media Room on 2nd Floor
- 3363 Sq.Ft Home by Fieldgate
- Upgraded Strip Hardwood Floor Throughout
- Double Garage plus Direct Access to Home
- Upgraded Kitchen, Granite for Counter/Centre Island & Backsplash
- Separate Entrance to Basement, Main Floor Laundry
- Fencing is Paid for & will be completed in 2 Weeks.
- Extras: Stainless Steel Appliances (Fridge, Stove, Built-In Dishwasher & Rangehood).
- Front Load Washer & Dryer, CAC, CVAC, All Elfs,
- California Shutters throughout. Garage Door Openers & Remote.



Breakfast Area



Living Area

COLDWELL BANKER
Coldwell Banker Exceptional
Real Estate Services, Brokerage
Phone : 416-497-9794

Contact: V. Logan, Broker Direct: 416-410-1620 E-mail: vlogan599@yahoo.com Web: www.monsoonhomes.com

## வாத்தியார் வீட்டிலிருந்து வன்கூவருக்கு... 23

K.S. பாலச்சந்திரன்

# தவளையும் தன்வாயால் கெடும்

"வாக்குக் கொடுத்தல்" என்பது இலகுவான சங்கதி. ஆனால் கொடுத்த வாக்கை சரியாக நிறைவேற்றுவ- தென்பது மகாகடினம் என்று தெரியாமல் வாக்குத்கொடுத்து விட்டு சிரமப்பட்டிருக்கிறேன். (தேர்தல் அடிக்கடி வரும் இந்தக்காலத்தில் வாக்கு, வாக்கு என்று அடிக்கடி சொல்லப்போக, அந்த 'வாக்கைச் சொல்கிறேனாக்கும் என்று நினைத்துவிடாதீர்கள்)

நல்லகாலமாக என்வாழ்நாளில் இதுவரை ஆகக்குறைந்தது கிராமச்சங்கமல்ல, கூப்பன் சங்கத் தேர்தலில் கூடப் போட்டிபோடும் வாய்ப்பு வந்ததில்லை. அப்படி வாய்ப்புக் கிடைத்து, வாக்குகள் கிடைப்பதற்காக, வாக்காளர்களுக்கு வாக்குறுதிகளை தமிழ் நாட்டு அரசியலவாதிகள் போல அள்ளிவீசி, இறுதியில் திண்டாடியிருப்பேன். அவ்வளவு இளகிய மனம் எனக்கு.

இப்படித்தான் வாடைக்காற்று காலத்திலே யார், யாருக்கெல்லாமோ வாக்கு கொடுத்தேன். ஏப்படித் திண்டாடித் தவித்தேன் என்பதுதான் நான் சொல்லப்போகும் கதை. "ஏன் வாடைக் காற்று காலத்திலே வாக்குக் கொடுத்தீர்கள்? சோளகத்தில் கொடுத்திருக்கலாமே? என்று புரியாமல் கேட்காதீர்கள். வாடைக்காற்று என்று படத்தைச் சொன்னேன்.

வாடைக்காற்று திரைப்படத்திலே நான் நடிப்பதாக ஆரம்பத்தில் யாரும் நினைக்கவேயில்லை. நான் கூடத்தான். எப்படியோ இலங்கையிலிருந்த நடிகர்களின் பெயர்களெல்லாம் அடிபட்டு (அவர்கள் அடிபடவில்லை. அவர்களின் பெயர்கள்தான் அடிபட்டன) கடைசி கடைசியாக தேர்வுக்குழுவினர் என்னைத் தெரிவு செய்தார்கள். அத்தோடு விட்டிருக்கலாம். விதி யாரை விட்டது?

என்னை உதவி டைரக்டர் என்றும் பிரகடனப் படுத்திவிட்டார்கள். செய்தி பரவியதும், தெரியாதவர்களும் என்னைப்பார்த்து சிரிக்கத் தொடங்கினார்கள், தலையைச் சரித்து, சிகரெட்டை எறிந்து வாயில் கவ்விப்பிடித்து, உதடுகளில் சுட்டுக்கொண்டார்கள். சிலர் நேரடியாகவே விஷயத்துக்கு வந்தார்கள். அதாவது நடிக்க 'சான்ஸ்' கேட்டார்கள். நானும் எங்கள் தொகுதி எம்.பி போல, எல்லோருக்கும் 'பார்க்கலாம்' என்று சொல்லி வைத்தேன்.

இத்தனைக்கும் நான் எனது சொந்த ஊரை விட்டு தள்ளி வேறு ஒரு ஊரில் தற்காலி- கமாக அந்த நாட்களில் வசித்து வந்தேன். ஒருநாள் எங்கள் ஊரிலிருந்து ஒரு இளைஞன் என்னைத் தேடிவந்தார். அவரது குடும்பத்தையே எனக்கு தெரியும். அவரது தந்தையும், எனது பெரியப்பாவும் நெருங்கிய நண்பர்கள். இன்முகத்துடன் வரவேற்று உபசரித்தேன்.

அதற்கு பிறகு அவர் செய்ததுதான் எங்களை (என்னையும், வீட்டுக்காரரையும்) கதிகலங்க வைத்தது. எந்தவிதமான முன்னறிவித்தலுமின்றி, விறாந்தையில் அவர் இருந்த கதிரையில் இருந்து 'விருட்'டென்று எழுந்தார்.

எழுந்த வீச்சுடனே, எங்கள் விறந்தைச்சுவரிலே, பாய்ந்து, பாய்ந்து வெறுங்கை முஷ்டியினால் குத்தினார். குத்துக்கள் என்றால் சாதாரண மானவையல்ல. ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்ற அமெரிக்க குத்துச்சண்டைவீரர் முகம்மது அலி தனது எதிராளிக்கு குத்திய குத்துக்களுக்கு ஒப்பானவை.

நாங்கள் வாடகைக்கு இருந்த வீடு பழங்காலத்து வீடு. இவரது குத்தினால் சுண்ணம்புப் பூச்சு படை, படையாக கழன்று விழுந்தது. குசினியில் நின்ற எனது மாமி, குத்துக்கள் யாருக்கு விழுகின்றன என்று பார்க்க பதறி ஓடிவந்தவ, பயததுடன் ஜன்னல் சீலை இடைகளுள்ளால் ஒட்டிப்பார்த்துக் கொண்டிருந்தார்.

அத்தோடு அவர் விட்டாரில்லை. ஒன்றன்பின் ஒன்றாக உடற்பயிற்சி விளையாட்டுக்கள் செய்து காட்டினார். ஒரு கையில் நின்றார். ஒரு தலையில் நின்றார். (மன்னியுங்கள் பதட்டத்தில் சொல்லி விட்டேன். ஒரு தலை தானே?) நான் இரண்டு காலில் நிற்கும்போதும் அவ்வளவு உசாராக நிற்க மாட்டேன்.

இத்தனைக்கும் எங்கள் வீடு, இணுவிலில் றோட்டுக்கரையில் இருந்தது. (தெரிந்தவர்களுக்கு தெரியும்). இவரது விளையாட்டுக்களைப் பார்க்க, மருதனாமடச் சந்தைக்கு போகிறவர்களும், வருகிறவர்களுமாக சனம் சேர்ந்து விட்டது. கூட்டத்தைக் கண்டவுடன் அவர் உற்சாகமடைந்துவிட்டார்.

அவர் ஒரு பிரம்மாண்டமான மோட்டார் சைக்கிளில் வந்திருந்தார். தான் நிலத்தில் படுத்திருக்க, அந்த மோட்டார் சைக்கிளை தனது நெஞ்சின் மேலே ஏற்றி, என்னை ஓடச் சொன்னார். அந்த 'உருப்படி'யை நேராக நிமிர்த்தி வைத்திருக்கவே என்னால் சாத்தியமில்லா- மல் போக அந்த திட்டம் கைவிடப்பட்டது.

இத்தனை அட்டகாசத்துக்கு பிறகு, தன்னை 'வாடைக்காற்று' படத்தில் ஒரு 'ஹீரோ'வாக போடச்சொல்லி கேட்டார். அத்தோடு "அந்த பாத்திரம் நான் செய்ய முடியாது என்று நினைக்கிறீர்களா?" என்று அடிக்கடி, கை முஷ்டிகளை முறுக்கிக்கொண்டே கேட்டார்.




"செய்வியள் என்று சொல்லுங்கோ" என்று மனைவி, மறைவிலிருந்து அவசரமாக சைகை செய்தார். அவ சொல்லாவிட்டாலும் நான் அப்படித்தான் சொல்லியிருப்பேன். சொன்னேன்.

"நிச்சயம்தானே" என்று இரண்டுமுறை வாக்கு மூலம் என்னிடம் வாங்கிக்கொண்டு, அவர் தனது ராட்சத மோட்டார் சைக்கிளில் ஏறி, காற்றாய் பறந்து போனார். அத்தோடு எங்கள் வீடும் சகஜநிலைக்கு வந்தது. றோட்டில் கூடியிருந்த கூட்டமும் கலைந்தது.

கால ஓட்டத்தில் அவரையும், அவருக்கு கொடுத்த 'வாக்கை'யும் மறந்துவிட்டேன். பேசாலையில் படப்பிடிப்பு ஆரம்பமாகி மும்- முரமாக நடந்துகெண்டிருந்தது. அந்த 'கராட்டி' காரரை மனதில் வைத்து கேட்டிருந்தாலும் தயாரிப்பாளர் சம்மதித்திருக்க மாட்டார். காரணம் எல்லா முக்கிய பாத்திரங்களுக்கும் நடிகர்களை தேர்ந்தெடுத்து விட்டார்கள். அவர்களும் பேசாலைக்கு வந்து விட்டார்கள். எனவே நான் அவர் பெயரைக்கூட உச்சரிக்க- வேயில்லை.

படப்பிடிப்பின் இறுதிநாள். சண்டைக்காட்சிகள் படமாக்கிக் கொண்டிருந்தோம். யாரோ என்னை தேடிவந்திருப்பதாகச் சொன்னார்கள். பார்த்தால் அவர். அந்த 'கராத்தே'காரன்தான். என்னிடமிருந்து எந்த பதிலும் இதுவரை வராமலிருந்ததால், யாரையோ விசாரித்து, பேசாலைக்கே வாடகைக்காரில் வந்து விட்- டான் மனிதன். படப்பிடிப்பு அன்றையோடு முடிகிறசங்கதியும் ஆளுக்கு தெரிந்துவிட்டது. எனக்கு தொண்டையில் ஈரம் வற்றிப்போய் விட்டது.

சமாளிக்க முயன்றேன். யார் யார் மீதெல்லாம் பழியைப்போட்டேன். சண்டைக்காட்சியில் ஒரு கட்டத்தில் நடிக்கச்சொல்லி மன்றாடிக் கேட்டேன். ஆள் 'இறுங்காமல்' நின்றார். கதாநாயகனாக நடிக்க நினைத்தவன் 'எடுபிடி'யாக நடிப்பேனா என்றார். எப்படியோ எல்லாம் முடிந்தது.

"அண்ணை ஊருக்குத்தானே போகிறீங்கள். என்னோடை காரிலை வாருங்கோவன்' என்று மிகப்பணிவாகச் சொன்னார். எனக்கு பரமசந்தோசம். 'இவன் அல்லவா மனிதன். மன்னித்ததும் காணாமல் கார்சவாரியும் அல்லவா தரச்சம்மதிக்கிறான்' என்று நினைத்துக் கொண்டு அவரோடு புறப்பட்டேன். போதாக் குறைக்கு என்னோடு வாடைக்காற்றில் நடித்த ஒருத்தரும் "நானும் வருகிறேனடா... தம்பி" என்று எங்களோடு காரில் தொற்றிக்கொண்டார்.

இரவு புறப்பட்டோம். ஆரம்பத்தில் எல்லாம் சௌக்கியமாகத்தான், இருந்தது. மிகுந்த சிநேகபாவத்துடன் எங்களோடு கதைத்து கொண்டு வந்தார். சாமமாகிக்கொண்டிருந்தது. அடர்த்தியான காட்டுப்பகுதியால் கார் சென்று கொண்டிருந்தது. பின்சீற்றில் நானும், என்னோடு வந்தவரும் உறங்கிக்கொண்டிருந்தோம்.

இடைநடுவில் எங்கேயோ கார் நின்றது. மெதுவாக விழித்துப் பார்த்தோம். முன்சீற்றில் டிரைவருக்குப் பக்கத்தில் இருந்த 'எங்கள் கதாநாயகன்' எங்களைக்கேட்டார். "இது என்ன இடம் தெரியுமா?" என்று.

நாங்கள் பதில் சொல்லமுதல், அவரே தொடர்ந்தார். "இது முருங்கன் காடு. உங்களை என்ன செய்தாலும் யாருக்கும் தெரி- யப்போவதில்லை. எல்லாம் 'றெடியாகத்தான்' வந்திருக்கிறேன். என்று சொல்லவும், "தம்பி பகிடிக்குத்தானே சொல்கிறீர்கள்" என்று சமாளிக்கப் பார்த்தேன் அவன் 'அழுங்கு'ப் பிடியாக நின்றான்.

எங்கள் இரண்டுபேரையும் அந்த இருட்டுக்குள் இறங்கி நிற்கச்சொன்னான். என்னோடு தொற்றிக்கொண்டு வந்தவர், பாவம் அழவே தொடங்கிவிட்டார். "தம்பி... எனக்கு ஒன்றும் தெரியாது. என்னை விட்டிடுங்கோ... நான் பிள்ளைகுட்டிக்காரன்." என்று மன்றாடினார். (ஏதோ எனக்கு பிள்ளைகுட்டி இல்லாதது மாதிரி) விட்டால் மனுஷன் முருங்கனில் இருந்து கால்நடையாக வவுனியாவுக்கு ஓடியே போய்விடுவார் போல இருந்தது.

நான் துணிவாக நின்றேன் என்றில்லை. பயத்தைக் காட்டிக் கொள்ளாமல் நியாய, அநியாம் சொல்லிப்பார்த்தேன். கொஞ்சநேரம் கேட்டுவிட்டு காரை எடுக்கச்சொல்வான்.

சிறிது தூரம் போனபின் மீண்டும் 'வேதாளம் மரத்தில் ஏறிவிடும்'. காரை நிறுத்தச்சொல்லி, மீண்டும் எங்களை இறங்கச்சொல்லி, அதே எச்சரிக்கைகள், அதே வெருட்டல்கள். இப்படி ஊர்வலம் தொடர்ந்தது. என்னோடு கூடவந்தவர் ஏறக்குறைய ஒப்பாரி வைக்காத குறை.

இரவிரவாக இந்த 'சித்திரவதை' நடந்து, கடைசியாக வெளிச்சம் தெரிந்தது. நாங்கள் வவுனியாவை அண்மித்து விட்டோம் என்று தெரிந்தது. எல்லையில் எங்களை இறங்கச் சொல்லி, ஓடப் பணித்தான். திரும்பிப்பாராமல் ஓடினோம். வவுனியா பஸ்நிலையத்தில்தான் நின்று திரும்பிப்பார்த்தோம்.

அன்றையோடு நான் 'வாக்கு' கொடுப்பதை நிறுத்தியிருந்தால் பரவாயில்லை. கூடப்பிறந்த பழக்கம். தொடரத்தான் செய்தேன்.




ksbala@thaiveedu.com


B.V.F
BRIGHT VISION FINANCIAL
CORP.
Securing your Family's Future
Life insurance · Critical Illness · Disability Insurance · RRSP
Travel Insurance . Mortgage Insurance · Investments · RESP
85 வயது வரைக்கும், எந்த வருத்தம் இருந்த போதிலும் மிகக் குறைந்த மாதாந்த கட்டணத்தில்
Non-Medical & Funeral insurance, மற்றும் Medical Insurance
குடும்ப அல்லது தனி ஆள் ஒருவரின் வருமானத்திற்கேற்ற காப்புறுதி வேண்டுமா?
20க்கும் மேற்பட்ட முன்னணிக் காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து உங்களுக்கேற்ற
காப்புறுதியைத் தெரிவு செய்ய எம்மை நாடுங்கள்.
416 · 844 · 7390
Free quote! House calls also available.
NOW HIRING!
Full time / Part time
Insurance Agents / RESP Rep's / Staff Employees
Free Classes for Agents*
*restrictions may apply
Varna Kanapathippillai, B.Sc.(Eng).
President / Insurance Advisor
416 · 844 · 7390
insurance@brightvisionfn.com
vwww.brightvisionfn.com
Bus 416·623·4937
Fax 416·321·0413
80 Nashdene Road Unit B28
Scarborough, ON M1V 5E4
STANDARD LIFE
Equitable Life of Canada
Desjardins
Canada Life
RBC Insurance
TRANSAMERICA
Manulife Financial
Empire Life
Sun Life Financial


CTR
நட்சத்திர
விழா 2011
JULY 09
JULY 10
MARKHAM FAIR GROUNDS
10801 McCowan Road
416-292-4059
www.ctr24.com
Hot & Fresh pizza pizza
வாகனங்களுக்கு மட்டும் $10.00
உங்களுக்கான நுழைவு
இலவசம்
Main Sponsors
நந்தா உணவகம்
Kipling & Steeles
5010 Steeles Ave. W., Unit 18
Brimley & Steeles
4915 Steeles Ave. E
Bridletown & Finch
3268 Finch Ave. E, Unit 3&4.
416-626-8421
Asok Santhiralingam, B.Sc
Broker
வீடு என்பது கனவல்ல முயற்சியே
Cell: 647-297-2765
Off: 416-290-1200
Century 21
Affiliate Realty Inc.
ABLE ACCIDENT BENEFITS
Tel: 416-293-2111 Fax: 416-293-4996
Wijay Senathirajah(Gobu)
Cell: 416-885-2365
S. Kumar (Cash Point)
Cell: 416-732-9020
S.P. IMPORTERS
தளபாடம், மளிகை, மரக்கறி, மீன்
2861 Lawrence Ave. East
(Brimley & Lawrence)
Scarborough, ON
416-266-3077
TAMILpages.ca
The Mass Tamil Online Advertising Network
Online Advertising Online Directory Mobile App
WWW.TAMILPAGES.CA
YOUR NEED is OUR DEED
Program Sponsors
UNITY INJURY CLAIMS
Are you Injured?
We can help you
885 Progress Ave. #201
416-439-9000
Siva Nagamany
Sales Representative
647-289-0091
A 1 Master COUNTER TOPS INC.
Kitchen and Bath
Over 15 years Experience
Manny-416-757-2875,
416-726-1850
S.K.T. Jewellers & Textiles
2062 Lawrence Ave. E. Scarborough
416.615.0197 / 416.615.0262
pratheepkathy@gmail.com
EASY HOME BUY
KIRUBA KIRUSHAN
FOR ALL YOUR HOUSING NEEDS CALL
416-414-5562
J.R.B GROUP INC.
All your financial needs
Sai R.R. Rajkumar
Cell: 416-319-9042
BUS: 416-613-2933
Thana Yoganathan
416-418-5749


4th Annual
Summer Festival
2011
GTA SQUARE
INDOOR MALL
FREE ADMISSION
A SPRING IN SUMMER
FUN FUN FOR EVERYONE
AUGUST 6 & 7, 2011
12.00 Noon - 9.00pm
★ Live musical Show ★ Fashion Shows ★ Talent Shows
★ Dance Programs ★ Game and Play area for Kids
SIDE WALK SALE
5215 Finch Ave. East (@Middlefield) Scarborough, ON M1S 0C2
கோடையில் ஓர் வசந்தம்


Thank You!
எங்களை மனமார வாழ்த்திய
அனைவருக்கும்
உளமார்ந்த நன்றி!
THE LAW OFFICE OF
KESARY ARUMUGARAJ
Barrister and Solicitor
1585 Markham Road, Suite 205, Scarborough Ontario M1B 2W1
Tel: 416 551 1133 Fax: 416 551 1135
Email: kesarya@kesarylaw.ca Web: www.kesarylaw.ca
Real Estate | Personal Injury Claims | Last Wills | Power of Attorney


from the firm foundations of creative photos
la photographie est un art
digimedia Creations
Karuna Photography
416.467.4952
• Wedding Photography
• Complete Online Workflow
• Online Slideshows
• DVD Slideshows
• Custom Designed Digital Albums
• Parent Albums/ iPhone Galleries
• Online Digital/Album Proofs
• E-Com Site
• Canvas and Metal Printing
www.facebook.com/digimediaphoto
www.digimediaphoto.com

### யாழ்ப்பாண அரசு - 05

# இருள் பரவும் காலம்

- நிமால் நாகராஜா -



போர்த்துக்கேய அரசனின் முன்னால் மிகவும் தொலைதூரத்தில் இருந்து வந்திருந்த இரு தகவல்கள் பிரிக்கப்படாமல் இருக்கின்றன. அதில் ஒன்று இறந்து போன மன்னன் எதிர்மன்ன சிங்க குமாரன் எழுதிய கடிதம். தன் மறைவுக்குப் பின்னால் தன் சின்ன மகனை அரசனாக அங்கீகரிக்க, அனுமதி கோரி நின்ற கடிதம் அது. மற்றைய கடிதமோ கொழும்பில் இருந்த பறங்கித் தளபதியால் எழுதப்பட்டிருந்த இரகசியக் கடிதம். யாழ் அரசின் குழப்ப நிலை குறித்த அவசரத் தகவல் அது. சங்கிலி குமாரனின் சதி, யாழ் மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தியதை அந்தத் தகவல் அறிவித்து நின்றது. போர்த்துக்கேய அரசனின் இதழோரத்தில் ஒரு மெல்லிய புன்னகை மலர்ந்து போனது. "இந்தத் தருணத்திற்காக எவ்வளவு காலம் காத்திருந்தோம்", அவனது உதடுகள் முணுமுணுக்கின்றன. கொழும்பில் இருக்கும் பறங்கித் தேசாதிபதிக்கு நீண்ட நெடிய கடிதம் ஒன்று அரசனால் வரையப்படுகின்றது.

இங்கே யாழ் அரசில், சங்கிலி குமாரனுக்கு எதிரான கருத்துக்கள் பரவுகின்றன அல்லது பரப்பப்படுகின்றன. மக்கள் மூன்று பிரிவுகளாக பிரிகிறார்கள். ஒரு பிரிவு சங்கிலி குமாரனை ஆதரிக்கிறது. இன்னோர் பிரிவு எதிர்மன்ன சிங்க குமாரனின் மூன்று வயது பாலகனை அரசனாக்க விரும்புகிறது. மற்றைய பிரிவோ போர்த்துக்கேயர் தங்களை ஆள்வதே பொருத்தமான வழி என எண்ணுகிறது. வலிமையாய், வெல்லப்பட முடியாத வீரத்துடன் வீறாப்புடன் விரிந்திருந்த யாழ் அரசு இப்போது உறுதி குன்றி, உட்பூசல்கள் பெருகி அடிமைப் படுத்த துடிக்கும் அந்நியரை மௌனமாய் வரவேற்கும் நிலைக்கு வந்திருக்கின்றது.

நல்லூர் இராசதானியில் சங்கிலி குமாரன் அமர்ந்திருக்கின்றான். நாட்டிலே நடப்பது எல்லாம் அவனுக்கு நன்றாகவே தெரிந்திருக்கிறது. குழப்பங்களை முடிவுக்கு கொண்டு வந்து அரசின் பழைய கீர்த்தியை மீள நிலை நாட்டும் அளவுக்கு அவன் பெரும் ஆளுமை கொண்டவன் அல்ல. ஆயினும் அந்நியராட்சியை தடுக்க வேண்டும் என்ற அவா கொண்டவன். நீண்ட யோசனைக்குப் பின் தனது நம்பிக்கைக்குரிய அரச குலத்தவர்கள் சிலரை அரண்மனைக்கு அழைக்கின்றான். மிக மெல்லிய குரலில் சில உத்தரவுகள் அவர்களுக்கு இடப்படுகின்றன. நீண்டதூர பயணம் ஒன்றிற்கு அவர்கள் ஆயத்தமாகின்றார்கள்.

இந்தியாவின் தஞ்சாவூர் நகரில், அழகிய சிற்பங்களைக் கொண்ட பெரும் தூண்களால் தாங்கப்படுகின்ற பிரமாண்டமான அரச மண்டபம் ஒன்று விரிகின்றது. மிகப் புலமை வாய்ந்த அறிஞர்கள், சங்கீத விற்பன்னர்கள், அரசியல் தேர்ச்சி பெற்ற மந்திரிகளால் அந்த அரங்கம் நிறைந்து வழிகின்றது. அரண்மனையிலே நடுநாயகமாக வீற்றிருக்கிறான் பெரும் வீரன் ஒருவன். தஞ்சாவூர் நாயக்கர்களின் வரிசையில் மிகப் புகழ்பெற்ற மன்னனும், வீரத்தில் மட்டுமன்றி பல மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவனும், சங்கீதத்தை தன் மூச்சாக கொண்டவனும், அதன் காரணமாக "ஜயந்த சேனா" எனும் புதிய இராகம் ஒன்றை சொந்தமாக சிருஷ்டித்தவனுமான இரகுநாத நாயக்கனின் முன்பாக சங்கிலி குமாரன் அனுப்பிய அரச குல தூதுவர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள்.

"பேரரசனே! உங்கள் கருணையும், உதவியும் எங்களுக்கு தேவையாயிருக்கிறது. எங்கள் ஈழ நாட்டிலே பறங்கியர்கள் பெரும் குழப்பத்தை உண்டு பண்ணுகிறார்கள். நாட்டை அபகரிக்க நயவஞ்சக சூழ்ச்சிகள் செய்கிறார்கள்." சங்கிலி குமாரனின் தூதுவர்கள் சோகம் ததும்பியபடி சொல்லி முடிக்கின்றனர்.

பறங்கியர் என்ற சொல்லைக் கேட்டதும் இரகுநாத நாயக்கனின் தடித்த மீசை ஒரு தரம் துடித்து அடங்குகிறது. அவனது முகம் உணர்ச்சிகளற்ற ஒரு பாறையாய் இறுகிப் போகிறது. அதற்கு பெரும் காரணம் ஒன்று இருக்கிறது. தென்னிந்தியாவில் இடம்பெற்ற மிகப்பெரிய போர்களில் ஒன்றான தோப்பூர் போர் முடிந்து தஞ்சாவூர் நாயக்கன் படைகள் தளம் திரும்பியிருந்த காலம் அது. போரின் விழுப்புண்கள் வீரர்களின் தோள்களிலும், மார்புகளிலும் இன்னும் மாறாதிருந்த நேரம் அது. பத்து இலட்சம் போர்வீரர்கள் பங்குபற்றிய அந்த மிகப் பாரிய போரில் இரகுநாத நாயக்கனின் எதிரிகளோ பெருந்தொகையானோர். மதுரை, செஞ்சி, திருநெல்வேலி மன்னர்களுடன், அப்போது தமிழக கரையோரங்களில் கால் பதித்திருந்த பறங்கியர் படையும் சேர்ந்து இரகுநாத நாயக்கனுக்கு எதிராக போர் புரிந்தது. எண்ணிக்கையில் குறைந்திருந்தாலும் நாயக்கப்படைகள் வீராவேசமாக போரிட்டன. யுத்தத்தின் முடிவில் எதிரி மன்னர்கள் மண்டியிட்டார்கள். பறங்கியர் தோற்றோடினர். இரகுநாத நாயக்கன் பெரும் வெற்றி பெற்றான். அன்றிலிருந்து பறங்கியர் மீது தீராத கோபம் கொண்டான் இரகுநாத நாயக்கன்.

பறங்கியர் யாழ் அரசை கைப்பற்றுவது அவனது இராச்சியத்தின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் என்பதை பழுத்த இராசதந்திரியான இரகுநாத நாயக்கனுக்கு யாரும் சொல்லத் தேவையில்லை. சங்கிலி குமாரனுக்கு உதவி செய்ய நாயக்கன் முடிவு செய்கிறான். மண்டபத்திலே, வீரர்கள் வரிசையில் அமைதியாய் அமர்ந்திருந்த இரு பெரும் தளபதிகளை நோக்கி அவன் பார்வை விரிகிறது. தோப்பூர் வெற்றிக்கு பெரும் காரணமாக இருந்த தளபதி கெம் நாயக்கனும், உபதளபதி வருணகுலத்தானும் மன்னனின் பார்வையின் பொருளை நன்றாகவே விளங்கிக் கொள்கின்றனர். அடுத்த நாள் தளகர்த்தன் வருணகுலத்தான் தலைமையில் 5,000 போர்வீரர்கள் கடல் கடக்கிறார்கள்.

வருணகுலத்தானின் படை யாழ் அரசின் குழப்பங்களை முடிவுக்கு கொண்டு வருகின்றது. சங்கிலி குமாரன் அமைதியாய் ஆட்சிக் கட்டிலில் அமருகிறான். நாயக்கனின் படை தொடர்ந்தும் நல்லூரில் நிலை கொண்டிருந்தது.

சங்கிலி குமாரன் பறங்கியருடன் சற்று ஒத்துப் போகத் தான் விரும்புகின்றான். ஆயினும் பறங்கியருக்கு திறை கொடுப்பதை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இடையிடையே திறையிறுப்பதும், பெரும்பாலும் சாக்கு போக்கு சொல்வதுமாக அவன் காலத்தை கடத்துகிறான். பறங்கியர்களுக்கு நாயக்கனின் படைகள் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தும் தங்கியிருப்பது முற்றாக பிடிக்கவில்லை. யாழ் அரசை கைப்பற்றுவதற்கான போர் முஸ்தீபுகளில் கடந்த ஒரு வருடமாக ஈடுபட்டிருக்கும் அவர்களுக்கு வருணகுலத்தான் ஒரு பெரும் தலையிடியாக இருக்கிறான். நாயக்கனின் படைகளை மீண்டும் நாட்டுக்கு அனுப்ப சங்கிலி குமாரனிடம் கேட்டுப் பார்த்தும் ஏதும் நடக்கவில்லை. வேறு வழியின்றி தங்கள் படைபலத்தை அதிகரிக்கின்றார்கள்.

அது 1620ம் ஆண்டு. யாழ் அரசின் மீதான பறங்கியரின் இறுதிப் படையெடுப்பு தொடங்குகிறது. போர்த்துக்கேய அரசனால் விசேடமாக தெரிவு செய்யப்பட்ட பிலிப் டி ஒலிவேறா என்பவன் பறங்கியர் படைக்கு தலைமை தாங்குகிறான். இவன் ஒரு பெரிய வீரன். ஒரு நாட்டை நிர்வகிக்கும் திறமை கொண்டவனும் கூட.

பறங்கியரின் போர்க்கோலத்தை கண்ட சங்கிலி குமாரன் சற்றும் அச்சம் கொள்ளவில்லை. அந்நியரின் பேச்சுக்கு கட்டுப்பட்டு, பெயரளவில் ஒரு அரசனாக இருப்பதை சத்திரியனான அவன் வெறுக்கிறான். வருணகுலத்தானின் படைகளை பெரிதும் நம்பியபடியே சங்கிலி குமாரனும் நிர்ப்பயத்துடன் போருக்கு எழுகின்றான்.

பறங்கியர் படை வண்ணார்பண்ணையிலுள்ள பெரும் பனங்கூடல் ஒன்றில் வருணகுலத்தானின் படைகளை சந்திக்கிறது. வார்த்தைகளில் வடிக்க முடியாத அளவுக்கு பெரும் போர் நிகழ்கின்றது. ஒலிவேறா பெரும் துணிவுள்ளவன். போரின் முன்னரங்கில் உயிர் வெறுத்து யுத்தம் செய்யக் கூடியவன். அத்துடன் பறங்கியர் படையின் ஆயுத வலிமையும் அதிகம். பறங்கியர் படை முன்னேற, நாயக்கனின் படைகள் பின்வாங்க வேண்டியதாயிற்று.

வருணகுலத்தானின் படைகள் பின்வாங்குவதை அறிந்த சங்கிலி குமாரன் தனது குடும்பத்துடன் கப்பலேறி தஞ்சாவூருக்கு தப்பியோட முனைகிறான். இருள் சூழ்ந்து கொண்டிருந்த முன்னிராப் போதில் அவனது கப்பல் பயணத்தை தொடங்குகிறது. அவன் மனம் சொல்லவொண்ணா துயரத்தால் சோர்ந்து கிடக்கின்றது. காற்று மெதுவாகவே வீசிக்கொண்டிருந்த அந்த இரவு நேரத்தில் தன் சொந்த நாட்டை விட்டு தோற்றோடிக் கொண்டிருக்கின்ற தன் நிலைமையை எண்ணி அவன் வருந்திக் கொண்டிருந்த நேரத்தில் விதி அவன் மேல் பெரும் சாபம் ஒன்றை வீசி எறிந்தது. திடீரென காற்று திசை மாறி அடிக்கத் தொடங்குகின்றது கப்பல் புறப்பட்ட இடமான பருத்தித்துறைக்கே மீண்டும் வந்து சேர்கின்றது. காற்றின் திசை மாறும் வரை கடல் பயணம் சாத்தியமில்லை.

அடுத்த நாட்காலை தப்பியோடுதல் மீண்டும் தொடங்குகிறது. வேதாரண்யத்தின் கரையோரப் பகுதியான கோடியக்கரை எனும் துறை நோக்கி சங்கிலி குமாரனின் கப்பல் பாய்களை விரித்து பாய்ந்து செல்கின்றது. ஆனால் திடீரென கடலின் தொடுவானத்தில் மூன்று போர்த்துக்கேய கப்பல்கள் புதிதாக முளைக்கின்றன. சங்கிலி குமாரனின் கப்பல் துரத்தப்படுகின்றது. முடிவில் யாழ். அரசின் கடைசி அரசனான சங்கிலி குமாரன் சிறை பிடிக்கப்படுகின்றான்.

கைது செய்யப்பட்ட சங்கிலிகுமாரன் இந்தியாவின் கோவா நகரிற்கு கொண்டு செல்லப்படுகின்றான். அங்கே அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகின்றது. பொது மைதானம் ஒன்றில் சிரச்சேதம் செய்யப்படுவதற்காய் கண்களும், கைகளும் கட்டப்பட்டபடி மன்னன் கொண்டு செல்லப்படுகின்றான். போர்க்களத்தே வீரனாய் வீழ்வதையே பெருமையாய் எண்ணும் வீரப் பரம்பரையில் விதை கொண்டவன் அவன். கண் கட்டியபடியே தனது கடைசிக் கணத்தை எதிர் கொள்வதை அவன் மனம் ஒப்பவில்லை. தனது கட்டுக்களை அவிழ்த்துவிடச் சொல்கிறான். வீரத்தோடும், மானத்தோடும் மரண தண்டனையை ஏற்றுக் கொள்ளும் அவனது சிரம் நிலத்தே வீழ்கிறது. மன்னனுடன் சிறை செய்யப்பட்ட அத்தனை அரச குடும்பத்தவர்களையும் பறங்கியர் கத்தோலிக்க மதம் மாற்றுகின்றனர். புகழ் மிக்கதோர் வரலாறு முடிவுக்கு வருகிறது.

ஒலிவேறா பெரும் ஆரவாரத்துடன் யாழ். அரசின் தேசாதிபதியாகின்றான். மிக நீண்ட காலமாக பறங்கியர் கண்ட கனவு பலித்துப்

தொடர்தல் 100ம் பக்கம்

போகின்றது. ஆயினும் யாழ் அரசை அவ்வ ளவு எளிதில் அடக்கி விட முடியாது.

போரில் பின்வாங்கிய நாயக்க தளபதி வருண குலத்தான் புதிய படையுடன் பறங்கியரை மீண்டும் நல்லூரில் எதிர்கொள்கிறான். சுத்த வீரனான வருணகுலத்தானின் தாக்குதல் மிகவும் அகோரமாயிருந்தது. இருதரப்பும் வெற்றி தோல்வியின்றி மிக நீண்ட நேரம் போர் செய்தது. போர் இரு நாட்களாக நீடித்து பெரும் அழிவுகளை இருதரப்பிற்கும் அளித் தது. முடிவில் நாயக்கன் படைகள் மீண்டும் ஒரு தடவை தோல்வியுறுகின்றது. இப்போரில் தளபதி வருணகுலத்தான் கொல்லப்படுகிறான்.

பல களங்களில் வெற்றிவாகை சூடித் தந்த, தன் வீரம் செறிந்த தளபதியின் மரணத்தால் இரகுநாத நாயக்கன் கொதித்தெழுகிறான். சங்கிலி குமாரனின் அரண்மனை சதியின் போது அரசகேசரியுடன் கொல்லப்பட்ட பெரிய மீகாப்பிள்ளையின் மகனான சின்ன மீகாப் பிள்ளை ஆராச்சியின் தலைமையில் படைப் பிரிவுகள் தஞ்சாவூரில் தயார்படுத்தப்படுகின்றன.

இதுவரை தமிழிலே தோன்றிய போர் இலக் கியங்களிலே இணையற்றது என இன்றும் சிலாகிக்கப்படுகின்ற ‘கலிங்கத்து பரணி’ பாட தமிழகத்து செயங்கொண்டாருக்கு கால்கோ ளாக அமைந்த சோழ, கலிங்க பெரும் போரினை தலைமையேற்று நடாத்தி கலிங் கத்திற்கு பேரழிவையும், சோழ பேரரசிற்கு வியத்தகு வெற்றியையும் ஈட்டித் தந்த, புகழ் பூத்த வீரனான கருணாகர தொண்டைமான், பின்னாட்களில் “இலங்கையையும் வென்று வா” என குலோத்துங்க சோழனால் பணிக் கப்பட்டு பெரும் படையுடன் இறங்கிய இடமாதலால் அவன் பெயராலேயே அழைக் கப்படுகின்ற தொண்டைமானாறு நீரேரியில், சின்னமீகாப்பிள்ளை ஆராச்சி இரகுநாத நாயக்கனின் வலிய படையுடன் வந்திறங்கு கின்றான். பாரிய படை நல்லூரை நோக்கி நகரத் தொடங்குகின்றது.

இதேநேரம், ஒலிவேறாவின் ஆட்சி மீது தொடர்ச்சியாக நாயக்கனின் படைகள் போர் தொடுப்பதை கண்ட போர்த்துக்கேய கொழும் புத் தேசாதிபதி, தெயிக்சேறா எனும் இரக்க மற்ற, கொடிய தளபதியின் கீழ் உதவிப் படை ஒன்றை யாழ் அரசை நோக்கி அனுப்பி வைக்கின்றான். இந்தப் படை வரும் போது வழியெங்கும் செய்த அட்டூழியங்களை வர லாறு சோகத்துடன் பதிந்து வைத்திருக்கின் றது. கண்ணில் பட்ட அத்தனை மக்களையும் வாள்களுக்கு இரையாக்கிய இந்தப் படை கர்ப்பிணி பெண்களின் வயிறுகளை கிழித்தும், தாய்களின் மடிகளில் பாலருந்திக் கொண் டிருந்த சின்னஞ்சிறு மழலைகளை தங்களின் வாள் நுனியால் குத்தி கொலை செய்தபடியும் முன்னேறியது. உதவிக்கு படை வந்ததால் உற்சாகமடைந்த ஒலிவேறா சின்ன மீகாப் பிள்ளையின் படையை பின்வாங்கி ஓடச் செய்கிறான்.

தோல்வியுற்று ஓடிய சின்ன மீகாப்பிள்ளை மீண்டும் படை திரட்டிக் கொண்டு 1620ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் போர் ஒன்றை மீண்டும் தொடக்கினான். முதல் நாள் போரில் தமிழ் வீரன் எறிந்த ஈட்டி ஒன்றினால் பறங் கியர் தளபதி ஒலிவேறா படுகாயமடைந் தான். யுத்தத்தில் தமிழரின் கை ஓங்கத் தொடங்குகின்றது. யாழ்ப்பாணத்தில் வசித்து வந்த பறங்கிப் பெண்கள் எல்லாம் பயந்து போய் கடவுளை பிரார்த்திக்கும் அளவுக்கு தமிழரின் படை முன்னேறத் தொடங்கியது. ஆயினும், தமிழரின் விதியோ என்னவோ, பறங்கியர் படை ஒருவாறு தோல்வியில் இருந்து மீண்டு தமிழர் தரப்பை பின்வாங் கச் செய்கிறது. இந்த தோல்வியின் பின்பும் இரகுநாத நாயக்கன் மேலும் இருதரம் பெரும் படைகளை அனுப்பி பறங்கியரை துரத்த முயற்சித்தான். ஆயினும் ஆயுத வலிமையில் சிறந்திருந்த பறங்கியரை ஒன்றும் செய்ய முடியவில்லை. யாழ் அரசின் அத்தனை எதிர்ப்பு முயற்சிகளும் ஓய்ந்து போயின.

அடிமைச் சாசனம் நிரந்தரமாகின்றது. யாழ் அரச மக்கள் மௌனமாய் அந்நியர் ஆட்சி யை தலைகுனிந்து ஏற்றுக்கொள்கின்றனர். உக்கிரசிங்க மன்னனால் ஸ்தாபிக்கப்பட்டு, ஆரியச் சக்ரவர்த்திகளினால் எழுச்சி பெற்று, பெரும் வலிமையும், செல்வமும் பெற்றிருந்த யாழ் அரசு தன் இறைமையையும், பெருமை யையும் இழந்து அந்நியராட்சிக்கு அடிபணி கிறது.

அது 1621ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ம் திகதி. பண்ணைக் கரையிலே ‘சீதாரித் தெரு’ என அழைக்கப்பட்ட பறங்கித் தெருவிலே தனது இருப்பிடத்தை இதுவரை வைத்திருந்த ஒலிவேறா நல்லூர் நகரினை தலைநகராக மாற்றுகிறான். தமிழ் அரசர்கள் உறைந்தி ருந்த நல்லூர் நகரிலே அந்நிய தளபதி அரண்மனை கட்டுகின்றான்.

ஒருநாள் அதிகாலை நேரம். பறையின் முழக் கத்தில் மக்கள் விழித்தெழுகின்றனர். யாழ் அரசின் புதிய தேசாதிபதி ஒலிவேறாவின் ஆணையொன்று பறையறிவிக்கப்படுகின்றது. அடிமைப்படும் மக்களுக்கு அந்நியர் தரும் முதலாவது மிகப்பெரும் அன்புப் பரிசு இது. யாழ் அரசு ஒரு கணம் மூச்சுவிட மறக்கின் றது. கருமேகங்கள் கூடி வானம் பொழியத் தொடங்குகின்றது.

நகர மாந்தர் யாவரும் நல்லூர் நகரை நோக்கி நடக்கத் தொடங்குகின்றனர். தொலைதூர கிராம மக்கள் எல்லோரும் மாட்டுவண்டில் கட்டிக்கொண்டு அவசர, அவசரமாக நல்லூ ருக்கு விரைந்து வருகின்றார்கள். இராச்சி- யத்தின் சகல திக்குகளிலும் இருந்து ஒரே யொரு புள்ளியை நோக்கி சனத்திரள் நகர் கிறது. எல்லோர் மனதிலும் ஒரேயொரு கேள்வி தான்.

“அறிவிக்கப்பட்ட ஆணை கனவாகக் கலைந்து விடாதா?”

அரண்மனையின் முகப்பிலே இறுமாப்புடனும், பெரும் திமிருடனும் குதிரை மேல் அமர்ந்தி ருக்கும் ஒலிவேறாவின் காலடிகளிலே அத் தனை மக்களும் வீழ்கின்றார்கள். இரந்து கெஞ்சுகின்றார்கள். தங்களிடமிருந்து எதனை வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு பிறப் பித்த உத்தரவை ரத்துச் செய்ய அத்தனை மக்களும் அழுது கேட்கின்றார்கள். ஒலிவேறா கேட்க மறுக்கின்றான். மக்கள் கூட்டம் ஓவென்று அழத்தொடங்குகின்றது. பலர் மண் ணிலே அரன்டு புரள்கின்றனர். பெரும் சோக மும், விரக்தியும், வெறுப்பும் யாழ்ப்பாண காற்றிலே பரவத் தொடங்குகின்றது.

அழுது என்ன பயன்? அடிமை வாழ்வில் உரிமையைக் கேட்கவா முடியும்?

*(வரலாறு இன்னும் வரும்)*

**உசாத்துணை:**

- யாழ்ப்பாண வைபபமாலை, மாதகல் மயில்வாகனப் புலவர்(1884), முதலியார் குல. சபாநாதன் (1958)
- யாழ்ப்பாண வைபப கௌமுதி, வசாவிளான் க.வேலுப்பிள்ளை, 1918
- யாழ்ப்பாண வைபப விமர்சனம், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், 1928
- யாழ்ப்பாணச் சரித்திரம், முதலியார் செ. இராசநாயகம், 1933
- யாழ்ப்பாண இராச்சியம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1992
- யாழ்ப்பாணக் கோட்டை வரலாறு, கலாநிதி க. குணராசா, 1995
- ஈழத்தவர் வரலாறு, கலாநிதி க. குணராசா, 1996
- A historical relation of the Island Ceylon in the East-Indies, Robert Knox, 1681
- Twentieth Century Impresions of Ceylon, Arnold Wright, Asian Educational Services, 1907
- Fidalgos in the kingdom of Jaffnapatam, O.M. Da Silva Cosme, 1994
- www.ceylontamils.com



nimal.nagaraj@thaiveedu.com



# "Be ready for Job"...

## Diploma Courses
- Diploma in Office Administration
- Diploma in Accounting and payroll

## Engineering Software
- Auto CAD
- SolidWorks
- Revit 2009
- CATIA
- MasterCAM X4
- Pro/Engineer
- MicroStation

## Multimedia & Graphic Design
- Web Design
- Video Editing
- PhotoShop
- Illustrator
- QuarkXpress

## Pre-Exam Courses (For Licence)
- Industrial & Construction Electrician (309A, 442A)

## IT Application Development
- Developing Applications using **JAVA**
- Detabase and Design Development using **ORACLE**
- Software Engineering Principles
- Web Programming (HTML, XHTML, XML)

## Special Certificate Programs
- CNC Operation, Setup & Programing
- School students programs
  - Web Design & Flash
  - 3D Animation
  - Video Editng
  - Auto CAD

## Accounting Software
- MS Office
- Quick Book / ACCPAC / Simply Accounting



2006க்குப்பின் EI அல்லது Maternity எடுத்தவர்கள் இதை இலவசமாகக் கற்பதற்கு தகுதி உடையவராகலாம்

வளமானதோர் எதிர்காலத்தை உருவாக்கிக்கொள்ள தொழிற்கல்வி ஒன்றைக் கற்றுக்கொள்ளுங்கள்

**beta College**
of Business & Technology

1200 Markham Road, # 525
(Markham & Ellesmere)
Scarborough, ON
M1H 3C3

Tel: **416.449-BETA**(2382)

**www.betacollege.ca**

info@betacollege.ca

இலக்கிய உறவுகள் - 7

# மாத்தளை இலக்கிய வட்டம்

- வி. கந்தவனம் -

மாத்தளை இலங்கையின் மலை நாட்டுப் பகுதியின் வடக்கு வாயில். கொக்கோ, இறப்பர் போன்ற பெருந்தோட்டப் பயிர்களின் வளத்தில் திளைக்கும் குபேரக் குறிஞ்சி. செழிப்பான இயற்கையின் சித்திரக் கூடம். சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் ஒற்றுமையுடன் சேர்ந்து வாழும் செம்புலம்.

நகரத்தில் பல பாடசாலைகள். மிகவும் வசதி படைத்தது புனித தோமையார் கல்லூரி. இங்கு நான் ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில் (1958 - 1964) பல அரிய இலக்கிய நெஞ்சங்களுடன் உறவாட நேர்ந்தது. இவர்களுடன் சேர்ந்து மாத்தளையில் மட்டுமல்லாது மலை நாடு முழுவதிலும் மேற்கொண்ட இலக்கிய முயற்சிகள் எனது இளமைக்கால எழுச்சியின் கோலங்கள், தமிழ் உணர்ச்சியின் தாளங்கள்.

1959ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இரு அன்பர்கள் என்னைக் காண வந்தனர். ஒருவர் முதியவர். மற்றவர் என்னிலும் இளைஞர். முதியவர் கவிஞர் சு.சொக்கநாதன். இளையவர் கவிஞர் ஈழவாணன். முதற் சந்திப்பிலேயே நெடுங்கால நண்பர்களைப் போலப் பேசி உள்ளத்தைக் கொள்ளை கொண்டனர். இது எழுத்தாளருக்கே உரிய தனிச் சிறப்பு. தங்களின் கவிதைகள் சிலவற்றைக் தந்து அவை பற்றிய எனது மதிப்பீட்டை அடுத்த சந்திப்பில் கூறும்படி கேட்டுச் சென்றனர்.

சந்திப்புகள் அடிக்கடி தொடர்ந்தன. மூவரும் சேர்ந்து இன்னுஞ் சில இலக்கிய ஆர்வலரின் உதவியுடன் அதே ஆண்டில் மாத்தளை இலக்கிய வட்டம் என்ற அமைப்பைத் தோற்றுவித்தோம். 1960ஆம் ஆண்டில் புனித தோமையார் கல்லூரியில் இலக்கிய வட்டம் நடத்திய பாரதி விழா மாத்தளையிற் பெருஞ் சலசலப்பை உண்டுபண்ணியது. கவியரங்கத்தில் ஈழவாணன் பெண்களின் புதுமைக் கொண்டைகளையும் போலி நாகரிகத்தையும் கிண்டல் செய்து பாடினார். பதிலுக்குப் பட்டணத்து இளம் பெண்கள் கவிஞரைத் தூற்றிப் பேசித் திரியலாயினர். கவியரங்கத்துக்குத் தலைமைவகித்த என்னையும் வம்புக் கிழுத்தனர். எள்ளோடு சேர்ந்து எலிப்புழுக்கையும் காய்ந்த கதையாயிற்று என்பாடு. இருப்பினும் எமது கவியரங்கம் சமூகத்தில் இப்படியொரு தாக்கத்தை ஏற்படுத்தியது குறித்து எமக்கு மகிழ்ச்சியாகவே இருந்தது.

1962ல் மூன்று பேரும் 'முக்கவிஞர் வெளியீடு' என்றவொரு கூட்டமைப்பை ஆரம்பித்தோம். அடுத்த ஆண்டே மூவரும் பாடி வைத்திருந்த கவிதைகளிற் சிலவற்றைத் தொகுத்து "சிட்டுக் குருவி" என்ற மகுடத்தில் வெளியிட்டோம். இத்தொகுதி வெளிவர மிகவும் உதவியாக இருந்தவர்கள் ஜனாப் N.M.M. பஷீர் அவர்களும் பதிப்பாசிரியர் ஜனாப் மு.கீ. அவர்களுமாவர்.

மூவரும் சேர்ந்து மலைநாட்டுப் பகுதிகளிற் பல கவியரங்குகளிற் பங்குபற்றித் தமிழ் மக்கள் மத்தியில் கவிதா இரசனையையும் தமிழ்ப் பற்றினையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் பணியில் ஈடுபட்டோம்.

கவிஞர் சொக்கநாதன் நவாலியூரைச் சேர்ந்தவர், பழைய இலக்கியங்களின் பன்மை அறிந்தவர், பண்பும் பக்குவமும் மிகுந்தவர். அடிக்கடி தனியாகவோ ஈழவாணனுடனோ என்னைச் சந்திக்க அவர் வருவார். புன்முறுவல் பூத்த அவரது முகம், களைப்புடன் கல்லூரியிலிருந்து வரும் எனக்குப் புத்துணர்வை ஊட்டும்.

கவிஞர் சொக்கநாதன் அப்பழுக்கற்ற ஒரு மரபுக் கவிஞர், சொக்க வைக்கும் சொல்வளம் உடையவர், நன்னய நகைச்சுவை அவரது கவிகளில் நாகரிகஞ் செய்யும். 'சிட்டுக் குருவி' என்னுந் தொகுதியில் இடம்பெற்ற இவரது கவிதைகள் அனைத்திலும் இந்த நாகரிகத்தைக் காணலாம். பதத்துக்கு 'அடுக்களைக் கருணை காட்டாய்' என்ற கவிதையிலிருந்து ஒரு பாடல்:

*பஞ்சணையின் மேலெழுந்து படுக்கச் சென்றால்*
*பக்கத்தே நீ படுத்துத் துயிலா வண்ணம்*
*பண்டைநாள் உனைக்கண்டு மயங்கி னோர்தம்*
*செஞ்சொலினைத் திரவியத்தைத் தேகக் கட்டைத்*
*திறமையினைச் செப்பிடநீ மேலும் மேலும்*
*செத்தார்போல் கிடப்பனலாற் சிந்தை நோகேன்*

*வஞ்சமிலா மக்களினை மடவார் பெற்றால்*
*மடியுமவர் கட்டழகு வதனச் செம்மை*
*மதியுமென நீ வகுத்த மடமை ஞானம்*
*நெஞ்சார நீயுணர்த்த மறுத்தோன் றுரையேன்*
*நித்திரைவிட் டெழுந்தவுடன் நேரே நின்று*
*நீள்முஞ்சி காட்டாது நெகிழு வாயேல்.*

தமிழ் இலக்கிய மரபு குறித்துப் பெருமைப் படுவதோடு அதனைப் பேணவேண்டும் என்கின்ற நோக்கமும் உடையவர் கவிஞர் சொக்கநாதன். இந்த நோக்கத்தின் வெளிப்பாடே அவர் மாத்தளை முத்துமாரி அம்மன் மீது பாடிய குறவஞ்சி. பள்ளு, குறவஞ்சி, உலா முதலாய இலக்கிய வடிவங்கள் இக் காலத்துக்கு உதவாவெனக் கருதுவாருமுளர். இவர்கள் மாத்தளை முத்துமாரி அம்மன் குறவஞ்சியைக் கொஞ்சம் படித்துப் பார்த்தல் நல்லது. இந்தக் காலத்துக்கு மட்டுமல்லாது எந்தக் காலத்துக்கும் குறவஞ்சி பொருந்தக் கூடிய இலக்கியமே என்பதனைச் சொக்கநாதன் காட்டியிருக்கும் விதம் பாராட்டுதற் குரியதொன்று.

சொக்கநாதன் வடமுனைவு என்றால் ஈழவாணன் தென்முனைவு. நான் மத்திய கோட்டில் நின்று இவர்களைச் சமதானஞ் செய்த கட்டங்கள் பல. எனினும் இலக்கியக் கொள்கை வேறுபாடுகள் எமது நட்புறவை என்றைக்குமே பாதித்ததில்லை. எவ்வளவுக் கெவ்வளவு விவாதங்கள் செய்தோமோ அவ்வளவுக் கவ்வளவு எமது பக்குவப் படிகள் உயர்ந்துகொண்டே சென்றன, உறவுகள் வளர்ந்துகொண்டே போயின.

கவிஞர் ஈழவாணன் திருகோணமலையைச் சேர்ந்தவர். தருமராஜா என்பது இவரது உண்மைப் பெயர். மாத்தளையில் அப்பொழுது உறவினருடன் தங்கியிருந்தார். பழகுதற்கு இனியவர். முற்போக்குச் சிந்தனையுள்ளவர். ஈழத்துத் தற்கால இலக்கியத்தில் தக்க பயிற்சியுள்ளவர். வீரகேசரி, தினகரன் ஆகிய பத்திரிகைகளின் வார இதழ்களில் வரும் கவிதைகள், கதைகள், விமர்சனக் கட்டுரைகள் என்பவற்றை எழுத்தெண்ணிப் படிப்பார். எமது சந்திப்புகளில் அவைபற்றி அலசுவோம். அவரின் நா ஓயாது, என் செவிகள் சலிக்கா.

ஒருமுறை வீரகேசரியில் வெளிவந்த எனது கவிதை ஒன்றினை நான் பார்க்க முன்னரேயே படித்துச் சுவைத்துவிட்டுப் பத்திரிகையுடன் வந்து சேர்ந்தார். பாட்டைச் சொல்லுச் சொல்லாகப் பிரித்து விமர்சனஞ் செய்தார். கேட்டுக் கிறுகிறுத்துப் போனேன்.

> "சும்மா நாலு வரியைக் கிறுக்கிவிட்டுப் புதுக்கவிதை என்கிறார்கள். 'அக்னி' மூலம் அவர்களை எரிக்கப் போகின்றேன், புதுக் கவிதைக்குப் புதிய சக்தியைக் கொடுக்கப் போகின்றேன்."

*ஆய் எமைப் பார் இவண்*
*மாய் வதைப் பார் வெறும்*
*ஆடுகள் மாடுகள் போல்*

என்று அந்தப் பாடல் தொடங்கும். ஒரு தோட்டத் தொழிலாளி தனது அல்லல் மிகுந்த வாழ்க்கை முறையை மாத்தளை முத்துமாரி அம்மனிடம் முறையிடுவது போன்று அமைந்தது அந்தப் பாடல். கோயிற் கொடியேற்றத்தையொட்டி அப்பாடல் வெளிவந்தது.

கவிஞர் ஈழவாணன் அருமையான ஒரு விமர்சகர். 'துறவி' என்ற புனை பெயரில் விமர்சனக் கட்டுரைகள் எழுதியிருக்கின்றார். 'ஈழத்துக் கவிதை விமர்சனம்' என்றவொரு நூலைத் தான் ஆக்கிக்கொண்டிருப்பதாகவும் அதில் தான் சுவைத்த எனது கவிதைபற்றிய திறனாய்வும் சேர்க்கப்படும் என்றும் கூறியிருந்தார். ஆயினும் அப்படி ஒரு நூலைப் பின்னால் அவர் வெளியிட்டதாகத் தெரியவில்லை. அவர் அனுபவித்துப் பாராட்டிய அந்தக் கவிதையையும் நான் தவற விட்டு விட்டேன்.

தத்துவம் வயது முதிர்ந்தவர்களுக்குத்தான் வரும் என்பர். ஈழவாணன் இதற்கு விதிவிலக்கு. இள வயதிலேயே தத்துவ விசாரணையில் ஈடுபடத் தொடங்கிவிட்டார், கேள்விக்குமேல் கேள்விகள் கேட்பார். நான் அவருக்கு ஓர் உரைகல். சில சிந்தனைகளை முதலில் என்னில் உரைத்துப் பார்த்தபின் தனது கவிதைகளைத் திருத்திய சந்தர்ப்பங்களும் உண்டு. வறுமையின் கொடுமையை இளவயதிலேயே அனுபவித்தவர் அவர். இதனால் அதுவே அவரது தலையாய கவிதைப் பொருளாகவும் அமையலாயிற்று. சிந்தனையைக் கிளறும் அவரது 'அக்கினிப் பூக்கள்' சில பின்வருமாறு.

இதயத் தெரியும் எழுமுச் சிடையே
இளமைகள் சாவதைப்பார்!
இல்லை இவருக்கொரு வாழ்வது என்றால்
இறைவன் இருப்பது மேன்?

*வித விதமான மரகத மணிபோல்*
*வீதியில் அழிவதெனில்*
*வீசிய அக்கினிப் பூக்களால் இறைவன்*
*வெந்தே அழிந்திடுக!*

•

*தப்பித் தலைநிமிர்ந்தால் தலையிடிக்கும்*
*சிறுவாசல்*
*உப்புப் பொதிந்துதிரும் உவர்மணலின்*
*சுவருக்குள்*
*கப்புமிருள் கரைக்கும் கைவிளக்கின்*
*பொற்சுடரில்*
*செப்புக் குடங்களைப்போல் செல்வர்களின்*
*கண்ணுறக்கம்.*

1965ஆம் ஆண்டு கொழும்பு பாடப்புத்தக சபையிற் பணியாற்றும்படி கல்வி அமைச்சு என்னைப் பணித்தது. அதனைத் தொடர்ந்து மாத்தளை இலக்கிய வட்டமும் படுத்துக் கொண்டது.

இடத்தால் பிரிந்தாலும் உறவால் முக்கவிஞர்கள் பிரியவில்லை. சுகவீனம் காரணமாகக் கவிஞர் சொக்கநாதன் அவர்களால் தொடர்ந்தும் இலக்கிய முயற்சிகளில் ஈடுபட முடியவில்லை.

ஈழவாணன் அவர்களுக்கும் வேலையில்லாப் பிரச்சினை. இருப்பினும் அவரது கவிதை ஊற்றுத் தொடர்ந்து பாய்ந்துகொண்டே இருந்தது. 'தினபதி'யில் அவருக்கு வேலை கிடைத்ததைத் தொடர்ந்து திருநெல்வேலியில் திருமணமும் நடந்தது.

கொழும்பில் அவர் குடும்பத்துடன் இருந்த காலத்தில் தனது வீட்டுக்கு ஒருமுறை அழைத்துச் சென்று விருந்து வைத்தார். பேச்சினிடையே அவர் மீண்டும் வேலையில்லாமல் இருப்பது தெரியவந்தது. 'அக்னி' என்ற பெயரில் பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்கப் போவதாகவும் கூறினார். வேலை ஒன்று கிடைத்தபின் தொடங்குவது நல்லது என்று ஆலோசனை கூறினேன். அவர் மனைவியும் அதனை ஆமோதித்தது போலத் தெரிந்தது. ஈழவாணன் ஆலோசனையைப் பொருட்படுத்தவில்லை. மற்றொரு சந்திப்பின்போது 'அக்னி' இதழைக் கையில் வைத்தார். 'நினைத்ததை முடிப்பவன் கவிஞன்' என்றேன். வழமையான குலுங்கல் சிரிப்பைக் கொட்டினார். 'சும்மா நாலு வரியைக் கிறுக்கி விட்டுப் புதுக்கவிதை என்கிறார்கள். 'அக்னி' மூலம் அவர்களை எரிக்கப் போகின்றேன், புதுக் கவிதைக்குப் புதிய சக்தியைக் கொடுக்கப் போகின்றேன்' என்றார் உறுதியுடன்.



kandavanam.v@thaiveedu.com

உங்கள் நிகழ்வுகளைப் பார்ப்பதற்கும் பதிவு செய்வதற்கும்
www.inayam.net

# வீடு வாங்க விற்க அழையுங்கள்!

## Pat Pushpakanthan

*Real Estate BROKER*
*7 time centurian award*
*Hall of fame award*

email: rpushpakanthan@trebnet.com

Full time Broker 14 years Experience*

அனுபவம்! திறமை! நேர்மை!

**416- 490-7653**



**Just Listed**

Corner soak bathtub



Open House
Sat & sun 2 – 4 pm



Markham/ Steeles 4 Bm/ 3 wm
Possible walk-out

**Call Pat 416-894-1187**

**Just Sold 110%**


83 Goodwood




24 Jack Monkman





Scarborough




3 bm/ 2 wsrm
Basmnt apt

OPEN HOUSE..Sun




Ellesmere/B'mount

0% Downpayment Available Only pay 1035/- /mo

**Store Plus Apt**
2000 s q store plus apt with main rd exposure live and do your business $ 292000
Brimly/ Kingston



**Cafetaria for sale**
In office Building take home upto 5000/-
Rent only 889/- (all included)
North York

Richmond hill/ 4 bm/ 4 wsrm



**Restaurant for sale $39 000**
Davis ville /bayview/mountpleasant

Mortgage/ Refinance/Loan ..Interest Rate from 2.1%

**Buy, Sell Homes...Land..Farms ..Cottages..business**

**87 Power Of Sale Homes for sale IN GTA**
From $ 98 000.00


**Richmond Hill**



Brand new home in
Granite counter top
Hardwood floor in main floor and 2nd floor hall way ….. And more
occupancy MID 2011

Luxury 4bm/4 wsrm detached brick home with Library on main floor, walkout bsmnt, Oak stairs…..

Start your own business
Loan available




Markham/Denison
…..retail Location for Sale or Lease close to cotsco canadian tire and Home depot busibess depot

# வீடு, வியாபாரம், காணி

**Mortgage 2.1% ..Refinance also.**

Your SOLD AGENT

*This certificate entitles you to a complementary market analysis of your home's current value*

*Thinking of*

# Buying or Selling Real Estate



3 Bedrooms, 2 Washrooms
Walk To Kennedy Subway!



2+1 Bedrooms, 2 Washrooms
Rear Find With Open Balcony



2+1 Bedrooms, 2 Washrooms
Walking Distance To Ttc, School



3+1 Bedrooms, 3 Washrooms
Great Investment Property!



3+1 Bedrooms, 3 Washrooms
Close To Shopping, Ttc, Schools



3 Bedrooms, 2 Washrooms
Steps To Scarborough Town Centre



3+1 Bedrooms, 4 Washrooms
Fully Renovated Basement!



3 +1 Bedrooms, 2 Washrooms
Very Quiet Neighbourhood



4 Bedrooms, 3 Washrooms
Close To Mount Joy Go Station



***Need New Listing at***

***Scarborough, Markham, Mississauga***

"List your Home with a Professional & Save Money"

**Hariharan Nadarajah**
*Sales Representative*
**Direct: 416-856-4276**
**Office: 416-298-3200**
E-Mail: harisells@gmail.com

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife Today**
Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6

*Call **Hariharan Nadarajah** for information on homes available in area of your choice*

# கொல்லைப் புறத்து அகத்தி இலை நல்லது வறைக்கு

- பொ. கனகசபாபதி -



"அகத்தி ஆயிரம் காய் காய்த்தாலும் புறத்தியே புறத்தி" என்பது ஒரு பழமொழி. இதன் அர்த்தம் என்னவாக இருக்கலாம் என்று மண்டையை உடைத்தேன். கலாநிதி சிவகடாட்சமும் பொதுவாக இந்தத் துறைகளில் நல்ல அறிவு உள்ளவர். எனக்கு நிறையவே கை கொடுத்துள்ளார். அவரிடம் கேட்டேன் அது தான் எனக்கும் புரியவில்லை என்று தான் கூறினார். என்னைப் போன்று கதை அளப்பதில் அவர் ஈடுபடமாட்டார். நாணயஸ்தர். அகத்திக் காய் அவ்வளவாகச் சமையலில் உபயோகிக்கப்படுவதில்லை என்பதைக் குறிப்பதாக இருக்கலாம் என்பது எனது ஊகம். வேறு விளக்கம் ஏதாவது இருந்தால் காதோடு காதாகச் சொல்லி விடுங்கள். கதை அளப்பேன்.

பெரிதாக வளராத செடி. ஆகக் கூடிய உயரம் 5, 6 மீற்றர். வேகமாக வளரக் கூடியது தண்ணீர் கொடுக்காவிட்டாலும் சிணுங்காது. வெய்யில் எறித்தாலும் கலங்காது. வெள்ளம் தேங்கினாலும் நிலை குலுங்காது. ஏதோ கிடைத்ததை வைத்துக்கொண்டு நிம்மதியுடன் சமாளிக்கும் அப்பிராணித் தாவரம். பிரச்சினை இல்லை. ஆனால் ஒரு ஏழு எட்டு ஆண்டுகளுடன் தனது இக வாழ்க்கையை முடித்துக் கொண்டுவிடும். எனவே நமது வளவின் கொல்லேக்கை 'ஒரு ஒதுக்குப் புறமாக நின்று விட்டுப் போ' என அப்பு அதற்கு ஒரு இடம் கொடுத்துள்ளார். அப்பு நிறைவான மாமிசப் பிரியர். ஆகவே அவருக்கு அகத்தி புறத்தி தான். ஆனால் அம்மாவுக்கும் பொன்னுக்குட்டிப் பாட்டிக்கும் அதன் தேவை பெரிதாக இருந்தது. தான் பிறந்த இடம், புகுந்த இடம் கோவில்களின் உற்சவகாலம் மாத்திரமல்லாமல் மற்றைய பிரபலமான கோவில் உற்சவங்கள் எல்லாவற்றுக்கும் அம்மா விரதம். ஆகவே அகத்தி அம்மாவின் சகலி. பொன்னுக்குட்டிப் பாட்டியின் கதை பின்னர்.

தமிழ்வாணனின் 'கல்கண்டு' கொண்டு வந்த நற்செய்தியை அம்மாவுக்கு அண்ணன் சொல்லி வைத்தார். அதாவது கறவைப் பசுக்களுக்கு அகத்தி இலை அதிகம் கொடுத்தால் பால் மகசூல் அதிகரிக்கும் என்ற செய்தி அம்மாவைக் கிணற்றடியிலிருந்து நீரோடும் வாய்க்காலின் பக்கங்களிலே அகத்தி விதைகளை நடவைத்தது. பால் கறக்கப் போகையில் கொஞ்சம் பெரிய வெள்ளிச் செம்புடன் போனார். ஏதிர்பார்ப்பு ஈடேறிற்றோ என்பது வெளிச்சத்துக்கு வரவில்லை.

அகத்தியை மரம் என்று நான் கௌரவம் கொடுத்து எழுதத் தயாராயில்லை. வெறுமனே ஐந்து ஆறு ஆண்டுகள் மாத்திரம் வாழக் கூடிய, விறகுக்கோ, வேறு எதற்குமோ பிரயோசனம் இல்லாத தண்டுடைய அதனைத் வெறும் செடி என்றுதான் அழைப்பேன். அகத்தி உலகின் பெரும்பான்மையான நாடுகளில் காணப்படுகின்ற போதும் நம் நாட்டின் தட்பவெப்ப நிலைக்கு மிக்க உகந்ததான தாவரம். பொதுவாக வெப்பம் உடையதும் ஈரப்பதன் மிக்கதுமான இடங்களில் அதனைக் காணமுடிகிறது. அப்படி என்றால் எங்கு தான் இது போய் குடியமர்ந்தாலும் இங்கு எங்கேயாயினும் தான் ஆதியில் அகத்தி என்ற பெயரில் முதன்முதலாகத் தலைகாட்டியிருக்க வேண்டும் என்பது தெரிந்ததே. இதன் தோற்றுவாய் பற்றி இயற்கையியல் துறைசார் அறிஞர்கள் மலேசியா அல்லது இந்தியா பக்கமாகக் விரலை நீட்டினாலும் எனது அபிப்பிராயம் இதன் பிறப்பிடம் இந்தியாவாகத்தான் சிறப்பாகத் தென்னாடாக இருக்க வேண்டும் என்பதே. தோன்றிற் புகழொடு தோன்றிய பெருமை திராவிடத்திற்கே என்பது எனது நீக்கமற்ற அபிப்பிராயம்.

கர்ணபரம்பரைக் கதை எதுவும் உள்ளதா எனத் தேடினேன். சல்லடை போட்டதில் அதன் கதை, புத்தகம் ஒன்றில் உள்ளதாக அறிந்தேன். புத்தகத்தினைக் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆனால் தாவரத்தின் பெயர் கொஞ்சம் ஊகத்திற்கு உதவுகிறது. கன்னடத்தில் இதன் பெயர் அகஸ்தி. அகஸ்தியருக்கும் இதற்கும் ஏதோ தொடர்பு உள்ளது போலத் தெரிகிறது.

கலாநிதி சிவகடாட்சம் ஒரு பாடல் சொன்னார். யாழ்ப்பாணத்தில் ஆயுர்வேத வைத்தியர்கள் சங்கம் ஒன்றினை அமைத்து 60 ஆண்டுகளுக்கு முன்னர், "அகத்தியர்" என்ற சஞ்சிகை ஒன்றினையும் நடத்தினார்களாம். அதில் வந்த ஒரு பாடல் என்றார்.

*மண்ணில் வேந்தனும், மலையில் முனிவனும்*<br>
*உண்ணில் நல்ல ஊரிடை முதலியும்*<br>
*கண்ணில் மூக்கில் காதில் பிழிந்திட*<br>
*விண்ணில் போன விடங்கள் மீளுமே.*

பாடலைக் கேட்டதும் எனக்கும் உங்களைப் போலவே தலையைச் சுற்றியது. அகத்தியைப் பற்றிக் கேட்டால் இந்த மனுசன் ஏதோதோ சொல்கிறாரே. வாயைப் பிளந்தபடி நின்றேன்.

அந்தக்கால ஆயர்வேத விற்பன்னர்கள் ஒருவருமே தெளிவாக எதனையும் சொல்ல மாட்டார்கள். மறை பொருள் தான் இருக்கும் என்றவர் விளக்கினார். மண்ணில் வேந்தன் என்பது பூவரசு, மலையில் முனிவன் என்பது அகத்தி, ஊரிடை முதலி என்பது கறிமுருங்கை. இவை மூன்றின் இலைகளையும் கண், காது, மூக்கில் பிழிந்து விட்டால் விஷகடியினால் மேலே போனவரையும் மீளக் கொண்டு வந்து விடலாம் என்பதுதான் பாட்டின் பொருள்.

அது போகட்டும் மலையின் முனிவன் என அகத்தியை அழைத்தது அகத்திக்கும் அகத்தியருக்கும் ஏதோ தொடர்பு உள்ளது என்ற எனது ஊகத்தினை வலுப்படுத்தியுள்ளது. மேலும் கன்னியாகுமரியில் உள்ள அகத்தீஸ்வரர் ஆலயத்தில் அகத்தி மரமே தல விருட்சமாகக் கௌரவம் பெறுகிறது. சுமார் 800 ஆண்டுகள் பழமையான இந்தக் கோவிலில் அகத்திய முனிவர் தனது மனைவி லோபமுத்திரையுடன் வந்து வழிபட்டுச் சென்றதாகப் புராணங்கள் சொல்கின்றனவாம்.

ஆனால் உடலின் உட்புறத்து உஷ்ணம் இதனை உண்டால் அடக்கப் படுகின்றமையால் அகத்தி எனும் பெயர் பெற்றது என தமிழறிஞர்கள் கூறுவார்கள். அகம் + தீ = அகத்தீ

வேகமாக வளரக்கூடிய தாவரம் என்றேன். Swamp pea எனப் பொதுப் பெயரால் அழைக்கப்படும் அகத்தியின் தாவரவியல் பெயர் Sesbenia grandiflora. கரும் பச்சைப்பசேல் என்ற கூட்டிலையின் காம்புகளில் நீள்வட்டமான சிற்றிலைகள் காணப்படும். பூக்கள் வெள்ளை நிறமானதாய் பெரிதாய் காணப்படும். காய்கள் தட்டையானவை. விதைகள் அவரை விதை போன்று சிறுநீரகத்தின் தோற்றத்தில் காணப்படும். தாவரமும் அவரைக் குடும்பத்தின் பிரதிநிதியே. Leguminaceae, நமது வயல்களிலே நாம் அறுவடை முடிந்ததும் விளைவிக்கும் சிறு தானியங்கள் பொதுவாகவே அவரைக் குடும்பத்தினைச் சேர்ந்த பயறு, சணல் போன்றவைதான். இதற்குக் காரணம் அவை மண்ணின் செழிப்புத் தன்மையை உயர்த்துகின்றன. அவற்றினது வேர்களில் தோன்றும் சிறு கணுக்களில் (Root nodules) நைதரசன் நாட்டும் பற்றீரியா(Nitrogen fixing bacteria) காணப்படுகின்றன. அகத்தியின் வேரினில் மிகப் பெரும் அளவினிலே வேர்க் கணுக்கள் காணப்படுகின்றன.

அகத்திக் கீரையினைப் போன்று பல்பயனுள்ள வேறு எந்த தாவரமும் நான் அறிந்த வரையில் இல்லை என்றே சொல்வேன். இது மிக வேகமாக வளரக்கூடியதாக இருப்பதாலும் இலைகளில் நிறையவே நைதரசன் உள்ளமையாலும் பல நாடுகளிலே இதனை கால்நடைகளுக்குத் தீவனமாகவே பயிரிடுகிறார்கள். ஆடு மாடுகளும் இதனை விரும்பி உண்ணும். அதிக பாலும் சுரக்கின்றன என்கிறார்கள். ஏறக்குறைய பசு தரும் பாலின் அளவினை 8% வரை அதிகரிக்க முடியுமாம். ஆஸ்திரேலியாவிலே வயல்களிலே பருவத்துக்குப் பருவம் பெரிய அளவிலே அகத்தியைப் பயிரிடுகிறார்கள். அதிக நீரும் தேவையில்லை, அதிக நீர் தேங்கி நின்றாலும் பரவாயில்லை. கோடை காலத்திலே கால்நடைகளுக்கு அருமையான உணவு. மேலே தண்டுடன் இலைகளை வெட்டி கால் நடைகளுக்கு

தொடர்தல் 106ம் பக்கம்

உணவாகவும் கீழே விடப்படும் வேர்ப்பகுதி மண்ணினை வளப்படுத்தவும் உதவுகின்றது. பிலிப்பைன்ஸ் நாட்டிலே வயல் வரம்புகளிலே அகத்தியை நட்டு வைத்திருப்பார்களாம். வேர் மண்ணின் வளத்தினை உயர்த்த மேலே உள்ள தளையினை வெட்டி மண்ணில் புதைத்தால் அசல் பச்சைப் பசளை.

நம்மவர்களும் வேறு ஆசியர்களும் இலையினையும், பூவினையும் கறி, வறை என உணவாகக் கொள்கிறார்கள். தமிழகத்திலே அகத்திச் செடிகளை வெற்றிலைத் தோட்டத்தில் நடுவார்களாம். வெற்றிலைகள் கொடிகளாகவே காணப்படுகின்றன. ஆகவே அவை படர்வதற்கு கொழுகொம்பு தேவை. நமது ஊரிலே வெற்றிலைத் தோட்டங்களைப் பார்த்தவர்களுக்கு ஞாபகம் வரலாம். அவை படர்வதற்கு முள்முருக்கங் கதியால்கள் நட்டிருப்பார்கள். வெற்றிலையின் ஒவ்வொரு கணுக்களிலேயும் சிறிய சிறிய பற்றி வேர்கள் உள்ளன. அவற்றின் மூலமாவே வெற்றிலை தன்னை ஆதாரத்துடன் பொருத்தி வளர்ந்து படர்கிறது. தமிழ் நாட்டினிலே முள் முருங்கைக் கதியால்களுக்குப் பதிலாக அகத்திச் செடிகளை உபயோகிக்கிறார்கள். மண்ணினைச் செழிப்பாக்குதற்கும் இது உதவுகிறது தானே. ஓரளவுக்கு காய்கறிச் செடிகளுக்கு நிழல் தருவதற்கும் தோட்டத்தில் இடையிடையே அகத்திச் செடிகள் உபயோகிக்கப் படுகின்றன.

சந்தன மரம் பற்றிய ஒரு செய்தியை இங்கே சொல்ல வேண்டும். இது நாள் வரை அதனை அறியாவிட்டால் ஆச்சரியப் படுவீர்கள். சந்தன மரம் ஒரு ஒட்டுண்ணி மரம். அதனைக் குறை ஒட்டுண்ணி (Partial parasite) என்பார்கள். அப்படி என்றால்? கொஞ்சம் விலாவாரியாகப் போவோமே! ஒட்டுண்ணி என்பது தனது வாழ்வியலுக்கு இன்னொன்றில் தங்கியிருக்கும் தாவரம் அல்லது விலங்கு. தங்கியிருக்கும் தாவரத்தினை விருந்து வழங்கி (host) என்பார்கள். கத்தாளைச் செடிகளை (Vanda - orchid) பனை மரங்களிலோ அல்லது இலுப்பை மரங்களிலோ கண்டிருப்பீர்கள். இவை ஒட்டுண்ணிகள் அல்ல. அவை வெறுமனே தங்குவதற்கு மாத்திரம் அத்தாவரத்தை உபயோகிக்கின்றன. அவற்றின் வேர்கள் மூலம் அத்தாவரத்துடன் ஒட்டிக்கொண்டு சுயாதீனமாக வாழ்கின்றன. இத்தாவரங்களை தாவர வொட்டிகள்( Epiphyte) என்போம்.

மாறாக மாமரம், பூவரசு போன்ற மரங்களின் பலமான கிளைகளில் குருவிச்சை ஒட்டியபடி வாழ்கையை ஓட்டுவதைக் காண முடியும். இவற்றினுக்கு வேர் காணப்படுவதில்லை. அதற்குப் பதிலாக அவற்றிலிருந்து தோன்றும் பருகி (Haustoria) எனப்படும் வேரினை ஒத்த ஒரு அமைப்பு விருந்து வழங்கித் தாவரத்தின் ஊடாகச் சென்று அதனுடைய கடத்தற் தொகுதிகளுடன் தன்னைச் சம்பந்தப் படுத்திக்கொள்கிறது. பிறகென்ன? குருசந்திர யோகம் தான். தேவையானதைத், தேவையான நேரத்தில், தேவையான அளவு பருகி மூலம் எடுத்துக் கொள்ள முடிகிறது. நிம்மதியான வாழ்க்கை. ஆனால் விருந்து வழங்கிக்கு ஆபத்து வந்தால் அதோ கதிதான்.

ஒட்டுண்ணித் தாவரத்தினைச் சுலபமாகக் கண்டு கொண்டு விடுவீர்கள் என மார்தட்ட வேண்டாம். சும்மா புறத்தே சாமான்யத் தாவரம் போலப் போலியான காட்சி தந்து கீழே, மண்ணிற்குக் கீழே வேர் மூலம் சுரண்டல் நடத்தும் ஒரு அற்ப தாவரம் வேர் ஒட்டுண்ணியாக (Root parasite) ஒரு வாழ்க்கையை மேற்கொள்கிறது என்றால் நம்ப முடிகிறதா? ஆம் உண்மையே! சந்தன மரம் இந்த வகையினைச் சேர்ந்தது. இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலே தான் சந்தன மரம் அதிக அளவிலே உள்ளது. ஆஸ்திரேலியாவிலே சந்தன மரங்களைப் பண்ணைகளாகவே பயிரிடுகிறார்களாம். ஒவ்வொரு சந்தன மரத்தினையும் சூழ நான்கு



**கிளிநொச்சி சென்ற முருகேசு பாட்டி வீட்டுப் பக்கம் தலைவைத்தே படுக்கவில்லை. எழுதிய கடிதங்களுக்கும் பதிலில்லை. பாட்டியின் நிலைமை பரிதாபமாக இருந்தது.**

அல்லது ஐந்து அகத்தி மரங்களை நட்டு விடுகிறார்களாம். சந்தன மரம் இம்மரங்களின் வேர்களுடன் ஒட்டுண்ணி வாழ்க்கை மேற் கொள்வதற்கு இது அனுகூலமாக உள்ளதாம்.

இப்போ சொல்லுங்கள் அகத்தி புறத்தியா? அது மனிதருக்கு உணவாகிறது, கால்நடைகளுக்கு உணவாகிறது, சந்தன மரத்திற்கு உணவு நல்கிறது, மண்ணினை வளமாக்குகிறது, வெற்றிலைக் கொடிகளுக்கு ஆதாரமாக நிற்கிறது, காய்கறிச் செடிகளுக்கு நிழலாகிறது. அப்பப்பா! சொல்லவல்லாயோ அதன் நல்ல உபயோகம் தன்னை. இன்னும் அதன் மருத்துவக் குணங்கள் பற்றியும் கூற வேண்டி உள்ளது.

*மருந்திடுதல் போகும் காண் வன்கிரந்தி - வாய்வாம்*
*திருந்த அசனம் செரிக்கும் - வருந்தச்*
*சகத்திலெழு பித்தமது சாந்தியாம் நாளும்*
*அகத்தி இலைதின்னு மவர்க்கு*

(பதார்த்த குண விளக்கம் நூல் - பாடல் -543)

அகத்தி இலையினை அப்படியே நோண்டி கறியாக்கிச் சாப்பிட முடியும் எனபதால் அகத்திக் கீரை என்றே அதனை அழைக்கிறார்கள். ஒரு நோயினுக்குச் சிகிச்சை பெறும் சமயத்தில் அகத்திக் கீரையைச் சாப்பிடக் கூடாது என்பார்கள். அந்த மருந்தின் தன்மையையே அகத்திக் கீரை குறைத்து விடும் என்கிறார்கள். வயிற்றுப் புண் எனப்படும் peptic ulcer நோயினுக்கு அகத்திக் கீரையை மிகவும் சிறந்த மருந்தாகக் கருதுகிறார்கள். அகத்திக் கீரையில் நீர் 73%, புரதம் 8.4%, மாப்பொருள்11.8%, நார்ச்சத்து 2.2%மும் உள்ளதாக கூறுகிறார்கள். அகத்திக் கீரையினது புரதச் சத்து மிகவும் சிறந்ததாகக் கருதப்படுகிறது. நார்ச்சத்து அதிகம் உள்ளமையால் மலச்சிக்கல் ஏற்படுவது தவிர்க்கப் படும்.

எமது வளவின் தெற்குப் புறத்தில் ஆலங் குளாய்ப் பிள்ளையார் கோவிலுக்குப் போவதற்கான ஓர் ஒழுங்கை உள்ளது என முன்னர் எழுதிய ஞாபகம். அந்த ஒழுங்கைக்குத் தெற்குப் புறமாக ஒரு குடிசை வீடு. அதுவே பொன்னுக் குட்டிப் பாட்டியின் வாசஸ்தலம். சிறிய ஒதுக்குப்புறமான காணி. அதில் குச்சு வீடு. சொந்தமாகக் கிணறு கூட இல்லை. தண்ணீர் முதல் பல்வேறு அன்றாட தேவைகளுக்கு எனது அம்மாவின் கையினையே பாட்டி நம்பியிருந்தார். அதற்குப் பிரதி உபகாரமாக வீட்டில் வந்து சில்லறைமல்லறை வேலைகளைக் கேட்காமலேயே செய்து கொடுப்பார். மேற்றாடையில் வெட்டும் பற்களும் பின்கடைவாயப் பற்களும் தான் வெற்றிலைக் காவி படிந்த நிலையில் நிற்க வேட்டைப் பல்லும் முன்கடைவாய்ப் பல்லும் ஒருகால் இருந்ததற்கு அறிகுறியான பல்லிடை வெளி தெரிகிறது. பாட்டியின் வாய் எப்பொழுதும் வெற்றிலை குதப்பியபடியே இருக்கும். பாட்டி மேல் அம்மாவுக்கு ஒரு பரிவு. பாட்டி குடும்பம் பிறவிச் சைவர்கள். ஆகவே எமது அகத்தி மரம் பாட்டிக்குத் தான் பெரிதாக உதவியது. குடும்பம் என்றால் அப்படி ஒன்றும் பெரிதில்லை. பாட்டியும் அவரது பேரப் பையனும் தான் குடும்பத்தின் உறுப்பினர். பொதுவாகச் சைவர்கள் ஆலயங்களில் பூசகர்களாக இருப்பார்கள். பாட்டியின் சகோதரி குடுப்பத்தவர்கள் தான் அங்கணாக்கடவை கண்ணகை அம்மன் கோவில் பூசகர்கள். பாட்டி குடும்பத்திற்கு ஆலயம் இல்லை. பாட்டி மிக்க இறை பக்தி உடையவர். தீட்சை பெற்றவர். ஆசார சீலர். கஷ்ட சீவனம். புதிதாகக் கிணறு வெட்டுவதற்கு நிலையம் பார்ப்பது மற்றும் இளம் பிள்ளைகளுக்கு ஏதாயினும் நோய் நொடி வந்தால் பார்வை பார்ப்பது பாட்டிக்கு சிறிது ஊதியத்தினைக் கொடுத்தது. ஊரில் உள்ளவர்களின் குழந்தைகளுக்கு ஏதாயினும் உபாதை ஏற்பட்டால் முதலில் அவர்கள் சந்தேகிப்பது தெய்வக் குறைபாடு. அது உள்ளதா என்பதை அறிவதற்காகப் பாட்டியைத்தான் நாடுவார்கள். பாட்டி தான் மூன்று நாட்கள் காலையும் மாலையும் பார்வை பார்த்து திருநீறு போடுவார். இதற்கு நோய் குறையாவிட்டால் தான் அடுத்த கட்டமாக பொன்னம்பலப் பரியாரியாரிடம் போய் நாடி பார்த்து மருந்துவம். அரசாங்கம் ஆதரவற்ற முதியோருக்கு ஒய்வூதியமாகச் சிறு தொகை கொடுத்து வந்தது. அதனையும் பெற்றதனால் எப்படியோ பாட்டி பேரனையும் வளர்த்து வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தார்.

பாட்டிக்கு ஒரு மகள் இருந்தார். பாட்டியின் கணவர் இராமப்பிள்ளை இளவயதில் இறந்து விட்டார். ஆகவே பாட்டியும் மகளுமாக அப்படி இப்படியாக வாழ்க்கையை ஓட்டினார்கள். மகளுக்கும் கல்யாணவயதும் தாண்டிக் கொண்டு போனது. பாட்டியிடம் அந்தச் சின்னக் காணியும் குச்சு வீடும் தவிர ஒரு குன்றிமணி கூட இல்லை. எனவே யாரும் பாட்டியின் மகளை கண்ணெடுத்தும் பார்க்கத் தயாராயில்லை. கடைசியில் எப்படியோ முருகேசு பாட்டியின் மகளைக் கல்யாணம் செய்வதற்குச் சம்மதித்தார். ஆனால் அவருக்கு ஒரு தொழிலும் இல்லை. வேலைவெட்டி இல்லாத அவருக்கும் சாப்பாடு போடவேண்டிய வேலை பாட்டியின் தலைமேல்தான் விழுந்தது.


இக்காலகட்டத்தில் தான் அரசாங்கம் வேலையில்லாதவர்களுக்காக ஒரு குடியேற்றத்திட்டத்தினை கிளிநொச்சியில் ஆரம்பித்தது. ஐந்து ஏக்கர் வயல்காணியும் ஒரு ஏக்கர் வீடுகட்டி வாழ்வதற்கான காணியும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் கொடுத்தது. பாட்டியின் மருமகன் பெரு மனது பண்ணி அதற்கு விண்ணப்பித்திருந்தார். அரசாங்கம் வழங்கிய குடியேற்றத் திட்டத்தில் மனைவியுடன் சென்று வாழ்ந்தார். முதல் சில வருடங்களுக்கு அவர்களுக்கு மாதாமாதம் அரசு மானியமும் கிடைத்தது. வயல் காணியைத் துப்பரவாக்கி பயிரிட வேண்டும். பாட்டி இங்கே தனியாக இருந்தார். கணவன் மனைவி கிளிநொச்சியில். ஒரு சில ஆண்டுகளில் பாட்டியின் மகள் மகப் பேற்றினுக்காக வந்தவர் ஓர் ஆண்மகனைப் பெற்றுச் சிறிது காலம் பாட்டியுடன் தங்கியிருந்து விட்டுக் கிளிநொச்சி போய்விட்டார். கிளிநொச்சி வாழ்க்கை சற்றுக் கஷ்டமாக இருந்தாலும் அங்கே வாழ்வதில் ஒரு நிம்மதி கிடைத்ததாகப் பாட்டியின் மகள் கூறினார். சீவனத்துக்குக் கஷ்டமில்லை என்பது தான் அவர் சொன்ன காரணம்.

திடீரென ஒரு நாள் பாட்டியின் மகள் மகனுடனும் கணவனுடனும் ஊருக்கு வந்தார். மகளுக்கு மலேரியாக் காய்ச்சல். மிக்க மோசமாகத் தாக்கியிருந்தது. பாட்டியின் பார்வையோ பொன்னம்பலப் பரியாரியின் வைத்தியமோ கை கொடுக்கவில்லை, பாட்டியின் மகள் மறைந்துவிட்டார். கருமங்கள் எல்லாம் முடிந்த சில நாட்களின் பின்னர் முருகேசு நிலபுலனைப் பார்த்து வருவதாகச் சொல்லி கிள்நொச்சி போய்விட்டார். அவரது மகனைப் பாட்டியுடனேயே விட்டுப்போனார். அப்போது அந்தப் பையனுக்கு ஐந்து வயது. நான் பதினைந்து வயது விடலை. கிளிநொச்சி சென்ற முருகேசு பாட்டி வீட்டுப் பக்கம் தலைவைத்தே படுக்கவில்லை. எழுதிய கடிதங்களுக்கும் பதிலில்லை. பாட்டியின் நிலைமை பரிதாபமாக இருந்தது. எனது அப்பு, தான் கிளிநொச்சிக்குப் போய் நடந்தது பற்றி அறிந்து வருகிறேன் என முன்வந்தார். பாட்டி அதற்குச் சம்மதிக்கவில்லை. தனது பிள்ளை பற்றிச் சிந்திக்காத ஒருவனைத் தேடிப் போய்ப் பிடித்து வந்து இந்தப் பாலகனை அவனிடம் என்ன நம்பிக்கையில் ஒப்படைப்பது எனப் பாட்டி ஒரேயடியாக அப்புவின் வேண்டுகோளினை மறுத்து விட்டார். பிள்ளை தேவையென்றால் அவன் வரட்டும். வராவிட்டால் கஞ்சியோ கூழோ கொடுத்து அவனை நான் வளர்ப்பேன் என்றார் பாட்டி. தன்னை ஒறுத்து பாட்டி பேரனை வளர்த்தார். எனது அம்மாவின் கடாட்சமும் இருந்தமையால் பையன் ஓரளவுக்குக் கஷ்டம் தெரியாமல் வளர்ந்தான் என்றே கூறவேண்டும். அமரர் C.W.W கன்னங்கராவினால் இலவசக்கல்வி 1947ஆண்டினில் அமுல்படுத்தப் பட்டமையால் சண்டிலிப்பாய் ஆங்கிலப் பாடசாலையில் சேர்ந்து படிப்பதும் சாத்தியமாயிற்று. எனது அண்ணர் பாடசாலை அதிபரிடம் போய் பேசி வசதிக் கட்டணச் சலுகையையும் பெற்றுக் கொடுத்தார்.

பையனுக்குப் பன்னிரண்டு வயதான சமயத்தில் திடீரென ஒரு நாள் முருகேசு வந்து குதித்தார். இது நாள் வரை பாராமுகமாக இருந்ததற்கு சேவல் எருதுக்கதை (Cock and Bull story) அளந்தார். தனது காணிப் பிரச்சினைகள் காரணமாக வழக்காடியதாகவும் மறியல் கூட இருக்க வேண்டி வந்ததாகவும் கூறினார். இப்போ பிரச்சினை எல்லாம் தீர்ந்து விட்டமையால் தனது மகனை அழைத்துப் போகவுள்ளதாகவும் கூறினார். ஊரவர்கள் இவரது அண்டப் புழுகுகளை நம்பவில்லை. அவர் அங்கு போய் இன்னொரு பெண்ணைக் கல்யாணம் செய்து பிள்ளை குட்டிகளுடன் வாழ்வதாகவும் தனது காணிகளில் வேலை செய்வதற்காக இந்தப் பையனை அழைத்துப் போகத்தான் வந்துள்ளார் என்றும் ஊரவர்கள் கதைத்தனர்.

பாட்டி ஏக வசனத்தில், 'பையன் வந்தானென்றால் கூட்டிப் போகட்டும். அவன் அவர் பிள்ளை' என்றார்.

'எனக்கு அம்மா அப்பா எல்லாம் என் பாட்டி தான். பாட்டியை விட்டு நான் எங்குமே போக மாட்டேன். பாட்டி இறக்கும் வரை நான் அவரோடு தான் வாழ்வேன்' என பையன் தீர்க்கமாகச் சொன்னான்.



kanagasabapathy.p@thaiveedu.com

## கடுகு...

## குழந்தையின் பெயர் Like:

ஃபேஸ்புக் மனிதவாழ்வில் எவ்வளவு தூரம் தாக்கம் செலுத்துகின்றது?

மணித்தியாலக் கணக்கில் அதிலேயே மூழ்கிப்போவோர், அதிலேயே தோட்டம் செய்வோர் என்று மில்லியன் கணக்கானோர் இருக்க, அண்மையில் ஒரு குடும்பம் தங்கள் குழந்தைக்கு Like என்று பெயர் சூட்டி மகிழ்ந்திருக்கின்றது.

புதுமையாகவும் நவீனமாகவும் இருக்கக்கூடிய பெயரொன்றைத் தேடும்போது, ஃபேஸ்புக்கில் நண்பர்களின் பதிவுகள், கருத்துக்களை விரும்புவதாக பயனர்கள் சொடுக்கும் Like என்பது தங்களைக் கவர்ந்ததாகவும் இஸ்ரேலில் இதற்குமுன் அந்தப்பெயர் யாருக்குமே இல்லையென உறுதிப்படுத்திய பின்னரே பெயர் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும், பெற்றோர் கூறுகின்றனர். Fbக்குத் தங்கள் மரியாதையை இவ்வாறு செலுத்தியிருக்கின்றது இந்த இஸ்ரேலியக் குடும்பம்.

எண் சோதிடர்களின் கதையைக் கேட்டுப் புதுப்புதுப் பெயர்களை உருவாக்கும் தமிழர்களுக்கு இஸ்ரேலியிருந்து புதிதாய் ஒரு போட்டி. ஆனாலும் Like அர்த்தமுள்ள பெயர்.

அது சரி, குழந்தை வளர்ந்து சொல்வழி கேட்காவிடின் dislike என்று மாற்றுவார்களோ?

# Thinking of selling your home there is no better time than NOW !

## House prices are UP!

## Your home may worth more than what you think

### It's a great time to sell a home with seller's benefits

**Mccowan & Finch**




3+1 Bedrooms, 2 Washrooms

**Kingston & Manse**




3+2 Bedrooms, 4 Washrooms

**Ellesmere & Conlins**




3 Bedrooms, 3 Washrooms

**Taunton & Thickson**




4+1 Bedrooms, 4 Washrooms

**Morningside & Kingston**




3+2 Bedrooms, 2 Washrooms

**Bathurst & Antibes**




2 Bedrooms, 2 Washrooms

**Brimorton & Scar.Golf**




3 Bedrooms, 1 Washrooms

**Kennedy & Ellesmere**




2 Bedrooms, 1 Washrooms

### Your Home is the Biggest Investment you are going to make.

## Why pay rent? Invest your rent in a mortgage

### Make the Right Choice the very First Time.

### We make your ideal dream home - come true

**I will either find a way or make one**

**FULL TIME REALTOR**

apex:416-297-0707



HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/Future Realty Inc.,**
**Brokerage***
205-7 Eastvala Drive, Markham Road, Ontario L3S 4N8
**B: 905.201.9977 F: 905.201.9229**

**Raja V.S. Rajagopal**
Sales Representative
**Dir : 416.727.8647**
www:buysellwithrajagopal.com
Email : sinnahrajagopal@gmail.com

*Independently Owned and Operated, REALTOR MLS MULTIPLE LISTING SERVICE R

Also Contact in Regards to Investing in Newly Built

HOMES - CONDOS - COMMERICAL PROPERTIES

**SERVICE - KNOWLEDGE - INTEGRITY - TRUST**


மனம் விரும்பியது போல்
வீடு வாங்க, விற்க அழையுங்கள்
Wanless/Hurontario
For Sale
$449,900
Detached 2- Storey,
4+1 Bedrooms,
4 Washrooms
Warden/407
SOLD
$299,900
Condo Apt., 1+1 Bedrooms, 2 Washrooms
Veterans/Touchette (Barrie)
Sold
$279,000
Detached 2-Storey, 3 Bedrooms, 4 Washrooms
The Gore/Ebenezer
Sold
$699,900
Detached 2-Storey, 4 Bedrooms, 4 Washrooms
The Gore/Ebenezer
Sold
$535,000
Detached Bangalow
The Gore/Ebenezer
Sold
$399,000
Semi-Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms
The Gore Rd/Ebenezer
Sold
$397,000
Semi-Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms
The Gore Rd/ Hwy 7
Sold
$1,100,000
Detached 2- Storey, 4+2 Bed-rooms, 5 Washrooms
Brisdale/Sandalwood
Sold
$370,000
Detached 2-Storey
Bovaird/Worthington
Sold
$428,000
Detached 2-Storey
Cottrelle /Gore
Sold
$469,000
Detached 2-Storey
The Gore/Ebenezer
Sold
$680,000
Detached 2-Storey
Bellamy / Lawrence
Sold
$358,000
Detached Bungalow, 3+2 Bed-rooms, 3 Washrooms
Markham Rd/14th Ave
Sold
$393,000
Link 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms
Markham/14th Ave
Sold
$421,000
Link 2 Storey, 3+2 Bedrooms, 4 Washrooms
Hwy 10/Bovaird
Sold
$272,750
Semi-Detached 2 Storey
Vankirk / Mayfield
Sold
$363,500
Detached 2-Storey
-digi Media-
நல்ல நிலையில் இயங்கிவரும்
Banquet Hall விற்பனைக்குண்டு.
Please call for more details.
Call before you list,
See the Difference!!!
TOP PRODUCER - 2009
Top 5% Sales Person in Canada 2009
HOMELIFE
HIGHER STANDARDS
Ruby Thambiah
Sales Representative
Dir: 416-999-5337
Tel: 905-201-9977
Fax: 905-201-9229
rubysri@hotmail.com
www.buyandsellwithruby.com
HomeLife/Future
Realty Inc. Brokerage
Independently Owned and Operated
205-7 Eastvale Drive,
Markham, ON L3S 4N8

# இன்றைய நோக்கில் பண்டைய தமிழிலக்கியங்கள்

## பகுதி - 08

- நா. சுப்பிரமணியன் -

சங்க இலக்கியக் காட்சியில் குடும்ப நிலை என்ற அம்சத்தில் பிரிவுத்துயர் பற்றியபார்வை இங்கு தொடர்கிறது. பொருளீட்டும் நோக்கில் மனைவியைப் பிரிந்த கணவனொருவனின் 'தேய்புரிப் பழங் கயிறு' போன்ற தவிப்புநிலை முன்னைய கட்டு ரையில் நோக்கப்பட்டது. இங்கு, அவ்வாறு கணவன் பிரிந்த நிலையில் மனைவியர் எய்தும் 'துன்ப-துயர'ங்கள் தொடர்பான சங்க இலக்கியப் பதிவுகள் சிலவற்றை நோக்கு வோம்.

கணவர்கள் அருகிலில்லாத நிலைகளில், இளம்வயதுடைய காதல்மனைவியர்க்குச் சுவையான உணவு முதலியவற்றிலோ தம்மை அழகுபடுத்திக்கொள்ளும் செயற்பாடுகளிலோ ஈடுபாடு இருப்பதில்லை. மேலும், தனிமைத் தவிப்பு மனதையும் உடலையும் வாட்டும். 'காதலர்(கணவர்) எப்போ வருவார்?' என்ப-தான எதிர்பார்ப்புடன் நாள்களை எண்ணிக் கொண்டிருப்பார்கள், அவர்கள். இது பொது நிலை. சங்ககாலத்துக்கு மட்டுமல்ல. தமிழர்க்கு மட்டுமல்ல. எல்லாக் காலகட்டங்களிலும் அனைத்துச் சமூகத்தினருக்கும் பொதுவான நிலைதான், இது. மனைவியரின் இவ்வாறான - வாட்டமும் தவிப்பும் ஏக்கமும் கலந்த - பிரிவுத்துயர்க்காட்சிகள் சங்கப் புலவர்கள் பலரால் சொல்லோவியங்களாகத் தீட்டப்பட் டுள்ளன. இவ்வகையில் பொருத்தமான ஒரு சான்றாக சங்க நெடும்பாடல்களிலொன்றான நெடுநல்வாடையிலமைந்த ஒரு காட்சி இங்கு கவனத்துக்கு வருகிறது.

*நெடுநல்வாடை காட்டும் 'புனையா ஓவியம்'*
*ஆரம் தங்கிய அலர்முலை ஆகத்து*
*பின்அமை நெடுவீழ் தாழத் துணைதுறந்து*

எனத் தொடங்கி,

*புலம்பொடு வதியும் நலங்கிளர் அரிவை*

என்பது வரையான 31 அடிகளில் (136-166) விரியும் துயரக்காட்சி இது.

'முத்துமாலையணிந்த அவளது மார்பில் தாலி ஒன்றுமட்டுமே தொங்கிக்கிடக்கிறது. அவளது நெற்றி ஒப்பனையின்றி வரண்டுளது. கூந்தல் கலைந்துளது. மகர மீன் வடிவத் தோடுகள் அணியப்பெற்ற காதுத் தொளைகளில் சிறிய காதணிகள் மட்டுமே உள்ளன. பொன்வளை யல்கள் அணிந்த அவளது கைகளில் இப்போ சங்குவளையல்களும் காப்புநாணும் மட்டுமே உள்ளன. அழகிய வேலைப்பாடுகள் கொண்ட ஆடையணிந்த அவளுடைய தளிர் போன்ற மேனியிலே இப்போ மாசு படிந்த நூலாடை மட்டுமே உளது. இவ்வாறு எவ்வித அலங்-காரமுமின்றி மலரணையில் படுத்திருந்த அவள் பிரிந்த கணவனின் நினைவில் பெருமூச்செறிந் தவளாகக் கடைக்கண்களில் பெருக்கெடுக் கும் நீரைத் தன்கைவிரலால் கீழேதுடைத் தெறிகிறாள்.'

மேற்படி 31அடிகளின் சுருக்கமான பொழிப் புரை இதுதான். அரசனொருவன் போருக்குப் போய்விட்ட நிலையில் வாடைக்காற்றில் வெதும்பும் அரசியின் கோலமே இங்கு காட் சிப்படுத்தப்பட்டுளது. அவளின் கோலத்தை, 'புனையா ஓவியம்' என்றே இப் பாடற்பகுதி (அடி:147) குறிப்பிடும். அதாவது 'வண்ணம் தீட்டப்படா நிலையில் வடிவத்தை மட்டும் கோடிட்டுக்காட்டும் சித்திரமாக' அவள் காட்சி யளித்தாள் என்பது இதன் பொருளாகும். இங்கே பெரிதும் அவளுடைய பிரிவுத்துயரின் புறநிலைக் காட்சியே நமது கவனத்துக்கு வருகிறது.

உடல்சார் தவிப்புகளும் உணர்ச்சிக் குமுறல் களும்.

இவ்வாறு துயருறுகின்ற பெண்களின் அகக் காட்சி – மனக்கோலம் - எத்தகையது? "எத்தகு உணர்ச்சிக் குமுறல்களுடன் இவ்வகைப் பெண்கள் தவித்திருப்பார்கள்?" இவ்வாறான வினாக்களுக்கு விடை தரக்கூடிய வகையில் அமைந்த இரு பாடல்கள் இங்கு நமது பார்வைக்கு வருகின்றன.

*கன்றும் உணாது கலத்தினும் படாது*
*நல்லான் தீம்பால் நிலத்துக்காங்கு*
*எனக்கும் ஆகாது என்ஐக்கும் உதவாது*
*பசலை உணீயியர் வேண்டும்*
*திதலை அல்குல் என் மாமைக் கவினே.*

*முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்?*
*ஓரேன் யானும், ஓர் பெற்றி மேலிட்டு*
*ஆ அ ஒல் எனக் கூவுவேன்கொல் ?*
*அலமரல் அசைவளி அலைப்ப, என்*
*உயவு நோய் அறியாது, துஞ்சும் ஊர்க்கே*

(குறுந்தொகை :27, 28)

கணவர்கள் பிரிவால் துயருறும் மனைவியரின் இருநிலைப்பட்ட உணர்ச்சிக் கோலங்களை இவற்றில் காண்கிறோம். முதலாவது பாடல், 'மனைவியானவள் உயிர்த் தோழியிடம் தனது உணர்வுகளை மனந்திறந்து பரிமாறிக் கொள்வதான' உத்திமுறையில் அமைந்ததா-கும். கணவன் தன்னருகில் இல்லாமையால் தன்னுடைய பேரழகு அநுபவிக்கப் படாமற் பயனின்றி வீணாகிக்கொண்டிருக்கிறது என்ற பொருள்பட அமைந்த பாடல், இது.

"பசுவின்பால் அதன் கன்றால் உண்ணப்பட வேண்டும். அல்லது மாந்தராற் பாற்கலங்க ளில் கறக்கப்படவேண்டும். இவ்விரண்டும் நிக ழாமல் அது வெறுமனே நிலத்தில் சொரியு-மாயின் அது பயனற்றதாகிவிடுகிறது. அது போன்றே, தலைவன் அருகில் இல்லாத நிலையிலே எனது அழகானது எனக்கும் பயன்படாமல் அவனுக்கும் (கணவனுக்கும்) பயன்படாமல் வீணாகிவிடுகின்றது." என்கிறாள், அவள்.

இதிலே மனைவியின் அழகு அநுபவிக்கப்-படாமற் பயனின்றிக் கழியும் நிலைக்கு பசு வொன்று வீணேநிலத்தில் பால்சொரிவதான சூழல்சார் காட்சி உவமையாக அமைகின்றமை வெளிப்படை. இப்பாடலில் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய மற்றொரு விடயம் அப்பெண், தன்னுடைய அழகை 'பசலை விரும்பி உண்ணுகின்றது' என்பதாக அமைந்த கூற்றாகும். "பசலை உணீயியர் வேண்டும் திதலை அல்குல் என் மாமைக் கவினே" என அமையும் இறுதியிருஅடிகளின்பொருள் இதுதான். இது ஒரு உருவகம் ஆகும்.

'பசலை' என்பது உடலில் நிகழும் ஒருவகை நிறமாற்றத்தைக் குறிப்பது. காதலரை அல்லது கணவரைப் பிரிந்து வாழும் நிலைகளில் பெண்களின் உடல்களில் இவ்வகை நிறமாற்-றங்கள் ஏற்படுகின்றன என்பது தமிழ் இலக்கிய மரபு மூலம் அறியப்படும் செய்தியாகும். இங்கே இப்பெண் மேற்படி பசலை தனது அழகை அழித்துக்கொண்டிருக்கிறது என்கிறாள். அதாவது, "நான் காமநோயால் தவித்துக்-கொண்டிருக்கிறேன்" என அவள் நுட்பமான 'இலக்கிய மொழி'யில் உணர்த்துகிறாள். இங்கே பசலையானது ஒரு அழித்தற்கருவி-யாக உருவகிக்கப்படக் காணலாம்.

> ***"நான் இங்கு***
> ***விரக தாபத்தால் தவித்துக்கொண்டிருக்கிறேன்.***
> ***எனது இந்தத் தவிப்பு நிலையை***
> ***உணர்ந்துகொள்ளாமல் இந்த ஊரவர்கள்***
> ***அமைதியாக***
> ***நித்திரையில் ஆழ்ந்திருக்கிறார்களே."***

இரண்டாவது பாடல் இப்படியெல்லாம் இலக் கிய நுட்பம்சார்ந்த உவமை, உருவகங்க-ளுடனான எடுத்துரைப்பாக அமைந்ததன்று. இது நேரடியான உணர்வுப் பிரவாகமாகவே வெளிப்படுவதாகும்.

"நான் இங்கு விரக தாபத்தால் தவித்துக் கொண்டிருக்கிறேன். எனது இந்தத் தவிப்பு நிலையை உணர்ந்துகொள்ளாமல் இந்த ஊரவர்கள் அமைதியாக நித்திரையில் ஆழ்ந் திருக்கிறார்களே. தாங்கொணாத இத்துன்ப நிலையை இவ்வூரவர்க்கு உணர்த்துவதற்கு யான் முட்டுவேனா? தாக்குவேனா? ஏதோ ஒரு காரணத்தை முன்னிறுத்தி ஆஅ!ஒல்! என்பனவாக வாய்விட்டுக் கூவுவேனா?".

இதற்குமேல் இப்பாடலுக்கு உரைவிளக்கம் அவசியமில்லை. மேலே முதற்பாடல் காட்டும் விரகதாபத்தின் இன்னொருகட்டத்தை இப்பா டல் காட்டுகின்றமையை உய்த்துணரலாம்.

பெண்மையின் உடல்சார்ந்த ஆசைகளை வெளிப்படையாகப் பேசும் முறைமையில் அமைந்த இப்பாடல்கள் தொடர்பாக நாம் கவனத்திற் கொள்ளவேண்டிய முக்கிய அம்சம், இவை 'பெண் குரல்'களாகவே பதிவாகி-யுள்ளன என்பதாகும். முறையே, வெள்ளி வீதியார் மற்றும் ஒளவையார் ஆகிய இரு பெண்கள் பாடியவை, இவை.

'பெண்மொழி'

மேற்சுட்டியவாறு பெண்களே தமது அநுபவ நிலைகளைச் 'சுய'மாக வெளிப்படுத்தும் முறைமை பற்றிய திறனாய்வியற் சிந்தனை யானது சமகால இலக்கியச் சூழலிலே 'பெண் மொழி' என்ற தலைப்பிலான தனி ஆய்வுத் துறையாக வளர்ச்சியெய்தியுள்ளது. தமிழிலே இவ்வாய்வுத்துறைசார்ந்து கலாநிதிப்பட்டங் களுக்கான ஆய்வுகளும் நிகழ்ந்துள்ளன.

இவ்வாறான 'பெண்மொழி' நோக்கில் அணு கும்போது மேற்படி முதலாவதான வெள்ளி வீதியார் பாடலில் உவமைக் கூறுகளாக அமைந்த பசு என்பது அப் பெண்ணின் தாய் மைப் பண்பையும் கன்று என்பது குழந்தை மீதான ஏக்கத்தையும் உணர்த்திநிற்கும் குறியீடுகளாகக் கொள்ளப்படுகின்றன. இத-னூடாக அவளுக்கு இன்னமும் மகப்பேறு கிட்டவில்லை என்பது உய்த்துணரப்படுகிறது. மேற்சுட்டிய ஒளவையார் பாடலானது காம வயப்பட்ட நிலையில் உடலாலும் உள்ளத் தாலும் நைந்துபோன பெண்மையின் அலற-லாகவே வெளிப்படுகின்றது என்பதே 'பெண் மொழி'ப் பார்வையூடான விளக்கமாகும்.

(இங்கு சுட்டப்படும் சங்ககால ஒளவையார் என்பவரை ஒரு முதிய பெண்ணாகக் கற்பனை செய்துகொள்ள வேண்டாம். ஏனெனில் 'ஒளவையார்' என்றவுடன் எம்மிற்பலரின் உள் ளத்தில் வயது முதிர்ந்த 'மூதாட்டி' ஒருவரு டைய படிமமே காட்சிக்குவரும். இப்படிமமானது ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை ஆகிய அறநூல்களைத் தந்த பிற் கால ஒளயைார் ஒருவரைப்பற்றிய படிமமாகும். ஒளவையார் என்ற பெயரில் வெவ்வேறு காலகட்டங்களில் பலர் வாழ்ந்துள்ளனர். சங்கப்புலவரான ஒளவையார் என்பவர் இசைப் பாடல்களைப்பாடும் பருவமங்கையான ஒரு பாணர் குலப்பெண் - பாடினி - என்பதே சங்க இலக்கியம் தொடர்பான 'மறுவாசி'ப்பின் மூலம் தெரியவரும் செய்தியாகும்).

### காதலுணர்வின் உலகளாவிய பரிவுநிலை:

இதுவரை பிரிவுச் சூழல்களிற் கணவர்கள் மற்றும் மனைவியர் எய்திய 'துன்ப-துயர' நிலைகள் தொடர்பான சில சான்றுகளை நோக்கினோம். இவ்வாறு துயருற்றவர்கள் பிரிவு நீங்கி மீண்டும் கூடுவதற்கான சந்தர்ப்பம் கிட்டும்நிலையில் தலைவனின் உளப்பாங்கு எவ்வாறு அமைந்திருக்கும்? இத்தொடர்பில் ஒரு காட்சி:

'கடமை முடிந்த நிலையில் விரைவாக வீடு திரும்பும் கணவனுடைய தேரிலே கட்டப்பட் டுள்ள மணிகளின் ஒலியதிர்வுகளால் வழி யருகிலுள்ள சோலைகளின் பூக்களில் தம் துணைகளுடன் தேன்சுவைத்து மகிழ்ந்தி ருந்த வண்டினங்கள் அச்சமடைந்து தமது இன்ப அநுபவநிலையினின்று விடுபட்டுப் பறக் கின்றன. இதனை நோக்கிய அவன், அவற் றின் இன்ப அநுபவங்களுக்குத் தன்னுடைய தேரின் மணியோசையானது இடையூறாக அமைந்ததை உணர்ந்து மனம் வருந்துகிறான். உடனே மணிகள் ஒலிக்காதவாறு அவற்றின் நாக்குகளைக் கயிற்றால் இழுத்துக் கட்டிய பின்னரே அவன் தேரைச் செலுத்துகிறான்.'

அகநாநூறு என்ற சங்கத் தொகை நூலின் 4ஆம் பாடலில் இடம்பெற்றுள்ள காட்சி, இது.

*பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த*
*தாதுண் பறவை பேதுறல் அஞ்சி*
*மணிநா ஆர்த்த மாண் வினைத் தேரன்*

என அமையும் மூன்று அடிகள் (10-12) இத-னைக் காட்சிப்படுத்துகின்றன. இங்கே 'தாதுண் பறவை' என்பது தேன்பருகும் வண்டினத்தைச் சுட்டிநிற்பது. 'துணையொடு வதிந்த' என்பதால் அவை இன்பந் துய்த்துக்கொண்டிருந்த நிலை உணர்த்தப்பட்டது. 'அந்த இன்ப அநுபவ நிலைக்குத் தான் இடையூறாக அமையலா-காது' என்பதான அவனுடைய பரிவுணர்வே இங்கே நமது கவனத்துக்குரிய அம்சமாகும். அவனும் அந்தவகையான இன்ப அநுபவநிலை பற்றிய கனவுகளுடன் வந்துகொண்டிருப்பவன் அல்லவா. கணவன் - மனைவி சார்ந்த காதலுறவானது அனைத்து உயிரினங்களை யும் தழுவிச்செல்வதான பரிவுணர்வு என்ற அகன்ற பரிமாணத்துடன் திகழ்வது என்பதைச் சங்கத் தமிழர்கள் உணர்ந்திருந்தனர் என்ப தற்கு இப்பாடற்பகுதி ஒரு முக்கிய சான்றா கத் திகழ்வதாகும்.

*(தொடரும்)*



subramanian.n@thaiveedu.com

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*

*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com***
***Fax: 416-849-0594 Tel: 416-646-3422***

# இயல் விருது 2010

கந்தசாமி
கங்காதரன்



விருதுகள் பட்டங்கள் மலிந்துபோன இக்காலத்தில் கனடாவிலும் பல்வேறு விருதுகள், பட்டங்கள் பல்வேறு நிறுவனங்களால் அவ்வப்போது வழங்கப்பட்டு அல்லது விற்கப்பட்டு, விருது பெறுவது, பட்டம் பெறுவது போன்றவை இளக்காரமாகப் பார்க்கப்படும் நிலை உருவாகியுள்ளது. ஆனாலும் பாரம் பரியமிக்க மதிப்புமிக்க சில விருதுகள் பட்டங்களும் அவ்வப்போது கனடிய மண்ணில் வழங்கப்பட்டு வருவதையும் மறுப்பதற்கில்லை.

தமிழ் இலக்கியத் தோட்டம் 2001ம் ஆண்டிலிருந்து தமிழ் மொழிக்குச் சேவையாற்றும் ஆன்றோர், சான்றோருக்கான விருதுகளை ஆண்டுதோறும் வழங்கிவருகின்றது. விருது வழங்கிப் படம் பிடித்து வெளியிட்டுவிட்டு அடுத்த ஆண்டு விருது விழாவரையில் காணாமற்போவதில்லை தமிழ் இலக்கியத் தோட்டம்.

தமிழ், ஆங்கில நூல்களின் மொழி பெயர்ப்பை ஊக்குவிப்பது, அரிய தமிழ் நூல்களை மீள்பதிப்புச் செய்வது, தமிழ்ப் பட்டறைகள் ஒழுங்குசெய்வது, கனடிய நூலகங்களுக்குத் தமிழ் நூல்களை அன்பளிப்புச் செய்வது போன்ற பல்வேறு பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அமைப்பாக தமிழ் இலக்கியத் தோட்டம் அறியப்பெறுகின்றது.

ஒவ்வொர் ஆண்டும் ஜுன் மாதத்தில் நடக்கும் விருது வழங்கலில் சிறந்த அபுனைவு இலக்கியம் (Non Fiction), கவிதை இலக்கியம், தமிழ் தகவற்றொழினுட்பம் ஆகிய துறைகளுக்கான சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டு வந்தன. கூடவே வாழ்நாள் சாதனையாளரொருவருக்கு இயல் விருதும் வழங்கப்பட்டு வருகின்றது. 2008ம் ஆண்டிலிருந்து அறிவிக்கப்பட்ட தலைப்பில் கட்டுரையெழுதி முதலாவதாக வரும் மாணவர் ஒருவருக்கு புலமைப் பரிசிலும் வழங்கப்படுகின்றது. மேலும் புனைவிலக்கியத்திற்கும் பரிசு வழங்கப்படுகின்றது.

கடந்த ஆண்டுகளில் ரொறன்ரோ பல்கலைக் கழக வளாகத்திலேதான் இவ்விருதுவிழா நடைபெற்றுவந்தது. இம்முறை 2010ம் ஆண்டுக்கான விருதுவிழா விக்ரோறியாபார்க்/401 சந்திப்புக்கருகே அமைந்துள்ள Radisson Hotelஇல் நடைபெற்றது. சம்பிரதாயங்களைத் தொடர்ந்து நேரடியாகவே பரிசுகள் வழங்கப்பட்டன.

புனைவிலக்கியத்தில், சிறுகதைத் தொகுப்புக்கான பேராசிரியர். க. கணபதிப்பிள்ளை நினைவுப் பரிசை 'பதுங்கு குழி' எனும் தொகுப்புக்காக ஜெர்மனி - பேர்ளினில் வாழும் பொ. கருணாகரமூர்த்தி பெற்றுக்கொண்டார். நாவலுக்கான பரிசு தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் சு. வெங்கடேசனுக்கு வழங்கப்பட்டது. 1310 – 1910 வரையான ஆறு நூற்றாண்டு கால மதுரையின் வரலாற்றைப் பின்னணியாகக் கொண்ட 'காவல் கோட்டம்' எனும் 1048 பக்க நாவலுக்காக சு.வெங்கடேசனுக்கு பேராசிரியர். க. கணபதிப்பிள்ளை நினைவுப்பரிசு வழங்கப்பட்டது.

இன்னும் சில மாதங்களில் வெளிவரவிருக்கும் அரவான் திரைப்படம் காவல் கோட்டத்தைத் தழுவிய கதை என்று ஒரு செய்தி கிளம்ப, இந்நாவலின் ஒரு சிறு சம்பவத்திலிருந்து உருவான கதைதான் 'அரவான்' என்று சொல்லியுள்ளார் இயக்குநர் வசந்தபாலன்.

இங்கிலாந்தில் வாழ்ந்துவரும் முனைவர் சச்சிதானந்தன் சுகிர்தராஜா எழுதிய 'பண்பாட்டுப் பொற்கனிகள்' எனும் நூலுக்கு அபுனைவுப் பரிசு வழங்கப்பட்டது. அரசியல் பொருளாதாரம், இலக்கியம், திரைப்படம், இணையம், விளையாட்டு ஆகியவை பற்றிய 34 கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல்.

சுற்றுச்சூழல் ஆர்வலர் சு. தியடோர் பாஸ்கரன் எழுதிய 'இன்னும் பிறக்காத தலைமுறைக்காக' எனும் நூலுக்கும் அபுனைவுப்பரிசு வழங்கப்பட்டது. சுற்றுச்சூழல், காட்டுயிர் பாதுகாப்பு சார்ந்த விடயங்கள் தமிழில் எழுதப்படுவது குறைவு. இந்நூல் அந்தக் குறையைப் போக்கும் ஒரு முயற்சி.

கனகசிங்கம் கருணாகரன் என்ற இயற் பெயரைக் கொண்ட கவிஞர் திருமாவளவன் 'இருள் யாழி' எனும் தொகுப்புக்காக கவிதைப் பரிசினைப் பெற்றுக் கொண்டார்.

'அதீதத்தின் ருசி' எனும் தொகுப்பிற்காக அப்துல் ஹமீது எனும் இயற்பெயரைக் கொண்ட தமிழகக் கவிஞர் மனுஷ்யபுத்திரனுக்கும் கவிதைக்கான பரிசு வழங்கப்பட்டது. இவையிரண்டும் பேராசிரியர் ஆ.வி. மயில்வாகனம் நினைவுப் பரிசுகள்.

தமிழ் இணையப் பரப்பில் ஆற்றிய சேவைக்காக மலேசியாவில் வாழ்ந்துவரும் முத்து நெடுமாறனுக்கு தமிழ்த்தகவற்றொழினுட்பப் பரிசு வழங்கப்பட்டது. கைத்தொலைபேசிகளில் குறுஞ்செய்திகளைத் தமிழிலேயே அனுப்ப வகை செய்த 'செல்லினம்' மென்பொருள் இவரது படைப்பே. 'முரசு அஞ்சல்' மென் பொருளின் படைப்பாளியும் இவரே.

வழங்கப்பட்ட தலைப்பில் கட்டுரை எழுதி புலமைப் பரிசியைப் பெற்றுக் கொண்டார்



செல்வி. சிரோதி இராமச்சந்திரன்.

நிறைவு நிகழ்வாக 2010ம் ஆண்டுக்கான, வாழ்நாள் சாதனையாளருக்கான இயல் விருது வழங்கப்பட்டது. 1960 இலேயே 'தீ' என்ற நாவலை எழுதியதன் மூலம் பலரது கடும் விமர்சனத்தை எதிர்கொண்ட எஸ். பொன்னுத்துரை என்ற எஸ்.பொ அவர்களுக்கே இம்முறை இயல்விருது. எதிர்த்தவர்கள் நாவலை முற்றுமுழுதாக வாசித்துவிட்டே எதிர்த்தார்கள். வேறுசிலர் 'அப்படியாம்', 'இப்படியாம்' என்று கேள்விப்பட்டதை வைத்துக் கொண்டு எதிர்த்தனர். இப்போதுகூட பலரும் பொதுவில் பேசத் தயங்குகின்ற, சங்கடப் படுகின்ற ஓரினச்சேர்க்கை பற்றியும் அப்போதே எழுதியிருந்தார் எஸ்.பொ. எதிர்ப்புக்குப் பஞ்சம் இருந்திருக்காது தானே 'தீ' மட்டுமல்ல 'சடங்கு', 'நனவிடை தோய்தல்', 'மாயினி' என்று ஈழத்தமிழ் இலக்கியத்தின் முக்கியமான படைப்புக்களை வழங்கியவர் எஸ்.பொ. நினைப்பதை சொல்வதற்கும் எழுதுவதற்கும் அஞ்சாதவர். பேச்சிலும் நிறைந்த நகைச் சுவை வழிந்தோடும்.

தமிழகத்தின் புகழ்பெற்ற எழுத்தாளர் ஜெயமோகன், இயல் விருதை எஸ்.பொ அவர்களுக்கு வழங்கினார். ஜெயமோகன் தனதுரையில், பிரபலங்களின் பின்னால் தமிழகம் அலையும்போது சரியானவர்களை இனம் கண்டு இங்கு இந்த விருது வழங்கப்படுவதற்காகத் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்தார்.





எஸ்.பொ. அவர்கள் தனது ஏற்புரையில், "ஆன்றோருக்கும் சான்றோருக்கும் வழங்கப் பட்ட இந்த விருதை இப்போது எனக்குத் தருகின்றார்களே. இவர்களுக்குக் கொழுப்புத்தானே" என்று தடாலடியாக ஆரம்பித்தார். எனது வாழ்க்கையின் அனுபவங்களே என் எழுத்துக்கள் என்றும் அம்பலத்தில் உரைத்தார். "நான் நிகழ்காலம், நான் எதிர் காலம், எதிர்கால நம்பிக்கையும் கூட" என்று அவர் முழங்கியபோது ஒரு தன்மானப் படைப் பாளியை உணர்ந்தோம்.

குறித்த நேரத்துக்குத் தொடங்கி குறித்த நேரத்துக்கு நிறைவடையும் மிகச் சில கனடியத் தமிழ் நிகழ்வுகளில் தமிழ் இலக்கியத் தோட்டத்தின் இயல் விருது விழாவும் ஒன்று. இம்முறையும் அப்படியே.

ஆனால் விருது பெறுநர்களை அறிமுகப் படுத்தியோரில் சிலர் போதுமான தயார்ப்படுத்தலின்றி தமிழ்ப் பெயர்களைக் கடித்துக் குதறினர். தமிழுக்குத் தொண்டாற்றுவோரைக் கௌரவிக்கும் ஒரு விழாவில் அவர்களின் பெயர்களையே சரியாக உச்சரிக்கவில்லையென்ற குற்றச்சாட்டை மிகுந்த சங்கடத் தோடு முன்வைக்கிறோம்.

விழாக்குழுவினர் அக்கறையோடு பலவிடயங்களையும் கவனித்திருந்தனர் - இது ஒன்றைத் தவிர.

gangatharan.k@thaiveedu.com

■ ■ ■

கனடிய தமிழ் வழக்கறிஞர்



The Law Office of
**Raphael Maharaja**
**Barrister & Solicitor**

Tel: 416-847-7077
416-847-7093 (Injury Claims)
Fax: 416-847-7088

GTA SQUARE
5215 Finch Ave, East, Unit 219
Toronto, Ontario, M1S 0C2 (Middlefield & Finch)

www.maharajalaw.com

**நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.**

**இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.**

***K.S. பாலச்சந்திரன்***

# கலைஞர் இராமநாதன் சடகோபன்

**- ப. ஸ்ரீஸ்கந்தன் -**

ஆழித்து முத்துக்கள் 51

'வெளிக்கிடடி விசுவமடுவுக்கு' என்ற நகைச்சுவை நாடகத்தை ஈழத் தமிழர்கள் இலகுவில் மறந்திருக்க முடியாது. எழுபதுகளில் அரியாலை திடீர் நாடக மன்றத்தால் பட்டி தொட்டிகள் எங்கும் 1000 தடவைகளுக்கு மேல் மேடையேறி அனைவரையும் வயிறு குலுங்கச் சிரிக்க வைத்த நாடகம். இந்த நாடகத்தின் கதை, காட்சிகளை உருவாக்கம் செய்து, அதில் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்ததோடு இந்நாடகத்தின் முழுப் பொறுப்பாளராகவும் தொடர்பாளராகவும் செயற்பட்டவர் எமது கலைஞர் இராமநாதன் சடகோபன் அவர்கள்.

பாடசாலை நாட்களிலேயே இவர் நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். இவரது முதல் நாடகம 'பக்தப் பிரகலாதன்' ஆகும். ஸ்ரான்லிக் கல்லூரியில் 9வது வகுப்புப் படிக்கும் போது இந்நாடகத்தில் ஒரு முனிவராகத் தோன்றினார். இந்நாடகம் வடமாகாண ரீதியில் பாடசாலைகளுக்கு இடையேயான நாடகப் போட்டியில் 2வது பரிசைப் பெற்றது.

சிறுவயதிலேயே இவர் நாடக்கலையில் ஆர்வம் கொண்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஏனெனில் இவரது தந்தையார் காலஞ்சென்ற இராமநாதன் அவர்கள் அரியாலையின் தலை சிறந்த பழம்பெரும் நாடகக் கலைஞர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர். அவர் 1935இல் மேடையேறிய 'குந்தளப்பிரியா' விலிருந்து நூறுக்கு மேற்பட்ட நாடகங்களில் பங்கேற்றவர். வெண்ணிறச் சேலை அணிந்து ஔவையாராகவும், மற்றும் கூனியாகவும் தோன்றிய அவரது நடிப்பு இன்றும் என் மனக்கண் முன் நிழலாடுகிறது.

சடகோபன் அவர்கள் சிலகால அமைதிக்குப் பின்னர் யாரும் எதிர்பாராத வகையில் ஒரு நகைச்சுவைப் புயலாகப் பரிணமிக்கத் தொடங்கினார். நண்பர்கள் சிலரை இணைத்துக் கொண்டு அரியாலை திடீர் நாடக மன்றத்தை உருவாக்கினார். அவர்களது முதல் நாடகம் 'அபசகுணம்' ஆகும். இந்நாடகத்தில் வயது வந்த ஆனால் விவேகம் இல்லாத பிள்ளையாக வந்து கலகலப்பூட்டினார். குழந்தை போல் விரலை வாயில் வைத்துக்கொண்டு 'ஓடிப்பிடித்து விளையாட ஒரு தம்பிப் பாப்பா வேனும்' என்று இவர் பாட தந்தையாக வந்த பரமநாதன் 'ஆகட்டும் மகனே அதுக்கென்...' என்று பதில் பாட்டுப் பாட அரங்க வெளி அதிரும்.

இவர்களது அடுத்த நாடகம் தான் 'வெளிக் கிடடி விசுவமடுவுக்கு' இந்நாடகத்தில் இவருடன் பரமநாதன், நாகராஜா, லோகு, மகேந்திரன், பொன்னுக்கிளி, இராசேந்திரம் ஆகியோர் நடித்திருந்தனர். ஸ்ரீமாவோவின் காலத்தில் படித்த வாலிபர்களுக்கு விசுவமடுவில் இலவசமாகக் காணிகள் வழங்கப்பட்டதை மையமாக வைத்து உருவான நாடகம் அது. மேடையில் நடக்கும் வேலிச் சண்டைக்காகவே அந்நாடகத்தைப் பலதடவைகள் நான் பார்த்துண்டு. பெண்சாதிமார் சண்டை பிடிக்க புருஷன்மார் ஓடி ஒளிப்பதும் பிறகு "யாரடி சொன்னது எனக்குப் பயமெண்டு" என்று வெளியே வருவதும் பெரும் அமர்க்களமாக இருக்கும். சடகோபன் இதில் மனைவியாகப் பாத்திரம் ஏற்றிருந்தார்.

இந்நாடகம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களில் மேடையேறி எல்லோரது வரவேற்பையும் பெற்றது. இந்நாடகத்தின் 1000வது மேடையேற்றம் அடம்பனில் நடந்த களியாட்டு விழாவில் நடைபெற்றது. மேலும் இரத்தினக்கல் கூட்டுத்தாபன ஆதரவில் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற மேடையேற்றத்தின் போது இவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். சிலவேளைகளில் ஒரு இரவில் மூன்று மேடையேற்றங்களையும் இந்நாடகம் கண்டுள்ளது.

அரியாலை திடீர் நாடகமன்றத்தின் மூன்றாவது நாடகமான 'உடையாரின் உபத்திரவ'த்தில் இவர் பெண் பாத்திரம் ஏற்று நடித்திருந்தார். இறந்து போன உடையார் சாக்கினுள் இருப்பது தெரியாமல் சாக்கைக் கொண்டு திரிவதும் அதன் போது ஏற்படும் உபத்திரங்களும் தான் இந்நாடகத்தின் கரு.

அரியாலை திடீர் நாடக மன்றத்தின் இரு பெரும் தூண்களாக இருந்தவர்கள் நாகராஜா, பரமநாதன் ஆகியோர். அவர்களது அங்க அசைவுகளும், பகிடிகள் சொல்லும் விதமும் அலாதியானது. மக்களைச் சிரிக்க வைத்த இவ்விருவருவரின் இழப்பை பேரிழப்பாகக் குறிப்பிடுகிறார் சடகோபன் அவர்கள்.

நகைச்சுவை நாடகத்தில் கொடிகட்டிப் பறந்த சடகோபன் அவர்கள் அரியாலை சுதேசிய விழாவில் பிரதான நாடகங்களில் பங்கேற்று நடிப்பில் வேறு ஒரு பரிமாணத்தை எய்தினார். சரித்திர, இதிகாச, புராணப் பாத்திரங்கள் எதுவாயினும் அதில் சோபிக்கும் ஒரு இயல்பான நடிகர் கலைஞர் சடகோபன் அவர்கள்.

1993இல் சுதேசிய விழாவில் மேடையேறிய இராஜராஜ சோழன் நாடகத்தில் இராஜேந்திரனாகத் தோன்றினார். 26 நடிகர்கள் நடித்த இந்நாடகம் 4 மணித்தியாலம் வரை நீண்டது. இதுவரை நகைச்சுவைப் பாத்திரங்களையே ஏற்றிருந்த இவர் இராஜராஜ சோழன் நாடகத்தின் சிறந்த நடிகருக்கான தங்கப்பதக்கத்தைப் பெற்றதன் மூலம் தன்னை ஒரு சகல பாத்திரங்களிலும் வல்லவனாக நிலை நிறுத்தினார். அன்றிலிருந்து சககலைஞர்களின் வேண்டுகோளுக்கு இணங்க நகைச்சுவை நாடகங்களில் நடிப்பதை நிறுத்திக் கொண்டார்.

1994இல் இடம்பெற்ற 75வது சுதேசிய விழாவில் மேடையேறிய எல்லாளன் நாடகத்தில் இராஜகுரு என்ற வில்லனாக எல்லோரையும் அசரவைத்தார். 1995இல் இலங்கேஸ்வரன் நாடகத்தில் இலக்குவணனாக தொடர்ந்து சங்கிலியனில் காக்கைவன்னியனாக, சகுந்தலையில் புருஷோத்மனாக, சேரன் செல்வியில் பாண்டிய மன்னனாக, கர்ணனில் குந்திதேவியாக இவர் ஏற்ற பாத்திரங்கள் ஏராளம்.

சடகோபன் அவர்களின் 25வது சரித்திர நாடகமான பாதுகை இவரது வாழ்வின் மறக்க முடியாத நாடகமாகும். ஏனெனில் பாதுகையில் இவர் இராமராகவும், கூனியாக இவரது தந்தையார் இராமநாதன் அவர்களும் நடித்திருந்தனர். தந்தையும் மகனும் ஒரே நாடகத்தில் நடிப்பது, நாடகம் பழகுதல் என்பன மிகவும் அரிதாக நடக்கின்ற விடயமே. பாதுகை நாடகத்தில் பொ. விஜயரட்ணம் பரதனாகவும், ச. உருத்திரேஸ்வரன் தசரதனாகவும் நடித்துச் சிறப்பித்தனர்.

சுதேச விழாவின் நாடகப் போட்டிக்காக இவர் தம்மாஸ்தி என்ற அழகியாக வேடமேற்ற 'உயிரோவியம்' என்ற அலெக்சாண்டர் மன்னன் பற்றிய நாடகம் குறிப்பிடத்தக்கதாகும். மன்னரின் காதலி தன்னை ஓவியம் வரைந்த அப்பெல்லஸ் என்ற ஓவியன் மேல் காதல் கொள்ள, இதை அறிந்த மன்னன் ஓவியனைக் கொல்லவரும் காட்சியில் இவரது நடிப்பு உச்சத்தைத் தொடும்.



1997இல் இடம்பெற்ற யாழ்ப்பாண இடப்பெயர்வின் போது தனது தந்தையைக் காலனிடம் பறிகொடுத்த சோகத்தையும் மீறி, இன்று வரை அந்த மண்ணில் வாழ்ந்து கொண்டு, மருவி வரும் எமது நாடகக் கலை வடிவங்களை அழியாது, பாதுகாத்து வருவதோடு தொடர்ந்தும் மண்ணின் சுதேசிய நாடகங்களில் பங்குபற்றி வரும் கலைஞன் இராமநாதன் சடகோபன் அவர்களின் கலைச்சேவை மென்மேலும் வாழ,
வளர வாழ்த்துவோம்.



sriskandan@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■





உலக அரசியல்
சமூக
பொருளாதார
சினிமா
நிலவரங்களை
உடனுக்குடன்
அறிய...

# நிலவரம்

www.nilavaram.com

e mail : nilavaram2010@gmail.com

## ஆழத்து முத்துக்கள் 52

# சங்கீதபூஷணம் எம்.ஏ. குலசீலநாதன்

**- கே.எஸ். பாலச்சந்திரன் -**

இலங்கைத் தமிழ்த் திரைப்படப்பாடல்களில் மறக்கப்பட முடியாத பாடல் வரிகளாலும், பாடியவரின் கம்பீர நாதக்குரலாலும் பலரையும் கவர்ந்த பாடல்

*ஈழத்திருநாடே என்னருமைத்தாயகமே*
*இரு கரம் கூப்புகின்றேன் வணக்கமம்மா*

அதேபோல மெல்லிசைப் பாடல்களிலே இசையாலும், பாடியவர்களின் குரலினிமையாலும் சிறந்த பாடலாக நினைவில் நிற்பது

*சந்தனமேடை எம் இதயத்திலே*
*உன் சதங்கையின் நாதம்தான் கேட்குதடி*

முதலாவது பாடலை எங்கள் மண்ணின் கதையைச்சொன்ன 'குத்துவிளக்கு' திரைப் படத்தின் ஆரம்பபாடலாகப்பாடியவரும், இரண்டாவது பாடலை தானே இசையமைத்து, இன்னுமொரு புகழ்பெற்ற மெல்லிசைப் பாடகரான எஸ்.கே. பரராஜசிங்கத்துடன் இணைந்து தேனாகப் பாடியவரும் ஒருவரே.

அவர்தான் சங்கீதபூஷணம் எம்.ஏ.குலசீலநாதன்.

வேறு சில திரைப்படப் பாடல்களையும், பல மெல்லிசைப் பாடல்களையும் அவர் பாடியிருந்தாலும், இந்த இரண்டு பாடல்களுமே அவரது பெயரை இசையுலகில் நிலைநிறுத்தப் போதுமானவை.


இலங்கையின் மெல்லிசைத் துறையின் முன்னோடிகளில் ஒருவரும் இலங்கை வானொலியில் இசைக்கட்டுப்பாட்டாளராகவும் மலேசிய, சிங்கப்பூர் வானொலிகளில் இசைக்கலைஞராகவும் பணி புரிந்தவரும், இசைமேதை பாலமுரளிகிருஸ்ணா அவர்களின் மாணவருமான சங்கீதபூஷணம் எம்.ஏ. குலசீலநாதன் அவர்கள் யாழ் மாவட்டத்திலே அராலி என்ற கிராமத்தில் 02.07.1940 அன்று முத்துச்சாமி அருளம்மா தம்பதியர்க்கு மகனாகப் பிறந்தவர்.

இவரது தாய்மாமன் கீசகன் கந்தையா அவர்கள் ஒரு நாட்டுக்கூத்து அண்ணாவியார். அவரின் உந்துதலினால் இவர் தனது ஆறாவது வயதிலேயே இசைத்துறையில் ஈடுபடத் தொடங்கிவிட்டார். ஆரம்ப கல்வியை அனுராதபுரம் சென். ஜேம்ஸ் கல்லூரியில் ஆரம்பித்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் தொடர்ந்து கல்விகற்றார் குலசீலநாதன். இவர் கல்லூரி விழாக்களில் நிறையவே இசைநிகழ்ச்சிகளில் பங்குபற்றி திறமை காட்டினார். இவரின் இசைத்திறமை கண்டு ஆச்சரியப்பட்ட கல்லூரி ஆசிரியர்களும், அதிபரும் இவரை இசைத்துறையில் முழுமூச்சாக ஈடுபடுத்தும்படி பெற்றோருக்கு ஆலோசனை வழங்கினார்கள்.

எனவே குலசீலநாதன், பின்னாளில் சர்வதேசப் புகழ்பெற்ற வயலின் கலைஞர் எல்.சங்கர், இசையமைப்பாளர் எல்.வைத்தியநாதன் ஆகியோரின் தந்தையரான லட்சுமி நாராயணன் ஐயர் என்பவரிடம் அராலியிலே இசைக்கலை பயின்று, இசைத்துறைப் பட்டப் படிப்பை சென்னை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தொடர 1959ல் இந்தியா பயணமானார்.

அங்கே இசையரசு எம். தண்டபாணி தேசிகரிடமும், சிவசுப்பிரமணியம், ரி.கே. ரங்காச்சாரியார், மைலம் வைச்சிரவேலு முதலியார் போன்றோரிடமும் பயின்று, இசையின் அத்திவாரத்தை கட்டி எழுப்பினார்.

அத்தோடு இராகஆலாபனை முறைகளையும், தாளபேதங்களையும் ஜனரஞ்சகமாக ரசனையூட்டும் விதத்தில் கச்சேரிகள் பாடுவதற்கு ஏற்றவாறு தான் கற்ற சங்கீதக் கலையை விருத்திப்படுத்திக் கொள்ள பாலமுரளி கிருஷ்ணாவிடமும் விசேடமாக பயிற்சி பெற்றார். அந்த வழியில் முன்னேறி 1964ல் அண்



ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதல்தர சித்தியடைந்து சங்கீத பூஷணம் ஆனார்.

இலங்கை திரும்பியபின் 1964ல் அராலி வடக்கு மயிலியப்புலம் கந்தசாமி கோயிலில் முதலாவது கன்னி இசைக்கச்சேரி அரங்கேறியது. அதன்பின் இவர் பல இடங்களில் இசைக் கச்சேரி வழங்கினார். அப்படியாக அவர் யாழ் மாவட்டத்தில், வட்டுக்கோட்டை என்ற இடத்தில் நிகழ்த்திய கச்சேரி பற்றி, டென்மார்க்க நாட்டிலிருந்து, றமேஸ் மணிவாசகம் தனது நூலில் பின்வருமாறு சுவைபடக்கூறுகிறார்.

"வட்டுக்கோட்டை சிவன் கோவிலில் 7ம் திருவிழாவில் அமரர் குலசீலநாதன் இசை விருந்தளித்துக் கொண்டிருக்கும்போது அவரின் திறமை கண்டு உணர்வு பெருக்கெடுத்த வட்டூர் மக்கள் - 'அத்தான் அப்பிடிப் போடு' என்று வானுயர தங்கள் உணர்வுகளையும், குதூகலத்தையும் அன்னாருக்கு அளித்து சிலிர்த்ததை, சிறுவயதிலேயே அன்னையின் மடியில் இருந்து அகத்தில் அருந்தியவன் அடியேன்.

கிராமியவழக்கிலே அந்த ஊர் மக்கள் அப்படி உரிமை கொண்டாடி இந்த அற்புதக்கலைஞனை அப்படி செல்லமாக அழைக்கும் அளவிற்கு அவர் தெள்ளிய தமிழ் இசை வழங்கியிருக்கிறார் என்று நம்புகிறேன்.

இந்த இடத்தில் நான் நேரடியாக்கண்ட இதே போன்ற ஒரு அனுபவத்தை உங்களுடன் பங்கிட்டுக் கொள்ளத்தான் வேண்டும்.

பலஆண்டுகளுக்கு முதல் கொழும்பில் பம்பலப்பிட்டி கதிரேசன் கோயிலில் ஆடிவேல் திருவிழா. கூட்டமென்றால் அத்தனை கூட்டம். இந்தியாவிலிருந்து பிரபல நாதஸ்வரக்கோஷ்டி ஒன்று அங்கு கச்சேரி செய்யவரவிருந்தார்கள். அவர்கள் நேரடியாக இந்தியாவிலிருந்து வந்து சேர தாமதமாகியது.

இதற்கிடையில், திருவிழாக்காரர், சுருள்தலையுடன், சங்கீதக்களை நிரம்பிய ஒரு இளம் வித்வானை மேடையேற்றினார்கள். அவர் பக்கவாத்தியங்கள் புடைசூழ அமர்ந்து, எங்கள் அபிமானத்துக்குரிய சங்கீதவித்வன் பாலமுரளி கிருஷ்ணாவின் மதுரமான தொனியில் முதலாவது பாடலைப் பாடத்தொடங்கவே, அங்கங்கே நின்றவர்களும் திரளாக வந்து மேடையின் முன்னே அமர்ந்து விட்டார்கள். நானுந்தான்.

தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்றாக பாடல்கள் எங்களை மயங்கவைத்து, கட்டிப்போட்டன. நாங்கள் அக்கம் பக்கம் பார்க்காமல் அதற்கு அவகாசம் இல்லாதவர்களாய் இசைவெள்ளத்தில் மூழ்கித் திழைத்திருந்தோம். எங்கும் நாதத்தின் ஒலி.

திடீரென்று ஒரு சலசலப்பு. இந்தியாவிலிருந்து நாதஸ்வரக்காரர்கள் வந்து சேர்ந்துவிட்டார்கள் என்று செய்தியை சொல்லிக்கொண்டு யாரோ கோயில் பக்கமாகச் சென்றார்கள். அவையில் இருந்த நாங்கள் யாரும் அதை கவனத்தில் எடுக்காமல், மேடையில் பாடிக் கொண்டிருந்த இளைஞனான குலசீலநாதனின் இசையுடன் ஒன்றி இணைந்திருந்தோம்.

சடுதியாக பாடல் நிறுத்தப்பட்டது. பாடிக்கொண்டிருந்தவருடன் யாரோ ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். நாதஸ்வரக்கச்சேரியை ஆரம்பிப்பதற்காக நடந்து கொண்டிருந்த கச்சேரியை இடையில் நிறுத்தச் சொல்லியிருக்கிறார்கள். வயலின் வாசித்தவர், தன் வாத்தியத்தை அதன் பெட்டிக்குள் வைத்துவிட்டார். மிருதங்கவித்துவான், மிருதங்கத்தை உறையால் மூடிக்கொண்டிருந்தார். குலசீலநாதனும் மேடையைவிட்டு இறங்க ஆயத்தமானார்.

சபையினர் ஆத்திரமடைந்தனர். ஒரு இளம் வித்துவானை இப்படி அவமானப்படுத்துவது போல பாடும்போது இடையில் நிறுத்தச் சொல்வதா என்று ஆக்ரோசக்குரல்கள் ஒலித்தன. அரங்கிலிருந்து பவர் மேடையில் ஏறி, கச்சேரி தொடரப்படவேண்டும் என்று கோஷம் எழுப்பினார்கள். அவர்களில் பல் கலைவேந்தன் சில்லையூர் செல்வராஜன், கலைஞர் ஏ.ரகுநாதன், வருமானவரி அதிகாரி சுன்னாகம் பாலசுப்பிரமணியம், உட்பட நானும் ஒருவன்.

இத்தனை ஆர்ப்பாட்டத்திற்கும் மத்தியில், வந்திருந்த நாதஸ்வரக்கோஷ்டியினர் மேடைக்கு அருகில் வந்துவிட்டார்கள். அவர்களும் சககலைஞனை மதிக்கும் பாங்கில் "கச்சேரி தொடங்கட்டும்... நாங்களும் கேட்டு ரசிக்கிறோம்" என்று பெருந்தன்மையாக் கூறி அவையில் அமர்ந்துவிட்டார்கள்.

குலசீலநாதனின் கச்சேரி மீண்டும் உற்சாகமாக ஆரம்பித்தது. அவர் நிறுத்தத்தின்பின் முதலாவதாகப்பாடிய பாடல் என்ன தெரியுமா?

*ஒருநாள் போதுமா...*
*இன்றொருநாள் போதுமா... நான் பாட*
*இன்றொருநாள் போதுமா?*

விண்ணதிர கரகோஷம் ஒலித்தது. அதன் பிறகு பல பாடல்களை பாடி முழுமையாக தன் கச்சேரியை நிறைவு செய்தார், எம்.ஏ.குலசீலநாதன்.

இந்த நினைவு என்னால் மறக்கமுயாத சில சம்பவங்களில் ஒன்றாக மனதில் பதிந்துவிட்டது.

இவரின் இசைத்திறனை அறிந்து கொண்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிகாரிகள் இவரை அங்கு அழைத்து இசைக் கச்சேரிகளுக்கு இடமளித்தார்கள். 1968ல் இலங்கை வானொலியினர் இவரை பகுதி நேர இசைத்தயாரிப்பாளராக நியமித்தார்கள். மெல்லிசைத் தயாரிப்பாளராகப் பணியைத் தொடங்கிய இவர் இசைக்கட்டுப்பாட்டாளர் பதவி வரை உயர்ந்தார்.

குலசீலநாதன் இசைப்பிருந்தா, இசைக்கோலம், சனரஞ்சனி போன்ற நிகழ்ச்சிகளின் மூலம் கர்நாடக இசையை எளிய மக்களுக்கு புரியும்படியாக அள்ளிக் கொடுத்து, இலட்சக் கணக்கான ஈழத்து இசை ரசிகர்களை தன் வசம் கொள்ளை கொண்டார்.

இசைபிருந்தா என்ற மெல்லிசைப் பிரவாகத்தில் எஸ்.கே. பரராஜசிங்கம், வி. முத்தழகு, எஸ். கலாவதி, அருந்ததி சிறீரங்கநாதன், ரா. ஜெயலஷ்மி, சுபத்திரா, சந்திரமோகன், அம்பிகா தாமோதரம், கௌரீஸ்வரி ராஜப்பன் போன்ற பல கலைஞர்களை இவர் ஈடுபடுத்தினார்.

பேராசிரியர்கள் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி போன்றோருடன் இணைந்து இசைச் சித்திரம் போன்ற நிகழ்ச்சிகளை ஆய்வுக் குரிய வகையில் குலசீலநாதன் தயாரித்தார்.

தொடர்ந்து சிங்கப்பூர் வானொலியிலும் பணியாற்றிவிட்டு, பிரான்ஸ் நாட்டுக்கு புலம் பெயர்ந்த குலசீலநாதன் அங்கேயும் தன் இசைப்பணியைத் தொடர்ந்தார். எஸ்.ஜேசுரத்தினத்தின் 'முகத்தார் வீடு', 'இன்னுமொரு பெண்' ஆகிய சின்னத்திரைகளிலும் தன் குரல் வளத்தை நிரூபித்துள்ளார். இசைக் கச்சேரிகளிலும், அரங்கேற்றங்களிலும் பாடினார்.

ஈழத்து இசைக் கலைக்கு பேரிழப்பாக அமையும் வகையில் எம் ஏ. குலசீலநாதன் 2004 மே மாதம் 20ந் திகதி பாரிஸ் நகரில் காலமானார்.

அந்த 'மணிக்குரல்'
நாதம் ஓய்ந்தது.



ksbala@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■

இணையத்தளத்திலும் 'தாய்வீடு'

**www.thaiveedu.com**


வீடு விற்பதற்கு எண்ணுகிறீர்களா?
RE/MAX
முதலில் உங்கள் வீட்டின் இன்றைய சந்தைவிலையினை அறிந்துகொள்ளுங்கள்
ஏனெனில் அண்மைய நாட்களில் வீட்டுசந்தையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றது
நீங்கள் நினைப்பதிலும் பார்க்க விலை அதிகமாக இருக்கக்கூடும்
உங்கள் வீட்டின் இன்றைய விலையினை இலவசமாக
அறிந்துகொள்ள அழையுங்கள்
பிரியதர்சன் பாலா
647.929.5817
RE/MAX
90 நாட்களுக்குள் வீடு விற்கப்படும்
அல்லது இலவசமாகவே விற்றுத்தரப்படும்*
* CONDITION MAY APPLY
Pri Bala BSc.Eng | Direct:647.929.5817
pri@topremax.ca | Bus:416.491.4002 | Fax:416.756.1267
Re/Max Crossroads Realty Inc., Brokerage.* 1055 McNicoll Ave., Toronto ON M1W 3W6
* independently Owned and Operated


Vasuki Devadas Law Office
For all your legal needs.............
Specializing in real estate litigation including claims on new home warranty
Real Estate - வீடு வர்த்தக நிலையம் வாங்குதல்-விற்றல்
Immigration- குடிவரவுச்சட்டம்
Personal Injury / Accident Benefit
தனிநபர் விபத்து. விபத்து நலன் சம்பந்தப்பட்டவை
Insurance- காப்புறுதி கோரிக்கைகள்
Business Law- வியாபார வர்த்தகச்சட்டம்
Family Law- குடும்பச்சட்டம்
Last Wills & Estate Planning- உயில் சம்பந்தமான விடயம்.
இறுதிவிருப்ப ஆவணங்கள் தயாரித்தல்
Power of attorney, affidavits, statutory declaration -
சத்தியப்பத்திரங்கள். தத்துவப்பத்திரம்
Notarization & Commissioning - அத்தாட்சிப்படுத்துதல்
Vasuki Devadas Law Office
2466 Eglinton Avenue East, Unit 10,(Midland & Eglinton)
Toronto, Ontario, M1K 5J8
416-266-1234
Vasuki@vdlaw.ca
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public

# ஒரு வீட்டின் (Financial Home) அத்திவாரமும் பராமரிப்பும்

சிறீதரன் துரைராஜா
- ஆயுட் காப்புறுதி முகவர் -



அண்மையில் Atlanta Georgia USA யில் நடைபெற்ற ஆயுட்காப்புறுதி முகவர்களுக்கான வருடந்த பொதுக்கூட்டத்தில் உலகின் பல நாடுகளிலும் இருந்து 5,500க்கும் அதிகமான காப்புறுதி முகவர்கள் கலந்து கொண்டார்கள். நான்கு நாட்களாக நடைபெற்ற கருத்தரங்குகள், கருத்துப்பரிமாறல்களில் பங்குபற்றும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது.

உலகில் உள்ள ஆயுட் காப்புறுதி முகவர்களில் ஒரு விகிதமானவர்கள் (1%) மட்டுமே இந்த வருடாந்தக் கருத்தரங்கில் பங்குபெற்றுவதற்கு தகமை பெறுகிறர்கள். 35,000க்கும் அதிகமாக காப்புறுதி முகவர்கள் MDRT என அழைக்கப்படும் இந்த நிறுவனத்தில் அங்கத்தவர்களாக இருக்கின்றனர்.

காப்புறுதித்துறையில் 40, 50 வருடங்களுக்கும் அதிகமான காலம் சேவையாற்றுபவர்கள் மற்றும் புதிய முகவர்கள் என இத்துறையில் மிகவும் அனுபவம் உள்ளவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் அனுபவங்களையும் நாங்கள் எப்படி காப்புறுதித் துறையில் திறமையாகச் சேவையாற்ற முடியும் என்பதையும் அறிந்து கொள்வதற்கு மிகச் சிறந்த ஒரு சந்தர்ப்பமாக இந்த வருடாந்தக் கூட்டம் அமைந்தது. நான்கு நாட்களில் 60இற்கும் மேற்பட்ட கருத்தரங்குகள் நடைபெற்றது. உலகின் மிகச்சிறந்த பேச்சாளர்கள் இங்கு உரையாற்றினார்கள். ஒவ்வொரு பேச்சாளர்களும் ஆயுட்காப்புறுதியின் அவசியத்தையும் ஆயுட்காப்புறுதி முகவர்களின் கடமைகளையும், பொறுப்பையும் மிகவும் வலியுறுத்திப் பேசினர்கள்.

> *“ ஒரு சிறந்த கட்டடநிபுனர் மூலம் ஒரு அழகிய, உறுதியான வீட்டினைக் கட்டுவிக்க முடியும். அதேபோல், ஒரு சிறந்த நிதித்திட்டமிடல் ஆலோசகர்மூலம் ஒரு உகந்த நிதித்திட்டமிடலைத் தீர்மானிக்க முடியும். ”*

உங்களிடம் காப்புறுதி பெற்றுக் கொள்பவர்களுக்கு சரியான காப்புறுதித்திட்டங்களை தெரிவு செய்வதன் மூலம் எப்படி அவர்களின் குடும்பங்களின் எதிர்காலத்தை பாதுகாக்க முடியும் என்பதை வலியுறுத்தினார்கள். ஆயுட் காப்புறுதி முகவர்கள் ஒவ்வொருவருக்கும் காப்புறுதித்திட்டங்கள் வழங்கும் போது காப்புறுதி பெறுபவர்களின் தேவையை நன்கு தெரிந்து கொண்ட பின்னர் அவர்களின் தேவையைப்பூர்த்தி செய்யக்கூடிய திட்டங்களை வழங்கவேண்டும் என்பதை வலியுறுத்தினார்கள்.

அங்கு கலந்து கொண்ட காப்புறுதி முகவர்களில் பலர் 2 அல்லது 3 தலைமுறையினராக காப்புறுதித் துறையில் அனுபவம் நிறைந்தவர்கள். இவர்களின் கருத்துப்பரிமாறல்கள் மூலம் நாங்களும் எங்களிடம் காப்புறுதி பெறுபவர்களுக்கு எவ்வகையில் சிறந்த சேவையைச் செய்யலாம் எனும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

மேலும், ஆயுட்காப்புறுதிச் சேவையை காப்புறுதி முகவர்கள் தங்கள் பணம் சம்பாதிக்கும் நோக்கம் மட்டும் இல்லாமல் ஒரு குடும்பத்திற்கு எந்த வகையில் உதவி செய்ய முடியும் என்ற நோக்கத்துடனும், அவர்களுக்கு எப்படியான திட்டம் அவசியமானது என்பதனையும் கருத்தில் கொண்டு செயற்படவேண்டியதின் கட்டாயத்தையும் வலியுறுத்திக் கூறினார்கள்.

காப்புறுதித்திட்டம் என்பது மிகவும் நுணுக்கமானதும், அதேசமயம் இலகுவாக தீர்மானிக்கவும் முடியாத ஒரு விடயமாக காணப்படுகின்றது. காரணம் ஒவ்வொரு மனிதனுக்கும் அவர்களின் தேவைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள், கனவுகள் போன்ற அவர்கள் குடும்பத்தின் தேவைகள் எல்லாவற்றையும் பூர்த்தி செய்யுமா என்பதையும் கவனிக்க வேண்டும்.

ஒருவருக்கு அல்லது ஒரு குடும்பத்திற்கு ஏற்படக்கூடிய விபத்துக்களை ஒருவரும் தடுக்க முடியாது. அதேபோல் ஒருவரின் கனவுகளையும் அவரின் எதிர்கால ஆசைகளையும் எல்லோராலும் நிறைவேற்ற முடியாது.

ஒருவருக்கு ஏற்படக்கூடிய விபத்துக்களில் தவிர்க்கமுடியாதது மரணம். ஆனால் எப்போது இந்த விபத்து ஏற்படும் என்பது எவருக்கும் தெரியாது. ஆயுட்காப்புறுதி மூலம் எப்போது இந்த விபத்து ஏற்பட்டாலும் அதனால் ஏற்படும் பொருளாதார இழப்பை சரியான காப்புறுதித்திட்டம் மூலம் தடைசெய்ய முடியும்.

மரணத்தைவிட வேறு விபத்துக்களாலும் ஒருவரின் பொருளாதரம் பாதிக்கப்படும். ஒருவர் நோய்வாய்பட்டு நீண்ட நாட்களுக்கு வேலை செய்முடியாத நிலை ஏற்பட்டால் அவரின் வருமானம் இழக்கப்படும். அல்லது ஏதாவது விபத்துக்களால் வேலை செய்யமுடியாத நிலை கூட ஏற்படலாம். இப்படியான எல்லா விபத்துக்களையும் நாங்கள் தடைசெய்ய முடியாவிட்டாலும் இதனால் ஏற்படும் பொருளாதார பாதிப்பையாவது தடைசெய்வதற்கு காப்புறுதித்திட்டங்கள் உதவி புரியும். கனடாவில் அதிகமானவர்கள் 65 வயதுவரையேனும் வேலை செய்யவேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். எனவே 65 வயதுக்குட்பட்டவர்களுக்கு ஆயுட்காப்புறுதி, கொடிய நோய்களுக்கான காப்புறுதி மற்றும் வேலை செய்ய முடியது நோய்வாய்பட்டவர்களுக்கான காப்புறுதி போன்றவை அவசியமாகும். 65 வயதுக்குட்பட்டவர்கள் மரணமடைவதை விட நோய்வாய்ப்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாக காணப்படுகின்றது. 65 வயதுக்குட்பட்டவர்களுக்கு எந்த விபத்து ஏற்பட்டாலும் அவர்களின் குடும்பத்திற்கு ஏற்படும் பாதிப்பும் மிகவும் பெரியதாகும். எனவே 65 வயதுக்குட்பட்ட ஒவ்வொருவரும் தங்களால் இயலுமான தொகைக்கு எல்லா விபத்துக்களாலும் ஏற்படக்கூடிய பொருளாதாரப் பாதிப்பைத் தவிர்ப்பதற்கான முன்னேற்பாட்டினைச் செய்வது அவசியமானதாகும்.

ஆயுட் காப்புறுதியைப் பொறுத்தவரையில் எல்லோருமே போதிய தொகையை கூடிய சிக்கிரம் காலதாமதமின்றி பெற்றுக்கொள்வது சிறந்தது. எவ்வளவு தொகைக்கு பெற்றுக் கொள்வது எப்படியான திட்டத்தைப் பெற்றுக் கொள்வது என்பது மிகவும் முக்கியமானது. இவற்றை அறிந்து கொள்வதற்கு ஒரு ஆயுட் காப்புறுதி முகவரின் சேவை அவசியமாகின்றது.

ஒருவரின் பொருளாதாரப் பெறுமதியைத் தீர்மானிப்பதற்கு அவரின் வருடாந்த வருமானம், அவரின் வயது என்பன கருத்தில் கொள்ள வேண்டும். உதாரணமாக ஒருவரின் வீடு அல்லது அவரின் வாகனம் ஒரு பெரிய மூலதனமாக இருக்கலாம். இவற்றை காப்புறுதி செய்யும்போது காப்புறுதி நிறுவனங்கள் கார் அல்லது வீட்டின் பெறுமதியை பொறுத்தே அவர்களின் மாதாந்தக் காப்புறுதிக் கட்டுப்பணத்தை தீர்மானிப்பார்கள்.

வீடு அல்லது கார் விபத்துக்குள்ளானால் அல்லது சேதமடைந்தால் அந்த இழப்பால் ஏற்படும் முளுப்பெறுமதியையும் காப்புறுதி நிறுவனத்தில் இருந்து மீளப் பெறமுடியும். மாறாக ஒருவரின் வீடு சேதம் அடைந்தால் அல்லது தீ விபத்து ஏற்பட்டால் அச் சேதாரத்தின் ஒரு பகுதியை மட்டும் காப்புறுதி நிறுவனம் வழங்கினால் நாங்கள் ஒருவரும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். காரணம் பெறுமதியின் முழுப்பகுதியும் மீட்கப்படவேண்டும். அதே போல ஒருவர் மரணமடைத்தால் அவரின் முழுப்பெறுமதியும் அவரின் குடும்பத்திற்கு வழங்கப்படவேண்டும்.

தரமானதும், சரியானதுமான காப்புறுதித்திட்டத்தின் மூலம் எல்லா இழப்புக்களையும் பாதுகாக்க முடியும். எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவர் எவ்வளவு தொகைப் பணத்தினை மாதாந்தம் காப்புறுதிக்காக செலவு செய்ய முடியுமோ அதற்கு எற்றவாறு தகுந்த காப்புறுதித்திட்டத்தை தெரிவு செய்ய வேண்டும்.

எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதை நாங்கள் கட்டுப்படுத்த முடியாவிட்டாலும் சரியான எதிர்காலத்துக்கான முற்பாதுகாப்புகளை ஏற்படுத்திக் கொள்வது அவசியம். ஒருவருமே தோல்வியடைவதற்கு திட்டமிடுவதில்லை. ஆனால் முற்கூட்டியே திட்டமிடுவதற்கு தாமதம் செய்கின்றனர்.

காப்புறுதியும் நிதித்திட்டமிடலும் வீடொன்றினைக் கட்டுவதனைப் போலவேயாகும் எவ்வாறெனில், ஒரு சிறந்த வீட்டை கட்டுவதற்கு முதலில் சரியான வரைபடம், அத்திவாரம் அதற்கு தேவையான பணம் போன்றவை அவசியமாகும். அதேபோல் ஒருவரின் நிதித்திட்டமிடலுக்கும் அத்திவாரம், அதற்கான வரைபடம், அதற்கு தேவையான பணம் போன்றவை அவசியமானதாகும். நிதித்திட்டமிடலின் அத்திவாரமாக ஆயுட் காப்புறுதியினைக் கூறலாம் அதேபோல் எதிர்காலத் திட்டமிடல், குறிக்கோள், இலக்கு போன்றவை வரைபடமாகவும் பின்பு அதற்கான செலவுகள் மாதாந்த கட்டணமாகவும் எடுத்துக்கொள்ளலாம். ஒரு சிறந்த வீட்டுக்கு உகந்த தளபாடங்கள் இருக்க வேண்டும் பின்பு உகந்த பராமரிப்பு அவசியமாகும். அதேபோல, ஒருவரின் காப்புறுதியும் நிதித்திட்டமிடலும் சரியான திட்டங்கள் முறையான பராமரிப்புடன் இருந்தால் தான் அந்த காப்புறுதித்திட்டம் அவரின் எதிர்காலத்தின் தேவையை பூர்த்தி செய்யும்.

ஒரு வீடுகட்டி முடிவதற்கு முன்பு அந்த வீட்டுக்கு சரியான தளபாடங்கள் வாங்குவது கடினம். அதேபோல் ஒருவரின் நிதித்திட்டமிடலும் சரியான தகுந்த திட்டங்களை உகந்த நேரத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும். எவ்வாறெனில் ஒருவர் முதலீடுத்திட்டத்தில் பணத்தினை முதலீடு செய்வதற்கு முன்பு உகந்த ஆயுட் காப்புறுதி மற்றும் கொடிய நோய்களுக்கான காப்புறுதி, வேலை செய்ய முடியாமல் நோய்வாய்ப்பட்டவர்களுக்கான காப்புறுதி போன்றவை பற்றி ஆலோசிப்பது மிக மிக அவசியமாகும்.

ஒரு சிறந்த கட்டடநிபுனர் மூலம் ஒரு அழகிய, உறுதியான வீட்டினைக் கட்டுவிக்க முடியும். அதேபோல் ஒரு சிறந்த நிதித்திட்டமிடல் ஆலோசகர்மூலம் ஒரு உகந்த நிதித்திட்டமிடலைத் தீர்மானிக்க முடியும்.

sritharan.t@thaiveedu.com

■ ■ ■

இறுக்கமான சூழலில் இ ல கு வா ன தீர்வு

• நிரந்தர ஆயுட் காப்புறுதி
• கொடிய நோய்களுக்கான காப்புறுதி
• ஈட்டுக்கடன் காப்புறுதி
• வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறதி
• RRSP • RESP

சிறீதரன் துரைராஜா
காப்புறுதி முகவர்
Member of Million Dollar Round Table | MDRT The Premier Association of Financial Professionals®
416.918.9771
759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407
info@life100.ca

INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Unity Life of Canada
Canada Life™



உங்களுக்காகவும், உங்கள் அன்புக்கு உரியவர்களுக்காகவும்...



கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதி

நோய் ஏற்படாதுவிட்டால் கட்டிய பணம் முழுவதையும் மீளப்பெறுங்கள்.

- digi Media -

வயோதிபர்களுக்கான காப்புறுதி

• மருத்துவப் பரிசோதனை வேண்டியதில்லை
• உடனடியாக காப்புறுதித் திட்டம் அமலாகும்
• வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும், நீரிழிவு நோயால் இன்சுலின் பாவிப்பவர்களும் பெற்றுக்கொள்ளலாம்

TOPGUN AWARD WINNER 2008, 2009, 2010, MDRT QUALIFIER 2007, 2008, 2009, 2010

சிறீதரன் துரைராஜா

MDRT Member of Million Dollar Round Table

Direct: 416.918.9771

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-830-0386, 416-300-5496

Life100.ca



Are you getting Million Dollar advice?



















இம்மாதப் புகைப்படக் கலைஞர்

## அரசகுமரன் அரசரட்ணம்

ரொறன்ரோவில் Mortgage Agent ஆக தொழில்புரியும் இவர், தனது ஓய்வு நேரங்களில் புகைப்படத் துறையிலும் ஆர்வம் காட்டி வருகின்றார்.

**உங்களிடம், நீங்கள் எடுத்த அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**

புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

